# இதயத்தில் இணைந்த இரு மலர்கள்



மாத்தளை - ரோகிணி

# இதயத்தில் இணைந்த இரு மலர்கள்

மாத்தளை ரோகிணி

குறிஞ்சி வெளியீடு
129 / 25, ஜெம்பட்டா வீதி
கொழும்பு - 13

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **Ethayathil enintha eru malargal** |
| Author | : | Mattalai Rohini |
| Language | : | Tamil |
| Edition | : | Feb - 1997 |
| Copyright | : | Author |
| Size | : | Crown |
| Printing Points | : | 10 |
| Pages | : | 240 |
| Copies | : | 1200 |
| Subject | : | Novel |
| Type Setters | : | Parkar Computers<br>Phone : 82 666 37. |
| Wrapper Design | : | V. Karunanithy |
| Printers | : | Page Offset |
| Price | : | Rs. 50 /- (India) |

தயாரிப்பு: வே. கருணாநிதி

# என்னுரை

மலையகத்தில் மண் வாசனை நிரம்பிய ஒன்றிரண்டு நாவல்கள் வெளிவந்திருந்தாலும், அவை அந்த மக்களிடையே சென்றடையவில்லை என்ற குறைபாடு தோன்றலாயிற்று. இந்தக் குறைபாட்டை நீக்க வேண்டுமென்ற ஓர் உணர்வு என்னுள் எந்நேரமும் எழுச்சி பெற்றுக் கொண்டே இருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில், எனது நண்பரும் கலைஞரும் எழுத்தாளருமான திரு. கு. இராமச்சந்திரன் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் எழுதுமாறு தூண்டிக் கொண்டேயிருந்தார். இந்தத் தூண்டுதலின் பிரதிபலன் மூன்று சிறுகதைகளை எழுதும் ஆர்வத்தை முதன்முதலில் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. அதன்பிறகு "மலை நாட்டான்" என்ற பெயரில் அரசியல் கட்டுரைகளை எழுதினேன். மற்றும் "ரோகிணி" என்ற பெயரில் வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் பல கட்டுரைகளை எழுதினேன். இருந்தாலும், எனது தாகம் நாவல்கள் எழுத வேண்டும் என்பதிலேயே அடங்கியிருந்தது.

1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்பு மலையக மூத்த எழுத்தாளரும், கவிஞரும் தொழிலாளர் தேசிய சங்க நிர்வாகப் பொறுப்பாளருமான திரு. ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் ஒரு நாவல் எழுத முற்பட்டார். தொழிற் சங்க ரீதியாக பக்கத்துப் பக்கத்தில் அமர்ந்து செயல்படும் வாய்ப்பு எங்கள் இருவருக்கும் கிடைத்தது.

நாவல் எழுத முற்பட்ட ஸி. வி. அவர்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் பலநாள் எழுதுவார். பின்பு ஏதோ நினைவு வந்தவராக அதையெல்லாம் கோபமாகக் கிழித்துப் போட்டு விடுவார். இதைப் பலமுறை அவதானித்து வந்த

நான் ஒருநாள் அவரிடம், "என்ன எழுதி எழுதிக் கிழித்துப் போடுகிறீர்கள்" என்று கேட்டேன். அதற்கு அவர், "ஆம் தலைவரே நான் ஒரு நாவல் எழுத எண்ணியுள்ளேன். ஆனால் அதை எங்கே ஆரம்பிப்பது என்பதில்தான் இன்னும் தெளிவு ஏற்படவில்லை" என்று கவலையோடு சொன்னார். ஆம்! அவர் என்னைத் "தலைவர்" என்றுதான் அழைப்பார்.

அப்போது நான் அவரிடம் "இந்த வாரம் விட்டு விட்டு அடுத்த வாரம் தொடங்குங்கள். அதுக்கு முன்பதாக நான் ஒரு நாவல் தருகிறேன், அதை வாசித்தால் உடனடி யாக நாவலின் 'கரு' தோன்றிவிடும்" என்று சொன்னேன். அதை அவரும் ஏற்றுக் கொண்டார்.

அதன் பின்பு நான் தமிழக எழுத்தாளர் 'அகிலன்' அவர்கள், மலேசிய ரப்பர்த் தோட்டச் சூழலையும், மண் வாசனையையும் கொண்டு எழுதிய "பால் மரக் காட்டினிலே" என்ற நாவலை ஸி. வி. வேலுப்பிள்ளை அவர்களிடம் ஒப்படைத்தேன். அதை அவர் படித்து முடித்ததோடல்லாமல், அதேவேகத்தில் எழுதவும் ஆரம் பித்தார். அவர் எழுதிய ஒவ்வொரு அத்தியாயத்தையும் என்னிடம் கொடுத்து வாசிக்கச் சொல்வார். அப்போது அவற்றில் சில இடங்களில் வசன மாற்றங்கள் ஏற்பட் டிருந்தால் அதை உடனடியாகத் திருத்தம் செய்வேன். இதைப் புரிந்து கொண்ட அவர், "தைரியமாகத் திருத் துங்கள்" என்று உற்சாகமூட்டினார். நாவலும் நிறைவு பெற்றது. அதுதான் 'வீரகேசரி' பத்திரிகையில் தொடர்ச் சியாக ஐம்பத்திரண்டு வாரங்கள் வெளியான "இனிப்பட மாட்டேன்" என்ற நாவலாகும். அந்த நாவல் தமிழகத்தில் புதுப்பிக்கப்பட்டுப் புத்தகமாக வெளிவந்து விட்டது.

இத்தருணத்தில்தான் ஸி. வி. வேலுப்பிள்ளை அவர் கள் என்னையும் எழுதுமாறு உற்சாகப்படுத்தினார். அவரின் உற்சாகத்தில் எழுத ஆரம்பித்த நான் ஒரு நாவலை

எழுதி முடித்தேன். அதுதான் "வந்த துன்பம் போதும்" என்ற நாவலாகும். இது தினகரன் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்தது. இதுவே எனது முதல் நாவலுமாகும். அதன்பின்பு அடுத்தடுத்ததாக "பூங்கோதை புயலானாள்", "அவனுக்கு அவள் துணை", "இதயத்தில் இணைந்த இரு மலர்கள்" என்று மூன்று நாவல்கள் எழுதினேன். அவையும் தினகரனில் தொடர்ச்சியாக வெளிவந்தன.

"இதயத்தில் இணைந்த இரு மலர்கள்" என்ற இந் நாவல் ஒரு தொழிற்சங்கவாதியின் கதை. அவன் தனது வாழ்க்கையில் அனுபவித்த பல்வேறு கஷ்டங்கள், துன்பங் கள், காதல் தோல்விகள், இறுதியில் மனமுவந்து காதலித்த வசந்தியின் தற்கொலை, மறுமணம் புரியக் காத்திருந்த மாமன் மகள் போராட்டத்தில் உயிரைப் பறி கொடுத்துத் தியாகி ஆனது, இறுதியாகத் துறவிக்கோலம் பூண்டு வளர்ப்பு மகன் அருணோடு பொதுப் பணிகளில் ஈடுபட்ட ஒரு சேவையாளனின் வரலாறுதான் இந்த நாவல்.

எனது நாவல்களைப் புத்தகமாகப் போடவேண்டு மென்பதில் பலர் ஆர்வம் காட்டியபோதும், இறுதியாக கலைஞரும் எழுத்தாளரும் எனது நண்பருமான மாத்தளை கார்த்திகேசு அவர்கள் இந்த நாவலைப் புத்தகமாகக் கொண்டுவர முயற்சி ஏடுத்துக் கொண்டு செயல்பட்டார். அவருக்கும் அவருக்கு உதவியாகச் சென்னையில் இருந்து செயல்படும் வே. கருணாநிதி (மட்டக்களப்பு) அவர்களுக் கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

மலையகத்தில் நாவல்கள் எழுதுபவர்கள் உண்டு என்ற எண்ணமும் இதன்மூலம் நிறைவு பெறுகிறது.

இல; 51/1, ஆற்றங்கரை வீதி,
களுதாவெல,
மாத்தளை.

அன்புடன்,
மாத்தளை ரோகிணி.

# 1

ராமு தொழிற்சங்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடு படுத்தியிருக்கும் ஒரு சிறந்த சேவையாளன். அவனின் கட்டுமஸ்தான உடம்பு, காந்தக் கண்கள், புன்னகை பூத்த முகம், கவர்ச்சிகரமான தோற்றம் பார்ப்போர் எவரையுமே கவர்ந்திழுக்கச் செய்தன. அவனின் சேவை கருத்தாழம் மிக்க பேச்சு, இயக்கத்தின் தலைமைக்குத் தேவை யான பொறுமை, ஆராய்ந்து பேசும் ஆற்றல், சிந்தனை எல்லாமே தொழிலாளர்கள் மத்தியில் ஓர் ஆழமான நம்பிக்கையை அவன் பேரில் உருவாக்க ஏதுவாக அமைந்தன.

மாவட்டச் செயலாளராக இருந்த ராமு, தனது சேவைத் திறன் மூலம் கடந்த தேர்தலின் போது மத்திய கமிட்டி உதவிச் செயலாளராக உயர்த்தப்பட்டிருந்தான். ராமு காரியாலயத்துக்குள் நுழைந்தாலே ஒரே கலகலப்பு. அவனின் அன்பு கலந்த நலம் விசாரிப்பில் எல்லோருமே மனம் குளிர்ந்து போவார்கள்.

ஒருநாள் ராமு மத்திய செயலகத்திற்குள் நுழைகிறான். அங்கு கொம்பூட்டர் வேகத்தில் தட்டச்சு இயந்திரத்தில் விரல்களால் தாள மிட்டுக் கொண்டிருந்த பெண்ணைப் பார்த்து அசந்து விடுகிறான். இருபது வருடங்களாகத் திருமணம் வேண்டாம் என்றிருந்த ராமுவுக்கு இதயம் ஏனோ அன்று துடிக்க ஆரம்பித்தது. செயலாளர் அறைக்குள் நுழையும் முன்பு ராமு இருமுறை அப்பெண்ணைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டான்.

"சார் வணக்கம்" என்று கூறிக்கொண்டே ஒரு நாற்காலியில் அமர்ந்த ராமுவிற்குப் பதில் வணக்கம் தெரிவித்த செயலாளர் அவனைக் கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன சார் அப்படிப் பார்க்கிறீங்க" என்று செயலாளரைப் பார்த்துப் புன்னகை பூத்தான்.

"இல்லை ராமு உன்னுடைய திறமை, அழகு, குணம் எல்லா வற்றையும் ஆராய்ந்து பார்க்கும் போது எனக்கு உங்கள் மீது ஏற்பட்ட நம்பிக்கை நியாயமானதுதான் என்று தோன்றுகிறது" என்றவர், சற்று மௌனமானார்.

"என்ன சார் மௌனமாயிட்டீங்க" என்றான் ராமு.

"ராமு கடந்த வாரம் செயற்குழுக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின்படி இந்தத் தேர்தலில் போட்டியிடும் நமது தலைவருக்கு ஆதரவாகத் தேர்தல் வேலைகளைக் கவனிக்க உங்களை நியமிக்கலா முன்னு முடிவு செய்தோம். இதைப் பற்றிச் சொல்லத்தான் உங்களைக் கடிதம் போட்டு அழைத்தேன்."

"கவலை வேண்டாம் சார். இன்னும் ஒரு வாரத்தில் அதற்கான ஏற்பாடுகளோடு இங்கு வந்து தங்கி வேலைகளை ஆரம்பிக்கிறேன்."

"அதுதான் சரி" என்று கூறிய செயலாளர் அதற்குத் தேவையானவற்றை எல்லாம் எப்படி எப்படிச் செய்ய வேண்டுமென்று பட்டியல் போட்டுச் சொன்னார். அதைச் செவிமடுத்த ராமு, தன் கையோடு கொண்டு வந்திருந்த பேக்கைத் திறந்து சில கடிதங்களை எடுத்துச் செயலாளரிடம் ஒப்படைத்தான். இயக்க வேலைகள் தொடர்பாகப் பல மாவட்டங்களுக்குச் சென்று திரும்பியிருந்த ராமு, அங்குள்ள நிலைமைகளைத் தெளிவுபடுத்தும் கடிதங்களையே செயலாளரிடம் ஒப்படைத்திருந்தான். அவற்றைப் பரிசீலனை செய்த செயலாளர், "ராமு நீங்கள் செய்த காரியங்களை மிகவும் திறமையாகச் செய்திருக்கிறீர்கள்" என்று ராமுவை நிமிர்ந்து பார்த்துத் தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்.

திறமைசாலிகள் தாமாக உருவாவதில்லை. அவர்களைக் கண்டெடுத்து ஊக்குவிப்பதன் மூலமே உண்மையான திறமைசாலிகளைச் சமூகத்தின் முன்பு மிளிரச் செய்யமுடியும். ஆனால் இன்றைய சமுதாயத்தில் எங்கே என்னை ஒருவன் மிஞ்சி விடுவானோ என்று அவனை மட்டம் தட்டி வைப்பதிலும், இவனுக்கென்ன தெரியும் என்று அவனுக்கு முட்டாள் பட்டம் கட்டி விடுவதிலும்தான் பலர் அக்கறையோடு செயல்படுகிறார்கள்.

சமூகத்தின் மீது உண்மையான பாசம், பற்றுள்ளவன் அதன் தேவைக்குத் திறமைசாலிகளைத் தயார் செய்கிறான். அந்த வகை யில், செயலாளர் மாணிக்கம் ஒரு நேர்மையானவர், கடமையைச் செவ்வனே செய்யக் கூடிய ஆற்றல் பெற்றவர், குற்றம் கண்ட இடத்தில் நேர்மையாகக் கண்டிப்பவர். இதனால் மாணிக்கம் மீது பலருக்குக் கோபம். இந்த ஆள்கிட்ட வேலை செய்ய முடியாது, சரியான சிடுமூஞ்சி என்று பலரும் அவரைப் பேசுவார்கள்.

அதேநேரத்தில் ஒருவர் மேல் அவர் எந்த அளவிற்கு மதிப்பு வைத்திருக்கிறார் என்பதைத் தனது பேச்சாற்றல் மூலம் வெளிப்படுத்திவிடுவார். அச்சமயம் அவரைப் பற்றித் தவறாக நினைத்தவர்கள் கூட அவரின் நேர்மைக்குத் தலைவணங்குவார்கள்.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த ராமுவை சுயநினைவுக்குக் கொண்டு வருவது போல் சலங்கை ஒலி காதில் கேட்கவே நிமிர்ந்து பார்த்தான். வாசலில் நிழலாடியது. உள்ளே வருமாறு செயலாளர் அழைக்கவே கையில் ஒரு கட்டுப் பைல்களுடன் உள்ளே நுழைந்த அந்தப் பெண் செயலாளருக்கு முன்னால் மேசை மேல் பைல்களை வைத்துவிட்டு ஒதுங்கி நின்றாள்.

அவள் வேறு யாருமல்ல. ராமு செயலகத்தினுள் நுழையும் போது அமர்ந்திருந்த பெண்தான் அவள். நிமிர்ந்து பார்த்தபோது, அவளும் இவனைப் பார்த்துப் புன்னகையொன்றை உதிர்த்தாள்.

இதைக் கவனித்தவர் போல் செயலாளர், "வசந்தி இவர் பெயர் ராமு. உதவிச் செயலாளராகக் கடமையாற்றுகிறார். தேர்தல் வேலை களைக் கவனிக்க மத்திய செயலகத்திற்கு வந்து வேலை செய்ய விருக்கிறார்" என்று ராமுவை அறிமுகப்படுத்தியவாறே கடிதங் களுக்கு ஒப்பமிட்டுப் பைல்களை அப்பெண்ணிடம் கொடுக்க அதை எடுத்துக் கொண்டு அவள் வெளியேற முனைந்தபோது, ஓரக் கண்ணால் ராமுவிடம் விடைபெற்றாள்.

இதுவரை காலமும் திருமணம் என்ற வார்த்தையை மறந்து சமூகத்திற்காகப் பணி செய்வதில் தன்னையே அர்ப்பணித்து வந்த ராமுவின் இதயத்தில் இந்த வசந்தி ஒரு இனம் புரியாத சலசலப்பை ஏற்படுத்திவிட்டாள். ராமுவின் இதயத்தை நெருடிய அந்த உணர்விற் குப் பெயரென்ன? நட்பா? பாசமா? காதலா? என்று புரியாது, மீண்டும் அதே எண்ண அலைகளினால் சிக்கித் திக்கு முக்காடிக் கொண்டிருந்தான் ராமு.

"டிரிங்... டிரிங்... டிரிங்" என்று மேசையிலிருந்த டெலிபோன் கினுகினுத்தது. ரிசிவரை எடுத்து "ஹலோ" என்ற செயலாளர், "இதோ இருக்கிறார் சார். இருங்க பேசச் சொல்றேன்" என்றவர், "ராமு உங்களோடுதான் தலைவர் பேசணுமாம்" என்று டெலிபோனைக் கொடுத்தார்.

"ஹலோ சார் வணக்கம் இன்றுதான் வந்தேன். எல்லாவற்றையும் செயலாளர் சொன்னார். இந்த வாரமே புறப்பட்டு வருகிறேன்." என்று ரிசிவரை வைத்துவிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"தலைவர் என்ன சொல்கிறார் ராமு."

"தேர்தல் வேலைகளை இந்த வாரமே தொடங்க வேண்டுமாம். அதனால் உடனடியாக அங்கு வரவேண்டுமென்று சொன்னார். சரி சார், அப்போ நான் வருகிறேன்" என்று எழுந்த ராமு, பேக்கையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

"எப்படியோ ராமு இந்தத் தேர்தலில் நம்ம தலைவரை வெற்றி பெற வைப்பது உங்க பொறுப்பு" என்ற செயலாளர் ராமுவைப் பாராட்டி விடைகொடுத்தார்.

ராமு முன் ஹோலைக் கடந்துதான் போகவேண்டும். அவனின் மனம் வசந்தியை நினைத்துக் கொண்டது. அந்தப் பெண் இருப்பாளோ என்ன சொல்லுவது என்று யோசித்துக் கொண்டு செயலகத்தின் முக்கிய பகுதிக்கு வந்துவிட்டான். நான் ஏன் இந்தப் பெண்ணைக் கண்டு நிலை குலையவேண்டும்? இவள் யார்? நான் யார்? என்ற துணிவை வர வழைத்துக் கொண்டே முன்னேறினான்.

குறிப்பிட்ட இடத்தைக் கடக்கும்போது, அப்பெண் அமர்ந் திருந்த இடத்தை நோக்கி அவனின் கண்கள் சுழன்றன. அங்கே அந்தப் பெண் யாரோ ஒருவரிடம் ஏதோ காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தாள். ராமுவைக் கண்டதும் அவள் பெட்டிப் பாம்பாகச் சுருண்டு புன்னகை யொன்றை உதிர்த்தவாறே "வணக்கம் சார்" என்றாள்.

ராமுவும் பதில் வணக்கம் தெரிவித்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு வெளியேறும்போது எதிரே மாவட்டச் செயலாளர் முனுசாமி வந்து கொண்டிருந்தார். அவனைக் கண்டவுடன் ஓடோடி வந்து அரவணைத்துப் பக்கத்திலுள்ள பெஞ்சில் அமர வைத்துக் குசலம் விசாரித்தார். அத்தோடு நின்றுவிடாமல், வசந்தியைக் கூப்பிட்டு, "இவரைத் தெரியுமாம்மா. இவர்தான் உதவிச் செயலாளர் ராமு. பெரிய திறமைசாலி. தலைவர் இவர்மேல் தனியான மதிப்பு வைத்திருக்கிறார்" என்று அவனின் புகழ்பாடிக் கொண்டிருந்தார்.

"இந்தாங்க ஒரேயடியாகத்தான் அளக்காதீங்க. அவுங்க பயந் திடப் போறாங்க. மிஸ் இவரு சொல்லுறத நம்பாதீங்க" என்றான் வசந்தியைப் பார்த்து.

"உள்ளதச் சொன்னா என்னப்பா குத்தம்? ராமு இவ பெயர் வசந்தி. நம்ம செயலகத்திற்கு வந்து ஒரு வாரம்தான் ஆகுது. சமுத்திர வல்லித் தோட்டத்தில் ஞானம் தலைவர் இருக்காரில்ல, அவரோட மகள்" என்று வசந்தியை அறிமுகப்படுத்தினான் முனுசாமி.

"அதுதானே பார்த்தேன். யார்டா இங்க புதுப்பொண்ணு ஒன்னு இருக்குன்னு" என்று உற்சாகமாகப் புன்னகையொன்றை உதிர்த்தான் ராமு.

"அடப்போப்பா நீ எந்தப் பொண்ணக் கண்டு என்னப்பா பிரயோஜனம்? உனக்குத்தான் பொண்ணக்கண்டாலே பிடிக்காதே."

"இல்லைங்க முனுசாமி அண்ணே. நான் வாழ்க்கையில் மிகவும் நொந்து போனவன். எங்கோ என் வாழ்விலும் ஏற்பட்ட தாக்கம்தான் என்ன இந்த நிலைமைக்குத் தள்ளிடிச்சி. மத்தபடி நீங்க நினைக்கிற மாதிரி

ஒன்னும் இல்ல. நான் எப்போதுமே பெண்களோடு நிறைய அன்பு கொண்டவன். பெண்களை மதிப்பவன். நம்ம பெண்களை மற்றவர்கள் குறை சொல்லக் கூடாதுன்னு நினைப்பவன்."

இவர்களின் உரையாடலைக் கேட்டு கொண்டிருந்த வசந்தி செயலகத்தின் மற்றொரு பகுதிக்குச் சென்று அங்கிருந்த இன்னொரு பெண்ணிடம் ஏதோ சொல்லிவிட்டு வந்து, மீண்டும் தனது இருக்கையில் அமர்ந்து கொண்டாள். உரையாடல்களை முடித்துக் கொண்டு ராமு புறப்பட்டபோது, "சார் தேநீர் குடிங்க" என்று இரண்டு டம்ளர்களில் தேநீரைக் கொண்டு வந்து ராமுவுக்கும் முனுசாமிக்கும் கொடுத்தாள் வசந்தி.

தேநீரைப் பருகிவிட்டு டம்ளரை வசந்தியிடம் கொண்டுபோய்க் கொடுத்த ராமு. முனுசாமியைப் பார்த்து, "மீண்டும் சந்திப்போம்" என்று கூறி விடைபெற்றதோடு, வசந்தியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்துவிட்டுச் செயலகத்தைவிட்டு வெளியேறினான். வசந்தியை நினைக்கநினைக்க அவனின் மனதிற்குள் ஒரு கிளுகிளுப்பு ஏற் பட்டது. குறிப்பாகச் சொல்லப் போனால் ராமு தனது உள்ளத்தை வசந்தியிடம் பறிகொடுத்த நிலையிலிருந்தான்.

ராமு வெளியேறும்வரை காத்திருந்த முனுசாமி, "வசந்தி இவர் மிகவும் நல்லவர், எல்லோருடனும் கலகலப்பாகப் பழகுவார். அதே போல உதவியும் செய்வார். ஒரு காரியத்தைப் பொறுப்பெடுத்தால் அதைச் செய்து முடிப்பதில்தான் முழுக் கவனத்தையும் செலுத்துவார். நம்ம இயக்கத்தின் தலைவர், செயலாளர்களுக்கு அடுத்து வெளி வட்டாரத்தில் தொழிலாளர்களால் புகழப்படுபவர். இவர் வந்தாப் போனா நல்லாக் கவனியுங்க" என்று கூறிவிட்டுக் கூட்டம் நடக்கும் அறையை நோக்கிச் சென்றார்.

அன்று தேர்தல் தொடர்பாகப் பேசுவதற்கு மாவட்டக் கூட்டத்தைச் செயலாளர் முனுசாமி ஏற்பாடு செய்து, மகளிர் இளைஞர் குழுவையும் அழைத்திருந்தார்.

பகல் உணவருந்தச் சென்ற வசந்தியைப் பார்த்து "என்னடி முகமெல்லாம் சிவந்திருக்கு. என்ன காதல் கீதல் என்று ஏதாவது... என்று இழுத்தாள் பார்வதி.

"சும்மா போடி, அப்படியெல்லாம் ஒன்றும் இல்ல. நமக்கென்ன காதலும் கத்திரிக்காயும்" என்று சொல்லி வெட்கம் மேலிட குனிந்து கொண்டு உணவுப் பார்சலைப் பிரிக்க ஆரம்பித்தாள் வசந்தி. சோற்றைப் பிசைந்து கையில் எடுத்தபோது ராமுவின் புன்னகை பூத்த முகம் அவள் கண்முன் காட்சியளித்தது.

வாய்... ஆ.. வென்றிருக்க, கையில் உருட்டியசோறு அப்படியே இருக்க, முகத்தில் ஓர் இனம்புரியாத புன்னகையோடு அமர்ந் திருந்தாள் வசந்தி.

சாப்பிட்டு முடித்துவிட்ட பார்வதி வசந்தியைப் பார்த்து, "அடியேய் இன்றைக்கு உனக்கு என்னடி நடந்தது?" என்று அவளின் கைகளைப் பிடித்து உலுப்பவே, அப்போதுதான் வசந்திக்குச் சுய நினைவே வந்தது. உடனே அவசர அவசரமாகச் சாப்பிட்டு முடித்தாள்.

இரண்டு பேரும் தங்கள் இருக்கைகளில் வந்து அமர்ந்தவுடன் முதல் முதலில் பார்வதிதான் பேச்சை ஆரம்பித்தாள்.

"நம்ம ராமு சாரைக் கண்டதும் காதல் கொண்டு விட்டீர்களோ? அவரிடத்தில் அதெல்லாம் செல்லுபடியாகாதம்மா. எத்தனையோ பெண்கள் அவரோட அன்பிற்கும் அழகிற்கும் மயங்கி காதல் கொள்ள முயன்று தோல்வி கண்டுட்டாங்க. அப்படி ஏமாந்தவர்களில் நானும் ஒருத்தி. ஆனாலும் ராமு சார் ரொம்ப நல்லவர். கண்ணியமானவர். நம்ம இயக்கத்தில் எல்லோரும் இவர்மேல் தனியான மதிப்பு வைத் திருக்கிறார்கள். இவர் பெண்களோடு பழகுவதை எத்தனையோ பேர் பார்த்துக் கதை கட்டியதுண்டு. இவை எதிலுமே சிக்காமல், கதை கட்டியவர்களைச் சில நேரங்களில் முட்டாளாக்கி விடுவார். நீயும் ஏமாந்து விடாதே வசந்தி" என்றாள்.

"இல்லை பார்வதி, இவர் ஏனோ ஒரு நல்ல நண்பரைப்போல் எனக்குத் தோன்றுகிறார்" என்றாள் வசந்தி.

"அதெல்லாம் விட்டுவிட்டு வேலையைப் பாருடி" என்று தன் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள் பார்வதி.

இவள் சொல்வதிலும் உண்மை இருக்குமா? அப்போ முனு சாமி சாரும், ராமு சாரும் பேசிக் கொண்டிருந்த போது, ராமு தான் ஏதோ வாழ்க்கையில் மிகவும் நொந்து போனவராச் சொன்னாரே அது உண்மையா இருக்குமோ? அப்படி அவரின் வாழ்க்கையைத் தாக்கிய அந்தச் சம்பவம்தான் என்ன? இதை யாரிடம் கேட்பது? - என்ற சிந்தனையில் ஆழ்ந்தாள் வசந்தி.

அவளைச் சுயநினைவுக்குக் கொண்டுவரும் தோரணையில் "வசந்தி, ராமு சார் இருக்காரே, அவர் தோட்டத்திலே தொழிலாளியா இருந்து முன்னுக்கு வந்தவர். ஊதியம் எதிர்பார்க்காமல் வேலை செய்பவர். நம்ம இயக்கத்தில் முழுநேரமாக் கடமை புரிகின்றார்" என்ற விபரத்தையெல்லாம் சொல்லி முடித்தாள் பார்வதி.

வீட்டிற்குப் புறப்பட்டு, பஸ்ஸில் ஏறி அமர்ந்த வசந்தி இன்று எனக்கு என்ன நடந்தது என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

# 2

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகக் கண்மணிகளை நோக்கிச் சொன்ன பொன்மொழி களை அவர்கள் கொள்கையாகக் கடைப்பிடித்தனர்.

ஆனால் இப்போதெல்லாம் கடமையைவிட முக்கியமாகக் கருதப்படுவது பணமும் பட்டமும் பதவியுந்தான்.

கண்ணியம் என்ற சொல்லின் அர்த்தமே பலருக்குத் தெரியாது. தாய்க்கும், தாரத்திற்கும், சகோதரிக்கும் வித்தியாசம் தெரியாது தான் தோன்றித்தனமும் அத்துமீறிய செயற்பாடுகளும் நிறைந்த இந்த உலகில் அதிகாரத்தின் பெயரால் கட்டுப்பாட்டையும் மீறுகிறார்கள்.

ஆனால் ராமு இவற்றையெல்லாம் தன் வாழ்க்கையில் தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படுபவர். அவரின் வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகள் தோன்றியும் அசந்துவிடாமல், நிமிர்ந்து நிற்பவர். இப்போது அவருக்கு முப்பதெட்டு வயது. இந்த முப்பத் தெட்டு வயதுக் காலத்திலும் தனது சுகபோகத்தை விரும்பாது, பிறரின்மேல் அன்புகொண்டு அவர்களுக்குத் துன்பம் நேரும் போதெல்லாம் துணையாக நின்று உதவிசெய்து, ஆறுதல் சொல்லி அரவணைக்கும் ஒரு ஆடம்பரமில்லாத மனிதர். வயதுக்கு மீறிய அன்பையும் பாசத்தையும் இவரிடம் காணலாம்.

வீட்டிற்குச் செல்வதற்காக பஸ்ஸில் ஒரு ஓரமாக இடம் பிடித்து அமர்திருந்த ராமு, பஸ்ஸில் இருந்த சனத்தை ஒருதரம் நோட்டம் விட்டுத் தனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டான். ஆனால் அவனுக்குத் தெரிந்தவர்கள் யாருமே அந்த பஸ்ஸில் இருக்கவில்லை.

மடியில் வைத்திருந்த பேக்கைத் திறந்து உள்ளே இருந்த புத்தகத்தை எடுத்து அதன் பக்கங்களைப் புரட்டினான். ர யா நாட்டில் இடம்பெற்ற புரட்சியைக் குறிக்கும் "ஜான் ரீடுஸ்" என்ற எழுத்தாளன் எழுதிய 'உலகை உலுக்கிய பத்து நாட்கள்' என்ற புத்தகம்தான் அது. படித்துக் குறை வைத்திருந்த பந்தியைப் புரட்டிய ராமுவிற்கு அதைப் படிக்க ஏனோ மனம் இடம்கொடுக்கவில்லை. ஏனென்றால் அவனின் எண்ணமெல்லாம் அன்று காலை சந்தித்த வசந்தியைப் பற்றியே இருந்தது.

யார் இந்தப் பெண்? எனக்கும் இவளுக்கும் என்ன தொடர்பு? எந்தப் பெண்ணையும் கண்டு மயங்காத நான் இவளைக் கண்டதும் மயங்கியது ஏன்? சின்னஇடை, வண்ணமயில், அன்னநடை இப்படிப்

பெண்களைப் பற்றிப் பலரும் வர்ணிப்பதைத்தான் கேட்டிருக்கிறேன். ஆனால் இன்றுதான் அப்படியான ஒரு பெண்ணை நேரில் கண்டிருக்கிறேன். ஒருவேளை, இவைகள்தான் என்னை அவள்பால் ஈர்க்கிறதோ தெரியவில்லை.

எல்லோரும் சொல்வார்கள், 'ராமு பெண்களைக் கண்டாலே விலகி ஓடுவான்' என்று. உண்மையிலேயே எனக்குப் பெண்கள்மேல் எவ்வித வெறுப்போ, பயமோ இல்லை. எந்தப் பெண்ணுக்கும் தீங்கிழைக்கக் கூடாது என்பதுதான் எனது மேலான எண்ணம். இதை மற்றவர்கள் புரிந்து கொள்ளாமல் வேறுவிதமாக நினைத்தால், அதற்கு யார் குற்றவாளி? நான் என்ன சாமியாரா? இல்லையே. நானும் ஒரு சாதாரண மனிதன்தானே. எனக்கும் இதயம் என்று ஒன்று இருப்பதை மற்றவர்கள் ஏன் நினைப்பதில்லை? - இப்படி யோசித்துக் கொண்டிருந்த ராமுவிற்குக் கடந்தகால வாழ்க்கைச் சரித்திரம் அவனின் நினைவில் நிழலாடத் தொடங்கியது.

ராமு ஒரு சாதாரண தோட்டத் தொழிலாளியின் மகன். அவனின் தாயும் தந்தையும் அவன் மீது மிகவும் அன்பு கொண்டு அவனைப் படிக்க வைத்தார்கள். அவர்களின் ஆசைகள் பூரணமாக நிறைவேறும் முன்பே அவனின் தந்தை கண்ணை மூடிவிட்டார். அதன் பின்பு அவனும் அவன் தாயும் பட்ட க டந டம் கொஞ்சநஞ்சமல்ல. அவனை வளர்த்து ஆளாக்க அவன் தாய் எத்தனையோ க டங்களை அனுபவித்தாள்.

தோட்டத்தில் பிள்ளைகளை பெயர் பதிய ஏற்பாடு செய்யும் போது அவனுக்கு வயது போதாது என்று கைக்காசு புல்லு வெட்டப் போட்டார்கள். ஒருவருடம் அந்தத் தொழிலைச் செய்தான். ஒருநாள் அவனின் தாயும் அவனும் அவர்களின் மாமா வீட்டுக்குப் போனார்கள். அவர், அவன் தோட்ட வேலை செய்வதை விரும்பாததால், அவருக் குத் தெரிந்த ஒரு கடையில் அவனை வேலைக்குச் சேர்ப்பதற்கு எற்பாடு செய்தார். இதற்கு அம்மாவும் சம்மதம் தெரிவித்தாள். வீட்டிற்கு வந்து தேவையான உடுப்புகளை எடுத்துக் கொண்டு குறிப்பிட்ட நாளில் வேலைக்குச் சென்றான் ராமு.

அவன் வேலைக்குச் சேர்ந்த கடை ஒரு புத்தகக் கடை. இது அவனின் அறிவு வளர்ச்சிக்கு உரமிடுவது போன்றதோர் உணர்வை ஏற்படுத்தியது. கடையில் வேலை செய்வதோடு, ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் புத்தகங்கள் பத்திரிகைகள் வாசிக்கத் தவறமாட்டான்.

ஐந்து வருட காலமாக அவன் செய்த தொழில் அவனின் சிந்தனைக்கு விருந்தாக அமைந்ததோடு, பலரோடு பழகும் வாய்ப்பும் அவனுக்குக் கிடைத்தது.

ஒருநாள் திடீரென்று கடைக்கு வந்த அவனின் தாய், உடனடியாகத் தோட்டத்திற்குப் போகவேண்டுமென்றாள். இவர்கள் பேசிக் கொண்டிருப்பதை அவதானித்த முதலாளி, ராமுவின் தாயை அழைத்து என்ன விசயமென்றுக் கேட்டார்.

"தோட்டத்தில் ஆள் கணக்கெடுக்கிறார்கள். வீட்டில் இல்லாதவர்களின் கூப்பன்களைக் கச்சேரிக்கு அனுப்பி விடுவார்களாம். அதுதான் மகனைக் கூட்டிக் கொண்டு போக வந்தேன்" என்றாள் ராமுவின் தாய்.

ராமுவின் மேல் அன்பு கொண்டிருந்த முதலாளி, "கூப்பனை அனுப்பினால் என்னம்மா. அவன் கடையிலேயே இருக்கட்டுமே" என்று சொன்னார். ராமுவின் தாய் கேட்பதாயில்லை. கையோடு கணக்கைப் பார்த்து கூட்டிக் கொண்டு போய்விட்டாள். ராமுவிற்கும் அந்தத் தொழிலை விட்டுப் போவதற்கு வருத்தம் தான். அவனுக்கு அப்போது பத்தொன்பது வயதாகி விட்டது என்பதால், ஆள் கணக்கு எடுத்த கையோடு தோட்டத்தில் பெயர் பதிந்து அவனும் ஒரு தொழிலாளியாகி விட்டான். ஆனால் படிக்க வேண்டுமென்ற ஆவல் மட்டும் அவனைத் தூண்டிக்கொண்டே இருந்தது. அவனின் வசதிக் கேற்பப் பத்திரிகைகள், புத்தகங்கள் வாங்கி வாசித்தான்.

தோட்டத் தொழிலாளர்கள் படும் க டம் கொஞ்சநஞ்சமல்ல. உழைப்பை வழங்கும் இவர்கள், தங்களைப் பற்றியோ, தங்களின் குடும்பத்தைப் பற்றியோ சிந்திப்பதில்லை.

தோட்டத்தில் பாடசாலை இல்லை. அநேக பிள்ளைகள் பக்கத்தில் இருக்கும் தோட்டப் பாடசாலைகளுக்கே செல்ல வேண்டும். இதன் காரணமாகச் சில பிள்ளைகள் வேலை காட்டுக்கு தாய் தந்தையர்களுக்குத் தேநீர் கொண்டு போகவும், கைக்குழந்தைகளைக் கவனிக்கவும், விறகு தேடவும் உபயோகப் படுத்தப் பட்டனர். தொழிலாளர்களுக்கு நோய் வந்தால் நோய் தீர்க்கும் மருந்து இல்லை. உடல் சக்திக்கு போஷாக்கான உணவு இல்லை. கூலி உழைப்பு ஒவ்வொரு நாளும் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தன. ராமுவிற்கு இந்த வாழ்க்கையைத் தொடர முடியவில்லை. தாயை விட்டுப் பிரியவும் மனமில்லை. வெறுப்போடு கடுமையாக உழைத்தான்.

ஒரு தைப்பொங்கல் தினம். விட்டை சுண்ணாம்பு அடித்து சுத்தப்படுத்திக் கொண்டிருந்தான் ராமு. தமிழ்நாட்டுத் தலைவர்களின் படங்களை அழகாகத் துடைத்து சுவரில் மாட்டிக் கொண்டிருந்தான். தோட்டங்களில் தமிழ் நாட்டுத் தலைவர்களின் படங்கள்தான் அதிகமாக இருந்தன. அத்தோடு நேரு, காந்தி படங்களும் இருந்தது. நமது தேசத் தலைவர்களின் படம் வைப்பதில்லை என்று பலர் பேசக்

கேட்டிருக்கிறான் ராமு. அது மட்டுமல்ல, பல கருத்தரங்குகளில் தொழிலாளர்களுக்குத் தேசிய உணர்வு இல்லை என்று பேசுவதைக் கேட்டிருக்கிறான்.

இதற்குக் காரணம் தோட்டத்து மக்களின் மனதில் இடம் பிடிக்கக் கூடிய அளவிற்கு நம் நாட்டுத் தலைவர்கள் எதுவுமே செய்யவில்லை. அத்தோடு, இனக் கலவரமும், இனக் குரோதமும் ஓங்கி இருந்ததும் இன்னுமொரு காரணம்.

ராமு நாள் காட்டி கலண்டர் ஒன்றை விநாயகர் படத்துடன் சுவரில் தொங்கவிட்டான். பலரும் இதுபற்றி புதுமையாக அவனிடம் விசாரிக்க ஆரம்பித்தனர். ஏனென்றால், அவர்கள் கலண்டர் என்றால் என்ன என்பதையே அப்போது அறியாதிருந்தனர். ஆச்சரியம் கொண்ட ராமு அவனின் செலவில் இருபத்தைந்து கலண்டர்களை வாங்கி முக்கிய இளைஞர்கள், தொழிலாளர்கள் வீடுகளில் தானே ஆணி அடித்து மாட்டிவிட்டான். தோட்டத் தொழிலாளர்களின் நிலைமையை எண்ணினால் கண்ணீர்தான் கொட்டும்.

முதலாளிமார்களோ உழைப்புக்குக் கொடுக்கும் மதிப்பையும் மரியாதையையும் உழைக்கும் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதில்லை.

வெள்ளையர்கள் உழைப்பைச் சுரண்டி வருமானத்தை வெளி நாட்டுக்குக் கொண்டு சென்றார்கள்.

முதலாளிகளோ தொழிலாளர்களிடம் உழைப்பை உறிஞ்சி தங்களின் சுகபோகத்தை மாத்திரம் பெருக்கிக் கொண்டார்கள். இந்த நிலையில்தான் ராமுவும் தொழிலாளியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தான்.

காலையில் ஆறு மணிக்கு வேலைக்குப் புறப்பட்டால், மாலை ஆறு மணிக்குத்தான் வீட்டுக்குத் திரும்ப முடியும். பகல் உணவு தோட்டக் கணக்கில் பாணும், பருப்பும், தேநீரும் வழங்குவார்கள். கொழுந்தெடுக்கும் பெண்களுக்கும் இந்த நிலைதான். குழந்தைகள் இருக்கும் தாய்மார்களுக்கு மாத்திரம் ஒரு மணி நேரம் வீட்டுக்குச் செல்ல முடியும்.

இந்த துன்பத்தைச் சுமக்க முடியாத ராமு சில நேரங்களில் பெரிய ஆர்ப்பாட்டம் செய்துவிடுவான். இதற்காக நிர்வாகத்தின் பல தண்டனைகளுக்கும் ஆளாகியிருக்கிறான். இது ஒரு விசித்திர மான தண்டனை. ராமுவிற்குத் தனியாக ஒரு வேலைபோட்டு ஒரு கங்காணியையும் நியமித்து விடுவார்கள். இப்படி பலநாள் தனியாக தொழில் செய்துள்ளான் ராமு.

கங்காணி ஒருவருக்கு வேண்டியவர்போல் நடித்துக் கொள்வார். யாராவது தப்பித் தவறி ஏதாவது சொல்லிவிட்டால் போதும். அடுத்த நாள் தோட்டக் காரியாலயத்தில் நிறுத்தப்பட்டு விசாரணை அடி தடி என்றெல்லாம் நடந்துவிடும். இதற்கெல்லாம் ஒரு முடிவு இல்லையா என ராமு மட்டுமல்ல, அங்குள்ள தொழிலாளர்கள் ஏங்கிய நாட்கள் தான் எத்தனை. பாவம் தோட்ட மக்களுக்கு யார்தான் உதவி செய்ய முன்வந்தார்கள்?

ஒருநாள் ராமு எதிர்பார்க்காத ஒரு சம்பவம் நடந்துவிட்டது. ஒரு தொழிலாளியை தோட்ட அதிகாரி பிரட்டுக் களத்தில் வைத்து அடித்துப் புரட்டிக் கொண்டிருந்தார். திடீரென பிரட்டு வரிசையில் நின்றிருந்த பல இளைஞர்கள் வெளிப்பட்டு, தோட்ட அதிகாரியைத் தாக்க முற்பட்டு விட்டனர். இது ராமுவின் விடுதலை உணர்விற்குத் தீனி போட்டது போலிருந்தது. அவனும் அவ்விளைஞர்களில் ஒருவனாகச் சேர்ந்து கொண்டு தோட்ட அதிகாரியைத் தாக்குவதில் தீவிரம் காட்டினான். பிரட்டுக்களம் அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது.

தோட்ட அதிகாரிக்கு உதவியாக காவல்காரர்கள் ஓடி வந்தார்கள். தோட்டமே ஸ்தம்பித்து விட்டது. தொழிலாளர்கள் வேலைக்குப் போக மறுத்தனர். பெண் தொழிலாளர்கள் நாலா பக்கத்திலிருந்தும் பிரட்டுக் களம் நோக்கி அணி திரண்டு விட்டனர்.

நிலைமை மோசமாகி விட்டதால் பொலிசிற்கு அறிவிக்கப் பட்டது. அடுத்தென்ன செய்வதென்று தெரியாது தொழிலாளர்கள் அச்சத்தோடு பிரட்டுக்களத்தில் குழுமியிருந்தனர்.

தகராறு நடந்த ஒரு மணி நேரத்திற்குள் பொலிஸ் ஜீப் ஒன்று தோட்டத்திற்குள் வந்து நேரே ஆபீஸ் முன்னால் நிறுத்தப்பட்டது. பொலிசார் துப்பாக்கிகளோடு குதித்தனர்.

பிரட்டுக் களத்திற்கு நேரெதிர தோட்ட ஆபிஸ் இருப்பதால், அங்கு என்ன நடக்கிறது என்பதை பிரட்டுக்களத்திலிருந்தே தொழி லாளர்கள் தெரிந்து கொள்ள முடியும். பொலிசார் வந்திறங்கிய சிறிது நேரத்தில் பெரிய துரையின் கார் பங்களாவைவிட்டுப் புறப்பட்டு பிரட்டுக் களத்திற்கு கீழ் பக்கம் வழியாக மிக வேகமாக பறந்துச் சென்றது.

அந்த வழியாக பிரட்டுக்களம் நோக்கி வந்த கந்தன், பெரியதுரை காரில் போகிறார் என்று பதற்றத்துடன் சொன்னான். அதேசமயம், தோட்ட ஆபிசிலிருந்து இரண்டு பொலிசார் பிரட்டுக் களம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்களின் கைகளில் துப்பாக்கி இருந்தது.

கூடியிருந்த தொழிலாளர்கள் பதற்றத்தோடு நின்றிருந்தனர். ராமு எல்லோரையும் அமைதியாக இருக்குமாறு கேட்டுக்.கொண்டான். அவர்களை நெருங்கிய பொலிசாரில் ஒருவன் "யார் இங்கே ராமு சொல்லி இருக்கா" என்று சத்தம் போட்டான்.

எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்களே தவிர, ராமு யார் என்பதைக் காட்டிக் கொடுக்கவில்லை. அதே நேரத்தில், பிரட்டுக்களத்தில் கூட்டத்தோடு நின்றிந்த ராமு வெளிப் பட்டு, நான்தான் ராமு என்று சொல்லி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"ஆங் நீ பெரிய ஆள்தான். நீ தானே தோட்டத்தில் குழப்பம் செய்கிறது. வா ஆபீசிற்குப் போவோம்" என்று முன்னே நடக்க, ராமு பின் தொடர்ந்தான்.

தொழிலாளர்களோ ஒரே குரலில், "ராமு தம்பி போக வேண்டாம்" என்று சத்தம் போட்டனர். இந்த சத்தம் விண்ணையும் - மண்ணையும் ஒன்றிணைப்பதுபோல் எதிரொலித்தன. தொழிலாளர்களைத் திரும்பிப் பார்த்த ராமு "ஆத்திரப்படாமல் அமைதியாக இருங்கள்" என்று கூறிவிட்டு, பொலிசாருடன் ஆபிசை நோக்கி நடந்தான்.

ஆபிசில் அமர்ந்திருந்த சார்ஜன்ட் பொலிசாருடன் வரும் ராமுவைப் பார்த்தான். "ஆ... சண்டியன் வர்ரது" என்று பக்கத்தில் வந்து நின்று கொண்டு, "அடே, ஏன் நீ துரைக்கு அடிச்சது" என்று கேட்டார்.

'நான் துரையை அடிக்கவில்லையே' என்று சொல்லுவதற்கு முன்பு படார் என்று ராமுவின் கன்னத்தில் அடிவிழுந்தது. மறு அடியும் விழும் முன்பு ராமு சற்று பின்வாங்கினான்.

அடுத்து பிரட்டுக் களத்தில் எழுந்த ஒலி பொலிஸ் சார்ஜன்டையே திகைக்கச் செய்தது.

# 3

"தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள்" இது உலகத் தொழிலாளர் வர்க்கத்திற்கு விடுக்கப்பட்ட அறைகூவல்.

"தொழிலாளர்கள் ஓரணியாகத் திரள வேண்டும்" இது தொழிற் சங்கங்களின் ஏகோபித்தக் குரல்.

ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பல்வேறு இயக்கங்களில் பிரிந்து இருந்தாலும் இது போன்ற நேரங்களில் அவர்

களின் ஒற்றுமை தங்களுக்குக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கைக் குரல் மலைமுகடுகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

ஆம்... அடக்குமுறை கட்டவிழ்த்து விடும்போது தொழிலாளர்கள் அவ்வடக்கு முறைக்கு எதிராக ஆர்த்தெழுந்து விடுகின்றனர். இங்கு பேதமில்லை. கருத்து மோதல்கள் இல்லை. ஒரே குறிக்கோளில் ஒன்று திரண்டு குரலெழுப்பி நியாயத்திற்காகப் போராட முனைகின்றனர். இது இயற்கையாக ஏற்படும் ஒற்றுமையாகும்.

அது போலவே ராமுவை போலிஸ் சார்ஜண்ட் அடிக்கும்போது பிரட்டுக்களத்தில் நின்றிருந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் ஆத்திரமுற்றனர். அதற்கெதிராக குரல் எழுப்பியவாறு ஆபீசை நோக்கி வந்தனர்.

அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சத்தால் தோட்ட நிர்வாக உத்தியோகஸ்தர்கள் கைகளைப் பிசைந்த வண்ணம் நின்று கொண்டிருந்தனர். சார்ஜண்ட் ஆபீஸ் உள்ளே சென்று ஒரு கதிரையில் அமர்ந்து விட்டார்.

தொழிலாளர் கூட்டம் ஆபீஸை முற்றுகையிட்டு "தொழிலாளர் களுக்கு எதிரான போலிஸின் அட்டகாசம் ஒழிக" என்று குரலெழுப்பியது.

இத்தனை நேரமாக அமைதியாக நின்றிருந்த ராமு உணர்வு பெற்று நிலைமை மோசமாகிவிடும் என்பதை உணர்ந்து தொழிலாளர் களை முன்னேற விடாது தடுத்து நிறுத்தினான்.

"இப்போது நாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் தொழிலாளர்களைப் பெரிதும் பாதிக்கும். ஆகவே, என்னோடு யாராவது இரண்டு மூன்று பேர் துணைக்கு வாருங்கள். இன்று நடந்த விசயத்தைப் பற்றி பொலிசாருடன் பேசுவோம். மற்றவர்கள் தயவு செய்து கொஞ்சம் பொறுமையாக விலகி இருங்கள்" என்று தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டான்.

கூட்டம் அமைதியடைந்தது. யார் முன்னுக்கு வருவது என்ற நீண்ட திகைப்புக்குப் பின் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து நடேசன், சிவலிங்கம், சின்னத்தம்பி, தர்மலிங்கம் ஆகிய நான்கு பேரும் ராமுவிற்குத் துணையாகச் செல்ல முன் வந்தனர்.

"நாங்கள் ஐந்து பேரும் இதுபற்றிப் பேசி உங்களுக்கு முடிவை சொல்கின்றோம். நீங்கள் எல்லோரும் அமைதியாக பிரட்டுக்களம் போங்கள்" என்று ராமு தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டதற் கிணங்க மன்னனின் ஆணைக்குக் கட்டுப்பட்டது போல் தொழிலாளர்கள் பிரட்டுக்களத்தை நோக்கி அமைதியாகச் செல்ல ஆரம்பித்தனர்.

இவைகளை கவனித்துக் கொண்டிருந்த சின்னதுரை வெளியில் வந்து "உங்களுக்கு என்ன வேண்டும். ஏன் இந்த மாதிரி குழப்பம் செய்கிறீர்கள்" என்று மூடிமுழுங்கிக் கொண்டு கேட்டான்.

"நாங்கள் ஒன்றுமே கேட்கவில்லை. காலையில் பிரட்டுக் களத்தில் நடந்த தகராறை பேசித் தீர்க்காமல் பொலிசை அழைத் திருக்கிறீர்கள். பொலிசார் விசாரணை இன்றி எங்களை அடிக்கிறார். இதை எப்படி தொழிலாளர்கள் அனுமதிப்பார்கள்? இத்தனை வருட காலமாக தொழிற்சங்கத்தில் கூட சேராது தொழிலாளர்கள் அமைதி யாகத்தான் வேலை செய்து வந்திருக்கிறார்கள். அந்த தொழிலாளர் களின் அமைதியைக் குலைத்தது தோட்ட நிர்வாகம் தான். இதற்குப் பதில் சொல்ல வேண்டியது நீங்கள்தான்" என்று பேச்சைத் தொடங்கி வைத்தான் ராமு.

"ரொம்ப கதை வேண்டாம். ஒனக்கு சங்கம் சேர விருப்பம் என்றால் போய் சேர். உன் விருப்பம் அது. ஆனா ஏன் தோட்டத்துரையை அடித்தது. அதற்குத்தான் பொலிஸ் வந்திருக்கு."

"துரையை நாங்கள் அடிக்கவில்லை. ஆனால் பிரட்டுக்களத்தில் துரை நடந்து கொண்டது சரியில்லை. அதுதான் தகராறு முற்றியது. தொரை பிரட்டுக் களத்தில் வைத்து சின்னத்தம்பியை அடித்த தனால்தான் அவன் திருப்பி அடித்தான்."

அந்நேரத்தில் வெளிப்பட்ட சார்ஜன்ட், "அடேய் வாய் மூடி இரு. கதை வேண்டாம். இந்த தொரை றிப்போர்ட் கொடுத்திருக்கு. ராமு, நடேசன், சின்னத்தம்பி, தர்மலிங்கம் நாலு பேரும் துரையை அடிச் சிருக்கு. இப்போ துரையை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்கு. அதனால்தான் நாங்கள் கைது செய்ய வந்திருக்கு. மரியாதையா ஜீப்பிலே ஏற வேணும். இல்லாட்டி அடி கொடுத்துதான் கொண்டு போவோம்" என்றார்.

சார்ஜன்ட் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஏனைய பொலிசார் இவர்களைத் தள்ளிக்கொண்டு போய் ஜீப்பில் ஏற்றினார்கள். இதை தொழிலாளர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஜீப் புறப்பட்டது.

பிரட்டுக் களத்தை ஜீப் கடக்கும்போது தொழிலாளர்கள் பாதையில் குறுக்கே நின்று மறித்தார்கள். துப்பாக்கியுடன் குதித்த ஒரு பொலிஸ்காரன், "பாதையைவிட்டு ஒதுங்குங்க. இல்லாட்டி சுட்டுப் போடறது" என்று சத்தம் போட்டான்.

எத்தனை தொழிலாளர்கள் ஒன்று திரண்டாலும் அவர்களை வழி நடத்த ஓர் ஆள் இல்லாவிட்டால் ஒற்றுமை சிதைந்துவிடும் என்பதை இங்கு அடுத்து நடந்த நிகழ்ச்சி உறுதிப்படுத்தியது.

கூட்டம் கலையாததைக் கண்ட சார்ஜண்ட் பொலிசாரிடம் ஏதோ உரத்துக்கூறவே துப்பாக்கிக்-குண்டுகள் வானத்தை நோக்கி வெடிக்க ஆரம்பித்தன.

தொழிலாளர்கள் சிதறிவிட்டார்கள். பொலிஸ் ஜீப் பறந்து விட்டது. ஜீப்பில் இருந்த ராமு வெளியே எட்டிப் பார்த்தான். சிவலிங்கமும் ஒருசில தொழிலாளர்களும் திக்பிரமை பிடித்தது போல் நின்று கொண்டிருந்தார்கள்.

தோட்டமே அல்லோலகல்லோலப்பட்டது. ஆறுதல் சொல்ல, தைரியம் சொல்ல யாருமே இல்லாத நிலையில் தொழிலாளர்கள் அச்சத்தோடு வீடுகளில், வாசல்களில் கூட்டம் கூட்டமாக நின்றிருந்தார்கள்.

காலையில் பிரட்டுக்களத்தில் நடந்த விசயத்தையும் நண்பர் களைக் கைது செய்து கொண்டு போன விஷயத்தையும் பக்கத்துத் தோட்டத்திற்கு எடுத்துச் சென்றான் சிவலிங்கம். அண்மையில் தான் அந்தத் தோட்டத்தில் தொழிற்சங்கம் அமைத்துக் கூட்டம் நடந்தது.

நேரே தலைவர் கந்தசாமி வீட்டுக்குச் சென்ற சிவலிங்கம், விஷயத்தைச் சொன்னான். ஆத்திரப்பட்ட தலைவர் “தொழிலாளர்கள் தொழிற் சங்கத்தில் இருக்க வேண்டுமென்பதை இப்போதவாது நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்” என்றார்.

கந்தசாமித் தலைவர் நல்ல திறமைசாலி. நீண்ட நாட்களாக தொழிலாளர்களுக்கு சேவை செய்து அனுபவப்பட்டவர்.

சிவலிங்கம் தலைவருடன் பேசிக் கொண்டிருக்கும்போதே தொழிலாளர்கள் விஷயத்தை அறியக் கூடிவிட்டார்கள். தோட்டத்தில் நடந்த கலவரம் காலையிலேயே இவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

அமைதியாக இதுபற்றி யோசித்துக் கொண்டிருந்த தலைவர் உடனடியாக தொழிற்சங்கக் காரியாலயத்திற்குப் போவோம் என்று சிவலிங்கத்தையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். தொழிற் சங்க காரியாலயத்தை அடைந்த கந்தசாமி தலைவர் விஷயத்தை பிரதிநிதி யிடம் விபரமாகச் சொன்னார்.

“உங்கள் தோட்டத்தில் தொழிற்சங்கம் ஒன்று இருந்திருந்தால், இந்த விசயங்களை நேரடியாக நிர்வாகத்தோடு பேசியிருக்கலாம். ஆனால், இந்த நிலைமையில் வேறு வழியைத்தான் கையாள வேண்டுமென்று சொன்னவர், சிறிது நேர யோசனைக்குப் பின் தொலை பேசியில் யாருடனோ பேசினார். பின்பு எங்களைப் பார்த்துப் புன்னகை ஒன்றை உதிர்த்தவர், மத்திய செயலகத்துடன் தொடர்பு கொண்டேன், செயலாளர் இருந்தார். உடனடியாக பொலிசிற்குப் போய் அவர்கள்

எங்கள் உறுப்பினர் என்று பேசும்படி சொன்னார்" என்றவர், எங்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் ஸ்டேசனை அடைந்தார். அங்கு ரிமாண்டில் இருந்த நால்வரையும் பார்த்துப் பேச அனுமதி பெற்றுக் கொண்டார்.

கந்தசாமி தலைவர் உள்ளே நுழைவதைக் கண்டதும் அவர்களின் முகத்தில் மகிழ்ச்சிக்கான அறிகுறிகள் காணப்பட்டன. நான்கு பேரிடமும் பேசிவிட்டு, ஏ.எஸ்.பி.யை சந்தித்துப் பேசுவதற்குச் சென்றார்.

காரியாலயத்தில் கால் வைத்தவுடனேயே ஒரு பொலிஸ்காரர் பிரதிநிதியைப் பார்த்து, "ஹலோ டிக்சன் என்ன விசேஷம்" என்று கேட்டார்.

"ஏ.எஸ்.பி. இருக்காரா" என்று கேட்டுக்கொண்டே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தவர் வந்த விசயங்களைச் சொல்லவே, எல்லாவற்றையும் செவிமடுத்த சார்ஜன் ஏ. எஸ். பி.யோடு தொடர்பு கொண்டு விசாரித்தார்.

தோட்டத்துரை கொடுத்த புகாரின் பேரில்தான் இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னவர், துரை இப்போது ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும், அதனால் சார்ஜண்டோடு பேசுங்கள் என்றும் சொன்னார்.

நிலைமை நமக்கு சாதகமில்லை என்பது தெரிந்தவுடன் தொழிற்சங்க காரியாலயம் வந்து இதுபற்றி அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடினார்கள். அதன் பின் கந்தசாமி தலைவரின் யோசனையின்படி, தோட்டத்திற்கு பிரதிநிதியுடன் போவதாக முடிவு செய்தனர்.

மாலை ஆறு மணிக்கு கந்தசாமி தலைவர், டிக்சன் பிரதிநிதி, சிவலிங்கம் மூவரும் காரில் சென்று இறங்கினார்கள். சிறிது நேரத்தில் செய்தி அறிந்து தொழிலாளர்கள் ஒன்று கூடி விட்டார்கள்.

எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்த கந்தசாமித் தலைவர் பேச ஆரம்பித்தார்.

"உங்கள் தோட்டத்தில் நடந்த பிரச்சனையை சிவலிங்கம் மூலமாகக் கேள்விப்பட்டோம். இனிமேல் தொழிலாளர்கள் கவலைப் பட வேண்டியதில்லை. கைது செய்யப்பட்டவர்களை பொலிசில் பேசி பிணையில் எடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். இவர்தான் நம்ம தொழிற்சங்கப் பிரதிநிதி டிக்சன்" பிரதிநிதியை அறிமுகப்படுத்தி வைத்தார்.

பெரியவர்கள் இளைஞர்கள் முன்வந்து பிரதிநிதிக்கு வணக்கம் தெரிவித்தனர். எல்லோருக்கும் ஆறுதல் சொன்ன பிரதிநிதி, "இனி நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. இன்றிலிருந்து உங்கள் பிரச்னைகளை நம் சங்கம் கவனித்துக் கொள்ளும். திங்கட்கிழமை கைது செய்தவர்களை கோர்ட்டில் வைத்துப் பிணை எடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அதன் முன் உங்களில் ஒரு தலைவரை நியமிக்க வேண்டும், தொழிற்சங்கக் கூட்டம் போட்டு தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும்வரை தற்காலிகமாக சிவலிங்கத்தைத் தலைவராகத் தேர்வு செய்துள்ளோம். இதை நீங்கள் ஏற்றுக் கொள்வதாயிருந்தால் உங்களின் கரங்களை உயர்த்தி ஆதரவைத் தெரிவிக்கலாம்" என்றார்.

பிரதிநிதி சொன்னதுதான் தாமதம், ஒரே நேரத்தில் நூற்றுக் கணக்கான கரங்கள் உயர்ந்தன. "எங்கள் தலைவர் சிவலிங்கம்" என்று தொழிலாளர்கள் கோஷம் போட்டனர். தொழிலாளர்களின் உற்சாகத்தைக் கண்ட பிரதிநிதி மகிழ்ச்சியடைந்தார். அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று கலந்து பேசினார்கள்.

இதற்கிடையில் சிங்காரி பிஸ்கட், வாழைப்பழம், தேநீர் ஆகிய வற்றை ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வந்தாள். விருந்துபசாரம் முடிந்ததும் பிரதிநிதி, "அடுத்து நீங்கள் செய்யும் முதல் வேலை. உங்கள் ஒவ்வொருவரையும் தொழிற்சங்க உறுப்பினராக இணைப் பது. அதுவே உங்களை இந்த மாதிரியான சூழ்நிலையில் இருந்து உங்களை மீட்க உதவும்" என்றார்.

சிறிது நேரத்தில் சிவலிங்கம் செய்த ஏற்பாட்டின்படி ஒரு பெயர்ப் பட்டியலுடன் பணத்தையும் பிரதிநிதியிடம் கொண்டு வந்து கொடுத் தான். அதைப் பிரித்துப் பார்த்தவர், ஆச்சிரியப்பட்டார். அதில் 115 பேர் அங்கத்தவர்களாக இணைந்திருந்தனர். இது அவருக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. இதைப் பின்பற்றி ஏனையோர்களையும் உறுப்பினராக்க வேண்டும் என்றும், அப்போது தொழிலாளர்களின் பிரச்சினைகளனைத்தும் தீர்த்து வைக்கப்படும் என்றும் கூறினார்.

சரியாக இரவு ஏழு மணிக்கு கந்தசாமித் தலைவரும், டிக்சன் பிரதிநிதியும் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு காரில் ஏறப் போனபோது கூட்டத்திலிருந்து ஒப்பாரி வைத்துக் கொண்டு ஒரு பெரியம்மா முன்னே வந்து,

"ஐயா என் பிள்ளையைக் கொண்டு போய் விட்டார்களே" என்று கதறி அழுதாள்.

யார் என்று விசாரித்தார் கந்தசாமி. ராமுவின் தாயார் என்பதை அறிமுகப்படுத்தினார்கள்.

"பயப்படாமல் தைரியமாக இருங்க அம்மா. உங்களின் மகன் திங்கட்கிழமை வீட்டுக்கு வருவார்" என்று கைகளைப் பிடித்து ஆறுதல் சொன்னார்.

இந்தக் காட்சி எல்லாரையும் கண் கலங்க வைத்துவிட்டது. காரில் ஏறி அமர்ந்த பிரதிநிதி கையை அசைத்து விடைபெற்றார்.

"வாழ்க எங்கள் பிரதிநிதி டிக்சன். வளர்க் தொழிலாளர் ஒற்றுமை" என்று கோசமிட்டு வழியனுப்பி வைத்தார்கள் தொழிலாளர்கள்.

தோட்டத்தில் நடப்பதை ஒற்றர்கள் மூலம் அறிந்த தோட்ட நிர்வாகம் சும்மா இருக்குமா? இரவோடு இரவாக திட்டம் தீட்டியது. அதனால் ஏற்படப்போகும் விளைவைத் தெரிந்து கொள்ளாத தொழிலாளர்கள் அமைதியாக வீடுகளுக்குச் சென்றனர்.

# 4

அச்சுறுத்தலும் அடக்குமுறையும் தொழிலாளர்களின் ஒற்றுமை யைச் சீர்குலைக்க எடுக்கும் தந்திர நடவடிக்கையாகும். தொழிலாளர் களின் பலத்திற்கு நடத்தப்படும் பலப் பரீட்சையாகும்.

உற்பத்திப் பொருளுக்குக் கொடுக்கப்படும் மதிப்பும், மரியா தையும் உழைப்புக்குக் கொடுக்கப்படுவதில்லை. தொழிலாளி - முதலாளி பேதம் இங்கிருந்துதான் ஆரம்பிக்கிறது. தொழிலாளர்கள் மனதில் உறுதி கொண்டுவிட்டால் எந்த எதிர்ப்பையும் எதிர்க்க பலம் பெற்று விடுவார்கள்.

அன்று இரவு தோட்டங்களில் தொழிலாளர்கள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த நேரமது. திடீரென லயங்களில் சாரமாரி யாக கற்கள் வந்து விழுந்த வண்ணமிருந்தன. தொழிலாளர்கள் கண் விழித்துக் கொண்டார்கள். யாருடைய வேலை எனத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் தடுமாறினர். நிர்வாகம் தீட்டிய திட்டம்தான் இந்தத் தாக்குதல் என்பது அவர்களுக்குத் தெரிய நியாயமில்லை.

கடுமையான கல் வீச்சு. தொழிலாளர்கள் வீட்டை விட்டு வெளியே வரப் பயந்தார்கள். அவர்கள் வீட்டிலிருந்தே சத்தம் போட்டனர். சத்தத்தைச் செவிமடுத்த சிவலிங்கம் இனியும் தாமதிப்பதில் அர்த்த மில்லை என்று மெதுவாக கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து கற்கள் வருந்திசையை நோட்டம் விட்டான்.

அப்போது பலர் வீடுகளைத் திறந்து கொண்டு வெளியில் வந்தனர். அவர்களை நோக்கி சிவலிங்கம் அடி மேல் அடி வைத்து நடந்து சென்றான். எல்லோரும் கல் வந்த திசையை நோக்கிப் பதுங்கிச் சென்றார்கள். ஓர் இடத்தில் இரண்டு மூன்று பேர் கும்பலாக இருந்து கல் வீசுவது தெரியவந்தது. இவர்களைச் சுற்றிப் பதுங்கிப் பதுங்கிச் சென்ற தொழிலாளர்கள் சிலரை கையும், களவுமாகப் பிடித்துக் கொண்டனர்.

இவர்கள் போட்ட சத்தத்தில் ஏனைய லயங்களுக்கு கல் அடித்தவர்கள் ஓடிவிட்டிருக்க வேண்டும். கல்விழும் சத்தம் நின்று விட்டது.

பிடித்த மூன்று பேரையும் லயதிக்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் அருகிலுள்ள கிராமத்தைச். சேர்ந்தவர்கள். இவர்களை ஒன்றும் செய்யாது கிராம சேவகர் வீட்டிற்குக் கூட்டிச் சென்றனர். தோட்டத்தில் வேலைக்குவரும் பல தொழிலாளர்கள் சத்தத்தைக் கேட்டு வெளியில் வந்து விசாரித்தார்கள். விசயத்தைக் கேள்விப் பட்டு அவர்களும் சேர்ந்து கிராமசேவகர்கள் வீட்டில் இவர்களை ஒப்படைத்தார்கள்.

கிராம சேவகர் தொழிலாளர் சார்பில் ஒரே கொள்கையை உடையவர். அது மாத்திரமல்ல, இந்தத் தோட்டத்தில் நடக்கும் பல இன்னல்களை நேரில் கண்டவர். பிடிபட்ட மூன்று பேரையும் வைத்து விசாரணை செய்தார். அவர்கள் பொலிசிற்குப் போக வேண்டிய நிலைமையிலிருந்து தப்பிக்க வேண்டுமென்பதற்காக உண்மையைச் சொல்லி விட்டார்கள்.

தோட்ட நிர்வாகம்தான் அவர்களுக்குப் பணம் கொடுத்து கல் அடிக்கச் சொன்னதாகக் கூறியதோடு அதில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களையும் சொல்லி விட்டார்கள். கிராமசேவகர் சிவலிங்கத்தைக் கூப்பிட்டு இப்போது என்ன செய்ய வேண்டுமெனக் கேட்டார். சார் இவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம். இனிமேல் இந்த மாதிரி செய்ய வேண்டாமென எச்சரிக்கை செய்தால் போதும் என்றனர்.

தொழிலாளர்களின் பெருந்தன்மையை உணர்ந்து அவர்களை எச்சரித்ததோடு மற்றவர்களையும் காலையில் கூப்பிட்டு எச்சரிப் பதாகச் சொன்னார். கிராமத் தொழிலாளர்கள் தோட்டத்தில் நடக்கும் அநியாயங்களை நிறுத்த தாங்களும் ஒத்துழைப்புத் தருவதாக வாக்களித்தனர்.

மகிழ்ச்சியோடு எல்லோரும் வீடுகளுக்குத் திரும்பினார்கள். லயங்களில் எல்லோரும் தூக்கம் விழித்துக் காத்திருந்தனர். எல்லோ

ருக்கும் விசயத்தைச் சொல்லிவிட்டு தன்னுடைய வீட்டிற்குச் சென்றான் சிவலிங்கம்.

தொழிலாளிகளை அடிமைப்படுத்த நிர்வாகங்கள் பலவிதமான நடிவடிக்கைகளை மேற்கொள்கின்றன. மறுநாள் காலை தொழிலாளர்கள் வழமைபோல் பிரட்டுக்களம் நோக்கிச் சென்று அமைதியாக வரிசையாக நின்றார்கள். பெண்கள் துண்டு வாங்கிக் கொண்டு போக, பணிய கறுத்த ரோட்டில் நின்றிருந்தார்கள். வழமையாகத் துண்டு கொடுக்கும் கங்காணியும் நின்றிருந்தார். கணக்கப்பிள்ளை பிரட்டுக் களம் நோக்கி நடந்தார். எல்லோரையும் ஒருமுறை பார்த்து விட்டு "உங்களுக்கு வேலை இல்லை" என்றார்.

சிவலிங்கம் முன் சென்று கேட்டான். "எனக்குத் தெரியாது அதை துரையிடம் கேட்டுக்கொள். துரையின் உத்தரவு இது" என்று கூறிவிட்டு கிராமத்திலிருந்து வந்த தொழிலாளர்களைப் பார்த்து அவர்களுக்கு மாத்திரம் பிரட்டுக் கலைக்க முற்பட்டார்.

முதல் நாள் இரவு சொன்னபடி 'எல்லோருக்கும் வேலை கொடுத்தால் தாங்களும் செய்வோம்' என்று கிராமத் தொழிலாளர்கள் மறுத்து விட்டனர்.

"தோட்டத்து ஆட்களுக்கு வேலையில்லை. நாட்டு ஆட்களுக்கு மாத்திரம்தான் வேலை கொடுக்கச் சொல்லி துரை துண்டு அனுப்பி யிருக்கிறார்." கணக்கபிள்ளையின் இந்தப் பதிலைக் கேட்டு தொழிலாளர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். ஆனால் நாட்டு ஆட்கள் பிடிவாதமாக மறுத்துவிட்டனர். எல்லா தொழிலாளர்களும் ஆபீசிற்குப் படையெடுத்தனர். ஆபீசை அடைந்தபோது நிலைமையை அவதானித்துக் கொண்டு துரை ஆபீசில் உட்கார்ந்திருந்தார். தொழிலாளர்களைக் கண்டவுடன் வெளியில் வந்து எல்லோரையும் ஒருமுறை பார்த்துவிட்டு, கூட்டத்திலிருந்த ரணபண்டா கங்காணியை அழைத்து,

"ரணபண்டா ஏன் தோட்டத்து ஆட்கள் பேச்சைக் கேட்டுக்கிட்டு வேலைக்குப் போக மறுக்கிறது. தமிழ் ஆளுகளுக்கு கொழுப்புக் கூடிவிட்டது. அதைக் குறைக்கத்தான் அவன்களுக்கு வேலை நிப்பாட்டியிருக்கு. நீங்க சிங்கள ஆளைக் கூட்டிக்கொண்டு போங்க. உங்களுக்கு இன்னைக்கு நான் டபுள் சம்பளம் தருகிறது" என்றார்.

"தொரைக்கு நான் ஒன்னு சொன்னா கோபிக்கக்கூடாது. எல்லா தொழிலாளிகளுக்கும் வேலை கொடுத்தா நாங்களும் போவோம். இல்லாட்டி போக மாட்டோம்" என்றான், ரணபண்டா.

நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதை உணர்ந்த தோட்டத் துரை அதைச் சமாளிக்க கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டு எல்லோருக்கும் வேலை கொடுக்கச்சொன்னார்.

தொழிலாளர்கள் மகிழ்ச்சியோடு பிரட்டுக்களம் நோக்கிச் சென்றனர். அன்று வேலைக் காட்டில் இதே கதைதான்.

திங்கட்கிழமை சிவலிங்கம் உட்பட பலர் தொழிற்சங்கக் காரியாலயத்தை அடைந்தனர். ரிமாண்டில் இருக்கும் தங்களின் சகாக்களை அன்றுதான் பிணையில் எடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

எல்லோரையும் வரவேற்ற பிரதிநிதி, "கோர்ட்டுக்குப் போங்க, நான் புரொக்டரோடு வந்து விடுகிறேன்" என்றார்.

புரொக்டருடன் கோர்ட்டுக்குச் சென்ற பிரதிநிதி குறிப்பிட்ட ஆட்கள் உட்கார்ந்திருக்கும் இடத்திற்குச் சென்று அமர்ந்து நிலை மையை விளக்கினார். வழக்கு விசாரிக்க ஆரம்பிக்கப்பட்டது. வரிசையாக பெயர்கள் அழைத்தார்கள்.

இறுதியாக ராமு, நடேசன், தர்மலிங்கம், சின்னத்தம்பி நால் வரும் சிரித்தமுகத்துடன் வந்தார்கள். தோட்டத்திலிருந்து கோர்ட் டுக்கு வந்திருப்பவர்களை நிமிர்ந்து பார்த்த ராமு நன்றியோடு தலையசைத்தான்.

நிர்வாகத்தின் சார்பில் வந்திருந்த புரொக்டர் நிறையப் பேசினார். பிணையில் விடக்கூடாது என்பதற்கு பலமாக வாதிட்டார். அதன் பிறகு தொழிலாளி சார்பில் எழுந்த புரொக்டர் தகுந்த காரணங்களைக் கூறி பிணை கேட்டார்.

இருபக்க வாதங்களையும் கேட்ட நீதிபதி தொழிலாளர்கள் நால்வரையும் பிணையில் விட அனுமதித்தார்.

தோட்டத்துரை முகத்தில் கடுகடுப்பு தோன்றியதையும் பொருட் படுத்தாத தொழிலாளர்கள் முகத்தில் புன்னகையுடன் வெளியில் வந்தார்கள்.

தொழிற்சங்கக் காரியாலயம் சென்றதும் தோட்டத்தில் நடந்த அத்தனை அட்டூழியங்களையும் கேட்டு ராமு பெருமூச்சு விட்டான். தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் சேர்ந்து சிவலிங்கத்தை தற்காலிக தலைவராக நியமித்திருந்ததைக் கேட்டவுடன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான்.

"ராமு உங்களைக் கைது செய்து கொண்டு போனவுடன் நான் பல காரியங்களை என்னி டத்திற்குச் செய்தேன். குறை இருந்தால் மன்னியுங்கள்" என்றான் சிவலிங்கம்.

"நம்ம கந்தசாமித் தலைவரும் பெரும் பாடுபட்டார். அவருக்கும் நம்ம பிரதிநிதிக்கும் நன்றி சொல்லனும்" என்றான்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம், தொழிலாளர்களின் பிரச்சனைகளைத் தீர்த்தல் எல்லோருக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அது எனக்கும் பெருமையாக இருக்கிறது" என்றவர் தோட்டத்தில் கமிட்டி அமைக்கவும் கூட்டம் போடவும் ஏற்பாடு செய்யுமாறு பிரதிநிதிக்குச் சொன்னார்.

"அதற்கான ஏற்பாடுகளை நான் செய்கிறேன். கவலைப்படாமல் போங்கள்" என்று தலைவரை வழியனுப்பி வைத்தார் பிரதிநிதி டிக்சன்.

பிரதிநிதி போக ஆயத்தமாகும்போது ராமு பிரதிநிதியின் கையைப் பிடித்துக்கொண்டு "எப்படியோ தோட்டத்தில் தொழிற்சங்கத்தை அமைக்க உங்கள் நடவடிக்கை உறுதுணையாக இருந்தது" என்றான்.

"அடிக்கடி சந்தித்துப் பேசுவோம். இந்தப் பகுதியிலே நமது தொழிற்சங்கத்தை தாபிக்க நான் அயராது பாடுபடுவேன்" என்று உறுதியுடன் விடைபெற்றான்.

தோட்டத்திற்குச் சென்ற ராமுவையும் சகாக்களையும் வரவேற்க கூட்டமே திரண்டிருந்தது. கூட்டம் நிற்கும் இடத்தை அண்மித்தவுடன் 'தலைவர் சிவலிங்கம் வாழ்க, போராட்ட வீரர் ராமு வாழ்க' என்று கோசமிட்டனர். பெண்கள் அனைவரையும் ஆராத்தி எடுத்து வரவேற்றனர். இந்தக் காட்சி போருக்குச் சென்று திரும்பிய வீரர்களுக்கு வரவேற்புக் கொடுத்தது போல இருந்தது.

கூட்டத்திலிருந்து வெளிப்பட்ட சிவகாமி ராமுவுக்கு விசேஷமாக ஆரத்தி எடுத்து வரவேற்றாள்.

சிவகாமி ராமுவின் அக்காள் மகள். வேறு தோட்டத்திலிருந்த போது ராமு அடிக்கடி அவர்கள் வீட்டிற்குப் போயிருக்கிறான். ஆனால் இன்று எத்தனை மாற்றம், இன்று சிவகாமி புதுமையான பெண்ணாகக் காட்சியளித்தாள்.

திரண்டிருந்த கூட்டத்தை நோக்கி ராமு பேச ஆரம்பித்தான்.

"பெரியோர்களே, தாய்மார்களே, தொழிலாளர்களே இப்படி ஒற்றுமையைக் காண வேண்டுமென்று எத்தனை நாள் கனவு கண்டேன். அது இன்று நிறைவேறியிருக்கிறது என்றால், அதற்கு யார் காரணம். நம்ம சின்னத்தம்பிதான். இவர்தான் பிரட்டுக்களத்தில் பிரச்னையை உண்டாக்கியவர். அதன் மூலமே தொழிலாளர்கள் துணிந்து தொழிற்சங்கத்தில் சேர முடிந்தது. இனி நம் அனைவருக்கும் விமோசனம். சங்கம் சேர்ந்து விட்டோம் என்று ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம். அமைதியாக நம்ம உரிமைகளை வென்றெடுக்க தயாராவோம்."

"கடமை, கட்டுப்பாடு காப்போம். எல்லோருடனும் கண்ணியமாக நடந்து எமது பலத்தை அணிவகுப்போம்" என்று கூறி முடித்தான்.

பலத்த கை தட்டலோடும் 'வாழ்க' என்ற கோஷத்தோடும் கூட்டம் கலைந்தது. தோட்டத்திற்கு வந்த ராமுவைத் தாயார் கட்டிப் பிடித்து, முத்தமிட்டாள்.

வீட்டிற்குப் போன சிறிது நேரத்தில் ராமுவின் மாமாவும் அக்காவும் வந்து எச்சரிக்கை செய்தார்கள். "துரை உன் மேல்தான் கோபமாக இருக்கிறார். அதனால நீ கொஞ்சம் கவனமாக இருக்கணும். ஆளுக உன்னை மூட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பார்கள்" என்று புத்தி சொன்னார்கள்.

"தொரையைப் பத்தி நாம கவலைப்படத் தேவையில்லை அக்கா, ஆட்கள் வம்புக்குப் போகாமல் இருந்தால் அதுவே போதும்" என்றான் ராமு. சிறிது நேரமாக ராமுவுடன் பேசிக் கொண்டிருந்தவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கு வந்த சிவலிங்கம் தோட்டத்தில் நடந்த விசயங்கள் அனைத்தையும் ராமுவிடம் சொன்னான்.

அதைக்கேட்ட ராமு உடனடியாக கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வதோடு அதற்கு முன் ஒரு கமிட்டியை அமைத்து முக்கியஸ்தர்களை அழைத்துப் பேசவேண்டும் என்றும் ஆலோசனை சொன்னான். அந்நேரத்தில் ராமுவோடு ரிமாண்டில் இருந்த மூவரும் வந்தார்கள். எல்லோரும் சேர்ந்து அடுத்த ஞாயிற்றுக்கிழமை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். நீண்ட நேரம் கதைத்துக் கொண்டிருந்தவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். இன்று தொழிலாளர் வீடுகளில் ஒரே குதூகலம் ஏற்பட்டிருப்பதைக் காண முடிந்தது.

இரவு சாப்பாட்டிற்குப் பின் நித்திரைக்குச் சென்றவனுக்கு தூக்கம் வர மறுத்தது. அவனின் சிந்தனை எல்லாம் தொழிலாளர்களைப் பற்றியே இருந்தது. தோட்டத்திலிருக்கும் முந்நூற்றைம்பது தொழிலாளர்களும் ஒரே மாதிரி இருக்க முடியாது. எத்தனைதான் அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும் அதில் நல்லவர்கள், கெட்டவர்கள், துணிச்சல் பேர்வழிகள், பயந்தவர்கள், அடக்குமுறைக்கு அஞ்சுபவர்கள் இப்படி பலவிதமாக இருப்பார்கள். இவர்கள் எல்லோரையும் அரவணைத்துச் சென்றால்தான் உரிமையைப் பெறமுடியும். இப்படி பலவாறு அவனின் சிந்தனைகள் சுழன்றன.

காலையில் ராமுவை அவனின் தாய் தேநீர் குடிக்க எழுப்பியபோது தான் எத்தனை மணிக்குத் தூங்கினோம் என்று சிந்தித்தான். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வேலைக்குப் புறப்பட்டவனை தாய் நிறுத்தினாள். கணவனை மனதில் நினைத்து தன் பிள்ளைக்கு எதுவும்

வராமல் பாதுகாக்க வேண்டிக் கொண்டு விபூதி தட்டில் சூடத்தைப் பற்ற வைத்து தொட்டுக் குப்பிடச் சொல்லி விபூதியை எடுத்து நெற்றியில் இட்டு அனுப்பி வைத்தாள்.

அன்று பிரட்டுக்களம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. கூட்டத்திலிருந்த ராமுவைப் பார்க்க கணக்கப்பிள்ளை ஒரு புன்னகையோடு தன் கடமையைச் செய்யத் தொடங்கினார். அங்கே வந்த துரை பிரட்டு வரிசையைப் பார்த்து "அந்த மறியகாரன் நாலு பேரும் துண்டா நில்லு" என்று சொன்னார்.

வரிசையைவிட்டு வெளியேறிய ராமு உட்பட, நான்கு பேரும் தனியாக நின்றனர். ஏனென்ற கேள்வியோடு நின்றிருந்த தொழிலாளர் களைக் கண்களால் ராமு அமைதிப்படுத்தினான். "கணக்கப்பிள்ளை இந்த நான்கு பேரையும் கல்தூக்கப் போடு" என்று கூறிவிட்டுப் போய்விட்டார் துரை.

இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டவர்கள், கல்லு தூக்கும் இடத்திற்குச் சென்றார்கள்.

# 5

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை இயந்திரத்திற்குச் சமமானது. உழைப்பு, உழைப்பு, உழைப்பு. எந்நேரமும் உழைப்புதான்.

தொழிலாளி நன்மையடையாவிட்டாலும் முதலாளிகள் தங்கள் சுகபோகத்தைப் போக்கிக் கொண்டனர். தொழிலாளர்கள் ஒற்றுமையைச் சீர்குலைப்பதிலும் அவர்களைப் பிரித்து வைப்பதிலும் நிர்வாகம் தன் கெட்டிக்காரத்தனத்தைக் காட்டிவிடும்.

அதிகாலை முதல் சேவல் கூவும்போதே தொழிலாளர்கள் எழுந்து விடுவார்கள். இவர்கள் எழுந்த பிறகுதான் தேயிலை ஸ்டோரில் மணி மூன்று என்பதை அறிவிக்க காவல்காரன் 'டாங் டாங் டாங்' என்று மணியை மூன்று முறை அடிப்பான். வீடுகள் தோறும் தொழிலாளர்கள் தங்களின் காலைக் கடன்களைச் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால், போர்முனைக்குப் போவது போன்ற பரபரப்பில் இருப்பார்கள். இது அன்றாடம் தோட்டங்களில் தொழிலாளர் மத்தியில் இடம் பெறும் சம்பவங்கள்.

ஸ்டோர் மலை முகட்டில் பிரட்டு தப்பு அடிக்கும் சத்தம் கேட்டது. ராமு அவசர அவசரமாக, பாயைச் சுருட்டி வைத்துவிட்டு அடுப்பில் கரித்துண்டை எடுத்துக் கொண்டு ஆற்றை நோக்கிச் சென்றான்.

பல தொழிலாளர்கள் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு எதிரே வந்து கொண்டிருந்தனர். சுருட்டைப் பற்ற வைத்து புகையை இழுத்துவிட்டுக் கொண்டே எதிரில் வந்த பெரியவர் சுப்பையா, "தம்பி ராமு நேரத்தோடு பிரட்டுக் களத்திற்கு வந்திருங்க. நேற்று மாதிரி தனி வேலைக்குப் போட்டாலும் போடுவான். கொஞ்சம் எல்லோரும் பொறுமையா நடந்துக்குங்க. இல்லாட்டி வம்புல, தும்புல மாட்டிடு வான்" என்றார். சுப்பையா இந்தத் தோட்டத்தில் ஐம்பது வருடமாக வாழ்பவர். தன் அனுபவத்தைக் கொண்டு அவ்வப்போது இளைஞர் களுக்குப் புத்தி சொல்லி வந்தார்.

"எந்த வேலைக்குப் போட்டாலும் இந்த ராமுவை ஒன்றும் செய்திட முடியாது. நாம் எடுத்த காரியத்தை முடித்தே தீருவோம்" என்று சொல்லிவிட்டு ஆற்றை நோக்கி ஓடிய ராமு கடமைகளை முடித்துக்கொண்டு திரும்பினான்.

தாயார் தயார் நிலையில் எடுத்து வைத்திருந்த ரொட்டியையும் சம்பலையும் சாப்பிட்டு முடித்தவன் பிரட்டுக்குப் போவதற்குப் புறப்பட்டான். அவனின் தாய் அவனை எச்சரிக்கை செய்து அனுப்பினாள்.

வீட்டை விட்டு வெளியேறும்போது கையில் ஒரு பாத்திரத்துடன் வீட்டிற்குள் நுழைந்த அக்கா மகள் சிவகாமி "மாமா புட்டு கொண்டு வந்திருக்கிறேன் சாப்பிட்டுட்டுப் போங்க" என்று சொன்னதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் பிரட்டுக் களத்தை நோக்கிச் சென்றான் ராமு.

பிரட்டுக்கள மேடையில் கணக்கப்பிள்ளை சின்னத்துரை ஆகியோர் நின்றிருந்தார்கள். ராமு தொழிலாளர்கள் வரிசையில் கடைசியாகச் சென்று நின்று கொண்டான்.

இதை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்போல், "அடே என்ன இவ்வளவு நேரம் சுணங்கி வாரது. பிரட்டில் நிற்க வேண்டாம் துண்டா நில்லு" என்று சின்னத்துரை சொல்லவே ராமு வரிசையைவிட்டு வெளியில் வந்து தனியாக நின்று கொண்டான். மற்றவர்களை வேலைக்கு பிரட்டுக்கு கலைத்து அனுப்பிவிட்டு ராமுவை மாத்திரம் சின்னத்துரை தனியாக ஸ்டோருக்கு கூட்டிக் கொண்டு போனார்.

"இவனுக்கு ஸ்டோர் அடுப்பு விறகு வெட்டப் போடுங்கள். பெரியதுரை வந்து பார்த்துக் கொள்வார்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

விறகு வெட்டும் காம்பராவுக்குப் போன ராமு விறகு கட்டைகளை அடுப்புக்கு ஏற்ற மாதிரி கோடரியால் வெட்டிக் கொண்டிருந்தான். தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர் களுக்கு எவன் ஒருவன் வழிகாட்டியாக வருகிறானோ அவனை இப்படித்தான் தனியாகப் போட்டு சித்திரவதை செய்து பழிவாங்கு வார்கள். இதற்கெல்லாம் அஞ்சாத ராமு விறகு வெட்டுவதில் மும்முரமாக இருந்தான்.

பகல் பதினொரு மணிக்கு அங்கு வந்த பெரியதுரை ராமுவைப் பார்த்து, "தோட்டத்திற்கு எதிரா நடந்த இந்த மாதிரி க டமான வேலைகளையெல்லாம் தான் கொடுப்போம். நீ ஆளுக பேச்சைக் கேட்டுக்கிட்டு சங்கம் சேர்ந்திருக்கு நல்லா நம்பு. சங்கம் உனக்கு சோறு போடாது. நான் வேலை கொடுத்தால்தான் நீ சாப்பிட முடியும். சும்மா சங்கம் அது இது என்று திரியாமல் நான் சொல்வதைக் கேள். உனக்கு நல்ல வசதி செய்து கொடுப்பேன்" என்றார்.

தொரை எதற்கோ வலை வீசுகிறார் என்பதை உணர்ந்த ராமு பதில் பேசாமல் சொல்வதை கேட்டவாறே விறகை வெட்டிக் கொண்டிருந்தான்.

"ராமு கோடாலியை வச்சிட்டு இங்க வா" என்று கூப்பிட்ட பெரியதுரை, "நீ நல்லா படிச்சவன். நான் நினைத்தால் உனக்கு நல்ல வேலை கொடுப்பேன். லயத்தை விட்டு கொட்டேஜ் வீட்டுக்கு மாற்றித் தருவேன். நான் சொல்வதைக் கேட்கவேணும். நீ இந்த தொழிலாளிங்க ளோடு சேர்ந்து கொண்டு சங்கம் சேர்க்கிற வேலைக்குப் போகாத. அதனால் கரைச்சல்தான் வரும். நான் எவ்வளவு பெரிய பணக்காரன் தெரியுமா. நான் நினைத்தால் எதையும் செய்ய முடியும். நல்லா யோசித்து முடிவு செய்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டுப் போக இருந்தவர் மறுபடியும் அவன் பக்கம் திரும்பி "புத்தியோடு பிழைக்கப் பாரு" என்று கூறிவிட்டுச் சென்றார். வேலைகளை நோட்டம் விட்டார்.

அத்தனையும் செவிமடுத்த ராமு, "துரை அவர்களே, உங்கள் ஆலோசனைக்கு நன்றி. நீங்கள் எந்த தண்டனை கொடுத்தாலும் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் தொழிலாளர்களிடமிருந்து மட்டும் என்னைப் பிரிக்க முடியுமென நீங்கள் நினைக்க வேண்டாம்" என்றான் சுருக்கமாக.

"அடே நீ அவ்வளவு பெரிய ஆளா. பார்ப்போம்" என்று கோபமாக கையிலிருந்த கம்பால் ஓங்கி கீழே தட்டிவிட்டு ஸ்டோருக்குச் சென்று விட்டார்.

'என்ன அகம்பாவம், தொழிலாளர்களின் உரிமையைக் கேட்டால் குற்றம். தொழிலாளர்களுக்கு உரிமையைக் கொடுக்க முடியாதவர்கள். ஒரு தொழிலாளியைக் கொண்டு நூற்றுக்கணக்கான தொழிலாளர்

களைப் பழி வாங்கப் பார்க்கிறார்கள். இதற்கு நான் ஒருநாளும் சம்மதிக்கக் கூடாது' விறகை வெட்டிக் கொண்டிருந்த ராமுவின் உள்ளம் ஆத்திரத்தால் குமுறியது.

அன்று மாலை வீட்டுத் திண்ணையில் அமர்ந்து நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்த ராமு, சங்கத்தை தோட்டத்திற்குள் வர விடக் கூடாது என்ற தோட்டத்துரையின் சதித் திட்டத்தைப்பற்றி நண்பர் களுக்கு விளக்கிக் கொண்டிருந்தான். என்றாலும் சங்கத்தை நிறுவு வதற்கு தொழிலாளர்களின் ஒற்றுமை சாட்சியாக அமைந்திருப்பதை உணர்ந்த அவர்கள் அதை அவ்வளவாக அலட்டிக் கொள்ளவில்லை. மறுநாள் பிரதிநிதியைச் சந்தித்துப் பேசுவதாக கூறிவிட்டு எல்லோரும் பிரிந்தார்கள்.

மறுநாள்-

"தம்பிமார்களே. இந்த மாதிரி தோட்டத்தில் நடப்பது எல்லாம் சகஜம். அதற்கு நாம பயப்படக்கூடாது. கூடிய சீக்கிரம் தோட்டத்தில் தொழிற் சங்கக் கொடியை ஏற்றி கூட்டத்தையும் நடத்திடுவோம். பயப்படாதீர்கள். அதன் பிறகு அவர்களாக உங்களை ஒன்றும் செய்து விட முடியாது" என்றார். இதைப் போல பல துரைமார்களைக் கண்ட அனுபவம் அவரை அப்படிப் பேச வைத்தது.

பிரதிநிதியின் உற்சாகமும், ஆறுதலும் ராமுவிற்கும் ஏனை யோருக்கும் சிறிது தைரியத்தைக் கொடுத்தது. வீட்டுக்கு வந்த ராமு முக்கிய தொழிலாளர்களைக் கூப்பிட்டு விசயத்தை விளக்கினான்.

தொழிலாளர்களோ, பிரச்சனைகளைப் பற்றி பின்னால் பேசலாம். முதலில் தோட்டத்தில் தொழிற் சங்கக் கூட்டம் நடக்கணும் என்று ஆலோசனை சொன்னார்கள்.

'அதுவும் சரிதான். முதலில் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி விட்டால் அதன் பிறகு பிரச்னைகளை சுலபமாகத் தீர்த்திடலாம்' என்ற ராமுவின் யோசனையைத் தொழிலாளர்கள் வரவேற்றனர்.

அன்றிரவு சாப்பிட்டு விட்டுப் படுத்தவனுக்குத் தூக்கம் வரவில்லை. தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைக்க எப்படி எப்படியெல்லாமோ நடவடிக்கை எடுக்கிறது. அநியாயம் எந்த நாளும் நிலைக்கப் போவதில்லை. ஒரு நாள் நீதிக்கு முன் இவர்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று அசை போட்டுக் கொண்டே புரண்டு படுத்தான்.

# 6

அன்பு உலக மகா சக்தி என்று ஒரு பேரறிவு படைத்த ஞானி சொல்லி இருக்கிறார்.

தாய்மையோடு பிறந்தது தாய் பாசம். உலகில் தாய் பாசம், சகோதர பாசம் என்று சொல்வதுண்டு. இந்த நட்புக்கு இலக்கண ம் வரைந்தவர்களே தமிழர்கள்தாம். நட்பு என்பது முகஸ்துதிக்காக மட்டுமல்ல உண்மையான மனித நேயமுள்ள இதயங்கள் ஒன்றிணை வதே நட்புக்கு முழு அர்த்தமாகும். இத்தகைய அன்பு, பாசம், நட்பு என்ற உறவுகளையெல்லாம் பணம் என்ற புறநோட்டிற்குள் அடக்கி விட முடியாது.

ஆமாம், அந்த சிறந்த உறவோடுதான் ராமு தன் மாமன் மகள் சிவகாமியை நேசித்தான். இது தோட்ட மக்கள் அனைவருக்கும் தெரியும். சிவகாமியும் இவனை உள்ளன்போடு நேசிக்கத் தவற வில்லை., இவர்கள் திருமண நாளை எதிர்பார்த்து தோட்ட மக்களே காத்திருந்தார்கள்.

ஒருநாள் ராமுவின் தாயார் இந்தப் பேச்சை தம்பியிடம் உரிமை யோடு பேச ஆரம்பித்தாள்.

ஆனால் ராமுவின் மாமாவோ 'ஊர் சுற்றும் ஒரு பிச்சைக் காரனுக்கு பெண் தர நான் என்ன முட்டாளா?' என்று கேட்டு விட்டார்.

"ஏன்டா தம்பி இப்படி பேசுற. ராமுவும், சிவகாமியும் சின்ன வயசிலிருந்தே பொண்ணு - மாப்பிளைன்னு வளர்ந்தவங்க. இப்போ இப்படி வெட்டு ஒன்னு துண்டு ரெண்டா பேசினா எப்படி?"

"நீ எனக்கு அக்காவா இருக்கலாம். அதற்காக நான் பெண் கொடுத்தேதான் ஆகணுமுன்னு சட்டம் இல்ல. இனிமே இந்த வீட்டுல இந்த பேச்சு எடுக்கவே கூடாது."

தம்பியின் வார்த்தை தாக்கம் காரணமாக பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த சேலைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்த பெருமாயி அம்மா அப்படியே அசந்து உட்கார்ந்து விட்டாள்.

வெளியில் சென்றிருந்த ராமு வீட்டுக்கு வந்ததும் விசயத்தைக் கேள்விப்பட்டு கொம்பேரி மூக்கன் போல் கொதித் தெழுந்துவிட்டான். அடுத்து என்ன நடக்குமோ என்று பெருமாயி எண்ணுவதற்குள், கையில் கல்வாத்துக் கத்தியோடு மாமா வீட்டிற்குள் நுழைந்த ராமு, 'ஏய் அக்கா' என்று தன் சகோதரியை அழைத்தான்.

என்னமோ ஏதோவென்று வீட்டிற்குள்ளிருந்து எட்டிப் பார்த்த அக்கா செண்பகம் ராமுவின் ஆவேசத்தையும் அவனின் கையில் கத்தி இருப்பதையும் பார்த்து பேயறைந்தவள் போலானாள்.

நிலைமையைச் சமாளிக்க "என்ன நடந்தது ஏன் இப்படி கத்தியும் கையுமா வந்து நிற்கிற" என்றவள் அருகில் சென்று அவனின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"நான் ஒரு பிச்சைக்காரன் ஊர் சுற்றி. அதனால எனக்கு பெண் கொடுக்க முடியாதுன்னு மாமா சொன்னாராமே. அதுதான் ரெண்டி ல் ஒன்று கேட்டுட்டுப் போலமுன்னு வந்திருக்கிறேன்."

ராமுவின் கூச்சலைக் கேட்டு உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்த மாமா ராமசாமி வந்து "ஆமா சொன்னந் தாண்டா. உன்ன மாதிரி பிச்சைக்காரனுக்கு என் மகள கொடுக்க மாட்டேன்னு சொன்னந்தான். இப்ப அதுக்கு என்னடா செய்யப் போற" என்றவன் ராமுவைத் தாக்க முன்னேறிச் செல்லவே அவனின் மனைவி செண்பகம் 'ஓ'வென ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

இந்த சத்தத்தைக் கேட்டு அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் எல்லாம் கூடி விட்டார்கள். ராமுவின் நண்பன் சிவலிங்கம் ஓடிச்சென்று ராமுவைக் கட்டிக் கொண்டான்.

இதைக் கண்ட ராமசாமி "டேய் சிவலிங்கம் இவன இப்பவே இங்கிருந்து அனுப்பிடு. இல்ல அதிகாரம் கிதிகாரம் பேசிக் கிட்டிருந்தா இப்பவே போய் துரைக்கிட்டே சொல்லி அவன பொலிசில் மாட்டிடுவேன் ஆமா."

சிவலிங்கம் ராமுவை அணைத்துக் கொண்டு வீட்டிற்குள் கூட்டிச் சென்றான்.

ராமசாமியின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேச ராமுவுக்குத் துணிவு வரவில்லை. ஏனென்றால் அவனை இத்தனை வருட காலமாக உயிருக்குயிராக நேசித்த சிவகாமிகூட இத்தனை ரகளை நடந்தும் என்ன எதுவென்று அவனை வந்து கேட்கவில்லை. 'ஒரு வேள சிவகாமி தன் அப்பன் பேச்சக் கேட்டுக்கிட்டு வேறு யாருக்காவது தலை நீட்ட தயாராயிட்டாளோ' என்ற சிந்தனை சிறைக்குள் அடைப்பட்டிருந்த ராமுவை,

"என்னப்பா ராமு உனக்கு என்றுமே இல்லாதக் கோபம் இன்னைக்கு வந்திச்சி. எனக்கே ஆச்சரியமாக இருக்கு" என்று சுயநினைவுக்குக் கொண்டு வந்தான் சிவலிங்கம்.

ராமு தனக்கு நடந்த துயரம் முழுவதையும் சிவலிங்கத்திடம் சொன்னான். அதைக் கேட்ட சிவலிங்கத்திற்கு ராமுவின் நிலைக்கு வேதனைதான் பட முடிந்ததே தவிர வேறெதும் செய்ய முடியவில்லை.

"சிவலிங்கம் சிவகாமியும் நானும் இன்னைக்கு நேத்தா பழகினோம். மாமாக்குதான் புத்தி கெட்டுப் போச்சுன்னா, சிவகாமிக்குக் கூடவா இத்தனை ரகளை நடந்தும் என்ன எதுவென்று அவனை வந்து கேட்கமா போவுதுதான் எனக்கு வேதனையா இருக்கு சிவலிங்கம். இதவிட பெரிய அவமானம் இதுவரைக்கும் எனக்கு ஏற்பட்டதில்லை" என்று மனம் சோர்ந்து சொல்லிய ராமுவை,

"சரிப்பா அவசரப்படாம கொஞ்சம் நிதானமாக யோசித்து நாம இதுக்கொரு முடிவெடுப்போம். இப்ப நீ தைரியமா வீட்டுக்குப் போ" என அவனை அமைதிப்படுத்தி வழியனுப்பி வைத்தான் சிவலிங்கம்.

மறுநாள் தோட்டம் முழுவதும் இதே பேச்சுதான். "என்ன இருந்தாலும் நம்ம ராமசாமி இப்படி நடந்திருக்கவே கூடாது. ராமு எவ்வளவு நல்ல பையன். அவனுக்கு பொண்ணு குடக்கிறதில்ல ராமசாமி எதுல கொறஞ்சிட போறாரு" என எல்லோரும் குறை கூறத் தொடங்கினார்கள்.

அன்று மாலை ராமுவின் உறவினர் சிலரும் அவன் மீது அன்பு கொண்ட பெரியவர்கள் சிலரும் வந்து நடந்த விசயங்களைப்பற்றி அக்கறையோடு பேசினார்கள். 'இந்த சண்டையைப் பெரிதுபடுத் தாமல் நாங்கள் ஒரு நாளைக்கு உன் மாமா வீட்டுக்குப் போய் பெண் கேட்போம்' என்று பேசி முடிவெடுத்தார்கள். இவர்களின் முடிவை ராமுவும் எற்றுக் கொண்டான்.

சண்டை முடிந்து ஒரு வாரமாகிவிட்டது. வழமையுமாக வந்து போகும் சிவகாமி இப்போது அங்கு வருவதை முற்றாகவே நிறுத்தியிருந்தாள்.

என்னதான் சண்டையாக இருந்தாலும் ரத்தப்பாசம் என்று ஒன்று இருக்கிறதல்லவா? கூடப் பிறந்த தம்பி என்ற பாசப்பிணைப்போ டு ராமசாமியின் வீட்டுக்குப் போன பொருமாயி அம்மாவைக் கண்டதும் "அக்கா எங்க வீட்டுக்கு அனாவசியமா வர வேண்டாம்" என்று ராமசாமி சொன்னதும்.

"ஏன் தம்பி அப்படி சொல்லுற. உனக்கு நாங்க என்ன துரோகம் பண்ணிட்டோம்" என்று பாசமிகுதியால் கண்ணீர் விட்டு அழுதாள் பெருமாயி அம்மா.

அந்நேரம் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த சிவகாமி "அத்தை உங்க மகன் எப்ப கத்தியைத் தூக்கிட்டு எங்க வாசற் படியை மிதிச்சாரோ அன்னைக்கே அக்கா தம்பி உறவெல்லாம் முடிந்து விட்டது. இப்ப நீங்க ஏன் இங்க வந்து அழுதுக்கிட்டிருக் கீங்க" என்றதும், "மக நீ வாய மூடிக்கிட்டு உள்ளே போ. பிள்ளையை வளர்த்த லெட்சணத்ததான் நேரில் பார்த்தோமே. இனி என்ன அத்தை

மாமா உறவு கிடக்குது" என ராமசாமி அதட்டியதும் உள்ளே சென்று விட்டாள் சிவகாமி.

அதற்கு மேலும் அங்கு நிற்க விரும்பாத பொருமாயி அம்மா அழுகையுடன் வீட்டுக்கு வந்து விட்டாள்.

நடந்த விசயத்தைக் கேள்விப்பட்ட ராமு ஆத்திரப்படவில்லை. ஏனென்றால் அவன் சிவகாமியை முழுமையாக நம்பியிருந்தான். தன்னை யார் கைவிட்டாலும் இத்தனை நாள் அன்புக்கொண்டு பழகிய சிவகாமி அவனைக் கைவிடமாட்டாள் என்ற நம்பிக்கையில் அவளின் முடிவை அவன் எதிர்பார்த்திருந்தான்.

குறிப்பிட்ட நாளில் முறைப்பட பெண் கேட்க ராமுவின் உறவினர்களும் பெரியவர்கள் சில நண்பர்கள் புடைசூழ ராமசாமி வீட்டுக்குச் சென்றார்கள். வந்தவர்கள் முன்னிலையில் சிவகாமி அழைக்கப்பட்டு "என்னம்மா ராமுவை திருமணம் செய்ய உனக்கு விருப்பமா?" என்று ஒரு பெரியம்மா கேட்க,

"இதுல நான் என்ன சொல்ல இருக்கு. என் தாய் தகப்பன் சொல்லறததான் நான் செய்வேன்" என்று கூறவே.

ஒரு பெரியவர் ராமசாமியைப் பார்த்து, "நீ என்னப்பா சொல்லுற" என்று கேட்டார்.

"என் முடிவு என்னான்னா எம் பொன்ன எந்தக் காரணம் கொண்டும் ராமுவுக்கு கொடுக்கப் போறதில்லை. அவளுக்கு வேற எடத்தில மாப்புள்ள பார்த்துட்டோம் இதுல திருப்பி திருப்பி சொல்லிக்கிட் டிருக்க எதுவுமே இல்ல" என்று ஆணித்தரமாக மறுத்து விட்டான் ராமசாமி.

இதற்குப் பிறகும் அங்கு இருக்க விரும்பாதவர்கள், தேநீரைக் கூட குடிக்காமல் எழுந்துவிட்டார்கள்.

இதைக் கண்ட ராமசாமி "என்ன எல்லோரும் எழுந்திட்டீங்க. இருங்க. சாப்பிட்டிட்டுப் போகலாம்" என்றதும்,

"நாங்க வந்த வேலையில் பாக்கி பட்டுப்போச்சு. இந்த மாதிரி நேரத்தில சாப்பிட்டுட்டு நாங்க அவமானப்பட விரும்பல. இன்னொரு நேரம் பார்த்துக்கலாம்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டார்கள்.

இந்த ஏமாற்றம் ராமுவின் மனதில் பெரிய பாதிப்பை உருவாக்கியது. அவன் இத்தனை காலமாக அன்போடு நேசித்த சிவகாமியும் அவனை கைவிட்டு விட்டதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. சிவகாமியால் ராமுவை எவ்வளவு இலேசாக மறந்துவிட முடிந்தாலும் ராமுவால் முடியவில்லை. ஏனென்றால் அவன் அவள்மேல் கொண்டது தூய்மையான காதல்.

இதற்குப் பிறகு ராமுவின் குடும்பத்தாருக்கும் ராமசாமியின் குடும்பத்தாருக்கும் இடையே பெரிய இடைவெளி ஏற்பட்டு விட்டது. இரு குடும்பமும் பகையாளிகள் போல் பிரிந்தே இருந்தன. அத்தோடு ராமுவுக்கு தான் வேறொரு திருமணம் செய்ய வேண்டுமென்ற எண்ணமே அவன் உள்ளத்திலிருந்து அழிந்து விட்டிருந்தது.

ஒருசில மாதங்களில் காதும், காதும் வைத்தது போல சிவகாமி யின் திருமண ஏற்பாடுகள் நடந்தன. தோட்டத்திலுள்ளவர்கள் வேண்டா வெறுப்போடு திருமணத்தில் கலந்து கொண்டனர்.

மாப்பிள்ளை பக்கத்து தோட்டக்காரன் என்பதையும், ஓரளவு வசதி படைத்தவன் என்பதையும் திருமணத்திற்குச் சென்று வந்திருந்த நண்பனின் மூலம் அறிந்து கொண்ட ராமுவுக்கு சிவகாமி பணத்திற்கு அடிமையாகி விட்டாள் என்ற உண்மை புரிய ஆரம்பித்தது.

ஆனால் சிவகாமியின் திருமண வாழ்க்கை நெடுநாள் நீடிக்க வில்லை. நெஞ்சுவலி காரணமாக சிவகாமியின் கணவன் அவளை விதவையாக்கிட்டுப் போய் விட்டான். கையில் இரண்டு மாதக் குழந்தையுடன் தகப்பன் வீட்டில் தஞ்சம் புக வந்துவிட்டாள்.

தன் மகள் இவ்வளவு சீக்கிரமாக கைம் பெண்ணாக வந்து நிற்பாள் என ராமசாமி கனவிலும் நினைக்கவில்லை. ஏனென்றால், சிவகாமியின் கணவன் ஒரு நீண்டகால நோயாளி என்பதை சிவகாமியோ, ராமசாமியோ அறிந்திருக்க நியாயமில்லை. வசதியான மாப்பிள்ளை அவர்களைச் சிந்திக்க வைக்கவில்லை. சிவகாமியின் கணவனின் திடீர் சாவு அவர்கள் எல்லோரையும் ஏமாற்றி விட்டது.

மகளின் விதவைக்கோலம் ராமசாமியை ஒரு நோயாளனாக மாற்றி அவனை படுத்த படுக்கைக்குத் தள்ளியது. இப்போது சிவகாமியும் தோட்டத்தில் வேலை பெற்றுச் செய்கிறாள். சிவகாமியி னதும், அவளின் தாயினதும் வருமானமே அந்த குடும்பத்தைக் காப்பாற்றி வந்தது.

ஒருநாள் ராமுவின் தாய், "ராமு உங்க மாமா படுத்த படுக்கையா இருக்காருப்பா. அவர் ஆயிரந்தான் நமக்கு துரோகம் செய்திருந் தாலும், இந்த நேரத்தில் நாம பார்க்காம இருந்தா ஊர் நமக்குத்தான் கதை சொல்லும்ப்பா. அதனால் ஒரு நாளைக்கு நீயும், நானும் போயிட்டு மாமாவ பார்த்துட்டு வந்துடுவோம்."

கூடப் பிறந்த பாசம் தன் தாயிடம் துளிர்விடுகிறது என்பதை உணர்ந்த ராமு, தன் தாயின் கூற்றுக்கு மறுப்பு தெரிவிக்கவில்லை.

ஒருநாள் இருவருமாக ராமசாமி வீட்டுக்குப் போனார்கள், ராமசாமி ராமுவின் கைகளைப் பற்றிக் கொண்டு, "ராமு அநியாயமாக புத்திக்கெட்டுப் போய் என் பொண்ணையும் வாழ விடாம உன்னையும் வாழவிடாம செய்திட்டேம்பா இந்த பாவிய மன்னிச்சிடு ராமு."

"என்ன மாமா இதெல்லாம். நீங்க பெரிய மனுசர். எது செய்தாலும் அதை யோசனையோடுதான் செய்திருப்பீங்க. இதுல நான் மன்னிக் கிறதுக்கு என்ன இருக்கு."

"இல்ல ராமு, நீ என் மகள எவ்வளவு ஆசையோடு விரும்பின. ஓ ஆசையை கெடுத்த பாவிதாம்பா நான். இன்னைக்கு நீங்கள் ரெண்டு பேருமே வாழா வெட்டியா நிக்கிறதப் பார்த்தா என் நெஞ்சே அடைக்குதப்பா."

"மாமா அது முடிஞ்சி போன கதை. இப்ப ஏன் மாமா அதப்பத்தி பேசிக்கிட்டிருக்கீங்க."

"இல்ல ராமு அவ கெதிதான் அப்படியாகி விட்டது. நீயாவது ஒரு நல்ல பொண்ணா பார்த்து கட்டிக்கப் பாரு ராமு."

"மாமா சிவகாமியைப் பார்க்கும்போது எனக்கு எதற்கு திருமணம் என்கிற நினைவே எனக்கு ஏற்படுது மாமா. என்னப் பொறுத்தவரைக்கும் திருமணம் என்கிற ஒரு வார்த்தைய நான் மறந்து எத்தனையோ வருஷமாச்சு."

"இல்ல ராமு, உனக்கு நாங்க செஞ்ச பாவம் எங்கள சும்மா விடாது. உனக்கென்ன நீ ராஜாவாட்டம் இருக்கிறது. நாங்க உயிரோட இருக்கும்போதே உன் திருமணத்த கண்குளிர காணணும்."

"மாமா என் திருமணத்தப் பத்தி தயவு செய்து இனிமே யாரும் பேசாதீங்க. இவ்வளவு காலமா நாங்க பிரிஞ்சி இருந்திட்டோம். இனி இருக்கிற கொஞ்ச காலமாவது நாம சந்தோசமா ஒன்னா இருந்துட்டுப் போவாம்."

இப்படித்தான் ராமு இத்தனை ஆண்டுகளாக திருமணம் செய்யா மலேயே காலத்தைக் கடத்தி விட்டான். தோட்டத்துப் பெண்கள் ராமுவை சாமியார் என கேலி செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

# 7

மரணம் மனிதனை விட்டு வைப்பதில்லை. மரணப் பிடியில் சிக்கியிருக்கும் ராமசாமியின் மனத் திரையில் கடந்த காலங்களில் அவன் செய்த காரியங்கள் ஒவ்வொன்றாக திரைப்படம்போல் பிரதி பலிக்கின்றன. ஆர்ப்பாட்டமில்லாமல் அடங்கிப் போய் குழந்தையாய் விம்முகிறான். ராமசாமி இறுதி நேரத்தில் தான் செய்த தவறுகளுக் கெல்லாம் பரிகாரம் காணத் துடிக்கிறான்.

கால தேவனின் காலில் விழுந்து மரணத்தை ஒத்திவைக்கும்படி எவர் மனு போட்டாலும், அவன் அந்த மனுவை ஏற்றுக்கொள்வதும் இல்லை. மரணமும் ஒத்திப் போடப்படுவதுமில்லை. அதே போலத் தான் ராமசாமியின் மனுப் பத்திரமும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மனைவியையும், மகளையும், பேரனையும் அருகில் அழைத்த ராமசாமி, ஒரு முறை எல்லோரையும் சுற்றிப் பார்த்துவிட்டு கண்ணை மூடுகிறான். உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. மூன்று ஜீவன்களும் ராமசாமியைக் கட்டிப்பிடித்துக் கதறுகின்றனர்.

ராமசாமி இறந்த சேதியோடு, ராமுவின் அக்கா ஒப்பாரி வைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

எத்தனைதான் மாமா தனக்குத் துரோகம் செய்திருந்தாலும் அவரின் இழப்பு வேதனையைத் தந்தது. பழையதையெல்லாம் மறந்து உடனடியாகச் சென்று ஆக வேண்டிய காரியங்கள் அனைத்தையும் முன்னின்று செய்து முடித்தான், ராமு. அதன் பின்பு சிவகாமிக்கும் தோட்டத்தில் வேலை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்தான்.

ராமுவைக் காணும்போதெல்லாம் சிவகாமியின் குற்ற உணர்வு மனம் குறு குறுக்கச் செய்யும். அவனைக் க்ண்டதும் தலையைக் குனிந்து கொள்வாள்.

ஆனால் சிவகாமி எதிர்ப்படும்போதெல்லாம் ராமுவின் மனதில் பழைய தாக்கம் வந்து மோதும். முன்பெல்லாம் ராமுவைக் கண்டால், மாமா மாமா என்று சுற்றி வருபவள், இன்று இப்படி மௌனமாகிப் போய் விட்டாளே என்று ஒரு வித துயரம் ராமுவின் இதயத்தைத் தாக்கும். இந்த வேதனையை மறக்க அவன் அவளுக்கு உதவி செய்வதில் அக்கறை கொண்டான்.

சிவகாமியின் மகன் அருணுக்கு ஐந்து வயது முடிந்ததும் அருகிலுள்ள பாடசாலையில் சேர்த்து விட்டாள். அருண் நன்றாகப் படிப்பான். சுறுசுறுப்பானவன். ராமுவோடும் அவனின் பாட்டியோடும் நெருங்கிப் பழகிவிட்டான். எப்போதுமே ராமுவின் தாயாரிடம்தான் இருப்பான். இத்தனைக்கும் மத்தியில் ராமு அவனின் தாய்க்குக் கடுமையான உத்தரவு போட்டிருந்தான். அது என்னவென்றால்,

"அம்மா நான் இருக்கும்போது சிவகாமி நம்ம வீட்டுக்கு அனாவசியமா வரக்கூடாது என்று சொல்லி வைங்க" என்றான். இதைக் கேட்ட அவனின் தாய்,

"ஏம்பா அப்படிச் சொல்ற, அந்தப் புள்ள உன் மாமா மகதானே. உன்னை விட்டா அதுகளுக்கு வேற யாரு துணை இருக்கா?" என்றவள், கண்கலங்க, "ராமு உன்ன கெஞ்சிக் கேட்டுக்கிற. இப்ப அவ அப்பனும் இல்லாத நேரத்தில அவ மனசுல நிறைய வேதனைகள்

இருக்கும்பா. இந்த நேரத்துல நீ வேற அவசரப்பட்டு அவள் மனம் புண்படும்படியா ஏதும் சொல்லிடாதப்பா" என்றாள்.

"அம்மா அவ என் மாமன் மகள் என்கிறது நமக்கு மட்டுமில்ல ஊரார் எல்லோருக்கும் தெரிந்த விசயம்தான். ஆனா இப்ப நிலைமை வேறம்மா. அவளோ கணவனை இழந்து வந்திருக்கா. நானோ தனி மனிதன். நம்ம குடும்பக் கதை எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும் ஊர் மனிதர்கள் நரம்பு இல்லாத நாக்குப் படைத்தவர்கள். நாளைக்கு நாலு விதமா பேசுவாங்க" என்றான்.

"ராமு ஒல வாய மூடுனாலும் ஊர் வாய மூட முடியாதுன்னு சொல்லுவாங்க. ஊரார் எதப் பேசினாலும் நமக்கென்னப்பா. அதுக்காக நம்ம ரத்த பாசங்களை அறுத்துட முடியுமா?"

"அம்மா ஊரார் என்னப்பத்தி எத பேசினரலும் எனக்குப் பரவாயில்ல. ஏன்னா நான் ஆம்புள. ஆனா சிவகாமி ஒரு பெண். அவளுக்கு கெட்ட பேர் வந்தா அதனால அவ மட்டுமில்ல அவ குழந்தையும் சேர்ந்துதான் துன்பப்படணும். அதனாலதாம்மா முன்னெச்சரிக்கையா சொல்லி வைக்கிறேன்" என்றான்.

"ராமு ஊருக்குப் பயந்துக்கிட்டு நம்ம புள்ளைய வீட்டுக்கு வர வேண்டாமுன்னு எப்படிப்பா சொல்லுறது" என்று கவலையோடு மகனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து அவன் பதிலுக்காகக் காத்திருந்தாள் பெருமாயியம்மா.

"அம்மா நான் சொல்ல வேண்டியத சொல்லிட்டன். இனி உங்க பாடு, சிவகாமி பாடு. நாளைக்கு ஏதாவது யாராவது வம்பு தும்புன்னு பேசினா அதுக்கும் நீங்க பதில் சொல்லத் தயாராக இருக்கணும். நான் மட்டும் என்ன இரும்பு இதயம் படைத்தவனா? சிவகாமி மகன் அருண் என் மேல் உயிரையே வைத்திருக்கான். நானும் அப்படித்தான்" என்றவன் மேலும் ஏதும் பேச விரும்பாதவனாக வெளியே வந்தான். பெருமாயியம்மாவும் தனது வேலைகளைத் தொடர்ந்தாள்.

ராமு வெளியில் சென்று மாலை வீடு திரும்பும் போது அருணுக்கு ஏதாவது வாங்கிக் கொண்டுதான் வருவான். மகன் என்ற பாச உணர்வு அவனை அறியாமலேயே அருண் மீது படிந்துவிட்டது.

அருணும் ராமுவை அப்பா அப்பா என்றுதான் கூப்பிடுவான். அந்த அளவிற்கு ராமு மேல் அன்பையும், பாசத்தையும் வைத் திருந்தான்.

மறுநாள் ராமு காலை பிரட்டுக்குப் புறப்பட்டு வீட்டைவிட்டு வெளியேறும்போது திண்ணையில் தலை குனிந்தவாறு அமர்ந் திருந்தாள் சிவகாமி.

ராமுவைக் கண்டதும் வெடுக்கென்று எழுந்தவள் "அத்தான் ஏன் என்னை வீட்டுக்கு வர வேண்டாமென்று அத்தைக்கிட்ட சொன்னீங். களாம்" என்றாள். ராமு பேசாமல் நின்றான்.

"ஏன் அத்தான் எதுவுமே பேச மாட்டேங்கிறீங்க. என்மேல் எப்போதோ ஏற்பட்ட கோபம் இன்னும் தீரல்லையா. ஏனத்தான் இந்த அபலைக்கு உங்க அன்பு கூட இல்லாம இப்படி நடத்துறீங்க" என்று கண்களில் கண்ணீர் சிதறி விழ விக்கித்தாள்.

வாசல் படியைத் தாண்ட கால் எடுத்து வைத்த ராமு சிவகாமி அழுவதைப் பார்த்துத் திடுக்கிட்டு, திரும்பி சிவகாமி "நான் உன்னை வீட்டுக்கு வர வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனா நாம ஊர் வாய்க்குப் பயப்பட வேண்டியிருக்கு சிவகாமி. அதனாலதான் நான் வீட்டிலிருக்கும்போது உன்னை வர வேண்டாமுன்னு சொல்லச் சொன்னேன். அதுவும் உன் நன்மைக்குத்தான். நான் ஆம்புள, எனக்கு எது வேண்னாலும் சொன்னாலும் அது என்ன பாதிக்கப் போறதில்ல. ஆனா, நீ பெண். உனக்கு ஒரு கெட்ட பேர் அதுவும் என்னால வரக்கூடாதுன்னுதான் அப்படிச் சொன்னேன். நான் இப்படிச் சொன்னதால உன் மேலேயோ உங்கட குடும்பத்து மேலேயோ எனக்குப் பாசமும், அக்கறையும் இல்லன்னு முடிவு கட்டக்கூடாது சிவகாமி" என்றான்.

"இதுக்குப் பிறகு எனக்குன்னு என்ன நன்மை இருக்கு அத்தான். எனக்குன்னு சொந்தம் - பந்தம்ன்னு சொல்லிக்க நீங்களும், அத்தையும் தான் இருக்கீங்க. உங்களுக்கு நான் செய்த துரோகத்துக்கு கடவுள் என்ன எப்படியெல்லாமோ தண்டிச்சிட்டாரு. நான் செய்த துரோகத் தையும் பொருட்படுத்தாம விதவைக் கோலத்தோட கையில ஒரு கொழந்தையோட க டபட்டுக்கிட்டு இருந்த எனக்கு ஆதரவு தந்தது நீங்களும் அத்தையும்தான். நான் உங்களுக்கும் அத்தைக்கும் செய்த துரோகத்துக்குப் பிராயச்சித்தம் தேடிக் கொள்ளத்தான் அத்தைக்குத் துணையா இங்க வந்து போறேன். அதையும் ஊராருக்குப் பயந்து நிறுத்தச்சொன்னா நானும், எம் புள்ளையும் இனிமே இங்கே வராம இருந்திடுறோம்" என்று கூறிவிட்டு வெளியேற முயன்ற சிவகாமியை,

"நில் சிவகாமி. நான் உன்னில் மாத்திரமல்ல. அருண் மீதும் உண்மையான அன்பைச் செலுத்துகிறேன். அவன் என் உயிர். ஆனால் அதை ஊரார் வேறு விதமாகப் பேசக் கூடாது. அதனால் தான் நாளைக்கு பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடும். அதனால்தான் அம்மாக்கிட்ட அப்படிச் சொன்னேன்" என்றான்.

"அத்தான் நீங்க சொல்றது எனக்குப் புரியுது. ஆனா நீரடிச்சு நீர் விலகிப் போகாதுங்கிற மாதிரி நம்ம சொந்த - பந்தமும், ரத்தப் பாசமும் ன்னைக்குமே அழியப் போறதில்ல. ஊரார் பலதப் பேசினாலும்

நமக்கென்ன அத்தான். நம் நட்பு எப்படிப்பட்டதுன்னு அந்த கடவுளுக்குத் தெரிஞ்சா போதாதா?" என்ற சிவகாமியின் வார்த்தையின் ஆழத்தைப் புரிந்து கொண்ட ராமு அவளைத் திரும்பிப் பார்த்தான். அவளின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

"சரி சிவகாமி வீணா மனதப் போட்டு அலட்டிக்காம வேலையப் பாரு. நான் ஏதும் தவறா சொல்லியிருந்தா என்ன மன்னிச்சிடு" என்றவனை,

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க அத்தான். நீங்கதான் என்ன மன்னிக்கணும். இந்த விசயத்தக் கேட்டதுல இருந்து நேத்து எனக்குத் தூக்கமே இல்ல. எப்போ விடியும், அத்தான்கிட்ட இதப்பத்தி கேக்கணும் அப்படின்னு காத்துக்கிட்டே இருந்தேன். அதனாலதான் காலையிலே நான் இத உங்ககிட்ட வந்து கேட்டுட்டேன். தப்பா இருந்தா என்ன மன்னிச்சிடுங்க அத்தான்" என்றாள் சிவகாமி.

"சரி.. சரி.. எனக்கு நேரமாகி விட்டது. நான் வாரேன்" என்று ராமு பிரட்டுக்குப் போய் விட்டான்.

இது நடந்து இரண்டு வாரமாகிவிட்டது. இப்போதெல்லாம் சிவகாமி ராமு கண்களில் படுவதேயில்லை. இது ராமுவின் மனதிற்கு பெரும் க டமாக இருந்தது. அருண் இப்போதெல்லாம் ராமுவின் வீட்டில்தான் தங்கியிருக்கிறான். அவனுடைய சகல தேவைகளையும் ராமுவே கவனித்து வந்தான். அருணை நன்றாகப் படிக்க வைத்தான்.

இப்போது தோட்டத்து வேலைகளோடு ஏனைய தோட்டங்களுக்கும் சென்று தொழிலாளர்களைச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டினான் ராமு. தொழிற்சங்கத்தின் மீது ராமு கொண்டுள்ள ஆர்வத்தால் அவன் தொழிலாளர்களிடத்தில் மதிப்பும், மரியாதையையும் பெற்றவனாகத் திகழ்ந்தான்.

இப்போது அருண் நகரத்தில் ஓர் பாடசாலையில் சேர்க்கப்பட்டு கல்வி கற்று வந்தான். இப்போது அவன்தான் வீட்டுக்குப் பெரிய ஆள். பாடசாலை விட்டு வீட்டுக்கு வரும்போது தேவையான சாமான்களை பாட்டி வாங்கி வரச் சொல்லி அனுப்பினால் அத்தனையையும் வாங்கி வந்து கொடுப்பான்.

பெருமாயியம்மாவுக்கு எல்லாம் பேரன்தான். பேரன் இல்லாமல் சாப்பிடக்கூட மாட்டாள். அவன் வரும்வரை காத்திருந்து இரண்டு பேருமாகச் சாப்பிடுவார்கள்.

இப்போது சிவகாமியின் தாயும் தொழில் செய்ய முடியாமல் பென்சன் எழுதிவிட்டு வீட்டில் இருந்துவிட்டாள். இப்போது குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் சிவகாமிதான் ஏற்றுக் கொண்டுள்ளாள். ராமு இல்லாத நேரங்களி வீட்டுக்கு வந்து அத்தையையும் மகனையும் கண்டு பேசி விட் 'ப் போவாள்.

தோட்டத்தில் தொழிற்சங்கத்தை மிகவும் க டப்பட்டு ஆரம்பித்த ராமு தொழிலாளர்கள் மத்தியில் மதிப்பிற்குரியவனாக மாத்திரமல்ல, விடுதலை வீரனாகவும் பவனி வந்தான். ராமு சொல்வதைத் தோட்ட மக்கள் வேதவாக்கு போல நம்பினர். ராமு எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு நல்கினார்கள்.

தோட்ட மக்களின் விடுதலைதான் ராமுவின் இலட்சியமாக இருந்தது. அந்த இலட்சியம் நிறைவேறும் காலத்தை நோக்கி உறுதியோடு செயல்பட்டான்.

தோட்டத் தொழிலாளர்களின் நம்பிக்கையாளனாகத் திகழும் ராமு வைத் தோட்ட நிர்வாகம் விட்டு வைக்குமா? ராமுவின் இலட்சியங் களுக்குப் பலவித இடையூறுகளை ஏற்படுத்துவது போல அவனுக்குப் பல்வேறுபட்ட துன்பங்களைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது.

இதற்குச் சற்றும் அசைந்து கொடுக்காத ராமு எத்துன்பம் வரினும் அதை எதிர்கொண்டு பொறுமையோடு ஏற்றுக் கொண்டு செயல்பட்டு வெற்றியும் கண்டான். அவன் துன்பப்பட்டாலும் தொழிலாளர்களைத் துன்பப்பட அவன் ஒருபோதும் விரும்பியதில்லை.

ராமு இப்போதெல்லாம் முழுமையாகத் தொழிற்சங்கப் பணியில் ஈடுபட்டிருந்தான். தோட்டத்தில் ஏற்படும் பிரச்னைகளுக்குப் பொறுமை யோடு நிதனமாகத் தீர்வு கண்டு தொழிலாளர்களுக்குத் துணைவனாகத் திகழ்ந்தான்.

ராமுவின் திட்டப்படி தோட்டக் கமிட்டி அமைத்து விட்டார்கள். தலைவராக சிவலிங்கத்தைத்தான் தேர்ந்தெடுத்தார்கள். ராமு செயலாள ராக இருந்தான். என்றாலும் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களைத் தூண்டுபவன் ராமுதான் என்று எடுத்த முடிவில் மாற்றம் கொள்ள வில்லை. அவனை எப்படியும் தீர்த்துக்கட்ட வேண்டு மென்பதில் கவனம் செலுத்தியது.

பஸ் ஒரு குலுக்கலோடு நின்றபோது ராமுவின் கையிலிருந்து புத்தககம் கீழே விழுந்தது. சிந்தனையோடு பிரயாணம் செய்து கொண்டிருந்த ராமு சுய நினைவு பெற்று குனிந்து புத்தகத்தை எடுத்தவன் வெளியே எட்டிப் பார்த்தான். தான் இறங்கவேண்டிய இடத்தில் பஸ் நிறுத்தப்பட்டிருந்ததைக் கண்டு மிக வேகமாக இறங்கித் தோட்டத்தை நோக்கிச் சென்றான்.

நீண்ட நாட்களாக வெளியில் சென்றிருந்த ராமு தோட்டத்திற்குத் திரும்புவதைக் கண்ட நண்பர்கள் ஓடி வந்து ராமுவைச் சூழ்ந்து கொண்டு சுகம் விசாரித்தார்கள். பதிலுக்கு அவர்கள் எல்லோரையும் சுகம் விசாரித்த ராமு வீட்டை நோக்கிச் சென்றபோது பெருமாயியம்மா திண்ணையிலமர்ந்து அரிசியில் நெல் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

"அம்மா" என்று ராமு அவளைக் கட்டிப் பிடித்தபோதுதான் மகன் வந்திருப்பதை உணர்ந்து பெருமாயிம்மா, "வந்திட்டியாப்பா என் ராசா". என்று அப்படியே அவனைக் கட்டிக்கொண்டு உச்சி மோந்தாள்.

"என்னம்மா சுகமில்லாம இருந்தீங்களா? உடம்பு என்ன இப்படி இளைச்சிப் போயிருக்கு" என்று ராமு அவளைப் பார்த்துக் கேட்கவே,

"அடப் போப்பா, நான் நல்லாத்தான் இருக்கேன். நீதான் நல்லா மெலிஞ்சு போயிட்ட" என்றவள், "இரு தேத்தண்ணி ஊத்திக்கிட்டு வாரன்" என்று உள்ளே போய்விட்டாள், பெருமாயிம்மா.

ராமு வந்திருந்த செய்தியைக் கேள்விப்பட்டு சந்தோஷத்துடன் வீட்டிலிருந்து ஓடி வந்த சிவகாமி உள்ளே வரத் தயங்கி, ஓரமாக நின்று கொண்டு, "அத்தான் சுகமா" என்று கேட்டாள்.

அவளை ஏறிட்டுப் பார்த்த ராமு புன்னகையொன்றை உதிர்த்து விட்டு, "நல்ல சுகம் சிவகாமி, நீ எப்படி இருக்க?" என்று பதிலுக் காகக் கேட்டு வைத்தான்.

"அத்தான் புண்ணியத்துல எந்தக் கொறயும் இல்லா. ஆனா..." என்று ஏதோ சொல்ல முற்பட்ட சிவகாமி தயங்கியவளாகத் தலை குனிந்து கொண்டாள்.

# 8

தோட்டமென்றால் அங்கே படிப்பறிவற்ற மக்களும், பசியுள்ள மக்களுமே நிறைந்திருப்பார்கள். அந்த மக்களை சில பேர் 'தோட்டக் காடுகள்' என்று சொல்லி எள்ளி நகையாடுவதுமுண்டு.

ஆனால் அந்த 'தோட்டக்காடு' என்ற தோட்டப்புறத்தில்தான் தமிழர்களின் பாரம்பரிய பழக்க வழக்கங்களும், பாரம்பரிய உறவு முறைகளும் நிலைகொண்டு ஒரு சமூகத்தின் உண்மையான நிலைப் பாட்டை உறுதிப்படுத்தி வருகின்றன. அந்த வகையில் மலையகம் என்றுமே சோடை போனதில்லை. இப்போது கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டு அந்த மக்கள் மத்தியில் புதிய சிந்தனையைத் தூண்டி வருகிறது.

ஆம். வசந்தி குடும்பத்தில் ஒரே பெண். தாயார் சிறு வயதிலேயே கண்ணை மூடிக் கொண்டார். தாய் இல்லாத குறையைத் தகப்பனும், சகோதரர்களுமே நிவர்த்தி செய்து வந்தார்கள்.

பள்ளிப் பருவம் வந்ததும் அவளைத் தோட்டத்துப் பாடசாலை யில் சேர்த்துப் படிக்க வைத்தார்கள். தோட்டப் பாடசாலையில் ஐந்தாம்

வகுப்பு மட்டும்தானே கல்வி கற்க முடியும். அதன் பின்பு நகரிலுள்ள அவர்களுக்குத் தெரிந்த ஒரு மதர் மூலமாக கொன்வென்டில் சேர்த்து அங்கேயே போடிங் செய்து விட்டார்கள்.

அடிக்கடி சகோதரர்கள் சென்று சகோதரியைப் பார்த்து அவளுக்குத் தேவையானவைகளை எல்லாம் வாங்கிக் கொடுத்து வந்தார்கள்.

கொன்வெண்டில் வசந்திக்குத் தனியான மரியாதை உண்டு. இவளும் எல்லோருடனும் பணிவோடும் அன்போடும் நடந்து கொள்வாள். அதுமட்டுமல்லாது, படிப்பிலும் பலே கெட்டிக்காரியாகத் திகழ்ந்தாள். சகோதரர்கள் போகும் போதெல்லாம் மதர் சொல்லிப் பெருமைப்படுவார்.

தாய் இல்லாத குறையைத் தீர்ப்பதில் மிகவும் அக்கறையும், கரிசனையும் கொண்டு தங்கையை வளர்ப்பதில் கவனம் செலுத்தி வந்தார்கள்.

ஒருநாள் திடீரென மதரிடமிருந்து தந்தி வந்தது. இந்தத் தந்தியோடு காவல்காரன் ஜெகதீசனைத் தேடி வந்தான். தந்தியைப் பிரித்துப் பார்த்தபோது, வசந்தி படிக்கும் கொன்வண்டிலிருந்து மதர் உடனடியாக வரும்படி குறிப்பிட்டு இருந்தார்கள்.

என்னவோ ஏதோவென்று பதறிப் போன ஜெகதீசன் வீட்டில் தந்தையிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். நேரே கொன்வண்டிற்குச் சென்று மதரைச் சந்தித்தான். மதர் ஜெகதீசனைப் பார்த்து "தனியாகவா வந்தீர்கள். பெண்கள் யாரும் வரவில்லையா" என்று கேட்டுவிட்டு புன்னகையொன்றை உதிர்த்தார்.

"இல்லை மதர் விசயத்தைச் சொல்லுங்க" என்று பதற்றத்தோடு கையைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தான் ஜெகதீசன்.

"இது பதற்றப்பட வேண்டிய விஷயமில்லை. சந்தோஷப்பட வேண்டிய விஷயம்" என்று விஷயத்தைச் சொன்ன மதர், "உடனடியாகச் சென்று பெண்கள் யாராவது இருந்தால் அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்று அவனை அனுப்பி வைத்தார்.

ஜெகதீசனின் மனதை ஆயிரம் எண்ண அலைகள் வந்து மோத, ஒரு பக்கம் மகிழ்ச்சி, மறுபக்கம் வேதனையோடு கையெடுத்து மதரை வணங்கினான் ஜெகதீசன்.

"அதெல்லாம் வேண்டியதில்லை. உடனடியாக ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க" என்று அவனை அனுப்பி வைத்தார் மதர்.

ஓட்டமும் நடையுமாக வந்து விஷயத்தைத் தந்தையிடம் சொல்லிவிட்டு பக்கத்து வீட்டில் தங்களுக்கு வேண்டிய இரு

பெண்களையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டான் ஜெகதீசன். புறப்படும் முன் வீட்டில் என்ன செய்ய வேண்டும் என்பதை அந்தப். பெண்கள் இன்னும் இரு பெண்களிடம் சொல்லி அதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி சொன்னார்கள்.

நகரில் இறங்கியவுடன் பெண்கள் குறிப்பிட்டபடி சில சாமான் களை வாங்கிக் கொள்ள கடைகளுக்குச் சென்றார்கள். கடையில் பழம், கற்கண்டு வாங்கிக் கொண்டு புறப்பட்டார்கள்.

கொன்வேண்டில் மதரைச் சந்தித்து வணங்கிய ஜெகதீசன் தான் கடையில் வாங்கி வந்திருந்த பழம், கற்கண்டு இவற்றை அந்த மகிழ்ச்சியான செய்திக்குப் பரிசாகக் கொடுத்தான்.

வசந்தி வீட்டுக்குப் போவதறிந்த சக மாணவிகளும் அவளைக் குழுமிவிட்டார்கள். ஜெகதீசன் வாங்கிவந்த இனிப்புப் பொருட்களை எல்லோருக்கும் வழங்கினான். பின்பு வசந்தியை காருக்கு அழைத்து வந்தனர். அருகில் வந்த மதர், வசந்தியை முத்தமிட்டு ஆசிர்வதித்து அனுப்பி வைத்தார்கள்.

காரில் சென்று வீட்டிற்கு முன்னால் இறங்கிய வசந்தியைப் பெண்கள் ஒன்றுகூடி அழைத்துச் சென்று ஓர் அறையில் அமர வைத்து திரை போட்டார்கள்.

ஜெகதீசன் வந்த கையோடு அடுத்துச் செய்ய வேண்டிய வேலைகளைக் கவனித்தான். இதற்கு நண்பர்களும் முன்னின்று உதவி செய்தனர்.

தந்தையின் ஏற்பாட்டின்படி வசந்தியின் தாய் மாமன் வீட்டுக்கு ஆள்மூலமாகச் செய்தி அனுப்பப்பட்டது. பக்கத்து தோட்டம் என்பதால் அவர்களும் சீர்வரிசையோடு வந்தனர். மாமி வசந்தியை அணைத்து முத்தமிட்டவள், 'என்றும் சிரஞ்சீவியாக வாழணும்' என்று வாழ்த்தினாள்.

"வசந்தி தாயில்லாப் பெண் என்ற குறை வராமல் அத்தை, நீங்கள்தான் அவளைக் கவனித்துக் கொள்ளணும்" என்றான் ஜெகதீசன்.

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம். இது எங்க பொண்ணு. அத சீர்வரிசையோடு கவனிக்க வேண்டியது எங்க கடமை" என்றாள் வசந்தியின் மாமி.

"இல்ல அத்த அவ சின்னப்பிள்ளையா இருந்தபோது எங்களுக்கு கவலை இல்லை. இனிமே அப்படியில்லை. எங்களால தனியா அவள எப்படி குறைவில்லாம வளர்க்க முடியும். அதுதான் கவலைப்பட்டேன்" என்றான்.

"சரி தம்பி அத விட்டுட்டு செய்ய வேண்டியதபாரு. உடனடியா டோபிக்குச் சொல்லுங்க" என்றாள்.

"அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை உங்க மாமாவோடு கலந்து ஏற்பாடு செய்யப்பா" என்றாள்.

"தோட்டத்து ஜனங்களுக்கு வசந்தி மேல எப்போதுமே ஒரு தனியான பாசம் உண்டு. அவளுக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்ய எல்லோரும் காத்திருக்காங்க" என்று அத்தை சொன்னாள்.

உடனடியாக முறைப்படி தோட்டத் தலைவரைக் கண்டு கடிதம் மூலம் எழுதினான். இன்று மாலை என்னென்ன செய்ய வேண்டு மென்று கடிதத்தில் விளக்கியிருந்தான்.

முதலாவது டோபி வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவனிடம் விசயத்தைச் சொன்னதோடு புது வேஷ்டியில் பத்து ரூபாவை முடித்து, மஞ்சள் தண்ணீர் தெளித்து கையில் கொடுத்து தோட்டத்து ஜனங் களுக்கு மாலை எழு மணிக்கு தண்ணி ஊத்தும் செய்தியை அறிவிக்க ஏற்பாடு செய்தான் ஜெகதீசன்.

தப்புக்காரன் கந்தசாமியின் வீட்டிற்குச் சென்று வெற்றிலை பாக்கு பணம் வைத்து ஏழு மணிக்குத் தண்ணீர் ஊத்தும்போது வந்துவிட வேண்டுமென்று சொன்னான். மாலை ஐந்து மணிக்கு வசந்தியின் மாமாவும் மாமியும் சீர்வரிசையோடு வந்துவிட்டார்கள். மாமி வசந்தி யைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு சீரும் சிறப்போடும் வாழ வேண்டுமென்று வாழ்த்தினார்கள்.

மாமா வசந்திக்கென்று வீட்டின் ஒரு மூலையில் மாவிலை கொண்டு குச்சு வீடு கட்டினார். வருகிறவர்களுக்குப் பழம், கற்கண்டு, தேநீர் வழங்க ஏற்பாடு செய்தார்கள். ஆறேமுக்கால் மணிக்கெல்லாம் கந்தசாமி தன் குழுவோடு வந்து தங்கள் கடமையை எல்லோருக்கும் கேட்கும்படி செய்துவிட்டார்கள். தோட்டப் பெண்கள் சீர்வரிசையுடன் வந்தார்கள். ஒவ்வொருவரும் முறைப்படி தப்படித்து அழைத்து வரப்பட்டார்கள். உறவுமுறைகள் முடிந்தவுடன் பொது சீர்வரிசை. தோட்டக் கமிட்டி ஏற்பாட்டில் மாதர் சங்கத்தினர் கொண்டு வந்தார்கள். குறிப்பிட்ட நேரத்தில் சுமங்கலிப் பெண்கள் புடைசூழ வசந்தியை முக்காடிட்டு வெளியே அழைத்து வந்தார்கள். பெண்கள் புடை சூழ வசந்தியைக் குளிப்பாட்டினார்கள். வண்ணான் மாற்றுடையை உடுத்தி சீக்காய் கழித்து மாமா வசந்தியின் கையைப் பிடித்து மாமியுடன் தான் கட்டிய குச்சு வீட்டில் அமர வைத்தார்.

வந்தவர்களுக்கெல்லாம் கற்கண்டு, பழம், தேநீர் வழங்கப் பட்டு, வெற்றிலைப் பாக்கும், பழமும் வழங்கினார்கள். இந்தக் கடமைகள் இத்தோடு முடிந்துவிடவே அனைவரும் வீட்டிற்குச் சென்று விட்டார்கள்.

இப்போது குடும்பத்தினரும், பக்கத்து வீட்டுக்காரர்களும் அமர்ந்து அடுத்துச் செய்ய வேண்டியதைப் பற்றிப் பேசினார்கள். வசந்தியைத் தொடர்ந்து படிக்க வேண்டுமென்பதால் பதினாறாம் நாள் சடங்கு செய்து முடிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

அத்தோடு, பதினாறாம் நாளும் வசந்தியின் மாமி அங்கேயே தங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

# 9

பதினாறாம் நாள் உறவினர்களுக்கும் தோட்டத்திலுள்ளவர் களுக்கும் முறைப்படி வெற்றிலைப் பாக்கு வைத்து அழைப்பு விடுத்து, சடங்கை வெகு விமர்சையாகச் செய்து முடித்து விட்டனர். சடங்கிற்கு வந்த உறவினர்களும் சென்று விட்டார்கள். ஒரு நல்ல நாள் பார்த்து வசந்தியை மீண்டும் கொன்வென்டுக்குச் சேர்த்துப் படிப்பைத் தொடரவிட்டனர்.

வசந்தி படிப்பில் கெட்டிக்காரியாகத் திகழ்ந்தாள். ஒவ்வொரு ஆண்டும் பரீட்சையில் நல்ல மார்க் பெற்று சித்தியடைந்தாள். வசந்தியின் வளர்ச்சியில் தந்தை ஞானத்திற்கு கவலை ஏற்பட்டது. அடுத்தாண்டோடு அவளின் படிப்பு முடிந்துவிடும். வீட்டில் ஒரு தாய் இல்லாத நிலையில் தன்னால் மகளைக் கவனிக்க முடியாதிருக்கிறதே என்ற கவல அவரை வாட்டத் தொடங்கிற்று. இந்த நிலையில், மூத்த மகனுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தார்கள். சொந்த மைத்துனர் மகள் ராணியைப் பேசினார்கள். அவர்களும் தட்டிக் கழிக்காமல் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டார்கள். முறைப்படி திருமணத்தை தோட்டத்து மாரியம்மன் கோவிலில் நடத்தினார்கள். திருமணத்திற்கு வசந்தி அண்ணியோடு ஒட்டிக் கொண்டாள். திருமணத்திற்கு வந்தவர் கள் எல்லாம் வாய்க்கு வாய், 'இந்த வீட்டுக்கு நீதானம்மா முதல் மருமகள். உன் கணவனுக்கு மனைவியாகவும் குடும்பத்திற்குத் தலைவியாகவும், ஒரு தாயாராகவும் இருந்து கவனிக்கணும்' என்று வாழ்த்தினார்கள்.

இப்போதெல்லாம் வசந்தி தனது விடுமுறை நாட்களை வீட்டுக்கு வந்து அண்ணியோடு கழிக்கலானாள். மாமன் மகள் என்பதால், ஒருவரோடொருவர் பாசத்தோடிருந்தனர். பரீட்சை எழுதி விட்டு வீட்டிலிருந்த வசந்தியைத் தொடர்ந்து ஏதாவது படிக்க வைக்க வேண்டுமென ஆசைப்பட்டார்கள்.

வசந்தியின் விருப்பப்படி, நகரில் டைப்பிங் பழகுவதற்கும் ஆங்கிலம் கற்பதற்கும் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். முறைப்படி டைப்பிங் கற்றுக் கொண்ட வசந்தி, தொழில் செய்ய விரும்பிப் பல இடங்களுக்கும் மனுப் போட்டாள்.

கல்லூரியைவிட்டு விலகி மூன்றாண்டுகள் கடந்துவிட்டன. வேலையொன்றும் கிடைப்பதாக இல்லை. திறமையிருந்தால் மட்டும் போதுமா? சிபார்சு தேவையல்லவா. நாட்கள் நகர்ந்தன.

ஒருநாள் வசந்தியின் தோழி ரமணி வசந்திக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். 'தனக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் டிஸ்பென்சரி வைத்திருப்பதாகவும் அங்கு கடமையாற்ற ஒரு பெண் பிள்ளையை கோருகிறார் என்றும், நீ விருப்பப்பட்டால் எனக்குக் கடிதம் எழுது, அல்லது நேரில் வா ஏற்பாடு செய்கிறேன்' என்று இக்கடிதம், ஏதாவது தொழில் செய்தேயாக வேண்டுமென்றிருந்த வசந்தி மனதிற்கு சற்று மகிழ்ச்சியைத் தந்தது.

தந்தையிடமும், சகோதரர்களிடமும், அண்ணியிடமும் சொல்லிக் கொண்டு வேலையைப் பார்த்துவரப் போனாள்.

ரமணியின் தந்தை நகரில் புடவை வியாபாரி. கடை வைத்திருந்தார். வசந்தி முன்பு அடிக்கடி அங்கு போய் வந்திருக்கிறாள்.

வீட்டுக்குத் தேடி வந்த வசந்தியைக் கூட்டிக் கொண்டு டிஸ்பன்சரிக்குச் சென்று டாக்டரிடம் அறிமுகப்படுத்தி வைத்தாள் தோழி ரமணி. விபரங்களை அறிந்து கொண்ட டாக்டர் வேலை தெரிந்தவர்களை எடுத்தால் எனக்கும் வசதியாக இருக்கும் என்று யோசித்தார். சிறிது நேரத்திற்குப் பின்பு, சரி இவள் இங்கே வேலை பழகட்டும். மற்ற இரண்டு பெண்களையும் கூப்பிட்டு வசந்தியை அறிமுகப் படுத்தி வைத்தார்.

இங்கு வேலை செய்வதைப் பற்றி சிறிது நேரம் தோழியுடன் கலந்து பேசி விட்டு டாக்டரிடம் முதல் தேதியிலிருந்து வேலைக்கு வருவதாகச் சம்மதம் தெரிவித்தாள்.

காலை ஒன்பது மணி முதல் மாலை ஐந்து மணி வரை வேலை. ஒவ்வொரு நாளும் வீட்டுக்குப் போய் வர வசதி என்பதால் வசந்தியின் குடும்பத்தினரும் சம்மதம் தெரிவித்திருந்தார்கள்.

மூன்றாண்டுகளாக இந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கும் போது, டாக்டர் வெளிநாடு போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் டிஸ்பென்சரியை வேறொரு டாக்டர் பொறுப்பெடுத்தார். அவர் ஏற்கெனவே வேலை செய்தவர்களைச் சேர்த்துக் கொள்ள வில்லை. தனக்கு வேண்டிய பெண்களை ஏற்பாடு செய்திருந்தார்.

இதனால் வசந்தியினால் இந்தத் தொழிலில் தொடர்ந்தும் இருக்க முடியவில்லை. அவள் வீட்டில் தங்கி மீண்டும் வேலை தேட ஆரம்பித்தாள்.

அப்போதுதான் தோட்டக் கமிட்டித் தலைவர் மூலமாக தொழிற் சங்கத்தில் வேலைக்குச் சேர்க்கப்பட்டாள். ஏற்கனவே வசந்திக்கு டைப்பிங் தெரிந்திருந்ததினால் இது வசந்திக்கு வசதியாகப் போய் விட்டது. நேர்முகப் பரீட்சைக்குப் பின்பு வசந்தி வேலைக்குச் சேர்க்கப் பட்டாள். தொழிற்சங்க வேலை இவளின் மனதிற்கு மிகவும் பிடித்து விட்டது.

இப்போது வசந்தி இருபத்தாறு வயதுப் பெண்ணாகத் திகழ் கின்றாள். ஆனால் இந்த இருபத்தாறு வயதிலும் கூட அவள் இதுவரை காதல் என்ற வலையில் சிக்கியதில்லை. காதல் என்ற ஒரு வார்த் தையை நினைத்துப் பார்த்ததுமில்லை. அப்படிப்பட்ட வசந்தியை ராமுவின் வரவு திசை திருப்பியது. அவனைச் சந்தித்த பிறகுதான் காதல் என்ற ஒரு நிரூற்று அவள் இதயத்தில் ஊற்றெடுக்க ஆரம்பித்தது. அவளின் சிந்தனைகள் ராமுவைத் தேடி ஓடின.

'ராமு நான் உங்களிடம் என் உள்ளத்தைப் பறி கொடுத்தேன். காதல் கொண்டேன். என்னுள் என்றுமில்லாத இன்ப ஏக்கம் இன்று புதிதாக என் உள்ளத்தில் தோன்றுகிறதே. காணும் பொருட்களிலெல்லாம் உங்கள் முகம்தான் எனக்குத் தெரிகிறது. இது என்ன வேதனை. இதை யாரிடம் போய் சொல்வேன். எனக்கு மட்டும்தானா இந்த ஏக்கம். அல்லது என்னைப் போல் நீங்களும் என்னை நினைத்து ஏங்கித் தவிக்கிறீர்களா? இதை அறிய நான் யாரைத் தூது விடுவேன். எனக்கு ஒரு பதில் இல்லையா?'

"அடியேய் வசந்தி என்ன வந்தது" என்று அவளின் கையைப் பிடித்து உலுக்கியபடியே பார்வதி கேட்ட அப்போதுதான் வசந்தி சுயநினைவுக்கே வந்தாள்.

"என்னடி நீ. ஒரு சுகமான கனவுலகில் சஞ்சரித்தேன். அதைக் கெடுத்திட்டியேடி" என்ற வசந்தியை,

"யாரடி அந்தப் பகற்கனவுக் காதலன். எனக்குத் தெரியாமல்" என்று கண் சிமிட்டியபடியே கேட்டாள் பார்வதி.

"உனக்குத் தெரிந்தவர்தான் பார்வதி."

"எனக்குத் தெரிந்தவரா யார் அது?" என்று பார்வதி யோசனையில் ஆழ்ந்தாள்.

"சொன்னால் நீயே அசந்துபோய் விடுவாய் பார்வதி."

“யாருடி அந்தக் காதலன். விபரத்தைச் சொன்னால் தானே எங்களாலான சின்ன உதவிடையயாவது செய்ய முடியும்” என்று கேலியாகச் சொன்னாள் பார்வதி.

“வேறு யாருமில்ல பார்வதி. அன்று தலைமை செயலகத்திற்கு வந்தாரே இணைச் செயலாளர் ராமு. அவர்தான் என் உள்ளத்தைக் கிள்ளிக் கொண்டவர்” என்றாள் வசந்தி பெருவிரலைக் கடித்துக் கொண்டாள் வெட்கம் மேலிட.

“அடி ஆத்தாடி இத்தனை வருடமா அவரோடு பழகும் எனக்கே இந்த மாதிரி மோகம் ஏற்பட்டதில்ல. நேற்று வந்த உனக்கு எப்படி அவர் மீது காதல் ஏற்பட்டது!” என ஆச்சரியம் மேலிடக் கேட்டாள் பார்வதி.

“அதுதான் பார்வதி எனக்கும் தெரியல்ல. என்னைக்குமே இல்லாத ஒரு வித மாற்றம் எனக்கு இப்போ ஏற்பட்டிருக்கு. அத நான் எப்படிச் சொல்றதுன்னே புரியல.”

“வசந்தி நீ நல்லாத்தான் மயங்கிட்ட, முதல்ல அவரோட மன நிலைய புரிஞ்சிக் கிட்டாத்தான் உன் காதல் நிறைவேறும்.”

“எப்படியோ பார்வதி நீ தான் எனக்கு உதவி செய்யணும்” என்று பார்வதியின் கைகளைப் பற்றிக் கொண்டாள் வசந்தி.

“எ... என்னது நானா, உதவி செய்யிறதா! என்ன வசந்தி, நீ என்ன சொல்ற” தயக்கத்துடன் கேட்டாள் பார்வதி.

“ஆமா பார்வதி, என்னோட மனசில உள்ளத நான் உங்கிட்ட நம்பிக்கையோட சொல்லிட்ட. நீதான் இத எப்படியாவது ராமுக்கிட்ட அவரோட விருப்பத்த தெரிஞ்சிக்கணும்.”

“இதோ பார் வசந்தி. ஒரு பொண்ணு ஒரு ஆண்கிட்ட முதல் முதல்லா இதப்பத்தி பேசுறது அவ்வளவு நல்லாயில்ல. அதனால இந்த விசயத்த ஒரு ஆண் மூலமாத்தான் வெளியிடணும்.”

“அய்யய்யோ நீ என்ன பார்வதி சொல்ற”

“பதட்டப்படாத வசந்தி. இந்த விசயத்தை மாவட்டச் செயலாளர் முனுசாமியில்ல. அவர் மூலமா ராமு சார்கிட்டச் சொல்லுலோம். ஏன்னா அவர் ராமு சாரோட நல்ல நண்பர். அவர் சொன்னா ராமு சார் தட்ட மாட்டார்.”

“எனக்கென்னமோ பயமாயிருக்கு பார்வதி.”

“எதுக்குப் பயப்படுற”

“இல்ல ராமு சார் திருமணமே வேண்டாமுன்னு பிரமசாரி வேடம் பூண்டிருக்காரே” என்றாள் வசந்தி.

"அந்த பிரமச்சாரி வேடத்தத்தான் நீ கலைச்சிட்டியே" என்றவளை வசந்தி ஜாடையாகப் பார்த்தாள்.

"என்ன முனுசாமி சார் வரும்வரைக்கும் பொறுமையாக இருப்பியா, இல்ல..." என்று இழுத்தவளை,

"அட போம்மா இந்த குறும்புதானே வேணாங்கிறது" என்று கெஞ்சலாக விடை பெற்றுக் கொண்டாள் வசந்தி.

# 10

உண்மை சேவையை தொழிலாளர்கள் மறப்பதே இல்லை. அதற்கு நன்றியாக அவர்களைப் போற்றி கௌரவிப்பார்கள். இந்த உண்மையை எல்லோரும் தெரிந்து கொள்வதில்லை. தெரிந்து கொண்டவர்கள் மாத்திரமே தொழிலாளர்களுக்காகக் கடுமையாக உழைக்கின்றார்கள்.

உலக வரலாற்றில் கூட தொழிலாளர் வர்க்கத்திற்கு உழைத்த தலைவர்களைப் போற்றி அவர்களை இலட்சியவாதிகளாக கொள்கை ரீதியாக எண்ணி அவ்வழியில் செல்கின்றனர்.

இப்படிப்பட்ட தலைமைகள் அதிகாரத்தால் தோன்றவில்லை. தொழிலாளர் வர்க்கத்திற்குச் சேவையின் மூலமே வெளிப்படுகிறார்கள். அந்த வகையில் செயலாளர் மாணிக்கம் தொழிலாளர்களின் உண்மையான தலைவனாகப் போற்றப்படுவதில் ஆச்சரியம் இருக்க முடியாது.

செயலாளர் மாணிக்கம் பொதுவாக எல்லோருடனும் அன்பாகப் பண்பாகப் பழகுபவர். அவரிடம் பொய், வஞ்சகம், பொறாமை என்பதற்கே இடமில்லை. நேர்மையும், கண்ணியமும் மிக்கவர். தொழில் விசயத்தில் மிகவும் கண்டிப்பானவர். தொழிலாளர்களை ஏமாற்றுபவர்களைக் கண்டாலே ஆத்திரமும் கோபமும் கொண்டு சூழ் நிலைகளைக் கூட மறந்து சத்தம் போட்டுக் கண்டிப்பார்.

தொழிலாளர்கள் இவரை, செயலாளர் என்று அழைப்பதைவிட, தலைவர் என்றுதான் கூப்பிடுவார்கள். அந்தளவு இரவு பகல் என்று பாராது தொழிலாளர் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டுழைப்பவர். அவரது வாழ்க்கையே தொழிற்சங்கம்தான்.

பலர் பதவிக்கு வரலாம். பட்டத்தையும், பணத்தையும் கொண்டு சொகுசான வாழ்க்கையையும் வாழலாம். இதையெல்லாம் மக்கள்

கண்டு கொள்வதே இல்லை. தொழிலாளர்களுக்குச் சேவை செய்பவர்களையே தெய்வமாக வணங்குவார்கள். அந்த அடிப்படையில் மக்களால் தலைவர் என்ற பெருமையோடு அழைக்கப்பட்டார். செயலாளர் மாணிக்கம் இதை பலமுறை அவரே கண்டித்ததும் உண்டு. இருந்தும் அதை விட்டுக் கொடுப்பதாயில்லை.

அன்று பிற்பகல் செயலாளர் மாணிக்கம் தனது காரியாலய வேலைகளில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார். அப்போது அவரின் கவனத்தைக் கலைப்பது போல்,

"சார் வணக்கம்" என்று உள்ளே நுழைந்த மாவட்டச் செயலாளர் முனுசாமி எதிரே இருந்த கதிரையில் அமர்ந்தார்.

"வணக்கம் முனுசாமி என்ன விசேஷம்" என்று கேட்ட செயலாளர் மீண்டும் தான் பாக்கி வைத்த வேலையில் கவனத்தைச் செலுத்தலானார்.

முனுசாமி தொழிற்சங்கத்தில் அனுபவமுடையவர். எந்தப் பிரச்னை என்றாலும் பேசித் தீர்ப்பதில் சமரசம் செய்து வைப்பதில் கெட்டிக்காரர். இந்த மாவட்டத்தில் இவருடைய பேச்சுக்குத் தனி மதிப்பே உண்டு. எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். உண்மையாக, நேர்மையாக கடமை புரிவார். இதனால் அவர் மீது எல்லோரும் தனி மதிப்பு வைத்திருந்தார்கள். நீண்ட இடைவெளிக்குப் பின்,

"என்ன சார் வந்ததிலிருந்து பேசாம இருக்கீங்க" என்று சொன்ன செயலாளர் மாணிக்கம் "சார், நம்ம ராமுவைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க" என்று மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார்.

"ஏன் சார் ஒரு நாளும் இல்லாம அப்படி கேட்கிறீங்க?"

"இல்ல சார் சும்மாதான்."

"சார் ராமுவைப்பற்றி நான் சொல்வதைவிட உங்களைப் போன்றவர்கள் சொன்னால்தான் நல்லாயிருக்கும். அவர் நமது ஸ்தாபனத்திற்கு முக்கியமா தேவைப்பட்ட ஒரு ஆள். அவரின் பேச்சு செயல் அனைத்தையும் உற்றுக் கவனித்தால் தொழிலாளர்களை வழிநடத்தும் பக்குவத்தைப் பெற்று வருகின்றார் என்றுதான் சொல்ல வேண்டும். உங்களுக்குத் தெரியுமா சார், ஒருமுறை அவர் தோட்டத்தில் நடந்த பேச்சு வார்த்தையில் சரியான முடிவு ஏற்படவில்லை என்று தொழிலாளர்கள் அவ்வளவு பேரும் வேறு தொழிற் சங்கத்தில் சேர்ந்து விட்டனர். அப்ப ராமு தொழிலாளர்களை கெஞ்சி கண்ணீர் விட்டுக் கதறினார். அவர்களுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொன்னார். ஆனால் தோட்டக் கமிட்டித் தலைவர்கள் இவருக்கு சங்கத்தில் சம்பளம் கிடைக்கிறது. அதுதான் இவன் இப்படிப் பேசுகிறான் என்று ராமுவைத் தவறாக நினைத்தார்கள். சம்பளத்தப்பத்தி நமக்குதானே தெரியும். சில நேரங்

களில் சங்கத்தின் வளர்ச்சிக்காக அவர் தன் சொந்த பணத்தைத் தான் செலவு செய்திருக்காரே அன்றி, ஸ்தாபனம் அவருக்கு எந்தப் பணமும் கொடுத்ததில்லை. ஒரு நாள் ராமு தோட்டத்தின் நிலைமையை விளக்கி எனக்கு கடிதம் எழுதினார். நான் அமைதியாக - பொறுமையாகத் தொடர்ந்து செயல்படுங்கள். உண்மையைத் தெரிந்து தொழிலாளர்கள் திருந்தலாம் என்றேன். அதுமட்டுமல்ல அந்தத் தோட்டத்தில் ராமு சார் எத்தனை இம்சைகளை அனுபவித்தார். அவரோட உயிருக்குக் கூட உலை வைக்கத் திட்டம் போட்டார்கள். அத்தனையையும் தெரிந் திருந்தும் அதற்காக அஞ்சாமல் புன்னகையோடு எல்லோருடனும் சந்தோசமாக நடந்து கொண்டார். அவர் பட்டதுன்பம் வீண் போகல்ல. ஒரு நாள் திடீரென்று தொழிலாளர்கள் முக்கியஸ்தர்கள் ராமு வீட்டுக்கு வந்து நடந்தவைகளுக்கெல்லாம் மன்னிப்பு கேட்டார்கள். அதோடு ராமு சாரோட தலைமையில் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் இணைந் தார்கள். இது உங்களுக்கும் தெரியும்தானே சார்" என்று முனுசாமி செயலாளர் மாணிக்கத்தைப் பார்த்துக் கேட்டார்.

"உண்மைதான் முனுசாமி. ஒரு நாள் ராமுவோட தோட்டத்தில நடந்த பிரமாண்டமான கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். அப்போ ராமு பேசிய பேச்சைக் கேட்கும் போது மாநாடுகளில் பேசுவது போன்றிருந்தது. அவ்வளவு ஆணித்தரமா அவர் பேசினார். அவர் தொழிலாளர்களை மேம்படுத்தும் கருத்துக்களை உருக்கமாக வெளி யிட்டபோதே நான் அவரைப் பற்றித் தெரிந்து கொண்டேன். அன்றே நான் உறுதியெடுத்தேன். இவரை முழுமையாக தொழிற்சங்க சேவை யில் ஈடுபடுத்த வேண்டுமென்று" என்றார் செயலாளர்.

"உண்மைதான் சார். நீங்க எடுத்த முடிவு நல்லதுதான். ராமுவோட முயற்சி வீண் போகல்ல. இன்றைக்கு தொழிற்சங்கத்தில் அவர் ஒரு கடமையுணர்வுள்ள பிரமுகராகத் திகழ்வதற்கு ராமுவின் திறமையும், நேர்மையான சேவையும்தான் காரணம்" என்ற முனுசாமி, "ஏன் சார் ராமுவ இவ்வளவு விசேஷமாக கேட்கிறீர்கள்" என்று செயலாளரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

"தேர்தல் பொறுப்புகள் ஒப்படைச்சிருக்கேன் அதா."

"சார் தேர்தலுக்காக அவர ஏற்பாடு செய்தது ரொம்ப நல்லது தான். நிச்சயமாக ராமு சார் அந்த பொறுப்ப சரியான முறையில் செய்து முடிப்பாருங்கிற நம்பிக்கை எனக்கிருக்கு. அவரோட திறமையைத் தேர்தலுக்குப் பிறகு நீங்களும் தெரிந்து கொள்ளலாம்" என்றவர் மெதுவாக அறையை விட்டு வெளியே வந்தார்.

வெளியே வந்த முனுசாமியைத் தற்செயலாகக் கண்ட பார்வதி, "சார் நீங்க எப்ப வந்தீங்க. வசந்தி உங்களுக்காகக் காத்துக்கிட்டிருக்கா" என்றவள் வசந்தியிடம் முனுசாமியை அழைத்துக் கொண்டு போனாள்.

வசந்தியைக் கண்ட முனுசாமி, "என்ன வசந்தி என்ன எதிர் பார்த்துக்கிட்டிருந்தியாமே என்ன விசயம் சொல்லு... என்னால முடிஞ்ச உதவிய செய்யிறேன்" என்றவர் பக்கத்திலிருந்த பத்திரிகையை விரித்தார்.

இத்தனை நேரமா எதைப் பேச வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தாளோ அவை வார்த்தைகளாக வெளிவர மறுத்தன. இதனால் ஏதும் விபரீதம் நடந்து விடுமோ என்ற பயம் அவளுக்கு ஏற்பட்டது. இத்தனை நேரமாக இருந்த துணிவு இடம் மாறி அச்சம் கொண்டது.

பத்திரிகையை மடித்து வைத்து விட்டு பார்வதியைப் பார்த்த முனுசாமி "யாராவது விசயத்தைச் சொன்னால் என்ன செய்வதென்று தெரிந்து கொள்ளலாம்" என்றார்.

இதைக் கேட்ட பார்வதி "வசந்தி சார்கிட்ட பயப்படாம விசயத்தைச் சொல்லு. முடியுமுன்னா கட்டாயம் உதவி செய்வார்" என்று உற்சாகப்படுத்தினாள். வசந்தி எப்படி சொல்வதென்ற தயக்கத்தில் அவள் முகம் குப்பென்று சிவந்திருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் அழுது விடுவாள் போலிருந்தது. "சரி நானே சொல்லட்டுமா?" என்று வசந்தியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். வசந்தி மெதுவாகத் தலையை அசைத்தாள்.

பார்வதி விசயத்தைச் சொல்லத் தொடங்கினாள். அதைக் கேட்கக் கேட்க முனுசாமிக்கு ஒரு பக்கம் வருத்தமாகவும் மறு பக்கம் சந்தோஷமாகவும் இருந்தது. விசயத்தைச் சொல்லி முடித்த பார்வதி வசந்தியைப் பரிதாபமாகப் பார்த்தாள். "பயப்படாத வசந்தி. சார் அப்படியொன்றும் உன்னைக் காட்டிக் கொடுத்திட மாட்டார்" என்றாள்.

விசயத்தை முழுமையாகப் புரிந்து கொண்ட முனுசாமி "இது நான் எதிர்பார்த்த ஒன்றுதான். என்றாவது ஒருநாள் ராமு சார் எந்தப் பெண்ணைக் காதலித்தாலும் அவருக்குத் திருமணம் செய்து வைக்கணு முன்னு ஆசைப்பட்டேன். உன் ஆசைக் கனவுகள் நிராசையாகிப் போய் விடக்கூடாது என்று இறைவனை வேண்டி உன்னை வாழ்த்துகிறேன். அடுத்த வாரம் ராமுசார் இங்கே ஒரு மாதம் தேர்தல் வேலைகளுக்காகத் தங்கியிருக்கப் போகிறார். அப்போ நான் இது பற்றிப் பேசுகிறேன். அதோட, இந்த ஒரு மாதம் இரண்டு பேரும் அடிக்கடி சந்தித்துப் பேசக்கூடிய சந்தர்ப்பம் நிறைய இருக்கு. ராமுவோட மனநிலையைப் புரிந்து கொண்டால் உன் காதல் நிச்சயம் நிறைவேறும்" என்றார்.

அவரின் புத்திமதியைக் கேட்ட வசந்தி "சார் உங்களுக்கு எப்படி நன்றிசொல்றதுன்னே தெரியல்ல. என் சகோதரரைப் போல உங்களிடம் என்னோட விசயத்த மனம்விட்டு சொல்லியிருக்கிறேன்" என்றாள்.

"நீ பயப்படாதம்மா ராமு சாருக்கு இது திருமணம் ஆக வேண்டிய காலமாக இருந்தால் அதை யாராலும் மற்ற முடியாது. எப்படியோ உங்கள் காதல் நிறைவேறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இனி கவலையை விட்டுவிட்டு வேலையைக் கவனி. எல்லாவற்றையும் முனுசாமி சார் கவனித்துக் கொள்வார். இன்னும் இரண்டு நாட்களில் உன் காதலர் இங்கு குடியேறிவிடுவார். அப்புறம் உன் திறமையைக் காட்டு. காரியத்த சாதிக்க வேண்டியது என் கடமை" என்றாள் பார்வதி கிண்டலாக.

"ஆமா பார்வதி. நீ சொல்றதும் சரிதான். நம்ம வழியத்தான் வெட்டலாம். அதில் தண்ணீர் ஊத்தி நிலத்தை உழுது பயிரிட வேண்டியது உங்க கடமை" என்றவர், மீண்டும் செயலாளரின் அறைக்குள் சென்று சிறிது நேரம் உரையாடிய பின் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தவர், வசந்தியையும், பார்வதியையும் பார்த்து "உங்கள் விஷயம் என் கவனத்தில் இருக்கிறது" என்று கூறிச் சென்றுவிட்டார்.

# 11

முற்காலத்தில் உறவு முறைப் பெண் இருக்கும் இடம் தேடி மாப்பிள்ளை விட்டார் சென்று பெண் கேட்பது குல மரபு.

ஒருவன் ஒருத்தி மீது காதல் கொண்டு அவளையே தனது இல்லத்தரசியாக ஆக்கிக் கொள்ள முனையும் போது தனக்காக தன் தோழனைத் தூது விடுவான். இது காதல் மரபு.

கண்டவுடன் காதல் கொண்டு நேரடியாகவே பேசி சிரித்து, கை கோத்து பார்க், பீச் என்று திரிந்து இறுதியாக அனுமதி கேட்கப் போவது முறைகேடான காதல். இந்த வகையில் நம்ம ராமு இலக்கிய காலத்திற்குச் சென்று முறையாக காதலியைச் சந்தித்துப் பேச நண்பனை தூதுவிட நினைத்து அவனிடம் கடிதம் மூலம் உதவி கோரி எழுதுகிறான்.

மாலையில் விட்டுக்குச் சென்று முனுசாமியிடம் அவள் மனைவி தெய்வானை கடிதம் ஒன்று வந்திருப்பதாக சொல்லி ஒரு கடிதத்தை அவனிடம் கொடுக்கிறாள்.

"என்ன கடிதமா? யார் அனுப்பியிருக்கிறா" என்றவாறே கடிதத்தைப் பெற்றுக் கொண்ட முனுசாமி, "தெய்வானை களைப்பா இருக்கு. குடிக்க தேத்தண்ணீ கொஞ்சம் இருந்தா கொண்டு வா" என்றவர் கடிதத்தை மேலோட்டமாகப் பார்த்தார். அது ராமுவின்

கையெழுத்தில் அனுப்பப்பட்டிருப்பதை உணர்ந்து ஆச்சரியப்பட்டவர், திண்ணையில் அமர்ந்து கடிதத்தை. ஆவலுடன் படிக்க ஆரம்பித்தார். கடிதம் ராமுவால் எழுதப்பட்டிருந்தது. அதுவும் அதில் முழுக்க முழுக்க வசந்தியைப் பற்றியே எழுதியிருந்தையும் அவருக்கு ஆச்சரியத் தையும், மகிழ்ச்சியையும் கொடுக்கவே, கடிதத்தில் தன்னை மறந்திருந்தார். வீட்டிற்குள்ளிருந்து தேநீருடன் வெளியே வந்த தெய்வானை, "என்ன ஒரே கொண்டாட்டமா படிக்கிறீங்க. யார் கடிதம் எழுதியிருக்கா" என்றவாறே கணவனின் அருகில் தேநீரை வைத்தாள்.

"ஆமாண்டி அம்மா இது சாதாரண கடிதம் இல்ல. காதல் கடிதம். அதான் இவ்வளவு ஆர்வமா படிக்கிறேன்" என்றவரை ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு,

"அட மீச நரைச்சாலும் ஆச நரைக்காத கதையாயில்ல இருக்கு. அவ யாரு உங்களுக்கு காதல் கடிதம் எழுதினவ. சொல்லுங்க. அவள இரண்டு மொத்து மொத்திட்டு நாக்குதெறித்த மாதிரி நாலு கேள்வி கேட்டுட்டு வந்திடுரேன்" எனச் சொல்லிக் கொண்டே தன் சேலைத் தலைப்பை இடுப்பில் செருகிக் கொண்டாள்.

"அட ஆத்திரப்படாத தெய்வானை. காதல் கடிதம் எனக்கில்ல. ஒரு காதலன் தன் காதலியைப் பற்றி கடிதத்தில் விசாரித்திருக்கிறான்."

"ஓகோ... நீங்க அவங்களுக்கு என்ன புரோக்கரா? உங்களுக்கு ஏங்க இந்த வேலையெல்லாம். சும்மா வீட்டு வேலைகளை கவனிக்காம, இப்படி ஊர் வம்புகளை கவனிக்கிறதில என்னத்தான் கெடைக்கிதோ. இன்றைக்கு லீவு நாள். ஒரு விறகு தேடிக் கொண்டு வருவதற்கு வக்கில்லை. காலையில் போனவரு இப்பதான் வர்றீங்க. என் தலை யெழுத்து க டப்படுகிறேன்."

"சரி சரி அழாத. ஒரு பொறுப்பை எடுத்தா அத உருப்படியாச் செய்யணும். இல்லாட்டி நாலு பேர் நாலு விதமா சொல்வாங்க. ராமு சார் இருக்காரே பாத்தியா. அவர் எவ்வளவு மக்களுக்காக சேவை செய்யிறார். அதேபோல நாமலும் செய்ய வேணாமா?"

"ஆமா அவருக்கென்ன ஒண்டிக் கட்ட. குடும்பமா, குட்டியா ஒரு தொல்லையும் இல்ல. சோறு கண்ட எடம் சொக்கமுன்னு திரியிறாறு. நீங்க என்ன அவர் போலவா. உங்களுக்கு குடும்பம், புள்ளக்குட்டிங்க, பொஞ்சாதின்னு இருக்காங்க."

"என்ன புள்ள ராமு சார அப்படி எலக்கமா சொல்லிட்ட. அவரு சோறு கண்ட எடம்முன்னு சொர்க்கமுன்னு திரிந்தா அவர யார் மதிப்பாங்க. சோறு தண்ணியில்லாம க டப்பட்டதனாலத்தான் அவர நாலு பேர் மதிக்கிறாங்க."

"சரி சரி கதைய விட்டுட்டு கடிதத்தில் அப்படி என்னத்தான் எழுதி இருக்கிங்கிறத் வாசித்து சொல்லுங்க."

"ஒரு பிரச்சினையும் இல்லாம பழம் நழுவிபாலில் விழுந்த கதையாகி விட்டது அவ்வளவுதான்."

"சும்மா மூடுமந்திரம் போட்டுக்கிட்டிருக்காம கடிதத்தை வாசிங்க. அப்படி என்னத்தான் பழம் நழுவி பாலில் விழுற மாதிரி எழுதிப்புட்டாரு."

"கடிதத்தை வாசிக்கிறேன். கவனமா கேட்டுக்க. அப்பத்தான் இந்த முனுசாமி யாருன்னு உனக்கு விளங்கும்" என்றவாறே ஆர்வம் கொண்ட மனைவிக்கு கடிதத்தை வாசித்துக் காட்டுகிறான் முனுசாமி.

'மதிப்பிற்குரிய நண்பர் முனுசாமி சாருக்கு என் அன்பு வணக்கம்.

இக்கடிதத்தை நண்பர் என்ற முறையில் எழுதுகிறேன். இதை வாசிக்கும்போது இது கனவா - நனவா என்ற சந்தேகம் ஏற்படும். ஆனால் இது முற்றிலும் உண்மை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு வாசியுங்கள். விபரம் புரியும்.

நீண்ட இடைவெளிக்குப் பின்பு என் வாழ்க்கையில் ஒரு மாற்றம், சிறிது காலமாக ஏற்பட்டுள்ளது. இதைப்பற்றி உங்களிடம் பரிமாறிக் கொள்வதே சரி என்று எழுத துணிந்தேன். முக்கியமாக உங்களுக்கு எழுதும் காரணம், என் வாழ்க்கையில் மா ற்றத்தை ஏற்படுத்திய அந்த அற்புத பெண் உங்கள் அருகில் இருப்பதால்தான். அதைப் பற்றி பேச நீங்கள் சரியானவர் என்று நினைத்தேன். அந்தப் பெண் வேறு யாரு மல்ல. அன்று நான் மத்தியக் காரியாலயம் வந்திருந்தபோது நீங்கள் அறிமுகப்படுத்திய வசந்தி தான். அவள் தான் என் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியவள். என் உள்ளத்தில் எங்கோ ஓர் மூலையில் உறங்கிப் போய்விட்ட உணர்வுகளும், இன்ப கிளர்ச்சிகளும் இப்போது உயிர்பெற்று என்னை வாட்டி வதைக்கிறது. இந்த வாட்டத்தையும், ஏக்கத்தையும் நீண்ட நாட்களுக்குப் பின்போட முடியாது.

பல நாட்கள் சிந்தித்தேன். இறுதியாக முடிவு எடுத்த பின்புதான் இக்கடிதத்தை எழுதுகின்றேன். என் வாழ்க்கையில் புதிய தீபம் வசந்தி என்பதை புரிந்து கொண்டேன். நான் எடுத்த முடிவு சரியானதா - இல்லையா என்பதுபற்றி நான் சிந்திக்கவில்லை.

நீங்கள் என் அன்பு வேண்டுகோளை ஏற்று எனக்காக வசந்தியிடம் தூது சென்று அவள் மன விருப்பத்தை அறிந்து கொள்வீர்களென நினைக்கிறேன். நான் நாளை மறு நாள் உங்களை வீட்டில் சந்திக்கும் போது, நீங்கள் சொல்லும் பதில் இனிப்பாக, சந்தோசமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் விடைபெறுகின்றேன்.

சிரமத்திற்காக மன்னிக்கவும்.

இப்படிக்கு,

அன்பு சகோதரன், ராமு

கடிதத்தை வாசித்து முடித்தவர் பக்கத்திலிருந்த தெய்வானையை ஏறிட்டுப் பார்க்கிறார்.

"என்னங்க இது, ராமு சார் திருமணத்தப் பத்தி எழுதியிருக்காரு ஆச்சரியமாயில்ல. என்ன இருந்தாலும் இது மகிழ்ச்சியான விசயந் தாங்க. யாருங்க அந்த வசந்தி, நானும் வரேன். பேசி முடிச்சு வைப்போம். நமக்கும் புண்ணியம்தானே."

"எதுக்கும் காலம் நேரமுன்னு ஒன்று இருக்கின்னு பெரியோர்கள் சொல்வாங்கல்ல. அந்த நல்ல நேரம் ராமு வாழ்க்கையில் உதயமாகி யிருக்கு. வசந்தி நம்ம காரியாலயத்தில புதுசா வேலைக்கு சேர்ந் திருக்கிற பொண்ணு. அட வேறு யாருமல்ல, நம்ம சமுத்திரவல்லி தோட்டத்தில ஞானமுன்னு ஒருத்தர் இருக்காருள்ள, அவரோட ஒரே பொண்ணுதான் இந்த வசந்தி.

"அப்படி சொல்லுங்க அதுதானே பார்த்தேன். அந்த தோட்டத்தில தான் என் பெரியப்பாவும் இருக்கார். அவர விட்டுப் பேசிட்டால் போச்சு" என்றவள், ஏதோ நினைத்தவளாக அது சரிங்க கடிதத்தை படிக்கிறதுக்கு முன்னால ஏதோ பழம் நழுவி பாலில விழுந்த மாதிரின்னு சொன்னீங்களே. அப்படி ஏன் சொன்னீங்க?"

"உனக்கு கதையே தெரியாது தெய்வானை. கேட்டுக்க சொரல் றேன். நான் ஞாயிற்றுக்கிழமை ஆபீசிக்குப் போனேனா. அப்ப நம்ம வசந்தி ராமுவ காதலிக்கிறதா பார்வதிங்கிற பெண் மூலமா தெரிஞ்சிக் கிட்டன். அவங்க ரெண்டு பேரும் கூட இதைப்பற்றி சொல்லி உதவி செய்யும்படி என்னிடம் கேட்டாங்க. நான் இதென்னடா வம்பாப் போச்சி அப்படின்னு மனசுக்குள்ளேயே நினைச்சிக்கிட்டு, 'கவலைப்படாதீங்க நான் ராமுக்கிட்ட இந்த விசயத்தைப் பத்தி பேசி அவர் நோக்கத்தையும் தெரிந்து எற்பாடு செய்யிறேன்னு' சொல்லிட்டு வந்துட்டேன். இங்க நீ போட்ட போடுல இத மறந்து போயிட்டேன். நல்லவேளை ராமுவோட கடிதத்த பார்த்துவுடன்தான் நினைவுக்கு வந்தது. சரி, நம்ம நினைச்ச காரியத்தில இரண்டு பேரும் ஒரே மாதிரியாகத்தான் இருக்காங்க அப்ப நம்ம வேலை சுலபமாயிடும்கிற அர்த்தத்துலதான் அப்படி சொன்னேன்."

"தொழிலாளியின் பிரச்சினையை பேசப் போறேன்னு சொல் லிட்டு போயி இந்த புரோக்கர் வேலையைத்தான் செய்றீங்களா" என்றாள் தெய்வயானை பொய் கோபத்துடன்.

"ஐய்யய்யோ அப்படியெல்லாம் சொல்லாதேடி. நம்ம ஆளுக என்ன தப்பா நெனைக்கப் போறாங்க. நீ சரின்னா செய்யிறேன். இல்லாட்டி இத்தோட கை கழுவிவிடுறேன்."

"நீ சரியான ஆளுய்யா. அந்தப் பொண்ணுகிட்ட வாக்குக் கொடுத்த, இங்க ராமு சாரும் உதவி கேட்டிருக்கிறார். இந்த்

நிலைமையிலே நீங்கள் முடியாதுன்னு கையவுட்டா அது துரோகமில்லையா?"

"அப்ப கதைய விடு. நாளைக்கு காலையில் நேரே அந்தப் பொண்ணுக்கிட்டப் போய் விசயத்தை சொல்லிட்டு வர்றது நல்லதுன்னு நினைக்கிறேன்.

"ஆமாங்க. இது வைகாசிமாசந் தானுங்களே. இப்பவே ஆரம்பிச்சாதான் ஆவணியிலயாவது கல்யாணம் முடிக்கலாம். ஆயிரம் பொய்ய சொல்லியாவது ஒரு கல்யாணத்த செய்து வைப்பாங்க. நாம பொய்ய சொல்ல வேண்டிய அவசியம் இல்ல. இரண்டு பேரும் விரும்புறாங்க அவங்களைச் சேர்த்து வைக்க நாம் உதவி செய்வோம். நமக்கும் புண்ணியமாப் போகும்."

"நீ சொன்னா சரி, அப்ப எனக்கு சாப்பாட்ட எடுத்துவை. நான் கைகால்களைக் கழுவிவிட்டு வாரன்" என்று வெளியே சென்றவன் திரும்பிவந்து,

"பசங்க எங்க சாப்பிட்டாங்களா?" என்றான்.

"அவங்க சாப்பிட்டுட்டு தூங்குறாங்க, நீங்க சாப்பிடுங்க" என்று சாப்பாட்ட எடுத்து வைத்தாள். இரண்டு பேருமா அமர்ந்து சாப்பிட்டார்கள்.

படுக்கையில் கிடந்த முனுசாமி தன்னைப்பற்றி சிந்திக்கலானான்.

முனுசாமி இந்தத் தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவன்தான். அவனுக்கும் அவன் மாமா பொண்ணு தெய்வானைக்கும் தோட்டத்து கோவிலில்தான் திருமணம் நடந்தது. இப்போது அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள், இரண்டு பேருமே பையன்கள். தோட்டத்துப் பாடசாலையில் படிக்கிறார்கள்.

இந்தத் தோட்டத்திற்கு முனுசாமிதான் தொழிற்சங்கத்தைக் கொண்டு வந்தான். எத்தனையோ எதிர்ப்புகள், போட்டிகள் உருவாகியும் அவை அனைத்திலும் வெற்றி கண்டான். இப்போது தோட்டக் கமிட்டித் தலைவர் பதவியோடு மாவட்டச் செயலாளர் பதவியையும் பொறுப் பேற்று உள்ளான். இவனுடைய வளர்ச்சியில் ராமுவுக்கும் பங்குண்டு. ராமுவின் சேவை மனப்பான்மையும், தியாக உணர்வும்தான் இவனை இத்துறையில் ஈடுபடத் தூண்டியது. இதன் மூலமாகத்தான் ராமு வுக்கும், முனுசாமிக்கும் தொடர்பு ஏற்பட்டது. ராமு முனுசாமியை விட வயதில் இளையவனாக இருந்தாலும், எல்லோர் மதிப்பையும் பெற்று விளங்குபவன். அப்படிப்பட்ட ஒரு சேவையாளனுக்குத் திருமணம் முடித்து வைக்கும் பாக்கியம் தனக்கு ஏற்பட்டிருப்பது கடவுள் செயல்தான். என்னைவிட எத்தனையோ பேர் அவருக்கு நண்பர்களாக இருக்கிறார்கள். இப்படியே சிந்தனையில் உறங்கிப் போனான் முனுசாமி.

# 12

மறுநாள் காலை தெய்வானை தேநீர் கோப்பையுடன் வந்து முனுசாமியை எழுப்பியபோது திடுக்கிட்டு விழித்தவன், "ஆகா.... நல்லா விடிஞ்சிப் போச்சே. கொஞ்சம் முன்னாடியே எழுப்பியிருக்கக் கூடாதா" என்று கேட்டுக் கொண்டே தேநீரைக் குடித்தான்.

"இன்னைக்கு என்ன வேலைக்காகப் போகப் போறீங்க, மெதுவா எழுந்திருக்கட்டுமுன்னு தான் எழுப்பல."

படுக்கையை விட்டு எழுந்த முனுசாமி காலைக் கடன்களை முடித்துக் கொண்டு கடிதத்தையும் பத்திரமாக எடுத்துக் கொண்டு புறப்பட்டார். காரியாலயத்திற்கு நுழைந்த முனுசாமியை "வணக்கம் சார்" என்ன காலையிலேயே வந்து விட்டீர்கள். "ஏதும் பிரச்சினையா" என்று கேட்டார் பிரதிநிதி.

"அப்படியொன்றும் இல்லை" என்று ஒரு கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்து கொண்டவர், வசந்தி இருக்கும் இடத்தில் தன் பார்வையைச் சுழலவிட்டார். வசந்தியின் கண்கள் கலங்கியிருந்த நிலையில் காணப்பட்டாள். பார்வதியிடம் கேட் போது -

"இன்று காலை செயலாளர் கூப்பிட்டு சங்கத்தின் இன்னொரு கிளைக்கு மாற்றம் செய்யப் போவதாக சொன்னாராம். அவர் சொன்னதி லேயிருந்து அழுதுக்கிட்டு இருக்கா. நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்திட்டேன். கேட்டப் பாடில்ல. இப்ப சொல்றா வேலையைவிட்டு விலகப் போறதா. நல்ல நேரம் நீங்க வந்தீங்க சார் அவளுக்கு கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்க" என்றாள்.

வசந்தியைக் கூப்பிட்டு அருகில் அமர வைத்தவர், "இன்று உனக்காகத்தான் வேலைக்குக் கூடப் போகாமல் இங்க வந்திருக் கிறேன். ஏன் வந்திருக்கிறேன் என்று தெரிந்தால் நீயே ஆச்சரியப்படுவ. கண்ணை துடிச்சிட்டு சந்தோசமா இந்தக் கடிதத்தை படி" என்றவர் தன் சட்டைப் பையிலிருந்த ராமுவின் கடிதத்தை எடுத்துக் கொடுத்தார்.

இந்த கடிதம் யாருடையது. ஏன் என்னிடம் கொடுக்கிறார் என்று ஒன்றுமே புரியாமல், கடிதத்தை வாங்கியவள் அதைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தாள். கடிதத்தை வாசிக்க வாசிக்க உண்மையிலேயே அவளுக்கு ஆனந்தம் ஏற்பட்டது. கடிதத்தை வாசித்து முடித்த வசந்தி, "சார் என்னால் நம்பவே முடியல. நீங்க இப்படியொரு கடிதத்தோடு வருவீங்கன்னு" என்று நன்றி பெருக்கோடு அவரின் முகத்தைப் பார்த்தாள்.

இதை சற்றும் எதிர்பார்க்காத பார்வதிக்குக் கூட பெரும் ஆச்சரியமாகப் போய்விட்டது. "காலையில் பட்ட கவலைக்கு இப்ப

மருந்து கிடைச்சிருக்கு, கவலய விட்டுட்டு வேலையைப் பாரு. உனக்கு அடிச்ச அதிர் டம் யாருக்கடி அடித்திருக்கு. எப்படியோ எங்களையெல்லாம் மறக்காம இருந்தா சரி. அவ்வளவுதான் நான் சொல்வேன்" என்றாள் கிண்டலாக.

அப்போது முனுசாமி அமைதியாகச் சொன்னார். "இடம் மாற்றம் பெற்று நீங்கள் வீட்டுக்குப் பக்கத்திற்குத்தானே போகப் போறீங்க. சந்தோஷமாக ஒத்துக்கிட்டுப் போங்க. எல்லாம் நல்லபடியா முடியும். நேரம் காலம் வந்தா எல்லாம் தானா வரும்முன்னு சொல்வாங்க. உங்க மனசு போல ராமு சாரோட மனசும் இருக்கு. அவரும் இங்கே தங்கித்தான் வேலைகளை செய்யப் போகிறார். அதனால் கொஞ்சம் தூரத்தில் கண்களில் படாம நீங்க ரெண்டு பேரும் இருந்தா அது உங்க காதலுக்கு நல்லது. நான் என்னுடைய கடமையை செய்திட்டேன். கடித்தை வாசிச்சிட்டிங்க. இதுக்கு என்ன பதில் எழுதுறதுன்னு நீங்க தான் சொல்லணும்". என்று கூறிய முனுசாமி வசந்தியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

"சார் இனிமேதான் உங்க கடமையே ஆரம்பமாகப் போகிறது. நான் எத்தனைதான் விரும்பினாலும், வீட்டில் பெரியவர்கள் அனுமதி வேணுமில்ல. அந்தக் காரியத்தையும் நீங்கதான் செய்ய வேண்டும்."

"அப்ப பொண்ணு கேட்டு வரச் சொல்றீங்களா. சரி ராமு வரட்டும் ஒரு வார்த்தை கேட்டிட்டு முறைப்படி வருகின்றோம்" என்றவர், "சரி எனக்கு நேரமாகிறது. நீ ஒன்றும் கவலைப்படாத. நான் ராமு சாரோட இதுப்பத்தி பேசி முறைப்படி உங்க வீட்டுக்கு வந்து பெண் கேட்கிறேன்" என்றவர் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டார்.

எப்படியும் இந்தத் திருமணத்த நான் தடையின்றி முடித்து வைப்பேன் என்று ஏதோ சபதம் போட்டவர் போல் சொன்னதில் வசந்திக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. வசந்தியின் முகத்தில் ஏற்பட்ட மாற்றம் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வு அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல் கண்ணாடி போல் அவள் முகத்தில் பிரதிபலித்தது.

முனுசாமி போவதையே பார்த்துக் கொண்டிருந்த வசந்தியை, "என்னடி சார் சபதம் போட்டு போறார்" என்று திசை திருப்பினாள் பார்வதி.

"ஆமா பார்வதி எனக்கென்னமோ வீட்ட நெனைச்சா ரொம்ப பயமா இருக்கு."

"இதில் பயப்பட என்ன இருக்கு வசந்தி. நீ விரும்பியது போல அவரும் விரும்பி கடிதம் மூலம் வெளிப்படுத்தி விட்டார். அவரும் இந்த விசயத்தை விட்டுக் கொடுத்திடமாட்டார். ராமு சாருக்கு ஆதரவா

எல்லோரும் கிளம்புவாங்க, அப்புறம் வீட்டிலுள்ளவர்கள் அனுமதி கொடுக்காமல் என்ன செய்வாங்க?" என்றாள் பார்வதி.

பார்வதியின் வார்த்தைகள் வசந்தியின் மனதிற்கு சற்று நிம்மதியைக் கொடுக்க, மாலை காரியாலயம் முடிந்து வீட்டிற்குப் புறப்பட்டாள் வசந்தி.

தோட்டம் என்றால் சிலர் இளக்காரமாக நினைத்து ஒதுங்கிட நினைக்கிறார்கள். ஆனால் இந்தத் தோட்டத்து மக்களிடையே குடி கொண்டுள்ள சமூகப் பழக்கவழக்கங்களை நேரில் பார்த்தவர்களுக்கு மாத்திரமே தோட்டம் என்ற சொல்லுக்கு அர்த்தம் புரியும்.

மலையக கலாசாரத்தின் ஜீவநாடி எங்கே என்று தேடிப் போனால், அது தோட்டத்தின் சமூகப்பிரச்சினையோடு, ஏன் அந்த மக்களின் உதிரத்தோடு கலந்து உயிர்த்துடிப்புடன் இருப்பதைக் காணலாம். அந்த சமூகக் கட்டுப்பாட்டின் அத்திவாரத்தின் மேல்தான் பெண்கள் தங்களின் வாழ்க்கையை அமைதியோடும், பொறுமையோடும் அன்போ டும் நடத்துகின்றனர். தோட்ட மக்களின் வாழ்க்கையில் பழங்கால வழிமுறைகள் இன்னும் மிளிர்வதைக் காணலாம்.

ஆனால் இன்றைய நவநாகரிக யுகத்தைப் பொறுத்தவரையில், காதல் திருமணம் என்பது சர்வசாதாரணமான ஒன்றாகிவிட்டது. இதில் கட்டுண்ட ஆண்-பெண் இருபாலரும் தங்களின் குடும்பத்தினரின் அனுமதியைக் கட்டாயமாகப் பெற வேண்டும் என்ற கட்டாயத்திற்குத் தங்களை உட்படுத்திக் கொள்வதில்லை. அவரவர்களின் விருப்பப்படி தங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள்.

ஆனால் இந்த நவநாகரிக யுகத்திற்கேற்ப வசந்தியால் வாழ முடியவில்லை. அவள் எவ்வளவுதான் படித்த பெண்ணாக இருந்தாலும், பழங்கால பழக்க வழக்கங்களை, தோட்டங்களிலுள்ள சமூகக் கட்டுப் பாடுகளை மீற அவள் விரும்பியதில்லை. இதன் காரணமாகத்தான், தன் காதல் வெற்றி பெற்றாலும், தன் குடும்பத்தின், சமூகத்தின் கட்டுப்பாடுகளை எண்ணி அவள் அச்சம் கொள்கிறாள்.

அதேநேரம், தேர்தல் வேலைகளைக் கவனிப்பதாக மத்திய செயலகத்தில் ஒரு மாதம் தங்கி வேலை செய்வதற்காக ராமு தன் தாயாரிடமும், நண்பர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தான்.

சமூகத்தின் மேம்பாட்டிற்காக ஒருவனுக்குப் பணியாற்றக் கிடைக்கும் சந்தர்ப்பம் சாதாரணமானதல்ல. இது இறைவனால் ஒருவனுக்குக் கொடுக்கப்பட்ட வரம். இதை எத்தனை பேர் சீர்தூக்கிப் பார்க்கிறாங்க. பொதுப் பணியைத் தன் சுயலாபத்திற்கும், சுகபோகத் திற்கும் பயன்படுத்துவதையே முக்கியமாகக் கருதுகின்றனர். இதைப்

பயன்படுத்தி மற்றவர்களை அடக்கி தனக்கு அடிமையாக்கிக் கொள்ள முனைகின்றனர்.

ஆனால் இவர்களில் ராமு அப்பாற்பட்டவன். பொதுப் பணியை மக்களின் மேன்மைக்காக, சமூக மேன்மைக்காகப் பயன்படுத்த வேண்டு மென்ற இலட்சியத்தை மேற்கொண்டு செயல்படுபவன். அதற் காகவே இத்தனை காலமாக தன்னை ஓர் பிரமச்சாரியாகவே உரு வாக்கிக் கொண்டு செயல்பட்டவன். ஆனால் இப்போது அவன் வாழ்க் கையில் துணைக்கரம் ஒன்று நீண்டதுபோல் வசந்தி எதிர்ப் பட்டாள். அந்த வசந்தியை எண்ணியவாறே பிரயாணத்தைத் தொடர்ந்தான் ராமு.

இத்தனை வருடம் திருமணத்தைப் பற்றியே சிந்திக்காதிருந்த என்னை வசந்தி சிந்திக்க வைத்துவிட்டாளே. நான் முனுசாமிக்கு எழுதிய கடிதம் கிடைத்திருக்குமோ? அவர் இதப்பத்தி வசந்தியோட கதைத் திருப்பாரோ? இதற்கு வசந்தி என்ன சொல்லியிருப்பா? ஒரு வேளை அவள் மறுத்திருந்தால், அப்பப்பா அதப்பற்றி நினைக்கவே அச்சமாக இருக்கிறது. அப்புறம் எப்படி அவள் முகத்தில் விழிப்பேன்? சேச்சே.. அப்படியெல்லாம் நான் நினைக்கிற மாதிரி நடக்காது. வசந்தி நிச்சயமா என்ன வெறுக்கமாட்டாள். எப்படியும் சம்மதம் தருவாள். அவ சம்மதம் தந்தாலும், அவங்க குடும்பத்தவங்க என்ன சொல்லுவாங்களோ? ஒரு வேளை அவங்க அவள வேறொருத்தருக்கு நிச்சயித்திருந்தா, இல்ல வசந்திதான் வேறொருத்தன விரும்புறதா இருந்தா... சேச்சே... அப்படி யெல்லாம் இருக்காது, அவள் முகத்தில அப்படியானதொரு நிலை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எப்படியோ இன்று முனுசாமிய சந்தித்தா எல்லா விபரத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

பஸ் ஒரு குலுக்கலோடு நின்றது. சிந்தனையிலிருந்து விடு பட்டவன் பஸ் நிலையத்தை அடைந்து விட்டதையறிந்து அவசர அவசரமாகப் பெட்டி படுக்கையோடு இறங்கியவன், வழமையாக தேநீர் அருந்தும் கடைக்குச் சென்றான்.

"வாங்க சார்" என்று வரவேற்ற கடை முதலாளி "என்ன தேர்தல் வேலைக்காக வந்திருக்கீங்க போலிருக்கே" என்றார்.

"ஆமா சார், அதற்காகத்தான் வந்தேன். நீங்கல்லாம் எங்களுக்கு எங்கே ஓட்டுப் போடப் போறீங்க. நாங்க எப்படித்தான் சொன்னாலும் உங்கள் ஓட்டு எங்களுக்கில்ல."

"ஐயோ சார் ஒரு காலத்தில அப்படியெல்லாம் ஓட்டு போட்டது உண்மைதான். ஆனா இப்ப சிந்திச்சிதானே போடணும். அதனால இந்த முறை எங்க ஓட்டெல்லாம் உங்களுக்குத்தான். நீங்க ஒன்றும் பயப்பட வேண்டாம்" என்று சொன்னதும் ராமு மிகவும் சந்தோஷப் பட்டான்.

கடிகாரத்தில் மணியைப் பார்த்த ராமு, நேரம் 3.30 என்பதைத் தெரிந்து கொண்டவன், தூரத்தில் தேர்தல் வேலைகளைக் கவனிக்கும் முக்கிய பிரிதிநிதி ஒருவர் கடையை நோக்கி வருவதைக் கவனித்தான்.

இவர் சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர்களில் ஒருவர். சங்கத்தில் மேல் மட்டப் பதவிக்குப் பலமுறை முயற்சித்தும் தோல்வி கண்டு சங்கத்தின் கடமையைச் செய்து வருகின்றார். உண்மையிலேயே இவரைப் போன்றவர்களுக்கு சேவை அடிப் படையில் ஆபீசில் உயர் பதவி வழங்க வேண்டும். ஆனால் தொழிற் சங்கத்தில் கடமையாற்றுபவர்கள் எல்லாம் பதவி கிடைத்துவிட்டால் இந்த இடத்திற்கு மற்றவர்களை அமர்த்துவதற்கு சந்தர்ப்பமே கொடுக்க மாட்டார்களே. இவ்வாறு நினைத்துக் கொண்டிருந்த ராமுவின் நினைவை "வணக்கம் ராமு சார்" என்று கலைத்தார்.

பதில்க்கு வணக்கம் சொன்ன ராமு, "என்ன இந்த நேரத்தில எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே அவரை உள்ளே அழைத்துச் சென்று இரண்டு தேநீருக்கு ஆர்டர் செய்துவிட்டு தேர்தல் வேலைகள் பற்றி கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்தில் வெளியே வந்த ராமு, பிரதிநிதியிடம் "நான் இன்று முள்ளங்கித் தோட்டத்திற்குப் போய் நாளை காலையில் வருகிறேன்" என்று விடைபெற முயலும் போது, "இருங்க சார் நானும் பஸ் நிலையத்திற்கு வாரன்" என்று கொண்டே கடை முதலாளியிடம் விடைபெற்றுக்கொண்டு பிரதிநிதியும் ராமுவும் புறப்பட்டார்கள்.

பஸ் 4.30 மணிக்குத் தான் இருப்பதாகச் சொன்னார்கள். இருவரும் சிறிது நேரமாகக் கதைத்துக் கொண்டிருந்த போது, பஸ் வந்தது. நாளை சந்திப்போம் என்று விடை பெற்றுக்கொண்டு ராமு பஸ்ஸிற்குள் ஏறவும், பிரதிநிதி தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

ராமு இறங்க வேண்டிய இடத்தில் பஸ் நின்றவுடன் இறங்கிக் கொண்டான்.

குறிப்பிட்ட இடத்தில் பஸ் நின்றவுடன் இறங்கிக் கொண்ட ராமு, நேராக முள்ளங்கித் தோட்டத்திற்குப் போகிற வழியில் நடந்து சென்றான். இந்தத் தோட்டத்திற்குப் போகும் வழியை கருத்தை ரோட்டு என்று அழைப்பார்கள். தோட்ட வாகனங்கள் கூடுதலாக இந்த வழியில் தான் செல்லும். இப்பாதையில் நேராக சென்றபின் ஒரு குறுக்குப் பாதை வரும். அந்த வழியாகத்தான் முனுசாமியின் லயத்திற்குச் செல்ல வேண்டும்.

குறுக்குப் பாதையில் ராமு சென்று கொண்டிருந்தான். எதிர்பாராத விதமாக ராமுவைக் கண்டு கொண்ட முனுசாமி அவனை நோக்கி ஓடி வந்து கட்டிப் பிடித்துக் கொண்டு வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

# 13

தொழிலாளியை மதிக்காத நாடு ஒருபோதும் செழிக்காது என்பது அனுபவ ரீதியாக எழுந்த பழமொழி.

உலகில் மனிதனுக்கு இன்றியமையாத தேவைகள் உணவு, உடை, வீடு. ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் வாழும் உண்மையான நிலையை இருநூறு ஆண்டுகளுக்குப் பின்பும் ஆட்சியாளர்கள் தெரிந்து கொள்ளாமல் இருப்பது வேடிக்கையாகும்.

ஒரு மனிதனின் சாதாரண தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாதவர்கள், நாங்கள் ஜனநாயக ஆட்சி நடத்துகிறோம், எங்கள் நாடு முன்னேறிவிட்டது என்றெல்லாம் பெருமையடிப்பதில் அர்த்த மில்லை.

பத்தடி அகலமும், பன்னிரண்டு அடி நீளமும் கொண்டது தோட்டத் தொழிலாளர்களின் வீடு. இந்த வீட்டிற்குள் தான் எத்தனை எத்தனை பரம்பரைகள் வாழ்ந்திருக்கும். இப்போது நான்காவது தலைமுறை உருவாகி விட்டது. சர்வதேச ரீதியில் கூட கூறுகிறார்கள், மனிதனின் வாழ்க்கை முன்னேற்றம் அவன் வாழ்ந்து வரும் சூழலைப் பொறுத்திருக்கின்றது என்று.

ஆனால் எமது நாட்டில் பத்து லட்சம் வீடுகள் கட்டும் திட்டம் முடிந்து, அந்த வீடுகளை அரசாங்கம் மக்களுக்குச் சொந்தமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் கூட தோட்டங்களில் இருநூறு ஆண்டு காலமாக வாழ்ந்து நாட்டின் அன்னிய செலாவணியைப் பெருக்கித் தருகின்ற இந்தத் தோட்ட மக்களுக்கு மாத்திரம் சொந்தமாக ஒரு வீடேனும் இதுவரை வழங்கியதில்லை. அது மட்டுமல்ல, லயன்கள் யாரால் கட்டப்பட்டது என்பது கூட இப்போது அடையாளம் காண முடியாத நிலையில் உள்ளது.

ஆட்சியாளர்கள் இந்த மக்களின் உழைப்பை வாங்கும் ஓர் இயந்திரமாகவே கருதுகின்றனர். இவ்வியந்திர மனிதர்கள் தங்களின் கூடுதலான உழைப்பைக் கொடுத்து வேதனமாக ஒரு சில அற்பத் தொகையைப் பெறுவதால், போஷாக்கு உணவு என்பதை வானொலி மூலமாகத் தான் கேட்டறிந்திருப்பார்களேயன்றி, அதை மனதார அவர்கள் சுவைத்ததில்லை.

முனுசாமி இருக்கும் லயம் பதினான்கு அறைகளைக் கொண்டது. இந்தப் பதினான்கு குடும்பத்தில் மொத்தமாக சிறுவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வசிக்கிறார்கள். ஆத்திரத்தோடு சிந்தனை செய்த ராமு, முனுசாமியின் கைத்திறமையால் பொலிவு பெற்றுள்ள அந்த வீட்டின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான்.

"என்ன சார் அப்படிப் பார்க்கிறீங்க? இது நம்ம பையன்களின் வேலை. சினிமா போஸ்டர்களை வீடு பூராவும் ஒட்டி வைத்திருக் கிறார்கள்."

"அதுவும் நல்லாத்தான் இருக்கு முனுசாமி. ஏதோ அவர்களின் மூளை வளர்ச்சிக்கேற்ற விதத்தில் ஒரு மாதிரியா வீட்டை புகை மூட்டத்திலிருந்து உருமாற்றியிருக்கிறார்கள். ம்.. இந்த வாழ்க்கை முறை என்றுதான் மாறப் போகிறதோ" என்றவாறு முனுசாமியைப் பார்த்துப் புன்னகையொன்றை உதிர்த்தான்.

"என்ன செய்யிறது ராமு சார். எத்தனையோ தொழிலாளிகள் வீடிடிந்து விழுந்து செத்துப் போயிருக்காங்க. செத்தவங்களை பத்தி யாருமே கவலைப்படுடறதில்ல. என்னமோ நம்ம மக்களுக்கு அந்த ஆண்டவன் இன்னமும் துணை இருக்கிறதால இன்னைக்கு அவங்க உயிரோட வாழ்ந்துகிட்டிருக்காங்க" என்றான் முனுசாமி.

"என்னங்க வந்தவங்கக்கிட்ட ஒங்க பாட்டுல கதைச்சிக்கிட்டே இருக்கீங்க. அவங்களுக்கு தேத்தண்ணிய கூட குடிக்க உடமாட்டீங்க போலிருக்கே" என்றவாறு தண்ணிக்குப் போயிருந்த தெய்வானை வீட்டிற்குள் நுழைந்தாள்.

அப்போதுதான் தன் பக்கத்தில் தேநீர் இருப்பதை ராமு உணர்ந்து அதை எடுத்து மடக்கென்று குடித்தவன், உடைகளை மாற்றிக் கொண்டு, "வாங்க முனுசாமி ஒரு முறை தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வருவோம்" என்று முனுசாமியை அழைத்தான்.

தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்த இருவரும் இடையிடையே சந்தித்த தொழிலாளர்களையும் கண்டு பேசினார் கள். வீட்டிற்குத் திரும்பும்போது இரவு மணி ஏழாகிவிட்டது. வந்த வேகத்தில் கை கால்களைக் கழுவிக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள்.

தெய்வானை சாப்பாட்டைத் தயாராக வைத்திருந்தாள். முனுசாமி யையும் ராமுவையும், பிள்ளைகளையும் ஒன்றாக அமர வைத்து சாப்பாட்டைப் பரிமாறினாள் தெய்வானை.

சாப்பிட்டு முடிந்தவுடன் முனுசாமியும் ராமுவும் திண்ணையில் பாய் போட்டு அமர்ந்து கொண்டனர். பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்ற சிந்தனையிலிருந்து ராமுவினை முந்திக்கொண்டு முனுசாமியே பேச்சை ஆரம்பித்தான்.

"உங்க கடிதம் கிடைத்தது. விஷயம் உங்களுக்கு சாதகமாத் தான் இருக்கு" என்றதைக் கேட்ட ராமுவுக்கு ஆரம்பமே பால் பழம் சாப்பிட்டது போலிருந்தது. மேலும் விஷயத்தை அறியும் ஆவலில் "ம்... சொல்லுங்க" என்றான்.

"நீங்க எப்படி வசந்திய கண்டு மயங்கினீங்களோ அதேபோல வசந்தியும் நீங்கவந்த நாள் முதலா உங்க ஏக்கத்திலேயே இருந்திச்சி. இதைத் தெரிந்துகொண்ட நான் எப்படியும் உதவி செய்வேனென்று உறுதிமொழி எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தேன். வீட்டுக்கு வந்த பிறகுதான் இதுபற்றி நீங்களும் கடிதம் அனுப்பியிருக்கிறதப் பார்த்து, நீங்க ரெண்டு பேரும் எவ்வளவு ஆழமா நேசிக்கிறீங்க என்பதை உணர்ந்து கொண்டேன். மறுநாள் நான் வேலைக்குப் போகாம வசந்திய போய்ச் சந்திச்சேன். அவக்கிட்ட நீங்க அனுப்பிய கடிதத் தையும் கொடுத்தேன். கடிதத்தை வாசித்தவள் மகிழ்ச்சியால் என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறிவிட்டாள். ஆனா உங்களப் பார்க் கிறதுக்கு முன்னால இருந்த சந்தோஷமெல்லாம், உங்க கடிதத்தப் பார்த்தபிறகு ஒரேய்டியாப் பறந்து போச்சு. வசந்தி ரொம்பவும் பயந்து போனவளா இருந்தா. ஏன்னு கேட்டதற்கு, என் காதல் நிறைவேற என் குடும்பத்தினர் சம்மதிக்கணுமே. இதை எப்படி நான் வீட்டில் சொல்வேன் என்ற தடுமாறிவிட்டாள். அதோட வீட்டுக்குப் போய் பேச வேண்டிய பொறுப்பையும் நானே எடுத்துக்கொண்டேன். உங்கள் முடிவை தெரிந்துதான் அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டும்" என்றவர், "அதோட, இன்னொரு முக்கிய விஷயம்" என்று சொல்ல வந்த முனுசாமி விசயத்தைக் சொல்லாமல் ராமுவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

"எதுவானாலும் சொல்லுங்க சார். நான் எதையும் தாங்கும் இதயம் படைத்தவன். தைரியமாகச் சொல்லுங்க" என்று உற்சாகப் படுத்தினான் ராமு.

"அப்படி சீரியஷான விஷயம் ஒன்றுமில்ல. நீங்கள் வசந்தியைத் திருமணம் செய்ய உங்கள் குடும்பத்தினர் சம்மதிப்பாங்களா என்று தெரிந்து கொள்ளணுங்கிறதுக்காகத்தான் கேட்டேன்."

"சார் நீங்க சொல்றது எனக்குப் புரியுது. என்னைப் பொறுத்த வரை நான் சாதி, சமயங்களுக்கப்பாற்பட்ட ஒருத்தன். சமூகத்தில் எப்படி நாம் மனித ஒற்றுமைகளைப் பற்றி பேசுகிறோமோ அதையே என் சுயவாழ்விலும் கடைப்பிடிப்பவன். எங்க குடும்பத்தில என்னோட முடிவை எதிர்ப்பவங்க யாருமே இல்ல. ஏன்னா நான் எந்த முடிவெடுத் தாலும், அது நியாயமானதாகத்தான் இருக்கும். அப்படின்னு அவங்க நல்லா புரிஞ்சிகிட்டிருக்காங்க. அதனால வீட்டப்பத்தி நீங்க கொஞ்சமும் கவலைப்பட வேண்டியதில்லை."

"இல்ல ராமு சார் நான் இதப்பற்றி சொன்னதற்காக நீங்க தவறாக நினைககக கூடாது. ஏன்னா நாளைக்கு பெண் வீட்டுக்காரங்க என்னிடம் இந்த மாதிரியான கேள்விகளைக் கேட்டா அந்த நேரம் நான் பதில் சொல்ல தயாரா இருக்கனுமில்ல."

"உண்மைதான் சார்."

"அதோட, பெண் வீட்டாரப்பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம். தாயில்லாத பெண். தந்தையும் சகோதரர்களும் மாத்திரம்தான் துணை. மற்றது சீர்வரிசையைப் பற்றி பிறகு பேசிக் கொள்ளலாம் தானே."

"சார் நான் வசந்தியத்தான் நேசிச்சேனே தவிர அவளோட சீர்வரிசய இல்ல. எனக்கு வசந்தியப் பிடிச்சிருக்கு. வசந்திக்கு என்னப் பிடிச் சிருந்தா அதுவே எனக்குப் போதும். மற்றபடி சீர்வரிசை எனக்கு துளிகூட வேண்டியதில்ல. வசந்திய என் சொந்த உழைப்பால் காப்பாத்தக்கூடிய தைரியம் எனக்கு இருக்கு."

"தம்பி நாம எத்தனைதான் சொன்னாலும், பெண்ணை வளர்த்த வங்க தன்னோட பொண்ணுக்குச் செய்ய வேண்டிய சீர்வரிசைய செய்யாமப் போயிடவா போறாங்க. அதோடு ஒரு முக்கியமான செய்தி. நம்ம வசந்திய நாளை முதல் வேறொரு கிளைக்கு மாற்றப் போறதா சொன்னா. அதனால வேலையைக்கூட விட்டுடப் போறதா சொன்னா. நான்தான் அவசரப்படாம கடமைய செய். உன்னோட எண்ணத்த எப்படியும் நிறைவேற்றி வைக்கிறேன்னு அவட மனச தணியவச்சிட்டு வந்தேன்."

"ஏன் இந்த திடீர் மாற்றம்? அப்போ நாளை என்னால் வசந்திய சந்திக்க முடியாமல் போய்விடுமோ?" என்று சோர்ந்துவிட்டான் ராமு.

"கவலைப்படாதீர்கள் சார். நீங்கள்தான் ஒரு மாதம் தங்கியிருக்கப் போகிறீர்கள். எப்படியும் வசந்திய சந்திச்சுப் பேசும் சந்தர்ப்பம் கிட்டும் தானே."

வசந்தி இல்லாததும் ஒரு விதத்தில் நல்லதுதான். ஏனென்றால் தூரத்தில் இருப்பதால் அன்பும் பாசமும் அதிகமாக வளரும் என்பார்கள். அத்தோடு, இப்போது நான் எடுத்திருக்கும் பொறுப்புகளை நல்ல முறையில் செய்து முடிக்க வசந்தி அருகில் இல்லாததும் நல்லதுதான். அவள் இருந்தால் என் கவனம் எல்லாம் அவள் மேல்தான் இருக்கும். அதனால், அவள் வேறு இடத்தில் இருந்து வேலை செய்வது நல்லது தான். இப்படி அவனால் இலகுவில் நினைக்க முடிந்தாலும், வசந்தியின் பிரிவின் ஏக்கம் அவன்முகத்தில் பிரதிபலித்தது.

"சரி சார் கவலையை விட்டுட்டுத் தூங்குங்க. காலையில் பேசிக் கொள்ளவோம்" என்று படுக்கையைக் காட்டினான் முனுசாமி.

திண்ணையில் பாய் விரித்து, அதன் மேல் தலையணை ஒன்றும் போர்த்திக் கொள்ள துப்பட்டியும் எடுத்து வைத்திருந்தாள் தெய்வானை.

படுக்கையில் படுத்த ராமுவுக்குத் தூக்கமே வரவில்லை. அடுத்து என்ன செய்வது என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

இத்தனை வருடம் இல்லாத காதல் இப்போது எப்படி வெளிப்பட்டது. பெரியவர்கள் சொல்வார்கள். முற்பிறப்பில் அன்பான கணவன் - மனைவியாக வாழ்ந்தவர்கள், மீண்டும் ஒரு தரம் பிறப்ப துண்டு. அவர்கள் பிறப்பது வெவ்வேறு இடமாக இருந்தாலும் ஒன்றாக இணையும் வாய்ப்புண்டு என்று. ஒரு வேளை இந்த வசந்தி முற்பிறப்பில் என் மனைவியாக வாழ்ந்திருப்பாளோ?

இப்படியே காதல் நினைவுகளில் தன்னை மறந்திருந்த ராமு அந்த மயக்கத்திலேயே உறங்கிப் போனான்.

# 14

கனவு இது எந்தவொரு மனித ஜீவராசிகளையும் விட்டு வைப்ப தில்லை. இக்கனவு என்ற ஒரு சொல் உலக மக்கள் அனைவருக்கும் உரித்தானதொன்றாக இருந்தாலும், அது எல்லோரினதும் நம்பிக்கைக் குரிய தொன்றாக இதுவரை அமைந்து விடவில்லை. குறிப்பாக மேலத்தேய நாடுகளில் உள்ள மக்கள் இந்தக் கனவு என்ற சொல்லுக்கு அதிக கவனமோ, நம்பிக்கையோ செலுத்துவதில்லை. அங்கு மட்டு மல்ல, எமது நாட்டிலும் இந்தக் கனவு என்ற சொல்லை ஒருசிலர் கருத்திற் கொள்வதில்லை. அதில் உள்ள யதார்த்தங்களின் தன்மை களை அவர்கள் புரிந்து கொள்வது மில்லை. புரிந்து கொள்ள முயல்வது மில்லை. இது ஒரு சிலரின் கொள்கையைப் பொறுத்தது.

இன்றைய விஞ்ஞான வேகத்தில் உலகில் பலவித மாற்றங்கள் உருவாகிக் கெ்ாண்டிருந்தாலும் எதிர்கால விளைவுகள் பற்றி உறுதி யாக யாராலும் கூறிவிட முடியாது. ஆனால் நாளை நடக்கும் நன்மை தீமைகளை ஒருவருக்கு விபரிக்கும் தன்மை இந்தக் கனவு என்ற ஒரு சொல்லுக்குள் அடங்கியிருக்கிறது. இதில் ஒருவரின் கனவின் தன்மையைப் பொறுத்திருக்கும்.

இந்தக் கனவு என்ற ஒரு சொல்லுக்குள் அடங்கியிருக்கும் யதார்த்த உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்கள் தமிழர்கள்தான். இதனால் அன்று முதல் இன்று வரை அவர்கள் கனவு என்ற சொல்லுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளார்கள். வருகின்றனர். நாளை நடக்கப்போகும் செயல்கள் நன்மையா, தீமையா என்பதை இந்தக் கனவின் மூலம் அறிந்து கொள்ளும் திறமை நமது தமிழ் மக்களுக்கே உண்டு. தமிழர்களின் பண்பாட்டைப் பொறுத்தவரை அவர்கள் தாங்கள் காணும் கனவிற்கமையவே தங்களின் செயல் திட்டங்களையும் மாற்றிக் கொள்வார்கள்.

இப்படி உலகத் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரியதொன்றான கனவு உலகம், ராமுவையும் விட்டு வைக்கவில்லை.

முனுசாமியும், ராமுவும் சமுத்திரவல்லித் தோட்டத்தில் பஸ்சை விட்டிறங்கி நேராக வசந்தியின் வீட்டை நோக்கிப் போனார்கள். அவர்கள் போன போது வசந்தி அங்கு இருக்கவில்லை. அவளின் சகோதரர்கள் முனுசாமியைக் கண்டதும் "வாங்க ஐயா" என்று வரவேற்றார்கள்.

வீட்டுக்குள் நுழைந்த இருவரையும் அமரச் செய்துவிட்டு ராமுவைப் பார்த்து இவர் யார் என்று கேட்பது போல முனுசாமியைப் பார்த்தார்கள்.

"இவர் பெயர் ராமு. நம்ம சங்கத்தின் உதவி காரியதரிசியாகக் கடமையாற்றுகிறார். தேர்தல் வேலைகளைக் கவனிக்க வந்திருக் கிறார்," என்று அறிமுகப்படுத்தி வைத்தார்.

எல்லோரும் தேநீரை அருந்திக் கொண்டிருந்தனர். ஜெகதீஸ் பேச்சை ஆரம்பித்தான். "என்ன விசயமா இந்த நேரத்தில வந்திருக் கிறீங்க"

அப்போது வெளியில் சென்றிருந்த வசந்தியின் தந்தை ஞானம் வீட்டிற்குள் நுழைந்து கொண்டே வந்திருப்பவர்களைப் பார்த்து வணக்கம் தெரிவித்துக் கொண்டார். வந்தவர்களுடன் தானும் அமர்ந்து கொண்டார். ஜகதீசின் மனைவி அவருக்கும் ஒரு தேநீரைக் கொண்டு வந்து வைத்தாள். தேநீரை அருந்திக் கொண்டே, ராமுவைப் பார்த்தவர், "இவர் யார்" என்று முனுசாமியைப் பார்த்துக் கேட்டார்.

முனுசாமி எழுந்து ராமுவை அறிமுகப்படுத்தி வைக்கும்போதே ஞானத்தின் முகத்தில் கோபத்தின் சின்னங்கள் வெளிபடத் தொடங்கின. இருக்கையை விட்டு எழுந்தவர், "ஓகோ என் மக வசந்தியை விரும் புறதா சொன்ன ராமு இவர்தானா?" என்று ஆத்திரத்துடன் கேட்கவே, ராமு எழுந்து 'ஆமா, நான்தான்' என்று பதில் சொல்வதற்குள், முனுசாமி அவனின் கையை அமர்த்தி, "கோபப்படாதீங்க கொஞ்சம் நிதானமா பேசலாம்" என்று சமாதானப் படுத்தும் தோரணையில் கூறவே,

"என்னய்யா நிதானம் வேண்டிக் கிடக்கு. எம் புள்ளைய வேலைக்கு அனுப்புரோமா இல்ல இவர்கிட்ட சரசமாட அனுப்புரோமா" என்று சத்தம் போட்டு கத்திவிட்டார். மகன்மார்கள் எவ்வளவு கட்டுப்படுத் தியும் அவர் கட்டுப்படுவதாயில்லை. "இப்ப என்ன விசயமா இங்க வந்திருக்கிறீங்க" என்று கேட்டார்.

"அப்பா கொஞ்சம் அமைதியா இருங்க. ஏன் இப்படி ஆத்திரப் படுறீங்க. அவங்க வந்த விசயத்தை சொல்லும் முன்பே ஏன் இப்படி சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்யிறீங்க" என்று அவரை அமைதிப் படுத்த முனைந்தார்கள். ஆனால் அவர் விடுவதாயில்லை.

"இவனுக ரெண்டு பேரும் எதுக்காக வந்திருப்பாங்க. உங்க மகள கல்யாணம் செய்து தரப் போறீங்களான்னு கேட்கத்தான் வந்திருப்பாங்க" என்றவர், "யாராலும் இந்த வீட்டுல பெண் கேட்டு வந்தீங்க. அப்புறம் நான் பொல்லாதவனா மாறிடுவேன். அப்புறம் என் மேல் குறை சொல்லக்கூடாது ஆமா" என்று உள்ளே நுழைய முற்பட்டவரை,

"அய்யோ அப்பா அவர்கள் வந்த விசயத்த கேட்கும் முன்பே ஏன் தேவையில்லாத ஆர்ப்பாட்டமெல்லாம் செய்யிறீங்க."

"சரி, கேட்டுக்க அவங்க இங்க எதுக்காக வந்திருந்தாலும் சரி, ஆனா ஏ பொண்ணு பேச்ச மட்டும் அவங்க இங்க பேசாமயிருந்தா எனக்குப் போதும் ஆமா."

"சார் நம்ம வந்த நேரம் சரியில்ல போலிருக்கு. வாங்க போயிடுவோம். பொண்ணும் வேணாம், மண்ணாங் கட்டியும் வேணாம்" என்று முனுசாமியின் காதில் முனுமுனுக்கத் தொடங்கினான் ராமு.

"அவசரப் படாதீங்க ராமு. இத்தனை நடந்த பிறகும் நாம வந்த விசயத்த சொல்லிட்டுத்தான் போகணும்" என்று ராமுவைச் சமாதனப் படுத்தினார் முனுசாமி. அது மட்டுமல்ல, அமைதியாக அமர்ந்திருந்த ஞானத்தைப் பார்த்து, "ஐயா பெரியவரே நாங்க எதைப்பற்றிப் பேச வந்திருக்கோமுன்னு நீங்களே தெரிஞ்சிகிட்டதுக்கு நன்றி. இவர் மிகவும் நல்லவர். உங்கள் பொண்ணும் எந்தவிதமான கஷ்டங்களும் இல்லாம வாழலாம். அதோட, ரெண்டு பேரும் ஒருவரையோருவர் மனதார நேசிக்கிறாங்க" என்று மிகவும் அமைதியாக எடுத்துச் சொல்ல,

"இந்தக் கதையெல்லாம் வேண்டாம். உடனடியாக இடத்தை காலி பண்ணுங்க. உங்களுக்கெல்லாம் ஒரு பொண்ணு கேடா."

அப்போது வீட்டுக்குள் நுழைந்த வசந்தி, அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து வணக்கம் கூறிக்கொண்டாள். அவளை முறைத்துப் பார்த்த ஞானம், "ஏம்மா வசந்தி இதற்குத்தான் ஒன்ன கஷ்டப்பட்டுப் படிக்க வைச்சேனா. இவர்தான் ஒனக்கு கிடைச்ச மாப்பிளையா?" என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டு விட்டார்.

"வந்துப்பா" என்று ஏதோ சொல்ல முற்பட்ட வசந்தியை அண்ணன் மார்கள் கையமர்த்தினர்.

"இந்தாம்மா நான் உன்ன பெத்த அப்பன் கேட்கிறேன். நீ இவரை விரும்பினது உண்டா இல்லையான்னு எனக்குப் பதில் சொல்லு" என்று எழுந்துவிட்டார்.

இதுவரை வீட்டில் என்ன நடந்தது என்பதைப் புரியாத வசந்தி, அமர்ந்த அனைவரையும் ஒருமுறை சுற்றிப் பார்த்தாள். எல்லோர் முகத்திலும் கடுகடுப்பு இருப்பது தெரிந்தது. ஒருவரையொருவர் பயமுறுத்துகிற மாதிரி நின்று கொண்டிருந்தார்கள். இறுதியாகத்

தந்தையின் முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு பயத்தோடு ராமுவைப் பார்க்காமலேயே "நான் இவர விரும்பல". என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் ஓடிவிட்டாள்.

இதைக் கேட்ட ராமு அதிர்ந்தே போய் விட்டார். முனுசாமியை இறுக்கிப் பிடித்துக் கொண்டவன், "வாங்க முனுசாமி சார் போய் விடுவோம். இனி நமக்கு இங்க என்ன வேலை என்று புறப்பட்டு விட்டான்."

முனுசாமியும் அதிர்ந்தே போய் விட்டார். தன்னிடம் நேரில் கூறிய வசந்தியா இப்போது திடீரென்று மாறி விட்டாள் என்று சிந்தனை யோடு எழுந்தான்.

அப்போது வசந்தியின் தந்தை ஞானம், "எப்படி நான் சொன்னது சரிதானே. எம் பொண்ணு ஒன்றும் தரம் கெட்டவளில்லை" என்று வசந்தியின் சகோதரர்களைப் பார்த்து தன் மார்பில் தட்டிக் கொண்டார்.

உள்ளே சென்ற வசந்தி விம்மி விம்மி அழுவது ராமுவின் செவிக்குள் விழவே. ராமு 'வசந்தி' என்று கத்தி விட்டான்.

இந்த சத்தத்தைக் கேட்டு ராமுவின் பக்கத்தில் படுத்திருந்த முனுசாமி சுருட்டிக்கொண்டு எழுந்தவன். ராமுவைப் பார்த்தான். ராமு ஏதேதோ முனங்கிக் கொண்டிருந்தான். அருகில் சென்ற முனுசாமி "ராமு சார் ராமு சார் என்ன ஏதாவது பயங்கரக் கனவு கண்டீங்களா" என்று அவனை மெதுவாக எழுப்பினான். அப்போது ராமு கண்களை மெதுவாகக் கசக்கியவாறே எழுந்து அமர்ந்து கொண்டான். அப்போதுதான் இதுவரை கண்டது வெறும் கனவு என்று அவனுக்குப் புரிந்தது.

ராமுவின் முகத்தில் பயம் குடி கொண்டிருப்பதை உணர்ந்து கொண்ட முனுசாமி "என்ன சார் என்ன நடந்தது" என்று அவனைத் தூண்டினார்.

"இல்ல சார்" என்று சமாளிக்க முற்பட்டவனை,

"இல்ல நீங்க ஏதோ ஒரு கனவு கண்டிருக்கிறீங்க, நீங்க வசந்தின்னு கத்துறப்போவே நான் புரிஞ்சிக்கிட்ட, அந்தக் கனவு வசந்தியப் பத்தியதாத்தான் இருக்குமின்னு. என்னா சொல்றது சரிதானா" என்று அவனின் முகத்தைப் பார்த்துக் கேட்டார் முனுசாமி.

"ஆமா சார் கனவுதான்" என்று தான் கண்ட கனவினை விபரித் தான் ராமு.

இதைக் கேட்ட முனுசாமி, "சார் உங்கள் காதல் இந்த அளவிற்கு வேரோடியிருக்குமுன்னு நான் நினைக்கவே இல்ல. நேற்று மாலை பேசிக் கொண்டதை நினைத்துக் கொண்டே தூங்கியிருப்பீங்க. அதான் இப்படியான கனவுகள் வந்திருக்கு" என்றான்.

"இது கனவாகவே இருக்கட்டும். நிஜமாகிவிடக்கூடாது" என்ற ராமுவை,

"கவலைப்படாதீங்க சார். நீங்க நினைக்கிற மாதிரி எல்லாம் நடக்காது. கனவுல உங்க காதலுக்கு முட்டுக்கட்ட ஏற்பட்டிச்சின்னா அது நனவுல நல்லபடியா முடியுங்கிற அறிகுறிதான். அதனால் கவலைப்படாம தைரியமாப்படுத்துத் தூங்குங்க. எல்லாம் நல்ல படியா நடக்கும்" என்று அவனை படுக்க வைத்தான் முனுசாமி.

படுக்கையில் சரிந்த ராமு தான் கண்ட கனவை மீண்டும் எண்ணியபோது வெட்கப்பட்டான். உண்மையிலேயே வசந்தி என்ன புறக்கணிச்சிருந்தா அப்பப்பா அத மட்டும் என்னால தாங்கிக்கவே முடியாது என்று எண்ணியவன், சிறிது மனவேதனை அடைந்தாலும் முனுசாமியின் தைரியம் அவனின் இதயத்திற்கு சிறிது இதமாக இருந்தது. அந்த இதமான சுகத்தில் ராமு மீண்டும் நித்திரையில் ஆழ்ந்து போனான்.

# 15

தேர்தல் வேலைகளைக் கவனிப்பதற்காக வந்த ராமு தன் எதிர் காலம் குறித்துப் பேசுவதற்காக அன்று முனுசாமி வீட்டில் தங்கினான். மறுநாள் காலையில் தேநீர் சாப்பிட்டுவிட்டு இரண்டு பேரும் புறப்பட்டு காரியாலயத்தை வந்தடைந்தார்கள். வாசற்படியில் காலடி எடுத்து வைத்த ராமு அப்படியே அதிர்ந்து போய்விட்டான். யாரைக் காண முடியாது என்று நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தானோ அவளே வந்து அவன் எதிரே நின்றாள். அதுதான் வசந்தி. இது எங்கே வசந்தியை காண முடியாதோ என ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த ராமுவுக்கு அதிர்ச்சியையும், மகிழ்ச்சி யையும் கொடுத்தது. தான் நேற்று இரவு கண்ட கனவிற்கும் இன்று நடக்கும் சந்திப்பிற்கும் தொடர்பில்லாமல் போய்விட்டது. ராமுவின் இதயத்திற்கு அளவில்லா மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அதேசமயம் செயலாளர் அறைக்குள்ளிருந்து வெளியே வந்த வசந்திக்கு ராமுவின் உருவம் தெரிந்ததும் மனதிற்கு இதத்தையும் வேதனையைம் கொடுத்தது. குனிந்த தலையுடன் ராமுவின் அருகில் வந்தவள் எனக்கு இடமாற்றம் செய்து விட்டார்கள் என்று சொல்லும்போது அவளின் கண்களிலிருந்து கண்ணீர்த்துளி நிலத்தை வந்து தொட்டன.

வசந்தியை நிமிர்ந்து பார்த்த ராமுவிற்கு மனதில் இடி இடித்தது போலிருந்தது.

"அதற்கெல்லாம் கவலைப்படாதீங்கம்மா. சார்தான் ஒரு மாதம் இங்கே தங்கி வேலை செய்யப்போறாரே. அந்தப் பகுதிக்கும் வேலைக்கு வருவோம். அப்போ சந்திக்கலாம். இதைவிட முக்கியமா இந்த சந்தர்ப்பத்திலே உங்க வீட்டிலேயும் உங்க விசயத்தைப் பத்தி பேசி விடலாம் என்று நினைச்சிருக்கோம்" என்றார் முனுசாமி.

"வசந்தி நீங்க கவலைப்படாதீங்க. நிச்சயமா நான் உங்களை அடிக்கடி சந்திப்பேன்" என்றான் ராமு.

முதன் முதலாக ராமு தன்னிடம் பேசிய வார்த்தைகள் வசந்தியின் மனதிற்குச் சிறிதளவு நிம்மதியைக் கொடுத்தது. ராமுவை நிமிர்ந்து பார்த்து புன்னகையொன்றை உதிர்த்துவிட்டு சக ஊழியர் களிடம் விடை பெறுவதற்குச் சென்றாள் வசந்தி.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ராமுவிற்கு மீண்டும் அவளிடம் ஒரு வார்த்தை பேச வேண்டும்போல் இருந்தது.

வசந்தி காரியாலயத்தை விட்டு வெளியேறும் போது மீண்டும் ராமுவைப் பார்த்து புன்னகையொன்றை உதிர்த்துவிட்டு படியிறங் கினாள். அவள் கூடவே சென்ற முனுசாமி, "நீங்க போங்கம்மா நான் மற்ற ஏற்பாடுகளை செய்து கொள்கிறேன்" என்றார்.

"சார் அவருக்கு முதல்ல என்ன பிடிச்சிருக்கான்னு கேட்டீங்களா, என்ன சொன்னார்?" என்று கேட்டாள்.

"கரும்பு தின்ன கூலியா கேட்பான். உங்க நிலைமையில்தான் அவனும் இருக்கான். உடனடியா பேசி முடிவு செய்ய வேண்டியது தான் பாக்கி" என்றான் முனுசாமி.

"அப்போ சரி நான் வாரேன்" என்று விடைபெற்றவள் ராமுவை ஓரக்கண்ணால் பார்த்து அவனிடமும் விடைபெற்றுக் கொண்டாள்.

முனுசாமி காரியாலய வேலைகளைக் கவனிப்பதில் ஈடுபட முனைந்தான். ராமு செயலாளரின் அறைக்குள் சென்று தனது வணக் கத்தைத் தெரிவித்துக் கொண்டாள். அவனைக் கண்ட செயலாளர் ஆரோக்கியம், குறிப்பிட்ட நாளில் பொறுப்பை ஏற்க வந்ததில் அவர் மகிழ்ச்சியடைந்தார். தேர்தல் வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தைத் தெரிவித்துக் கொண்டு அன்றே தனது கடமையை ஆரம்பிக்கத் தயாரானான் ராமு.

அன்று மாலை மாவட்டக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் தலைவர் கலந்துகொண்டு தேர்தலில் நாம் போட்டியிடுகிறோம் என்பதற்கான விள்க்கத்தைக் கொடுத்தார்.

வேலைகளை எப்படி எங்கிருந்து ஆரம்பிக்கப் போகின்றோம் என்பதற்கெல்லாம் தெளிவாக விளக்கம் கொடுக்கப்பட்டது. அதன்படி செயல்பட்டு நமது வேட்பாளர் வெற்றி பெறுவதற்கு உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

தலைவர் வெள்ளைச்சாமி இந்த மாவட்டத்தில் பிறந்தவர். கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார, அரசியல் மேம்பாட்டிற்காக அயராமல் நிமிர்ந்து தொழிலாளர்களுக்குச் சேவை செய்ததை புனிதமான கடமையாக ஏற்று இரவு பகல் பாராது பாடுபடுபவர். இவரைத் தெரியாதவர்கள் இந்த மலை நாட்டிலே இருக்க முடியாது. அந்த அளவிற்கு பிரசித்திப் பெற்றவர். இவரின் சேவைக்கு பிரசாரம் செய்யாமலேயே வெற்றி பெறும் வாய்ப்புண்டு.

தேர்தல் என்றாலே பொய்யும், புரட்டும் ஏமாற்றுத் தனங்களும் தலைவிரித்தாடும். இதில் திறமையெல்லாம் செல்லுபடியற்றதாகி விடும். அந்தக் காலக் கட்டத்தில் யார் வேசம் போட்டு நாடகம் நடிக்கிறார்களோ அவனுக்குத்தான் செல்வாக்கு அதிகம். அதிகாரமும் பணமும் எங்கிருக்கிறதோ அங்கேதான் அதன் வெற்றியும் போய் சேரும்.

ஆனால் இங்கு உண்மைக்கும், பொய்மைக்கும் இடையில் போராட்டம் நடக்கிறது. இதில் தொழிலாளர்களின் பலம் இத் தேர்தலின் வெற்றிக்கு உந்து சக்தியாக அமையும் என்பது நிச்சயம். ஒரு மாத தேர்தல் பிரசாரங்கள் முடிவுற்றது.

மறுநாள் வாக்குச் சாவடியை நோக்கி வாக்காளர்கள் எறும்பு போல அணிவகுத்தனர். அங்கு அமைதி நிலவியது. யாருக்கு யார் வாக்கு போடுவது என்பதுகூட தெரியாதவர்களாக இருப்பதால் தொழிற் சங்கத்தையே தொழிலாளர்கள் ஏமாற்ற முனைகின்றார்கள்.

தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டது. எமது வேட்பாளர் கடுமையான போராட்டத்தின் பின்பு தெரிவு செய்யப்பட்டிருந்தார். இது தொழிலாளர்களின் வெற்றி என்பதை தலைவர் உணர்ந்து உடனடியாக தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மாலையில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டு தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். தலைவர் நன்றி தெரிவிக்க மேடைக்குச் சென்ற போது, 'வாழ்க தலைவர்' என்று தொழிலாளர்கள் எழுப்பிய கோசம் எதிரொலித்தது. தலைவர் வெள்ளைச்சாமி பேச ஆரம்பித்தார்:

"இங்கே கூடியிருக்கும் சகோதர, சகோதரிகளே, பாட்டாளி தோழர்களே, உங்கள் அனைவருக்கும் முதற் கண் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முதலில் என்னைப் பற்றி சொல்வதைவிட இந்த தேர்தலில் எனது வெற்றிக்காக உழைத்த உங்கள்

அனைவருக்கும் குறிப்பாக எனது வெற்றிக்காக இரவு, பகல் என்று பாராது உழைத்த ராமு அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று எனக்கு கிடைத்துள்ள இந்த வெற்றி உங்களாலும் ராமுவாலும் கிடைத்த வெற்றியாகவே நான் கருதுகிறேன். எனது வெற்றிக்காக தன் உயிரைக்கூட தியாகம் செய்யத் துணிந்த ராமுவின் வீரச் செயலுக்கு தலை வணங்குகிறேன். இவ்வளவு நாட்களாக தேர்தல் வேலைகளுக்காக அரும்பாடுபட்ட ராமு, இன்று எனக்குக் கிடைத்துள்ள வெற்றியினை எம்மோடு அனுபவிக்க முடியாமல் இரண்டு நாட்களுக்கு முன்பாக கருங்காலிகள் நடத்திய தாக்குதலில் - பாதிக்கப்பட்டு இன்று மருத்துவமனையில் இருக்கிறார். அவரின் சேவைக்கும் உழைப்புக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேசமயம், தொழிற்சங்க வரலாற்றிலே பிரதிநிதியாக பாராளு மன்றம் செல்வதை எண்ணி பெருமை கொள்கிறேன். எமது மக்களின் அடிப்படை பிரச்சனைகளுக்கு குரல் கொடுத்து தீர்வு காண்பதற்கு நான் பட்டம் பதவிக்கு அப்பால் சென்று செயல்படுவேன். நான் பாராளு மன்றத்தில் தொழிற்சங்கப் பிரதிநிதியாக மாத்திரமல்ல, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமையை வென்றெடுக்கச் செயல்படுவேன். நாட்டில் ஐக்கியம், சமாதானம், சகோதரத்துவம் என்ற கோட்பாடு களுக்கமைய எனது சேவையைத் தொடங்கி எமது மக்களின் உரிமை களை வென்றெடுப்பேன்" என்று தனது பேச்சை முடித்துக்கொண்டு அமர்ந்தார்.

அங்கு கூடியிருந்த தொழிலாளர்கள் 'தலைவர் வாழ்க, கருங்காலி கூட்டம் ஒழிக' எனக் கோஷம் போட்ட வண்ணமிருந்தனர்.

கூட்டத்தை முடித்துக்கொன்டு நேரடியாக மருத்துவமனைக் குச் சென்ற தலைவர் வெள்ளைச்சாமி, ராமுவைக் கண்டு ஆறுதல் சொன்னார்.

"உங்கள் வெற்றி என் துன்பத்தைப் போக்கிவிட்டது. இன்னும் இரண்டொரு நாளில் வெளியேறி செயல்படுவேன்" என்று உறுதியாகச் சொன்னான் ராமு.

ராமுவிற்குத் தேவையானவைகளைச் செய்துவிட்டு வெளி யேறிய தலைவர் வெள்ளசாமியை மருத்துவமனை ஊழியர்கள் மாலைசூடி அவரின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டனர். தலைவர் வெள்ளசாமி தமிழர், சிங்களவர் என்ற பேதமற்ற முறையில் தொழிலாளர்களுக்குச் சேவை செய்தவர் என்பதை இந்தத் தொகுதி மக்கள் நன்கறிவர்.

எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்ட தலைவர் நேராக வீட்டிற்குச் சென்றுவிட்டார்.

ராமு தாக்கப்பட்டு மருத்துவமனையில் இருக்கும் செய்தி காட்டுத் தீ போல் மக்களிடையே பரவிவிட்டது. அவரைப் பார்ப்பதற்கு பெருந்திரளான தொழிலாளர்கள் நாள்தோறும் திரண்டு வந்த வண்ண மிருந்தனர்.

அன்று மாலை பல நண்பர்கள் ராமுவைப் பார்க்க மருத்துவ மனைக்கு வந்திருந்தார்கள். அவர்களோடு கலந்துரையாடிக் கொண் டிருந்தவன், தான் மருத்துமனையில் இருப்பதை தனது வீட்டாருக்குச் சொல்ல வேண்டாமெனக் கேட்டுக் கொண்டான். அதோடு, தான் இன்னும் இரண்டொரு நாளில் வீட்டுக்கு வந்துவிடுவேன் என்றும் சொல்லிக் கொண்டான்.

சிறிது நேரத்திற்குப் பின் நண்பர்கள் எல்லோரும் அவனுக்கு சிறிது ஆறுதலைக் கூறிவிட்டுச் சென்றுவிட்டனர்.

# 16

நோயின் கொடுமையில் வீழ்ந்தவனை எத்தனை பேர்தான் ஆறுதல் சொன்னாலும், அது அவன் அன்புடனும் பாசத்துடனும் நேசிக்கும் மனித நேயங்களுக்கு ஒப்பானதாக அமையாது. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் ஏங்குவது பணத்திற்கும் பட்டத்திற்குமல்ல. உண்மை யான அன்பிற்காகவும்தான். ஒருவன் தான் ஆழமாக நேசிக்கும் ஒரு வரின் அன்பையும் ஆறுதலையும் கோடி உள்ளங்களுக்குச் சமமாகவே கருதுகிறான்.

தேர்தல் வேலைகளின் போது போட்டிக் கட்சிக்காரர்களின் தாக்குதலுக்குச் சிக்குண்டு மருத்துமனையில் சிகிச்சை பெற்றும் வரும் ராமுவின் முகத்தில் சோகம் உருவாகியிருப்பதைக் காண முடிந்தது. அந்த சோகத்தில் தான் உள்ளன்போடு நேசிக்கும் இரண்டு ஜீவன்களைக் காணவில்லையே என்ற ஏக்கமும் கலந்திருக்க கவலை யோடு கட்டிலில் புரண்டு படுத்தான் ராமு. உடல் வலியோடு மன வலியும் அவனை இணைத்துக் கொண்டது. நீண்ட நேரம் சிந்தனைப் போராட்டத்தின் மத்தியில், ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் வெளிவராந்தா பக்கம் தன் பார்வையைச் செலுத்தியவன் அதிர்ந்தே போய்விட்டான். உடல் வலியோடு, மனவலியும் அவனை விட்டு மறைந்துவிட்டது.

ஆம்... இதுவரை யாரின் வரவுக்காக ராமு வேதனைப்பட்டுக் கொண்டு காத்திருந்தானோ அதே அன்பான உள்ளங்கள் இரண்டு, அதுதான் வசந்தியும், முனுசாமியும் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

முகத்தில் மகிழ்ச்சி பொங்க வந்தவர்களை வரவேற்க புதிய உற்சாகத்துடன் கட்டிலை விட்டு கீழே இறங்கினான் ராமு.

இப்போது அவனின் உடலில் வேதனை இல்லை. உள்ளத்தில் சோகமில்லை. இதையெல்லாம் தீர்க்கும் மருந்து வசந்தியிடம்தான் இருந்திருந்தது போலும். வசந்தியைக் கண்டவுடன் ராமு முழுமையாக புத்துணர்வு பெற்றுவிட்டான்.

ராமுவின் கட்டிலை நெருங்கிய வசந்தி, தன் கைக் குட்டையால் முகத்தை மூடிக் கொண்டு குமுறிக் குமுறி அழுதாள் வசந்தி.

"ராமு என்ன மன்னிச்சிடுங்க. நீங்க ஆஸ்பத்தியில இருக்கும் விசயம் நேற்றுத்தான் எனக்குத் தெரியும். பத்திரிகை மூலமா விசயத்தை தெரிஞ்சிகிட்டு உங்கள வந்து பார்க்கத் துடிச்சேன். ஆனா நீங்க எங்கே இருக்கிறீங்கங்கிறத யாரும் சொல்ல மறுத்திட்டாங்க" என்று தன்னுடைய இயலாம்மையை நினைத்து மனம் வருந்தினாள் வசந்தி.

"சார் என்ன சார் நீங்களாவது ஒரு தகவல் அனுப்பியிருக்கக் கூடாது" என்று ராமுவின் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டான் முனுசாமி.

"இல்ல முனுசாமி வேரெதுக்காகவும் இல்ல. எல்லாம் பாது காப்புக்காகத்தான். சம்பவம் நடந்த பிறகு தலைவர் என்ன இங்க கொண்டு வந்து சுகம் பார்க்க ஏற்பாடு செய்தார். அதனால தான் தகவல் கொடுப்பத நிறுத்திட்டன் என்றான் ராமு.

"தேர்தல் முடிஞ்சவுடனே எல்லோரும் வெற்றி விழா எடுக்கிறதுல அக்கறை கொண்டாங்க. இதனால உங்களப்பற்றி தெரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. நேற்றுக் காலை எதிர்பாராமல் நம்ம பரமலிங்கம் சார் மூலமா தெரிஞ்சிக்கிட்டப்புறம் தான் உடனடியாக தங்கச்சிக்கிட்ட இந்த விசயத்தை சொன்னேன். தங்கச்சி கலங்கிப் போயிட்டாங்க. உடனடியாக ஆபிசிற்கு வந்து கேட்டப்போ நீங்க வீட்டுக்குப் போயிட்டதா சொன்னாங்க. உடனடியாக வீட்டுக்கு ஒரு கடிதம் போட்டு விட்டு திரும்பி வரும்போது எதிர்பாராமல் நம்ம பழனிய சந்திச்சேன். அவன்தான் விஷயத்த சொன்னான்."

"சரி.. சரி.. நடந்ததவிடுங்க. எல்லாம் சில காரணங்களுக்காகத் தான் இந்த விசயத்த நம்ம வீட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டாமுன்னு சொல்லியிருந்தேன். ஏன்னா அம்மாவுக்கு வயசு போயிடுச்சி. அவங்களாள ஆஸ்பத்திரி வீடுன்னு அலைஞ்சிக் கிட்டிருக்க முடியுமா. அதோட, சாதாரண விசயத்திற்கே அவங்க பதறித் துடிச்சிடுவாங்க. இப்ப நீங்க வேற கடிதம் போட்டிருக்கீங்க. இது வீட்டுல பெரிய பூகம்பத்தையே ஏற்படுத்தப் போகுது. தோட்டமே திரண்டு இங்க வந்து நிற்க போவுது பாருங்க" என்றான் ராமு.

"சரி, எனக்காவது ஒரு கடிதம் போட்டிருக்கலாம் தானே. ஊரே வந்து பார்த்த பிறகு கடைசியாக ஒப்புக்கு நாங்க வந்த மாதிரி ஏற்பட்டுவிட்டது" என்று கண்ணைக் கசக்கினாள் வசந்தி.

"இல்ல வசந்தி. உண்மையிலேயே உனக்கு இந்த விசயம் தெரிஞ்சிருக்குமுன்னுதான் நான் நினைச்சிருந்தேன். அதனாலதான் நீ ஏன் இன்னும் வரவில்லை என்கிற கவலையோட இந்தக் கட்டில்ல படுத்துக் கிடந்தேன். எத்தனை பேர் என்ன வந்து பார்த்தாலும் நீ ஒருத்தி வந்து பார்க்கிற மாதிரி இருக்குமா வசந்தி. உன் வரவை எதிர் பார்த்துத் தான் இத்தனை நாளா வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தேன்" என்று அவளின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் ராமு.

ராமுவின் வார்த்தைகளைக் கேட்டு அவனை நிமிர்ந்து பார்த்த வசந்தியின் கண்களில் கண்ணீர் உடைப்பெடுத்தது. அதை அவளால் மறைக்க முடியவில்லை. இந்த அன்பின் பிணைப்பால் ராமு அதிர்ச்சியடைந்தான். இதயம் குமுற தானும் உணர்ச்சிவசப்பட்டு கண்கள் கலங்கிய நிலையில் கட்டிலில் அமர்ந்துவிட்டான்.

இந்தச் சூழ்நிலையில் அங்கிருப்பது அவ்வளவு உசிதமல்ல என்பதை உணர்ந்த முனுசாமி, மெதுவாக வார்டை விட்டு வெளியேறினான்.

"இல்ல ராமு உங்களுக்கு இத்தனை துன்பம் ஏற்பட்டிருப்பது தெரிந்தால் உடனடியாக வந்திருப்பேன். எனக்கு தகவல் தெரியாமல் போய்விட்டது. நேற்று மாலை முனுசாமி சார் வீட்டுக்கு வந்து விசயத்த சொன்ன உடனே பதறிப் போயிட்டேன். வீட்டிலும் எல்லோரும் கவலைப்பட்டார்கள். உங்களுக்கு ஒன்றுமே வரக் கூடாதுன்னு கடவுளை வேண்டிக்கிட்டேன்.

"வசந்தி, உன் அன்பினால் எனக்கு எந்தவிதமான பாரதூரமான துன்பமும் ஏற்பட்டு விடவில்லை. திடீர் தாக்குதல் என்பதால் காயப் படாமல் அடிகள் விழுந்ததில் உடம்பெல்லாம் இரத்தம் கட்டி போய்விட்டது. அதைவிட பெரிய நோய் நீ வரவில்லையே என்பதுதான். அதனால்தான் இங்க இத்தனை நாளாக ஒரு நோயாளியாகப் படுத் திருந்தேன். உங்களைக் கண்டதும்தான் என் நோயெல்லாம் மறைந்து விட்டது" என்றான் ராமு.

தன்மீது ராமு எந்த அளவிற்கு அன்பு கொண்டுள்ளார் என்பதை மனதில் நினைத்துப் பெருமிதத்தோடு ராமுவை ஏறிட்டுப் பார்த்தாள் வசந்தி.

"வசந்தி நான் ஒன்று கேட்பேன் மறைக்காமல் பதில் சொல்வியா?" என்று வசந்தியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் ராமு.

"ம்.. கேளுங்கள்" என்றாள் வசந்தி.

"நீங்க என்ன உண்மையிலேயே நேசிக்கிறியா?" என்று கேட்டு விட்டு குனிந்து கொண்டான் ராமு.

ராமுவின் இந்தக் கேள்வி வசந்தியை சிறிது தடுமாறத்தான் செய்தது. "ஐயோ ராமு இன்னொரு தரம் இந்த மாதிரியான கேள்வியைக் கேட்காதீர்கள்" என்றாள்.

"வசந்தி நான் கேட்டது தவறாக இருந்தால் என்னை மன்னித்து விடு. நான் உன் மீது கொண்டுள்ள தூய்மையான அன்பின் காரணமாகவே இப்படிக் கேட்டேன்."

"ராமு நீங்க என்மேல் வைத்துள்ள அன்பு எவ்வளவு தூய்மை யானதோ அதே தூய்மையான அன்பையே நான் உங்கள் மேல் செலுத்துகிறேன். இத வெளிப்படையாக நிரூபிச்சிக் காட்டுறதுக்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போயிடுமோன்னுதான் நான் பயப்படுற" என்று தேம்பித் தேம்பி அழுதாள் வசந்தி.

"வசந்தி அழாத. கொஞ்சம் பொறு. என்னப் பொறுத்த வரைக்கும் நாம ஒன்று சேர்ந்து வாழுற காலம் மிச்சந் தூரமில்ல. அது நம்ம நெருங்கிக்கிட்டுத்தான் இருக்கு. வசந்தி நீ இல்லாத வாழ்க்கை எனக்கு இனிமே இல்லன்னுதான் நான் வாழுறன்."

இப்படிக் கூறிய ராமுவை நிமிர்ந்து பார்த்தாள் வசந்தி. இரு வரும் என்ன பேசுவதென்றே தெரியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இந்த மௌனத்தைக் கலைத்தவள் வசந்தி தான். வசந்தி கட்டிலில் அமர்ந்திருந்த ராமுவின் கைகளைப் பற்றி "அத்தான்" என்று அழைத்தாள்.

வசந்தியின் மென்மையான கரம் தன் மேல் பட்ட கிளர்ச்சி ராமுவை மெய்மறக்கச் செய்து விட்டது.

ஆகா வசந்தி எத்தகைய அன்பை தன் மேல் கொண்டிருக்கிறாள். என் வாழ்வில் நான் செய்த பாக்கியம்தான் இத்தனை ஆண்டுகள் கழித்து எனக்குப் புதிய வழியை இறைவன் ஏற்படுத்தியிருக்கிறான். இல்லறத்தையே மறந்திருந்த என்ன தட்டி உசுப்பி விட்டவள் இவள் தானே, இவளைச் சந்தித்த பின்பு நான் பட்டபாடு எத்தனை எத்தனை. அப்பப்பா காதல் வியாதி பொல்லாதது என்று சொன்னவர்கள் அனுபவத்தில்தான் சொல்லி வைத்தார்கள். இப்படி சிந்தனையில் இருந்த ராமு, அத்தான் என்ற வசந்தி மீண்டும் அழைத்த போதுதான் தன்னிலை உணர்ந்தான். "வசந்தி உன் அன்பு கிடைக்க நான் என்ன தவம் செய்தனோ தெரியவில்லை. இனி நீதான் என் வாழ்விற்கு ஒளிவிளக்கு" என்றான்.

"அத்தான் நான் கொடுத்து வைத்தவள். கள்ளமில்லா என் இதய வீணையை மீட்டின உங்களை அடைந்து வாழ நாளெல்லாம் பணி புரிய தவம் கிடக்கிறேன்" என்றாள் வசந்தி.

"வசந்தி உன்னை இதுவரை ஒரு சாதாரணப் பெண் என்றுதான் நான் நினைத்திருந்தேன். ஆனால் நீ அறிவும், ஆற்றலும் நிறைந்த பெண் என்பதை இப்போதுதான் புரிந்துகொண்டேன். உண்மையாகவே வசந்தி என் இருண்ட வாழ்க்கையில் ஒளியேற்றிய தீபம் நீதான். வாழ்க்கையில் நான் எதை அடைய முடியாது என்று ஏங்கிக் கொண்டிருந்தேனோ, அதை உன் மூலமாக மீட்டெடுத்து விட்டேன்" என்றான் ராமு.

"இல்லை அத்தான். உங்களைப் போன்ற நேர்மையான செயல் வீரரை அடைவதற்கு நான் தான் முற்பிறப்பில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்" என்றாள் வசந்தி.

"ஆமா வசந்தி நம்ம திருமண விசயமா வீட்டில் பேசினியா?" என்று கேட்டான் ராமு.

"இல்ல அத்தான். நான் இதுப்பற்றி ஒன்றுமே பேசவில்லை. முனுசாமி சார் ஒருநாள் அவரே வந்து இதுபற்றி பேசுறதா சொல்லி யிருக்கிறார்" என்றாள்.

இதுவரை அவர்களைத் தனிமையில் விட்டுச் சென்ற முனுசாமி மீண்டும் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார். இதைக் கண்ட வசந்தி பவ்வியமாக ஒதுங்கி நின்று, "இதோ முனுசாமி சார் வர்றார் அவரிடமே கேட்டுக் கொள்ளுங்கள்" என்றாள்.

"என்னிடம் என்ன கேட்கப் போறீங்க" என்று இருவரையும் பார்த்து சிரித்துக் கொண்டவர் "என்ன சார் எல்லாவற்றையும் பேசி முடிச் சிட்டீங்களா, இல்ல இன்னும் மீச்ச மீதி இருக்கா" என்று கூறிக் கொண்டு இரண்டு பேரின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தார் முனுசாமி.

"நாம பேச இன்னும் எவ்வளவோ இருக்கு முனுசாமி சார்" என்று வசந்தியை ஜாடையாகப் பார்த்துவிட்டு சொன்ன ராமு, "எங்க ரெண்டு பேருக்கும் பாலமா நீங்கதானே சார் இருக்கிறங்க. நமக்குள்ள என்ன சார் ஒளிவு மறைவு வேண்டிக்கிடக்கு" என்றான் ராமு சிரித்துக்கொண்டே.

அப்போதுதான் தாங்கள் கொண்டு வந்திருந்த சாப்பாட்டை ராமு இன்னும் சாப்பிடவில்லை என்பது முனுசாமிக்கு தெரிந்தது. "சார் நேரமாயிட்டுது. முதலில் சாப்பிடுங்க" என்றான்.

அதுவரை சாப்பாட்டைப் பற்றியே நினைவிற்குக் கொண்டு வராத வசந்தி தன் தவறை உணர்ந்தவளாக தான் கொண்டு வந்த உணவைப் பரிமாறினாள்.

"சார் இது கடை சாப்பாடு. இன்னும் கொஞ்சகாலம் பொறுங்க. தங்கச்சி வசந்தி கையாலேயே உங்களுக்கு பரிமாறச் சொல்கிறேன்" என்றான் முனுசாமி கிண்டலாக.

"அந்த நாளைத்தான் நானும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் முனுசாமி சார். உங்க ஆசீர்வாதத்தாலதரன் நம்ம திருமணம் நல்லபடியா முடியனும்" என்றான் ராமு சாப்பிட்டுக் கொண்டே.

சாப்பிட்டு முடிந்ததும் "வீட்டுக்கு எப்போது போகிறீர்கள்" என்று வசந்தி ராமுவிடம் கேட்டாள்.

"நீ ஒவ்வொரு நாளும் வருவதாயிருந்தால் ஒரு மாதம் வேண்டு மானாலும் இருப்பேன். எனக்கு உடம்பு குணமாகிவிட்டது. நாளை மறுநாள் போகலாம் என்று டாக்டர் சொன்னார்" என்றார்.

"ஆமா சார் நீங்கள் இப்போதுள்ள நிலையில் உடனடியாக வீட்டுக்குப் போகணும். இல்லன்னா வயசான காலத்தில உங்கம்மா விழுந்தடித்துக் கொண்டு இங்கே வந்து நிப்பாங்க" என்றான் முனுசாமி.

அதேநேரத்தில், பார்வையாளர்கள் நேரம் முடிவதற்கான மணி ஒலித்தது. "அம்மா வசந்தி நேரம் சரி. கிளம்பு" என்று வசந்தியை அவசரப்படுத்தினான் முனுசாமி.

வசந்தி ராமுவின் அருகில் வந்து, "நாளை மறுநாள் காலையில் வருகிறேன் அத்தான்" என்று சொல்லிவிட்டு அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

நிலைமையைப் புரிந்து கொண்ட முனுசாமி கையை குலுக்கி விட்டு "வருகிறேன் சார்" என்று முன்னே நடக்க ஆரம்பித்தான். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட வசந்தி, ராமுவின் கையில் முத்தமிட்டு "நாளை மறுநாள் வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டாள்.

முத்தமிட்ட கையை நெஞ்சோடு இணைத்துக் கொண்ட ராமு, அதனால் ஏற்பட்ட உஷ்ணத்தின் இன்ப கிளர்ச்சியுடன் வசந்தி போவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

## 17

உலகில் தாய்ப் பாசத்திற்கு நிகரான பாசம் வேறொன்றுமில்லை. இது மனித இதயம் படைத்தவர்களின் தெளிவானதோர் நம்பிக்கை யாகும்.

ஒரு தாயுள்ளம் தன் பிள்ளைக்குத் துன்பம் என்று கேள்விப் பட்டவுடன், அதைவிட பெரிய துன்பம் அவளின் மனதில் தோன்றிவிடும். இதை அவன் தன் உபாதையால் மற்றவர்களுக்கு விளக்குவாள்.

ஆபத்தில் சிக்கியிருக்கும் தன் பிள்ளையைக் காண ஒரு தாயின் உள்ளம் துடிக்கும்போது ஏற்படும் உணர்வு அயலவர்களின் இதயத்தையும் நெகிழச் செய்யும்.

ராமு மருத்துவமனையில் இருப்பதைக் கேள்வியுற்ற பெரு மாயிம்மா என்ன பாடு பட்டிருப்பாள்.

முனுசாமியின் கடிதம்தான் இந்த துன்பச் செய்தியைக் கொண்டு வந்தது. எந்தச் செய்தி தன் தாய்க்குத் தெரியக் கூடாதென ராமு நினைத்தானோ அந்தச் செய்தி கிடைத்துவிட்டது பெருமாயிம்மாவுக்கு.

பேரன் அருண்தான் கடிதத்தை வாசித்துச் சொன்னான். அந்தச் செய்தி அவனுக்கே அழுகையைத் தந்தது என்றால் தாய் பெருமாயி அம்மாவுக்கு எப்படி இருந்திருக்கும்?

ராமு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த செய்தி அவர்களுக்குத் தெரிந்த சிறிது நேரத்தில் அந்த லயமே அணி திரண்டுவிட்டது. அந்தச் சத்தம் கேட்டு கொழுந்து நிறுத்து விட்டு வந்த சிவகாமியும் என்னமோ ஏதோவென்று அறியாமல் கொழுந்துக் கூடையோடு ஓடி வந்தாள். வந்தவள் விஷயத்தை என்னவென்று கேட்காமல் மகனையும், அத்தையையும் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதாள். பக்கத்து வீட்டுப் பெண்கள் இவர்களை அமர்த்தி விஷயம் என்ன என்று கேட்பதற்குள் பெரும் பாடாகி விட்டது.

இவர்களின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு அங்கு வந்த நகுலன் அருணின் கையிலிருந்த கடிதத்தை வாங்கி வாசித்தான். கடிதத்திலுள்ள விஷயத்தைப் புரிந்து கொண்டவன் அதை மற்றவர்களுக்கும் விபரித்துக் கூறினான். எல்லோரும் பெருமாயிம்மாளின் கவலையில் பங்கு கொண்டனர்.

நான் அடிக்கடி சொல்வேன். அட தம்பி உனக்கு இந்த வேலையெல்லாம் வேணாம். என்றைக்கும் சங்கக்காரன் என்றால் பிரச்சனைதான் என்று. கேட்டால் தானே. எது சொன்னாலும், அம்மா நாம பயந்து பின்வாங்கிவிட்டால் வேறு யாரும்மா இந்த வேலைகளையெல்லாம் செய்யிறது. சாவு என்கிறது பிறந்த அன்றைக்கே உண்டு. அதைப் பத்தி கவலைப்பட வேண்டாம். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு தலைமேல் இருக்கு என்று அந்தக் காலத்து தேசிங்கு மகாராஜன் சொல்வதுபோல் சொல்வான்" என்ற பெருமாயி அம்மா தனது மகனின் பெருந்தன்மையை எடுத்துரைத்தாள்.

"பாட்டி இப்ப என்ன நடந்ததுன்னு இப்படி ஒப்பாரி வைக்கிறீங்க."

"இன்னும் என்னப்பா நடக்க இருக்கு. என்க்குள்ளது ஒரே மகன். அவனுக்கு ஒரு ஆபத்துன்னா என்னால எப்படிப்பா தாங்க முடியும். கடவுள் ஒருவரைப் நம்பி ஒருவரைப் படைக்கவில்லை என்று

வேதாந்தம் பேசுவானே, இப்ப அவண்ட உயிருக்கே ஆபத்து வந்துடிச்சே, எம் மகனைய நான் எப்படி போய் பார்ப்பேன்" என மீண்டும் அழ ஆரம்பித்தாள். அவளோடு சேர்ந்து மருமகள் சிவகாமியும் பேரன் அருணும் சேர்ந்து கொண்டு அழ ஆரம்பித்தார்கள்.

"ஐயோ நீங்கவெல்லாம் கொஞ்சம் அழுகையை நிப்பாட்டு றீங்களா. இப்ப ராமு அண்ணாருக்கு என்ன ஒரு சின்ன அடி தடியில அவரு ஆஸ்பத்திரியில இருக்காரு. இதுக்குப் போய் இப்படி அழுதுகிட்டிருந்தா எப்படி. உங்களுக்கு ராமு அண்ணன் பார்க்கணும் அவ்வளவுதானே. கவலையை விடுங்க. நான் காலையில் கூட்டிக்கிட்டு போக ஏற்பாடு செய்யிறேன்" என்று நகுலன் சொன்னதும், மூவரும் அமைதியானார்கள்.

கூடியிருந்தவர்களும் "அதுதான் சரி. சும்மா இங்கே அழுது கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை எந்திரிங்கம்மா. முகத்தைக் கழுவிட்டு வேலையைப் பாருங்க" என்று பெருமாயியம்மாவுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தனர்.

"ம்.. இனி எனக்கு என்ன வேலை கிடக்கு" என்று கன்னத்தில் கை வைத்து அமர்ந்துவிட்டாள் பெருமாயியம்மா. இதைக் கவனித்த சிவகாமி ஓட்டமும் நடையுமாக வீட்டிற்குப் போய் கூடையை வைத்து விட்டு மறுநாள் போவதற்கான ஏற்பாட்டைச் செய்தாள்.

எத்தனைதான் உழைத்தாலும் இப்படி திடீர் பயணங்கள் ஏற்பட்டு விட்டால் முதலில் செலவுக்குப் பணம் கையில் இருக்காது. அதையும் கடன் வாங்கத்தான் வேண்டும். தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் அவர்களின் சாப்பாட்டிற்கே போதாது. மாதக் கடைசியில் கடையில் கடன்பட வேண்டிய நிலைமைதான். இதற்கு சிவகாமி மாத்திரம் என்ன விதி விலக்கா?

நேராக கங்காணி வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றவள் விபரத் தைச் சொல்லி போக்குவரத்திற்குப் பணம் பெற்றுக் கொண்டு திரும்பினாள். வீட்டிற்குள் நுழையும் போதே சிவகாமியின் தாய் இரவுச் சாப்பாட்டை தயார் செய்து வைத்திருந்தாள். உள்ளே சென்று அமர்ந் தவளைப் பார்த்து "யார் கடிதம் போட்டிருக்கா. என்ன விசயம்?" கேட்டாள்.

"இலக்கன் கூட்டத்தில பேசிவிட்டு திரும்பும் போது காடையர்கள் தாக்கி விட்டர்களாம். அதோட, கடிதத்த அவர் எழுதல்ல. அவரோட ஒன்னா வேலை செய்யிற முனுசாமினு ஒருத்தர் தான் எழுதியிருக்காரு. அவருக்கும் அத்தான் ஆஸ்பத்திரியில இருக்கிற விசயம் தெரியாது போல, அதான் இங்க கடிதம் போட்டு அத்தான் எப்படி இருக்கிறார் என்று விசயத்தைத் தெரிந்து கொள்வதற்காக எழுதியிருக்கிறார். அவரோட கடிதத்த பார்த்த பிறகுதான் அத்தானுக்கு ஏதோ ஆபத்துன்னு நாங்க புரிஞ்சிக்கிட்டோம்."

"அப்போ தம்பி ராமு எங்கே இருக்கிறார் என்று விசயம் தெரியாமல் நீங்க எப்படிம்மா நாளைக்குப் போகப் போறீங்க?"

"நம்ம நகுலன் தம்பி தோட்ட ஆபீசிற்குப் போய் விபரம் தெரிந்து கொண்டு வருவதாகச் சொன்னான். மாமி வீட்டிற்கு போனா விபரத்தைத் தெரிந்து கொள்ளலாம்" என்று புறப்படத் தயாரான சிவகாமியிடம்,

"இந்தா இந்த தேநீரை குடிச்சிட்டு, மாமிக்கும் அருணுக்கும் சாப்பாட்ட எடுத்துக்கிட்டுப் போ" என்று சொன்னாள் சிவகாமியின் தாய் தெய்வானை.

தேநீரைக் குடித்து முடித்த சிவகாமி, சாப்பாட்டை ஒரு போணியில் போட்டுக்கொண்டு புறப்பட்ட சிவகாமி, "அம்மா கவனமா இருங்க. நாங்க காலையில போனா பின்னேரம்தான் திரும்பி வருவோம்" என்று சொல்ல.

"நீ மாமிய கூட்டிக்கிட்டுப் போறது சரி. கவனமா போயிட்டு வா. முடிஞ்சா தம்பியயும் கையோடு கூட்டிக்கிட்டு வாங்க" என்றாள் தெய்வானை.

"அதெல்லாம் அங்கே போய் அத்தான் எப்படியிருக்கிறார் என்று பார்த்த பிறகுதான் செய்வோம். நகுலன் தம்பியையும் கூட்டிக் கிட்டுப் போறோம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள் சிவகாமி.

சிவகாமி மாமியின் வீட்டை அடைந்தபோது அங்கே பெருமாயிம்மா கடிதத்தைப் பார்த்த துயரம் நீங்காமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள். சிவகாமிக்கு முன்பதாகவே நகுலன் தம்பியும் இன்னும் இருவரும் அங்கே அமர்ந்திருந்தனர்.

சாப்பாட்டை வீட்டிற்குள் வைத்துவிட்டு திண்ணையில் அமர்ந் திருந்த மாமியை ஆறுதல் சொல்லி வீட்டிற்குள் கூட்டிச் சென்று, "மாமி நாம இப்படி பித்துப் பிடித்த மாதிரி கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள் ஒன்றும் நடக்காது. முகத்தைக் கழுவிட்டு, அத்தானுக்கு எதும் வந்துடக் கூடாதுன்னு கடவுள வேண்டிகிட்டு சாப்பிட வாங்க" என்று சொன்ன சிவகாமி மகன் அருணையும் கை கால் கழுவிட்டு வரச்சொல்லி இரவு உணவைப் பரிமாறிக் கொண்டே நகுலனைக் கூப்பிட்டு "தம்பி ஏதும் விபரம் தெரிந்ததா?" என்று கேட்டாள்.

"ஆமாக்கா எட்டாபிசிற்கு போட்டுக் கேட்டோம். கண்டி கவர் மெண்ட் ஆஸ்பத்திரியில சேர்த்திருப்பதாகவும், இன்றோ நாளையோ வீட்டுக்கு வரலாமெனவும் சொன்னார்கள். இருந்தாலும் அக்கா நாம ஒருதரம் போய் பார்த்துவிட்டு வருவதுதான் நல்லது. அதப் பற்றிதான் இவர்களோடு பேசிக்கிட்டிருந்தேன்" என்றான்.

மற்றவர்களும் "ஆமாம்மா, நாளைக்கு காலயில எல்லோருமா போய் பார்த்துட்டு வாங்க. அப்போது எல்லோருக்குமே கொஞ்சம் நிம்மதியா இருக்கும்" என்றனர்.

சிறிது நேரத்திற்குப் பின் நகுலன், “சிவகாமி அக்கா நாளைக்கு காலையில் ஆறு மணிக்கு ரம்பண்டார முதலாளியோட ஹில்மன் வேன் தோட்டத்திற்கு வரும். அதில் எல்லோரும் போய் திரும்புவோம். போக வர எவ்வளவுன்னு பேசி முடிச்சிருக்கேன். ஆறு மணிக்கு எல்லோரும் தயாரா இருங்க. நான் காலையிலேயே வந்துடறன்” என்றவன் மற்ற இருவரோடும் புறப்பட்டுப் போகப் போனவர்களை,

“தம்பி நகுலன் கொஞ்சம் இருப்பா. தேத்தண்ணி ஊத்திட்ட குடிச்சிட்டுப் போங்க” என்று சிவகாமி தேநீரை அவர்கள் முன் கொண்டு வந்து வைத்தாள்.

அருண் சீனி போத்தலைக் கொண்டுவந்து வைத்துவிட்டு டம்ளரில் சாயத்தை ஊற்றி கையில் சீனியை எடுத்துக் கொண்டு நாவால் நக்கிக் குடித்தான்.

எவ்வளவுதான் சாயத்தில் சீனியைக் கரைத்துக் குடித்தாலும் கையில் துளியளவு சீனியை வைத்துக் கொண்டு சாய்த்தைக் குடிப்பதும், சீனியைக் தொட்டுக் கொள்வதிலும் இருக்கும் சுகமே தனியான சுகம்தான். பெரிய வசதி படைத்தவர்கள் கூட சிலநேரம் கையில் சீனியை எடுத்து நக்கி தேநீர் குடிப்பதை நாம் பார்த் திருக்கிறோம். அவர்களிடம் காரணம் கேட்டால், ஒரு ‘சேஞ்சிக்கு’ என்பார்கள்.

தோட்டத்தில் மாத்திரமல்ல கிராம, நகர்ப்புறங்களில் கூட சீனியைக் கையில எடுத்துக் கொண்டு குடிக்கும் பழக்கம் பெரும் பான்மையாகவே எல்லோரிடமும் இருந்து வருகிறது. இப்படி செய்வத னால் ஏது சிக்கனம் என்று நினைக்க முடியாது. கையில் சீனியை எடுக்கும் போது ஒவ்வொருவரும் தங்களின் தேவைக்கேற்ப எடுத்துக் கொள்வார்கள். சீனியும் கூடுதலாக செலவாகும். அதேபோலவே நகுலனும், மற்ற இருவரும் தேநீரைக் குடித்துவிட்டு அவரவர்கள் வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள்.

பிள்ளையின் நிலை குறித்து பெருமாயிம்மா அடுத்த வீட்டுக் காரர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். மாலையில் புறப்பட்டுப் போக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வெளியே வந்த சிவகாமி மாமியோடு சம்பாசணையில் கலந்து கொண்டவள், சம்பாசணை முடியவே, மாமியையும் அழைத்துக் கொண்டு படுக்கைக்குப் போய்விட்டாள்.

அருண் தனியாக பாய் விரித்துப் படுத்துக்கொண்டான். அவனின் சிந்தனைகள் அனைத்தும் ராமுவைப் பற்றியதாகவே இருந்தது.

‘அப்பாவுக்கு ஏதும் துன்பம் என்றால் இந்த குடும்பத்த யார் கவனிப்பம் செவதற்கான வசதியது. நான் அம்மா, அம்மம்மா - பாட்டி எல்லோருமே அனாதையாகி விடுவோம்’ என்று நினைத்துவனுக்கு

அம்மாவை நினைத்தவுடன் சிறு ஆறுதல் கிடைத்தது. 'ம்.. அம்மா தொழில் செய்கிறாங்க. எப்படியும் சமாளிக்கலாம். அப்படியே க டம் ஏற்பட்டால், நான் ஏன் மற்றவர்களைப் போல தொழில் செய்யக் கூடாது. தோட்டத் தொழிலாளர்களின் நிலை இதுதானே . குடும்ப உதவி இருக்குமட்டும்தான படிப்பு வசதியெல்லாம். குடும்பம் என்றவுடன் படிப்பைப் பார்க்க முடியுமா? இப்போ எனக்கும் வயசு பதினான்கு ஆகுது. அப்பா நமக்கு எவ்வளவு காலத்துக்குத்தான் உழைத்துக் கொண்டிருப்பார். நானும் குடும்ப பொறுப்ப ஏற்க என்னோட படிப்ப நிறுத்தினால் ஒன்றும் குறைந்து போய்விடாது. அம்மா என்ற துணை இருக்கும் போது நான் தனியாக இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அப்படி ஒன்று என்றால் அம்மா சொன்னதைக் கேட்பதுதானே முறை.'

இப்படியே சிந்தனையில் ஆழ்ந்திருந்த அருண் அப்படியே உறங்கிப் போனான்.

படுக்கையில் கிடந்த சிவகாமிக்குத் தம்பி நகுலனின் உதவிகள் அவள் கண் முன் வந்து நிழலாடின.

# 18

தாயாரை சமாதானப்படுத்தி அருகில் அமர வைத்தான் ராமு. கலங்கிய கண்களோடு நின்று கொண்டிருந்த சிவகாமியையும், அருணையும் அருகில் அழைத்தான். அருணை அணைத்துக் கொண்ட போது "அப்பா எப்படியப்பா இருக்கிறீர்கள். ஏன் எங்களுக்கு சொல்லவில்லை" என்று கதறினான்.

இந்தக் காட்சியைக் கண்ட வசந்தியின் மனதில் சிறு சந்தேகம் தோன்றிவிட்டது. 'யார் இந்தப் பையன். ஏன் இவரை அப்பா என்று சொல்கிறான். அவள் யார்? நல்ல கட்டான அழகியாக இருக்கிறாளே. பையனின் அம்மாவாக இருக்குமோ. அப்படியானால் ராமுவிற்கு ஏற்கனவே திருமணம் முடிந்து குடும்பம் ஒன்றும் இருக்கிறதா? ஐயோ கடவுளே இது என்ன சோதனை, நான் ஏமாந்து விட்டேனா? இத்தனையும் இவர் நடத்திய நாடகமா? என்னைக் காதலிப்பதாகச் சொன்ன வார்த்தைகள் அனைத்தும் பொய்யானதா? இந்த உண்மையை முனுசாமி சார்கூட என்னிடம் சொல்லவில்லையே.' இவ்வாறு சிந்தனையில் திளைத்திருந்த வசந்தியை ராமு ஏறிட்டுப் பார்த்தான். அவள் கண்கள் கலங்கிய நிலையில் ராமுவை முறைத்துப் பார்த்து விட்டு அங்கிருந்து வேகமாக அகன்று விட்டாள்.

"வசந்தி இங்கே வா எங்கே போகிறாய். இவர்களை உனக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும்" என்று கோபத்தில் இருந்த வசந்தியை அழைத்தான் ராமு.

"போதும் போதும் உங்கள் உபசாரம். ஆண்களே இப்படித்தான். பெண்களை ஏமாற்றுவதில் கைதேர்ந்தவர்கள். எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும். உங்களைப் பற்றி நினைக்கும் போதே பார்வதி சொன்னாள். நீ நன்றாக ஏமாறப் போகிறாய் என்று. அது இந்த ரூபத்தில் வரும் என்று நான் கனவில்கூட காணவில்லை. நான் எந்த முகத்தோடு இனி உயிர்வாழ்வேன்" என்று பொரிந்து கொண்டு வார்ட்டை விட்டு கோபத்துடன் வெளியேறினாள்.

கோபத்துடன் வெளியேறிக் கொண்டிருந்த வசந்தியின் எதிரே முனுசாமி வந்து கொண்டிருந்தார். "என்னம்மா வசந்தி ஏன் இப்படி அழுதுகொண்டு போகிறாய். யாரும் ஏதும் சொன்னார்களா" என்று தடுத்து நிறுத்திக் கேட்டார்.

பதில் சொல்லாமல் சேலைத் தலைப்பை வாயில் வைத்துக் கொண்டு கேவிக்கேவி அழுதாள் வசந்தி. "ஐயோ சார் நான் ஏமாந்துவிட்டேன். இப்படி ஏமாறுவேன் என்று எனக்குத் தெரியாது" என்று அழுது கொண்டிருந்தாள்.

"தங்கச்சி வசந்தி நடந்த விசயத்த சொல்லம்மா" என்று ஆறுதலாகக் கேட்டார்.

"ராமு தனி மனிதன், பிரம்மச்சாரி. பெண்களைக் கண்டாலே தூர ஒதுங்கி போவார். திருமணமே செய்யவில்லை என்றெல்லாம் சொன்னீர்களே."

"ஆமா சொன்னேன். இனி அது உண்மைதானே. அதுக்கு இப்ப என்ன நடந்தது. விபரத்தைச் சொல்லம்மா."

நகுலன் பெரியசாமி கங்காணியின் மகன். படித்துவிட்டு தொழி லின்றி வீட்டில் இருக்கிறான். தொழிலாளர்களின் பிள்ளை களுக்குப் படித்துக் கொடுக்க இரவு பாடசாலைக்கு ஏற்பாட செய்து கொடுத் தோம். நகுலன் நல்ல ஒழுக்கமுள்ள பையன். தொழிலாளர்கள் வீட்டில் ஏதும் நடந்தால் கூப்பிடாமலேயே வந்து உதவி செய்வான். ராமு மீது தனியான பற்றுக் கொண்டவன். இதற்கு ராமு தோட்டத் தொழிலாளர் களுக்குச் செய்யும் சேவையே முக்கிய காரணம்.

ராமு தோட்டத்திலும் சரி வெளியில் உள்ள நண்பர்களிடமும் சரி உண்மையான பாசத்தையும் பற்றையும் கொண்டிருந்தான். யாராவது துன்பத்தில் இருந்தால் ராமுவால் தாங்க முடியாது. உடனடியாக என்ன உதவி தேவையோ அதைச் செய்வதில் அக்கறை காட்டுவார். என்றுமே பிரதி உபகாரத்தை எதிர் பார்த்ததே கிடையாது. அதனால்

தான் தோட்டத் தொழிலாளர்களில் ஒருவனாக புல்லு வெட்டிக் கொண்டிருந்த ராமு இன்று சமூக சேவையில் இவ்வளவு முன்னேறி யிருக்கின்றார். ராமுவுக்கு ஏதும் ஆபத்தென்றால் தோட்டமே திரண்டு வந்துவிடும். நேற்று வந்த கடிதம் எல்லாத் தொழிலாளர் களுக்குமே வேதனையைக் கொடுத்திருந்தது. செய்தி அறிந்த தொழிலாளர்கள் ராமுவின் வீட்டிற்குத் திரண்டு வந்துவிட்டனர். இதன் மூலம் அவர்கள் ராமு மீது கொண்டுள்ள பாசத்தை உணரலாம். இப்படியே சிந்தனையில் ஆழ்ந்திருந்த சிவகாமி சிந்தனையோடே உறங்கிப் போனாள்.

மறுநாள் காலை. “தம்பி அருண் எழுந்திரு. நேரமாகிவிட்டது” என்று சிவகாமி எழுப்பிய போது அருண் தாமதியாமல் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டான். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும் சாமான்களைத் தயார் பண்ணிக் கொண்ட அருணை பாட்டி பெருமாயியம்மா “அருண் சாப்பிடவா” என்று அழைத்தாள். அருண் சாப்பிட போனபோது, அங்கே பாட்டி தன்னைப் புதுப்பெண்ணாக அலங்கரித்துக் கொண்டு மகனைப் பார்க்கப் போகிற மகிழ்ச்சியில் முகம் பிரதிபலிக்க நின்று கொண்டிருந்தாள்.

இதில் பெருமை கண்ட அருண் அம்மா சுட்டு வைத்திருந்த ரொட்டியைச் சாப்பிட ஆரம்பித்தான். சாப்பிட்டு முடியும் போது சிவகாமி தேநீர் கொண்டு வந்து வைத்தாள். சிவகாமி சாப்பிட்டுவிட்டு பயணத் திற்கென்று எடுத்து வைத்திருந்த சேலையைக் கட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகும் சாமான்களை வெளித் திண்ணையில் கொண்டு வந்து வைத்தாள்.

லயத்தின் மேல் புறத்தில் வேன் வரும் சத்தமும் ஓன் பண்ணும் சத்தமும் கேட்டது. வேன் வந்துவிட்டது என்று அருண் வெளியில் எட்டிப் பார்த்தான். நகுலன் வேனிலிருந்து இறங்கி வந்து “புறப்பட்டு வீட்டீர்களா” என்று வாசற்படியில் வந்து நின்றான்.

“இதோ வந்து விட்டோம்” என்று கூறியவாறே எடுக்க வேண்டியதை எடுத்துக் கொண்டு வேனில் அமர்ந்து கொண்டனர்.

“வழியில் போகும் போது மற்றவர்களையும் ஏற்றிக் கொண்டு போவோம்” என்று கூறிக்கொண்டே நகுலன் வேனில் முன் சீட்டில் அமர்ந்து கொண்டான். பக்கத்தில் அருணும் அமர்ந்து கொண்டான்.

ரன்பண்டா “முதலாளி போவோமா” என்று கேட்டுக் கொண்டே வேனை ஸ்டார்ட் செய்ய வேன் புறப்பட்டது.

சரியாக பன்னிரெண்டரை மணிக்கு வேன் ஆஸ்பத்திரியை அடைந்தது. அவசர அவசரமாக வேனை விட்டிறங்கி வார்ட்டை நோக்கிச் சென்றனர். குறிப்பிட்ட வார்ட்டுக்குள் நுழைந்ததும் அங்கே அவர்களை அதிர்ச்சியடையச் செய்து விட்டது அந்தக்

காட்சி. அவர்களின் மனதில் கேள்விக்குறி. ஆம் கட்டிலில் ராமு விற்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கும் அந்தப் பெண் யார் என்று கேள்வியே அது.

மனிதர்கள் எதிர்பார்க்காத நேரத்தில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடந்து விட்டால் அதிர்ச்சியும், குழப்பமும் அடைகிறார்கள். அதே சமயம் எதிர் பார்ப்பவை நிஜமாகும் போது நட்பும், அன்பும், சகோதரத் துவ உணர்வும் மனிதர்களின் இதயத்தில் இடம் பெறுகின்றன.

உள்ளே நுழைந்தவர்களைக் கண்டு பேரானந்தம் கொண்ட ராமு கட்டிலை விட்டிறங்கி எதிரே வந்த தாயாரைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். இதைக் கண்டு அதிர்ச்சியுற்ற வசந்தி கட்டிலை விட்டிறங்கி அமைதியாக நின்று கொண்டாள்.

தாயார் பெருமாயிம்மா "மகனே உனக்கு என்ன நடந்தது. ஏன் எங்களுக்குத் தெரிவிக்கவில்லை" என்று ஒப்பாரி வைத்து விட்டாள். இந்த நிகழ்ச்சியைப் பார்க்க உள்ளவர்கள் கூடி விட்டனர்.

பெருமாயிம்மாவின் ஒப்பாரி வசந்தியை நிலைகுலையச் செய்து விட்டது. அவள் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் சிந்தின. என்ன பாசம் தாய்ப் பாசத்திற்கு ஈடு இணை உண்டோ என எண்ணினாள். அப்போது அவளுக்குத் தன் தாயின் நினைவு வந்தது.

"உள்ளே போய் பாருங்க உண்மை புரியும். நான் மாத்திரமல்ல நீங்களும் சேர்ந்துதான் ஏமாந்திருக்கிறீர்கள்" என்று சொன்னதும்.

"சரிம்மா நான் போய் பார்த்து வருகிறேன். நீ கொஞ்சம் நேரம் அமைதியாக என்னோடு வா. நீ சொன்னபடியே ஏதும் நேர்ந்திருந்தால் அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றார் முனுசாமி.

"இன்னும் என்ன சார் பார்க்க இருக்கு. ராமுக்கு கண்ணுக்கு அழகா ஒரு மனைவி, கைக்கு உதவியா ஒரு பிள்ளை எல்லோரும் இருக்கிறத நான் மறுபடியும் பார்க்க வேண்டுமா?"

"வசந்தி கொஞ்சம் பொறுமையா இருங்க. என்ன மகனும், மனைவியும் வந்திருக்காங்களா. யார் சொன்னது. இது அவர் மீது யாரோ பழி சுமத்த சொல்ற கதையாயிருக்கும். நீங்க என்னோடு வாங்க. இந்த மாதிரி நேரத்தில பெண்கள் பொறுமையா இருந்து விசயத்த தெளிவா விளங்கிக்கொண்டு ஏதும் முடிவெடுக்கணும். அத விட்டுட்டு சும்மா ஏதோ வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிக்கிட்டிருந்தா அதுல அர்த்தமில்ல" என்ற முனுசாமி வசந்தியை அழைத்துக் கொண்டு வார்டினுள் போனார்.

உள்ளே சென்ற வசந்தியை ராமுவின் தாயார் பெருமாயிம்மா, "வாம்மா; தம்பி இப்பத்தான் உன்னைப்பற்றி சொன்னான். நீ எங்களைக்

கண்டவுடன் வெளியே ஓடிட்ட" என்று அருகில் அழைத்து வசந்தியை அணைத்துக் கொண்டாள்.

பெருமாயியம்மாவின் அரவணைப்பு ஒரு தாயின் சுகத்தை வசந்திக்கு அளித்தது. தான் நினைத்தது அத்தனையும் உண்மையாகி விடக் கூடாது என அவள் கடவுளை வேண்டிக்கொண்டாள். அவளின் உள்ளம் இன்னும் குமுறிக் கொண்டிருந்தது.

பக்கத்தில் நின்றிருந்த சிவகாமி அருகில் வந்து, "அத்தான் தேடி தேடி நல்ல அழகானப் பெண்ணைத்தான் தேர்ந்தெடுத் திருக்கிறார்" என்றாள்.

"அப்ப நீங்க யார்?" என்ற கேள்வி குறியோடு வசந்தி சிவ காமியை ஏறிட்டுப் பார்த்தாள். "உண்மையாகவே சொல்கிறேன் அத்தான் நீங்கள் தேடி எடுத்த பெண் உண்மையிலேயே அழகிதான்" என்றாள் சிவகாமி மீண்டும்.

வசந்தியின் உள்ளத்தில் மீண்டும் அதிர்ச்சி. இவள் என்ன சொல்லுறாள் என்று சிவகாமியை வெறித்துப் பார்த்தவளை சிவகாமி,

"வசந்தி எங்க அத்தானுக்கு ஏற்ற மனைவியா நீங்க வாழணும்" என்றாள் வசந்தியைப் பார்த்து.

பெரும் தடுமாற்றத்திலும் தவிப்பிலும் திக்குமுக்காடிக் கொண் டிருந்த வசந்தியை ராமு நிமிர்ந்து பார்த்தான்.

"வசந்தி நீ ஏன் இப்படி தடுமாறி விட்டாய் என்று எனக்குத் தெரியும். முனுசாமி சார் எல்லாவற்றையும் என்னிடம் சொன்னார். வசந்தி நீ நினைத்தது அத்தனையும் உண்மை இல்லை. ஆத்திரத்தில் எந்த முடிவையும் எடுக்கக் கூடாது. அப்படி எடுக்கின்ற முடிவுகள் எத்தனையோ மனிதர்களின் வாழ்க்கையை சீரழித்துள்ளது. வசந்தி இப்படி என் அருகில் வா" என அழைத்த ராமு, "வசந்தி என் வாழ்க் கையில் நான் இந்த மாதிரியான பிரம்மசாரியத்தை மேற்கொள்ள காரணமாக இருந்த பெண் இந்தச் சிவகாமிதான். இவன்தான் அருண். சிவகாமியோட மகன். கணவனை இழந்த சிவகாமி தன் தாய் வீட்டோடு வாழ்கிறாள். அருண் என் தாயாரோடுதான் தங்கியிருக் கிறான். இவனுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இந்த பாசத்தில்தான் அருண் என்னை அப்பா என்று அழைக்கிறான். வசந்தி சிவகாமியை நான் என் மனைவியாக ஏற்றிருந்தால் அருண் என் மகனாகப் பிறந்திருப்பான். என் துரதிர்ஷ்டம் என் மாமா செய்த தவறி னால் இன்று அவள் தன் வாழ்க்கையையே இழந்து விட்டு வந்து நிற்கிறாள். சரி எங்கள் குடும்பக் கதையே பற்றி பின்னால் பேசுவோம்" என்று சொன்ன ராமு வசந்தியை எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்தான்.

"அம்மா உங்களுக்கு ஒரு மருமகள் வேண்டுமென்று எந்த நேரமும் என்னை நச்சரித்துக். கொண்டிருப்பீர்கள்தானே. அந்தக் குறையை இந்த வசந்தி தீர்த்து வைக்கப் போகிறாள். அருண் இங்கே வா. இவளைத்தான் நான் திருமணம் செய்யப் போகிறேன்" என்று வசந்தியை அருணுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

அதற்கு அருண் "அப்ப இவங்க என் சித்தி" என்றவன் வசந்தியின் கைகளைப் பற்றிக்கொண்டு "சித்தி சித்தி" என அழைக்கத் தொடங்கி விட்டான்.

சிவகாமி ராமுவின் அருகில் வந்து, "என்னாலதான் அத்தானோட வாழ குடுத்து வைக்கல. அந்த இடத்தை நீ நிரப்பு. அவருக்கு காம் பூரா துணையா இருக்க ஆசீர்வதிக்கிறேன்" என்று உச்சு மோந்தாள்.

வசந்தியின் மனதில் ஏற்பட்ட அனைத்து சந்தேகங்களுக்கும் விடை கிடைத்துவிட்டது. மகிழ்ச்சிப் பொங்க முகத்தில் பூரணச் சந்திரன் போன்ற புன்னகையோடு ராமுவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தவள் மீண்டும் தலையை குனிந்து கொண்டாள்.

எத்தனைதான் இவர்கள் காதலர்களாகப் பழகியிருந்தாலும், பல பேர் முன்னிலையில் இவள்தான் என் மனைவியாகப் போகிறவள் என்று சொல்லும் போது பெண்களுக்கு இயற்கையாவே நாணம் ஏற்பட்டு விடுகிறது.

சற்று முன்பு அங்கு ஏற்பட்ட பரபரப்பு அடங்கி இப்போது எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி பொங்கி ஒரு குடும்ப உறவை ஏற்படுத்தி விட்டதுபோல் ஒருவரை ஒருவர் பிரிய முடியாத உறவுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ராமு இன்று வீட்டிற்குப் போவதற்கு டிக்கட் வெட்டியிருந்தான். மற்ற ஏற்பாடுகளை நகுல்ன் செய்துவிட்டு நண்பர்களோடு வார்ட்டுக்குள் நுழைந்தான்.

அவர்கள் எல்லோருக்கும் வசந்தியை அறிமுகப்படுத்தி வைத் தான் ராமு. எல்லோருக்கும் ராமுவின் திருமணச் செய்தி மகிழ்ச்சியைக் கொடுத்தது. ராமு எப்போது திருமணம் செய்வார் என்று பார்த் திருந்தவர்களுக்கு இது ஒரு நற்செய்தியாகும்.

நேரமும் ஓடிக் கொண்டிருந்தது. "நேரமாகி விட்டது புறப்படுங்க வசந்தி" என்று முனுசாமி வசந்தியை அவசரப்படுத்திக்கொண்டு இருந்தான்.

இதைக் கவனித்த ராமு "அவசரப்படாதீங்க, எல்லோருமா போவோமே பஸ் ஸ்டாண்டிற்கு" என்று சொல்லிவிட்டு எழுந்த ராமு. டாக்டர்களிடமும் நர்ஸ்மார்களிடமும் சென்று விடைபெற்றுக் கொண்டான். ராமு அந்த மருத்துவமனையில் எல்லோர் மனதிலும்

நன்மதிப்பை பெற்றிருந்தான். டாக்டர் நேர்ஸ்மார்கள் எல்லோரும் ராமுவிற்கு விசேடமாகவே சேவை செய்து வந்தார்கள்.

பக்கத்து கட்டிலில் இருந்த பல நோயாளி நண்பர்களிடம் சென்று விடை பெற்றுக்கொண்டு அவர்களின் விலாசத்தையும் குறித்துக் கொண்டான்.

“அத்தான் சங்கத்தில் மாத்திரம் சேவை செய்யவில்லை. ஆஸ்பத்திரியிலும் நிறைய சேவை செய்திருக்கார் போலிருக்கு” என்று வசந்தியைப் பார்த்து கண்சிமிட்டி சொன்னாள் சிவகாமி,

“ம்... இனிமேல் இவருக்கு வேலை செய்ய வேண்டியது உங்கள் பொறுப்புதான் என்று வசந்தியின் கையைப் பிடித்து சிமிட்டினாள் சிவகாமி.

“முதலில் துணிச்சலோடு தாலியக் கட்டச் சொல்லுங்க. அப்புறம் பார்ப்போம்” என்று பதிலுக்கு கிண்டலாகச் சொன்னாள் வசந்தி.

இதைக் கவனித்த பெருமாயிம்மா “என்ன என் புள்ளய பார்த்தா உங்களுக்கு ஒரே கிண்டலாக இருக்கா” என்றாள்.

“அப்படி ஒன்றும் இல்லை அத்தை” என்று இரண்டு பேரும் ஒரே குதூகலத்தோடு சொல்லிக்கொண்டே வார்ட்டைவிட்டு வெளியேறினார்கள். இப்போது அருண் வசந்தியைத் தொத்திக் கொண்டான்.

பேசிக் கொண்டே வந்த ராமு அம்மாவைப் பார்த்து, “என்னம்மா ஒண்ணுமே சொல்லலல்ல. பெண்ணைப் பிடிச்சிருக்கா” என்று கேட் டான்.

“உனக்குப் பிடிச்சிருந்தால் எனக்குப் பிடித்த மாதிரிதாப்பா, நீ எப்போ திருமணம் செய்வேன்னு நான் மாத்திரமல்ல இந்த ஊரே காத்திருக்கு. அவங்களுக்கு இந்த விசயம் தெரிஞ்சா எவ்வளவு சந்தோசப்படுவங்க தெரியுமா” என்றாள்.

முனுசாமி அருகில் வந்து “இந்தப் பேச்செல்லாம் சரி வராது. நாங்க இன்னும் பெண் கொடுப்பதா உறுதித் தரல்ல. அதுக்கு முன்பு நிறைய பேச வேண்டியிருக்கு” என்று ஆரம்பித்தான்.

“பெண்ணுக்கும் மாப்பிளைக்கும் பிடித்தால் இடையில் நாம் என்னப்பா பேச வேண்டி இருக்கு. எல்லாம் அந்த பகவதி அம்மாள்தான் இருந்து இந்தக் கல்யாணத்த சீரும் சிறப்புமா நடத்தி வைக்கணும்” என்றாள் பெருமாயியம்மா.

“இந்த மாதத்துல நல்லதோர் நாளப் பார்த்து நீங்க பெண் வீட்டுக்கு வந்து கேட்டு முடிவு பண்ணுங்க. நானும் முன் கூட்டியே இந்த கிழமைபோய் சொல்லி வைக்கிறேன். அதோட நீங்க வாரத்துக்கு முன்னால கடிதம் போட்டுட்டு வாங்க. அப்பத்தான். அவங்களும்

அவங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சொல்லி ஏற்பாடு செய்வார்கள்" என்றான் முனுசாமி.

"அதெல்லாம் முறைப்படி செய்வோம் தம்பி. வீட்டுக்குப் போனதும் முதல் காரியமா எப்போ வருவோம் என்று கடிதம் போடுகிறோம். உங்களுக்கும் தெரியப்படுத்துகிறோம்" என்றாள் பெருமாயியம்மா.

ராமு வசந்தியோடு கைகோர்த்தவாறே அருணைப் பற்றிய எல்லா விபரத்தையும் சொல்லிவிட்டான். அருணை அன்போடு அரவணைத்த வண்ணம் வந்து கொண்டிருந்தாள் வசந்தி.

எல்லோரும் பஸ் நிலையத்தை அடைந்தவுடன் ராமு முதலில் வசந்தி போகிறதுக்கு பஸ் இருக்கிறதா என்று பார்த்தான். அங்கு ஒரு பஸ்கூட இல்லை. அருகிலுள்ள டிப்போ டைம் கீப்பரிடம் போய் கேட்டான். மூன்று நாற்பதுக்குத்தான் பஸ் இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டு வந்து கூறினான். ராமுவிற்கு பஸ் தயாராக இருந்தது என்பதைத் தெரிந்து கொண்டு வந்த கூறினான் நகுலன்.

வசந்தியை விட்டுப்பிரிய மனமில்லாமல் துடித்துக் கொண்டிருந்த ராமு, "வசந்தி போனதும் கடிதம் போடுங்கள்" என்றான்.

"சார் நாங்கள் பஸ் வந்ததும் போகிறோம். நீங்க போங்க" என்றான் முனுசாமி. இதை இரண்டு பேரும் காதில் வாங்கவில்லை. இதைப் புரிந்து கொண்ட முனுசாமி அருகில் வந்து "என்ன ரெண்டு பேருக்கும் நேரம் போறது தெரியல்லயா" என்றான்.

எல்லாரும் விடைபெற்றுக் கொண்டனர். சிவகாமியும் பெருமாயி யம்மாவும் வசந்தியைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு விடை பெற்றனர். அருண் அருகில் வந்து, "சித்தி நான் போயிட்டு வாறன். சீக்கீரமா எங்க வீட்டுக்கு வந்திடுங்க" என்றான்.

அவனை இறுக அணைத்துக்கொண்ட வசந்தி "இனி என் வாழ்க்கையெல்லாம் உங்களோடுதான் அருண். கவலை வேண்டாம். போனதும் கடிதம் போடுங்கள்" என்று உச்சந் தலையில் முத்தமிட்ட வாறே விடை கொடுத்தாள் வசந்தி.

அதேநேரத்தில் வசந்தி போக வேண்டிய பஸ்ஸும் வந்தது. முனுசாமி ஓடிச் சென்று இடம் பிடித்தான். பஸ்ஸிற்குள் அழைத்துச் சென்ற ராமு "உன்னை இன்று என்னால் பிரிய முடியவில்லை" என்றான்.

"என் நிலையும் அதுதான் அத்தான். இன்றைக்கு என் மனதில் எற்பட்ட மகிழ்ச்சிப் பெருக்கில் உங்களோடு வந்து விடலாமா என்று தோன்றுகிறது" என்றாள் வசந்தி.

"எல்லாம் காலம் வரும்போது சரியாக வந்துவிடும். இப்போ பஸ்ஸில்" ஏறு வசந்தி என்று ஏறிக் கொண்ட முனுசாமி, ராமுவிற்கு

விடை கொடுக்கவே இருவர்களிடமும் விடைபெற்ற ராமு தனது பஸ்ஸை நோக்கிச் சென்றான். பஸ்ஸும் புறப்பட்டது.

ராமுவின் பஸ்ஸையே பார்த்துக் கொண்டிருந்த வசந்தி கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

இன்று எனக்கு என்ன நடந்து விட்டது. ஏன் அவர்களைக் கண்டவுடன் என் மனதில் அப்படியொரு புயல் தோன்றியது. அப்பப்பா நான் கொஞ்சம் பொறுமையாக இருந்திருக்கக் கூடாதா? என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பார்கள். சே, சே பெண்கள் எல்லோரும் அவசரப் புத்திக்காரர்கள் என்று சொல்வார்களே. அது சரியாகப் போய்விட்டது. ம்... ஒரு வகையில் அப்படி நடந்து கொண்டதும் நல்லதுதான். அதனால்தானே உண்மை தெரிய வந்தது. பிரிக்க முடியாத அன்பும் பாசமும் ஏற்பட்டது. ராமுவை திருமணம் செய்ய உண்மையிலேயே நான் கொடுத்து வைத்தவள்தான். அவர்கள் வீட்டிற்குப் பெண் கேட்டு வரும்போது எந்தவித இடையூறும் இல்லாமல் நல்ல முறையில் நடந்தேறணும் என்று மனதிற்குள் கடவுளை வேண்டிக்கொண்டாள்.

"டிக்கட் டிக்கட்" என்று பஸ் கண்டக்டர் அருகில் வந்து கேட்டபோதுதான் தான் பஸ்ஸில் இருப்பது நினைவு வந்தது. அப்போதுதான் அவசர அவசரமாக முனுசாமியைத் தேடினாள்.

மூன்றாவது சீட்டில் அமர்ந்திருந்த முனுசாமி, இரண்டு பேருக்கும் டிக்கட் எடுத்து விட்டதாகச் சொன்னார். அப்போது அவரைக் கூட நாம் மறந்துவிட்டோமே என்ற நினைவு தோன்றவே வசந்தி வேதனைப்பட்டாள்.

குறிப்பிட்ட இடத்தில் முனுசாமி தங்கள் வீட்டிற்குப் போவதற்காக இறங்கிக் கொண்டார். இன்னும் இரண்டு மைல் தூரம் சென்றால்தான் வசந்தி இறங்க வேண்டும். மாலை ஆறு இருபதுக்கு பஸ் வசந்தி இறங்க வேண்டிய இடத்தை அடைந்தது. கருகருவென இருளத் தொடங்கிவிட்டது. பஸ்ஸை விட்டிறங்கி வேகமாக வீட்டை நோக்கிச் சென்றாள் வசந்தி. இடையில் அவளின் அண்ணன் ஒருவர் எதிர்ப்பட்டார். "ஏன் இவ்வளவு நேரம்" என்று கேட்டு அவர் வசந்தியின் பதிலுக்கு காத்திராமலேயே சென்று விட்டார்.

தப்பித்தோம் - பிழைத்தோம் என வீட்டிற்குள் நுழைந்த வசந்திக்கு காதில் விழுந்த அந்த வார்த்தை நிலை தடுமாறச் செய்துவிட்டது. அப்படியே சமையல் கட்டிற்குள் நுழைந்தவள் அண்ணியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

# 19

குடும்பத்தில் பெண் பிள்ளைகள் பிறந்து விட்டால் உறவினர்கள் அடுத்தடுத்து சுப காரியங்களில் கலந்து கொள்வது தொன்று தொட்டு வரும் மரபாகும்.

மலர் மொட்டாகியிருக்கும் நிலைமை மாறி, மலர்ந்து சுகந்தம் பரப்பும் போதுதான் அதனுள் இருக்கும் தேனைக் குடிக்க வண்டினம் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். இது இயற்கையின் நியதியாகும்.

அதேபோல, ஒரு பெண் குமரியாகி பூத்துக் குலுங்கிவிட்டால் காளையர்கள் கண் வீச்சிலிருந்து தப்ப முடியாது. இந்த நேரத்தில்தான் உறவினர்கள் தங்களின் கடமையை எண்ணி பெண் கேட்டு வருவார்கள். இது தமிழர்களின் மரபாகும்.

“மாப்பிள்ளை பெண்ணைப் பார்க்க வேண்டியதில்லை. நாங்க பார்த்து சரியென்று சொன்னால் அவர் ஏற்றுக் கொள்வார்” என்று ஒரு பெரியவர் சொன்னதைக் கேட்டுத்தான் வசந்தி அதிர்ந்து போனாள்.

முன்னறையில் பெண்களும், ஆண்களும் பாய் விரித்து அமர்ந் திருக்க, நடுவில் பெரிய தாம்பாலத்தில் வெற்றிலை பாக்கு பழங்கள் ஆக்கிரமித்திருந்தன.

“அண்ணி இது என்ன வீட்டுக்கு யார் யாரோ வந்திருக்காங்க, என்ன விசயம்” என்று கேட்டாள் வசந்தி.

“எல்லாம் உன்னைப் பற்றிய விசயம்தான். எத்தனை நாளைக்குத் தான் நீ இப்படி தனி மரமா இருப்ப. உனக்கென்று குடும்பம் என்று ஒன்று வேண்டாமா. அதுதான் மாப்பிள்ளை வீட்டார் உன்னை பெண் கேட்க வந்திருக்காங்க” என்ற வசந்தியின் அண்ணி, “சீக்கிரமா முகத்தைக் கழுவிக்கிட்டு உடையை மாற்றிக்கொண்டு வா. எல்லோருக்கும் நீதான் தேநீர் கொண்டு போய் கொடுக்கணும்” என்று அவசரப்படுத்தினாள்.

“எனக்கு இப்ப திருமணத்திற்கென்ன அவசரம் அண்ணி. என்னக் கேட்காமல் இந்த திருமண ஏற்பாட்டை ஏன் செய்தீர்கள்?”

“இதுல உன்ன கேட்க என்ன இருக்கு வசந்தி. ஒரு பெண் எனக்கு திருமணம் செய்து வைங்கன்னு தன் வாயால கேட்கமாட்டா. அதெல் லாம் பெரியவங்களா பார்த்து செய்ய வேண்டிய வேலை. அதுதான் இந்த ஏற்பாடு. பேசாம போய் சீக்கிரமா உடையை மாற்றிக்கிட்டு தயாரா இரு” என்று அவளை அவசரப்படுத்தினாள் அண்ணி.

“அண்ணன் நீங்க ரெண்டு பேரும் என்ன நல்லா புரிஞ்சி வச்சிருக்கீங்க. உங்களை என் வாழ்க்கையில் தெய்வமா மதித்து வணங்கிறன்” என்றாள் வசந்தி.

"வசந்தி நீயும் நானும் சாதாரண மனிதர்கள். அதுவும் நீ எனக்கு உடன் பிறந்த தங்கை. உன் தேவைக்கு மாத்திரம் அல்ல. என் வாழ் நாள் பூராவும் உன்னைப் பாதுகாப்பதும் இந்த அண்ணனுடைய கடமையாகும்" என்றான் ஜெகதீஸ்.

"சரி வாங்க சாப்பிட்டுக்கிட்டே பேசலாம். நானும் வேலைக்குப் போகணும்" என்று காலை உணவை எடுத்து வைத்தாள் வசந்தியின் அண்ணி.

சாப்பிட அமர்ந்த வசந்திக்கு சாப்பாடு கசப்பாக இருந்தது. ராமுவைப் பற்றி சொல்லிவிடுவோமா என்று பலமுறை மனதிற்குள் புடம்போட்டுப் பார்த்தாள். ஒப்புக்கு சாப்பிட்டு எழுந்தவள், "அண்ணி" என்று கூப்பிட்டுக்கொண்டே அருகில் போய் நின்றாள்.

"என்னசொல்லு" என்று தேநீரை ஊற்றிக் கொண்டே கேட்டாள்.

"நான் சொன்னா தப்பா நினைக்க மாட்டீங்களே அண்ணி" என்றாள் வசந்தி.

"தப்பா ஒன்னும் நினைக்க மாட்டேன். தைரியமா சொல்லு" என்று தைரியப்படுத்தினாள்.

"அண்ணி நேற்று வந்தவர்கள் நம் உறவினர்களா, இல்ல கேள்விப் பட்டு வந்தவர்களா?" என்று கேட்டுவிட்டு அண்ணியின் முகத்தைப் பார்த்தாள் வசந்தி.

"நமக்கு சொந்தமென்று சொல்வதற்கில்ல. உங்கள் பெரியம்மா மூலமாகத்தான் கேள்விப்பட்டு வந்திருந்தாங்க. இவங்க வீட்டுக்கு வர்ரதே நமக்குத் தெரியாது. எல்லோரும் வந்த பிறகுதான் விசயமே தெரியும். கடிதம் போட்டுட்டு வரக் கூடாதான்னு உங்க அண்ணனே கேட்டார். அவர்கள் கடிதம் போட்டுட்டுதான் வந்தார்களாம். அந்தக் கடிதம் எங்களுக்கு கிடைத்திருக்காதுன்னு சொன்னாங்க. திடீரென்று வந்து பெண் கேட்க வந்தோமுன்னு சொன்னவுடனே எனக்கு கையும் ஓடல, காலும் ஓடல. அப்பொழுதுதான் உங்க அண்ணன் தோட்டத்தில் உள்ள பெரியவர்களை அவசரமாக அழைத்துப் பேசினார்.

"அதுவும் ஒரு வகையில் நல்லதுதான் அண்ணி. அவர்கள் யார் எவர்னுகூட தெரியாத நிலையில் பெண்ணைப் பிடித்திருப்பதாகச் சொன்னார்கள். நீங்களும் அவர்களின் விபரங்களைத் தெரிந்து கொள்ளாமல் என்னை பெண் கொடுக்கப் போவதில்லை என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டேன். இப்பத்தான் என் மனதில் நிம்மதி வந்தது" என்று கூறி தேநீரை வாங்கிக் குடித்துவிட்டு, "அண்ணி நான் போகிறேன். பஸ்ஸிற்கு நேரமாகிவிட்டது" என்றவாறே புறப்படத் தயாரானாள் வசந்தி.

“கொஞ்சம் அவசரப்படாமல் இரு. அடுத்த பஸ்ஸில் போகலாம் தானே” என்ற வசந்தியை நிறுத்தி வைத்துக்கொண்டே அவளின் அண்ணி, “அது சரி நான் உனக்கு சொல்ல வேண்டியத எல்லாம் சொன்ன. ஆனா நீ உன் மனசில உள்ளத சொல்லாம போனா எப்படி” என்றாள் வசந்தியின் அண்ணி.

“அண்ணி எனக்கு தாய் இல்ல. ஆனா அந்த குறை தெரியாம நீங்க என்ன வளர்த்து ஆளாக்கிட்டீங்க. இப்ப எனக்கு நீங்கதான் தாய். உங்களிடத்தில் நான் எதையும் மறைக்க வேண்டியதில்ல. அப்படி செய்தால் இத்தனை நாள் நீங்க என்மேல் காட்டிய அன்பிற்கு நான் துரோகம் செய்தது போலாகும். அண்ணன்மார் என் மேல் உயிரையே வைத்திருக்கிறாங்க. அவர்களிடம் என் மன நிலையை சொல்லாம மறைத்தால் என்னிடம் அன்பு கொண்டவர்களின் உள்ளம் என்ன பாடுபடும். அண்ணி நான் என் மனதில் உள்ளதை உங்களிடம் சொல்லப் போகிறேன். அத நீங்க தவறாக எடுத்துக்கக்கூடாது.”

“இதோ பார் வசந்தி, இதுல தப்பா எடுக்கிறதுக்கு ஏதும் இல்ல. சுத்தி வளைக்காம விசயத்த சொல்லு. ஏன்னா நாளைக்கு அவர் களிடமிருந்து கடிதம் ஏதும் வந்தால் நாம பதில் எழுதனுமில்ல. விசயத்த நாம தெரிஞ்சிகிட்டாத்தானே எதுவுமே செய்ய முடியும்” என்றாள் வசந்தியின் அண்ணி.

“அண்ணி நான் வேலை செய்யும் இடத்தில ஒருத்தர மனப்பூர்வமா நேசிக்கிறன். அவரும் என்னை விரும்புகிறார். அவரை நான் திருமணம் செய்து கொள்ளவும் சம்மதம் தெரிவித்துள்ளேன். இந்த வாரமோ அடுத்த வாரமோ அவர்கள் என்ன பெண் கேட்டு வருவார்கள். அண்ணி முன் பின் அறியாத ஒருத்தரோடு பல கஷ்டங்களை அனுபவச்சிக்கிட்ட வாழுறதவிட என்னை நன்றாகப் புரிந்து கொண்ட ஒருவரை மணந்து நிம்மதியா வாழுறது மேலில்லையா?”

“அது சரி அவரு யாரு எங்க வேலை செய்யிறார்” என்று கேட்டாள் வசந்தியின் அண்ணி.

“அண்ணி நான் வேலை செய்யும் சங்கத்தில உயர்ந்த மதிப்போடு சேவை செய்கிறார். அவர்கள் வீட்டாருக்கும் என்னை நன்றாகப் பிடித்து விட்டது. இந்த வீட்டு சம்பந்தம் நம்ம குடும்ப கௌரவத்த எந்த வகையிலுமே பாதிக்காது. நேற்றுகூட நான் அவரை சந்திச்சிட்டுதான் வந்தேன். அப்போதான் அவரோட தாயாரையும் சந்திக்க முடிந்தது. அவங்களும் ரொம்ப நல்லவங்க” என்றாள் வசந்தி.

இதைக் கேட்ட வசந்தியின் அண்ணி, “என்னங்க கேட்டீங்களா உங்க தங்கச்சி சொல்லுறத. நாம மாப்பிள்ளை பார்க்கிறதுக்கு முன்னாடி அவளே பார்த்து பேசி முடிச்சிட்டு வந்திருக்கா. இத்தன நாளா

எங்கிட்டக்கூட இதப்பத்தி சொல்லாம மறைச்சி வச்சிருக்கிறா" என்றவாறே ஜெகதீஸிடம் விஷயத்தைச் சொன்னாள்.

"காலையில் தங்கச்சிட முகத்தப் பாத்ததுமே நெனைச்சேன். அவ ஏதோ மனசுல வச்சிக்கிட்டிருக்கான்னு" என்றவன்,

"வசந்தி... வசந்தி... இங்கே வா" என அழைக்கவே, வசந்தி பயத்துடன் வெளியே வந்தாள்.

"என்ன வசந்தி ஓ அண்ணி என்னென்னமோ சொல்லுற, இதெல்லாம் உண்மையா? இதப்பத்தி இவ்வளவு நாளா அண்ணிக் கிட்டக்கூட செ ால்லாம மறைச்சி வச்சிருக்க இல்ல."

"இல்லண்ணா சமயம் வரும்போது சொல்லலாமுன்னுதான்..." என்று இழுத்தாள் வசந்தி.

"அது சரி. யார் அவர் எங்கே இருக்கார், சொல்லு. நானே பேசி முடிக்கிறன். உனக்கு வாழ்வில் எல்லாமாக இருக்கப்போகிற ஒருத்தர தேடிக்கொள்ள உனக்கு உரிமை இருக்கு. அதே சமயம், எங்களுக்கின்ன சில கடமைகள் இருக்கில்லையா? பெண்ணப் பெத்தவனும், வளர்த்தவனும் ஒரே விதமாகத்தான் வாழ்க்கையில இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்றுக் கொள்கிறோம். நீ யார விரும்புற என்று சொன்னா நாங்களே பேசி முடிப்போம். இதுக்காக நீ தப்பான முடிவேதும் எடுக்கக் கூடாது" என்றான் ஜெகதீஸ்.

"அண்ணே அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு வேண்டாம். நான் உங்கள் அன்பில் வளர்ந்தவள். உங்கள் கௌரவம் பாதிக்கப் படாமல் பார்த்துக் கொள்வது என் கடமை. முறைப்படி அவங்க பெண் கேட்டு வருவாங்க" என்றாள் வசந்தி.

"பரவாயில்லையே நீ இன்னும் சின்னப் பிள்ளைன்னு நாங்க நினைச்சிருந்தோம். ம்.... ஆள ரொம்பத்தான் முன்னேறிட்ட" என்று கிண்டலாகச் சொன்னாள் வசந்தியின் அண்ணி. வசந்தி வெட்கத்தால் தலைகுனிந்தாள்.

"பரவாயில்ல வசந்தி. அவரோட பெயரையாவது சொல்லு" என்று பதிலுக்காகத் தங்கையின் முகத்தைப் பார்த்தான் ஜெகதீஸ்.

"அண்ணன் அவர் வேறு யாருமல்ல. எல்லோருக்கும் நன்கு தெரிந்தவர். அவர் பேரை சொன்னா நீயே ஆச்சரியப்படுவ. நா இதப் பத்தி சாய்ந்தரமா பேசுறன். எல்லாத்துக்கும் அண்ணன் - அண்ணி உங்க ரெண்டு பேரோட ஆசீர்வாதந்தான் தேவை" என்றாள் வசந்தி.

"சரிம்மா எல்லாம் நல்லபடியா நடக்கட்டும். அதுதான் எங்கள் பிரார்த்தனை. வயதான காலத்துல அப்பாவுக்கும் இது நிம்மதியாக இருக்கும்" என்று தங்கையை வழியனுப்பி வைத்தான் ஜெகதீஸ்.

வசந்தி போன பின்பு, மனைவியிடம், "வசந்தி உள்ளதை சொல்லாம மறைச்சு மறைச்சு பேசுறா. ஏதும் கேட்டால் வேலை விட்டு வந்து சொல்றேங்கிறா. எனக்கு ஒன்னுமே புரியல்ல" என்றான்.

"உங்க தங்கச்சியப் பத்திதான் உங்களுக்குத் தெரியுமே. நானும் எத்தனையோ தடவை கேட்டுப் பார்த்துட்டேன். ஒரு வார்த்தைகூட சொல்லல்ல" என்றாள் வசந்தியின் அண்ணி.

வசந்திக்கு என்ன செய்வதன்றே புரியவில்லை. இருந்தாலும் ஒப்புக்காக முகத்தைக் கழுவிக் கொண்டு, ஒரு சாரியை அணிந்து கொண்டு, பளிச்சென்று நெற்றியில் குங்குமப் பொட்டையும் வைத்துக் கொண்டாள்.

வசந்தியின் அண்ணி வசந்தியின் கையில் தேநீர் தட்டைக் கொடுத்து "அவசரப்படாமல் சென்று தேநீரைக் கொடுத்துவிட்டு, எல்லோருக்கும் நமஸ்காரம் பண்ணிக்கனும்" என்றவள், தேநீர் தட்டுடன் சென்ற வசந்தியை, "வசந்தி இங்கே வா" என அழைத்து தன் கூந்தலில் இருந்த பூவை அவள் கூந்தலில் வைத்து "இப்ப போம்மா" என்று வசந்தியை அனுப்பி வைத்தாள்.

எல்லோருக்கும் தேநீரைக் கொடுத்துவிட்டு தட்டை, ஒரு புறமாக வைத்து எல்லோரையும் ஒரு முறை நிமிர்ந்து பார்த்து கைகூப்பி கும்பிட்டாள் வசந்தி.

அருகில் அமர்ந்திருந்த வசந்தியின் அண்ணன் ஜெகதீஸ், "இவள் தான் என் தங்கை" என்று வசந்தியை அறிமுகப்படுத்தி வைத்தான்.

மாப்பிள்ளை வீட்டுப் பக்கமிருந்து வந்திருந்த ஒரு பெரியம்மா எழுந்து வசந்தியோடு குசினிக்கு வந்தவள், தன்னை மாப்பிள்ளையின் பெரியம்மா என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள். வசந்தியைப் பற்றிய முழு விபரத்தையும் தெரிந்து கொண்டவள், மாப்பிள்ளையைப் பற்றியும் நிறையவே அளந்து கொட்டினாள்.

மாப்பிள்ளை தோட்டத்தில் சுபவைசர் வேலை செய்கிறார் என்றும். குடும்பத்தில் மூத்தவர் என்றும், இரண்டு தங்கைமார்கள் இருப்பதாகவும், மாமா, மாமி நல்லவர்கள், உனக்கு எந்தக் குறையும் இருக்காது. நீ தொடர்ந்து வேலை செய்யலாமென்பதைப் பற்றி வர்ணித்துக் கொண்டிருந்தாள்.

வசந்தி இவைகளையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாளே தவிர, வாய் திறந்து ஏதும் சொல்லவில்லை. மீண்டும் வெளியில் வந்து கூட்டத்தோடு அந்தப் பெரியம்மா சேர்ந்து கொண்டாள்.

பெரியவர் ஒருவர், இவர் மாப்பிள்ளையின் தகப்பனராக இருக்க வேண்டும், "பெண்ணை எங்களுக்குப் பிடித்திருக்கு. என் மகன் கிட்ட

ஒரு வார்த்தை சொல்லிட்டு உங்களுக்கு கடிதம் எழுதுகிறோம்" என்று வந்த விஷயத்தை முடித்துக் கொண்டார். இரவு எல்லோருக்கும் அங்குதான் விருந்து. எல்லோரும் சாப்பிட்டு முடிய ஆண்கள் ஒரு பக்கம், பெண்கள் ஒரு பக்கமாக படுப்பதற்கு ஆயத்தம் செய்யப் பட்டது.

வசந்தி தன் அண்ணியோடு குசினியில் படுத்துக் கொண்டாள். அவளுக்கு தூக்கம் வரவில்லை. நாம் ஒன்று நினைக்க இங்கு வேறொன்று நடக்கிறது. இந்த நிலைமைக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தவள், அப்படியே தூங்கி விட்டாள்.

அதிகாலையில் அண்ணி எழுப்பும்போது திடுக்கிட்டு எழுந்தவள், உடனடியாக செய்ய வேண்டிய காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அண்ணிக்கு உதவியாகச் சேர்ந்து கொண்டாள்.

வசந்தியின் அண்ணிதான் முதலில் பேச்சை ஆரம்பித்தாள். "என்னம்மா வசந்தி மாப்பிள்ளை பிடிச்சிருக்கா" என்று கேட்டாள். இதைக்கேட்ட வசந்தி கலகலவென சிரித்து விட்டாள். இவளின் சிரிப்பிற்கு அர்த்தம் புரியாமல், "என்ன என்று கேட்பதற்கு பதில் சொல்லாம பைத்தியக்காரி மாதிரி சிரிக்கிற" என்று முறைப்போடு கேட்டாள்.

"அண்ணி கோபப்படாதீங்க. உங்க கேள்வியே சரியில்ல. ஏன்னா மாப்பிள்ளை பிடித்திருக்கிறதா என்று கேட்டீங்க. ஆனா இங்க மாப்பிள்ளையே வரலியே. அப்ப நா எப்படி பதில் சொல்வேன்" என்றாள்.

அப்போதுதான் வசந்தியின் அண்ணி தன் தவறை உணர்ந்து கொண்டாள். "சரி உனக்கு மாப்பிள்ளை வீட்டாரை பிடிச்சிருக்கா?" என்று கேட்டாள்.

"அண்ணி மாப்பிள்ளை வீட்டாரை எனக்கு பிடிச்சிருக்கோ இல்லையோ, இந்த சம்பந்தமே எனக்குப் பிடிக்கவில்லை" என்று நறுக்கென்று பதில் சொன்னாள். அவளை கோபமாக முறைத்துப் பார்த்த வசந்தியின் அண்ணி, "ஏன் வேறு யாரையும் நீ முடிவு பண்ணி வைத்திருக்கியா?" என்று அதே வேகத்தோடு கேட்டு விட்டாள்.

அவளின் கேள்வி வசந்தியைத் தடுமாறச் செய்தது. ஆமா என்று சொல்வதா இல்லை என்று சொல்வதா என்று தவிப்பில் தடுமாறிக் கெண்டிருந்தாள்.

"என்ன மச்சினி யோசனை. உள்ளதை சொல்வதுதானே" என்று அதட்டினாற்போல் கேட்டவள் வேலையில் மூழ்கி விட்டாள்.

பக்கத்தில் வந்து அண்ணியைத் தழுவிக்கொண்ட வசந்தி "ஏன் அண்ணி நான் யாரையும் விரும்பியிருந்தால் நீங்க என்னக் கட்டி வைக்காவப் போறீங்க."

"சரி வேலையைப் பார். வந்தவர்கள் காதில் நம்ம பேச்சு விழுந்திடப் போகுது" என்று சொல்லவே வசந்தி தேங்காய் துறுவலை எடுத்துக் கொண்டு துறுவ ஆரம்பித்தாள்.

இரண்டு பேருமாக சேர்ந்து எல்லோருக்கும் காலை சாப்பாட்டை பரிமாறினார்கள். சாப்பிட்டவர்கள் காலை முதல் பஸ்ஸில் போவதற்கு ஆயத்தமானார்கள். புறப்பட்டுப் போகும் முன்பு "பெண்ணை எங்களுக்குப் பிடித்திருப்பதால் என் மகனும் அலட்டிக் கொள்ளமாட்டான். ஏதுக்கும் போய் கடிதம் போடுகிறோம்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்கள்.

ஆண்கள் விடைபெற்று வெளியே செல்ல, பெண்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக இரண்டு பெண்களிடமும் பேசிவிட்டு விடைபெற்றனர்.

அவர்களை வழியனுப்பச் சென்ற அண்ணன், திரும்பி வந்து தங்கச்சியைக் கூப்பிட்டார். "வசந்தி நாங்க பார்க்கிற இடம் என்று நீ தலையை நீட்ட வேண்டிய அவசியம் இல்ல. உன் மனதில் உள்ளத வெளிப்படையாகச் சொல்லிடணும். உன்னை சின்னப் பிள்ளையா இருந்தக் காலத்தில் எப்படி எப்படியெல்லாம் செல்லமா வளர்த்து எடுத்தோமோ அதேபோல நீ திருமணம் செய்து போகும் இடத்திலும் எந்த குறையும் இல்லாம இருக்கணும். அதுக்குப் பிறகு அண்ணன் இப்படி செய்திட்டாரே என்று கண் கலங்கக் கூடாது. உனக்கு யார் மேலும் விருப்பம் இருந்தா அத எங்கிட்ட மறைக்காம சொல்லு. ஏன்னா இது உன்னுடைய வாழ்க்கைப் பிரச்னை. அத நீ நினைவு வச்சிக்க" என்றான் ஜெகதீஸ்.

வசந்தி பதில் சொல்லமல் நின்று கொண்டிருந்தாள். அண்ணனின் பெருந்தன்மையான குணமும் எண்ணமும் அவளின் மனதிற்கு ஆனந்தத்தை அளித்தது. கண்களில் கண்ணீர் துளிர்விட அண்ணனை நிமிர்ந்து பார்த்தாள்.

"காலையில காட்டியும் என்னம்மா இப்படி அழுதுகிட்டு. அண்ணன்கிட்ட எதையும் மறைக்காம சொல்லு. உன் விருப்பத்த நிறைவேற்றி வைப்பதுதான் இந்த அண்ணன்ட கடமை."

இதைக் கேட்ட வசந்தி அண்ணா என அழைத்துக் கொண்டு அவன் மார்பில் முகத்தைப் புதைத்த வண்ணம் குமுறிக் கொண்டிருந்தாள். இவளின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு வீட்டிற்குள் வேலை செய்து கொண்டிருந்த வசந்தியின் அண்ணி ஓட்டமும், நடையுமாக வந்து, என்ன நடந்தது என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள். இவர்கள் இருவரின் நிலையைப் பார்த்து அவளும் சேலைத் தலைப்பை வாயில் வைத்துக்கொண்டு குமுறினாள்.

வசந்தி பெண்கள் அழுவதற்கென்றே பிறந்தவர்கள். அப்படி அவர்கள் அழுதா நிச்சயமாக அந்த அழுகைக்கு ஏதாவதொரு காரணம்

உண்டு. இப்படி பெண்கள் தொட்டதற்கெல்லாம் அழுதுக் கொண் டிருப்பதால்தான் இந்த சமுதாயத்தில் பல காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது. நீ படித்தவள். நாலு பேரோட பழகும் ஆற்ற லுள்ளவள். நீ இப்படி அழுதால் அதற்கு ஏதாவது அர்த்தம் இருக்க வேண்டும். அந்த விசயத்த சொன்னால்தானே எங்களுக்கும் புரியும். அதவிட்டுவிட்டு இப்படி அழுதுக் கொண்டிருந்தால் எந்த பிரயோஜனமும் கெடக்கப் போறதில்ல" என்றான் ஜெகதீஸ்.

"ஆமாங்க உங்க தங்கச்சிக்கிட்ட நா காலையிலேயே கேட்டன். மாப்பிள்ள பிடிச்சிருக்கான்னு. அவள் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள இல்ல இந்த சம்பந்தமே எனக்குப் பிடிக்கவில்லை அப்படின்னு சொல்லிட்டா. அப்போ நீ யாரையும் விரும்புறியான்னு கேட்டபோது நா விரும்பினா அத நீங்க செய்து வைப்பீங்களா அப்பிடின்னு கேட்டாள். அப்பவே எனக்கு விளங்கிப்போச்சு. இவ எதையோ மனசுல வச்சிக் கிட்டுத்தான் இப்படி சொல்றான்னு. உங்க தங்கச்சியோட மனசுல உள்ளத தெரிஞ்சிக்கிட்டா அப்புறமா என்ன செய்யறதுன்னு யோசிக் கலாம்" என்றாள் வசந்தியின் அண்ணி.

"சரி சரி கோவச்சிக்காத பர்வதம். அவ சின்னப் புள்ள. அதோட, அறையில் ஆடினா அம்பலத்துக்கு வந்துதானே ஆகணும். யார்னுதான் பார்த்திடுவோமே" என்றவாறே எழுந்துகொள்ள, இருவரும் தங்களின் தொழிலைக் கவனிக்கச் சென்றுவிட்டனர்.

மனிதன் பிறக்கும் போதே பெயருடனும் புகழுடனும் பிறப்ப தில்லை. அவனவன் முயற்சியும், அறிவுமே பெயரும், புகழும் அவனை தானாக வந்தடையச் செய்கிறது.

மனிதனின் உயர்வுக்கு அவனின் உழைப்பும், தியாகம், பண்பு, கொள்கை, இலட்சியங்களே முக்கியமாக அடித்தளமிடுகின்றன. குடிசைக்குள் பிறந்த எத்தனையோ பேர் இன்று உலகம் புகழும் அறிஞர்களாக தலைவர்களாக மக்கள் மத்தியில் திகழ்கின்றனர்.

இதற்கு ஒரு உதாரணம்தான் ராமு. ராமு சாதாரண தோட்டத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து தொழிலாளியாக தொழில் செய்து தோட்ட மக்களின் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டான். இந்த உணர்வு பூர்வமாக ஏற்பட்ட சுதந்திர எழுச்சியே அவனைத் தொழிலாளர்களுக்குப் பணிபுரிய தூண்டியதற்கு முக்கிய காரணம். அவனின் உணர்வுகள் மூலம் அவன் எடுத்த எந்தக் காரியத்திலும் இறுதிவரை விடா முயற்சியோடும் உண்மையோடும் உழைத்து வருபவன். ராமு என்ற இந்த இரண்டெழுத்துக்கள் இன்று தொழிலாளர்களின் இதயத்தில் ஒரு தெளிவான இடத்தைப் பிடித்துக் கொண்டன.

இந்த உயர்வுக்கு வருவதற்கு முன்பும், பின்பும் ராமு எத்தனையோ எதிர்ப்பு, போட்டி, பொறாமைகளை எதிர்நோக்கினான். அத்தனையையும் பொறுமை என்ற அணிகலனினால் வென்று தொடர்ந்து தொழிலாளர்களின் நண்பனைப் போல் பணிபுரிகின்றான்.

மருத்துவமனையில் இருந்து புறப்பட்டு வீட்டுக்கு வந்த ராமுவை தோட்டத் தொழிலாளர்கள் பெருந் திரளாகத் திரண்டு வந்து தங்களின் அன்பைத் தெரிவித்துக் கொண்டனர்.

இப்போது ராமு வீட்டிற்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. நாள் தோறும் நண்பர்கள், பெரியவர்கள் இப்படி பல பேர் கதைத்துக் கொண்டிருந்துவிட்டுப் போவார்கள். இவர்களை உபசரிக்க பெருமாயியம்மாவினால் முடியாது என்பதால் இந்த ஒரு வாரமாக சிவகாமி வேலைக்குப் போகாமல் வீட்டு வேலைகளைக் கவனித்து வருகிறாள்.

இந்த ஒரு வாரமாக ராமு எத்தனையோ நண்பர்களைச் சந்தித்து விட்டான். அதேபோல, நாள்தோறும் அவனுக்கு பலர் நலம் விசாரித்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்கள். இந்த இரண்டுமே ராமுவை உற்சாகப்படுத்துவதாக இருந்தன.

கடிதங்களுக்குப் பதில் எழுதுவதில் ஓர் ஆர்வம். அதில் சமூகத்தின் எதில்கால நிலை, ஒருவர் செய்யவேண்டிய பணியின் சொற்றொடர்கள் தாராளமாக அக்கடிதத்தை ஆக்கிரமிக்கும்.

இந்தத் தொடர்பும் நட்புமே மக்களிடம் ராமுவிற்கு நல்லதோர் அபிப்பிராயத்தை ஏற்படுத்தியது. இந்த ஒரு வாரத்தில் தன் இதயம் கவர்ந்த வசந்தியிடமிருந்து இரண்டு கடிதங்கள் வந்திருந்தன. அக்கடிதம் உடலுக்கு விட்டமின் மாத்திரைகள் போன்று உறுதியையும், உற்சாகத்தையும் கொடுத்தன.

ராமு திருமணம் செய்யப் போவது தோட்டம் பூராவும் பரவி விட்டது. இதை எல்லோரும் நல்ல சகுனம் என வரவேற்றார்கள்.

தலைவருக்குத் தெரிந்து அவரும் ராமுவிற்கு ஒரு கடிதம் போட்டிருந்தார். இச்செய்தி உண்மையானால் என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள் என்ற அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

திருமணத்தை விரைவிலே முடித்து வைப்பதிலேயே எல்லோரும் ஆர்வம் காட்டினார்கள். ஒரு காரியத்தில் இறங்கத் தீர்மானித்த பின்பு அதன் தேவைகளைப் பற்றி சிந்திக்கின்றோம். ராமு தன் பொருளாதார நிலைமையைச் சிந்தித்துப் பார்க்கிறான். தனது உழைப்பில் தாய் சாப்பிடுகிறாள். மாதா மாதம் வருவாய் கைக்கும் வாய்க்கும் சரியாக இருக்கிறது. பணத்தை யாரிடம் கேட்பது என்ற சிந்தனையோடு வீட்டை விட்டு வெளியேறி பஸ் நிலையத்தை நோக்கி நடை போட்ட ராமுவின் மனதில் பலவிதமான கேள்விகள் எழ ஆரம்பித்தன. பொதுப் பணியில்

ஈடுபட்டவன் எப்போதும் வறுமையில் வாட வேண்டியது நியதிதானோ? இவ்வாறு சிந்தனைக்குள் தன்னை ஆட்படுத்தி இருந்தான்.

அன்று காரியாலயத்திற்குள் அமர்ந்திருந்த ராமுவைப் பார்த்த பிரதிநிதி, "என்ன சார் ஏதோ கவலையோடு இருக்கிறீங்க" என்று கேட்கவே,

"இல்ல சார் நாம் யார் யாருக்கோ உதவி செய்கிறோம். நமக்கு என்று ஒரு பிரச்சினை வந்துவிட்டால் அதை நாமதானே சமாளிக்கணும்" என்றான் ராமு.

"அது சரிதான். இருந்தாலும் இப்ப நீங்க கவலைப்பட்டுக் கொள்ளும் அளவிற்கு என்னதான் நடந்துவிட்டது" என்று கேட்டார் பிரதிநிதி.

"பொதுவா எல்லோருமே அப்படித்தான் நினைப்பாங்க சார். ஆனா அவங்க அவங்களுக்குள்ள இருக்கிற பிரச்சினைகளை யாருமே அறிந்து கொள்ளமாட்டாங்க. உதாரணமா இப்ப என்னையே எடுத்துக்கோங்க. நாளைக்கு எனக்குத்தான கல்யாணம் காச்சின்னு வந்திச்சு. கையில ஒரு தம்பிடி இல்ல. எப்படி அந்தச் செலவை சமாளிக்கிறது?"

"என்ன சார் அப்படி நினைக்கிறீங்க. உங்களுக்கு ஒன்னுன்னு சொன்னா யாரும் உதவி செய்யாமலா இருக்கப் போறாங்க. நீங்க முயற்சி செய்தால் சங்கத்தில் கூட பணம் எடுக்கலாம்."

"சேச்சே அந்த நினைப்பே வரக்கூடாது சார். நம்ம கையில இருக்கும் வரை நம்மால முடிந்த அளவு செய்யணும். இறுதி நேரத்திலதான் அதப்பத்தி சிந்திக்கணும். நமக்குன்னு சில கடமைகள் இருக்குல்ல. அதைச் செய்வதில் தாமதம் ஏற்பட்டால் மாத்திரமே மற்றவர்களின் உதவியை நாடணும்."

# 20

அன்று மாலை வீட்டிற்கு வந்த ராமுவிடம் சிவகாமி ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். அது அரசாங்கக் கடிதம். அதை உடைத்துப் பார்த்தபோது உள்ளே காசோலை ஒன்று இருந்தது. அதை வெளியில் எடுத்துப் பார்த்தபோது, இருபத்து மூவாயிரம் ரூபாவுக்கான காசோலை ஒன்று இருந்தது. அதை நன்றாகப் பார்த்தான் ராமு. அக்காசோலை சிவகாமியின் பெயருக்குத்தான் எழுதப்பட்டிருந்தது.

கையில் காசோலையோடு பக்கத்தில் நின்றிருந்த சிவகாமியை கேள்விக் குறியோடு பார்த்தான் ராமு.

"என்னத்தான் அப்படி பார்க்கிறீங்க. இந்தப் பணம் அருண் அப்பாவின் பிரவிடாண்பண்ட் பணம். போன மாதம் எழுதினோமில்ல. இப்போதான் வந்திருக்கு. நல்ல நேரத்தில்தான் பணம் கிடைச்சிருக்கு" என்று சொன்னவள், வெளியே வந்த பெருமாயியம்மாளிடம், "அத்தை உங்கள் பிரச்னையே தீர்ந்து போச்சு. அத்தானுக்கு உடனடியா கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுதான். இந்தப் பணம் ஒரு நல்ல காரியத்துக்கு உதவட்டுமே. அத்தான் நாளைக் காலையில இதை மாத்திட்டு வாங்க. அதன் பிறகு என் திட்டத்தை சொல்றேன்" என்றாள் சிவகாமி.

"உன் திட்டம் என்ன சிவகாமி?" என்று கேட்டுக் கொண்டே கடிதத்தையும் காசோலையையும் சிவகாமியின் கையில் கொடுத்தான் ராமு.

"அத்தான் இந்தக் காசோலை உங்களிடமே இருக்கட்டும். நான் காலையில் வருகிறேன். அருணையும் கூட்டிக்கொண்டு போய் சல்லியை மாத்திக்கிட்டு வருவோம்" என்றாள் சிவகாமி.

"நான் என்னத்துக்கு சிவகாமி, அருணையும் கூட்டிக் கொண்டு போய் மாத்திட்டு வா" என்று தட்டிக் கழிக்கப் பார்த்தான் ராமு.

"அத்தான் பணம் எடுத்ததும் வீட்டுக்குக்கொண்டுவரக் கூடாது. ஒரு பகுதிய அருண் பேரில் பேங்கில் போடணும். மற்ற பகுதியைச் செலவுக்கு வைத்துக் கொள்ளணும்" என்றாள் சிவகாமி.

ராமுவின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த பெருமாயியம்மா, "அவதான் கூப்புடுறாயில்ல. போயிட்டு வாயேம்ப்பா. என்னமோ யாரோ எவரோ மாதிரி பதில் சொல்லிக்கிட்டிருக்க" என்று சொல்லவே, இடையில் சிவகாமி,

"ஆமா அத்தை அத்தானுக்கு இன்னும் ஏமேலுள்ள கோபம் தீரல்ல போலிருக்கு. எப்பவுமே என்ன யாரோ எவரோ மாதிரி நினைச்சிக் கிட்டிருக்காரு" என்றாள்.

"சரி சரி ரெண்டு பேரும் கொஞ்சம் பேசமா இருங்க. காலையிலே போவோம்" என்ற ராமு, காசோலையையும் வைத்துக் கொண்டான்.

அந்த நேரத்தில் வீட்டில் நுழைந்த அருண் "என்னம்மா அவசரம் எங்கே போகப் போறீங்க?" என்று கேட்கவே,

"நாளைக்கு அப்பா நீ நான் மூன்று பேரும் டவுனுக்குப் போயிட்டு வரணும். அதைத்தான் அம்மா அத்தானிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்."

"என்ன விசேஷம்" என்று தன் ஆத்தாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டான் அருண்.

"உங்க அப்பாவின் பிரவிடாண்பண்ட் பணம் வந்திருக்கு. அதை எடுக்கப் போக வேணும்" என்ற சிவகாமி,

"அத்தான் நான் காலையில் வர்றேன்" என்று புறப்படவே "அருண் அம்மவோட போயிட்டு சீக்கிரம வா" என்று அனுப்பி வைத்தான் ராமு.

ராமு காசோலையைக் கையில் வைத்துக் கொண்டே திண் ணையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். அவன் அருகில் வந்த பெருமாயியம்மா

"தம்பி சிவகாமி சொன்னத கேட்டியாப்பா. நம் பிரச்சினை எல்லாம் தீர்ந்து போச்சுதுன்னு சொன்ன அது என்னத் தெரியுமா? உன் கல்யாண செலவுகளைப்பத்தி நாம பேசிக் கொண்டிருந்தோம். இப்ப அவளுக்கு காசு வந்திருக்கு. அதுதான் நம்ம பிரச்சினை தீர்ந்ததா சொன்னா. எவ்வளவு இரக்க சுபாவமுள்ளவ சிவகாமி" என்றவுடன்,

"அம்மா அந்தப் பணம் நமக்குச் சொந்தமானதல்ல. அது அவளுக்கும் அருணுக்கும் செந்தமானது. அத நாம செலவு செய்யக் கூடாது. அதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்ல. இதப்பத்தி தப்பி தவறிக் கூட நாம அவக்கிட்ட பேசக்கூடாது."

"இல்லப்பா உன்ன ஒன்னும் பணத்த சும்மா வாங்க சொல்ல இல்ல. உனக்கு தேவையானத கேட்டு வாங்கினால் அப்புறம் நாம திருப்பிக் கொடுத்திடலாம் தானே."

"அம்மா திருப்பிக் கொடுக்கிறதும், கொடுக்காததும் வேற விசயம். இந்தப் பணம் இப்ப வந்திருக்காட்டி என்ன செய்திருப்போம். அதத்தான் நாம செய்யணும். ஆனா அவளுக்கு கெடச்ச பணத்த நாம நம்ம சந்தர்ப்பத்துக்கு பயன்படுத்திக்கலாங்கிற மட்டும் மறந்துடுங்க" என்றான் ராமு கோபமாக.

"என்னமோப்பா நான் என் யோசனையை சொன்னேன். அதற்கு மேல் உன் இஷ்டம். நான் ஏன் கடன் கேட்கப் போறேன். நானா கடன் கட்டப் போறேன்" என்றவாறே உள்ளே நுழைந்துவிட்டாள் பெருமாயியம்மா.

மறுநாள் காலை மூன்று பேரும் புறப்பட்டுப் போனார்கள். நேரே தபால் கந்தோர் சென்று காசோலையை மாற்றிக்கொண்டு வெளியில் வரும்போது சிவகாமிதான் முதலில் பேச்சை ஆரம்பித்தாள்.

"அத்தான் இந்த பணத்துல பத்தாயிரத்தை அருண் பேரில் பேங்கில் போட்டு வைப்போம். எதிர்காலத்தில அவன் தேவைக்கென்று வேணும்தானே" என்று சொல்லும்போது இடையில் குறுக்கிட்ட ராமு,

"ஏன் மிகுதிப் பணத்த என்ன செய்யப்போற? எல்லாத்தையும் அருண் பேரில போட்டு வைக்கிறதுதானே. இப்ப உனக்கு என்ன கஷ்டமா இல்லையே" என்றான்.

"இல்ல அத்தான். நான் சொல்கிறபடி செய்யுங்க. எனக்கு எவ்வளவோ செலவிருக்கு" என்று பேங்கை நோக்கிப் போனாள் சிவகாமி.

அருணுக்கு வயது போதாது என்பதால் சிறுவர் கணக்கில் போட ஏற்பாடு செய்தான். இதுபற்றி பேங் மனேஜரிடம் பேசி ஏற்பாடு செய்தான். அங்கிருந்து புறப்படும்போது ராமு "நேரா கடைக்குப் போய் சாப்பிட்டுப் போகலாம்" என்று தனக்குத் தெரிந்த கடை ஒன்றுக்கு கூட்டிக்கொண்டு போனான்.

உள்ளே நுழைந்ததும் "சார் வாங்க. என்ன விருந்தாளிகளோட வந்திருக்கிறீங்க. என்ன விசேஷம்?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே இருந்த சர்வரை கூப்பிட்டு சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்தார் கடை முதலாளி.

சாப்பிட்டுவிட்டு கடைத்தெருவுக்குப் போய் அருணுக்கும் சிவகாமிக்கும் பெருமாயியம்மாவுக்கும் சிவகாமியின் தாய்க்கும் தேவையானவற்றை வாங்கினாள் சிவகாமி.

அத்தானுக்கு என்ன வாங்கிக் கொடுப்பது என்று யோசித்துக் கொண்டே "என்ன வேண்டும் அத்தான்" என்று கேட்டாள்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம். உங்களுக்குத் தேவையானதை வாங்கிக் கொள்ளுங்க" என்று சொல்லவே, இடையில் குறுக்கிட்ட அருண் "அம்மா அப்பாவுக்கு நல்ல பேனா ஒன்று வாங்கிக் கொடுங்க" என்றான். அவர்களின் வற்புறுத்தலின் பேரில் ஒரு பாக்கர் பேனாவை வாங்கிக் கொண்ட ராமு "இந்த பேனா என்றும் உங்கள் இரண்டு பேரோட ஞாபகமா என்னிடம் இருக்கும்" என்றான்.

"நீங்க எங்கள மறந்தாலும் நாங்க உங்கள மறக்கமாட்டோம். என்ன அம்மா" என்று சிவகாமியின் முகத்தைப் பார்த்தவாறே அருண் சொன்னான். அருணின் பேச்சிலிருந்து அவன் சின்ன ஆள் இல்லை என்பதை நிரூபித்தான்.

அன்று தொழிற்சங்கக் காரியாலயம் போகாமல் நேரே தோட்டத்துக்குப் போக பஸ் நிலையம் வந்த ராமு, அருண், "அதோ நம்ம போர பஸ்" என்று காட்ட மூன்று பேரும் அதில் ஏறி அமர்ந்து கொண்டனர்.

மனிதன் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை. நினைக்காத நேரங்களில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடப்பதுண்டு. ஒரு மனிதன் சமூகத்தின் தேவைக்காக தன்னை அர்ப்பணிக்கும் போது, தன்னுடைய தேவைகள் பற்றி அவன் சிந்திப்பதில்லை. தன்னைப் பற்றி சிந்திக்கும்போது

எத்தனை துன்பங்களையும், துயரங்களையும் எதிர் நோக்குகிறோம் என்பதைப்பற்றி கவலையின்றி 'போனால் போகட்டும் போடா' என்ற நிலையில் பணியைத் தொடர்கிறான்.

நான் திருமணம் செய்ய நினைக்காத நேரத்தில் கை நிறைய பணம் இருந்தது. இப்போது இந்த காரியத்தைச் செய்ய துணிந்த போது கையில் பணமில்லை. என்ன உலகமென்று சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் ராமு.

அப்போது சிவகாமி கையில் கடிதங்களுடன் வந்தாள். ஆமாம் இப்போது ராமுவிற்கு வரும் கடிதங்களையெல்லாம் வாங்கி வரும் பொறுப்பை சிவகாமிதான் ஏற்றிருந்தாள். ராமுவிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றுவிட்டாள் சிவகாமி.

கடிதத்தின் மேலுள்ள விலாசத்தைப் பார்த்த ராமுவிற்கு அது யார் எழுதிய கடிதம் என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. அவன் உள்ளத்தில் இன்ப உணர்வுகள் ஊற்றெடுத்தது. அவசர அவசரமாக கடிதத்தைப் பிரித்து மௌனமாக வாசித்தான். திரும்பத் திரும்ப வாசித்துக் கொண்டே இருந்தான். அந்தக் கடிதத்தை வாசித்தவுடன் அவனுள் நிலை கொள்ளாத தவிப்பு ஏற்பட எதையோ அடையும் உணர்வோடு எழுந்து நடைபோட்டான். அவனின் சிந்தனைக் கதவுகள் திறக்க ஆரம்பித்தன.

'வசந்தி நீ யாரோ நான் யாரோ என்ற நிலையில் இருந்திருக்கலாம். இத்தனை வருடமாக என் அடி மனதில் உறங்கிக் கொண்டிருந்த இன்ப உணர்வுகளை உன் பார்வையால் மீட்டி விட்டாய். இப்போதெல்லாம் நீயில்லாமல் நான் இல்லை என்ற உள்ளப் பெருமித்தோடு என் அருகில் நீ வாழ வேண்டுமென்ற இன்பக்கிளர்ச்சியில் சிக்கித் தவிக்கிறேன். இதற்கு என் நண்பர்கள் சொல்கிறார்கள். நீ காலத்தோடு பயிர் செய்யாமல் உன் உணர்வுகளை அடக்கிப் பூட்டி வைத்திருக்கிறாய் என்று. இப்போது அது உன்னால் திறந்துவிடப்பட்டு விட்டது. இனியும் எந்த சந்தர்ப்பத்திலும் பூட்டி வைக்க முடியாது. இதை நீ உணர்வு பூர்வமாய் அனுபவிக்கிறாய். இந்தக் காதல் பொல்லாதது. இதை கூடிய விரைவில் நாங்கள் தீர்த்து வைக்க முயற்சி எடுக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆமாம் என் இதயக் கதவை திறந்தவள் நீதானே வசந்தி. என் இதயத்தில் குடி புகுந்தவளும் நீதானே வசந்தி. உன் இதழ்களில் புன்னகை தவழும்போது என்னையே மறந்த நிலையில் இருக்கிறேன். நீ உன் நாடகத்தை தொடங்கிவிட்டாய்.' இப்படி சிந்தனையில் லயித்திருந்த ராமுவின் கைகளிலிருந்து கடிதம் காற்றில் படபடத்தது. திடுக்குற்று சுய நினைவுபெற்ற ராமு கடிதத்தை மீண்டும் வாசிக்கலானான்.

அன்புள்ள அத்தானுக்கு!

உங்கள் அன்பு வசந்தி எழுதிக் கொள்வது!

உங்களோடு மருத்துவமனையில் வைத்து நான் கோபித்துக் கொண்டதை இன்று நினைக்கும் போதும் என்னில் வியப்பும் திகைப்பும் ஏற்படுகிறது. இந்த அளவிற்கு உங்கள் மேல் கோபம் கொள்ள நான் யார், எனக்கு என்ன உரிமை இருக்கிறது? என்றெல்லாம் நான் பல முறை யோசித்ததுண்டு. அன்று நான் கண்ட அந்தக் காட்சி உண்மை யாக இருக்குமா என்று நினைத்தபோது என் இதயமே வெடித்துச் சிதறிவிடும் போலாகிவிட்டது. இதற்கு முக்கிய காரணம், உங்கள் மேல் நான் உயிரினும் மேலான பாசம் வைத்துள்ளேன் என்பதால்தான். உண்மையைத் தெரிந்து கொண்ட பின்பு என் முட்டாள் தனத்தையும் அவசரபுத்தியையும் நினைத்து வேதனையும், வெட்கமும் கொண்டேன். அன்று அப்படி நான் நடந்து கொண்டதால் உங்கள் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை நான் இப்போது உணர்கின்றேன்.

அத்தான் நேற்று முனுசாமி சார் கடிதம் போட்டிருந்தார். அடுத்த வாரம் வீட்டுக்குப் பெண் கேட்டு வருவாங்க என்று. இந்த மகிழ்ச்சியான செய்தியை எப்படி எனது அண்ணன் மார்களிடம் சொல்வேன் என நான் தயங்கினேன். இறுதியில் என் அண்ணி மூலமாக என் விருப்பத்தை வெளிப்படுத்தினேன். இதனைக் கேள்விப்பட்ட அண்ணன்மார் அதிர்ச்சி யடைந்தார்கள். நான் நிலைமையை விளக்கிச் சொன்ன பிறகு என் விருப்பத்தைத் தட்டிக் கழிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

அப்பா இன்னும் சந்தேகத்தோடுதான் இதை அணுகுகிறார். சரி என்று நாம் சொல்லிவிட்டாலும் உங்கள் சொந்தக்காரர்கள் இதை எதிர்ப்பார்கள். அதனால் நீ துன்பப்பட்டால் அதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியாது. நன்றயாக யோசித்து முடிவு செய் என்று சொன்னார்.

மருத்துவமனையில் உங்கள் அம்மாவையும், அண்ணியையும் சந்தித்துப் பேசியது பற்றியும் சொன்னேன். இவ்வளவு நடத்தி விட்டுத்தான் இந்த நாடகமா என்று கேட்டுவிட்டார். இப்போது எல்லோரும் என் பக்கம்தான் இருக்கிறார்கள். இனி உங்கள் பாடு. நீங்கள் எப்போது வருவீர்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த போது தான் முனுசாமி சாரின் கடிதம் கிடைத்தது. உங்கள் வரவை எதிர் பார்த்துக் காத்திருக்கும்,

உங்கள் இதயராணி,

வசந்தி.

கடிதம் கிடைத்த மறுநாளே உறவினர்களோடு கலந்து பேசி அடுத்த புதன்கிழமை பெண் பார்க்க வருவதாக வசந்திக்கும், முனுசாமி சாருக்கும் கடிதம் எழுதிவிட்டர்ன் ராமு.

இப்போதெல்லாம் ராமு மாவட்டத்தோடு வேலைகளை முடித்துக் கொண்டு மாலையில் வீட்டுக்கு வந்து விடுவான். . அண்மையில் சங்கத்தின் முடிவின்படி, ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியைப் பொறுப்பெடுத்துக் கவனிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலை நேரங்களில் ராமுவின் வீட்டில் இரண்டு மூன்று நபர்கள் வந்து பேசிய வண்ணமிருப்பார்கள். கூடுதலான நேரம் ராமுவின் திருமணத்தைப் பற்றியே பேசுவார்கள்.

ஒருநாள் வேலை முடிந்து வந்த சிவகாமி, கொஞ்சம் பணம் கட்டுகளை அத்தை பெருமாயியம்மாவிடம் நீட்டி, "அத்தை இந்த பணத்த பத்திரமா வெச்சிருங்க. அத்தான்ட திருமண செலவுக்கு உதவும்" என்று சொல்லவே, திடுக்குற்ற பெருமாயியம்மா அதை வாங்க மறுத்தாள். மகன் ராமு கேள்விப்பட்டான் கோபப்படுவான் என பயந்தாள். "வேண்டாம்மா. இது உன்னோட பணம். பாவம் நீ புருசனை இழந்துட்டு வந்து நிக்கிற. உனக்கு எதிர்காலத்துல எத்தனையோ தேவைகள் இருக்கு. இதுக்கு இந்தப் பணம் உதவட்டும்" என்று தட்டிக் கழிக்கப் பார்த்தாள்.

"அத்தை, ஏன் அத்தை என்ன வேற்று மனிசியா நினைக்கிறீங்க. பணம் என்னோட புருஷனோடதுதான். ஆனா உங்களோட சுக துக்கங் கள்ள பங்கு கொள்ற உரிமை எனக்கு இருக்கு. அதனால இந்தப் பணத்த வாங்கிக்கிங்க" என்று வற்புறுத்தினாள்.

"சிவகாமி நீ சொல்றது உண்மையா இருக்கலாம். ஆனா இந்த பணத்த வாங்கினா ராமு என்ன சொல்வானோ தெரியல்ல" என்றாள் பெருமாயியம்மா.

"அத்த அத்தானப் பத்தி எனக்கு நல்லாத்தெரியும். அவரு ஒரு பிடிவாதக்காரர்தான். இருந்தாலும், அவரோட தொழில் என்ன. அவர் எவ்வளவு சம்பளம் வாங்கிறார், எப்படி செலவு செய்கிறார் என்பதும் எனக்குத் தெரியும். இதோ பாருங்க அத்த, பொது சேவையில ஈடு பட்டவங்க எல்லாம் எப்போதுமே ஏழைகள்ட நண்பர்களாகத்தான் இருக்க முடியும். தயவு செய்து இந்தப் பணத்த நீங்க வாங்கிக் கிங்க அத்த. இல்ல இன்னையோடு நம்ம உறவு முறிஞ்சிடும்" என்றாள் சிவகாமி.

"என்ன சிவகாமி நீ என்னென்னமோவெல்லாம் பேசிக்கிட்டு. பணத்த வாங்குறதில எனக்கொன்னுமில்ல. ஆனா ராமுவ நினைச்சாத் தான் எனக்கு பயமா இருக்கு."

"அத்த அத்தான்கிட்ட நான் பேசிக்கிறேன். நீங்க இந்த பணத்த எடுத்து வைங்க. கூடக் குறைய பேசினா, இந்தப் பணம் ஒன்றும் நான் உங்களுக்கு சும்மா தரல்ல. உங்க திருமணத்திற்காக கடனாத்தான் தந்திருக்க. அத்தையோட சேவிஸ் பணம் வந்தவுடனே திருப்பித்தாங்க.

அப்படின்னு ஒரு போடு போட்டுடறேன். அத்த நீங்க ஒன்னும் யோசிக்கதிங்க. நேரம் வரும்போது அத்தானோட பேசுறன். நீங்க பணத்த எடுத்து பத்திரமா வைங்க" என்று பணத்தை கையில் திணித்தாள்.

"சரிம்மா நீயே மன சந்தோஷத்தோட கொடுக்கும்போது என்னால் எப்படி மறுக்க முடியும், இதுல எவ்வளவு இருக்கு."

"பத்தாயிரம் ரூபா இருக்கு அத்தை. கடைசி நேரத்தில் போதாம போனா அதற்கும் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறேன். நீங்க இதப்பத்தி ஒன்றும் அத்தான்கிட்ட சொல்லாதீங்க. நான் போயிட்டு வாரேன்" என்று போய்விட்டாள்.

சிவகாமி போவதையே பார்த்துக் கொண்டிருந்த பெருமாயியம்மா அவளின் பெருந்தன்மையை நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டாள்.

'ம்..எப்படி இருந்தவ இன்னைக்கு இப்படி போயிட்டா. பெத்த வங்கபட்ட கடனை புள்ளகள சேருமுன்னு சொல்லுவங்க. அதுபோல அவ அப்பசெஞ்ச அந்த கல்யாணத்தால அநியாயமா இவ பலியா யிட்டா. இன்னைக்கு தன்னோட சுகதுக்கங்கள மறந்து மகனின் நலனுக் காக, அவனை ஆளாக்க வேணுங்கிறதுக்காக இவ்வளவு கஷ்டப் படுறா. இவளோட உழைப்பைத்தான் அவளின் வயது போன தாயும், மகனும் நம்பிக்கிட்டிருக்காங்க. இந்த நிலையில இவ வேர இப்படி கிடைச்சபணத்த எங்கிட்ட குடுத்துட்டுப்போறா.' இப்படியே யோசனை யில் ஆழ்ந்தவள், சிவகாமியின் உருவம் மறைந்தவுடனே சுய நினைவு பெற்றவளாக உள்ளே சென்று பணத்தைப் பெட்டியில் வைத்தாள்.

# 21

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை, பக்கத்து தோட்டத்தில் பொதுக் கூட்டம், அதற்கு அருணையும் கூட்டிக் கொண்டு போனான் ராமு. கூட்டத்தில் ராமு பேசியதையும், தொழிலாளர்கள் கை தட்டியதையும் பார்க்க அருணுக்கு அளவில்லா மகிழ்ச்சி.

கூட்டம் முடிந்து வீடு திரும்பும்போது, "அப்பா நீங்க இவ்வளவு அழகா பேசுவீங்கன்னு எனக்கு தெரியவே தெரியாது. நீங்க பேசின பேச்சுக்கு எப்படி மக்கள் கை தட்டினாரங்க" என்று ஆச்சரியத்தோடு சொன்னான் அருண்.

"என்னத்த பேசி என்னப்பா பிரயோசனம். நம்ம ஜனங்க இதப்பத்தி சிந்திக்கவே மாட்டாங்க. பேசும்போது மாத்திரம் கை தட்டுவாங்க. அப்புறம் என்ன பேசினோம் என்கிறதையே மறந்து விடுவாங்க.

இதுக்கு அவங்கள குத்தம் சொல்ல முடியாது. அவர்களின் நிலைமை நம்ம பேச்சை மறக்கடித்து விடும். இதை மாற்ற வேண்டுமானால் போராட வேண்டும். அதுதான் இப்பநாங்க செஞ்சிக்கிட்டிருக்கோம்" என்றான் ராமு.

"நீங்க சொல்றதும் உண்மைதான் அப்பா. ஒருநாள் நான் பாடசாலை வாசகசாலையில் ஒரு புத்தகத்தை எடுத்து வாசித்தேன். அப்புத்தகம் பேரறிஞர் அண்ணா சென்னையில் பல்கலைக்கழகம் ஒன்றில் ஆற்றிய உரையாகும். நிலையும் நினைப்பும் என்ற பெயரில் அந்தப் புத்தகம் வெளிவந்திருந்தது. அதில் அவர் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்-

ஐந்து மாடி கட்டிக் கொண்டிருக்கும் ஒரு தொழிலாளி ஐந்தாவது மாடியில் நின்று நினைக்கிறான், அப்பாடா நாம எவ்வளவு உயரத்திற்கு வந்து விட்டோம் என்று. அது அவனுடைய நினைப்பாகும். ஆனால் மாலையில் அதே தொழிலாளி தனது குடிசைக்குள் கூனிக் குறுகி நுழைகிறான். அது அவனது நிலை. ஆகவே மக்களின் நினைப் பிற்கும், நிலைக்கும் சம்பந்தமே இல்லை. இந்நிலை மாற்றப்பட வேண்டு மென்று பேரறிஞர் அண்ணா சொல்கிறார். அதேபோல நம்ம ஜனங்கள் எவ்வளவுதான் உழை த்தாலும், அவர்கள் நினைப்பதற்கேற்ற நிலை இல்லை. அதை சட்ட ரீதியாக மாற்றாத வரை எமது ஜனங்கள் மத்தியில் மாற்றங்களைக் காண முடியாது என அருண் கூறினான்.

அருண் நீ நான் நினைத்தைவிட வேகமாக முன்னேறி வருகிறாய். இந்த மாதிரி புத்தகங்களை வாசிக்கும்போது தலைமைத்துவம் எத்தகையது. எமது மக்களின் சராசரித்தேவை என்ன என்பதைப் புரிந்துகொள்ள முடியும். உலகில் பலர் வாழ்ந்து சென்றார்கள். இதில் ஒருசிலரே மற்றவர்களுக்கு வழிகாட்டியாக வாழ்ந்துள்ளார்கள். இத் தகைய நூல்கள் மற்றவர்களுக்கு வழி காட்டுகின்றன. பள்ளிப் பாடம் அறிவுக்கண்களைத் திறக்கிறது. அறிவு நூல்கள் பரந்து விரிந்த ஒரு சமுதாயத்தை நோக்கும் ஆற்றலைத் தருகின்றது. உழைக்கும் வர்க்கம் என்றுமே வறுமையோடு வாழவேண்டுமென்பது முதலாளித் துவ சித்தாந்தம். சமத்துவத்தோடு வாழவேண்டும் என்கிறது தொழிலாளித்துவம். இந்த இரண்டு வார்க்கத்திற்குமிடையே எழுந் துள்ள போராட்டங்கள் தான் உலகில் பல நாடுகளை ஆட்டிப் படைக் கின்றன. ஏழை பணக் காரன் என்ற வித்தியாசம் இருக்கும் வரை பொருளாதாரப் பிரச்சினை களும் வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் உலகில் தொடரத் தான் செய்யும். இதை மாற்றியமைக்க சட்டங்கள் மாத்திரம் உதவி செய்யாது. சமுதாயத்தின் அடிமட்டத்தில் தோன்றியுள்ள நோய்க்கு மருந்து கண்டு பிடித்து சுகம் பார்க்க வேண்டும். மேல்மட்ட சட்டத் திட்டங்கள் மக்களை மயக்கும் தந்திரங்க

ளாகத்தான் அமையும். இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டால் சமுதாயத்தின் வேற்றுமைகள், ஏற்றத் தாழ்வு நீங்கி, சமத்துவமும் சகோதரத்துவமும் ஏற்படும். அருண் இதை யெல்லாம் நான் சொல் வதைவிட, ஒருவன் அனுபவ ரீதியாகப் புரிந்து கொண்டு செயல் படுவதன் மூலமே சமுதாயத்தின் உண்மையான நோய் என்ன என்பதற்கு பரிகாரம் காணமுடியும்." இப்படியே பேசிக்கொண்டு இருவரும் வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

இருவரையும் வரவேற்ற பெருமாயியம்மா தேநீரை ஊற்றிக் கொடுக்கவே அதைப் பருகிவிட்டு இருவரும் ஆற்றை நோக்கிப் புறப்பட்டார்கள்.

அன்றிரவு திண்ணையில் அமர்ந்திருந்த ராமு தாயாரை அழைத்து, "அம்மா அடுத்த புதன் கிழமை நல்ல நாள். அன்று பெண் பார்க்க வருவதாகக் கடிதம் எழுதுகிறேன்" என்றான்.

அவனின் பக்கத்தில் அமர்ந்தவாறே "ஆமா ராமு நாளை சுணக்கிப் போடாமல் உடனே ஏற்பாடு செய். இந்த கட்டை உயிரோடு இருக்கும் போதே ஒரு நல்ல காரியத்த செய்து கண்களால் பார்த்துவிட்டு உயிரை விட்டால் எனக்கு மகிழ்ச்சிதான்" என்றாள் பெருமாயியம்மா.

"அப்படியெல்லாம் சொல்லாதீங்கம்மா. உங்கள் நீண்டநாள் ஆசையை நிறைவேற்றி வைக்க இப்பதான் எனக்கு தருணம் வந்திருக்கு" என்றவன் உள்ளே பார்த்து "அருண் ஒரு பேப்பரும் பேனாவும் எடுத்துக்கொண்டு வா" எனக் குரல் கொடுத்த ராமு, கடிதத்தை எப்படி எழுதுவது, எப்படி ஆரம்பிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்தான்.

மனித உறவுகளில் குடும்பஉறவு முக்கியத்துவம் பெற்றதாகும். குடும்ப உறவுகளே கூட்டு வாழ்க்கைக்கு அடித்தளமிடுகின்றன. ஓர் ஆணையும் பெண்ணையும் இணைக்கும்போது ஏற்படும் குடும்ப உறவு, சமூக வளர்ச்சிக்கும் உறவு முறைகளை ஏற்படுத்திக் குடும்பத்தை விரிவடையச் செய்வதற்கும் காரணியாக அமைகின்றன.

ஒரு குடும்பம் கணவன் மனைவி என்பதோடு மட்டும் நின்று விடுவதில்லை. அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, மாமா மைத்துனர் பிள்ளைகள் என்று விரிவடைகிறது.

சிந்தனையிலிருந்து விடுபட்ட ராமு முதலில் தன் நண்பன் முனுசாமிக்குத்தான் அங்கு வந்து பெண் வீட்டுக்குப் போவது பற்றி கடிதம் எழுதியதோடு அதை அவர்களுக்குத் தெரிவிக்குமாறும் கேட்டிருந்தான். பின் தன் காதலிக்கு வழமைபோல் ஒரு கடிதத்தை எழுதி அதில் முக்கிய குறிப்பு என்று குறிப்பிட்டு அவர்கள் பெண் கேட்டு வருவதையும் குறிப்பிட்டிருந்தான்.

கடிதத்தை எழுதி முடித்தவன் அப்படியே படுக்கையில் சாய்ந்தான். தூக்கம் வரவே. இல்லை. புரண்டு புரண்டு படுத்தான். படுக்கை முள்ளாகத் தைத்தது.

மறுநாள் காலை நேரம் சென்று விட்டதையும் உணராத ராமு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அப்போது அவன் பல இன்பக் கனவுகளைக் கண்டு கொண்டிருந்தான். அந்த சுகத்தில் எழும்ப மனமில்லாமல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த ராமுவை,

"அப்பா இரவு நீண்ட நேரம் தூங்காமலிருந்து கடிதம் எழுதினீர்களே. எங்கே அதை தபாலில் கொண்டுபோய் சேர்க்கட்டுமா?" என்று கேட்டுக் கொண்டே பர்டசாலைக்குப் போக ஆயத்தமானான் அருண்.

அருணின் சத்தத்தைக் கேட்டு இன்பக் கனவுகள் கலைய ராமு திடுக்குற்று எழுந்தான். எத்தனை மணிக்குத் தூங்கினோம் என்று அவனுக்கே தெரியவில்லை. சூரியன் பார்வை தன்மீது பட்டும் எழுந்திருக்காமல் தூங்கிவிட்டதை உணர்ந்தவன், "ஆமா அருண் அதோ தலையணைக்கு அடியில் இரண்டு தபால்கள் இருக்கின்றன. கொண்டுபோய் தபாலில் சேர்த்துவிடு. நான் கொஞ்சம் சுணங்கித்தான் போவேன். நீ புறப்பட்டுப் போ" என்றான்.

"இருங்க தேத்தண்ணி எடுத்துக்கிட்டு வாறன்" என்று உள்ளே சென்ற அருண் இரண்டு கோப்பைகளில் தேநீரைக் கொண்டு வந்து ஒன்றை ராமுவிடம் கொடுத்துவிட்டு, மற்றதை அவன் அருந்தினான்.

"அப்பா நான் போயிட்டு வர்றேன்" என்று புறப்பட்டுப் போன அருணை நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்த ராமுவை, "என்னப்பா நேரமாகிவிட்டது. எழுந்து முகத்தைக் கழுவி விட்டு சாப்பிடு" என்று சொல்லவே, அவசர அவசரமாகப் படுக்கையை விட்டு எழுந்தான் ராமு.

காலைக் கடன்களை முடித்துக்கொள்ள ஆற்றை நோக்கி நடந்தவன், அப்படியே குளித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினான். தலையில் எண்ணெய் வைத்து சீப்பை எடுத்துக் கண்ணாடி முன்னால் நின்று தலை வாரினான்.

திடீரெனத் துணுக்குற்று கண்ணாடியைப் பார்த்தான். அவன் தலைமுடிகள் செம்பட்டை நிறமாக மாறிவிட்டிருந்தன.

இத்தனை நாள் இதை கவனிக்காத ராமு, இன்று புதுமாப்பிள்ளை என்ற பெருமிதத்தோடு, கண்ணாடியைப் பார்த்தபோது தலையிலிருந்த முடிகள் அங்கொன்றும் இங்கொன்றும் நரை விட்டிருந்தன.

ராமுவிற்கு கவலயாகவும் போய்விட்டது. நாம் இதைக்கூடக் கவனிக்காமல் இருந்துவிட்டோமே என்றவன் அழகாக வாரிவிட்டு

புன்னகையோடு வீட்டினுள்ளிருக்கும் தாயைப் பார்த்தான். காலை உணவுகளை எடுத்து வைத்துவிட்டு தலைநிமிர்ந்து மகனைப் பார்த்து, "என்னப்பா அப்படி பார்க்கிற" என்று ராமுவின் முன்னால் வந்து நின்றாள் பெருமாயியம்மா.

"அம்மா என் தலை முடியைப் பார்த்தீங்களா. முடியெல்லாம் நரைக்கத் தொடங்கியிருக்கு. இப்ப நான் பெரிய மனுசனாகி விட்டேன் இல்லம்மா" என்றான் ராமு கிண்டலாக.

"ராமு இப்ப நீ பெரியவனோ இல்லையோ ஆனா எனக்கு என்னைக்கும் நீ சின்னக்குழந்தை தாம்ப்பா. வயதிற்கும் முடிக்கும் சம்பந்தமே இல்ல ராமு. அதவிட்டுட்டு வந்து சாப்பிடப்பா" என்றாள் பெருமாயியம்மா.

அலங்காரம் செய்து கொண்ட ராமு, நேராக வீட்டு மூலையில் சுவரில் மாட்டப்பட்டிருந்த சுவாமி படங்கள் முன்னால் வந்து நின்று வணங்கியவன், பக்கத்தில் மாட்டப்பட்டிருந்த தந்தையின் படத் தினையும் தொட்டுக் கும்பிட்டான்.

அப்பா நீங்கள் இல்லாவிட்டாலும், அம்மா என்ன ஒரு குறைய மில்லாம வளர்த்து ஆளாக்கிட்டாங்க. நான் எப்பவோ என் திருமணத் திற்காக உங்கக்கிட்ட ஆசீர்வாதம் கேட்டிருக்கணும். ஆனா அப்ப நீங்க என்ன ஆசீர்வதிக்க தவறட்டீங்க. இப்ப நான் தேர்ந்தெடுத் திருக்கிற பெண்ணை மனைவியாக அடைஞ்சு சீரும் சிறப்போடும் வாழ என்ன நீங்கதான் ஆசீர்வதிக்கணும். எனக்கு எந்த குறையும் ஏற்படாம என்ன நீங்கதான் பாதுகாக்க வேண்டும், என மனதிற்குள் வேண்டிக் கொண்டவன், விபூதியை நெற்றியில் இட்டுக் கொண்டு திரும்பினான். அவனின் கண்களில் கண்ணீர் உடைப்பெடுத்து வேட்டித் தலைப்பால் துடைத்துக் கொண்டு சாப்பிட அமர்ந்தான்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவனுக்கு தேநீரைக் கொண்டு வந்து வைத்த பெருமாயியம்மா, "என்னப்பா எப்போ பெண் வீட்டுக்குப் போக ஏற்பாடு செஞ்சிருக்க. நம்ம உறவுக்காரங்களையும் கூட்டிக்கிட்டுப் போக ஏற்பாடு செய்யப்பா" என்றாள்.

"அம்மா நம்ம முனுசாமிக்கு கடிதம் போட்டிருக்கேன். புதன் கிழமை நாங்க ஏழு பேர் வர்றதா. அங்கிருந்து ஒன்பது பேரா போக ஏற்பாடு செய்யசொல்லி இருக்கேன். இங்க இருந்து நான், அருண் நம்ம சித்தப்பா, சின்னம்மா இன்னும் மூன்று பெரியவர்கள் ஆக மொத்தமாக ஏழு பேர் போக ஏற்பாடு செய்திருக்கன்" என்றான் ராமு.

"ஆமாப்பா. அதுதான் நல்லது. கடவுள் நம்மைக்கைவிட மாட்டார். ஏதும் பிசகு இல்லாம போயிட்டு வாங்க. உங்க அப்பாவும் உங்களுக்கு துண்ணயா இருப்பாரு" என்றாள் பெருமாயியம்மா.

“அம்மா திருமணத்த ஏற்பாடு செய்திடலாம். செலவுப் பணத்திற்கு எங்கே போறதுன்னுதான் தெரியல்ல. அதோட, நமக்கு யாரும் உதவி செய்யிற நிலைமையிலும் இல்ல. அதுதான் யோசிச்சிக்கிட்டு இருக்கன்” என்றான் ராமு.

“ஆமா ராமு நானும் அதபப்பத்திதான் யோசிச்சிக்கிட்டு இருந்தன். நீதான் ஊருக்கு உழைக்கப் பிறந்தவனாச்சே. இந்த மாதிரி நேரத்தில் யார் உனக்கு உதவி செய்வா. நம்மிடம் நாலு காசு இருந்தால்தானே நமக்கு நல்லது.”

“அம்மா நீங்க எதுக்கும் கலப்படாதீங்க. நம்மை ஆண்டவன் கைவிடமாட்டார். யாராவது உதவி செய்ய முன்வருவாங்க. அவர்களுக்கு நான் வாழ்க்கைப் பூரா நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கேன். ம்... நேரம் வரும்போது எல்லாம் நல்லாவே நடக்கும்.”

“ராமு அப்படி யாராவது பணம் கொடுத்து உனக்கு உதவி செய்ய முன்வந்தா நீ அத சந்தோசமா ஏற்றுக் கொள்வியா” என்று ராமுவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் பெருமாயியம்மா.

“நீங்க கேக்கிறதப் பார்த்தா, என்னமோ பணத்தை தயாரா யாரோ வைத்திருக்கிற மாதிரியில்ல இருக்கு. சொல்லுங்க யார் உதவி செய்ய முன் வந்தது” என்று கேட்டான் ராமு.

“அதப்பத்தி இப்ப பேச வேண்டியதில்ல. நீ எல்லா ஏற்பாட்டையும் செய். பணத்தப் பத்தி பிறகு பார்த்துக் கொள்வோம். பணத்தப் பத்தி நீ யோசிக்கிறத விட்டுட்டு மத்த ஏற்பாடுகளப் பாரு ராமு” என்றாள் பெருமாயிம்மா.

மேலும் அம்மாவோடு வாதாட ராமு விரும்பவில்லை. இருந்தாலும் அம்மாவின் உறுதிமொழி ராமுவிற்கு பெரும் ஆறுதல் தந்தது. ஆனாலும், அம்மா யாரிடம் பணம் கேட்டிருப்பாங்க என்ற சந்தேகமும் ராமுவின் மனதிற்குள் எழுந்தது. அந்த சந்தேகத்தோடு எழுந்த ராமு கை கழுவிவிட்டு “அம்மா போயிட்டு வாறன்” என்று காரியாலயம் புறப்பட்டான்.

மாலையில் ராமு வீட்டிற்கு முன்னால் எதிர்ப்பட்ட சிவகாமி, “இதோ அத்தான் வந்திட்டார்” என்று சொல்லிக்கொண்டே வீட்டினுள் நுழைந்தவள், பெருமாயியம்மா ஊற்றி வைத்திருந்த தேநீரைக் கொண்டு வந்து ராமுவின் கையில் கொடுத்துவிட்டு, “அத்தான் புதன் கிழமை பொண்ணு கேட்கப் போகப் போறதா அத்த எங்கிட்ட சொன்னாங்க. மிகவும் கவனமா எல்லாத்தையும் பேசி முடிச்சிட்டு வாங்க. பெண் உங்க வரவுக்காக காத்திருப்பா. அவங்க வீட்டிலேதான் என்ன சொல்லுறாங்களோ தெரியல்ல. அவங்கள நமக்கு உறவுல்ல, அதனால நாமதான் கொஞ்சம் எச்சரிக்கையா நடந்து கொள்ளணும்.

அதோட வசந்தியும் இதப்பத்தி வீட்டுல சொல்லிவிட்டுதானே கடிதம் எழுதியிருக்கிறா. முனுசாமியையும் கூட்டிக்கொண்டு போறதால பயப்பட வேண்டியதில்ல. ம்.... இத்தன வருசமா என்னால நீங்க ஒரு சன்னியாசியா வாழ்ந்திட்டீங்க. இனி வசந்தி மூலமாவது இந்த குறை நிவர்த்தியாகணுமுன்னுதான் நான் காலை, மாலை கடவுளை வேண்டிக்கிறன். அத்தான் உங்க நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராது. சந்தோசமா, நம்பிக்கையோட போயிட்டு வாங்க" என்று சொல்லும் போதே அவள் கண்களிலிருந்து கண்ணீர் உடைப்பெடுத்து உருண் டோடியது. "அப்போ நான் போயிட்டு வாரன் அத்தான். அத்தை நான் போயிட்டு வாரன்" என்றவள், வீட்டை நோக்கி நடக்கலானாள்.

சிவகாமி போவதையே பார்த்துக் கொண்டிருந்த ராமு, வீட்டிற்குள் நுழைந்து "அம்மா அவன் சொன்னதைக் கேட்டீங்களா" என்றான்.

"கேட்டேன்; கேட்டேன்.. ம்.. அவ நம்ம வீட்டுக்கு வரவேண்டிய பொண்ணு. அவ அப்பங்காரன் பேச்சைக்கேட்டு இன்னைக்கு அவ வாழ்க்கையே கெட்டுப் போச்சு. எல்லாம் அவங்கவங்க தலைவிதிப்பா. அதுக்கு நாம என்ன செய்ய முடியும்?" என்றாள் பெருமாயியம்மா.

"அம்மா நான் சிவகாமி மேலே வச்சிருக்கிற அன்பை என்னைக் குமே மறக்க மாட்டேன். இப்போதெல்லாம் என்கொரு சகோதரி இல்லாத குறையைத் தீர்த்து வைக்கிறதே இந்த சிவகாமிதான்."

"சரி சரி சாப்பிட்டிட்டு வெள்ளனவே தூங்குங்க. காலையில் நேரத்தோடு வேலைக்குப் போகணுமில்ல" என்று சொல்லிக் கொண் டிருக்கும்போதே அருண் வீட்டிற்குள் நுழைந்தான்.

"வாப்பா அருண். சாப்பிடுவோம்" என அழைத்துக் கொண்டே ராமு சாப்பிட அமர்ந்தான்.

"ம்.... இந்த வேலைய ஒருத்தி பாரம் எடுக்கணும். அப்பதான் எனக்கு நிம்மதி" என்று கூறிக்கொண்டே இருவருக்கும் சாப்பாட்டை பரிமாறினாள் பெருமாயியம்மா.

# 22

அன்று புதன்கிழமை.

சமூகத்தில் பெண் பார்க்கப் போவது கேட்கப் போவது திருமணத்தின் முன் நடைபெறும் ஒரு மகிழ்ச்சிகரமான சடங்காக அமைகிறது. பெண் பார்ப்பது என்பதற்கும் பெண் கேட்பது என்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. பெண்ணைப் பார்த்துப் பிடித்தால் அதன் இரண்டாம் கட்டம் கேட்பது.

தமிழ் மக்கள் பெண் கேட்பது அல்லது முடிவு செய்வதே திருமணத்திற்கு முன்பு கட்டியம் கூறும் ஒரு சடங்காக நடத்துகின்றனர். அந்த கட்டியத்திற்கிணங்கவே சமுத்திரவல்லி தோட்டத்திற்கு ராமு பெண் கேட்டு போக ஆயத்தமாகிறான்.

அன்று ராமுவின் குடும்பத்தார் விடிகாலையிலேயே எழுந்து விட்டனர். முதல் பஸ்ஸில் போவதற்கு தயாராக ஏற்பாடுகளைச் செய்தார்கள். பெண் வீட்டிற்குப் போவதற்காக அழைக்கப்பட்டிருந் தவர்களும் முன்கூட்டியே வந்து சேர்ந்து விட்டார்கள்.

போக ஆயத்தமான ராமு பெருமாயியம்மாவின் காலில் விழுந்து கும்பிட்டபோது, "எல்லோரும் கவனமா போயிட்டு வாங்கப்பா, ராமு உன் காரியம் நல்லபடியா நடக்கணும்" என்று சொல்லி கையில் வைத்திருந்த விபூதியை எடுத்து ராமுவின் நெற்றியில் பூசி, அவனை ஆரத்தழுவிக் கொண்டு விம்மினாள். கூடியிருந்தவர்கள் அவளை அமைதிப் படுத்தினார்கள். பிறகு பெரியவர்கள் ராமுவிற்கு விபூதி பூசி ஆசீர்வதித் தவுடன் பெருமாயியம்மாவிடமிருந்து விடைபெற்று புறப்பட்டார்கள்.

இவர்கள் புறப்பட்டு பிரதான ரோட்டுக்கு வரவும் எதிரே பஸ் வரவும் சரியாக இருந்தது. கையைக் காட்டி பஸ்ஸை நிறுத்தி எல்லோரும் ஏறிக்கொண்டார்கள். காலை முதல் பஸ் என்பதால் கூட்டம் அவ்வளவாக இல்லை. ஒரு சிலரே இருந்தனர்.

பஸ் புறப்பட்டவுடன் ராமு திரும்பித் தோட்டத்தைப் பார்த்தான். பலர் லயத்திலிருந்து இவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந் தார்கள். அவர்களிடம் கையசைத்து விடைபெற்றுக் கொண்டவன், அருணைப் பக்கத்தில் அமர வைத்துக் கொண்டான். பெண் வீட்டிற்கு என்னென்ன பொருட்கள் வாங்க வேண்டுமென எல்லோரும் கதைத்துக் கொண்டே போனார்கள்.

பஸ்ஸைவிட்டு இறங்கியதும் முதல் வேலையாக எல்லோரையும் ஓரிடத்தில் ஓட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்று தேநீர் குடிப்பதற்கு ஏற்பாடு செய்தான் ராமு.

ஓட்டலிலிருந்து வெளிப்பட்டு பஸ் நிலையத்தை அடைந்தனர். பதினொரு மணிக்குத்தான் பஸ் இருப்பதாக தெரிந்து கொண்டான் ராமு. எல்லோரையும் ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, சின்னம்மாவையும் அருணையும் கூட்டிக்கொண்டு கடையில் சாமான் வாங்கச் சென்றான். முனுசாமி வீட்டிற்கும் பெண் வீட்டிற்கும்கொண்டு போவதற்கு தேவை யான சாமான்களை வாங்கிக் கொண்டு பஸ் நிலையத்தை அடைந்தான். பஸ் வருவதற்கும் இவர்கள் போவதற்கும் சரியாக இருந்தது. பஸ்ஸில் ஏறுவதற்கு நி றைய கூட்டமிருந்தது. அருணும் ராமுவும் முண்டியடித்துக் கொண்டு முன்னால் ஏறி எல்லோருக்கும் இடம் பிடித்துக் கொண்டனர்.

பஸ் சரியாக பதினொரு மணிக்குப் புறப்பட்டது. பஸ்ஸை விட்டிறங்கும் போது முனுசாமி பஸ் நிலையத்தில் தயாராக நின்றிருந்தான். எல்லோரையும் வரவேற்று வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அன்று பகல் சாப்பாட்டை முனுசாமி எற்பாடு செய்திருந்தான். வீட்டுக்கு வந்த எல்லோரையும் அன்போடு வரவேற்று உபசரித்தான் முனுசாமி.

ராமு வரும் செய்தி முன்பே முனுசாமிக்குக் கிடைத்திருந்ததால் தோட்டத்தில் பல இளைஞர்கள் ராமுவைச் சந்திக்க தயாராக இருந்தனர். அவர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு மீண்டும் சந்திப்போமென விடை கொடுத்து அனுப்பினான் ராமு.

முனுசாமியும் அவரின் மனைவியும் எல்லோரையும் சாப்பிட அழைத்து கைக்கழுவ தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். கைகளைக் கழுவிவிட்டு வரியாகப் போடப்பட்ட இலைகளுக்கு முன்னால் அமர்ந்து கொண்டனர். பக்கத்து வீட்டுப் பெண்கள் உணவைப் பரிமாறினார்கள்.

சாப்பிட்டு முடிந்ததும் வெளியில் அமர்ந்து மாலையில் சமுத்திரவல்லி தோட்டத்திற்குப் போவதுபற்றிப் பேசினார்கள். முனு சாமியின் ஏற்பாட்டின்படி அங்கிருந்து ஒரு வேனில் போவது என்று முடிவு செய்யப்பட்டது. அங்குள்ள இளைஞர் மூலமாக மாலை ஐந்து மணிக்கு வேன் தோட்டத்திற்கு வர ஏற்பாடு செய்தார்கள்.

பெண் வீட்டுக்கு கொண்டு போகும் சீர் தட்டுக்களை ஒருமுறை நோட்டம்விட்ட முனுசாமி, “எல்லாம் சரியா; இல்ல ஏதும் குறையிருக் கான்னு பார்த்து சொல்லுங்க” என்று மற்றவர்களைப் பார்த்துக் கேட்டான்.

ஐந்து மணிக்கு வேன் வந்தது. எல்லோரும் அதில் ஏறி அமர்ந்து கொண்டனர். சீர்தட்டுக்களையும் வரிசையாக எடுத்து வைத்தனர்.

இப்பயணம் சாதாரணமாக ஒரு மணி நேரத்தில் செல்லும் பயணமாகும். வேன் சமுத்தரவல்லி தோட்டத்தை நோக்கிப் புறப்பட்டது.

வசந்தி வீட்டைப் பொறுத்தவரை, இது ஒரு பொன்னான நாளா கும். ஆகவே இதை பலர் மகிழ்ச்சியுடன் அறியக் காத்திருந்தார்கள். பெண் வீட்டார் வீடு திருமண வீடாகக் காட்சி அளித்தது. பெண் வீட்டின் முன்பு திரளான இளைஞர்கள் கூடி நின்று ராமுவை வரவேற்கக் காத்திருந்தனர்.

வேன் சமுத்திரவல்லி தோட்டத்தை சரியாக ஐந்தரை மணிக் கெல்லாம் அடைந்தது. வேன் சத்தம் கேட்டு பலர் ஓடி வந்து வரவேற்றனர். வீட்டை நோக்கிச் சென்றவர்கள் திகைக்க ராமு ஆச்சரியத்தோடு பார்த்தான்.

அங்கே ராமுவிற்கு வரவேற்பு அமர்க்களமாக இருந்தது. ஒரு இளைஞன் ராமுவிற்கு மலர் மாலை சூட, .இன்னொரு இளைஞன் குங்குமத் திலகமிட்டான். அதோடு ராமு தொழிற்சங்கப் பிரமுகர் என்பதால் தொழிலாளர்கள் அதிக மரியாதை செலுத்தினார்கள். எல்லோருக்கும் நன்றி சொன்ன ராமுவை வசந்தியே முன்னின்று அழைத்துச் சென்றாள். வந்திருந்தவர்களுக்கு இந்த நிகழ்ச்சி பெரும் மகிழ்ச்சியை ஊட்டின.

வீட்டினுள் பெண்களும், இளைஞர்களும், பெரியோர்களும் குழுமியிருந்தனர். வீட்டின் நடு முற்றத்தில் உட்காருவதற்கு வசதியாக பாய்கள் விரிக்கப்பட்டிருந்ன. சீர் தட்டுக்களை நடுமையத்தில் வைத்து விட்டு இரண்டு வீட்டாரும் இருபக்கமாக அமர்ந்து கொண்டனர்.

வசந்தியும், அவள் தோழியும் எல்லோருக்கும் தேநீர் வழங்கினார்கள். அறிமுகத்தை முனுசாமி சார் தான் நடத்தி வைத்தார். ஒருவருக்கொருவர் வணக்கம் தெரிவித்துக் கொண்டனர். மாப்பிள்ளை வீட்டார் சார்பில் முனுசாமிதான் முதலில் பேசினார். சுருக்கமாக எல்லாவற்றையும்கூறி முறைப்படி பெண்கேட்டு வந்திருப்பதாகவும் சொன்னார்.

பெண் வீட்டார் சார்பில் பொன்னுசாமி கங்காணி பேசினார். "இந்த விடயத்தில நாம கூடுதலா ஒன்னும் பேசுறதுக்கில்ல. ஏற்கனவே இரண்டு பேரும் முடிவு செய்துவிட்டார்கள். அதே நேரத்தில் ராமு தம்பி நமக்கு மாத்திரமல்ல, நம்ம ஜனங்களுக்கே வேண்டியவர். அவருக்கு எங்க பொண்ண கொடுக்கிறதுல எங்களுக்கும் ரொம்ப சந்தோசம்" என்று கூறிவிட்டு பெண் வீட்டாரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். அவர்களும் பொன்னுசாமி கங்ககாணியின் கூற்றை ஆமோதித்தார்கள்.

வசந்தியின் தந்தை ராமுவைப் பார்த்து சொன்னான், "தம்பி வசந்தி எனக்கு ஒரே மகள் - தாயில்லாம எங்க பொறுப்பில் வளர்ந்தவள். இப்போ அவளுக்கு எல்லாமே என் மகன்மார்களும். மருமகள் மார்களும் தான். நீங்க என் மகள எப்படி விரும்பினீங்களோ, அதேபோல கடைசி வரை அவள கண் கலங்காம வைக்கணும். இதுதான் என் ஆசை. நம்ம இரண்டு பேரும் முன் பின் தெரியாதவங்க. உங்க இரண்டு பேருடைய பூரண விருப்பத்திலேதான் இத்திருமணத்தை முடிவு செய்தோம்" என்று முனுசாமியையும் பொன்னுசாமியையும் பார்த்து சொன்னார் வசந்தியின் தந்தை.

முனுசாமி எழுந்து நின்று, "உங்கள் பொண்ண கொடுக்கிற நீங்க பூரண சம்மதம் தெரிவிச்சதுல எங்களுக்கு ரொம்ப மகிழ்ச்சி" என்றார். வெற்றிலை பாக்கு பழம் நிறைந்த தட்டை எடுத்து வசந்தியின் தகப்பனார் ஞானத்திடம் கொடுக்க, அதை சந்தோஷமாக பெற்றுக் கொண்ட ஞானம், "உங்க ரெண்டு பேரொட வாழ்க்கையில ஏற்பட

போற மாற்றம்தான் நம்ம இரு வீட்டு உறவுகளையும் பலமடையச் செய்யும்" என்றவர், "திருமணத் திகதிய மாப்பிள்ளை வீட்டார்கள் முடிவு செய்து எமக்கு அறிவிச்சா அதற்கு ஏற்றவாறு நாங்களும் ஏற்பாடு செய்யத் தயார்" என்றார்.

இந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. கைகழுவ தண்ணீர் கொடுக்கப்பட்டது. எல்லோரும் வரிசை யாக அமர இலை போட்டு உணவு பரிமாறினார்கள். சந்தடி வாக்கில் வசந்தி ராமுவிடம் வந்து, "அத்தான் எல்லாம் நம்ம விருப்பப்படியே ஏற்பாடு செய்திட்டாங்க. இனி உங்க பாடுதான்" என்று கூறியவாறு ராமுவிற்கு பக்கத்தில் நின்று சாப்பாட்டை பரிமாறினாள்.

சாப்பாட்டு வேலைகள் முடிந்து எல்லோரும் அமர்ந்து அடுத்து செய்ய வேண்டியவைகளைப் பற்றி பேசத் தொடங்கினர்.

"சார் இனி நீங்கதான் திருமணத்திற்கு ஒரு நல்ல நாளாகப் பார்த்து திகதியை நியமிக்கணும்" என்று முனுசாமி ராமுவைப் பார்த்து சொன்னவர், "நீங்க திகதி தீர்மானித்த பிறகுதான் பெண் வீட்டார்கள் மாப்பிள்ளை வீட்டுக்கு வருவாங்க. அன்றே நிச்சயதார்த்தமும் நடத்திடுவோம்" என்றார்.

இரண்டு பேருக்கும் தேநீர் கொண்டு வைத்த வசந்தி, "சார் மாப்பிள்ளை என்ன சொல்லுகிறார்" என்று கேட்டாள்.

"வசந்தி என்ன இன்னைக்கு உங்க வீட்டுல பெரிய விருந்துக்கே ஏற்பாடு செய்தீட்டிங்க, இன்னைக்கு பெண் பார்க்கும் படலம் மட்டும்தானே நடந்தது. அதுக்கு இப்படி பெரிய விருந்தெல்லாம் தேவைதானா?" என்றான் ராமு.

"இல்ல அத்தான், எங்க வீட்டுல நான் செல்லமா வளர்ந்திட்டன். எனக்கு திருமணம் என்றவுடன் அதையே பெரிய விழாவா நடத்தணும் என்று ஆசைப்பட்டார்கள். அத்தான் பெண் பார்த்து முடிவு செய்வது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் குதூகலமான நாள்தானே. அதிலும் உங்களுக்கு பெண் கொடுக்கிறதுல எங்க வீட்டாருக்கு ரொம்ப சந்தோசம்" என்றாள் வசந்தி.

"என்னமோ நான் எடுத்த பொறுப்பை நிறைவேற்றிட்டேன். இனி நீங்கள் ரெண்டு பேரும்தான் பார்த்துக் கொள்ளனும்" என்று கை நழுவ பார்த்தான்.

"சார் சார் அவசரப்படாதீங்க. இனிமேதான் உங்களுக்கு நிறைய பொறுப்பு காத்திருக்கு. அத மறந்திடாதீங்க" என்று ராமு இடைமறித்துச் சொன்னான்.

"ஆமா சார் பாதியிலே எங்கள விட்டுட்டு போகலாமுன்னு பார்க்கா தீங்க. எங்க திருமணத்த நீங்கதான் முன்னின்று நடத்தி வைக்கணும்" என்றாள் வசந்தி.

"நான் என்ன முடியாதுன்னா சொன்னேன். இனிமே இது என் வீட்டுத் திருமணம் தானே" என்றான் முனுசாமி.

"அது சரி அத்தான். அத்தை, அக்கா எல்லாம் எப்படி இருக்காங்க, எங்கே அருணக் காணோம்" என்றவாறே சுற்றும்முற்றும் பார்த்தாள் வசந்தி. அங்கே அருண் அவன் வயதையொத்த சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

"வசந்தி அம்மாவுக்கு உன்ன ரொம்பவும் பிடிச்சிப் போச்சி. உன்ன கொண்டு போய் சேர்க்கும் பொறுப்பதான் நான் ஏற்றிருக்கிறேன்" என்றான் ராமு.

"அப்படின்னா உங்களுக்கு என்னப் பிடிக்கல்ல அப்படித்தானே. என்ன சார் நீங்களும் பாத்துக்கிட்டு இருக்கிறீங்க" என்றாள் வசந்தி முனுசாமியைப் பார்த்து.

"வசந்தி என் வாழ்க்கையில் ஒளியேற்றிய தீபமே நீதான். நான் உன்னை மறப்பேனா? நான் உன்ன் எவ்வளவோ ஆழமா நேசிக்கிறேன் தெரியுமா. எத்தனையோ பெண்களை பார்த்திருக்கேன். ஆனா அவர்களிடமெல்லாம் வெளிப்படாத என் உணர்வு உன்னைப் பார்த்த மட்டில் என்னுள் உறங்கியிருந்த வீணையை மீட்டிவிட்டது. நான் உன் நினைவிலேயே வாடினேன். பல நாள் சிந்தித்தேன். திருமணமே வேண்டாமென்றிருந்த என்னோட மனஉறுதியை மாற்றினவளே நீதான். உன்ன அடைவதில்தான் என் எதிர்கால வாழ்க்கையே அடங்கியிருக்கு" என்றான் ராமு.

"அத்தான் சிறு பிள்ளையாட்டமா துள்ளித் திரிந்த என்னை தடுத்து நிறுத்தியது உங்கள் வரவுதான். அதிலிருந்து மீள முடியாமல் துவண்டேன். முனுசாமி சாருக்கு அப்புறம் நடந்த முழுக்கதையும் தான் தெரியுமே. நம் திருமணம் இவ்வளவு சீக்கிரமா நடக்குமென நான் நினைக்கவில்லை அத்தான்" என்று நா தழுதழுக்கச் சொன்னாள் வசந்தி.

"என்னமோம்மா ராமு சார் திருமணமே வேண்டாமென்று பிரம்மச்சாரியா கடமையே கண்ணா இருந்தார். இவர் திருமணம் செய்யப் போற செய்தி நம்ம வட்டாரத்திலேயே ஒரு மகிழ்ச்சியான பரபரப்பை ஏற்படுத்தியிருக்குன்னா பாரேன்" என்றார் முனுசாமி. "எதிர்காலத்திலும் ராமு சாரின் பணி நல்ல முறையில் இடுக்கண் இல்லாம தொடர நீதான் துணையா இருக்கணும்" என்றார்.

"எந்தப் பணியில் இருக்கும்போது எங்கள் தொடர்புக்கு வழி ஏற்பட்டதோ, அந்த பணிக்காக உழைப்பது எனது கடமை சார்" என்றாள் வசந்தி.

"அந்த வார்த்தை ஒன்றுதான் உங்களின் எதிர்காலத்தை பிரகாசமாக இருக்கச் செய்யும்" என்றார் முனுசாமி.

"அத்தான் என்ன யோசனையில் ஆழ்ந்திட்டீங்க" என்று கேட்ட வசந்தி, "இதோ அண்ணனும் அண்ணியும் வாராங்க. கொஞ்சம் பேசுங்க" என்றாள்.

"என்ன வசந்தி அவங்களோட பேசிக்கிட்டிருக்கிற" என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்து இரண்டு பேரும் அமர்ந்து கொண்டனர். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வசந்தியும் அவர்களோடு ஒட்டிக் கொண்டாள்.

"தம்பி திருமணத்த ஆடம்பரமா செய்யாம சீக்கனமா பாருங்க. இந்தக் காலத்துல பல பேர் பலதையும் சொல்லுவாங்க. ஆனா வாழப் போறது நீங்கதானே" என்று வசந்தியின் அண்ணி பர்வதம் பேச்சை ஆரம்பித்தாள்.

"எங்களப் பொறுத்தவரை வசந்தியின் கல்யாணத்த சிறப்பாத் தான் செய்யணும். அப்பாவும் அதத்தான் விரும்புறார். முதலில் திகதியை நியமித்துவிட்டு, பின்பு எப்படி எப்படி செய்ய வேணுங்கிறதப் பத்தி பேசுவோம். நீங்க போனதும் கடிதம் போடுங்க" என்றான் ஜெகதீஸ்.

"ராமு அப்ப நேரமாகுது. நாம போகலாமா?" என்று ராமுவை ஆயத்தப்படுத்தினான் முனுசாமி.

"இந்த இரவில ஏன் போகப் போறீங்க? காலையில போலாம் தானே" என்றான் ஜெகதீஸ்.

"இல்ல தம்பி அதுதான் வேன் இருக்கே போயிடலாம். நாங்க திரும்பிப் போறதுக்கு வசதியாகத்தான் வேனையும் நிப்பாட்டியிருக் கோம்" என்றான் ராமு.

இதற்குள் எல்லோரும் புறப்பட ஆயத்தமானார்கள். வசந்தியின் முகம் சூம்பிப் போனதை ராமு கவனித்தான். "வசந்தி கவலைப்படாத. நம்ம திருமணத்தை சீக்கிரமா முடிக்க வேண்டிய ஏற்பாட்டை செய்யிறேன்" என்று அவளிடமிருந்து விடைபெற்றான் ராமு.

வீட்டிற்கு முன்பு திரண்டிருந்த சிலருடன் ராமு பேச வேண்டி யிருந்தது. இதற்கு முனுசாமிதான் ஏற்பாடு செய்திருந்தான். அத்தோடு, ராமுவையும் பேசுமாறு கேட்டுக்கொண்டான்.

"அன்பான பெரியோர்களே, சகோதர, சகோதரிகளே. இன்று நான் இங்கு வந்தபோது நீங்கள் கொடுத்த வரவேற்பு என்னைப் பிரமிக்கச் செய்துவிட்டது. நான் சிறிது நேரம் வந்த காரியத்தைக் கூட மறந்து விட்டேன். இந்த உற்சாகத்தையும் அன்பையும் நான் மதிக்கிறேன். இந்தத் திருமணம் ஒரு புதிய மாற்றத்தையே நம் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். சுயநலம், சுய தேவைகளுக்கு அப்பால் ஒரு படி மேலே சென்று நமது மக்களின் விடுதலைக்காக போராட நாம் தொடங்கிய

பணியைத் தடையின்றித் தொடர்வோம். நீங்கள் இன்று கொடுத்த ஆதரவை நான் இயக்க ரீதியாக கணிக்கிறேன். இயக்கத்தில் நான் கொண்டுள்ள பற்று அதில் கலந்திருப்பதை உணர்கின்றேன். எதிர்காலத்திலும் நமது பணிகள் வீறு நடை போடவேண்டும். என் திருமண விழா இயக்கத்தின் முக்கிய நிகழ்ச்சியாக நடப்பதையே நான் விரும்புகிறேன். அடுத்து நடக்கும் என் திருமண விழாவில் உங்களை உறவினராகப் பாசத்தோடும், அன்போடும் எதிர்பார்ப்பேன். எங்கள் இணைப்புக்கு உறுதுணையாக இருந்த முனுசாமியை நாங்கள் மறந்துவிடக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்" என்று பேச்சை முடித்துக் கொண்டு விடை பெற்றான்.

ஞானம் தலைவருக்குப் பெரும் மகிழ்ச்சி. நம்ம மகளை திருமணம் செய்யப் போறவர் மக்கள் மத்தியில் சேவையாற்றி புகழ் பெற்ற ஒருவர் என்பதால், வேனில் ஏறிய ராமுவுக்கு மகிழ்ச்சியுடன் விடை கொடுத்தார்.

வசந்தி வேனுக்கு அருகில் வந்து, "அத்தான் போனதும் கடிதம் எழுதுங்கள்" என்று கூறிவிட்டு அருணின் கன்னத்தில் தட்டி, "அம்மாவைக் கேட்டதாகச் சொல்" என்றாள்.

இரவு பத்து மணிக்கு வேன் புறப்பட்டது. பல நாள் பழகிப் பிரிந்த சோகம் இரு வீட்டார் இதயங்களிலும் குடிகொண்டிருந்ததை அங்கே உணரமுடிந்தது.

# 23

மக்களிடையே சமத்துவம், சம உரிமை என்ற நிலை இல்லாத போது போட்டியும், பொறாமையும், இன விரோத செயல்களும் தலை தூக்குகின்றன.

சமத்துவம் என்கின்றபோது மொழி ரீதியாக, இன ரீதியாக, அரசியல் சமூக, பொருளாதார ரீதியாக மதிப்பிடப்படுகிறது. இங்கு ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் இனக் குரோதமாக உருவெடுக்கின்றன.

இனக் குரோத வன்செயல்கள் ஏற்படும்போது சிறுபான்மை மக்களே பெரிதும் பாதிப்படைகின்றனர். இங்கே சிறுபான்மைத் தமிழ் மக்கள் இருப்பதால் இவர்களே தாக்கப்படுகிறார்கள்.

ராமு தோட்டம் போய்ச் சேர்ந்த இரண்டு நாட்களில் அந்தப் பகுதியில் தேர்தல் தோல்வியுற்றவர்களுக்கும், வெற்றி பெற்றவர் களுக்கு மிடையில் பெரும் மோதல்கள் இடம் பெற்றன. இதைத் தொடர்ந்து இனவாதமே தோன்றி சில நாட்களில் தமிழர்கள் தாக்கப்

பட்டார்கள். அவர்களின் உடைமைகள் சேதமாக்கப்பட்டன. உயிர்கள் பறிக்கப்பட்டன. இந்த இனவாத வன்செயல்களில் பெருந் தொகையான இனவாதிகளும், காடையர்களும் கலந்து கொண்டனர். வன்செயல்கள் காரணமாக கண்டிப் பகுதியில் பெரும் பரபரப்பும், அச்சமும் ஏற்பட்டன. பலர் இருந்த இடத்தைவிட்டு உயிருக்காகப் பாடசாலைகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

ராமு இருந்த தோட்டம் கிராமத்திற்கு அருகில் இருந்ததால் தோட்டத் தொழிலாளர் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். தொழிலாளர் களின் குடியிருப்புகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. உடமைகள் சூறை யாடப்பட்டன. தோட்டத் தொழிலாளர்கள் மாரியம்மன் கோவிலில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர்.

ராமு செய்வதறியாது தடுமாறினான். போக்குவரத்து இல்லை. டெலிபோன் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. வாகனப் போக்கு வரத்தும், மனித நடமாட்டமும் இல்லை. ஒரு மாதத்திற்கு மேலாக இந்நிலை நீடித்தது. இது ராமுவின் குடும்பத்தையும் வெகுவாகப் பாதித்தது.

சிவகாமியின் வீடு கொளுத்தப்பட்டது. சிவகாமியின் தாய் எரிந்த நிலையில் வீட்டிற்குள் அகப்பட்டுக் கொண்டாள். பெரும் சிரமத்திற்குப் பின்பு தோட்ட மக்கள் கருகிய உடலை வெளியே கொண்டு வந்தனர். தண்ணீர் தண்ணீர் என்று முனங்கிய பார்வதி யம்மா அவசர அவசரமாக கொடுத்த தண்ணீரை ஒரு முடக்கு குடித்துவிட்டு சுற்றும், முற்றும் பார்த்தாள். அவளின் பக்கத்தில் குலுங்கி குலுங்கி அழுது கொண் டிருந்த ராமுவை நோக்கி கையை நீட்டினாள். அதைப் புரிந்து கொண்ட ராமு அவளின் அருகில் வந்தான்.

தாயைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதுக் கொண்டிருக்கும் சிவகாமியும், பேரன் அருணையும் ராமுவின் கைகளில் ஒப்படைத்து விட்டு கண்ணை மூடி விட்டாள் பார்வதி.

சற்று முன்பு ஏற்பட்ட அச்சத்தையும், பயத்தையும் மறந்த தொழிலாளர்கள், ராமுவின் குடும்பத்திற்கு ஏற்பட்ட சோகத்தில் பங்கு கொண்டனர். நிலைமையை அனுசரித்து அன்று மாலையே தொழி லாளர்களின் உதவியோடு ராமு அத்தை பார்வதியம்மாவை அடக்கம் செய்தான்.

ஒருவாரம் இந்த துன்பத்திலிருந்து மீள முடியாமல் சிவகாமி தவித்தாள். பெண்களின் ஆறுதல் மொழியாலும் ராமுவின் அன்பினாலும் கொஞ்சம் கொஞ்சமாக அமைதியடைந்தாள்.

எத்தனை நாட்களுக்குத்தான் தொழிலாளர்கள் கோயிலில் தங்கி யிருக்க முடியும். பெரியவர்கள், சிறியவர்கள் என்று முந்நூற்றுக்கும் அதிகமானோர் அகதியாகிவிட்டனர். உணவுப் பிரச்சினையை

தோட்டத்துரை அங்கிருந்த கூட்டுறவு கடை மூலமாகத் தீர்த்து வைத்தார். இந்த வாழ்க்கையை உடனடியாக மாற்றியமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தொழிலாளர்களுடன் தோட்டக் காரியாலத்தை அடைந்த ராமு துரையுடன் பேச்சு வார்த்தை நடத்தினரான்.

துரை தொழிலளர்களிடத்தில் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். "நான் என்ன செய்ய வேண்டுமோ சொல்லுங்க. அதை செய்யிறேன்" என்று ராமுவைப் பார்த்தார்.

"சார் இப்போதைக்கு நம்ம தொழிலாளிங்க இருக்கிறதுக்கு அவங்க வீட்டை சரி பண்ணிக் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு தொழிலாளர்கள் தங்களின் தளபாட, உணவு சாமான்கள் வாங்க உதவி செய்ய வேண்டும். அதற்கும் தொழிலாளிங்க மத்தியில் அமைதி ஏற்பட்டதும் தொழிலை ஆரம்பிக்கலாம்" என்று ராமு தோட்டத்துரைக்கு சொன்னான். சிறிது நேரம் சிந்தனையில் இருந்த துரை தோட்டக் காரியாலயத்தில் இருந்த குமாஸ்தக்களை அழைத்தார். அவர்களிலும் சிலர் பாதிக்கப்பட்டிருந்தனர். சிறிய ஆலோசனைக்குப் பின்பு கட்டிடம் கட்டும் பாஸ்மார்களையும் காவல்காரன் மூலமாக அழைத்தார். கட்டிடங்கள் கட்டும் பாஸ் தோட்டத்தில் குடியிருந்தான். பாஸ் வந்ததும் தொழிலாளர்களின் குடியிருப்பை திருத்த என்னென்ன தேவை என்பதைப் பார்த்துக் குறிப்பெடுக்குமாறு பணித்தார். அதோடு அங்கிருந்து புறப்பட்ட பாஸை இடைமறித்து, "சிறிசேன இன்னும் இரண்டு மூன்று நாட்களில் தொழிலாளிகளுக்கு வீடு கொடுக்க வேணும். அதனால் தொழிலாளிங்களையும் கூட்டிக் கொண்டு போய் வேலையை ஆரம்பிக்கணும்" என்று சொன்னதோடு, ராமுவைப் பார்த்து "நீங்களும் கொஞ்சம் உதவி செய்யணும்" என்றார்.

அதற்கு ராமு "நாங்க என்ன உதவி செய்ய வேண்டுமோ அதை செய்யத் தயாரா இருக்கோம் துரை" என்றான்.

"ராமு நீங்க தொழிற்சங்கத் தலைவர். நான் தோட்டத்துரை. தொழிலாளிங்க வேலை செய்தால், நான் பேர் போட்டு சம்பளத்திற்கு ஏற்பாடு செய்வேன். பொலிசில் நீங்களும், நானும் கொடுத்த புகாருக்கு அவங்க நடவடிக்கை எடுக்கட்டும். இப்போ நாம ஜனங்களுக்குச் செய்ய வேண்டிய உதவி செய்வோம்" என்றார் தோட்டத்துரை.

"சார் தோட்ட நிர்வாகி என்ற முறையில் நீங்க செய்த உதவிகளை நாங்க என்னைக்குமே மறக்க மாட்டோம் சார்" என்று துரையிடமிருந்து விடை பெற்ற ராமு, தொழிலாளிகளைப் பார்த்து "சரி வாங்க. எல்லோரும் லயத்திற்குப் போவோம்" என்று சொல்லவே, எல்லோரும் ராமுவோடு புறப்பட்டனர். அவர்களோடு துரையும் புறப்பட்டார்.

"ராமு இந்த மாதிரி நடந்ததுக்கு நான் மிகவும் வெட்கப்படுகிறேன். இது நம்ம ஊரு. இங்கே இருக்கும் எல்லோரும் எங்களின்

சகோதரர்கள். இதை காடையர்கள் தெரிந்து கொண்டால் இந்த மாதிரி நடந்திருக்காது. அது மட்டுமல்ல, இந்த கட்சித் தலைவர்கள்தான் மக்களை இப்படி தூண்டி விடுகிறாங்க. அதனாலதான் அவங்களும் அந்த அநியாயங்களைச் செய்யிறாங்க. அரசியல் வாதிகளுக்கு நாட்டைப் பற்றியும் நாட்டு மக்களைப் பற்றியும் கவலையில்லை. அவர்கள் மக்களை ஏமாற்றி ஓட்டு எடுத்து அரசாங்கத்தைப் பிடிப்பதால் தான் இந்த மாதிரி குழப்பம் செய்யத் தூண்டுறாங்க. தோட்டத்து ஆட்கள் பாவம்தானே. அவங்கதான் இந்த நாட்டுக்கு உழைத்து உதவி செய்கிறாங்க. அவங்களை அரசியல்வாதிங்கதான் காப்பாற்ற வேண்டும். சில பெரிய ஆட்கள் பின்னுக்கு இருந்து இந்த மாதிரி தூண்டிவிட்டு லாபம் தேடப் பார்க்கிறது. அதுக்கு கடவுள் தண்டனை கொடுப்பான்." இப்படி தொழிலாளர்களோடு உரையாடிக் கொண்டே ஒவ்வொரு லயமாகப் பார்வையிட்டார் துரை.

மறுநாள் காலையில் வீடுகள் ரிப்பேர் செய்யும் வேலைகள் தொடங்கிவிட்டன. தொழிலாளர்கள் தங்களுக்கு முடிந்த வேலைகளைச் செய்தனர். வேலைத் தளத்திற்கு வந்த துரை வயதான பெண்மணி ஒருவரைப் பார்த்து, "என்ன பெரியம்மா சுகமா" என்று கேட்டார்.

"துரை புண்ணியத்துல எந்தக் குறையுமில்லாம இருக்கோம். மகாராஜன் நீங்க நல்லா இருக்கணும்" என்று துரையை வாழ்த்தினாள்.

"ம்... என்ன செய்யிறது பெரியம்மா. தோட்டத் தொழிலாளிங்கள்ட உழைப்புல மற்ற ஆட்கள்தான் பயனடையிறாங்க. நமக்கு ஒன்றும் பயனில்லை. நமக்கு யாரும் உதவி செய்ய முன்வாரதுமில்ல. தோட்டத் தைப் பார்த்தீங்களா எப்படி இருந்தது, இன்னைக்கு இப்படியாகி விட்டது. நாட்டு ஆட்கள் எல்லாம் இங்கே வந்து வேலை செய்யிறது. ஒரு ஆள் சரி இந்த அநியாயத்தை வந்து பார்க்க இல்லையே. இந்த ராமு மாதிரி பொடியன்கள் இங்க இருக்கிறதாலதான் உங்களுக்கு உதவி கிடைக்கிறது. இல்லாட்டி போனா நீங்க எல்லாம் பெரிய கஸ்டத் துலதான் இருக்கணும்" என்றார் துரை.

"தொரை சொல்றதும் சரிதாங்க. ராமு தம்பி இந்த தோட்டத்தில இல்லாட்டி போனா நாங்க எல்லாம் குருவி போல பரதேசம் போயிருப்போம்" என்றாள் ஒரு பெண்.

துரை அங்கிருந்து போனவுடன் அந்தப் பெண் மற்ற பெண்ணைப் பார்த்து, "இந்த துரை தோட்டத்துக்கு வந்து இருபத்தைந்து வருச மாச்சு. எத்தனையோ முறை இவரை மாத்தணும் மாத்தணுமுன்னு சொன்னாங்க. ஆனா கொம்பனி இவரை இங்கேயே வச்சிருக்கு. இதுக்கு காரணமே தொழிலாளிங்களோட எந்தக் கரைச்சலுமே இல்ல. அப்புறம் தோட்டத்தில இருந்து வருடா வருடம் ஆதாயம் கிடைக்குது. பின்ன ஏன் மாத்தப்போறங்க. ஆனா என்ன இருந்தாலும் தொழிலாளிங்

களுக்கு ஒன்னுன்னா மனுசன் முழு மனதோட உதவி செய்வார். அப்புறம் செக்ரோலில் பார்த்துக் கொள்வார். இருந்தாலும் ஆபத்துல உதவுறதுதானே மனுசத் தன்மை" என்றவுடன், மற்ற பெண்ணும் அவளின் கூற்றை ஆமோதித்தாள்.

அன்று மாலையே சில குடும்பங்கள் லயத்தில் குடியேற வசதி செய்து கொடுக்கப்பட்டது. அடிக்கடி தோட்டங்களுக்கு பொலிஸ் வந்து போய்க் கொண்டிருந்தது. பொலிஸ்காரர்கள் என்ன செய்வார்கள், எல்லாம் நடந்து முடிந்த பிறகுதான் வருவாங்க. அவங்க வர்ற நேரம் வன்செயல்காரங்க எல்லாம் மாயமா மறைஞ்சிடுவாங்க.

அன்றிரவு கோவில் வராண்டாவில் பாயை, விரித்து ராமுவும் அருணும் படுத்துக் கொண்டனர். தூரத்தில் ஓரிடத்தில் பெண்களோடு சிவகாமியும் ராமுவின் தாய் பெருமாயியம்மாவும் படுத்துக் கொண்டனர். கண்ணயரும் போது தோட்டத்துக் காவல்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். அந்தக் கடிதம் மாலையில் லொறி டவுனுக்குப் போனபோது கொண்டுவந்த கடிதமாக இருக்கவேண்டும். அதன் மேல் விலாசத்தை பார்த்த ராமுவிற்கு, இத்தனை நாளாக மறந்திருந்த வசந்தியின் ஞாபகம் நினைவிற்கு வந்தது.

அவசர அவசரமாகக் கடிதத்தைப் பிரித்த ராமு லாம்பு வெளிச் சத்தில் வாசித்தான்.

ராமுவின் தோட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைக் கேள்விப் பட்டு கண்ணீர் கொட்டி எழுதியிருந்தாள். ராமுவிடமிருந்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்பதால் பதை பதைத்துப் போய் இருப்பதாக அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள். அப்போதுதான் ஒரு மாதத்திற்கு மேலாகத் தொடர்பில்லாமல் இருந்ததை ராமு உணர்ந்தான்.

'ம்... நானும் வசந்திட வீட்டுக்குப் போயிட்டு வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. இன்னும் ஒரு கடிதம்கூட போடல்ல. எங்கே அதுக்குத் தான் அவகாசமே கெடக்கலியே. எல்லாம் இந்த வன்செய்ல செய்த விளையாட்டுத்தான் காரணம்' என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டவன், சந்தோஷத்துடன் எல்லோரையும் எழுப்பி கடிதத்தைக் காட்டினான்.

"நம்ம நிலைமை அவங்களுக்குத் தெரியாததுதானே. அதனால உடனடியா அவங்களுக்கு கடிதம் போடுங்க அத்தான்" என்றாள் சிவகாமி.

"ஆமா சிவகாமி. நானும் இங்க ஏற்பட்ட குழப்பத்துல எல்லாத்தையும் மறந்தே போயிட்டேன். கடிதத்தைப் பார்த்தா அவங்க பக்கம் ஒன்னும் கரைச்சலா தெரியல்ல" என்றான்.

மறுநாள் காலை முதல் வேலையாக இங்குள்ள நிலைமைகளை எழுதி கடிதத்தை தபாலில் சேர்த்துவிட்டுத் திரும்பிய ராமு, நேரே

ஆற்றுக்குக் குளிக்கப் போனான். எதிரே தண்ணீர் குடத்துடன் வந்த சிவகாமி அவனை நிறுத்தி, "அத்தான் இன்னைக்காவது நமக்கு வீட்டை ஒழுங்கு பண்ணுங்க. நாம எப்படித்தான் இன்னும் கோவில் திண்ணையிலேயே குடும்பம் நடத்தறது, மாமியும் பாவம். அதோட அத்தான், அம்மா இறந்தும் பதினெட்டு நாளயிட்டுது. அதுக்கு ஒரு காரியம் செய்யணும்" என்றாள்.

"சரி நான் குளிச்சிட்டு வந்துடுறேன். அப்புறமா வீட்டுக்கான ஏற்பாட்ட செய்வோம்" என்று வேகமாக ஆற்றை நோக்கிப் புறப்பட்டான் ராமு.

"அருண் அப்பாவை சாப்பிடச் சொல்லு. நானும் போய் இன்னைக்கு நமக்கு வீடு வேணுமின்னு துரைக்கிட்ட ஒரு வார்த்தை போட்டுட்டு வந்திடுறேன்" என்றாள் சிவகாமி.

இதைக் கேட்ட ராமு, "சிவகாமி நீ ஏன் சும்மா போய்கிட்டு இருக்கப்போற. நான்தான் கேட்டு ஏற்பாடு செய்யிறேன்னு சொன்னே யில்லை" என்று சத்தம் போட்டு சொல்லவே சிவகாமி அமைதியாகி விட்டாள்.

தோட்டத்து லொறியில் ரேசன் சாமான்கள் வந்திருந்தன. சின்ன கிளாக்கர்தான் எல்லோருக்கும் வழங்கினார்.

அங்கு குழப்பம் ஏற்பட்ட பின்பு தோட்டத்தில் உணவுப் பொருட்கள் கொடுக்கும் போதெல்லாம் ராமுவுக்கும் கொடுக்க வேண்டுமென்று துரை பணித்திருந்தார். அன்றும் பெரும்பாலான குடும்பங்கள் வீடுகளில் குடியேறிவிட்டன. இன்னும் ஐந்து குடும்பங்கள் மாத்திரமே கோவிலில் இருந்தன. அன்று மாலை காவல் காரன் வந்து ராமுவை துரை கூப்பிடுவதாகச் சொன்னான். நேராக ஆபீசுக்குப் போனான் ராமு. அங்கே துரையோடு ஏனைய உத்தியோகத் தர்களும் இருந்தனர்.

"ராமுவைக் கண்ட துரை ராமு வாங்க. உங்களத்தான் எதிர் பார்த்தோம். ஏன்னு சொன்னா, நாளைக்கே தோட்டத்திலே வேலையை ஆரம்பிக்கப் போறோம். தலைவர் மார்களிடமும் சொல்லியனுப்பி யிருக்கிறேன். நீங்களும் அதுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கணும்" என்றார்.

"நான் என்ன சார் தொழிலாளிங்க விரும்பினா தடுக்கவா போறேன். இதை நானும் வரவேற்கிறேன். எத்தன நாளைக்குத்தான் தொழிலாளிங் களும் வேலையில்லாம இருக்க முடியும்" என்றார் ராமு.

"அதோட ஒரு முக்கியமான விசயம் ராமு, நீங்க இனிமே கோவில்ல இருக்கவேண்டியதில்லை. உங்களுக்கு புதுசா கட்டின கொட்டேஜ் வீடு கொடுக்கப் போறேன். அந்த வீட்டுல நீங்க

குடியிருக்கலாம்" என்று சொன்ன துரை, கணக்கப்பிள்ளையைப் பார்த்து, "அந்த வீட்டை திறந்து விடுங்க" என்று உத்தரவிட்டார்.

"ரொம்ப நன்றிங்க. நாமும் இன்னைக்கு வீடு கேட்கத்தான் இருந்தேன்" என்று எல்லோரையும் பார்த்துச் சொன்ன ராமு அவர் களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு நேராக கோவிலுக்குப் போய் அம்மாவிடம், சிவகாமியிடம் விசயத்தைச் சொன்னதும் அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால் ராமுவின் மனதில் திடீரென ஏதோ நெருடுவது போல் தென்பட்டதால் அமைதியாக சிந்தனையில் மூழ்கி விட்டான்.

தொழிலாளர்களுக்குத் தலைமையேற்பவன் சுகத்தையோ ஆடம் பரத்தையோ எதிர்நோக்கினால் அவனின் இலட்சியம், கொள்கைகள் அனைத்தும் செல்லறித்த பேப்பருக்குச் சமமானதாகி விடுகிறது. தொழிலாளியை வழி நடத்துபவன் தொழிலாளியோடு இரண்டறக் கலந்து சகல நடவடிக்கைகளிலும் முழுமையாக பங்கு பற்றுவதே கொள்கையாகும். தொழிலாளர்களின் மேன்மைக்கும் மாத்திரமல்ல, அவர்களுடைய அடிப்படை தேவைகளைக் கண்டு பிடித்து அதற்கு பரிகாரம் காணுவதில் உறுதி பூண்டிருப்பவர்களை இலட்சியவாதி என்று கூறுவார்கள்.

'லயத்தில் காம்பரா கேட்கப் போன தனக்கு வசதியான வீடு தருவதாக நிர்வாகம் எடுத்த முடிவு சரிதானா! அதை நாம் ஏற்பது முறைதானா? என்ற யோசனையில் மூழ்கியிருந்த ராமு, அப்படி நாம் அதை ஏற்றுக் கொண்டால், தொழிலாளர்கள் நம்மை எவ்வாறு எடை போடுவார்கள். அவர்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயம் எற்பட இடமுண்டா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்தான்.

# 24

புதிய வீட்டில் குடியேறும் முன்பு இதுபற்றி சகல தொழிலாளர் களிடமும் அறிவிக்க வேண்டும் என எண்ணினான். தோட்டக் கமிட்டித் தலைவரைக் கூப்பிட்டு நேற்று மாலை நிர்வாகம் எடுத்த முடிவைத் தெரிவித்தான். இதைச் செவிமடுத்த தலைவர், "இதை தொழிலாளர் கள் மறுக்க மாட்டார்கள். தப்பாக நினைக்க மாட்டார்கள்" என்று உறுதியாகச் சொன்னார். இந்த உறுதி ராமுவின் மனதிற்கு சற்று ஆறுதலாக இருந்தது. அன்றே அவன் புதிய வீட்டில் குடியேறினான். ராமு புதிய வீட்டில் குடியேறிய செய்தி தோட்டம் பூராவும் பரவி விட்டது.

அன்று மாலை நன்றாக குடித்துவிட்டு மதுபோதையுடன் வந்த சடையன், "தொழிலாளியின் பெயரை வைத்து நீ பங்களாவில் குடியேறிட்டியா" என்று ராமுவின் வீட்டு வாசலில் நின்று கத்தினான்.

வெளியில் வந்த ராமு "என்ன சடையண்ணெ நீங்களே இப்படி பேசினா எப்படி" என்றான்.

"வேற என்னப்பா பேசச் சொல்ற. இதுக்குத்தான் தொழிலா ளிக்கு வேண்டியவன் மாதிரி இத்தனை நாளா வேசம் போட்டியோ" என்று கேட்க,

'ஐயோ ஆண்டவனே இது என்ன சோதனை. நான் இத்தனை நாளா செய்த தியாகமெல்லாம் இந்த சின்ன விசயத்தில பாதிக்கப் பட்டு விட்டதே' என்று வருத்தப்பட்டவன், "சடையண்ணெ வீட்டுக்கு வாங்க, அமர்ந்து பேசுவோம். தொழிலாளிகளுக்கு விரோதமா நா என்னைக்குமே நடக்க மாட்டேன்" என்றான் ராமு.

"அப்படித்தான் நாங்களும் நெனைச்சிருந்தோம். உன்னைவிடப் பெரிய குடும்பமெல்லாம் லயத்து காம்பராவில் இருக்கே. அவங் களுக்கு இந்த வீட்டைக் குடுத்திருந்தா நான் உன்னோட சேவையை மதிச்சிருப்பேன்" என்றவாறு பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தான். இந்த சத்தத்தைக் கேட்டு தோட்டத் தலைவர் உட்படப் பலர் அங்கு குழுமி விட்டனர். சடையனை சமாதானம் செய்து கூப்பிட்டுக்கொண்டு போனார்கள். இருந்தாலும் சடையனின் இந்தப் போக்கு ராமுவின் மனதை வெகுவாகப் பாதித்து விட்டது. தோட்ட ஆபிசிற்குப் போய் விசயத்தைச் சொன்னான். துரை ஆச்சரியப்பட்டார். "என்ன உங்களுக்கு பெரிய வீடு கொடுத்ததப்பத்தி மத்தவங்க இப்படியெல்லாம் பேசினாங்களா? ராமு நீங்க பேசாமல் வீட்டுக்குப் போங்க. நாளைக்கு எல்லாம் சரியாகப் போய்விடும்" என்று ஆறுதல் சொன்னார்.

"இல்ல சார் எனக்கு லயத்திலே நான் முன்பு குடியிருந்த வீட்டை திருத்திக் கொடுத்திடுங்க. இந்த கெட்டப் பெயரெல்லாம் வேண்டா முங்க" என்றான் ராமு.

"மிஸ்டர் ராமு நான் சொல்றதக் கொஞ்சம் கேளுங்க. இப்ப நீங்க வீட்டுக்குப் போய் நல்லா யோசனை பண்ணி காலையில் வந்து சொல்லுங்க" என்றார் துரை.

ராமு நேராக கோயிலுக்கு வரும்போது தோட்டக் கமிட்டித் தலைவர் சுப்பிரமணியமும் எதிரே வந்து கொண்டிருந்தார். ராமு என்ன சொல்வது என்று புரியாமல் முன்னே நடக்க பின்னால் சுப்பிரமணியம் நடந்துக் கொண்டிருந்தார்.

யார் முதலில் பேசுவது என்ற அமைதியை ராமுதான் கலைத்தான். "நான் அப்பவே துரைக்கிட்ட சொன்னேன் சுப்பிரமணியம் அண்ணே.

தொழிலாளிங்க தப்பா நெனைப்பாங்க. அதனால எனக்கு வேணா முன்னு. கேட்டாதானே. இப்ப அது சரியாப் போச்சு."

"ராமு தம்பி சடையன் சொன்னதை வச்சி எந்த முடிவுக்கும் வந்துடக்கூடாது. நீங்க இந்த வீட்டிற்கு குடிவந்தத எல்லோருமே மனப் பூர்வமா ஏத்துக்கிட்டிருக்காங்க" என்றான் சுப்பிரமணி.

"அதெப்படி அண்ணே நமக்கு வேண்டிய சடையனே இதை எதிர்த்து பழி சுமத்தும்போது மற்றவர்கள் நிலைமை எப்படியிருக் குமின்னு சொல்ல வேண்டியதில்லை."

"ராமு தம்பி சடையன் குடி போதையில அப்படிச் சொல்லிட்டான். இப்ப அவன கூட்டிக்கிட்டு வரசொல்லி ஆள் அனுப்பிட்டுத்தான் வந்திருக்கேன்" என்றான் சுப்பிரமணி.

"அண்ணே ஏன் இந்த வம்பெல்லாம். அவன் மறுபடியும் ஏதாவது தாறுமாறா பேசினா நமக்குத் தானே கேவலம். நான் லயத்துக்குப் போவதுதான் சரி" என்றான்.

"ராமு தோட்டத் தொழிலாளிங்க அப்படி நினைக்கவே இல்ல. நீதான் ஏதோவெல்லாம் கற்பனை பண்ணிக்கிட்டு இருக்க. அவங்க எல்லாம் நீ வசதியா வாழுறதத்தான் விரும்புறாங்க. அதுமாத்திரமல்ல, சிவகாமியும் இனி உங்களோடதான் இருக்கப் போவுது. இந்த நிலைமையில் லயத்தில ஒரு காம்பரா எடுத்துக்கிட்டு நீங்க எப்படி வசிக்கப் போறீங்க. அப்புறம் இதே ஆட்கள் வேறு கதைகளையும் கட்டலாம். அதெல்லாம் வராம இருக்கணுமின்னா நீங்க துரை கொடுத்த வீட்டுக்குப் போவதுதான் நல்லது" என்றான் சுப்பிரமணி.

சுப்பிரமணியின் பேச்சு ராமுவின் மூளையில் பொறி தட்டியது போலிருந்தது. "ஆமா சிவகாமியும் இனி நம்மலோடுதான் இருக்கப் போறார். இந்த நிலைமையில லயத்துல எப்படி..." அவன் யோசித்தான்.

"ராமு தம்பி எதப்பத்தியும் யோசிக்காம நீங்க தைரியமா தொரை குடுத்த வீட்டுக்கு போங்க. அதனால் உங்கள் பிரச்சினையும் தீரலாம். அதோட, உங்களோட கல்யாணத்துக்குப் பிறகும் அது கொஞ்சம் வசதியா இருக்குமில்ல" என்றார்.

"ஆமா அண்ணே நீங்க சொல்கிறபடி செய்யிறேன். அதுக்கு வேண்டிய உதவிகள செய்யுங்க" என்றவாறே இருவரும் கோவிலுக்குள் நுழைந்தனர்.

உள்ளே வேலையாக இருந்த சிவகாமி இவர்களைக் கண்டதும், "போன காரியம் என்னாச்சி அத்தான்" என்றாள்.

"அதெல்லாம் நல்லபடியா முடிஞ்சிருச்சி சிவகாமி. இப்ப எங்க ரெண்டு பேருக்கும் தேத்தண்ணி கொண்டுவா" என்றவாறே படிக்கட்டில் அமர்ந்து கொண்டான்.

அகதிகளாக இருந்த அனைவரும் இப்போது மீண்டும் தங்கள் தங்களின் வீடுகளில் குடியேறிவிட்டனர். வழமைபோல் தொழில் செய்யவும் ஆரம்பித்து விட்டார்கள். மிச்சமுள்ள இரண்டு குடும்பமும் நாளை வீடுகளில் குடியேறி விடும். இத்தோடு இந்தப் பிரச்னை தீர்ந்தது.

# 25

காலையில் தோட்டக் காரியாலயத்திற்குச் சென்ற ராமுவை பெரிய கிளாக்கர் வரவேற்றார். "என்ன ராமு வீட்டுப் பிரச்னையைத் தீர்த்துக் கொண்டீர்களா? என்ன முடிவு பண்ணீங்க."

"ஆமாங்க சார் தொரை குடுத்த வீட்டுக்கே போறதா முடிவு செய்திட்டேன்" என்றான்.

"ராமு ஜனங்க பலதைச் சொல்லுவாங்க. உங்களுக்கு எது நேர்மையின்னு தெரியுதோ அதைச் செய்வதில் குத்தமில்ல. நீங்க போய் எல்லா ஏற்பாடுகளையும் செய்யுங்க. நான் துரையிடம் சொல்றேன்" என்றார்.

அங்கிருந்து புறப்பட்ட ராமு நேராக புதிய வீட்டிற்குப் போனான். ராமு போகும் முன்பே சாமான்களையெல்லாம் கொண்டு வந்து சேர்த்து விட்டார்கள். அன்று முழுவதும் பலர் உதவியாக வேலை செய்தார்கள்.

வீட்டு முன் விராந்தையைத் தனது அறையாகப் பயன்படுத்திக் கொண்டான் ராமு. சின்ன கட்டில் மேசை நாற்காலி என்று போட்டுக் கொண்டான். அந்த வாரம் முதல் தனது கடமைகளை ஆரம்பித்து விட்டான். அருணும் பாடசாலைக்குப் போய்க் கொண்டிருந்தான். குழப்பங்கள் நிறைந்த இடங்களிளெல்லாம் சற்று அமைதி நிலவத் தொடங்கியிருந்தது. மக்கள் போக்குவரத்தும் அதிகரித்தது. ஆனால் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்ட அச்சம் மாத்திரம் விலகியதாகத் தெரிய வில்லை. இரவு பிராயணங்களை தவிர்த்துக் கொண்டனர். தமிழர் களும், சிங்களவர்களும் ஒருவரையொருவர் சந்தேகக் கண் கொண்டு பழக ஆரம்பித்தனர். பலர் கலவரம் காரணமாக இந்தியா சென்று விட்டனர். மற்றவர்கள் மீண்டும் பழைய வாழ்க்கையை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

இப்போது ராமுவும் பல இடங்களுக்குப் போய் தொழிலாளர் களைச் சந்தித்துப் பேசிவந்தான். இதன் பின்பு என்ன நடக்குமோ என்ற கேள்வி தமிழ் மக்களை இன்னும் பயமுறுத்திக் கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

தமிழர்களுக்கு ஆறுதல் சொல்லக் கூடிய நிலையில் யாரும் இல்லாதிருந்தபோது தொழிற்சங்கத் தலைவர்கள்தான் தொழிலாளர் களையும் ஏனைய மக்களையும் உற்சாகமூட்டி, ஆறுதல் கூறி வந்தனர்.

புதிய வீட்டில் இப்போது அத்தைக்கு உதவியாக சிவகாமி தான் எல்லா வேலைகளையும் செய்து வந்தாள். ராமுவின் மனதிற்கு இது கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. சிவகாமி இப்போது தன்னந்தனியாக ராமுவின் குடும்பத்தையே நம்பியிருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஒருநாள் மாலை ராமு வீட்டிலிருக்கும் போது அவனைத் தேடிக் கொண்டு சடையன் வந்தான். வந்தவன் “வீட்டில் யாரு இருக்கா?” என வாசலில் நின்றவாறே கேட்டான்.

உள்ளே இருந்து வெளியே வந்த அருண் “ஓ, சடையண்ணனா என்ன விசயம்?” என்றான்.

“தம்பி ராமு சார் இருக்காரா” என்று கேட்டான் சடையன்.

“ஆமா இருக்கர்” என்றவன், “ஏன் அன்னைக்கு மாதிரி இன்னைக் கும் ஏதாவது சண்டை போட வந்திட்டீங்களா” என்று கேட்டுக் கொண் டிருக்கும்போதே உள்ளே இருந்து வந்த ராமு, அருணை அமைதிப் படுத்திவிட்டு, “என்ன சடையண்ணே என்ன விசயம்” என்று கேட்டுக் கொண்டே அவன் அருகில் போனான்.

“தம்பி ராமு அன்றைக்கு நான் குடி போதையில் ஏதேதோ பேசிட்டேன். என்ன மன்னிச்சிடுப்பா” என்று நா தழுதழுக்க சொன்னான் சடையன்.

“அண்ணன் நான் அதயெல்லாம் அன்னைக்கே மறந்திட்டேன். வாங்க உள்ளே உட்கார்ந்து பேசுவோம்” என்று அவனை உள்ளே அழைத்துச் சென்றான் ராமு.

“அருண் அம்மாவிடம் போய் தேத்தண்ணி வாங்கிட்டு வா” என்று அவனை உள்ளே அனுப்பிவிட்டு, “சரி சடையன் அண்ணே இப்ப என்ன விசயமா வந்திருக்கிங்க” என்று கேட்டான்.

“தம்பி எல்லோரும் இந்தியாவுக்குப் போறதுக்கு ஏற்பாடு செய்யிறாங்க. அதப்பத்தி கேட்டுட்டுப் போகலாமுன்னுதான் வந்தேன்.”

“அண்ணே இந்த நேரத்தில அதப்பத்தியெல்லாம் சிந்திக்காதீங்க. நாட்டு நிலைமை அமைதியடையட்டும். அதற்குப் பிறகு அதப்பத்திப் பேசுவோம்” என்றான் ராமு.

“இல்ல தம்பி, எங்கப்பா இந்தியாவுக்குத்தான் மனுப்போட்டார். அதனால் இந்த ஊரில சாகிறதவிட, புள்ளைக் குட்டிகள கூட்டிக்கிட்டு ஊருக்குப் போகலாமுன்னு நினைக்கிறேன்.”

“அண்ணே அது உண்மைதான். ஆனா இப்ப அதைப் பற்றி யோசித்து எந்த அவசரமான முடிவிற்கும் வந்துடாதங்க. நேரம் காலம்

வரும்போது நானே ஏற்பாடு செய்து தர்றேன்" என்றான் ராமு. இதற்கிடையில் அருண் தேநீர் கொண்டு வரவே, "சரி அண்ணே தேத்தணியி குடிங்க. முதல்ல நாம இப்ப நம்ம ஆளங்க மத்தியில் இருக்கும் பதற்றத்தப் போக்கணும். அதன் பிறகுதான் மற்ற விசயத்தைப் பற்றி பேசணும்" என்றான்.

தேத்தண்ணியைக் குடித்து விட்டு எழுந்த சடையன், "அப்ப தம்பி நான் போயிட்டு வாரன். அண்டைக்கு நடந்தை மனசில வச்சிக்காதீங்க" என்று சொன்னதும், "அதெல்லாம் நான் அன்னைக்கே மறந்திட்டன் சடையண்ணே. அண்ணே இன்னொரு விசயம், இந்த ஊரில நீங்க இருக்கும்போதே உங்க மகளே திருமணம் செய்து கொடுத்திடுங்க. ஊரிலே போய் செய்யலாமுன்னு நினைச்சு காலத்தக் கடத்தாம சட்டுபுட்டுன்னு காரியத்த முடிக்கப் பாருங்க. இந்தியாவுல நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் நடக்காது. நீங்க உடனடியா உங்க மகளை இந்த ஊரிலே ஒரு நல்ல பையனா பார்த்து திருமணத்த செஞ்சி வைக்கப்பாருங்க. அப்புறம் உங்களுக்கும் பாரம் குறைஞ்ச மாதிரி இருக்கும்.

"அதப்பத்திதான் தம்பி நானும் யோசிச்சிக்கிட்டு இருக்க. ஏங்க தங்கச்சி மகன் ஒருத்தன் இருக்கான். அவனும் அடிக்கடி வீட்டுக்கு வந்து போயிக்கிட்டுதான் இருக்கான்."

"அப்புறம் எதுக்கு யோசிக்கிறங்க. ஒரு நல்ல நாளாப் பார்த்து திருமணத்த முடிச்சிடப்பாருங்க?"

"இருந்தாலும் தம்பி என் சம்சாரம்தான் கொஞ்சம் இழுத்தாப்புல சொல்லிக்கிட்டிருக்கா. நீங்கதான் அவக்கிட்ட ஒரு நாளைக்கு வந்து பேசிப் பார்க்கட்டும்."

"அதுக்கென்ன வந்துட்டப் போச்சு. நானே ஒரு நாளைக்கு வீட்டுக்கு வந்து அக்காக்கிட்ட நிலைமையை விளக்கிச் சொன்னா அவங்க கேட்காமலா போவாங்க. எத்தனை நாளைக்குத்தான் ஒரு வயசு புள்ளய வீட்டுக்குள்ளேயே வச்சிருக்கப் போறாங்க."

"சரி தம்பி நேர மாயிட்டுது. நான் போயிட்டு வாரன்" என்று ராமுவிடம் விடை பெற்று வீட்டை நோக்கிப் புறப்பட்டான் சடையன்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ராமுவை, "என்னப்பா அன்றைக்கு அந்த மாதிரி பேசினவன் இன்னைக்கு இப்படி பேசுறான்" என்று அருண் கேட்டான்.

"அருண் தொழிலாளிங்க ரொம்ப நல்லவங்கப்பா. அவங்க மனசுல நிறைய சுமைகளை சுமந்து கொண்ட திரியிறவங்க, சில நேரங்கள்ள அவங்க இப்படி நடந்து கொள்றாங்க. இத நாம பொருட்படுத்தக் கூடாது" என்றான் ராமு.

"அப்பா உங்களுக்கு இருக்கிறப் பொறுமை வேறு யாருக்கும் இருக்காது. நீங்க எல்லோரையும் ஒரே நிலையில்தான் பார்க்கிறீங்க" என்றான் அருண்.

"அருண் தொழிற் சங்கத்தில் பணி புரிரவங்கக்கிட்ட இந்த பொறுமையும், அமைதியும் மிக மிக முக்கியம் அப்பா. நீ சின்னப் பையன். உனக்கு எங்கே இதெல்லாம் விளங்கப் போகுது" என்று ராமு சொல்லிக் கொண்டிருக்கும்போதே "அருண்... அருண்" என்று அழைத்துக் கொண்டு பணிய வைத்து கோபால் ஓடி வந்தான். என்னமோ ஏதோவென பதட்டத்துடன் ராமுவும், அருணும் வெளியே வந்து பார்த்தார்கள்.

கோபாலுக்குப் பின்னால் வந்தவர்களைக் கண்டு ராமு அதிர்ச்சி யடைந்துவிட்டான். அருண் அவர்களை எதிர்கொண்டு வரவேற்க ஓடோடிச் சென்றான்.

ஒருவன் துன்பத்தில் துவழும்போது அவனுக்கு ஆறுதல் கூறி ஆதரவு கரம் நீட்டுவதே உண்மையான நட்புக்கு இலக்கணமாகும்.

ஆபத்துக்குப் பாவமில்ல என்பார்கள். அது போல ஒரு மனிதனுக்கு ஆபத்து என்று கேள்விப்பட்டவுடன் யாரும் அவனுக்கு ஆறுதல் கூறுவதற்கு நல்ல நேரம், கெட்ட நேரம் பார்ப்பதில்லை. நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரத்தினால், பெரும்பாலான தமிழர்கள் பாதிக்கப்பட்டார்கள். அத்தகைய பாதிப்புகளால் சிக்குண்டு இருந் தவர்களில் ராமுவும் ஒருவன்.

ராமு வசந்திக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்து அவள் தன் அண்ணனையும், அண்ணியையும் நேரடியாகச் சென்று ஆறுதல் கூறுவதற்கு அனுப்பி வைத்தாள். அவர்களைக் கண்டுதான் அருண் எதிர்கொண்டழைக்கச் சென்றான். வந்தவர்களை ராமு அன்போடு வரவேற்றான். இது எதிர்பாராத சந்திப்பு அல்லவா. அதனால் ராமு மட்டுமல்ல, வசந்தியின் அண்ணனும், அண்ணியும் பெரும் மகிழ்ச் சியுடன் இருந்தனர்.

சத்தம் கேட்டு உள்ளே இருந்த சிவகாமியும், பெருமாயியம் மாவும் வெளியே வந்து எட்டிப் பார்த்தனர். வந்தவர்களை வீட்டாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தான் ராமு. சுகசேமத்தை விசாரித்துக் கொண்டிருக்கும்போதே பெண்கள் கண்ணீர் சிந்த ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர்.

வசந்தியைப் பற்றியும் விசாரித்துத் தெரிந்துக் கொண்டார்கள். ஆனால் ராமுவுக்கு வசந்தியைக் காண வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது.

சிறிது நேரத்திற்குப் பின்பு எல்லோரும் தேநீர் அருந்திவிட்டு கலவரம் நடந்தது முதல் ஏற்பட்ட அனுபவத்தை எல்லாம் மனம் விட்டுப் பேசிக் கொண்டனர்.

"இத்தனை அட்டூழியும் நடந்தும் ஒரு கடிதம்கூட போட வில்லையே" என்றான் ஜெகதீஸ்.

"ஆமா வசந்தியின் கடிதம் வந்தபின்தான் எனக்கு சுயநினைவே வந்திச்சு. எங்க இங்க நடந்த கொழபத்துல என்ன செய்யிறதுன்னே தெரியாமப் போச்சே" என்றான் ராமு.

"உங்க கடிதம் கெடச்சவுடனே போய்பார்த்துட்டு வந்துடுங்க அண்ணேன்னு வசந்தி சொன்னா. அதற்குப் பின்பு இந்தப் பக்க போக்குவரத்து நிலைமைய தெரிஞ்சப் பின்புதான் புறப்பட்டு வந்தோம்" என்றான் ஜெகதீஸ்.

"இந்த நேரத்தில் நீங்க ரெண்டு பேரும் வந்து ஆறுதல் சொன்னதுக்கு எனக்கு ரொம்ப சந்தோஷம். ஒருத்தருக்குத் துன்பம் வந்தா அவங்கட நண்பர்கள் கூட விலகிப் போயிடுவாங்க. அந்த வகையில உங்களுக்கு நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கேன்" என்றான் ராமு.

"தம்பி உங்களிடம் கொடுக்கச் சொல்லி வசந்தி ஒரு பார்சலைக் கொடுத்தாள்" என்று ஒரு பெரிய பார்சலை ராமுவிடம் நீட்டினாள் வசந்தியின் அண்ணி.

"என்ன பார்சல்" என்றவாறே வாங்கிப் பிரித்தான் ராமு. என்ன ஆச்சரியம், அத்தனையும் உடுதுணிகள். முதலில் ராமுவின் கண்களில் பட்டது பார்சலின் உள்ளே இருந்த கடிதம்தான். அதை அவசரமாகப் பிரித்து வாசித்தான்.

அன்புள்ள அத்தான்,

உங்களுக்கு ஏற்பட்ட நிலைமையை உங்கள் கடிதம் மூலமாகத் தெரிந்து கொண்டு பெரிதும் கவலைப்பட்டேன். உங்களை ஓடோடி வந்து பார்க்க வேண்டும் போல என் மனம் பரபரத்தது. அண்ணனிடம் என் எண்ணத்தை வெளிப்படுத்தினேன். அவர் என்னைத் தடுத்துவிட்டார். காரணம் என்னை உங்கள் வீட்டு மருமகளாக அனுப்ப அவர்கள் முடிவு செய்த பின்பு திருமணத்திற்குப் பின்புதான் போக வேண்டும். இதுதான் முறை என்று கூறி விட்டார்கள்.

இந் நிலையில் என் மன நிலை எப்படி இருந்தது என்பதை நீங்கள் புரிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன். அதனால் உடனடியாக அண்ணனையும் அண்ணியையும் அனுப்பி வைத்தேன்.

அத்தோடு உங்கள் எல்லோருக்கும் என் இதயம் கனிந்த அன்பளிப்பும் அனுப்பி வைக்கிறேன். மறுக்காமல் பெற்றுக் கொள்ளுங் கள். அவற்றில் என் இதயபூர்வமான அன்பு கலந்திருக் கின்றன. மாமிக்கும், சிவகாமி அக்காவுக்கும், அருணுக்கும் என் அன்பு முத்தங்கள்.

விரைவில் என்னைச் சந்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

என்றும் உங்கள் அன்பு

வசந்தி.

கடிதத்தை வாசித்து முடித்த போது வசந்தியே அருகில் இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. பார்சலில் இருந்து உடைகளை அப்போதே எல்லோரையும் அழைத்துக் கொடுத்தான். அன்றிரவு எல்லோரும் சாப்பிட்டு விட்டு நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். திருமணத்தைப் பற்றியும் பேசினார்கள்.

"இன்றைய சூழ்நிலை சிறிது மாறட்டும். அதன் பின் அதற்காக ஏற்பாட்டைச் செய்வோம். இந்த வாரம்தான் தொழிலாளர்கள் வேலைக்குப் புறப்பட்டார்கள். தோட்டத்துரை ரொம்ப நல்ல மனுசன். குழப்பத்துல தொழிலாளிங்க ரொம்பத்தான் கஷ்டப்படுறாங்க. அவங்கள பட்டினி போடா்ம பார்த்துக் கொண்டதே இந்த தோட்டத்து துரைதான்" என்றான் ராமு.

மைத்துனர் ஜெகதீஸ் மறுநாள் காலை தாங்கள் புறப்பட்டு போவதாகச் சொன்னான்.

அதை எவரும் வரவேற்கவில்லை. "என்ன அண்ணி வீட்டுக்கு எதிர்பாராத விருந்தாளியா வந்திட்டீங்க. இரண்டு மூன்று நாள் தங்கிட்டுப் போகலாம்தானே" என்றாள் சிவகாமி.

இதை ராமுவும் ஆமோதித்தான். "ஆமா ஏன் அவசரப்பட்டுப் போறேன் என்கிறீங்க. நாளை மறு நாள் போகலாம். தோட்டத்தில் நடந்த அட்டூழியங்களையும் சுற்றிப் பார்த்துட்டுப் போகலாம்தானே" என்றான்.

"ராமு நீங்க சொல்லறத தட்டிக் கழிக்கிறோம்னு நினைக்காதீங்க. உங்களைப் பர்த்துப் பேசியதில் எங்களுக்குப் பெரிய ஆறுதல். இதைத் தெரிந்து கொள்ள ஒரு உயிர் நாளை காலை எதிர் பார்த்துக் காத்துக்கிட்டிருக்கும் தெரியுமில்ல. அதனால நாங்க காலையிலேயே புறப்படுறோம். பின்பு ஒரு நாள் வரத்தானே போகிறோம்" என்றான் ஜெகதீஸ்.

நீண்ட நாட்களுக்குப் பின் ராமுவின் வீட்டில் மகிழ்ச்சி குடி கொண்டிருந்தது. ராமுவிற்கு மனதில் பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. கடந்த ஒரு மாதமாக அவன் பட்ட துன்பத்திற்கு இவர்களின் வருகை அரு மருந்தாக அமைந்தது.

நாட்டு நடப்புகளைப் பற்றி சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தவர்கள் படுக்கைக்குச் சென்றனர். பெண்கள் மூன்று பேரும் வீட்டிற்குள் படுத்துக் கொண்டனர். ஆண்கள் மூவரும் வெளி விராந்தாவில் படுத்துக் கொண்டனர்.

# 26

மறுநாள் காலை நேரத்தோடு விழித்துக் கொண்ட சிவகாமி காலை சாப்பாட்டிற்கு வேண்டியதைச் செய்ய ஆயத்தமாகி விட்டாள். வசந்தியின் அண்ணி பர்வதமும் அவளோடு சேர்ந்துகொண்டு உதவினாள்.

எல்லோருக்கும் தேநீரைக் கொடுத்துவிட்டு, "மகள் திருமணம் முடிந்த பிறகுதான் எனக்கு கொஞ்சம் பாரம் குறையும். அத சட்டு புட்டுன்னு செய்ய நீங்க எல்லோரும் முயற்சி எடுக்கணும்" என்றாள்.

"நாங்க இப்பன்னாலும் தயாராத்தான் இருக்கோம். அந்த பாழாப் போன வன் செயல்தான் இப்ப காலத்த தள்ளிக்கிட்டுப் போகுது" என்றான் ஜெகதீஸ்.

காலைச் சாப்பட்டை எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிட்டார்கள். அருண் பாடசாலைக்குப் புறப்பட்டு விட்டான். போகும்போது "மாமா சித்தியைக் கேட்டதா சொல்லுங்க" என்று கூறிவிட்டுப் போனரன்.

"ராமு நம்ம குடும்பத்திற்கு பூர்விகத் தொடர்பு இருக்கும் போலிருக்கு. இவ்வளவு அன்யோன்யமாக நாம நெருங்கி வந்து 'விட்டோம். அருண் வசந்திய எவ்வளவு நேசிக்கிறரன் தெரியுமா. உங்க குடும்பம் உண்மையிலேயே அன்பு நிறைந்த குடும்பம்தான். என் தங்க வசந்தி இங்கே மருமகளா வர கொடுத்து வச்சிருக்கா" என்றான் ஜெகதீஸ்.

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நான் திருமணமே வேணா முன்னிருந்தேன். இப்போ நான் திருமணத்திற்கு சம்மதிச்சது எல்லோருக்கும் ரெரம்ப சந்தோசமா இருக்கு. அதுவும் வசந்திய எல்லோருக்கும் நல்லாவே பிடிச்சுப் போச்சு" என்று கலகலப்பாக இருவரும் பேசிக் கொண்டனர்.

அங்கு வந்த ஜெகதீசின் மனைவி பர்வதம் "என்னங்க நேரமாகி விட்டது. புறப்படுங்க" என்று அவசரப்படுத்தியவாறு தானும் புறப்படத் தயாரானாள். சிறிது நேரத்தில் இருவரும் விடைபெற்றுக் கொண்டனர். ராமு அவர்களை வழியனுப்பி வைப்பதற்கு அவர்களோடு புறப்பட்டான்.

வாசற்படியை விட்டு இறங்கிய ஜெகதீஸ் திரும்பிப் பார்த்தார். பிரிய முடியாத நிலையில் சேலைத் தலைப்பால் கண்ணீர் விட்டவாறு மூன்று பெண்களும் நின்றிருந்தனர். இது ஆனந்தக் கண்ணீர். இந்தப் பிணைப்புதான் ஒரு சமுதாய வளர்ச்சிக்கே வித்திடப் போகிறது.

இவர்களை பஸ்ஸில் ஏற்றிவிட்டு தொழிற் சங்கக் காரியாலயம் நோக்கிச் சென்றான் ராமு. அவனை எதிர்பார்த்து சிலர் அமர்ந்து இருந்தனர். காரியாலயத்தினுள்ளே சென்ற ராமு எல்லோருக்கும் வணக்கம் கூறிக்கொண்டு தனது இருக்கையில் போய் அமர்ந்து வந்திருந்தவர்களை என்ன விசயமாக வந்திருக்கீங்க என்று கேட்டான். ஒரு இளைஞன் முன் வந்து சார் "எங்க தோட்டத்த சுற்றி ஒரு கிராமம் இருக்கு சார். இந்த கிராமத்த பிரிஞ்சி வெளியில் போகவோ, உள்ளே வரவோ முடியாது. அந்த அளவுக்கு கொள்ளைக்காரங்க எங்களப் பயமுறுத்துறாங்க சேர். ஒவ்வொரு நாளும் வாரவங்க போரவங்கக்கிட்ட கொள்ளை அடிச்சிக்கிட்டு இருக்காங்க.

அது மட்டுமில்ல கையில கெடக்கிற ஆயுதத்தால அடிச்சி துன்புறுத்தாறாங்க. தொழிலாளிங்க ஏதாவது பொருட்களை கொண்டு வந்தா அத அடிச்சுப் பறிச்சிறாங்க. யாராவது எதிர்த்து நின்னர், மறுநாள் வீட்டுக்கே வந்து தகராறு செய்யிறாங்க. துரையிடம் சொன்னா நான் என்ன செய்ய, சங்கத்திலே போய் சொல்லுங்கிறார். எங்களுக்கு ரொம்ப கரைச்சலா இருக்கு சார். துரைக்கிட்டே பேசி முடியாம போனதாலதான் நாங்க உங்க உதவிய கேட்டு வந்திருக்கோம் சார்" என்றான் அந்த இளைஞன்.

பொலிசில் புகார் செய்தால் பிரச்னை இன்னும் அதிகரிக்கும். அப்ப இதுக்கு என்ன செய்யிறது என்று ராமு யோசித்துக் கொண டிருக்கும்போதே புஞ்சி பண்டா கங்காணி ஆபிசுக்குள் நுழைந்தார். அவரை அமரவைத்து இந்த விசயத்தைப் பற்றிச் சொன்னார்.

"சார் நான் இதுக்கு ஒரு வழி சொல்றேன். கேளுங்க. அங்கே இருக்கிற கிராம சேவகர் எனக்கு வேண்டியவர். நாம அங்கே போய் அவரிடம் விசயத்தைச் சொல்வோம். அதற்கு அவர் பதில் தருவார். அதன்படி செய்வோம்" என்று சொன்னான் புஞ்சி பாண்டா. அந்த யோசனையை ராமுவும் பிரதிநிதியும் ஏற்றுக் கொண்டார்கள். அங்கே போவதற்கு ஒரு திகதியையும் தேர்ந்தெடுத்துக் கொண்டு அந்தக் திகதியில் எல்லோரும் அங்கே போய் பேசுவதென்று முடிவு செய்து கொண்டு வந்திருந்தவர்களிடமும் சொன்னான் ராமு.

"ஆமாங்க சார் நாங்களும் கேள்விப்பட்டோம். அந்தக் கிராம சேவகர் ரொம்ப நல்ல மனிதர் என்று. பொலிசில் போய்ப் பிரச்னையைப் பெரிது படுத்தாமல் நேரடியாகப் பேசி முடிப்பது நல்லது" என்றார்கள் வந்திருந்தவர்கள்.

"நானும் உங்களுக்காகவே அங்கே காத்திருப்பேன்" என்று புறப்பட்டுவிட்ட புஞ்சி பண்டாவைத் தொடர்ந்து வந்திருந்த இளைஞர் கள் "சார் அப்ப நாங்களும் போயிட்டு வாரம்" என்று புறப்பட்ட போது,

"தம்பி எதுக்கும் பயப்படாம போயிட்டு வாங்க. நாங்க குறிப்பிட்ட திகதியில நிச்சயமா வந்து தீர்த்து வைக்கிறோம்" என்று அவர்களை வழியனுப்பி வைத்தான் ராமு.

குறிப்பிட்ட திகதியில் ராமுவும் பிரதிநிதியும் அங்கே புறப்பட்டுப் போனார்கள். அவர்களின் வரவிற்காக புஞ்சி பண்டாவும் அங்கே காத்திருந்தான். ஒருசில இளைஞர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் கிராம சேவகரை சந்திக்கச் சென்ற சமயம், அவர் வெளியில் சென்றிருந்தார். அவரின் வரவுக்காக எல்லோரும் காத்திருந்த போது, எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்தவாறே கிராம சேவகர் இந்த இடத்தை அடைந்தார்.

விசயத்தைக் கேட்டு அதிர்ந்து போனவர், இந்தக் கிராமத்திலே இப்படி நடக்கிறது நமக்குத் தெரியாது. இல்லாட்டி அவங்கள நாங்களே அடக்கியிருப்போம். இது தேவையில்லாத வேலைதானே" என்று அங்கலாய்த்தவர் வந்திருந்த சில இளைஞர்களைப் பார்த்து "உங்களின் ஊருக்காவது அவங்கள அடையாளம் காட்ட முடியுமா?" என்று கேட்டார்.

வந்திருந்த இளைஞர்கள் தங்களால் முடியுமென பல அடை யாளங்களைச் சொல்லவே, முழு விபரங்களையும் குறிப்பெடுத்துக் கொண்ட கிராம சேவகர், அவர்களை அழைத்துவர ஏற்பாடு செய்தார். சிறிது நேரத்தில் வெறும் மேலோடு ஐந்து பேர் வந்து நின்றனர். அவர்களை ஆவேசத்துடன் பார்த்த கிராம சேவகர். "இனி இப்படி அப்படி நடந்துகிட்ட பொறவு என்ன குத்தம் சொல்ல வேண்டாம்" என எச்சரிக்கை செய்தார்.

அவரின் எச்சரிக்கையை ஏற்ற அந்த ஐவரும் சென்று விடவே, வந்திருந்தவர்களைப் பார்த்து "இவர்கள் வேலையில்லாத கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குப் பொழுது போகணும். பொலப்பும் நடக்கணும். அதுதான் போற வாரவங்கக்கிட்ட இப்படிக் கைவரிசை யைக் காட்டுறாங்க. பாவம் சாப்பாட்டுக்கு வழி வேணுமே இனி இப்படி நடக்காது. நான் பார்த்துக் கொள்றன். மேற்கொண்டு ஏதும் நடந்தால் எங்ககிட்ட வாங்க. நான் பொலிசிற்குப் புகார் செய்கிறேன்" என்றார்.

கிராம சேவகரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டபோது, "இவர் சொன்னதுனால ஒன்றும் நடக்காது என்றிருக்க வேண்டாம். இரண்டு மூன்று நாளைக்கு சும்மா இருப்பாங்க. அப்புறம் கைவரிசையை ஆரம்பிச்சுடுவாங்க. அதனால தொழிலாளிங்கள எச்சரிக்கையா இருக்கணுமுன்னு சொல்லி வைங்க" என்று கூறிய புஞ்சிபண்டா, ராமுவிடம் விடை பெற்றுக்கொண்டு வேறு வழியாகத் தன் கிராமத்தை நோக்கிப் புறப்பட்டார்.

# 27

ஒரு மனிதன் எத்தனைதான் கடமையுணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், அவனுக்கென்று சில துன்பங்கள் ஏற்படும் போது துவண்டு இதயத்தில் இணைந்து - விடுகிறான். அந்நிலையில் அவன் செயல்படும்போது அது சுய நலமா பொது நலமா என்பதைப் பற்றி யோசிப்பதில்லை. உடனடியாக எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வதில் ஈடுபடுகின்றான்.

இத்தகையதொரு சூழ்நிலையில் தன் சுற்றுச்சூழலைச் கூட மறந்தவனாகச் செயல்படுகிறான். இதனால் பொல்லாப்பு வந்து சேருவதுண்டு. உண்மையை உணர்ந்தவர்கள் உறுதியான அன்பு கொள்வதுண்டு.

இனப் பிரச்னையால் ஒடுக்கப்பட்ட நிலையில் தோட்டத்து மக்களோடு ஒன்றிருந்த ராமு, இப்போது சுறுசுறுப்பாக சகல பிரச்னை களிலும் முழுமையாக ஈடுபடலானான்.

இடையில் ஏற்பட்ட தேக்க நிலையை சரிப்படுத்திக் கொண்டு தொழிலாளர்களை உற்சாகப்படுத்துவதிலும், கண்ணும் கருத்துமாக இருந்தான். வீட்டையே இப்போது காரியாலயமாக மாற்றிக் கொண்டு அந்தப் பகுதியில் சங்க வளர்ச்சியில் ஈடுபட்டுழைத்தான்.

ஒருநாள் ராமு வசந்தியைக் காணப் புறப்பட்டு விட்டான். போவதற்கு முன்பாக முனுசாமிக்கு கடிதம் போட்டிருந்தான். காரியா லயத்தின் உள்ளே நுழைந்த ராமுவை பிரதிநிதி உட்பட சகலரும் வரவேற்றார்கள். வசந்தியைத் திருமணம் செய்யப் போகும் விசயம் இப்போது எல்லோருக்கும் தெரிந்த விசயமாகி விட்டது.

ராமு வசந்தியைச் சந்தித்தான். ராமுவையே எதிர்பார்த்துக் காத்திருந்த வசந்திக்கு ராமுவின் வரவு மகிழ்ச்சியைத் தந்தது. இவர்களின் சந்திப்பு நீண்ட நாட்களுக்குப் பின் இடம் பெற்றதால் மனதில் உள்ள எண்ணங்களை ஒரே வார்த்தையில் பேசி முடித்துவிட முடியாதல்லவா. ராமுவும் வசந்தியும் நீண்ட நேரம் மௌனத்திலிருந்து விடுபட்டனர். வசந்திதான் முதலில் பேசினாள்.

"அத்தான் நீங்கள் இப்படிக் கல் நெஞ்சுக் காரரா இருப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்லை" என்றாள்.

"ஏன் வசந்தி அப்படி சொல்லிட்ட. நான் இப்படி என்னதான் கொடூரம் செய்திட்டன்" என்றான்.

"அத்தான் நாட்டில் குழப்பம் வந்து உங்கள் பகுதியும் பாதிக்கப் பட்டதெறு கேள்விப்பட்டேன். உங்களிடமிருந்து கடிதம் வரும் வரு

மென்று எதிர்பார்த்த ஒரு மாதத்திற்குப் பிறகுதான் நான் உங்களுக்குக் கடிதம் எழுதி கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிச்சு" என்றாள் வசந்தி.

"என்ன மன்னச்சிடு வசந்தி. அங்கே உள்ள சூழ்நிலையில் நான் எல்லாத்தையுமே மறந்து விட்டேன். தோட்டமே தீப்பற்றி எரிந்தது. நான் எத எதத்தான் கவனிப்பேன். தோட்டத் தொழிலாளிகள கவனிக்கிறதா இல்ல குடும்பத்தக் கவனிக்கிறதா. அந்த சமயத்துல எனக்கு ஒன்னுமே ஓடல்ல. வீடு தீப்பற்றி எரியும் போது ஏதோ நகையை வீட்டுக்குள்ள வச்சிட்டதா அத்தை எரியும் நெருப்பையும் பொருட்படுத்தாம உள்ளே நுழைஞ்சிட்டாங்க. அப்புறம் நீண்ட நேரத்துக்குப் பிறகுதான் அவங்கள தோட்டத்து ஆட்களோடு வெளியே கொண்டு வந்தோம். வெளிய கொண்டு வந்து என்ன பிரயோஜனம் அவங்கட கருகிய உடம்பத்தான் பார்க்க முடிஞ்சுது. அத்த உயிருக்கே போராடிக் கிட்டிருந்தாங்க. உயிர் போர நேரத்துல அருணையும் சிவகாமியையும் கூப்பிட்டு இரண்டு பேரையும் எங்கிட்ட ஒப்படைச்சாங்க. அதோட அவங்கட கதை முடிஞ்சுது. தோட்டத்து ஜனங்க எல்லாம் உயிரைக் காப்பாத்திக் கொள்ள நாளா பக்கமும் சிதறி ஓடினாங்க. அத்தை இறந்ததை மறந்து நான் என் கடமையைச் செய்வதில் மும்முரமாக இருந்தேன். தொழிலாளிகளைத் தோட்டத்துக் கோவில் மண்டபத்துல பாதுகாப்பா இருக்கச் சொல்லி விட்டு, தோட்டத் துரையைச் சந்தித்துப் பேசி தொழிலாளிங்க தங்குற துக்கு சில வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டு, அத்தய வந்து பார்த்தேன். ..ம் என்ன பண்றது. நெலம வேற மோசமா இருந்ததாலே அன்னைக்கு மாலையே அத்தையோட காரியங்களைத் தொழிலாளிங்களோடு செஞ்சு முடிச்சேன். அத்தையிட மரணம் ஒரு பக்கம் எங்க குடும்பத்தை வாட்டி வதைத்தது. தொழிலாளிங்க வேற இருக்க இடமில்லாம, சாப்பாடில்லாம தவிச்சிக்கிட்டிருந்தாங்க. இந்த நிலை மையில கடிதம் எழுதுறதா முக்கியம் எனக்கு" என்றான் ராமு.

"இருந்தாலும் அத்தான் நான் ஒருத்தி இருப்பதை மறந்து விட்டீர்களே. அதுதான் எனக்கு பெரும் கவலையா இருக்கு."

"வசந்தி, கடிதம் போடல்ல என்கிற ஒரே காரணத்துக்காக நான் உன்ன மறந்துட்டதா நீ நினைக்கிறீயா. வசந்தி தொழிலாளிங்க தவிச்சிக்கிட்டிருக்கிறப்போ நாம அவங்களுக்கு ஏதாவது உதவி செய்யாட்டா அது மனுசத் தன்மை இல்லதானே. என்னமோ என்னால முடிஞ்ச உதவிய நான் தொழிலாளிங்களுக்குச் செய்தேன். தோட்டத் துரையும் எனக்கு நல்ல துணையா இருந்தார். இப்போ தொழிலாளிங்க கொஞ்சம் நிம்மதியா இருக்காங்க."

கதையைக் கேட்டுக் கொண்டிருந்த வசந்தியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. "வசந்தி ஏன் அழுவுற" என்று கேட்டான்.

"இல்ல அத்தான் சிவகாமி அக்காட அம்மாவ நெனைக்கிற போதுதான் எனக்கு வேதனையா இருக்கு. நம்ம வீட்டிலயும் வந்துட்டுப் போனவங்களுக்கு என்ன நடந்திச்சோ என்று கவலையா இருந்தாங்க. உங்கட கடிதம் கெடச்ச பிறகுதான் நான் அண்ணனையும் அண்ணியையும் அனுப்பிவச்சேன்" என்றாள் வசந்தி.

"வசந்தி இப்போ அழுறதுக்கு ஒன்றுமே இல்லை. எல்லாம் கடவுள் புண்ணியத்துல நல்லபடியாக முடிஞ்சிட்டுது. இனி கவலைப் பட வேண்டியதில்லை. உன் அன்பு ஒன்றுதான் என்னை பலசாலியா செயல்பட வைச்சிருக்கு."

இவர்களின் நிலைமையை கவனித்துக் கொண்டிருந்த பிரதிநிதி, இரண்டு பேருக்குமே தேநீர் அழைப்பித்துக் கொடுத்தார். அவர்களின் சம்பாஷணையில் பிரதிநிதியும் கலந்து கொண்டார். பிரதிநிதி சிங்காரம் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர். நீண்ட நாள் தொழிற்சங்க அனுபவமுடையவர். நேர்மையானவர்.

"என்ன சார் வசந்தி சொல்லுது" என்று கேட்டு இரண்டு பேரின் முகத்தையும் பார்த்தார்.

"தெரியவில்லையா சார். வசந்தியின் முகத்தைப் பார்த்தாலே தெரியும்தானே. சார் வசந்தி கண்ணீர் விட்டுக்கிட்டே இருக்கா. வசந்தி இப்ப அழுறுதுல என்ன பிரயோஜனம். நாம் அடுத்து நடக்க வேண்டிய காரியத்த பத்திதான் யோசிக்கணும்" என்றான் ராமு.

"இனி என்ன யோசனை சார். திருமணத்த முடிக்க பாருங்க. சரியா போயிடும். எத்தனை நாளைக்குத்தான் நீங்களும் ஒண்டிக்கட்டையா இருக்கப் போறீங்க."

"நல்லாச் சொல்லுங்க சார்" என்று ராமுவைப் பார்த்து புன்னகை ஒன்றை உதிர்த்தாள் வசந்தி.

"அப்பா இப்பத்தான் முகத்தில கொஞ்சம் சிரிப்பு வந்திருக்கு. சரி இன்னைக்கு அரை நாள் லீவு போட்டுட்டு வா. வீட்டுக்குப் போகலாம். முனுசாமியும் இப்போது வந்திடுவார்" என்று ராமு சொல்லவே, வசந்தி முறைப்படி விடுமுறைக்கான கடிதத்தை எழுதிக் கொடுத்துவிட்டு வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமான போது முனுசாமி உள்ளே நுழைந்தான்.

"வாங்க சார் உங்களத்தான் பார்த்துக் கிட்டேயிருக்கேன்" என்றவன் வசந்தியைப் பார்த்து "வா பேசிக்கிட்டே போகலாம்" என்று எழுந்து கொண்டான்.

அங்கிருந்து புறப்பட்ட மூன்று பேரும் பிரசித்தி பெற்ற ஒரு சைவ ஓட்டலுக்குள் நுழைந்தனர். இவர்களைக் கண்டதும் முதலாளி,

"வாங்க ராமு சார். என்ன நீண்ட நாளா ஆளையே காணல்ல" என்ற வழமையான உபசரணையோடு வரவேற்றார். மேசை மீதிருந்த மணியைத் தட்டிவிட்டு "அடேய் பையா, சேர் வர்றார் கவனிங்க" என்று சொன்னார்.

இனி என்ன சொல்ல வேண்டியதில்லை தானே. பையன் அவர்களைக் கவனிக்க ஆரம்பித்தான். பகல் நேரம் என்பதால் மூன்று பேரும் சோறு சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடித்தவர்கள் பில்லுக்குப் பணத்தைக் கட்டி விட்டு வெளியேறினார்கள். இடையில் குறுக்கிட்ட முதலாளியை ஒருவாறு சமாளித்துவிட்டு பஸ் நிலையத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

ராமு வசந்தியின் வீட்டுக்குப் போவதற்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு பஸ் நிலையத்தை அடைந்தான். அவர்கள் போக வேண்டிய பஸ்ஸூம் வந்தது. இன்னும் பாடசாலை விடுப்புக்கு நேரம் இருப்பதால் பஸ்ஸில் அவ்வளவாக கூட்டம் இல்லை. மூன்று பேரும் ஏறி வசதியாக அமர்ந்துக் கொண்டனர்.

வசந்தியும், ராமுவும் அருகருகில் ஜோடியாக அமர்ந்து குதூகலமாக பேசிக்கொண்டே பிரயாணம் செய்தனர். காலையில் முகத்தில் ஏற்பட்ட கவலையெல்லாம் மறைந்து வசந்தி மகிழ்ச்சியோடு காட்சியளித்தாள். முன் சீட்டில் அமர்ந்திருந்த முனுசாமி "கல்யாணத்த எத்தன நாளைக்குத்தான் தள்ளிப் போட போறீங்க. நேரம் காலத்தோட தங்கை வசந்தி கழுத்தில மூணு முடிச்சப் போட்டுடுங்க" என்று சொன்னான்.

"முனுசாமி சார் இன்னைக்கு உங்களை அழைச்சிகிட்டுப் போறதுக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்தான். இன்னைக்கு எல்லாத்தையும் தெளிவா பேசி முடிச்சிட வேண்டியதுதான்" என்றான் ராமு.

"இப்படியே கதைத்துக் கொண்டு ரெண்டு பேரும் காலத்தக் கடத்துங்க. விஷயத்தை சட்டுபுட்டுன்னு செய்யாதீங்க" என்று வசந்தி சொன்னதும், இரண்டு பேரும் மௌனமாகி விட்டார்கள்.

"வசந்தி உங்களுக்கு ஒரு பிரச்சினை. ஆனா ராமு சாருக்கு பல பிரச்சினை இருக்குல்ல. எப்படியோ இந்த வருஷத்துல முடிச்சிடப் பார்ப்போம்" என்றார் முனுசாமி.

"ஆமா சார். அம்மாக்கூட சொன்னாங்க. காலம் கெட்டிருக்கு நான் கண்ண மூடமுன்னு ஒரு காரியத்த செய்து முடிக்கிணுமுன்னு. அதுக்குப் பிறகுதான் நான் கண்ண மூடனுமுன்னு சொன்னாங்க" என்றான் ராமு.

"அதுதான் சார். அவங்களுக்கும் வயது போயிக்கிட்டிருக்கு. காலா கா லத்துல திருமணத்த முடிக்கப்பாருங்க" என்றான் முனுசாமி.

"அத்தான் ஆடம்பரமா செய்ய வேண்டியதில்ல. சிக்கனமா சிறப்பா செய்து முடிச்சா போதும்" என்றாள் வசந்தி.

"என்ன வசந்தி அப்படி சொல்லிட்ட, உங்க வீட்டுல சொன்னாங்க எங்களுக்கு ஒரே புள்ள. அதனால் திருமணத்த நல்ல சிறப்பா செய்யணுமுன்னு. நீ என்னடான்னா இப்படி சொல்ற."

"அத்தான் கல்யாணத்த சிறப்பா செய்யணுமுன்னுதானே சொன்னாங்க. அதுக்காக பணத்த வீணா செலவழிக்கணுமுன்னு சொல்லலியே. அதையேதான் நானும் சொல்றேன். சிக்கனமா, சிறப்பா செய்யணுமுன்னு" என்றாள் வசந்தி.

"சரி சரி. இரண்டு பேரும் கொஞ்சம் அமைதியா வாங்க. வீட்டிலே போய் இதப்பத்தி பேசிக்கலாம். இப்ப நாம பஸ்ஸில போறோம், அத மறந்திடாதீங்க" என்றான் முனுசாமி.

ராமு அப்போதுதான் நிலைமையை உணர்ந்து வெட்கப்பட்ட வனாக வசந்தியின் முகத்தைப் பார்த்துச் சிரித்தான். "எதுக்கும் ஒரு ஆலோசகர் தேவைப்படுமுன்னு தெரியாமலா சொன்னாங்க. இனி பேச மாட்டோம் சார். எங்களை மன்னிச்சிடுங்க." என இருவரும் முனுசாமி யைக் கிண்டல் செய்தனர்.

"பேசாம போனா ஊமையின்னு முடிவு கட்டுவாங்க. இந்தக் கதையை விட்டுட்டு வேற ஏதாவது பேசிக்கிட்டு வாங்க" என்று சொன்ன முனுசாமி ராமுவைப் பார்த்து, "சார் இங்க எத்தனை நாளைக்கு தங்கப் போறீங்க" என்று கேட்டார்.

"என்ன சார் அப்படி கேட்டிட்டீங்க. நான் உடனே திரும்பியாகணும், வீட்டுல அம்மா எதிர்பார்த்துக்கிட்டு இருப்பாங்க" என்று சொல்லிவிட்டு ஜன்னல் வழியாக வானத்தை பார்த்தான் ராமு.

"ஆமா உடன போயிடுங்க. அம்மா மட்டுமில்ல புள்ளக் குட்டி களுமில்ல பார்த்துக்கிட்டிருக்குங்க. அதனால் வீட்டுக்கு வந்ததுமே திரும்பிடுங்க" என்றாள் கோபமாக.

"சார் நீங்களும் என்ன சார் நிலைமையை புரிஞ்சிக்காம பேசுறீங்க. திருமணம் முடியிறதுக்கு முன்னால பெண் வீட்டுல தங்கக்கூடாதுன்னு சொல்லுவாங்க, பின்னால நாலு பேர் நாலு விதமா பேசுவாங்கல்ல" என்றான் ராமு.

"ஆமா ஆமா. இவர் இங்க தங்கினா நாங்க கடிச்சித் திண்ணுடு வோம் பாருங்க. இருந்தா இருக்கட்டும், போனா போகட்டும். அதப்பத்தி எனக்கென்ன கவலை" என்று கோபமாக முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள் வசந்தி.

"இப்ப என்ன ரெண்டு பேரும் சண்டை போட ஆரம்பிச்சிட்டீங்களா. நாம் இறங்க வேண்டிய இடமும் வந்துட்டு. வீட்டுல போயி சண்டைப் போட்டுக்கலாம். இப்ப இறங்கப் பாருங்க" என்றார் முனுசாமி.

மூன்று பேரும் பஸ்ஸை விட்டிறங்கி மௌனமாக நடந்தனர். முனுசாமிதான் பேச்சை ஆரம்பித்தான். "வீட்டுக்குப் போகும் போதாவது கோபத்தை விட்டுட்டு சந்தோசமாப் போங்க. இல்லாட்டி வீட்டிலுள்ள வங்க பயந்திடப் போறாங்க" என்றதும் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து புன்னகை ஒன்றை உதிர்த்துக் கொண்டனர். "நீங்க ரெண்டு பேரும் மெதுவா வாங்க, நான் முன்னே போகிறேன்" என்று சொல்லி விட்டு ஓட்டமும், நடையுமாகச் சென்றாள் வசந்தி.

பின்னால் சென்றவர்கள் தங்களையும் மறந்து 'வசந்தி' என்று சத்தம் போட்டவாறே ஓடினார்கள்.

# 28

துன்பம் மனிதனை எப்படியெப்படியெல்லாம் ஆட்டிப் படைக் கிறது என்பதை ஒருவன் தனக்கு ஏற்படும் விபத்தின் மூலம் உணர்ந்து கொள்ள முடியும். இதை அனுபவ ரீதியாகக் காணலாம். அதிலும் ஒரு ஜீவன் தான் ஆழமாக நேசித்த தன் உயிரோடு இணைந்துவிட்ட ஒரு ஜீவனுக்கு ஆபத்து ஏற்பட்டால் அதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியாது.

பஸ்ஸை விட்டிறங்கிய வசந்தி வேகமாக வீட்டை நோக்கி ஓடிச் செல்லும்போது திடீரென கால் இடறி தடுமாறி கீழே விழுகிறாள். பின்னால் போய்க் கொண்டிருந்த ராமுவும், முனுசாமியும் இந்தக் காட்சியைக் கண்டு அதிர்ந்துவிட்டார்கள். ராமு போட்ட சத்தமே வீட்டிலுள்ளவர்களை வெளியே அழைத்து வரக் காரணம்ாக இருந்தது. வேகமாக அருகில் சென்ற ராமு 'வசந்தி' என்று சொல்லிக் கொண்டே அவளைக் கையில் பிடித்துக் கொண்டான்.

காலில் பலத்த அடி பட்டிருந்ததால் வசந்தியால் எழும்ப முடிய வில்லை. மிகவும் கஷ்டப்பட்டு எழுந்தவள், ராமு மீது சாய்ந்து அவனை இறுக்கப் பிடித்துக் கொண்டாள்.

வெளியில் வந்த வசந்தியின் அண்ணி பர்வதம் "என்னம்மா ஆச்சு" என்று அருகில் வரவே, சுய நினைவு பெற்றவளாக சற்றே விலகி நின்றாள் வசந்தி. இவர்களின் நிலைமையைக் கவனித்த பர்வதம் "சரி தம்பி அவள வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வாங்க" என்று சொல்லிவிட்டு அவள் முன்னால் சென்றாள்.

ராமுவின் கையைப் பிடித்தவண்ணம் படியிறங்கி வீட்டிற்குள் சென்றவள், அப்படியே நாற்காலியில் அமர்ந்து விட்டாள்.

கையில் ஏதோ மருந்து போத்தலுடன் வந்த வசந்தியின் அண்ணி பர்வதம், "வசந்தி எங்க அடி பட்டிச்சு" என்று கேட்டுக் கொண்டே அவள் அருகில் வந்து அமர்ந்து கொண்டு அடிபட்ட இடத்திற்கு மருந்தைத் தேய்த்து விட்டாள். நல்ல நேரம் காயம் எதுவும் இல்லை.

அப்போது வீட்டிற்குள் நுழைந்த வசந்தியின் அண்ணன் ஜெகதீசன் இவர்களின் நிலைமயைக் கண்டு பதறியவனாக "என்ன என்ன நடந்தது" என்று கேட்டுக் கொண்டே வசந்தியின் அருகில் வந்தவன் ராமுவையும் கண்டவுடன் இருவருக்கும் வணக்கம் தெரிவித் தான். தங்கையைப் பற்றி விசாரிக்கும் முன்பு இவர்களைப் பார்த்து "எப்படி சுகமாக இருக்கிறீர்களா, எப்போது வந்தீர்கள்?" என்று விசாரித்துக் கொண்டான்.

"நாங்களும் வசந்தியும் ஒன்றாகத்தான் வந்தோம். வீட்டிற்கு முன்பு கால் இடறி வசந்தி கீழே விழுந்து விட்டாள். காலில் அடிபட்டுவிட்டது. காயம் ஏதும் இல்லை" என்று ராமு சொன்னான்.

"என்னம்மா வசந்தி பார்த்து வரக்கூடாது. இப்படியா சின்ன பிள்ளமாதிரி வர்றது" என்று தங்கையை ஆதரவாகக் கண்டித்தார் ஜெகதீசன்.

"இல்லண்ணா இவர்கள் வருவதை அண்ணியிடம் சொல்லலா மென ஓடி வந்தேன் அதான்" என்றாள்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே வசந்தியின் அண்ணி பர்வதம் எல்லோருக்கும் தேநீரும் பிஸ்கட்டும் கொண்டு வந்து கொடுத்தாள். வசந்தி நாற்காலியிலிருந்து எழுந்து கால் வலியையும் பொருட்படுத்தாமல் ராமுவுக்கு தேநீரை எடுத்துக் கொடுத்தாள்.

தேநீரைக் குடித்துக்கொண்டே "உங்களுக்கு வசந்தி நல்ல வரவேற்புக் கொடுத்துவிட்டாள்" என்று ஜெகதீசன் கிண்டலாக சொல்லவே, வசந்தி வெட்கத்தால் தலை குனிந்தாள்.

ராமு அவளைப் பார்த்து ஒரு நமட்டுச் சிரிப்பொன்றை உதிர்த் தான். பதிலுக்கு வசந்தியும் சிரித்துவிட்டு "சரி அண்ணா நீங்க இவங்களோட பேசிக்கிட்டிருங்க. நான் அண்ணியோடு சேர்ந்து சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யிறன்" என்று கூறிக்கொண்டே உள்ளே சென்றுவிட்டாள்.

தோட்டத்து நிலைமைக்ளைப் பற்றி சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்தவர்கள் இப்போது திருமண பேச்சை எடுத்தார்கள்.

"நான் இன்னைக்கு உங்களைத் தேடி வந்தது முக்கியமா நம்ம திருமணம் தொடர்பா உங்களோடு பேசத்தான். என்னா" என்றவன் முனுசாமியைப் பார்த்தான்.

ராமு கூற்றை உணர்ந்து கொண்ட முனுசாமி, "ஆமா சார். இனியும் காலத்தக் கடத்தாம இதுக்கொரு முடிவு செஞ்சிட்டா, சொல்ல வேண்டியவங்களுக்கு சொல்லி திருமணத்திற்கு ஏற்பாடு செய்யலாம்" என்று சொல்லிவிட்டு ஜெகதீசனின் முகத்தைப் பார்த்தார்.

"இதுல நாம என்ன சொல்ல இருக்கு. மாப்புள்ள வீட்டுக்காரங்க தான் முடிவுச் சொல்லணும். பெண் கொடுக்க நாங்க முடிவு செஞ்சப் பிறகு அதற்கான ஏற்பாட்ட மாப்புள்ள வீட்டுக்காரங்கதானே செய்ய வேண்டும்." என்றான் ஜெகதீசன்.

"நீங்கள் சொல்றதும் சரிதான். நம்ம கெட்ட நேரம் பாழாப் போன வன்செயல் காரணமாக இந்த விசயத்துல கொஞ்சம் தடங்கள் ஏற்பட்டிச்சு. இப்ப அந்த நிலைமை மாறிவிட்டது. அதனாலதான் இப்போ அதப்பத்தி பேச வந்தோம்" என்று முனுசாமி சொல்லிவிட்டு ராமுவின் முகத்தைப் பார்த்தார்.

இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே வசந்தியின் தந்தை ஞானம் அங்கு வந்து இவர்களோடு கலந்து கொண்டார்.

"தம்பி ஜெகதீஸ் ராமு சார் என்ன சொல்கிறார்" என்று கேட்டுக் கொண்டே ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டார்.

"என்ன சொல்றார்னா கூடிய சீக்கிரத்துல திருமணத்துக்கு ஏற்பாடு செய்யணுமுங்கிறார்" என்றான் ஜெகதீசன்.

"ஆமா தம்பி நாங்களும் சும்மா காலத்தவீணாக்க விரும்பல்ல. கூடிய சீக்கிரத்துல திருமணத்த முடிச்சிடணும். ஏன்னா, வசந்திய நாங்க உங்களுக்கு கொடுக்கிறதா முடிவு செஞ்சப்புறம் காலத்தையும் நேரத்தையும் வீணாக்குறதுல அர்த்தமில்ல. அதோட, நீங்களும் இப்படி அடிக்கடி வந்துக்கிட்டிருந்தா பார்க்கிறவங்க அத தப்பா புரிஞ்சிக்குவாங்க. அவங்களுக்கு நம்ம பிரச்சினை எங்கே தெரியப் போவுது" என்றார் ஞானம்.

"வர்ர தை மாசத்துல திருமணத்த வச்சிக்கலாமுன்னு ராமு சொல்றார்" என்றான் ஜெகதீசன், தந்தை ஞானத்தைப் பார்த்து.

"ஆமா ஆமா அதுரொம்ப நல்ல யோசனை" என்று சொன்ன ஞானம் ஜெகதீசைப் பார்க்கிறார்.

"அதோட அப்பா நாம செய்ய வேண்டிய வேலைகளை இப்போதிருந்தே ஆரம்பிச்சிடணும். வர்ற சனிக்கிழமை ராமு சார் உங்களை வீட்டுக்கு அழைக்க ஆசைப்படுகிறார். அதனால உங்களுக்கு வசதிப் பட்டா முறைப்படி அவங்க வீட்டுக்குப் போய் வர்றது நல்லது" என்று சொன்ன ஜெகதீசன் பதிலுக்காக தந்தையின் முகத்தைப் பார்த்தான்.

"இதுல என்ன இருக்கு. புறப்பட்டு போய் வந்துட்டாப் போச்சு" என்று ஞானம் பதில் சொல்ல, அதை எல்லோரும் ஆமோதித்தார்கள்.

சிறிது நேர உரையாடலுக்குப் பின்பு "அப்போ ராமு சார் புறப் படலாமா" என்று ராமுவின் முகத்தைப் பார்த்தார் முனுசாமி.

இதைக் கேட்ட ஜெகதீசன் "என்ன சார் இருந்து நாளைக்குப் போங்க. அப்படி என்ன அவசரம்" என்று சொன்னதும்,

"இல்ல சேர் வீட்டுல அம்மாவுக்கு உடனே வர்ரதா சொல்லிட்டு வந்தேன். அவங்க தேடுவாங்க" என்றான் ராமு.

"என்ன சேர் வந்தவங்க நேரம் போனதால தங்கிட்டு வருவாங் கன்னு அவங்களுக்குத் தெரியும். அதனால நீங்க ஒன்றும் கவலப்பட வேண்டியதில்ல" என்றான் ஜெகதீசன்.

"ஆமா ராமு சார், இப்பவே நேரம் ஐந்தாயிட்டு, இதுக்குப் பிறகு பஸ்ஸப் பிடிச்சுப் போக முடியுமா?" என்றாள் வசந்தியின் அண்ணி பர்வதம்.

"நீங்க சும்மா இருங்க அண்ணி. போறவங்க போகட்டும். அவங்களுக்காக நான் இவ்வளவு வேதன பட்டிருக்கன். அதுக்கூட அவருக்கு தெரியாம போயிடிச்சு" என்று கூறி கோபித்துக் கொண்டே சமையலறைக்குள்ளிருந்து வெளியேவந்த வசந்தி ராமுவை ஒரு முறை முறைத்துப் பார்த்து விட்டு இன்னொரு அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

ராமுவால் மேலும் எதுவுமே பேசமுடியவில்லை. நிலைமையை உணர்ந்தவனாக மௌனமாக இருந்து கொண்டான்.

அன்று இரவு சாப்பாட்டிற்குப் பின்பு வீட்டிலுள்ள அனைவரும் ஒரு தீர்க்கமான முடிவிற்கு வந்து அடுத்த சனிக்கிழமை மாப்பிள்ளை வீட்டிற்குப் போய் வருவது என்று முடிவு செய்து விட்டார்கள்.

ராமுவிற்குப் படுக்கையை விரித்துப் போட்ட வசந்தி அவனோடு தனிமையாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

"அத்தான் திருமணத்த சிக்கனமா நடத்தலாம். இதுக்காக யாரிடமும் பணம் கேட்காதீங்க. உள்ளதைக் கொண்டு நல்லதை செய்வோம். எவ்வளவு சிக்கனமா செய்கிறோமோ அவ்வளவுக்கு நமக்கு நல்லது. நம்ம குடும்பத்துக்கு நல்லது" என்றாள் வசந்தி.

"அதெல்லாம் இருக்கட்டும் வசந்தி. திருமணத்துக்குப் பிறகு நீ வேலை செய்யணுமாங்கிறதுக்கு நீ எனக்கு பதில் சொல்லணும். என்னா எங்கம்மா அவங்க மருமகள் திருமணத்திற்குப் பிறகு வேலைக்குப் போகக் கூடாதுன்னு சொல்றாங்க."

"அத்தான் இதப்பத்தி முடிவு செய்ய வேண்டியது நானில்ல. நீங்கதான். ஆனா ஒன்று நீங்களும் நானும் ஒரே இடத்துல தொழில் செய்தா தொடர்ந்து நான் தொழில் செய்றதுல தவறில்ல. ஆனா எனக்கு இடமாற்றம் கிடைச்சா நான் வீட்டுல இருந்து வேலைக்குப்போய் வர

வசதியாக இருக்கும். எதுக்கும் நீங்க உங்க அம்மாவோடு கலந்து பேசி முடிவு செய்யுங்க."

"வசந்தி, நீ வேலை செய்யிறதுல எனக்கு சந்ததோசம் தான். நீ நல்லாப்படிச்சவ. உன்ன கொண்டு போய் ஒரு மூலையில போட்டுட்டு எனக்கு சோறாக்கிப் போடுன்னு நான் உன்ன கட்டாயப்படுத்த விரும்பல்ல. உன்னுடைய அபிப்பிராயம் என்னன்னுதான் கேட்டேன்."

"அத்தான் எனக்கென்று ஒரு அபிப்பிராயம் திருமணத்தின் முன்பு தான். திருமணத்துக்கு அப்புறம் உங்கள் அபிப்பிராயம் தான் என் அபிப்பிராயமாக இருக்கும்."

"வசந்தி நீயும் இப்போ நல்லா பேசக் கத்துக்கிட்ட பரவாயில்ல. அதப்பத்தி நாம ரெண்டு பேரும் அப்புறமா முடிவு செய்வோம். உன் விருப்பப்படியே எதுவும் நடக்கும். கவலை வேண்டாம்" என்றான் ராமு.

"அத்தான் இதெல்லாம் திருமணத்திற்கு முன்பு ஆண்கள் பெண்களை மயக்க சொல்லும் வார்த்தைகள். ஆனால் திருமணத்திற்குப் பின்பு பெண்களின் விருப்பங்கள் எல்லாம் அவங்க கணவன்கள்ட கட்டுப் பாட்டுக்குள் தவிடு பொடியாகி விடுகின்றன. இதை எத்தனையோ குடும்பத்துல நாம பார்த்திருக்கிறோம்."

"நம்ம குடும்பத்துலயும் அந்த மாதிரி நடக்குமுன்னு சொல்றியா வசந்தி."

"இல்லத்தான். நான் உங்களைச் சொல்லல்ல. உலக வழக்கத்த சொன்னேன். நம்ம குடும்பத்துல அது நடக்கிறது நடக்காதது நம்ம ரெண்டு பேரொட ஒத்துழைப்பைப் பொறுத்தது."

"வசந்தி நான் தொழிற்சங்கத்தில் கடமையாற்றுகிறவன். அதனால் மேடைகள்ல பெண்கள் சம்பந்தமா நான் எத்தனையோ விவாதங்கள் நடத்தியிருக்கிறேன். பெண்களின் சமத்துவத்துக்காக எவ்வளவோ பேசியிருக்கிறன். அதனால நம்ம குடும்பத்துல பெண் களின் மேம்பாட்டிற்காகத்தான் முன்னுரிமை வழங்கப்படும்."

"நீங்க உரிமையைக் கொடுத்திட்டிங்க என்கிறதுக்காக நான் குடும்பக்கட்டுப்பாட்டையும் பண்பையும் மீறி நடந்திட மாட்டேன். சரியா அத்தான். எனக்கு நீங்கதான் முக்கியம். அது மட்டுமல்ல குடும்பத்திலே அத்தை, சிவகாமி அக்கா, அருண் எல்லோரும் ஒற்றுமையா இருப் பதையே நான் பெருமையாக நினைத்து வாழ்ந்து காட்டுவேன்" என்றாள் வசந்தி.

"இந்த சபதமெல்லாம் இப்போ வேண்டாம். ஏன்னா பெண்கள்கூட இப்படி உறுதிமொழி கொடுத்திட்டு திருமணத்திற்குப்பின்பு அதை மறந்துடுறாங்க. குடும்பத்தோட சண்டை போட்டுக்கிட்டு கணவனை தனியாகக் கூட்டிக்கிட்டுப் போறதையும் நாம பார்த்திருக்கோம்."

"அத்தானுக்கு இப்பவே அந்தப் பயமெல்லாம் வந்திருச்சா? கவலை வேண்டாம். இந்த வசந்தி தாய் இல்லாம, தந்தை அண்ணன்மார்களோட ஆதரவில வளர்ந்தவ. ஏங்க அண்ணி வீட்டுக்கு வந்து இத்தனை வருஷமாச்சு. நாங்க யாருமே ஒருவருக்கொருவர் எதிர்த்துப் பேசினதில்ல. இதனால் தோட்டத்துல கூட எங்க குடும்பத்து மேல பல பேருக்கு பொறாமை."

"பயப்படாத வசந்தி. அந்த நிலை நம்ம வாழ்க்கையிலும் தொடரும். எங்கம்மாவோ சிவகாமியோ உனக்கு ஏற்றவங்களாத்தான் இருப்பாங்க. அதனால அந்த கவலையெல்லாம் நமக்கு வேண்டிய தில்ல. ஆனா ஒண்ணு, என்னான்னா அம்மாவுக்கு நீ வேலைக்குப் போறதுல இஷ்டமிருக்காது. அதையும் நீயும் நானும்தான் சமாளிக் கணும். நம்ம பேச்சை அம்மா மீற மாட்டாங்க அதுபோல உன் மீதும் கொள்ளை அன்பு வச்சிருக்காங்க."

"சரி அத்தான் நேரமாயிட்டுது தூங்குங்க" என்று வசந்தி எழுந்தபோது, அங்கே வந்த முனுசாமி,

"என்ன ரெண்டு பேரும் கதச்சி முடிச்சிட்டீங்களா?" என்று கேட்டார்.

"இல்ல சார். இன்னும் கதைக்க நிறைய இருக்கு. ஆனா இப்ப நேரமில்ல" என்று ராமுவின் முகத்தைப் பார்த்து கேலி செய்துவிட்டு,

"இருங்க ரெண்டு பேருக்கும் தேநீர் கொண்டுவந்து தரட்டுமா?" என்று வீட்டினுள் நுழைந்து விட்டாள்.

குசினியில் வசந்தியின் அண்ணி பர்வதம் மறுநாள் காலை சாப்பாட்டிற்காக மாவு அவித்துக் கொண்டிருந்தாள். வசந்தியைக் கண்டதும் "காலையில் நேரத்தோடு எழுந்திரு. இடியப்பம் அவிக்கணும்" என்றாள்

"சரி அண்ணி" என்றவாறே பிளாஸ்கில் இருந்த தேநீரை இரண்டு கப்களில் ஊற்றிக்கொண்டு ராமுவின் படுக்கை அறைக்குள் சென்று கொடுத்துவிட்டு தனது அறையில் வந்து படுத்துக் கொண்டாள்.

தூக்கம் கண்ணோடு சேர மாட்டேன் என்கிறது. புரண்டு புரண்டு படுத்தாள். தோட்டத்து ஸ்டோரில் அடித்த மணியோசை நேரம் இரண்டு என்பதை ஞாபகமூட்டியது.

வசந்தி ஒருக்கலித்துப் படுத்தபோது அறையில் வாசலில் நிழலாடியது திடுக்கிட்டுப் பார்த்தாள்.

# 29

பெண்மைக்கு இலக்கணம் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு போன்ற நாற்குணங்களாகும். இவைகளே குடும்பப் பெண்ணின் அணிகலன்களாகும். பெண்களின் துணிச்சலும் சாதுர்யமும் அவர்களுக்கு ஏற்படப் போகும் இன்னல்களிலிருந்து அவர்களை விடுவித்துக் கொள்ளப் பயன்படுத்தப்படும் ஆயுதமாகும்.

குடும்பப் பெண்கள் உற்றார், உறவினர் என்ற வட்டத்தில் சுழன்று வாழ்ந்தாலும் அவர்கள் உள்ளத்தில் அச்சமும் அதிர்ச்சியும் கூடவே குடி கொண்டு விடுகின்றன. இது பொறுப்புள்ள பெண்களின் நிலையாகும்.

வசந்தி தன் அறை வாசலில் நிழலாடியது கண்டு அதிர்ச்சியும், அச்சமும் கொண்டு விட்டாள். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. திரையை நீக்கி உள்ளேவந்த வசந்தியின் அண்ணி "பர்வதம், என்ன வசந்தி தூங்காம இருக்க" என்று கேட்டாள்.

அப்போதுதான் நிழல் அண்ணியுடையது என்பதை வசந்தி உணர்ந்து கொண்டாள். அவளுக்கு சற்று நிம்மதியாக இருந்தது. "நீங்களா அண்ணி நான் பயந்தே போயிட்டேன்" என்று சொல்லிவிட்டு வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

"சரி சரி தூங்கு. காலையில் நேரத்தோடு எழும்பணும். அவங்க முதல் பஸ்ல போகணுமின்னு சொன்னாங்க. நேரத்தோடு காலை சாப்பாட்ட செய்யணும்" என்று சொல்லிவிட்டு பாயை விரித்தாள் பர்வதம்.

"அண்ணி காலையில என்ன நேரத்தோடு எழுப்புங்க" என்றவாறே பெட்சீட்டை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்து விட்டாள் வசந்தி.

"வசந்தி என்ன இப்படித் தூங்குற, எழுந்திரு நேரமாயிட்டு" என்று வசந்தியின் அண்ணி பர்வதம் வந்து எழுப்பும் போதுதான் வசந்தி தான் நன்றாகத் தூங்கியிருக்கிறேன் என்பதை உணர்ந்து கொண்டாள்.

"அண்ணி மணி எத்தனை" என்று கேட்டுக் கொண்டே எழுந்து படுக்கையில் அமர்ந்து கொண்டாள்.

"இப்போதுதான் ஸ்டோரில் ஐந்து மணி அடிச்சாங்க" என்று சொல்லி சமையல் கட்டுக்குள் நுழைந்து விட்டாள் பர்வதம்.

முகத்தைக் கழுவிக் கொண்டு சமையல் கட்டுக்குள் வந்த வசந்தி தேநீரை எடுத்துக் கொண்டு ராமு படுத்திருந்த அறைக்குள் சென்றாள். நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தவன் மேல் குளிர்ந்த நீரைத் தெளித்தாள்.

"என்ன சார் நல்ல தூக்கம் போல இருக்கு. இந்தாங்க தே..." என்று அருகில் தேநீரைக் கொண்டு போய் வைத்தாள். இவர்களின் சத்தம் கேட்டு முனுசாமியும் எழுந்து விட்டான்.

"என்னம்மா இரவு தூங்கல்லையா? இந்த நேரத்தில தேநீர் கொண்டு வந்திருக்க" என்று கேட்டுக் கொண்டே அவரும் தேநீரை பெற்று ஒரு மடக்கு குடித்து ச்சா என்றவாறே டம்ளரை கீழே வைத்தார்.

"நீங்க முதல் பஸ்ஸில போனுமின்ன சொன்னீங்களாம். அதுதான் நேரத்தோட அண்ணி என்ன எழுப்பிட்டாங்க. சரி தேத்தண்ணி குடிச்சிட்டு வாங்க. முகம் கழுவ தண்ணி எடுத்து வைத்திருக்கிறேன்."

இதற்குள் ஜெகதீசனும் எழுந்து விட்டான். ஏனைய வசதிகளை செய்து கொடுப்பதில் ஈடுபட்டார். இவர்கள் காலைக் கடன்களை முடித்துவிட்டு திரும்பும்போது காலை சாப்பாடு தயாராக இருந்தது.

காலை உணவாக இடியப்பமும், பருப்புக் குழம்பும் செய்திருந்தார்கள். அந்த வீட்டிற்கு ஏற்றாற்போல் சிறிய சாப்பாட்டு மேசையும் இரண்டு நாற்காலியும் போட்டிருந்தார்கள். இதெல்லாம் வசந்தியின் வசதிக்காக அவள் அண்ணன் ஜெகதீஸ் செய்தது.

சாப்பிட ஆயத்தமானதும் வசந்தி எல்லோருக்கும் இடியாப்பத்தை எடுத்து வைத்து சம்பலையும், குழம்பையும் பரிமாறினாள். ராமு புது கையோடு தலை குனிந்தவாறே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். "என்ன சார் பெண் பிள்ளையாட்டமா வெட்கப்படுறீங்க" என்று அவனை கிண்டல் செய்தார் முனுசாமி.

சாப்பிட்டு முடியும் வரை அவர்களை அருகில் நின்று கவனித்தாள் வசந்தி. அதற்குள் வசந்தியின் அண்ணி தேநீர் தயார் செய்து விட்டாள். தேநீரைக் கொண்டு வந்து மேசை மேல் வைத்துவிட்டு ராமுவின் தட்டில் இன்னும் இரண்டு இடியாப்பத்தை எடுத்துப் போடப்போன வசந்தியின் கைகளை வேண்டாமெனத் தடுக்கும் வகையில் பிடித்துக் கொண்டான். எதிர்பாராது நடந்த இந்த நிலையை உணர்ந்து வசந்தி வெட்கப் பட்டாலும், கையை விடுவித்துக் கொள்ள அவள் விரும்பவில்லை. ராமுவோ பிடித்த கையை விடாமல் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவள் தலை கவிழ்ந்து நின்றாள்.

"சார் கையை விட்டுட்டு சாப்பிடுங்க" என்று முனுசாமி சொன்னதும்தான் இருவரும் திடுக்கிட்டு சுய உணர்வுக்கு வந்து செய்யாத குற்றத்தைச் செய்து விட்டது போலத் தடுமாறினர்.

"என்ன தடுமாறுறிங்க. இப்ப ஒன்னும் தப்பா நடந்திடல்ல. ராமு சார் தேநீரைக் குடிங்க நேரமாயிட்டுது" என்றார் முனுசாமி.

உள்ளே போன வசந்தி அறையில் போடப்பட்ட கட்டிலில் அமர்ந்து கொண்டு ராமுவின் கை பட்ட சுக உணர்வால் மௌனமாகிப் போனாள். அவள் உடலில் மின்சாரம் பாய்ச்சியது போன்றிருந்தது.

'எனக்கு என்ன நடந்தது. ராமுவின் கைகள் என்ன மின்சாரமா? அவர் கை என்மேல் பட்டதும் ஏன் இந்த படபடப்பு, என்றுமில்லாத உணர்வு என்னை ஆட்கொண்டு விட்டது போல் இருக்கிறதே' என்ற இன்ப சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள் வசந்தி.

ராமு என் கையை வேண்டுமென்று பிடித்தாரா அல்லது எதார்த்த மாகப் பிடித்தாரா. சரி எப்படி இருந்தால்தான் என்ன. ராமு என்னைக் கட்டிக் கொள்ளப் போகிறவர் தானே என்ற தவிப்பில் எழுந்து வெளியே வந்தவள் ராமுவைக் கண்டு வெட்கப்பட்டு மீண்டும் அறையினுள் நுழைந்து கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.

'ச்சே இவரைச் சந்திக்கும் வரை நான் நல்லாத்தானே இருந்தேன். இப்போதெல்லாம் அவரைப் பார்க்காமல் என்னால் இருக்க முடிய வில்லையே! அவரை நான் காணாத போதெல்லாம் அவர் எழுதிய கடிதங்களைப் பலநாள் படித்து ரசித்ததுண்டு. அவர் வரமாட்டாரா என்ற ஏக்கம் என்னை வாட்டி வதைக்கும். இப்போ அவர் வந்திருந்தும் வெட்கம் என்னை அவரைப் பார்க்கவிடாமல் தடுக்கிறதே!' இப்படியே சிந்தனையில் லயித்திருந்த வசந்தியை,

"வசந்தி இங்கே உட்கார்ந்து என்ன பண்ணிக்கிட்டிருக்க? அவங்க போறதுக்கு தயாராயிட்டாங்க. நீ மூலையில் உட்கார்ந்துகிட்டு இருக்க" என்று அறைக்குள் வந்து வசந்தியிடம் கடிந்து கொண்டு வெளியில் சென்று விட்டாள் அண்ணி.

"இதோ வந்திட்டேன் அண்ணி" என்று வெளியில் வந்தாள் வசந்தி.

வசந்தியைக் கண்டதும் ராமு ஏதோ குற்றம் செய்தவன் போல் இருந்தான். நாங்க போயிட்டு வாரோம் என்று எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார்கள் ராமுவும் முனுசாமியும். அவர்கள் கூடவே சிறிது தூரம் சென்ற வசந்தி "அத்தான் ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்" என்று கேட்டாள்.

"வசந்தி இன்று உன்னை விட்டு பிரிவதில் எனக்கு ஏதோ போல் இருக்கிறது. இதை மகிழ்ச்சி என்பதா துன்பம் என்பதா என்றே தெரிய வில்லை. நான் போனதும் கடிதம் போடுகிறேன். நீயும் உடனடியாக பதில் போடு. நானும் சீக்கிரமாக திருமணத்திற்கு ஏற்பாடு செய் கிறேன்" என்றான்.

ராமுவின் இந்த வார்த்தைகள் வசந்தியைத் தடுமாறச் செய்தது. "அத்தான் என் நிலையை நான் என்னவென்று சொல்லுவேன். இப்படியே உங்களுடனே வந்திடலாமா என என் மனம் சொல்கிறது. அத்தான் போன முறை போல கடிதம் போடாமல் இருந்திடாதிங்க. உங்க கடிதத்தை நான் எதிர்பார்த்து காத்திருப்பேன். இப்படி பேசிக்கொண்டே ரோட்டுக்கு வந்து விட்டார்கள். பஸ் வருவதற்கு இன்னும் பத்து நிமிடங்கள்

இருந்தன. முனுசாமியைப் பார்த்த வசந்தி அண்ணே “இவரைப் பத்திரமா கூட்டுக்கிட்டு போங்க” என்றாள் கிண்டலாக.

“இதோ பஸ் வருகிறது” என்று ஜெகதீசன் சொல்ல, பஸ் வந்த திசையைப் பார்த்தார்கள். அதற்குள் பஸ் அருகில் வந்து நின்றது.

இரண்டு பேரும் ஏறிக் கொண்டதும் கையை அசைத்து விடை பெற்றனர். பஸ் கண்ணுக்கு மறையும் வரை நின்றவள் ஏதோ பறி கொடுத்தவள் மாதிரி மௌனமாக வீட்டை நோக்கிச் சென்றாள் வசந்தி.

ஜெகதீஸ் பிரட்டுக்குப் போய் விட்டார். அண்ணி பர்வதம் வேலைக்குப் போகும் அவசரத்தில் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். வசந்தி அமைதியாக ஒரு மூலையில் அமர்ந்திருந்தாள்.

“என்னம்மா இன்னைக்கி வேலைக்குப் போகல்லையா?” என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்த பர்வதம் “மாப்பிள்ளை என்ன சொன்னார்?” என்று கேட்டாள்.

அண்ணியின் இந்த வார்த்தையில் திடுக்கிட்டவள் “போயிட்டு கடிதம் போடுறதா சொன்னார்” என்று சோர்வோடு பூமியைப் பார்த்த வாறே சொன்னாள்.

“வசந்தி உனக்கு என்னாச்சி. இந்தாம்மா வீணா மனசப் போட்டுக் குழப்பிக்காம வேலைக்குக் கிளம்பு. சாப்பாடெல்லாம் தயாரா எடுத்து வச்சிருக்கேன். பகல் சாப்பாடு அதோ கெரியரில் எடுத்து வச்சிருக் கேன். கவனமா வேலைக்குப் போய்ட்டு வா” என்றவாறே தன் கடமை யைச் செய்ய புறப்பட்டுவிட்டாள் பர்வதம்.

பிரசில் பற்பசையை எடுத்துக் கொண்டு வெளியில் போய் காலைக் கடன்களை முடிப்பதில் ஈடுபட்ட வசந்தி, வீட்டுக்கு வந்து வேலைக்குப் புறப்படத் தொடங்கினாள்.

அவசர அவசரமாக சாப்பிட்டுவிட்டு உடைகளை மாற்றிக் கொண்டு காரியாலயம் போகத் தயாரானாள் வசந்தி. வழமையாக இவளுடன் நகருக்குப் படிக்கப் போகும் நிர்மலாவும் வீட்டிற்கு வந்து “அக்கா ரெடியா” என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

“இதோ புறப்பட்டுட்டேன் நிர்மலா” என்று காலில் செருப்பை மாட்டியபடி திரும்பிப் பார்த்தாள் வசந்தி. அங்கே நிர்மலா பாடசாலை உடையில் இல்லாமல் நீல நிற கவுன் அணிந்து கையில் ஒரு கூடை யுடன் நின்றிருந்தது வசந்திக்கு வியப்பாக இருந்தது.

“என்ன நிர்மலா இன்னைக்குப் பாடசாலைக்குப் போகலையா?” என்று கேட்டுவிட்டு அவளை மேலும் கீழுமாகப் பார்த்தாள்.

“இல்லக்கா இன்னைக்கு அண்ணனும் அண்ணியும் வர்ராங்க. அதற்கு வீட்டிற்கு கொஞ்சம் சாமான்கள் வாங்கிக் கொண்டு வரச்

சொல்லி அம்மா சொன்னாங்க. அதான் புறப்பட்டு வந்தேன்" என்றாள் நிர்மலா.

"வீட்டுக்கு விருந்தாளிங்க வந்தாலும் நீ தான் சாமான் வாங்கணுமா நிர்மலா. எங்கே அண்ணன் சுரேஷ். அவன அனுப்பி வைக்கலாந்தானே."

"அண்ணன அனுப்பினா வேலை கெட்டுப் போகும். சம்பளமும் இல்லாமல் போகும். அதனாலதான் அம்மா என்னப் போயிட்டு வரச் சொன்னாங்க."

"நிர்மலா இதுனாலதான் நம்ம சமூகம் முன்னேறுறதே இல்ல. நீ பாடசாலைக்குப் போகாம மட்டம் போட்டா அதனால ஏற்படுகிற விளைவுகளை எங்கம்மா சிந்திக்கலையே, அண்ணனுக்கு சம்பளம் இல்லாம போகும் என்பதைத்தான் முக்கியமா பார்த்திருக்காங்க உங்கம்மா."

"இதெல்லாம் நான் சொன்னா அம்மாவுக்கும் அண்ணனுக்கும் விளங்க மாட்டேங்குதே அக்கா."

"அவங்க பேச்சை கேட்கவும் வேணும்தான். இருந்தாலும் இப்படி ஸ்கூலுக்குப் போகாம வீட்டு வேலைகளை செஞ்சிக்கிட்டிருந்தா உனக்கு ஏற்படுகிற பாதிப்புபத்தி அவங்க நெனச்சிப் பார்க்கணு மில்லியா?"

"நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேக்கா அதுக்கு அம்மா, நீ என்ன படிச்சி உத்தியோகமா பார்க்கப் போற. என்னைக் கிருந்தாலும் நீ இன்னொருத்தன் வீட்டுக்குப் போகப் போறவதானே. அதனால எழுத வாசிக்க தெரிஞ்சா மட்டும் போதும் அப்படின்னு சொல்லுறாங்க. இதுக்குமேல நான் என்ன சொல்ல வசந்தியக்கா."

"என்ன செய்ய நிர்மலா. நம்ம மக்கள் நிலைமை அப்படி. இப்ப என்னப்பாரு. நான் படிச்சி இப்போ உத்தியோகம் பார்க்கலயா. படிப்புங்கிறது நிர்மலா உத்தியயோகம் பார்க்க மட்டுமில்ல. அறிவு வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் படிப்பு ரொம்ப அவசியம். இத நீயாவது உணர்ந்து அக்கறையோடு படிக்க வேணும். சரி வா போகலாம் நேரமாயிட்டுது" என்று வீட்டை பூட்டி சாவியை வழமையா வைக்கும் இடத்தில் வைத்து விட்டுப் புறப்பட்டார்கள்.

"அக்கா நேத்து நம்ம அம்மா இன்னொன்னும் சொன்னாங்க."

"அப்படி என்ன இன்னொன்னு சொன்னாங்க."

"இங்க பாரு நிர்மலா. இப்ப நம்ம வசந்திக்காவ அவங்க சகோதரங்க எவ்வளவு படிக்க வைச்சாங்க. இந்தா மாப்புள்ள வீடு தேடி வந்திட்டாரு. இனி வேலைய விட்டுட்டு போக வேண்டியதுதான். அதனால நீயும் தோட்டத்தில பெயர் பதியும் போது பேர் கொடுத்திடு. அப்படின்னு சொன்னாங்க."

"இவ்வளவையும் கேட்டுட்டு நீ எப்படி இத்தனை சந்தோசமா இருக்கிற நிர்மலா. நிர்மலா உங்க அம்மா இன்னும் அந்த காலத்தையே நினைச்சிக்கிட்டு இருக்காங்க. நீயும் மக்குத்தனமா இருக்க. நீ உன் படிப்பில ஆர்வம் காட்டி நல்லா படி. நிச்சயமாக உனக்கு உத்தியோகம் கெடைக்கும். நீயும் மத்தவங்களைப் போல நல்லா வரலாம். நான் இன்னைக்கு வேலை விட்டு வந்து அம்மாவைக் கண்டு பேசுறான்.

"ஆமாக்கா. நீங்க வந்து சொன்னாத்தான் அம்மாவுக்குப் புரியும். நா சொல்லறத அவங்க காதுல போட்டுக்கிறதே இல்ல. இந்த மாதம் சோதனையும் இருக்கு. ஒழுங்கா படிக்காட்டி பாஸ் பண்ண முடியாது" என்று சொன்னபோது நிர்மலாவின் முகத்தில் கவலை ரேகை படர்ந் திருந்தது.

இருவரும் பேசிக் கொண்டே குறுக்கு வழியாக பிரதான பாதையை அடைந்தனர். அங்கு பாட சாலை மாணவ மாணவிகள் பள்ளி செல்வதற்கு பஸ்ஸிற்காகக் காத்திருந்தனர். பஸ் வரும் சத்தமும் கேட்டது. எல்லோரும் அமைதியடைந்து பஸ்ஸில் இடம் பிடிப்பதற்குத் தயாராக இருந்தனர். பஸ் நின்றதும் எல்லோரும் ஏறிக்கொண்டு இடங்களைப் பிடிக்க ஆர்வம் காட்டினர். வசந்தியும், நிர்மலாவும் உட்கார இடமில்லாமல் நின்று கொண்டிருந்தார்கள். பஸ் பெரிய சத்தத்தோடு கிளம்பியது.

பஸ்ஸினுள் ஒரே இரைச்சல். பள்ளி மாணவர்கள் கதைப்பதிலும் அரட்டை அடிப்பதிலும் மும்முரமாக இருந்தார்கள். நிர்மலா பாடசாலை உடையில் இல்லாதிருப்பதைக் கண்டு சில மாணவ மாணவிகள் கேலி செய்தார்கள். திடீரென பஸ் ஒரு குலுக்கலோடு நின்றது. உள்ளே இருந்தவர்கள் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து கொண்டனர். வசந்தி தன் கைப்பிடியை விட்டு விட்டு எதிரே இருந்த சீட்டின் கம்பியைப் பிடித்துக் கொண்டாள். அதே நேரத்தில் அவளை ஓர் உருவம் முறைத்துக் கொண்டிருந்தது. அந்த உருவத்தைப் பார்த்து திக் பிரமை பிடித்தவள் போல் சிலையாகி விட்டாள் வசந்தி.

# 30

வாழ்க்கையில் வில்லன் பாத்திரமே முக்கியமானது. ஒருவன் வாழ்வில் உயர்வதற்கும் எதிர்ப்பும் போட்டியும் அவசியமாகிறது. ஒரு மனிதன் எந்தப் பொருளையும் இழக்கலாம். ஆனால் மீண்டும் அவனால் அந்தப் பொருளை மீட்டெடுக்க முடிகிறது. ஆனால் வாழ்க்கையில் ஒருவன் தான் விரும்பிய அல்லது காதலித்த ஒருத்தியை அடைய

முடியாமல் போகும் போது அதை அவனால் சகிக்க முடியாது. இதை வாழ்வில் ஏற்பட்ட மிகப்பெரும் இழப்பாகவே கருதுகிறான். அந்த இழப்பை அவனால் என்றுமே ஈடுசெய்ய முடியாது.

வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளில் ஒரு மனிதனின் கௌரவம், அந்தஸ்து போன்றவைகளும் முக்கியமாகக் கருதப்படு கின்றன. அதற்கு இடையூறுகள் ஏற்படுவதை பெரும் கௌரவப் பிரச்சினையாகக் கருதுகிறான். அதை அடைய பல விதமான முயற்சிகளை மேற்கொள்கிறான்.

வசந்தி சிலையாகி விட்டதற்கு காரணம், அனந்தராமன் பிராயணம் செய்த பஸ்ஸில் அவள் ஏறி விட்டதே! அனந்தராமனைக் கண்டதும் அவள் அதிர்ச்சியோடு மிரண்டு விட்டாள். அவள் உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டியது. அவள் இவ்விதம் அவனைக் கண்டு பயப்படுவதற்கும் காரணம் உண்டு.

அனந்தராமன் வசந்தியின் தூரத்து உறவினன். அன்றோரு நாள் அவன் வசந்தியை பெண் கேட்டு தன் பெற்றோர்களை அனுப்பி வைத்திருந்தான். வசந்தியைத் திருமணம் செய்ய வேண்டுமென நீண்ட நாட்களாக மனதில் எண்ணியிருந்த அனந்தராமன் அதை நிறைவேற்றும் முகமாக தன் பெற்றோர்களை அனுப்பி வைத்திருந்தான். ஆனால் அவன் விரும்பிய பெண் வேறொருவனின் காதலியாக இருப்பதை அறிந்து அவன் மனம் புழுங்கிக் கொண்டிருந்தது. இதைத் தன் வாழ்வில் ஏற்பட்ட பெரும் தோல்வியாக துயரமாக எண்ணி எண்ணி வேதனைப் பட்டுக் கொண்டிருந்தான். அத்தோடு நின்றுவிடவில்லை. வசந்திக்கும் அவளது குடும்பத்திற்கும் நல்ல பாடம் புகட்ட வேண்டுமென சபதம் எடுத்துக் கொண்டான். அதோடு, அவன் ஜெகதீசனுக்கு ஒரு கடிதம் போட்டிருந்தாள்.

அக் கடிதத்தில்,

நான் வசந்தியை அடைந்தே தீருவேன். இல்லையேல் அவளின் வாழ்க்கையை சின்னாபின்னப்படுத்துவேன். அதிலிருந்து உன் தங்கையை நீ காப்பாற்ற நினைத்தால், உன் தங்கையின் காதலனை மறந்து விடச் சொல்லு. அதோடு என்னை திருமணம் செய்ய சம்மதிக்கச் சொல்லு. இல்லே உன் அருமைத் தங்கையின் வாழ்க்கை விபரீதமாகப் போய்விடும் ஜாக்கிரதை.

இப்படிக்கு
அனந்தராமன்.

அவனின் கடிதத்தைப் பார்த்து ஜெகதீஸ் அரண்டே போய் விட்டான். வசந்தியும் பர்வதமும்தான் அவனுக்கு ஆறுதல் சொன் னார்கள். இந்தக் கடிதத்தைப் பற்றி இன்றுவரை வசந்தியோ, ஜெகதீசோ ராமுவிடம் பிரஸ்தாபிக்கவில்லை. அன்று ஜெகதீசுக்கு

ஆறுதல் சொன்ன வசந்திக்கு இன்று யாருமே ஆறுதல் சொல்வதற் கில்லாமல் தவித்தாள். அனந்தராமனைக் கண்டதும் அவளுக்கு அந்தக் கடிதம்தான் ஞாபகம் வந்தது. அதனால்தான் அவள் இன்று பயந்து நடுங்குகிறாள். தன்னை ஒருவாறு சமாதானப்படுத்திக் கொண்டு மீண்டும் அனந்தராமன் இருக்கிற பக்கம் தன் பார்வையைச் செலுத்தினாள்.

அனந்தராமனின் பயங்கரமான பார்வையும், உருட்டு முழியும் பார்ப்பதற்கே அச்சத்தைக் கொடுத்தது. மூன்றாம் முறையும் திரும்பிப் பார்ப்பதற்குள் அவனே அவளருகில் வந்துவிட்டான். "என்னம்மா வேலைக்கா போற. போய் சீட்டுல இரு" என்று தான் அமர்ந்து வந்த சீட்டைக் காட்டினான். வசந்தியைப் பழிவாங்க வேண்டுமென சபதம் கொண்டிருந்த அனந்தராமனுக்கு இன்று அந்த சந்தர்ப்பம் கிடைத்தது.

வசந்தி எதுவுமே செய்ய முடியாத நிலையில் தப்பித்தோம் பிழைத்தோமென வேகமாகச் சென்று அந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள். அதே வேகத்தில் வசந்தியின் சீட்டருகே வந்து நின்றான் அனந்தராமன். "என்ன பொண்ணு வேலைக்கா?" என்று வசந்தியைப் பார்த்து கேட்க வசந்தி அதிர்ச்சியுடன் எழுந்துவிட்டாள்.

"இல்லை உட்கார்" என்றவன் தானும் வசந்திக்கருகில் அமர்ந்து கொண்டான். பக்கத்தில் அவனின் நண்பனாக இருக்க வேண்டும். "நான் தள்ளி இருக்கேன். வசதியாக இருங்க" என்று இடம் கொடுக் கவே, எலிப்பொறியில் மாட்டிக் கொண்ட நிலையில் தவித்தாள் வசந்தி. வாய் திறந்து எதுவும் சொல்ல முடியாத நிலையில் அடுத்து என்ன நடக்குமென அவள் யோசிக்கும் முன்பே அனந்தராமன் வாய் திறந்து பேசினான்.

"நீ என்னத்தான் வேண்டாமுன்னு சொன்ன. அந்த ஊர்சுத்திப் பயலயாவது திருமணம் செஞ்சிக்கிட்டியா?" என்று கேட்க வசந்திக்கு ஒரு பக்கம் வெட்கமும் மறுபக்கம் ஆத்திரமும் ஏற்பட்டது. என்றாலும் தான் இருப்பது பஸ் என்பது உணர்ந்து மௌனமாக இருந்தாள்.

அவனோ விட்டபாடில்லை. "என்னடி நான் கேட்டுக்கிட்டிருக்கேன். நீ பதிலே சொல்ல மாட்டேங்கிற" என்று காதுக்குள் குசுகுசுத்தான். ஆத்திரமும் அழுகையும் வர எழுந்தாள் வசந்தி. அவளின் கையை லபக்கெனப் பிடித்து அமர வைத்தான் அனந்தராமன். "ஏதாவது ஏக்கு மாக்கு பண்ணி பஸ்ஸிலேயே உன் மானத்த வாங்கிடுவேன் ஜாக்கிரதை" என்று பயமுறுத்தினான். பல்லைக் கடித்துக்கொண்டு எப்போது பஸ் நிற்கும் என்று ஏங்கிக் கொண்டிருந்தாள். பஸ் குறிப்பிட்ட இடத்தை அடைந்தவுடன் எல்லோரும் இறங்க ஆரம்பித்தார்கள். எப்போது இறங் குவோமென காத்துக் கொண்டிருந்த வசந்தி அவசர அவசரமாக இறங்க

எழுந்துகொள்ள, “கொஞ்சம் இருங்க அம்மா எல்லோரும் இறங்கிட்டதும் கடைசியா நீங்க இறங்கலாம்” என்று அச்சுறுத்தினான். பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்கள் இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

முன் சீட்டிலிருந்து கீழே இறங்கிய நிர்மலா, வசந்தி இறங்காததைக் கண்டு அவர்களை முன்னே விட்டு இவள் பின்னால் இறங்கினாள். இறங்கியவள், “என்னக்கா நேரமாகலையா?” என்று கேட்டுக் கொண்டே வசந்தியின் அருகில் சென்றாள்.

நிர்மலாவைத் திரும்பிப் பார்த்த அனந்தராமன், “நீ யாரம்மா இவங்கட பொடிகாட்டா?” எனக்கேட்டு “உன்ன நான் சந்திக்க வேண்டிய இடத்தில சந்திக்கிறேன்” என்று வசந்தியைப் பார்த்து எச்சரிக்கை செய்துவிட்டு போய்விட்டான். அவன் போகும் திசையையே பார்த்துக் கொண்டிருந்த வசந்தியை நிர்மலாதான் சுயநினைவுக்குக் கொண்டு வந்தாள். “அக்கா யார் அவர்கள்? ஏன் உங்களைப் பயமுறுத்தி விட்டுப் போகிறார்கள்” என்று ஏதும் புரியாதவளாக கேட்டாள் நிர்மலா. இவ்வளவு நேரமாக அடக்கி வைத்திருந்த அழுகையை அப்போதுதான் வெளிக்காட்டினாள் வசந்தி. நிர்மலா விழித்தாள். “ஏன் அழுவுறீங்க அக்கா” என்று கேட்டுக்கொண்டே கையைப் பிடித்து வீதியோரத்திற்கு அழைத்துச் சென்றாள் நிர்மலா. “யார் இந்த தடியன்கள். சரி சரி முகத்தை துடைச்சிட்டுப் புறப்படுங்க. எல்லோரும் வேடிக்கை பார்க்கிறாங்க” என்று அவளை உற்சாகப்படுத்தினாள் நிர்மலா.

“நிர்மலா நேரமாகிவிட்டது. நான் வேலைக்குப் போயிட்டு வர்றேன். வீட்டில் பேசுவோம்” என்று விடைபெற்றாள் வசந்தி.

வசந்தி காரியாலயத்திற்குள் நுழையும்போது “கும்மோர்னிங் மிஸ். உங்கள யாரோ இரண்டு பேர் தேடிக்கிட்டு வந்தாங்க. நீங்க இன்னும் வரலைன்னு சொன்னேன். பிறகு வர்றதா சொல்லிவிட்டுப் போயிட்டாங்க” என்றார் பிரதிநிதி.

உள்ளே சென்று அமர்ந்த வசந்தி பஸ்ஸில் நடந்த நிகழ்ச்சியால் எதுவுமே செய்ய முடியாதிருந்தாள். பகல் சாப்பாட்டின் பின்பு காரியாலயத்தில் ஆட்கள் இருக்கவில்லை. காலையில் நடந்த விஷயத்தை ஒரு முறை மனக்கண் முன் அலசிப் பார்த்துவிட்டு பிரதிநிதியிடம் சென்று விஷயத்தைச் சொன்னாள் வசந்தி. இதைக் கேட்ட பிரதிநிதி, “நான் அப்ப நினைச்சேன். இதுல ஏதோ விஷயமிருக்குன்னு. ஆள்ட போக்கே ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. அவங்க உங்களுக்குப் பகையாளிங்களா” என்று கேட்டார்.

“இல்ல சார். அவங்க நமக்கு உறவு முறை. ஏதோ சின்ன விஷயத்துல அவங்களுக்கு எங்க மேலே கொஞ்சம் ஆத்திரம்” என்றாள் வசந்தி.

"பயப்படாதீங்க வசந்தி மறுமுறை வரட்டும் அவங்கள பொலிசில் மாட்டுவிடுறன். பொம்புளப் புள்ளைங்க தன்னந் தனியா வெளிய போக முடியாது போலிருக்கே" என்று ஆத்திரப்பட்டார்.

"அவசரப்படாதீங்க சார். என்ன நடக்கிறது என்று பார்ப்போம்" என அன்றைய வேலைகளை கவனிக்க ஆரம்பித்தாள் வசந்தி.

அன்று மாலை எதிர்பாராமல் வழமையாகப் போகிற ஐந்து மணி பஸ் இல்லை. விசாரித்தபோது ஆறு மணிக்குத்தான் பஸ் என்று தெரிந்து கொண்டதும், பிரயாணிகளோடு பிரயாணியாக வசந்தியும் கீழ் வரிசையில் போய் நின்று கொண்டாள். குறிப்பிட்ட நேரத்தில் பஸ் வந்ததும் ஜன்னலோரமாக அமர்ந்து கொண்டாள். காலையில் நடந்த நிகழ்ச்சி இன்னும் அவள் மனதைவிட்டு அகலவேயில்லை. திரும்பத் திரும்ப அதையே நினைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

'இவன் விரும்பினால் நான் கட்டிக்கொள்ள வேணுமா? எனக் கென்று சுய ஆசாபாசங்கள் இல்லையா? யார் இவனை முன்பின் கண்டது. ராமு என்னோடு இன்று நேற்றா பழகுகிறார். அவரை நான் பிரிய முடியுமா?' என்று மனதிற்குள் ஆத்திரப்பட்டாள். பஸ் புறப்பட்டது.

பஸ்ஸைவிட்டு இறங்குகையில் மணி 7.45. கும்மிருட்டு. ரோட்டில் சிறிது தூரம் வரை கண்ணைச் சுலழவிட்டாள். இருட்டு அவளுக்குப் பழக்கப்பட்டு விட்டதொன்று என்பதால் அவள் நடக்க ஆரம்பித்தாள்.

பஸ் சென்ற திசையிலிருந்து கார் ஒன்று வந்தது. கண்ணைப் பறிக்கும் வெளிச்சத்தோடு அவளருகில் சத்தமின்றி நின்றது. கண்ணைக் கசக்கிக்கொண்டு யாரென்று பார்க்கும் முன்னர் பின்னால் வந்த ஒரு முரடன் வாயில் எதையோ வைத்து இறுக்கிக் கொண்டான். வசந்தி திமிறினாள். அவனிடமிருந்து விடுபட முடியாமல் திணறினாள்.

அவனுக்கு உதவியாக மற்றவனும் வந்துவிட்டான். இரண்டு பேரும் சேர்ந்து வசந்தியைத் தூக்கியது மாத்திரமே அவளுக்குத் தெரிந்தது. தூரத்தில் யாரோ அவளை 'வசந்தி' என்று கூப்பிடும் சத்தம் கேட்டது. ஆனால் முரடர்கள் அவளை அவசர அவசரமாக காரில் ஏற்றினார்கள்.

இந்தக் காட்சியைத் தூரத்தில் வந்து கொண்டிருந்த சிங்காரம் கண்டுவிட்டு, "ஐயோ ஜெகதீசன் அண்ணன்ட தங்கச்சிய காரில் தூக்கிப் போட்டுக்கிட்டுப் போறாங்க பாவீங்க" என தோட்டமே அதிரும் வண்ணம் சத்தம் போட்டுக் கொண்டு ஜெகதீசன் வீட்டினை நோக்கி ஓடினான்.

இந்த சத்தம் கேட்டு ஜெகதீசன் ஓடி வருவதற்குள் கார் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது. 'ஐயோ தங்கச்சி' என்று

அலறினான். இதற்குள் பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லோரும் டோர்ச் லைட்டுடன் ரோட்டில் கூடிவிட்டனர். விஷயத்தைத் தெரிந்துகொண்டு, அடுத்து என்ன செய்ய வேண்டுமென யோசித்தார்கள்.

உடனடியாக இரண்டு பேர் தோட்டத்து ஆபீசுக்கு ஓடினார்கள். அப்போதுதான் ஆபீசை பூட்டிக்கொண்டு துரை, பங்காளவிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவரைக் கூட்டிக்கொண்டு போக காவல்காரர் லாந்தருடன் தயாராக இருந்தான்.

நாய் குரைக்கும் சத்தம் கேட்டு "யாரு" என்று காவல்காரன் அதட்டினான். "நான்தான் மாணிக்கம் வந்திருக்கேன். துரையோட கொஞ்சம் பேசணும்" என்று அமைதியாகச் சொன்னான்.

மாணிக்கத்தை துரை கூப்பிட்டார். கூடவே கந்தசாமியும் வந்தான். "என்ன பேசணும் இந்த நேரத்துல" என்று கேட்டார்.

நடந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதும் துரை மிகவும் ஆத்திரப் பட்டார். "நம்ம தோட்டத்தில இந்த மாதிரி நடந்தா எனக்குத்தான் கெட்ட பேர்" என்று மீண்டும் ஆபீசைத் திறந்து பொலிசுக்குப் போன் செய்துவிட்டு வந்தவர், "இன்னும் கொஞ்ச நேரத்தில் பொலிஸ் வரும்" என்றவர், "நீங்க இப்ப வீட்டுக்குப் போங்க."

"நடந்த விசயம் எல்லாம் பொலிசுக்கிட்ட சொல்லணும்" என்று சொல்லிவிட்டு பங்களாவை நோக்கிப் புறப்பட்டார்.

இரவு எட்டு மணிக்கு பொலிஸ் வேன் தோட்டத்திற்கு வந்தது. நேரில் பார்த்தவரை முதலில் விசாரித்தார்கள். அத்தோடு, வசந்தியோடு நெருங்கிய தொடர்புடையவர்களின் பெயர்களையும் குறிப்பெடுத்துக் கொண்டார்கள்.

நிர்மலா காலையில் பஸ்ஸில் போகும் போது நடந்த விசயங் களையெல்லாம் பொலிசாரிடம் விபரமாக எடுத்துச் சொன்னாள். எல்லா குறிப்பையும் எடுத்துக் கொண்டு பொலிசார் போய் விட்டனர்.

வசந்தி வீட்டிற்கு வராததால் ஜெகதீசன், அவன் மனைவி பார்வதம், தந்தை ஞானம் எல்லோரும் சோகமே உருவாக இருந்தனர். தொழிலாளர்கள் எவ்வளவுதான் ஆறுதல் சொன்னாலும் கண் நிறைந்த பிள்ளையைக் காணவில்லை என்ற ஏக்கம் அவர்களின் இதயத்தை வாட்டியது.

மறுநாள் காலை எழு மணிக்கெல்லாம் பொலிஸ் வேன் தோட்டத் திற்கு வந்து ஜெகதீசனையும் அவன் மனைவி பர்வதத்தையும் அழைத்துச் சென்றனர்.

பொலிஸ் நிலையம் சென்றவர்களை "உங்களுக்கு யாராவது பகையாளி இருக்கிறார்களா. நன்றாக யோசித்துப் பார்த்துச் சொல்

லுங்க" என்று கூறிய சார்ஜன்டை ஜெகதீசன் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"இல்லை சார். அப்படி யாரும் இல்ல" என்றான் ஜெகதீசன். அந்த நேரத்தில் அவன் மனதிற்கு ஆனந்தராமனின் ஞாபகம் வரவில்லை. ஏனென்றால் ஆனந்தராமனின் அந்தக் கடிதத்தை அவன் பாரதூரமாக எடுத்துக் கொள்ளவில்லை. இன்று அந்தக் கடிதம் ஒரு விபரீதத்தையே உருவாக்கியிருந்ததை அவன் அறியவில்லை.

"சரி அப்ப வாங்க" என்று சார்ஜன்ட் அவர்களை அழைத்துக் கொண்டு ஒரு அரசாங்க மருத்துவமனைக்குக் கூட்டிக் கொண்டு போனார். பொலிஸ் சார்ஜன்ட் முன்னால் போக ஜெகதீசனும் பார்வதமும் அவரின் பின்னால் செல்கின்றனர். சார்ஜன்ட் 4ம் இலக்க வார்ட்டுக்கு அவர்களை அழைத்துச் சென்று கட்டிலிலிருந்த அந்த உருவத்தைக் காட்டினார்.

அந்த உருவத்தைப் பார்த்த ஜெகதீசனினதும் அவன் மனைவி பாவதத்தினதும் இதயங்கள் சுக்கு நூறாக உடைந்து நொறுங்கியது போலிருக்க, கட்டிலைப் பிடித்துக் கொண்டு ஓ வென கதறியழுதார்கள்.

# 31

தொழிலாளர்களின் பிரச்னைகள் முற்றும் முழுதாக தீர்க்கப் பட்டதாக வரலாறு இல்லை. ஓர் பிரச்னை தீர்ந்தால், இன்னொரு பிரச்னை உருவாகிக் கொண்டே இருக்கும். இந்த நிலைமை மாறுவதற்கான பல வழி வகைகளை அறிஞர்கள் கையாண்டும் அவை பயனளிக்கவில்லை. சோசலிச பாணியிலான ஆட்சிகள் நடக்கும் நாட்டில் கூட தொழிலாளர்களின் பிரச்னைகள் தலை தூக்க ஆரம்பித்து விட்டன. இதற்குத் தொழிலாளி காரணமல்ல. சர்வதேச உறவுக்கேற்ப கொள்கைகள் மாறுபடும் போது பிரச்சினைகளும் மாறுபடுகின்றன.

தொழிலாளர்களின் ஆட்சி ஏற்பட்டாலும் குறைபாடுகளும், பிரச்னைகளும் தலை தூக்க வழியுண்டு. ஏனென்றால் இன்றைய பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக மக்களுக்குச் சேவை செய்வதைவிட அதிகாரத்திலிருப்பவர்கள் கடன் கொடுக்கும் நாட்டின் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

ராமு தன் வாழ்நாளில் ஒரு பகுதியைத் தொழிலாளர்களின் சேவைக்காக அர்ப்பணித்துப் பணியாற்றியும், தொழிலாளர்கள் குறை

கூறவதைத்தான் காதில்கேட்க கூடியதாக இருக்கிறது என்ற மனச் சோர்வோடு வீட்டிற்குள் நுழைகிறான். .

அவனை வரவேற்ற சிவகாமி "போன காரியம் நல்லபடியாக முடிந்ததா அத்தான்" என்று கேட்டாள்.

சிவகாமியைப் பார்த்து புன்னகையொன்றை உதிர்த்த ராமு, "நான் போனால் எந்த நல்ல காரியமும் நடை பெறாமல் இருந்ததில்லை. போன காரியம் வெற்றிதான். அதைச் செய்து வைக்கும் பொறுப்பு உன் கையில்தான் இருக்கிறது. நீ சரி என்றால் எல்லாம் சரியாகவே நடக்கும்" என்றான்.

"என்ன அத்தான் அப்படிப் பேசுறீங்க. உங்களுக்கு என்னால என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன். சரி உட்காருங்க. தேத்தண்ணி ஊத்திக்கிட்டு வாறேன். குடிச்சிட்டு அப்புறமா பேச்சை ஆரம்பிச்சா நல்லது" என்றவாறே உள்ளே சென்று விட்டாள் சிவகாமி.

உடைகளை மாற்றிக் கொண்டு வந்து அமர்ந்த ராமுவுக்கு தேநீரைக் கொண்டு "வந்து இந்தாங்க அத்தான்" என நீட்டினாள் சிவகாமி. தேநீர்க் கோப்பையை வாங்கிய ராமு அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அன்று பார்த்த அதேமுகம். திருமணம் ஆனவள் என்று சொல்ல முடியாத அளவிற்கு கட்டான உடல் கொண்ட குமாரியாக காட்சி அளித்தாள் சிவகாமி என ராமுவின் உள்ளம் சிவகாமியின் எழிலில் பெருமை கொண்டது.

"என்ன அத்தான் ஒரு மாதிரியாகப் பார்க்கிறீங்க. என் முகத்தில் அப்படி என்னத்த புதுமையாகக் கண்டுட்டிங்க" என்று விலகி உள்ளே சென்றாள் சிவகாமி.

ராமுவின் உள்ளம் கடந்த கால நினைவுகளில் மூழ்கியது.

'சிவகாமியும் நானும் காதலித்தது என்னவோ உண்மைதான். ஆனா விதி நம்மில பிரிச்சிடுச்சி. அவவேறொத்தனக் கை பிடித்துச் சென்று விட்டாள். அந்த வேதனயை மறக்க நான் பல காலமாப் போராடினேன். ஆனா போன வேகத்தோட சிவகாமி திரும்பி வந்துட்டா விதவைக் கோலத்தோட. அதற்குப்பிறகு நடந்ததை மறந்து நான்தான் ஆதரவு காட்டினேன். அவன் மகள் அருண் இன்று பெரிய ஆளாக மாறி விட்டான். இன்னும் இரண்டு வருடத்தில் படிப்பை முடித்துக் கொள்ளப் போகி றான். அதற்குப் பின் அவனையும் எங்காவது ஒரு இடத்தில் தொழி லில் சேர்த்து விட வேண்டியது என் கடமை. எல்லாவற்றிற்கும் மேலாக இத்தனை வருட காலமாக நானும் சிவகாமியும் ஒன்றாக இருந்தும், பழைய நினைவுகளை நானோ, சிவகாமியோ புதுப்பித்துப் பார்த்ததே இல்லை. பாவம் சிவகாமி இப்போது அவதான் எங்க வீட்டு முழுப்

பொறுப்பையும் ஏற்றுச் சுமக்கிறாள். இவளை என் இஸ்டப்படி எனக்குத் திருமணம் செய்து கொடுத்திருந்தால் இப்படித்தான் நாங்கள் ஒன்றாக வாழ்ந்திருப்போமா. எல்லாம் அவன் செயல் என்று பெரியவர் கள் சொல்வார்கள். அந்த பிராப்தம் தானோ என்னவோ ஒரு வழியில் இறைவன் நம் இருவரையும் இணைத்தது, என்ன இருந்தாலும் இப்போ அவளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது என் கடமையல்லவா.' இப்படியே ராமு சிந்தித்துக் கொண்டிருந்த போது உள்ளே சென்ற சிவகாமி கையில் துடைப்பத்தோடு வெளியே வந்தவள், ராமு அமர்ந் திருக்கும் தோரணையைப் பார்த்து அசந்துவிட்டாள். "அத்தான் என்ன நடந்தது? ஏன் ஒரு மாதிரியா இருக்கிறீர்கள்? மனதில் எதும் இருந்தால் மறைக்காமல் என்னிடம் சொல்லுங்கள். போன இடத்தில் ஏதும் பிரச்சினையா" என்று கேட்டுக் கொண்டே அவன் அருகில் வந்து நின்றாள்.

திடுக்கிட்டுத் திரும்பியவன், "ச்செச்சே அப்படி எல்லாம் ஒன்னு மில்லே. சும்மா கடந்த காலத்தப் பத்திக் கொஞ்சம் நினைச்சுப் பார்த் தேன். வேறொன்றும் இல்ல. நீ வேலையைப் பாரு. நான் ஆற்றுக்குப் போய் குளிச்சிட்டு வாறன்" என்று புறப்பட்டுப் போய் விட்டான்.

அவன் போன பின்பு வீட்டைப் பெருக்கிக் கொண்டே 'என்ன அத்தான் பழைய நினைவு அப்படி இப்படின்னு சொல்லுது. ஒரு வேளை, நம்ம காதலப்பத்தி நினைச்சிருப்பாரோ. என்னடா நாம இவள எவ்வளவு நம்பினோம். இவ நம்மல ஏமாத்திட்டாளே அப்படின்னு நினைச்சிக்கிட்டிருக்காரோ என்னவோ, சேச்சே அப்படியெல்லாம் இருக்காது. அத்தான் எப்பவோ அதையெல்லாம் மறந்திட்டதா சொன்னாரில்ல. இப்ப நானொரு குடும்பமா ஆயிட்ட. ஆனா அவருக்கு நான் ஒரு குறையும் வைக்கலையே' என்று அவள் மனம் நினைத்துக் கொண்டாலும், 'ஏன் இல்ல, நீதான் உன்னையே நம்பியிருந்தவனை ஒதுக்கிவிட்டு வேறொருத்தனக் கட்டினவதானே" என அவள் உள் மனம் எதையோ குத்திக் காட்டியது.

"அப்ப என்னாலதானா அத்தானின் வாழ்க்கை வீணாயிட்டு. அவள் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் ஆரம்பித்தன. இப்படி இன்று நேற்றா அவள் கண்ணீர் விட்டிருக்காள். எத்தனையோ நேரங்களில் அவள் இப்படி பழதையே நினைத்து வேதனைப் பட்டதுண்டு. இப்படியே வேதனையுடன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள் சிவகாமி.

சிவகாமி பூஜை அறைக்குள் சென்று விளக்கை ஏற்றினாள். "எங்கே அருணைக் காணோம்" என்றவாறே வெளியில் வந்தபோது, "இதோ வந்திட்டேன்" என்று அருண் புன்னகை ததும்ப உள்ளே நுழைந்தான்.

அருண் சிவகாமியை அப்படிய உரித்து வைத்திருந்தான். அவன் வளர வளர தாயின் குணமும் சேர்ந்து வளர்ந்தது. சிவகாமி .அவன் மீது அளவில்லா பாசம் வைத்திருந்தாள்.

உள்ளே சென்ற அருண் புத்தக பையை வைத்துக் கொண்டு கைகால் கழுவி விட்டு பூஜை அறைக்குள் நுழைந்தான். அப்போது சுவாமிக்கு சூடத்தைக் காட்டிவிட்டு கண்மூடி தியானம் செய்து கொண்டிருந்தாள் சிவகாமி.

கண்ணைத் திறந்து பார்த்தபோது அருண் அருகில் கண்மூடி நிற்பதைக் கண்ட சிவகாமி அவன் நெற்றியில் விபூதியைப் பூசிவிட்டு அப்டியே அவனை அணைத்துக் கொண்டாள்.

ராமு பூஜை அறைக்குள் நுழைவதைக் கண்ட அருண் அருகில் சென்று "என்னப்பா இன்னைக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறீங்க. போன இடத்தில சித்தி உங்கள ரொம்ப நல்லா கவனிச்சாங்களோ?" என்று கிண்டலாகக் கேட்டான்.

"செச்சே அப்படி ஒன்றும் விசேஷமாக கவனிக்கல்ல. ரெண்டு நாளா நான் உன்ன பார்க்க முடியவில்லை. அதுதான் எனக்கு ரொம்ப கவலையா இருந்திச்சி" என்றான் ராமு.

இரவு சாப்பாட்டிற்குப் பின்பு படுக்கையில் படுத்த ராமுவுக்கு தூக்கமே வரவில்லை. படுக்கை முள்ளாகக் குத்தியது. இப்போது தான் ராமு கண்ணயர்ந்திருக்க வேண்டும்.

காலையில் எழும்பும் போது கண்ணில் ஒரே எரிச்சல், கையால் கண்ணைக் கசக்கிக் கொண்டு படுக்கையிலிருந்து எழும்பி உட்கார்ந்தான்.

"என்னப்பா இரவு தூங்கலையா ஏன் கண்ணல்லாம் சிவந் திருக்கு?" என்றான் அருண்.

"என்னமோ தெரியலப்பா கண் ஒரே எரிச்சலா இருக்கு" என்றவன் "ரொம்ப நேரமாயிட்டுதோ" என்று கேட்டுக் கொண்டே காலைக் கடன்களை முடித்துக் கொண்டு புறப்படத் தயாரானான்.

அன்று காலை உணவை சிவகாமி கொண்டு வந்திருந்தாள்.

இரண்டு பேரும் பேசிக் கொண்டே சாப்பிட்டு முடித்தார்கள். அருண் பாடசாலைக்குப் போவதற்குத் தயாரானான். அங்கே வந்த சிவகாமி மாலையில் வரும்போது வீட்டுக்குத் தேவையான சாமான்களை வாங்கி வரும்படி ராமுவிடம் சொன்னாள்.

ஆமாம், இப்போது ராமுவின் குடும்பப் பொறுப்பையே சிவகாமிதான் ஏற்றுச் செய்கிறாள். பெருமாயியம்மாவுக்கும் வயசாகிக் கொண்டு போவதால் அவள்தான் இந்தப் பொறுப்புகளை ஏற்றுச் செய்கிறாள்.

சிவகாமி கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்டு வெளி யேறிய ராமு சிவகாமியைத் திரும்பி பார்த்தான். புன்னகை யொன்றை உதிர்த்தான். அவள் தலை கவிழ்ந்து நின்றாள்.

அவள் தலை நிமிர்ந்து பார்க்கும் போது ராமு கண்ணுக்கு எட்டிய தூரம் கடந்து சென்று கொண்டிருப்பது மெலிதாகத் தெரிந்தது. உள்ளே சென்ற சிவகாமி ஊற்றி வைத்திருந்த தேநீரை ஒரு முடக்கு குடித்துவிட்டு கோப்பையை கீழே வைத்து தன்னை மறந்த நிலையில் அப்படியே கடந்தகால சிந்தனையில் மூழ்கிவிட்டாள். எதிர்வீட்டுப் பார்வதி வந்து கதவைத் தட்டி, "அக்கா" என்று கூப்பிட்டபோதுதான் திடுக்கிட்டு, "இதோ வர்றேன்" என்று அவசர அவசரமாக தலையை சீவி மறந்த வாக்கில் நெற்றியில் குங்குமப் பொட்டையும் வைத்துவள், வெளியே எட்டிப் பார்த்தாள். அவளை அப்படியே வைத்த கண் வாங்காமல் பார்த்த பார்வதி, தன்னை சுதாகரித்துக் கொண்டு "என்ன சிவகாமி அக்கா என்னைக்குமில்லாம இன்றைக்கு என்ன திடீரென்று நெற்றியில் குங்குமப் பொட்டு!" என்று ஆச்சரியத்தோடு கேட்டபோது தான் சிவகாமி தன் தவறை உணர்ந்தாள்.

உள்ளே திரும்பி ஓடியவள் கண்ணாடியைப் பார்த்து அதிர்ந்தே விட்டாள். 'ச்சே இன்னைக்கு எனக்கு என்ன நடந்தது. ஐயோ' என்று சேலைத் தலைப்பால் குங்குமத்தை அழித்துத் துடைத்து விட்டாள். பின்னாலே வந்த பார்வதி, "பொட்டை அழிச்சிட்டீங்களா அக்கா, நீங்க பொட்டோடு இருக்கிறப்போ எவ்வளவு அழகா இருக்கீங்க தெரியுமா?" என்று சொன்னவளின் வாயைப்பொத்தி வார்த்தை வெளிவராமல் தடுத்தாள்.

"அதுக்குதான் நான் கொடுத்து வைக்காதபாவியா போயிட்டேனே பார்வதி. இன்னைக்கு ஏனோ என்னை மறந்து இக்காரியத்தை செய் திட்டேன். கடவுளே என்ன மன்னிச்சிடுப்பா. இந்தப் பாவிக்கு நல்ல புத்தியக் கொடுப்பா" என்று கடவுளை வேண்டிக் கொண்டு கதறி அழுதாள்.

இந்த சத்தத்தைக் கேட்டு உள்ளே வந்த பெருமாயியம்மா, "என்ன புள்ள நடந்திச்சு. ஏன் அழுவுறே?" என்று கேட்டு அருகில் வந்தாள். அத்தையை திரும்பிப் பார்த்து வெட்கப்பட்டு குனிந்த நிலையோடு நின்றாள் சிவகாமி.

"சரி நேரமாகிவிட்டது வாக்கா போகலாம்" என்று நிலைமையைச் சமாளித்துக் கூட்டிக்கொண்டு புறப்பட்டாள் பார்வதி. தைரியமாக வெளியில் வந்த சிவகாமிக்கு மனதில் ஏதோ உறுத்திக் கொண்டே இருந்தது. வீட்டைவிட்டு சிறிது தூரம் சென்று கொண்டிருக்கும்போதே பெரிய சாமி வந்து கடிதத்தோடு எதிரே வந்தார். "சிவகாமி அக்கா ராமு சாருக்கு தந்தி" என்று கொடுத்துவிட்டு வீட்டை நோக்கி ஓடினான்.

தந்தியை தோட்ட ஆபீசில் தமிழில் எழுதிக் கொடுத்திருந்தார்கள். அதைப் பிரித்து வாசித்த சிவகாமி, அப்படியே அசந்து விட்டாள். கண்களில் கண்ணீர் முட்ட திரும்பவும் வீடு நோக்கி ஓடினாள்.

வேலைக்குப் போன மருமகள் திரும்பி அழுது கொண்டு வருவதைக் கண்டு என்னமோ, ஏதோவென்று பதறிப் போய் வீட்டு வாசலில் கையைப் பிசைந்த வண்ணம் நின்றாள் பெருமாயியம்மா.

# 32

மனித வாழ்க்கையில் இன்பம் வரும் போது அவனைக் கேட்டுக் கொண்டு வருவதில்லை. அதேபோலதான் துன்பம் வரும்போது சொல்லிக் கொண்டும் வருவதில்லை. இது இயற்கையின் நியதியாகும்.

மகிழ்ச்சியோடு வாழ்ந்து வரும் ஒரு குடும்பத்திற்குத் துன்பம் வரும்போது அந்தக் குடும்பமே துயரத்தில் ஆழ்ந்து யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்ற நிலையில் துவண்டு விடுகின்றனர். இத்தகையதொரு சூழ்நிலையில் உண்மையான நண்பர்கள் மாத்திரமே கைகொடுக்க முன்வருகிறார்கள். அதுவே துன்பத்தில் வீழ்ந்தவனுக்கு ஆறுதலாக இதமூட்டும் அரவணைப்பாகும். அதை ஏற்றுக் கொண்டு அந்தக் காரியத்தில் அவன் கவனத்தை செலுத்து கிறான். இது மனித வாழ்க்கையின் மாண்பாகும்.

வீட்டைவிட்டுப் புறப்பட்ட ராமு நேராக தொழிற்சங்கக் காரியா லயம் சென்றான். அங்கே பெருந்தொகையான தொழிலாளர்கள் நிறைந்திருப்பதைக் கண்டு பதற்றத்தோடு உள்ளே நுழைந்தான். "குட்மோர்னிங் சார்" என்று வரவேற்ற பிரதிநிதியைத் தொடர்ந்து கூடயிருந்த தொழிலாளர்களும் "வணக்கம் சார்" என்று கூறி வழிவிட்டு நின்றனர்.

தனது ஆசனத்தில் அமர்ந்த ராமுவுக்கு முழு விபரத்தையும் பிரதிநிதி எடுத்துக் கூறினார். அதன் பின்பு தோட்டக் கமிட்டித் தலைவரையும் விசாரித்துக் கொண்டு உடனடியாக தோட்டத்திற்கு போவது என்று முடிவு செய்தார்கள்.

முதல் நாள் இரவு தோட்டத்திற்குள் இரண்டு தொழிற்சங்கங் களுக்கிடையில் நடந்த அடிதடி தகராறு இறுதியில் ஒருவரின் மரணத்தோடு அடங்கிப் போயிருந்தது. இறந்தவர் ராமுவின் சங்க அங்கத்தவர் என்பதால் அதை நேரடியாகச் சென்றுப் பார்க்க புறப்பட்டனர்.

காலையில் பொலிசில் புகார் செய்ததை அடுத்து போலீஸ் கோஷ்டி ஒன்று தோட்டத்திற்குச் சென்று கொண்டிருந்தது. பிரதிநிதி சாமு, தோட்டத்தலைவர் ஆகியோர் வாடகைக் கார் மூலமாக தோட்டத்திற்குப் புறப்பட்டனர்.

பொலிசார் தோட்டத்தில் விசாரணை மேற்கொண்டிருந்த போது சாமுவும் அங்கே சென்று விட்டான். நேரடியாகச் சென்று அங்கு விசாரணை செய்த எஸ்.ஐ.க்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டு தானும் அதில் கலந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் பொலிசார் கொடுத்த தகவலின் பேரில் மாவட்ட நீதிபதியும் காரில் வந்து இறங்கினார்.

விசாரணை முடிய பகல் 12-00 மணியாகி விட்டது. உடனடியாக இறந்த உடலை மருத்துவ பரிசோதனைக்காக அருகிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர். அன்று தொழிலாளர்கள் அனைவரும் சங்கப் பேதமின்றி வேலைக்குச் செல்லாது குழுமியிருந் தார்கள். அவர்கள் மத்தியில் அமைதியை நிலை நாட்டுமாறு ராமு கேட்டுக் கொண்டான். இறந்தவரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் சொன்னான் ராமு. பிரேதத்தை வீட்டுக்குக் கொண்டுவரும் பொறுப்பை ராமுவும் பிரதிநிதியும் ஏற்றுக் கொண்டனர்.

தோட்டமே மயான அமைதியாக இருந்தது. ஒருபக்கம் குடும்பத் தலைவனை இழந்த நிலையில் இறந்தவரின் குடும்பத்தார் சோகமே உருவாகக் காட்சி அளித்தனர். மறுபக்கம் கொலைக் குற்றவாளி என்ற சந்தேகத்தின்பேரில் இரண்டு பேரை பொலிசார் கைது செய்து போவது பற்றிய துன்பம்.

இந்தச் சண்டையை மேலாந்த ரீதியில் ஆராய்வோமேயானால் ஒரு சதத்திற்கும் பிரயோஜனமில்லாத சண்டை, எல்லாம் குடிவெறி செய்த சோதனை. இப்போது இரண்டு குடும்பங்களுக்குள்ளும் ஏற்பட்டுள்ள இழப்பால் அவர்கள் துன்பத்தையே அனுபவிக்கின்றனர்.

மாலை ஏழு மணிக்குத் தான் பிரேதத்தைப் பொறுப்பெடுக்க முடிந்தது. அதை வந்திருந்த தோட்டத் தொழிலாளர்களிடம் ஒப்படைத்து விட்டு நேராக காரியாலயம் வந்து தத்தம் இருக்கைகளில் சோர்வோடு அமர்ந்து கொண்டார்கள்.

பக்கத்து தேநீர்க் கடையில் தேநீருக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு வந்த பிரதிநிதியிடம் "நம்ம ஆளுங்க. என்னைக்குத் தான் திருந்தப் போகிறார்களோ தெரியல்ல சார். இதோடு முடிக்க மாட்டார்கள், இன்னும் கதையை தொடரத்தான் செய்வார்கள். நாம்தான் கவனமாக இதை அணுகி தோட்டத்தில் அமைதியை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்" என்றான் ராமு.

இரவு ஏழு மணிக்கு ஆபீசை விட்டுப் புறப்பட்ட ராமுவை பஸ் நிலையம் வந்து கூடவே பஸ்ஸில் ஏற்றிவிட்டுப் புறப்பட்டார் பிரதிநிதி.

அவரின் வீடு நகரில் இருந்ததால் அவருக்குப் பிரச்னை இல்லை. பாவம் நீண்ட நாட்களாக சங்கத்திற்கு உழைப்பவர். முன்னேற்றம் என்பதே இல்லாது ஏதோ பிரதிநிதி என்பதோடு காலத்தைக் கடத்தி வருகிறார். நேர்மையான மனிதர்.

ராமு வீட்டையடையும் போது என்றுமில்லாதவாறு வீடு இருளடைந்து கிடந்தது. அவனின் மனதை என்னவோ செய்தது.

"அருண்" என்று குரல் கொடுத்தவாறே கதவைத் தட்டினான் ராமு. கதவைத் திறந்த அருண் முகத்தில் சோகமே உருவாகக் காட்சியளித் தான். உள்ளே சென்ற ராமு "என்ன அருண்? இன்றைக்கு எல்லோரும் ஒரு மாதிரியாக இருக்கிறார்கள். வீடும் இருளா இருக்கு" என்று கேட்டுக் கொண்டே அமர்ந்தான்.

கண்ணை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டே "அருண் அந்த தந்தியை அப்பாவிடம் எடுத்துக் கொடு" என்றாள் சிவகாமி.

தந்தி என்றதும் ராமு கொஞ்சம் பயந்தே விட்டான். தந்தியைப் பிரித்து வாசித்தான். அதிலிருந்த செய்தி அவனையும் அதிர்ச்சியடையச் செய்தது.

'நேற்றைக்கு முன்தினம் தானே நான் அவளோடு பேசிவிட்டு வந்தேன். அப்போ நல்லாத்தானே இருந்தாள். திடீரென்று என்ன வருத்தம்' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டவன், "தந்தி எப்போது வந்தது?" என்று கேட்டான்.

"காலை ஏழு மணிக்கெல்லாம் தந்தி கிடைத்து விட்டது. உடனே கோவிந்தனை காரியாலயத்திற்கு அனுப்பினேன். காரியாலயம் பூட்டி யிருந்தது என்று திரும்பி வந்துவிட்டான்" என்றாள் சிவகாமி.

"ம்... இந்த மாதிரி நேரத்தில்தான் தொழிற்சங்கவாதிகளுக்கு குடும்பமே தேவையில்லை என்ற நினைப்பு ஏற்படுகிறது" என்று வருத்தத்தோடு சொன்னவன், "அருணைக் கூப்பிட்டு, காலையில் நான் போய் வசந்தி சித்தியைப் பார்த்துவிட்டு வருகிறேன். நான் கொடுக்கும் கடிதத்தை பாடசாலைக்குப் போகும்போது ஆபீசில் கொடுத்துவிட்டுப் போ" என்றான்.

"எழுதி வைங்கப்பா" என்று உள்ளே போனவன் தேநீரோடு திரும்பி வந்து. "இந்தாங்கப்ப தேநீர்" என்று நீட்டினான். அந்த நேரத்தில் வறண்டு போயிருந்த அவனின் தொண்டைக்கு அது தேவைதான் என்பதை உணர்ந்தவன் தேநீரை வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு கோப்பையைக் கொடுத்துவிட்டு கடிதத்தை எழுதினான்.

இரவு சாப்பாட்டிற்குப் பின்பு படுக்கையில் படுத்த ராமு தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான். பக்கத்தில்.படுத்திருந்த அருண், நன்றாக உறங்கிப் போயிருந்தான்.

வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு மாமிக்குப் பக்கத்தில் படுக்கையை விரித்துப் போட்டுவிட்டு, ராமு படுத்திருக்கும் அறைக்கு வந்து சிமினி லாம்பைத் தூண்டி விட்டு "அத்தான்" என்று அழைத்தான்.

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த ராமு எழுந்து என்ன என்று கேட்டபோது, "அத்தான் நானும் வசந்தியைப் பார்க்க வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அவனின் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

"இல்லை நான் போய் பார்த்துவிட்டு வருகிறேன். அப்படி யொன்றும் பெரிதாக இருக்காது. காய்ச்சல், தலைவலியாகத்தான் இருக்கும். கூடுதலூன, வருத்தம் என்றால் அப்புறமா கூட்டிக் கொண்டு போகிறேன். இப்போதைக்கு வேண்டாம்" என்றான்.

"இல்லை அத்தான். இன்றைக்கு காலையிலேயிருந்தே என் மனசு சரியில்லை. அதோட இந்த தந்தியும் கிடைச்சது இன்னும் என் மனசை என்னவோ செய்யுது. ஏதோ பாரதூரமா நடந்திருக்குமோ அப்படின்னு என் மனசு சொல்லுது" என்றவாறே தலையை குனிந்துக் கொண்டாள்.

சிவகாமி சொன்னதைக் கேட்டதும்தான் ராமு சிந்திக்கலானான் - 'ம்... சிவகாமி சொல்றதுலேயும் உண்மை இருக்கு சாதாரணக் காய்ச்சலா இருந்தா தந்தி அடிக்க வேண்டியதில்லை - கடிதம் போட்டிருக்கலாம், அது மாத்திரமல்ல, தந்தியில் மிகவும் அவசரம் உடனடியா வரவும் அப்படின்னு வேற இருக்கு. அப்படின்னா ஏதாவது பாரதூரமா நடந்திருக்குமோ' என்றவாறே சிந்தனையில் இருந்தான் ராமு.

படுக்கையிலிருந்து இவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட பெருமாயியம்மா "ஆமாப்பா ராமு. இன்னைக்கு தந்தி கிடைச்சதும், அதை உனக்கு கொடுக்கப் போய் நீ ஆபிசில இல்லாததும் எனக்கு அவ்வளவு நல்ல சகுனமாப்படல்ல. எதுக்கும் சிவகாமியையும் கூட்டிக் கொண்டு போய் பார்த்துட்டு வா" என்றாள்.

"மனதைப் போட்டு அலட்டிக் கொள்ளாதீங்க" என்ற ராமு "காலையில போய் பார்த்துட்டு வரலாம்" என்றான்.

முகத்தில் மகிழ்ச்சியோடு "சரி அத்தான்" என்று சொல்லிவிட்டு வீட்டினுள்ளே சென்று தனது படுக்கையில் படுத்துக் கொண்டவளுக்கு தூக்கமே வரவில்லை - ஒரு பக்கம் அத்தானோடு போவதற்கு சம்மதம் கிடைத்த மகிழ்ச்சி. மறுபக்கம் வசந்தியைப் பார்க்கப் போகிறோமே என்ற மகிழ்ச்சி அவளின் தூக்கத்தை தடுத்தது.

விடிகாலை தோட்டத்து தேயிலை தொழிற்சாலை மணி நான்கு முறை ஒலித்தது. நேரம் நான்கு மணி என்பதை உணர்ந்து கொண்ட சிவகாமி விருட்டென்று எழுந்து பாயை சுருட்டி மூலையில் வைத்து விட்டு கைகால்களைக் கழுவிக் கொண்டு அடுப்பை மூட்டி தண்ணீர் வைத்தாள்.

தேங்காயை உடைத்து திருமனையில் போட்டு பர்....பர் என்று திருவினாள். கோதுமை மாவை சல்லடையில் போட்டு சலித்து, திருவிய தேங்காய் பூவையும் கொட்டி உப்புவிட்டு ரொட்டிக்குப் பிசைந்தாள்.

வழமையாக தோட்டங்களில் காலை சாப்பாடு ரொட்டியாகத்தான் இருக்கும். தொழிலாளர்களுக்கு பசி தாங்கும் உணவு இந்த கோதுமை ரொட்டிதான். இது இன்று நேற்றல்ல உலகம் தோன்றிய நாள் முதலாக தோட்டத் தொழிலாளர்களின் உணவாகப் பாவிக்கப்பட்டு வருகிறது. தோட்டங்களில் கோதுமை மாவால் தயாரிக்கப்பட்ட ரொட்டி காலை - மாலை உணவாக இருந்து வருகிறது. இந்த கோதுமை ரொட்டி இல்லாவிட்டால் தொழிலாளி என்றோ மடிந்து துவண்டு போயிருப்பான்.

ரொட்டிக்கு மாவைப் பிசைந்து வைத்துவிட்டு தேநீரை ஊற்றிய சிவகாமி, "அருண்" என்று கூப்பிட்டுக் கொண்டே மேசைமேல் தேநீரை வைத்துவிட்டு "அத்தான் நேரமாகிவிட்டது எழுந்திருங்க" என்றாள்.

ராமு தானும் விழித்திருக்கிறேன் என்றபதைக் காட்டிக் கொள்ளும் விதமாக, "ம்..." என்று செருமினான். பக்கத்தில் படுத்திருந்த அருண் போர்வையை எடுத்து நன்றாக போர்த்திக் கொண்டு "அப்பா நேரமாகி விட்டதா" என்றான்.

"ஆமாம் அருண் மணி ஐந்தாகிவிட்டது. எழுந்திரு. நானும் அம்மாவும் சித்தியைப் பார்க்கப் போகிறோம். நீ பாடசாலைக்குப் போகும்போத மறந்திடாமல் கடிதத்தைக் கொடுத்து விட்டு போ" என்று படுக்கையைவிட்டு எழுந்தவன், மேசை மேல் இருந்த தேநீரை எடுத்துக் குடித்தான். காலை குளிருக்கு தேநீர் இதமாக இருந்தது.

காலை ஆறு மணிக்கெல்லாம் பஸ்ஸை எதிர்பார்த்து ராமு, அருண், சிவகாமி மூன்று பேரும் காத்திருந்தனர். பஸ் வந்ததும் ஏறிக் கொண்டவர்கள். பஸ் டவுனை அடைந்ததும் இறங்கினார்கள். அருண் பாடசாலை நோக்கிச்செல்ல இரண்டு பேரிடமும் விடைபெற்றான்.

"அருண் கவனமாப் போயிட்டு வாப்பா. நானும் அத்தானும் மாலையில் வீட்டுக்கு வந்திடுவோம்" என்று சொன்னவள், ராமுவுக்குப் பின் வேகமாக நடந்தாள். குறிப்பிட்ட பஸ்ஸில் ஏறி சுற்றும் முற்றும் பார்த்தார்கள். எல்லா ஆசனத்திலும் பயணிகள் அமர்ந்திருந்தனர். பின் பக்கத்தில் இருவரும் அமரும் சீட்டொன்று இருந்தது. இதில் அமர்ந்த ராமு பக்கத்தில் அமர்ந்து கொள்ளும்படி சிவகாமிக்கு சாடை காட்டினான்.

இவ்வளவு நாளும் தூரத்திலிருந்தே ராமுவோடு பழகி வந்த சிவகாமி, இப்போது அவனின் பக்கத்தில் அமரத் தயங்கினாள்.

"என்ன யோசிக்கிற சிவகாமி என் பக்கத்தில் உட்கார பயமாக இருக்கிறதா" என்றான் ராமு.

"இல்லை அத்தான்" என்றவள், அவசர அவசரமாக அவனின் பக்கத்தில் அமர்ந்தாள். பஸ்ஸும் புறப்பட்டது.

# 33

ஒருவன் காமுகனாக மாறும்போது மனிதத் தன்மையை இழந்து மிருகத்தனமான உணர்வுடன் செயல்படுகிறான். அந் நிலையில் அவன் செய்யும் காரியங்களால் ஏற்படும் அனர்த்தங்களைப் பற்றி அவன் சிந்திக்கத் தவறி விடுகிறான்.

வெறியோடு, ஆத்திரத்தோடு ஒரு மனிதன் ஒரு காரியத்தில் ஈடுபடும்போது இது பழிவாங்கலாகி விடுகிறது. இதனால் ஏற்படும் அவமானம், அவனையும் அழிவிற்கு கொண்டு போய் விடுகிறது.

என்றோ ஒரு நாள் நான் விரும்பியவளை அடைய முடியவில்லை என்ற வைராக்கியம் பல வருடங்களின் பின்னால் காம உருவில் பூதாகாரமாக, வெறித்தனத்தோடு ஒரு பெண்ணின் வாழ்க்கையையே சின்னாப் பின்னப்படுத்தி விட்டது.

காலை பத்து மணிக்கெல்லாம் நகரை அடைந்த ராமு சிவகாமியை வழமையாக தேநீர் அருந்தும் சைவ ஓட்டலுக்கு அழைத்துச் சென்றான்.

ஒரு பெரியவர், வயது ஐம்பது இருக்கும். ராமுவிற்கு நீண்ட காலமாக அறிமுகமானவர், "வணக்கம் சார்" என்றவாறே வரவேற்றார். ராமுவோடு ஒரு பெண் வருவதை கேள்விக்குறியோடு பார்த்தார்.

"ஒரு நோயாளியைப் பார்க்க வந்தோம். இவ என் மாமன் மகள்" என்று அறிமுகப்படுத்தியவாறே, ஆட்கள் இல்லாத மேசையாகப் பார்த்து சிவகாமியையும் அமரச், சொன்னவன் தானும் அமர்ந்து கொண்டான்.

ஓட்டலில் வேலை செய்யும் சர்வர், "என்ன சார் சாப்பாடுறீங்க?" என்று கேட்டபோது ராமு சிவகாமியை ஏறிட்டுப் பார்த்தான். "அத்தான் எனக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் ஏதாவது சாப்பிடுங்க" என்றான் சிவகாமி.

"இல்லை இல்லை. நீயும் ஏதாவது சாப்பிட்டுத்தான் ஆகணும். ஆஸ்பத்திரிக்குப் போய் எத்தனை மணிக்குத் திரும்பிப் போகப்

போகிறோமோ தெரியாது. பிரயாணம் செய்த களைப்புவேறு" என்று சொன்ன ராமு சர்வரிடம் "தம்பி இட்லியும் வடையும் கொண்டு வாப்பா" என்றான்.

சிறிது நேரத்தில் இட்லி, வடை, சட்னி சாம்பார் எல்லாமே மேசைக்கு வந்தது. அருகிலிருந்த கோப்பையில் கையை கழுவி விட்டு, பேக்கில் வைத்திருந்த டவலை எடுத்து கையை துடைத்துக் கொண்டே சாப்பிட அமர்ந்த ராமு, சிவகாமியையும் சாப்பிடுமாறு வற்புறுத்தவே எழுந்து சென்று முகத்தையும் கையையும் கழுவிக் கொண்டு வந்தவள் சாப்பிட ஆரம்பித்தாள்.

சிவகாமிக்கு இதெல்லாம் புதிய அனுபவமாக இருந்தது. ஒரு பக்கம் மனதில் வெட்கமும், மறுபக்கம் சந்தோஷமும் அவளின் முகத்தில் தெரிந்தன. ஒருவாறு தலை குனிந்தவாறே சாப்பிட்டு முடித்தாள் சிவகாமி. அதற்குள் இரண்டு கப்பில் தேநீரும் கொண்டு வந்து வைத்தான் சர்வர்.

பில்லுக்கு பணம் கட்டிவிட்டு அங்கிருந்து புறப்பட்ட இருவரும் நேராக மாநில காரியாலயம் அதவாது - வசந்தி வேலை செய்த இடத்திற்குச் சென்றார்கள். அங்கு ராமுவைக் கண்ட பிரதிநிதி எழுந்து வந்து கை கொடுத்து வரவேற்றார். கூட வந்த பெண்ணை நிமிர்ந்து பார்த்தார் பிரதிநிதி.

"சார் இவ என் மாமன் மகள். வசந்தியப் பார்க்க வேண்டுமென்று என்னோடு வந்தாள். வசந்திக்கு என்ன சார்?" என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டான் ராமு.

"அத பிறகு சொல்றேன். அது சரி உங்களுக்கு எப்படி விசயம் தெரிந்தது" என்று கேட்டார் பிரதிநிதி பரமசிவம்.

"நேற்று தந்தி கிடைச்சுது சேர். வசந்தி மருத்துவமனையில் இருக்காள் உடன் வரவும் அப்படின்னு இருந்திருச்சி. நேற்று அந்திக்குத்தான் எனக்கு விசயம் தெரிஞ்சி. சேர் வசந்திக்கு ஏதாவது பாரதூரமா ஆயிட்டா" என்று பதற்றத்தோடு கேட்டான் ராமு.

"ச்சே இந்த மாதிரி அநியாயம் நடந்திருக்கக்கூடாது ராமு" என்றார் பிரதிநிதி.

"அப்படி என்ன சார் அநியாயம் நடந்துட்டு."

"ராமு கொஞ்சம் பதட்டப் படாம இருங்க" என்றவர், சிவகாமியை பார்த்து,

"அம்மா கொஞ்சம் இங்கே இருங்க. நான் இவரோடு கொஞ்சம் பேசிவிட்டு வர்றேன்" என்றவாறே ராமுவை ஒரு தனியான அறைக்கு அழைத்துச் சென்று, அமர வைத்த பிரதிநிதி மௌனமாக ராமுவின் முகத்தைப் பார்த்தார்.

"என்ன சேர் மௌனமாயிட்டிங்க, விசயத்த சொல்லுங்க சார்" என்று ராமுதான் பேச்சை ஆரம்பித்தரன்.

"ராமு நான் சொல்றது கேட்டு அதிர்ச்சியடையாதீங்க. அதோட அவசரப்பட்டு எந்த முடிவும் எடுத்திடாதீங்க நிதானமாய் யோசிச்சி நடந்துக்குங்க?" என்ற பிரதிநிதியைப் பார்த்து ராமு,

"சார் என்ன சார் விசயத்த சொல்லாம ஏதேதோ சொல்றீங்க. நடந்தது என்னன்னு சொல்லுங்க சார்" என்றான்.

"ராமு அன்னைக்கு நீங்க வசந்தி வீட்டுக்கு வந்துட்டுப் போன பிறகு வசந்தி வேலைக்கு வந்திருக்கா. கூடவே தோட்டத்திலுள்ள ஒரு பெண்ணும் அவளோட வந்திருக்கா. இவர்கள் ஏறிய பஸ்ஸில் ஒருத்தன் ஏறியிருக்கான். பெயர் அனந்தராமனாம். ஏதோ வசந்திக்குரிய தூரத்து உறவினனாம். எப்பவோ வசந்திய பெண் கேட்டு வந்தப்போ அவங்க பெண் கொடுக்க மறுத்திட்டதால அன்றைக்கே அவன் மனசுல வைராக்கியத்துடன் போயிருக்கான். தான் விரும்பிய பெண் தனக்கு கிடைக்கவில்லை என்று ஆத்திரமும், இப்போது வேறொருவனை விரும்புகிறாள் என்ற செய்தியும் அவனை பெரும் ஆத்திரக்காரனா மாற்றியிருக்கு. இவள என்னக்குமே வாழவிடக் கூடாது என்று உறுதி யெடுத்துக் கொண்டவன் தொழில் நிமித்தம் கொழும்புக்குப் போய் விட்டான். இத்தனை நாட்களுக்குப் பிறகு அன்று வசந்தியைக் கண்டதும் மிருகத்தனா மாறியிருக்கான்" என்றவர் மேலும் பேசாமல் மௌனமாக இருந்தார்.

"என்ன சேர் நிறுத்திட்டீங்க. நடந்த உண்மையை சொல்லுங்க சேர்" என்றான் ராமு.

"ராமு இத நான். உங்கக்கிட்ட எப்படி சொல்றதுன்னே தெரியல்லே" என்ற பிரதிநிதியைப் பார்த்து அதிர்ச்சியடைந்த ராமு "சார் நீங்க இப்ப உண்மையைச் சொல்லப் போறீங்களா - இல்லையா?" என்று மேசையில் அடித்து பலமாகக் கத்தி விட்டான்.

"கொஞ்சம் பொறுங்க ராமு சொல்றேன். அன்னைக்கு அவன் பஸ்ஸில் வைத்தே ஏதோ வம்பு பண்ணியிருக்கான். அந்த பிள்ள வேலைக்கு வந்தவுடனேயே என்னிடம் சொல்லிச்சு. நானும் அதை யெல்லாம் பெருசா எடுத்துக்க வேண்டாம். இந்த காலத்து ஆம்பிளகளே இப்படித்தான் நடப்பாங்க அப்படின்னு சாதாரணமா சமாதானப்படுத்தி அனுப்பி வச்சேன். அன்னைக்கு வேலை முடிந்து வழமையான பஸ் இல்லாததாலே ஏழு மணி பஸ்ஸில் போய் இறங்கி வீட்டுக்கு நடந்து போய்க்கிட்டிருந்த போது நான் குறிப்பிட்ட அனந்தராமனும் இன்னும் ரெண்டு பேரும் ஒரு காரில் வந்த ஹெட் லைட்டைப் போட்டு வசந்தியைத் திக்குமுக்காடச் செய்து திரும்ப லைட்டை ஆப் செய்து

இருள் கலந்த வேளையில் வசந்தியின் வாயைப் பொத்தி காரில் தூக்கி போட்டுக் கொண்டு போய்விட்டார்கள். காரை விட்டு அவளை தனியான பாழ் மண்டபம் ஒன்றுக்கு அழைத்துச் சென்று அதற்கு மேல் என்னால் சொல்ல முடியாது சார். மிருகத்தனமாக அந்தப் பிள்ளையை நடத்தியிருக்காங்க பாவிங்க. பாவம் அந்த பெண் பிள்ளை அதனால என்னதான் செய்ய முடியும். எத்தனை நேரம்தான் போராட முடியும். அவங்க நாலு பேரும் குடி வெறியில் நடந்திருக்காங்க. மறுநாள் மயக்கம் போட்டிருந்த வசந்தி விடிகாலை பஸ் நிலையத்திற்கு அருகில் கொண்டு வந்து போட்டுவிட்டுப் போயிருக்காங்க. நகர் சுற்றும், பொலிசார் இதைக் கண்டு பெண் இறக்கவில்லை என்பதை உணர்ந்து உடன் மருத்துவ மனையில் சேர்த்திருக்காங்க. சுய நினைவுக்கு வந்த பிறகு வசந்தி வெறி பிடித்தவள் போல் தலையில் அடித்துக் கொண்டு கதறியிருக்கிறாள். அதற்குப் பிறகு மீண்டும் மயக்கம் போட்டு விழுந்தவளை டாக்டர்கள் தங்களின் முயற்சியால் சுய நினைவுக்குக் கொண்டு வந்தார்கள். கண்விழித்த வசந்தி "ராமு ராமு உங்களுக்கு நான் கொடுத்து வைக்காத பாவி ஆகிவிட்டேனே ராமு" என்று அழுதிருக்கிறாள். அவளை ஆறுதல்படுத்தி விசாரித்த போது முழு விபரத்தையும் சொல்லியிருக்காள். ஆளையும் அடையாளம் காட்டி வீட்டு விலாசம் தொழில் செய்யிற இடத்து விலாசம் ஏன் உங்கள் விலாசத்தையும் கொடுத்திருக்கிறாள். அதற்குப் பிறகுதான் பொலிசார் நடவடிக்கையில் இறங்கியிருக்காங்க" என்று பிரதிநிதி பரமசிவம் கதையைக் கூறி முடித்து ராமுவைப் பார்த்தார். ராமுவின் உடம்பெல்லாம் வேர்த்து ஆடை நனைந்திருந்தது. மேசையில் முகத்தைப் பதித்து குலுங்கி குலுங்கி அழுதான் ராமு. அவன் முதுகைத் தட்டிக் கொடுத்த பரமசிவம், "ராமு இப்போது அழுவதிலோ, ஆத்திரப்படுவதிலோ அர்த்தமில்ல. அடுத்த நடக்க வேண்டியத கவனிப்போம்; எழுந்திருங்க. எழுந்து முகத்த கழுவிவிட்டுப் புறப்படுங்க" என்றார்.

உள்ளே பிரதிநிதியோடு சென்ற அத்தானை இன்னும் காண வில்லையே என்று கவலையோடு அமர்ந்திருந்த சிவகாமியின் நிலைமையை உணர்ந்த ஒரு பெண் அவளை அருகில் அழைத்துப் பேசினாள். அந்தப் பெண்ணிடம் வசந்திக்கு என்ன நடந்தது என்று மெதுவாகக் கேட்பதற்கு முன்பே பிரதிநிதி பரமசிவம் அறையை விட்டு வெளியே வந்து, "கொஞ்சம் இருங்கம்மா ராமு இப்போ வந்திடுவார். நானும் உங்ககூட ஆஸ்பத்திரிக்கு வர்றேன். எல்லோருமா சென்று வசந்தியப் பார்ப்போம்" என்றார்.

ராமு முகத்தைக் கழுவிக் கொண்டாலும் அவனின் உள்ளத்தில் எழுந்த தாக்கத்தை எப்படிக் கழுவ முடியும். அதன் அழுத்தம் முகத்திலும்

பிரதிபலிக்க வெளியே வந்த ராமு சிவகாமியைக் கண்டு தன்னை மீறி அழுது விட்டான்.

சிவகாமியும் என்னமோ ஏதோவென்று இடம் சூழல் அனைத்தையும் மறந்து அவனோடு சேர்ந்து அழுதாள். "அத்தான் வசந்திக்கு என்ன சொல்லுங்க, ஏன் அழுவுறீங்க" என்று கேட்டாள்.

அவசரமாக ராமுவின் அருகில் வந்த பரமசிவம் "சார் நான் சொன்னதை மறந்திட்டிங்களா; இப்போது அழுவதெல்லாம் சரியில்லை. அடுத்து என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்வதுதான் சரி. புறப்படுங்க" என்று இரண்டு பேரையும் அழைத்தான்.

சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே எழுந்தாள் சிவகாமி. வந்தவர்களை மருத்துவமனைக்குக் கூட்டிக் கொண்டு போனார் பரமசிவம். பார்வையாளர்களை அனுமதிக்க இன்னும் பத்து நிமிடம் இருந்தது. தெரிந்த் ஒரு கேட் காவலர் மூலமாக உள்ளே போக அனுமதி பெற்று விட்டார்கள்.

வார்ட்டை நோக்கி எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் ராமுவின் இதயத்தை இடி போல் தாக்கியது. கட்டில் அருகில் சென்று 'வசந்தி' என்று குமுறி அழுத ராமுவை வசந்தி அமைதியாகப் பார்த்தாள்.

கண்களை சுழலவிட்டு கூடவே வந்திருந்த சிவகாமியை ஏறிட்டுப் பார்த்தவள் 'அக்கா' என்ற முனங்களோடு அருகில் அழைத்து அவளின் கையைப் பிடித்துக் கொண்டு "எனக்கொன்றுமில்லை அக்கா" என்று சொன்னவளின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

நீண்ட நேரத்திற்குப் பின்பு வசந்தியை நிமிர்ந்து பார்த்த ராமு வசந்தியின் கையைப் பற்றி "வசந்தி நீ எனக்கு ஒன்றும் சொல்ல வேண்டாம். நான் எல்லாம் கேள்விப்பட்டேன்" என்று ஆறுதல் மொழி பகர்ந்தான்.

"அத்தான் நான் யாருக்கும் ஒரு துன்பமும் செய்ததில்லை. ஆனால் கடவுள் எனக்கு இப்படி ஒரு அவமானத்தைக் கொடுத்திட்டார். நான் எப்படி இனி இந்த உலகத்தில் வாழ்வேன்" என்று தலையை தலையணையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

அவளை அமைதிப்படுத்த ராமு எடுத்த முயற்சிகளை அவள் பொருட்படுத்தவில்லை. தனக்கேற்பட்ட அவமானத்தைத் தாங்கிக் கொள்ள சக்தி இல்லாதவள் போல் கதறினாள்.

அது நோயாளர் பார்க்கும் நேரமாதலால் கூட்டம் பெருகிவிட்டது. வசந்தியின் குடும்பத்தினரும் வந்திருந்தனர். இப்போது எல்லோரும் ஒருவரையொருவர் அமைதியாகப் பார்த்துக் கொண்டனர்.

ஜெகதீஸ்தான் முதலில் பேச்சை ஆரம்பித்தான். "என் தங்கைக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்படும் என்று நாங்கள் கனவிலும் நினைக்க

வில்லை ராமு" என்று ராமுவின் கையைப் பற்றிக் கொண்டு அழுதான். ஆளுமைத் தன்மையுள்ள ராமு ஜெகதீசை ஆறுதல் படுத்திவிட்டு, எல்லோரையும் அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டான்.

"வசந்தி எழுந்திரு. ஏதாவது சாப்பிடு. உடம்பு தெம்பாக இருக்கும். உடம்பு தெம்பாக இருந்தால் தான் அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிக்க முடியும்" என்று ராமு வசந்தியைப் பார்த்துச் சொன்னான்.

அருகிலிருந்த பெண்கள் வசந்தியை வலுக்கட்டாயமாகத் தூக்கி அமர வைத்து முகத்தை துடைத்து விட்டு குடிக்கத் தேநீர் கொண்டு வந்து கொடுத்தனர். இதை வாங்க மறுத்த வசந்தி

"வேண்டாம். எனக்கு ஒன்றுமே வேண்டாம். நான் சாகத்தான் வேண்டும்" என்று மீண்டும் அடம் பிடித்தாள். இதே நிலைதான் கடந்த மூன்று நாட்களாக என்று சொன்னபோது எல்லோருக்கும் பெரும் கவலையாகிவிட்டது. ராமு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் வசந்தி கேட்பதாக இல்லை.

ராமு டாக்டரைச் சந்தித்துப் பேசினான். டாக்டர் வார்ட்டுக்கு வந்து வசந்தியிடம் சொன்னார். "வசந்தி இப்போ உங்களுக்கு ஒன்றும் இல்லை. நல்லா சாப்பிட்டு தைரியமா இருங்க. இன்றைக்கு வேண்டுமானாலும் நீங்க விட்டுக்குப் போகலாம்."

ராமு எல்லோரிடமும் கதைத்து அன்றே வசந்தியை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போவதாக டாக்டரிம் சொன்னார். அதன்படியே அன்று வசந்தியைக் கூட்டிக் கொண்டு போவதற்கான ஏற்பாடுகளைச் செய்து காருடன் வந்தான் ராமு. வீட்டுக்குப் போகும்போது இரண்டு மணியாகி விட்டது.

வசந்தியை வீட்டில் தனியாக சந்தித்த ராமு "வசந்தி நீ கொஞ்சம் அமைதியாக இரு. நாம் ஒரு வாரத்திற்குப் பின்பு இது பற்றிப் பேசலாம். அழுகையும், ஆத்திரமும் பிரச்னையைத் தீர்த்து விடாது" என்று ஆறுதல் கூறியவன் "அப்போ நாங்க போயிட்டு வாரம்" என்று புறப்பட ஆயத்தமானான்.

சிவகாமியும் வசந்தியின் அருகில் வந்து, "வசந்தி நீ பயப் படாதம்மா. உன்னை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம் சீக்கிரமே உனக்கும், அத்தானுக்கும் திருமணம் முடித்து வைக்கிறோம்" என்று சொன்னாள்.

இரண்டு பேரையும் மாறி மாறிப் பார்த்த வசந்தியின் மனதில் எவ்வளவு பெருந்தன்மையான மனிதர்கள் இவர்கள் என்று ஏக்கப் பெரூமுச்சொன்று எழுந்தது. "சரியக்கா போய் வாங்க. சந்திப்போம்" என்று பணிவோடு பார்த்தவளை இரண்டு பேரும் ஆதரவாக முத்தமிட்டு விடை பெற்றனர்.

# 34

பெண்களுக்கு மனதில் துன்பம் வந்துவிட்டால், அது கண்ணீரோடு நின்றுவிடாது. அது துயரம் நிறைந்ததோர் வாழ்க்கைக்கு வழிவகுத்து விடுமே. அத்துயரமே அவர்களுக்கு ஒரு பிணியாக மாறி, அவர்களை உளர்தளர்ந்து நடைபிணமாக்கி விடுகிறது.

பெண்கள் தங்கள் கற்பையும் மானத்தையும் பொக்கிஷமாகப் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். இத்தகைய பாதுகாப்புக்கொரு பங்கமேற்பட்டு விட்டால், அது எத்தகைய நிலைமையை உருவாக்கும். வாழ்வை எப்படிப் பாழ்படுத்தும் என்பது சரித்திர காலந்தொட்டு கண்ட உண்மையாகும்.

வாழ்வில் துன்பத்தையே சந்திக்காமல் சின்னஞ்சிறுசிட்டு போல், குடும்பத்தவரின் ஆதரவில் வளர்ந்துவிட்ட வசந்தி, தன் வாழ்வில் முதலில் தேர்ந்தெடுத்த காதலன் தான் ராமு. அந்த ராமுவை அடைந்து வாழ்வில் இன்பம் காணத் துடித்த அந்த இளம் உள்ளத்தின் கனவை நிலைகுலையச் செய்வது போல் நடந்த நிகழ்ச்சி அவளைப் பெரிதும் பாதிப்படையச் செய்தது.

வீட்டில் தனியாக அமர்ந்திருந்த வசந்தி கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு நடந்த நிகழ்ச்சியிலிருந்து விடுபடாமல் தத்தளித்துக் கொண்டிருந்தாள். 'நான் இனி இந்த உலகில் வாழ்வதில் என்ன பிரயோஜனம்? என்னை ராமு கருணையோடு ஆதரிக்கலாம். நான் இனி எந்த முகத்தோடு மண வாழ்வில் அதுவும் ராமுவின் மனைவியா அடியெடுத்து வைக்க முடியும்? அப்படியே இருந்தாலும் என் மனதிலேற்பட்ட கறையை மறைக்க முடியுமா? ராமு எவ்வளவு நல்லவர், உயர்ந்தவர். அவர் வாழ்வில் நான் ஒரு கேள்விக் குறியாகி விட்டேன். கூடாது. கூடவே கூடாது. அவர் வாழ்வில் நான் குறுக்கிட்டு அவரின் நல்ல உள்ளத்தைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. எத்தனைதான் அவர் இதய சுத்தியோடு என்னை ஏற்றுக் கொண்டாலும், ஊராரின் ஏளனத்திற்கு அவர் முகம் கொடுக்க நேரிடும். இதனால் அவர் நிம்மதியை நான் கெடுத்த நிலை தோன்றினால், அந்த துன்பத்தை நான் எப்படி தாங்கிக் கொள்வது?

அந்த அனந்தராமன் யார்? அவன் என் உறவினன் என்பதற்காக நான் அவனை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? அதற்காக எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? கடவுளே நான் என்ன பாவம் செய்தேன் என்று கண்ணீர் விட்டு அழுதாள்.

ராமுவும் சிவகாமி அக்காவும் வந்தபோது உண்மையிலேயே பொறாமைப்பட்டேன். என்ன அற்புதமான ஜோடி. கணவன் மனைவியாக

வாழ வேண்டியவர்கள். விதி அவர்கள் வாழ்வில் விளையாடி விட்டது. அவளோ இன்று ஒரு விதவை. ராமு ஒரு பிரம்மச்சாரி. இந்த இருவரின் வாழ்க்கை இப்படியே தொடர்ந்திருக்கக் கூடாது என்றோ அவர்கள் நடந்ததை மறந்து ஒன்று கூடியிருக்க வேண்டும். இன்று எனக்கு நடந்த இந்த அவல நிலையை மறந்து என்னை ஏற்கத் தயாரான ராமு, ஏன் அன்று விதவைக் கோலத்தோடு வந்த சிவகாமி அக்காவை மனைவியாக ஏற்றிருக்கக் கூடாது? ராமு இன்று என்மேல் காட்டும் பாசமும் பரிவும் தாபமும் உண்மையானதாக இருக்கலாம். ஆனால் இதையே ஏன் அவர் அன்று அனாதரவாக வந்த சிவகாமி அக்காவுக்குக் காட்டியிருக்கக் கூடாது? இன்று எனக்குத் செய்யக் காத்திருக்கும் தியாகத்தை அவர் அன்று சிவகாமி அக்காவிற்குச் செய்திருந்தால் அதில் நியாயம் இருக்கிறது. ஆனால் அதை அவர் அன்று செய்யப் பயந்தார். ஊர், உலகம் ஏளனம் செய்யுமே என்று அஞ்சினார். ஆனால் இன்று என்னை மாத்திரம் எந்த உறுதியோடு ஏற்கத் தயாராகினார்?

இல்லை அத்தனையும் பொய். நான் என்னை ஏமாற்றிக்கொள்ள மாட்டேன். மற்றவர்களையும் ஏமாற்றமாட்டேன். அதற்குப் பரிகாரம் காணவேண்டும். என் மனதில் ஏற்பட்ட கறை அகல முடியாதது. அது அழிக்கமுடியாத அச்சுப் போல் பதிந்துவிட்டது. அன்று நடந்த அந்தக் காட்சி இன்றும் என்னை ஆட்டிப் படைக்கிறது. அதை நினைக்கும் போது இன்னும் ஏன் உயிரோடிருக்கிறோம் என்ற நினைவே தோன்றுகிறது. ஒரு மனிதனால் இப்படி நடந்து கொள்ள முடியுமா? அவன் மனிதன்தானா? அவனுக்கு இதயமே இல்லையா? எனக்கு ஏன் இப்படியொரு தண்டனையைக் கொடுத்தான்' என்று குமுறிக் குமுறி அழுதாள்.

பக்கத்து அறையில் தூங்கிக் கொண்டிருந்த பர்வதம் எழுந்து வந்து "என்ன வசந்தி, ஏன் இப்படி அழுது புலம்பிக்கிட்டிருக்க. பேசாம தூங்கு. சும்மா மனதைப் போட்டு அலட்டிக் கொண்டு நோயை இழுத்துக் கொள்ளாத" என்று ஆறுதல் சொன்னாள்.

"அண்ணி எனக்கு இனி என்ன நோய் வரப் போகுது. நான் ஏற்கனவே செத்துப் போனவள்தானே. இப்போது நான் ஒரு நடைப் பிணம். எனக்கென்று வாழ்க்கை என்று ஒன்றிருந்தது. அதுதான் சதிநாசகாரனால் சூறையாடப்பட்டு விட்டதே" என்று அழுதாள்.

அவளின் அருகில் வந்தமர்ந்த பர்வதம், "வசந்தி சும்மா மனதைப் போட்டு குழப்பிக் கொள்ளாம அமைதியா இரு. இப்போ உனக்குத் தேவை அமைதிதான். பிறகு இதனைப் பற்றி யோசிப்போம்" என்று ஆறதலாகத் தலையைக் கோதியவாறே வசந்தியை அரவணைத்துக் கொண்டாள்.

வசந்தி அப்படியே சுருண்டு பர்வதத்தின் மடியில் படுத்துக் கொண்டு தேம்பி தேம்பி அழுதாள். "அண்ணி இனி சிந்திப்பதற்கோ, யோசிப்பதற்கோ என்ன இருக்கு. நான் ஏன் இன்னும் உயிரோடிருக்கிறேன் என்று எனக்கே தெரியாது. அன்றே நான் செத்துப் போயிருந்தால் எல்லோருக்குமே நிம்மதி. இப்போது நான் எல்லோருக்கும் துன்பத்தையும், துயரத்தையும் பாரத்தையும் சுமத்தி விட்டேன்."

இவர்களின் சத்தத்தைக் கேட்டு அங்கு வந்த ஜெகதீசன், "என்னம்மா வசந்தி, நடந்தத நினைச்சிப் புலம்பிக்கிட்டிருந்தா எப்படி? இனி நடக்க வேண்டியதப் பற்றித்தான் சிந்திக்கவேண்டும். அது தான் சரியானதாகும். சும்மா அழுது கொண்டிருப்பதால் துன்பம்தான் வரும். பேசாம முகத்தக் கழுவிவிட்டுத் தூங்கம்மா" என்று தங்கை மேல் கொண்டுள்ள பாசத்தால் வெந்து புலம்பினான் ஜெகதீசன்.

ஜெகதீசனும் பர்வதமும் அவளின் முகத்தைக் கழுவச் செய்து கொஞ்சம் உணவையும் ஊட்டிவிட்டுச் சாப்பிடச் சொன்னார்கள். கண்ணீர் கண்களில் கொட்ட வற்புறுத்தல் காரணமாக பேருக்காகக் கொஞ்சம் சாப்பிட்டாள்.

வசந்தியைப் படுக்க வைத்துவிட்டுப் பர்வதமும் பக்கத்திலேயே படுத்துக் கொண்டாள். தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்த வசந்தி எப்படியோ அசந்து தூங்கிவிட்டாள். காலையில் பர்வதம் வந்து எழுப்பும் போதுதான் கண் விழித்துப் பார்த்தாள்.

வசந்தி வீட்டுக்கு வந்தநாள் முதல் எல்லாப் பெண்களும் வந்து துக்கம் விசாரித்துவிட்டுச் சென்றார்கள். இதுவே வசந்திக்கு பெரும் வேதனையாக இருந்தது. எத்தனை பேருக்குத்தான் பதில் சொல்வது? சிலர் வேண்டுமென்றே ஆரம்பம் முதல் இறுதி வரை கேட்டு வைத்தார்கள். இதுவே பெரும் வேதனையாக இருந்தது.

காலையில் நேரத்தோடு பொலிசுக்குச் சென்ற ஜெகதீசன் அனந்தராமனும் அவனது சகாக்களும் கைது செய்யப்பட்டிருந்ததை அறிந்து கொண்டு நேரே தொழிற்சங்கக் காரியாலயத்திற்குச் சென்று நிலைமைகளை விபரித்தான். மாவட்டப் பிரதிநிதியும் "பயப்பட வேண்டாம். இதுபற்றி நாங்கள் கடுமையாக நடவடிக்கை எடுத்து வழக்குத் தாக்கல் செய்வோம்" என்று ஆறுதல் கூறி அவனை அனுப்பி வைத்தார்கள். நிலைமைகளை உடனடியாக ராமுவுக்கு கடிதம் மூலம் எழுதிப் போட்டுவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றான் ஜெகதீசன். வீட்டுக்குச் சென்ற வசந்தியிடம் நடந்ததை வசந்தியிடம் கூறினான். அதைக் கேட்ட வசந்தி "யாரைக் கைது செய்து என்ன பிரயோசனம் அண்ணா. உங்கள் தங்கையின் வாழ்க்கை பாழாய் போனதை யாராலும்

சரிக்கட்ட முடியுமா?" என்று அமைதியாகக் கேட்டு அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

வசந்தி சொல்வதும் உண்மைதான். இழந்ததைத் திரும்பவும் பெற முடியாது. ஆனாலும் அதையே ஒரு முடிவாகக் கருதிவிடக் கூடாது. நடந்த துயரங்களை மறந்து துணிச்சலோடு வாழ்ந்து காட்டுவதுதான் சிறந்தது என நினைத்த ஜெகதீசன், "வசந்தி நீ சொல்வது ஒரு வகையில் சரிதான். இருந்தாலும் அதுவே முடிவாகி விடாது. நாம அதையே சிந்திச்சிக்கிட்டிருந்தா அதுக்கு மார்க்கம் கிடைக் கவா போகுது. இப்போ நாம அதைப்பற்றி ஏன் பேச வேண்டும்" என்று அவ்விடத்தை விட்டு விலகிச் சென்றான்.

வசந்திக்கு ஏற்பட்ட இந்நிலைமைக்குப் பின் குடும்பமே பெரும் கவலையோடிருந்தது. அன்றுதான் ஜெகதீசனும் அவன் மனைவி பர்வதமும் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். வசந்தியும் ஒரு முடிவுக்கு வந்தவுள் போல் சுறுசுறுப்பாக செயல்படத் தொடங்கினாள். ஆற்றுக்குப் போய் குளித்துவிட்டு வந்தவள் தனக்குப் பிடித்தமான சேலையை எடுத்துக் கட்டிக்கொண்டு தலையைச் சீவி, நெற்றியில் பொட்டு வைத்துக்கொண்டு வயிறு நிறையச் சாப்பிட்டாள். அந்தக் கையோடு பேனையும் பேப்பரும் எடுத்துக் கொண்டு அமர்ந்து, "பாசமுள்ள அத்தான்" என்று எழுத ஆரம்பித்தாள்.

பகல் சாப்பாட்டு வேளையின் போது வீட்டுக்கு வந்த ஜெகதீசன் மேசையில் கிடந்த கடிதத்தை எடுத்ததோடு தங்கை வசந்தியைத் தேடினான். அவள் கண்ணுக்குத் தென்படவில்லை. வீட்டுக்கு வெளியே வந்து பக்கத்து விட்டுப் பிள்ளைகளை விசாரித்தான்.

"வசந்தி அக்கா நீங்க வேலைக்குப் போன பிறகு குளிச்சிட்டுப் வந்தாங்க. அப்புறம் கொஞ்சம் நேரத்திற்குப் பிறகு தோட்டப் பக்கமாகப் போனாங்க" என்று கூறினார்கள். நெஞ்சம் பதற ஜெகதீசன் தோட்டப் பக்கம் சென்று கூப்பிட்டுப் பார்த்தான். வசந்தியைக் காணவில்லை. மனதில் ஏதோ சுருக்கென்று பட்டது. திரும்பவும் வீட்டுக்கு ஓடி வந்து முழு வீட்டையும் ஒருமுறை கண்ணோட்டம் விட்டான். திரும்பவும் கையிலிருந்த இரண்டு கடிதத்தையும் மாறி மாறிப் பார்த்தான். அதில் ஒன்று ஜெகதீசனுக்கும், மற்றது ராமுவுக்கும் எழுதப்பட்டிருந்தது. ஜெகதீஸ் என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் பிரித்து வாசித்தவன், "ஐயோ வசந்தி" என்று சத்தமிட்டவாறே தரையில் சாய்ந்து விட்டான். அப்பொழுது கொழுந்து நிறுத்து விட்டு சாப்பாட்டிற்காக வந்த அவன் மனைவி பர்வதம் கணவனின் சத்தம் கேட்டு என்னமோ ஏதோவென்று உள்ளே ஓடினாள். அங்கே தன் கணவன் விழுந்து கிடப்பதைக் கண்டு பதட்டமடைந்தவள் அவன் அருகில் சென்று பார்த்தாள். கையில் கடிதத்துடன் அவன்

மயக்கத்துடன் கீழே கிடந்தான். கணவனின் நிலையை அறிந்துவள் பதட்டத்துடன் 'வசந்தி' என அழைத்துக் கொண்டே அறையறையாகச் சென்று பார்த்தாள். வசந்தி அங்கு வரவில்லை. ஏதோ நடக்காதது ஒன்று நடந்து விட்டது என நினைத்த பர்வதம் சத்தம் போட்டு அழுததில் பக்கத்து வீட்டுப் பெண்களும் கூடிவிட்டார்கள். எவருக்குமே என்ன நடந்தது என்று புரியவில்லை.

அங்கே வந்த தெய்வானைதான் பதட்டமில்லாமல் ஜெகதீசன் முகத்திற்குத் தண்ணீர் அடித்துத் தெளியவைத்துவிட்டு கடிதத்தை வாசித்தாள். பின்பு எல்லோரையும் பார்த்து, "விசயம் தலைக்கு மேல் போய்விட்டது. வாங்க என்னோடு" என்று எல்லோரையும் காய்கறி தோட்டத்திற்கு அழைத்துச் சென்றாள். அங்கே ஒரு மரத்தின் கீழ் வசந்தி சுருண்டு கிடந்தாள். அவளைத் தூக்கிப் பார்த்த போது அவள் உடல் சில்லிட்டுப் போயிருந்தது.

ஜெகதீசன் குடும்பமே தலையில் அடித்துக் கொண்டு தரையில் உருண்டது. செய்தி கேட்டு ஆண்களும் வந்து சேர்ந்து விட்டனர். உடனடியாக செய்தி தோட்டத் துரைக்கு எட்டி விட்டது. துரை பொலிசுக்கு தகவல் கொடுத்துவிட்டு ஸ்தலத்திற்குச் சென்று பார்த்து எல்லோரையும் ஆத்திரப்படாமல் அமைதியாக இருக்கமாறு கேட்டுக் கொண்டார். ஜெகதீசனை ஆறுதல்படுத்தி "இப்படி அழுது கொண்டிருப்பதுல அர்த்தமில்ல. சிறிது நேரத்தில் பொலிஸ் வரும். நீங்கள் தைரியமாக இருந்து அடுத்து செய்ய வேண்டிய காரியங்கள செய்ய வேண்டும். பாவம் அந்தப் பிள்ளைக்கு இந்த மாதிரி நடந்திருக்கக் கூடாது. நீங்களும் கொஞ்சம் கவனமாக இருந்திருக்க வேண்டும்" என்று ஆறுதல் சொன்னார்.

துரை அங்கு இருக்கும் போதே பொலிஸ் வந்துவிட்டது. எல்லாவற்றையும் விளங்கிக் கொண்ட சார்ஜண்ட் "அந்தப் பிள்ளையை கவனமாகப் பார்த்திருக்க வேண்டும். ஆஸ்பத்திரியில் வைத்து நாங்கள் சொன்னோம்தானே" என்று குற்றச்சாட்டை அவர்கள் மேல் சுமத்தி விட்டு வசந்தியின் உடலைப் பொறுப்பெடுத்து ஆஸ்பத்திரிக் குக் கொண்டு செல்ல பொலிஸ் ஏற்பாடு செய்தது.

அடுத்து முறைப்படி எல்லோரையும் விசாரித்து குறிப்பெடுத்துக் கொண்டார்கள். வசந்தி எழுதிய கடிதத்தையும் பொலிசார் எடுத்துக் கொண்டனர். அந்நேரத்தில் வசந்தியால் ராமுவுக்கு எழுதப்பட்ட இன்னு மொரு கடிதத்தையும் கொண்டுவந்து கொடுத்தான் ஜெகதீசன். அதையும் பொலிசார் எடுத்துக் கொண்டனர். பொலிஸ் மூலமாக ராமுவுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அன்று தொழிலாளர்கள் வேலைக்குப் போகாமல் இந்த துக்கத்தில் கலந்து கொண்டனர்.

ஜெகதீசனை அழைத்துச் சென்ற பொலிசார் வாக்குமூலத்தை பதிந்து விட்டு கடிதங்களைக் கொடுத்து அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். வீட்டுக்கு வந்த ஜெகதீசன் துயரத்துடன் கதிரையில் சாய்ந்தவாறே தங்கை தனக்கெழுதிய கடிதத்தை மீண்டும் வாசிக்கலானான்.

என் பிரியமுள்ள

அண்ணா, அண்ணிக்கு எழுதுவது

முதலில் நீங்கள் இருவரும் என்னை மன்னித்து விடுங்கள். நான் இனி இந்த உலகத்தில் உயிரோடு வாழ்வது மற்றவர்களுக்கு துன்பத்தைக் கொடுக்க நேரிடும். என்னையே நம்பி இருந்த ராமுவுக்கு நான் துரோகம் செய்ய வேண்டுமா? இந்தக் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்ல மாட்டீர்கள். காரணம் நீங்கள் என் மேல் கொண்டுள்ள அளவு கடந்த அன்பு பாசம் உங்களை பதில் சொல்லாமல் தடுத்து விடும். ஆகவே என் கேள்விகளுக்கு நானே பதில் தேடிக் கொண்டேன். என்னைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம். என் அன்பு அத்தான் ராமுவிடம் எனது கடிதத்தைக் கொடுத்து என்னுடைய இறுதி ஆசையை நிறைவேற்றி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள். உங்கள் மைத்துனர் ராமு என்றுமே உங்கள் மைத்துனர்தான். அவர் இனிமேலும் நம்ம வீட்டுக்கு வரட்டும். அவரை ஆதரியுங்கள். வாழ்த்துங்கள். வாழ விடுங்கள். அதுவே எனது கடைசி ஆசை. இக்கடிதத்தை நீங்கள் வாசிக்கும் போது என் உயிரற்ற உடல் மாத்திரம் நம்ம காய்கறித் தோட்டத்திலுள்ள நாவல் மரத்தின் கீழ் கிடக்கும். என்னை கோபிக்காதீர்கள். மன்னித்து விடுங்கள். உங்கள் இதயத்தில் வாழும் நான் அத்தானின் அன்பு மகளாக பிறப்பேன். என் குடும்பத்தில் மீண்டும் குதூகலமாக வாழ்வேன். எல்லோருக்கும் என் அன்பு முத்தங்கள்.

இப்படிக்கு

உங்கள் பிரியமுள்ள தங்கை

வசந்தி.

கடிதத்தை வாசித்த ஜெகதீசன் ஒரு ஏக்கப் பெருமூச்சுடன் அப்படியே கதிரையில் சாய்ந்து கொண்டான்.

தோட்டமே சோகமயமாக இருந்தது. இளைஞர்களெல்லாம் ஆஸ்பத்திரியிலிருந்து வசந்தியின் உடலை வீட்டுக்கு கொண்டுவரும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். மாலை எழுமணிக்கெல்லாம் ராமுவும், சிவகாமியும் அருணும் வந்து சேர்ந்தனர். நிலைமையை நேரில் தெரிந்து கொண்டு துன்பம் கொண்டனர். ராமுவால் துன்பத்தை தாங்க முடியர்து அழுதே விட்டான். ஜெகதீஸ் எவ்வளவோ சொல்லியும் அவன்

மனம் ஆறுதல் பெறவில்லை. இரவு சவப்பெட்டியை எதிர்கொண்ட ராமு கோவென அழுது விட்டான். தோட்டமே கண்ணீர் உருக துன்பத்தில் தோய்ந்து நின்றது. அன்று தோட்ட மக்கள் இரவு பூராவும் திரண்டு வந்து வசந்தியின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். இளம் சிட்டு தனக்கு ஏற்பட்ட இழப்பைத் தாங்காது உயிரை விட்டு விட்டது என்று பெரியவர்கள் துன்பத்தை பகிர்ந்து கொண்டார்கள்.

மறுநாள் காலை உடலை அடக்கம் செய்வதற்கான எற்பாடுகள் நடந்தன. அதற்கு வேண்டிய பணிகளை தோட்ட மக்கள் இளைஞர் முதியோர் என்று பாராமல் செய்து கொண்டிருந்தனர். வசந்தியின் குடும்பத்தினர் இன்னமும் துயரத்திலிருந்து விடபடாத நிலையில் இருந்தனர்.

ராமுவுக்கு இது ஓர் தாங்கமுடியாத துயரமாக இருந்தது. தன் வாழ்க்கையில் ஏற்பட்ட இரண்டாவது இழப்பாக வசந்தியின் மரணம் இருந்தது. ராமு, வசந்தியின் மேல் கொண்ட காதல் தெய்வீகமானது. உணர்வுபூர்வமானது. இதய சுத்தியானது. ராமுவைப் பொறுத்தவரை வசந்தி இன்னும் உயிரோடுதான் இருக்கிறாள்.

வசந்தி ராமு அத்தான் வாழ்வில் புதிய ஒளியேற்றி வைப்பாள் என காத்திருந்த சிவகாமி இன்று அதற்கு நேர் மாறாக நடந்துவிட்டதே என ஏமாற்றம் கொண்டு துயரம் அடைந்தாள். ராமுவின் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பதில் கூட சஞ்சலம் கொண்டு குமுறிக் குமுறி அழுதாள். மறுநாள் மாலை வசந்தியின் பூதவுடல் நல்ல முறையில் அடக்கம் செய்யப்பட்டது.

வசந்தியின் குடும்பத்தினர் சோகமயமாக அமர்ந்திருந்தனர். அப்போதுதான் வசந்தி ராமுவுக்கு எழுதிய கடிதம் ஜெகதீசனின் ஞாபகத்துக்கு வந்தது. எடுத்துக் கொடுத்தான். துனபத்தை மறந்து மேலோட்டமாக கடிதத்தை உடைத்துப் பார்த்தான் ராமு. அக் கடிதத்தில் அவனுக்கு அதிர்ச்சியான செய்தி ஒன்று காத்திருந்தது.

நடக்கும் என்பார் நடக்காது, நடக்காததென்பார் நடந்து விடும் என்று ஒரு கவிஞர் பாடி வைத்தார். மனிதன் நினைப்பது போல் எதுவும் நடப்பதில்லை. ஆனால் எது நடக்காது என ஒரு மனிதன் நினைக் கிறானோ அது நடந்து விடும். இதுதான் இயற்கையின் நியதி.

மனிதர்கள் விதியை எப்பொழுதுமே பெரிதாக மதிப்பவர்கள். விதி எப்படியெல்லாம் மனித வாழ்க்கையில் விளையாடுகிறது. சில நேரம் அது இன்பத்தை தரலாம். சிலநேரம் தாள முடியாத துன்பத் தையும் தரலாம். எது எப்படி நடந்தாலும் அதை விதி என்று நினைத்து மனிதன் அமைதியடைகிறான். அந்த விதி எப்படியெல்லாம் மனித வாழ்க்கையில் நாடகத்தை நடத்துகிறது.

சிந்தனையோடு ராமு கடிதத்தை வாசித்தான்.

அன்பும், பாசமும் நிறைந்த் இனிய அத்தானுக்கு,

உங்களின் அன்பு வசந்தி இறுதியாக எழுதிக் கொள்வது, அத்தான் நான் எடுத்த இந்த முடிவு சரியானதா - பிழையானதா என் நீங்கள் உங்கள் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் என்னைப் பொறுத்தவரைக்கும் நான் எடுத்த இந்த முடிவு நியாயமானதாகும். நான் உங்களைச் சந்தித்த நாள் முதலாக உங்களை என் கணவராகத் தான் மனதில் பதிந்து கொண்டேன். உங்களோடு உறவு கொண்டதைப் பெரிதாகக் கருதினேன். உங்களைத் திருமணம் செய்து இனிய வாழ்க்கையைத் தொடர வேண்டுமென இதய நிறைவோடு காத்திருந்தேன். ஆனால் அனந்தர்ராமன் என்ற ஒரு உருவில் ஒரு வில்லன் தோன்றி என்னை சின்னாபின்னப் படுத்தி, என் இனிய கனவுகளை அழித்து என் வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைத்து விட்டான். இந்த அனந்தராமன் யார், எவர் எதற்காக இப்படி செய்தான் என்ற உண்மையினை நீங்கள் இப்போது அறிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன். அத்தான் நான் எடுக்கப் போகும் இந்த முடிவு சரியானதா - பிழையானதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் அதன் உண்மை அர்த்தங்கள் உங்களுக்குப் புரியும்.

நான் உங்களோடு வாழ வேண்டுமென்று கொண்டிருந்த உறுதிப் பாட்டை எனக்கு ஏற்பட்ட இந்த விபத்து தவிடுபொடியாக்கிவிட்டது. இனிமேல் நான் உயிரோடு இருப்பதை விட சாவதே மேல். அதுவே கௌரவமானதாகும். அத்தான் அன்று நீங்கள் ஆஸ்பத்திரியில் வைத்து என்னிடம் சொன்னீர்களே 'வசந்தி கவலைப்படாத, உன்னை நான் வாழ வைப்பேன். நீ மன தைரியத்தோடும், அமைதியோடும் இரு' என்று. அதைப்பற்றி நான் பல இரவுகள் சிந்தித்தேன். ஆமாம் எனக்கு நடந்த இழப்பை மறந்து என்னை ஏற்று எனக்கு வாழ்வளிக்க தயாராக இருந்தீர்கள். இது பாசமா, அனுதாபமா அல்லது கருணையா என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும். ஏன் என் வாழ்க்கையில் நடந்துவிட்ட விதிதான் சிவகாமி அக்காவின் வாழ்விலும் அன்று நடந்து விட்டது. இன்று எனக்கு வாழ்வளிக்கத் தயாரான நீங்கள் அன்று ஏன் சிவகாமி அக்காவைப் பற்றிச் சிந்திக்கவில்லை. இதிலிருந்து தெரிகிறது என் மீது கொண்டது வெறும் அனுதாபமே. இது காலப் போக்கில் மாறலாம். உங்கள் எண்ணத்தை திசைதிருப்பலாம். எனக்கு அது ஒரு பெரும் சுமையாக இருக்கும். நானும் நிம்மதியோடு வாழ முடியாது என்பது என்னுடைய தெளிவான உண்மையாகும்.

அத்தான் நான் சொன்னால் கோபிக்க மாட்டீர்களே, நீங்களும் சிவகாமி அக்காவும் அன்று என்னைப் பார்க்க வந்தபோது, நான் உண்மையிலேயே அதிர்ந்து விட்டேன். எத்தகைய பொருத்தமான

ஜோடி என்று. ஏன் கடவுள் இவர்கள் மத்தியில் விளையாடிவிட்டான் என்று யோசித்தேன். நீங்கள் இரண்டு பேரும் கணவன் மனைவியாக வாழ வேண்டுமென்று மனதில் ஆசீர்வதித்தேன். ஆமாம் அத்தான் அக்கா வாழ்வில் நடந்தது என்னமோ உண்மைதான். ஆனால் பொறுப்புள்ள நீங்கள் அதைக் கொஞ்சம் சிந்தித்திருந்தால் நிச்சயமாக அதை ஒரு சாதாரண நிகழ்ச்சியாகக் கருதலாம். அது மாத்திரமல்ல வாழ்க்கையில் சகல நிலைகளிலும் உங்களோடு பங்கு போட்டுக் கொண்டவள் சிவகாமி அக்கா. அருண் உங்களையே தந்தையாக நினைத்து சுற்றிச் சுற்றி வருகிறான். எதிர்காலத்தில் அவனுக்கு ஓர் ஊன்றுகோல் தேவை. இதையெல்லாம் நான் ஆழமாக சிந்தித்தேன். இறுதியில் நான் எடுத்த முடிவு சரியானது என்று உணர்ந்தேன். ஆம் அத்தான். சிவகாமி அக்காவை நீங்கள் மனநிறைவோடு மறுமணம் செய்து கொண்டு புது வாழ்க்கையைத் தொடர்வதுதான் முறை. இதை நான் வேண்டு கோளாகக் கேட்கிறேன். என் ஆத்ம சாந்திக்காக மாத்திரமல்ல, உங்களைப் பாதுகாக்கவும் என் அன்பு தெய்வமான நீங்கள் மனித வரலாற்றில் உயர்ந்து நிற்கவும் அக்காவை மனநிறைவோடு மறுமணம் செய்து புதியதோர் வாழ்க்கையைத் தொடர்வீர்களென நம்புகிறேன்.

அத்தான் இந்த ஏழையின் கடைசி வேண்டுகோளை நிறைவேற்றி வைக்க வேண்டும். அதுவே எனக்குப் பெருமை. அத்தான் நீங்கள் இந்தக் கடிதத்தை வாசிக்கும் போது நான் இந்த உலகில் உயிரோடு இருக்க மாட்டேன். என்னுடைய உடலைத்தான் பார்க்க நேரிடும். அப்போது கண்ணீர் விடாதீர்கள். உங்கள் கை நிறைய மலர்களை அள்ளி என் உடல் மீது தூவி என்னை மனதார மன்னித்து ஆசீர்வதித்து வழியனுப்பி வைப்பீர்களெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தான் நான் உயிரோடு இருப்பதைப் பற்றி பல நாட்கள் சிந்தித்தேன். இறுதியான முடிவுதான் உயிரோடு இருப்பதால் என்னை நம்பியவர்களுக்கு எந்த பிரயோஜனமும் இல்ல. என்னை கருணை காட்டி அரவணைக்கத் துடிக்கும் என் அத்தானுக்கும் பாதிப்பு என்பதால் என்னை நானே அழித்துக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தேன். காலையில் எழுந்து குளித்துவிட்டு கடவுளை வணங்கி கையோடு உங்கள் போட்டோவையும் எடுத்து முத்தமிட்டேன். என்னை அறியாமலேயே கதறி அழுதேன். அதற்குப் பிறகு இந்தக் கடிதத்தை எழுதினேன். புதிய உடைகளை உடுத்தேன். நேரே காய்கறித் தோட்டத்திற்குச் சென்றேன். அண்ணன் தன் அன்புத் தங்கைக்காக பூச்சிக்கொல்லி மருந்தைத் தயாராக வைத்திருந்தது போல் அந்த பூச்சிக்கொல்லி மருந்தை எடுத்தேன். ராமு அத்தான என்னை மன்னித்து விடுங்கள் என்று மல மலவென்று குடித்தேன். அதன்பின் என்ன நடந்திருக்கும் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் தானே.

அத்தான் நீங்கள் சிவகாமி அக்காவின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டு அவங்கள மனைவியா எற்று அவங்க உள்ளத்திலே தேங்கிக் கிடக்கும் ஏக்கங்களை நிறைவேற்றி உங்கள் அன்பைப் பகிர்ந்து நீங்கள் காதலித்த காதலி என்ற உணர்வுடன் அவர்களுடன் பெருமை யோடு இணைந்து வாழ்ந்து சமுதாய பாதையில் புதிய வாழ்வுக்கு வழி காட்ட வேண்டும். அதுதான் என் இறுதி ஆசை. என்மீது நீங்கள் கொண்டுள்ள அன்பிற்கு செலுத்தும் இதயபூர்வமான காணிக்கையும் அதுவேயாகும்.

இப்படிக்கு
உங்கள் இதயம் கவர்ந்த
உங்கள் இதயத்தில் என்றொன்றும் வாழும்
அன்பு வசந்தி.

கடிதத்தை வாசித்த ராமு ம்... என்ற ஒரு நீண்ட பெருமூச்சுடன் வீட்டுப் படியிறங்கி தோட்டத்திற்குப் போனான்.

'தன் வாழ்க்கை எங்கோ தொடங்கி எங்கோ முடியப்போகிறது. இதுவும் ஒரு விதிதான். இந்த வசந்திக்கு ஏன் இந்தக் கொடுமை. அவள் ஏன் மரணமடைய வேண்டும். நான் ஏன் எங்கோ முடித்துவிட்டு வாழ்க்கையைப் புதுப்பிக்க வேண்டும். எல்லாம் விதிதான். இதை பெரும்பாலானோர் நம்புவதில்லை. ஆனால் ராமு இதை நம்புகிறான். வசந்தி தனக்கென்று எதுவும் சொல்லாமல் போய்விட்டாளே என்ற தாக்கம் இந்தக் கடிதத்தைக் கண்டதும் மனதிற்கு சிறிது ஆறுதலைக் கொடுத்தது. கடிதத்தை எழுதியவள் எல்லாவற்றையும் திட்டமிட்டே எழுதியிருக்கிறாள். இது ராமுவிற்கு நற்பாதையைத் திரும்பிப் பார்க்கத் தூண்டியது. இத்தனை நாள் நான் கவனிக்காத ஒரு புதிரையும் உடைத்திருருக்கிறாள். ஆம் எல்லாவற்றிருக்கும் விடையாக அவளின் கடிதம் அமைந்திருக்கிறது. அது புதிய அத்தியாயத்தையும் தொடங்கி யிருக்கிறது. அது சரியானதா பிழையானதா என்பதை வசந்தியே அலசி ஆராய்ந்து தீர்ப்பும் கூறிவிட்டாள்.' இப்படியே தேயிலை மலைகளுக்கிடையே நீண்டு வளைந்து சென்ற பாதையில் கால்போன மட்டும் நடந்து திரும்பிய ராமுவை எதிர்கொண்ட சிவகாமி,

"அத்தான் எங்க போயிருந்தீர்கள்?" என பதட்டத்தோடு கேட்ட போதே, ராமு நிமிர்ந்து பார்த்தான். அங்கே சிவகாமியும், அருணும் ராமுவின் துயரத்திற்கு தங்களின் கண்ணீரை காணிக்கையாக்கினார்கள்.

"அத்தான் நீங்கள் வைத்து விட்டுப் போன கடிதத்தை நானும் பார்த்தேன்" என்று சிவகாமி சொன்ன போதுதான் ராமு தான் அமர்ந் திருந்த இடத்திலேயே அந்தக் கடிதத்தை வைத்து விட்டுப் போயிருந்தது நினைவுக்கு வந்தது.

"அத்தான் வசந்தியின் வேண்டுகோளுக்காக நீங்கள் உங்கள் இலட்சியத்தை மாற்றி விடாதீர்கள்.. நீங்கள் விருப்பப்படியே உங்கள் கடமையைச் செய்யுங்கள். நான் என்றுமே உங்கள் குடும்பத்திற்காக பணி செய்யக் காத்திருக்கிறேன். என் வாழ்வைப்பற்றி நீங்கள் அக்கறை கொள்ள வேண்டாம். உங்கள் வாழ்க்கைப் பற்றி யோசித்து ஒருநல்ல முடிவுக்கு வாருங்கள். ஆனால் அதற்காக என்னையும் உங்களை அப்பா என அழைத்துக் கொண்டிருக்கும் அருணையும் தனிமைப்படுத்தி விட்டுப் போக மாட்டீர்கள் என நான் நம்புகிறேன் அத்தான்" என்று சொல்லி தன் சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள் சிவகாமி.

"சிவகாமி அப்படியெல்லாம் சொல்லாத. நா என்னைக்குமே உங்கள தனியா விட்டுப் போக மாட்டேன்" என்று சொன்ன ராமு, "அப்பா" என அழைத்த அருணைத் திரும்பிப்பார்த்து, "என்ன அருண்" என்றான், அவனை அரவணைத்துக் கொண்டு அவனின் தலையை வருடியவாறே.

"அப்பா நான் இப்போ சின்னப் பிள்ளையில்லை. எனக்கும் ஓரளவிற்கு விபரம் புரியுது. சித்தியின் உத்தரவுக்காக உங்கள் விருப் பத்திற்கு மாறாக நீங்கள் ஏதும் செய்து விடாதீர்கள். நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கு வாங்க. நான் பிறந்தது முதல் உங்களைத்தான் தந்தையாக எண்ணி மதித்து நடக்கிறேன். அந்தப் பாக்கியம் எனக்கு என்றுமே இருக்க வேண்டும்" என்று சொல்லும் போதே அவனின் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் உருண்டோடியது.

பதற்றமுடன் அருணை அணைத்து அவன் கண்களைத் துடைத்துவிட்டு, "அருண், நீ எப்போதுமே என் மகன்தான். அதை எந்த ஜன்மத்திலும் மாத்த மாட்டேன்" என்ற ராமு, சிவகாமியைப் பாந்த்து, "இப்போ என்ன நடந்துவிட்டது. ஏன் எல்லோரும் துன்பத்தை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள்? எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள்" என்று சொல்லிவிட்டு, ஜெகதீசைக் கண்டு பேசினான்.

"நாங்கள் வீட்டுக்குப் புறப்பட வேண்டும். மற்ற காரியங்கள் நடைபெறம் போது வருகின்றோம்" என்றான் ராமு.

"அப்படி என்ன அவசரம் ராமு. இன்றைக்கு இருந்துட்டு நாளை காலையில் போகலாம்தானே" என்று ஜெகதீசும், அவன் மனைவி பர்வதமும் சொல்லவே, அவர்களுடன் முக்கியமான விசயத்தைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் இருந்த ராமு அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு அன்றைய பயணத்தை ஒத்தி வைத்தான்.

அன்று இரவு சாப்பாட்டுக்குப் பின் ஜெகதீசன் ராமுவை அழைத்து வெளியே உலாவச் சென்றான். "ராமு என்னைவிட நீங்க ரொம்ப புத்திசாலி. நான் உங்களுக்கு யோசனை சொல்ல வேண்டிய அவசியம் இல்ல. இருந்தாலும் எனக்குள்ள கடமைகளில் ஒன்று

என்பதால் சொல்கிறேன். இனியும் நீங்கள் காலத்தை வீணாக்காமல், தங்கை வசந்தியின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கட்டும். சிவகாமி என்னுடைய சகோதரி மாதிரி. அவளும் வசந்தியும் எனக்கு ஒன்றுதான். ஆகவே மனதை போட்டு குழப்பிக் கொள்ளாமல், ஒரு தெளிவான முடிவுக்கு நீங்கள் வந்து சிவகாமி வாழ்வில் தீபத்தை ஏற்றி புதிய வாழ்க்கையைத் தொடங்க வேண்டும். இதனால் ஆக வேண்டிய அனைத்தையும் நான் கவனிக்கிறேன்" என்று கூறிவிட்டு ராமுவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் ஜெகதீஸ்.

"என்னால இப்ப எந்த முடிவும் எடுக்க முடியாது ஜெகதீஸ். கொஞ்சம் அவகாசம் கொடுங்க" என்றான் ராமு.

"அதற்கென்ன ராமு தாராளமா யோசித்து முடிவு செய்யுங்க" என்று கூறிய ஜெகதீஸ் ராமுவை அழைத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

அன்று இரவு அந்த வீட்டின் நான்கு ஜீவன்கள் உறக்கமின்றி பற்பல சிந்தனைகளில் சுழன்று காலையில் சேவல் கூவும் சத்தம் கேட்டு எழுந்து கொண்டனர். ராமு காலைக்கடனை முடித்துக் கொள்ளும் போது சிவகாமியும் அருணும் தயாராக இருந்தனர். எல்லோரிடமும் விடைபெற்ற ராமு ஜெகதீசை அழைத்துப் போய் "கடிதம் போடுகிறேன்" என்று கூறிவிட்டு விடை பெற்றான்.

எல்லோரும் வீட்டுப் படியைத் தாண்டியதும் ஜெகதீஸ் சிவகாமியைப் பார்த்து, "அம்மா இது உன் அண்ணன் வீடு என்பதை மறந்து விடாதே" என்று ஞாபகமூட்டி விடைகொடுத்தான்.

அதை ஆமோதிப்பது போல் சிவகாமி மீண்டும் திரும்பி வந்து, "அண்ணா, அண்ணி உங்களை நான் என்றுமே மறக்கமாட்டேன்" என்று ஜெகதீசனினதும், அவன் மனைவி பர்வதத்தினதும் கைகளைப் பிடித்து முத்தமிட்டு விடை பெற்றாள். பஸ்தரிப்பு வரை அவர்களை அழைத்துச் சென்ற ஜெகதீஸ் அவர்களை வழியனுப்பி வைத்தான்.

பஸ்ஸில் அமைதியாக அமர்ந்து ஜன்னல் வழியே வானத்தைப் பார்த்துக் கொண்டு வந்த ராமுவை "அப்பா என்ன பேசாமல் ஊமையாட்டம் வருகிறீர்கள்" என்று உலுக்கினான். திடுக்கிட்டுத் திரும்பிய ராமு, தன் தவறை உணர்ந்து அருணைக் கட்டிக்கொண்டு சிவகாமியை ஏறிட்டுப் பார்த்தான். அவள் தலை நிமிர்த்தி புன்னகையொன்றை உதிர்த்தாள். பதினெட்டு வருடங்களுக்கு முன் உதிர்த்த அதே புன்னகை, அமைதியாக பதில் புன்னகையை உதிர்த்தான் ராமு. பஸ் நிறுத்தப்பட்டதை அறிவிக்க கண்டக்டர் எல்லோரையும் இறங்குமாறு சத்தம் போட்டான்.

பஸ்ஸைவிட்டு இறங்கியதும் மூவரும் தேநீர் கடைக்குச் சென்று தேநீர் அருந்திவிட்டு, வீட்டுக்குத் தேவையானதை வாங்கிக்

கொண்டு மீண்டும் பஸ் நிலையத்தை அடைந்தார்கள். பஸ் வர இன்னும் சிறிது நேரமிருந்ததால், பத்திரிகை விற்பனை செய்யும் கடைக்குச்சென்று ஒரு பத்திரிகையை வாங்கித் தலைப்பை கண்ணோட்டம் விட்டான். அப்படியே அதிர்ந்து விட்டான்.

நேற்று முன்தினம் பெய்த கடும் மழையின் காரணமாக சிங்க மலை தோட்டத்தில் மலைசரிந்து பதினான்கு லயம் காம்பராகள் தரை மட்டமாக்கப்பட்டன. நான்கு பேர் மரணம். பதினாறு பேர் காயத் துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியைப் பேப்பரில் படித்தவுடன் ராமுவுக்குப் பெரும் கவலை யாகப் போய் விட்டது.

பத்திரிகையை நான்காக மடித்து எடுத்துக் கொண்டு வேகமாக பஸ் நிலையத்தை அடைந்து சிவகாமிக்கு விஷயத்தைச் சொல்லி இரண்டு பேரையும் பஸ்ஸில் ஏற்றி அனுப்பிவிட்டு மிக வேகமாகத் தொழிற்சங்கக் காரியாலயத்தை நோக்கிச் சென்றான். அங்கு பிரதிநிதி யோடு தோட்டத்து முக்கியஸ்தர்கள் வந்து இது பற்றி அறிவித்து விட்டுச் சென்றிருந்தார்கள். அப்போது தோட்டத்திற்குச் சென்று திரும்பிய பிரதிநிதி ராமுவைக் கண்டதும் விவரமாக எடுத்துச் சொன்னார்.

அன்று மாலை ராமுவும், பிரதிநிதியும் திரும்பவும் தோட்டத் திற்குச் சென்றார்கள். அங்கு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கான சகல ஏற்பாடுகளையும் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களின் உதவி யோடு செய்திருந்தது. வீடுகளை இழந்தவர்களுக்கு தோட்டப் பாடசாலையில் தற்காலிகமாக முகாமிடச் செய்தார்கள். மரணமடைந்த நான்கு பேர்களின் சடலங்கள் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்தன.

இறந்தவர்களுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்திவிட்டு, தொழிலாளர்களையும், தோட்டக் கமிட்டித் தலைவர்களையும் கண்டு பேசியதோடு இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வீட்டுக்குப் போய் நாளை வருவதாகக் கூறி விடை பெற்றான் ராமு.

ராமுவை பஸ்ஸில் ஏற்றிய பிரதிநிதி சிந்தனையோடு காரி யாலயம் நோக்கிச் சென்றார்.

"ம்.... நம்ம ஜனங்க என்ன பாவம் செய்தார்களோ. பஞ்சம், வெள்ளம், பயங்கரவாதம் எது என்றாலும் அதில் பாதிக்கப்படுபவர்கள் நம்ம ஜனங்கள்தான். என்னைக்குத்தான் இந்த மக்களுக்கு விடுதலை யும் சுதந்திரமும் கிடைக்குமோ, அன்னைக்குத்தான் விமோசனம். எத்தனையோ தலைவர்கள் இந்த மக்களின் தயவால அரசியலில் புகழோடு வாழ்கிறார்கள். இந்த மக்களின் துயர் தீர்க்க எவரும் உருப்படியா எதையும் செய்ததில்லை. காலம் இப்படியே போகாது.

எங்கேயோ ஓர் இடத்தில் முட்டி மோதி நிற்கத்தான் போகுது. அப்போது உணர்ச்சிப் பிழம்புகள் வெடித்துச் சிதறத்தான் போகின்றன. அப்போ எழும் போராட்டம் உரிமைப் போராட்டமாக மாத்திரமல்ல, விடுதலைப் போராட்டமாகவே உருவெடுக்கும்.

அந்த நாள் இந்த மக்களின் சமூக பொருளாதார அரசியல் விடுதலைக்கு வித்திட்ட நாளாகப் பிறக்கும். அதை நோக்கி இந்த மக்களை வழிநடத்துவதில் ராமு போன்ற இளைஞர்கள் உணர்வோடு செயல்பட்டு வருகின்றனர். எதிர்காலம் இளைஞர்களின் கைகளில் என்பது போல், இவர்களின் வழிநடத்தல்கள் எதிர்காலத்தில் புதிய தலைமைகளையும், புத்துணர்வு மிக்க சமூக மாற்றத்தையும் காணலாம் என்பதற்கு இப்போது அடித்தளம் இடப்படுகின்றது.

ராமு போன்ற தியாகிகள் இந்த சமூகத்தில் தோன்றியிருக்கா விட்டால் என்றோ உண்மையும், நேர்மையும் கடமையுணர்வும் செத்து மடிந்திருக்கும். இப்படியே சிந்தனையில் காரியாலய படிகளில் காலை வைத்தபோது, சில தோழர்கள் இவரை எதிர்பார்த்த வண்ணமிருந்தனர்.

நிமிர்ந்தவர் அவர்களைப் பார்த்துப் புன்னகையொன்றை உதிர்த்து விட்டு, 'வணக்கம்' கூறி அவர்களை உள்ளே அழைத்துச் சென்றவர், தனது இருக்கையில் அமர்ந்து அவர்களை ஏறிட்டுப் பார்த்தார்.

# 36

முதலாளித்துவ அடக்குமுறையும், தனியார் சொத்துடைமையும் ஒரு நாட்டில் பாதுகாக்கப்பட்டால், அந்த நாட்டில் தொழிலாளர் என்ற உழைக்கும் வர்க்கம் அடிமைத்தனமான வாழ்க்கையைத்தான் மேற்கொள்ள வேண்டும்.

மூலதனத்தில் சமமான பங்கு என்ற சமத்துவம் தோன்றும் போது, தொழிலும், உற்பத்தியும், வருமானமும் தழைத்தோங்கும். நாடும் செழிப்புற்று அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தலை நிமிர்ந்து நிற்கும். தொழிலாளர்களும் வளமோடு வாழ்க்கையை நடத்தும் பாங்கைப் பெறுவார்கள்.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாக உழைக்கும் ஓர் சமூகம் சுதந்திரம் பெற்று நாற்பதாண்டுகளுக்கு மேலாகவும் விமோசன மின்றி கூனிக் குருகி அஞ்சி பயந்து நாட் கூலிக்கு உழைக்கும் முறையைக் கொண்டுள்ளது. நாட்டில் வரலாற்றில் பிரிதொரு பிரிவினர் என்ற பாகுபாடு நீங்க வேண்டும். இந்த நிலைமை என்று ஏற்படும் என்ற சிந்தனையோடு வீட்டிற்குச் சென்ற ராமு, கதவைத் தட்டுகிறான்.

கதவைத் திறந்த சிவகாமி ராமுவை நேருக்கு நேர் பார்க்க சக்தியற்றவளாகக் குனிந்த தலையோடு கதவைப் பிடித்துக் கொண்டு நின்றாள். ராமு நேராக தனதறைக்குள் நுழைந்து உடைகளை மாற்றிக் கொண்டு தண்ணீர் பைப்படிக்குச் சென்று கைகால் கழுவிக்கொண்டு மீண்டும் வீட்டிற்குள் நுழையும் போது சிவகாமி தேநீர் கோப்பையோடு எதிர்ப்பட்டாள். தேநீர்க் கோப்பையை மேசை மேல் வைத்தவள், "அத்தான் என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள். போன இடத்தில் ஏதும் பிரச்சினையா" என்று கேட்டாள்.

அவளை நிமிர்ந்து பார்த்த ராமு "அப்படி ஒன்றும் இல்லை. எங்கே அருண்?" என்று கேட்டவன் சிவகாமியைப் பார்த்து "நீங்க ரெண்டு பேரும் நேரத்தோடு வீடு வந்து சேர்ந்தீங்களா? என் பொலப்பே இப்படித்தான். உங்கள வீட்டில் கூட கொண்டு வந்து விட முடியல்ல" என்றான்.

"அதனால என்னப்பா நான் இருக்கேனில்ல. இனியேன் உங்களுக்குக் கவலை. உங்கட நல்லது கெட்டதுல பங்கு போட்டுக் கொள்ளவே ஆண்டவன் அம்மாவையும் என்னையும் படைச்சிருக்கான். நீங்கள் கவலையில்லாமல் இருங்கள். நீங்கள் என்னைக்குமே மகிழ்ச்சியோடு இருக்கணும். எங்கள் நிழல் எங்க மேல படியணும். அப்போதுதான் உங்களுக்குப் பெருமை" என்றான் அருண்.

அருண் பேசியதை நிதானத்தோடு செவிமடுத்த ராமு, "அருண் நான் என்றுமே உன் அன்பை மதிக்கிறேன்" என்று கட்டிக் கொண்டவன், பெருமிதத்தோடு, சிவகாமியை நிமிர்ந்து பார்த்தான். இந்தப் பாச உணர்வில் கட்டுண்ட இருவரையும் கண்டு ஆனந்தக் கண்ணீர் துளிர் விட, சேலைத் தலைப்பால் அதைத் துடைத்துக் கொண்டாள் சிவகாமி.

"அத்தான் தேத்தண்ணியக் குடிங்க. நான் ரெண்டு பேருக்கும் சாப்பாட்ட எடுத்து வைக்கிறேன்" என்று உள்ளே சென்று விட்டாள் சிவகாமி.

"அருண் நீயெல்லாம் நல்லா பேசக் கத்துக்கிட்ட. நீ பேசுவதைக் கேட்கக் கேட்க எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா. உன்னுடைய பேச்சின் அலங்காரத்தை நான் குறிப்பிடல்ல. அதில் பொதிந்திருந்த அர்த்த புஷ்டியான பொறுப்புணர்வுள்ள கருவூலம் என்னை பிரமிக்கச் செய்து விட்டது" என்றான் ராமு.

"என்னப்பா ஏதேதோ புகழுறீங்க. அப்பா உங்களை விடவா நான் பேசுகிறேன். அன்று நீங்கள் கூட்டத்தில் பேசியதை நான் என்றுமே மறக்க மாட்டேன். உங்கள் பேச்சில் மக்கள் மீது நீங்கள் கொண்டுள்ள அபிமானமும் இறுக்கமான பாசமும் வெளிக் கொணர் வதைக் காண முடிந்தது" என்றான் அருண்.

"சரி வாங்க ரெண்டு பேரும் சாப்பிட. பேச ஆரம்பித்தால் ரெண்டு பேரும் உங்களையே மறந்து பேசிக் கொண்டிருப்பீர்கள்" என்று கடிந்து கொண்ட சிவகாமி இரண்டு பேருக்கும் சாப்பாட்டைப் பரிமாறினாள். அவர்கள் சாப்பிட அமர்ந்தபோது, பெருமாயியம்மாவும் ராமுவின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். உணவைப் பரிமாறிய சிவகாமி குடிக்க தண்ணீர் கொண்டு வந்த போது "என்னப்பா ராமு உன் மனசில என்னதான் வச்சிருக்க. ஒன்னும் யோசிக்காத ஆண்டவன் உனக்கு எல்லாம் நல்லபடியாத்தான் விதிச்சிருக்கான். அதனால மனசில எதையும் வச்சிக்காம தைரியமா சிவகாமி கழுத்தில தாலியக் கட்டு. அவ நம்ம குடும்பத்தோட சேர்ந்து விட்டவதானே" என்றவள். "ஏன் இன்னைக்கு இந்தக் குடும்பத்தை அவதானே பொறுப்பெடுத்து நடத்தியிருக்கா. அது மாத்திரமா? எனக்காக எத்தனையோ ஆசைகளை மனதில் கட்டிக் கொண்டவ அவ. என்னதான் இருந்தாலும் அவ உன் மாமா பொண்ணுதானே" என்ற மெதுவாக கதையை ஆரம்பித்தாள் பெருமாயியம்மா.

மௌனமாக கேட்டுக் கொண்டிருந்த ராமு கைய கோப்பையில் கழுவிவிட்டு எழுந்தான். கூடவே எழுந்த அருண் படுக்கைக்கு தயாராகி விட்டான். ராமு தன் அறையில் போய் அமர்ந்து கொண்டான்.

அடுத்த நாள் காலை பலகாரத்திற்குச் செய்ய வேண்டியதை யெல்லாம் செய்துவிட்டு, ஒரு டம்ளரில் சுடு தண்ணீரோடு ராமுவின் அறைக்கு வந்து "அத்தான் மேசை மேல் தண்ணீர் வச்சிருக்கேன்" என்று கூறிவிட்டு திரும்பிய சிவகாமியை, "இந்தா புள்ள இங்க கொஞ்சம் வாயேன்" என்று அழைத்தான் ராமு. இதை எதிர்பார்த்தவள் போல் திரும்பி வந்து மேசையைப் பிடித்துக் கொண்டு நின்றாள் சிவகாமி. "இப்படி கொஞ்சம் உட்காரு" என்று ராமு சொன்னதும் அதிர்ச்சியடைந்த சிவகாமி "வேணாம் அத்தான். நான் இப்படியே நிற்கிறேன். நீங்க விசயத்த சொல்லுங்க" என்றாள்.

"அம்மாவுக்கு யார் இந்த கதையெல்லாம் சொன்னது?" என்று கேட்டான்.

"அத்தான் நாங்க வந்தவுடன் மாமி கேட்டாங்க. நான் நடந்ததை யெல்லாம் சொன்னேன். வேறு ஒன்றும் சொல்லல்ல."

"அப்ப என்ன கல்யாணம் கட்டுறதா முடிவு கட்டிட்டியா" என்று கோபமாக அவளின் முகத்தைப் பார்த்துக் கேட்டான் ராமு.

குனிந்த தலையோடு "அத்தான் இது உங்க சொந்த விஷயம். எங்க ஆசாபாசங்களுக்கு நீங்க கட்டுப்பட வேண்டியதில்ல. நீங்கள் உங்கள் விருப்பப்படியே எதுவும் செய்யுங்க. நான் என்றுமே உங்களுக் குப் பணிசெய்யக் காத்திருக்கேன்" என்றாள் சிவகாமி.

"நீயெல்லாம் நினைக்கிற மாதிரி நான் உன்னை திருமணம் செய்ய மாட்டேன். ஏற்கெனவே என்னை ஏமாற்றி விட்டு இன்னொருவனைத் திருமணம் செய்து கொண்டு போனவதானே நீ" என்றபோது...

"ஐயோ அப்படியெல்லாம் சொல்லாதீங்க அத்தான். நான் விரும்பி மனசார செய்யல்ல. என்னக் கட்டாயப்படுத்தித்தான் அந்தத் திருமணத்த செஞ்சி வச்சாங்க. சகலமும் தெரிந்த நீங்களே இப்படிப் பேசினா எப்படி அத்தான். அந்தத் திருமணத்த செஞ்சதுக்காக நான் எத்தனை நாட்களாகக் கண்ணீர் விட்டிருப்பேன் தெரியுமா?" என நா தழுதழுக்கக் கூறிய சிவகாமி. "அத்தான் இப்ப கூட நீங்க என்னக் கல்யாணம் செய்யுங்க அப்படின்னு நான் கேட்கப் போறதில்ல. உங்களுக்குப் பிடித்தமானவள ஏற்பாடு செய்யுங்கன்னுதான்" சொல்றேன் என்றாள்.

"சிவகாமி நீ இவ்வளவு மோசமானவள் என்பதை நான் இன்னைக்குத்தான் தெரிந்து கொண்டேன். சேச்சே உன்ன இத்தனை நாள் நேசித்து, அன்பு காட்டி பாச உணர்வோடு கட்டிக் காத்துப் பாதுகாத்தது அத்தனையும் வெறும் கானல் நீராப் போயிட்டு" என கட்டிலை ஓங்கிக் குத்தினான் ராமு.

சிவகாமி பயந்தே போய் விட்டாள். "ஐயோ அருண் இங்கே வா" என்று சத்தம் போட்ட சிவகாமி "ஏனத்தான் இந்த மாதிரியெல்லாம் பேசுறீங்க. நான் என்ன துரோகம் செய்தேன்" என்று பதற்றத்துடன் கூறினாள் சிவகாமி.

அரைத் தூக்கத்திலிருந்த அருண் ஓடி வந்து இரண்டு பேரையும் மாறி மாறிப் பார்த்து விட்டு "என்னம்மா என்ன நடந்தது?" என்று சிவகாமியைப் பார்த்துக் கேட்டான்.

"நீயே சொல் அருண். நான் உங்க ரெண்டு பேர் மேலே வைத்திருக்கிற பாசம் பொய்யானதா? உங்கம்மா இப்படிச் செய் வான்னு நான் எதிர்பார்க்கவே இல்ல. என் மேல் அன்பு வைத்திருக் கிறதா சொல்றதெல்லாம் வெறும் வேசம்" என்றான் ராமு.

ஒன்றுமே புரியாத அருண், "என்னம்மா என்ன நடந்தது? சொல்லுங்க" என்று சிவகாமியைப் பார்த்துக் கேட்டான். அவள் நடந்ததெல்லாவற்றையும் விபரமாக எடுத்துச் சொன்னாள். அதைக் கேட்டுக் கொண்டிருந்த அருண் மௌனமாக எழுந்து வேறு திசையை பார்த்துக் கொண்டிருந்த ராமுவின் தோளைப்பற்றி "ஏன் அப்பா அப்படியெல்லாம் பேசினீர்கள்?" என்று கேட்டான்.

"அருண் உண்மையிலேயே உங்கம்மாவுக்கு என்மேல் அன்பு இருந்திருந்தா நான் வசந்தியைக் கல்யாணம் செய்யப் போவதா சொன்ன போதும், இப்போது நான் திருமணம் செய்ய வேண்டுமென்று நீங்கெல்லாம் சொல்லும் போதும், அத்தான் என்னைப் பற்றி நீங்க

ஏன் நினைக்க மாட்டேங்கிறீங்க. என்னை ஏன் நீங்க மனைவியா ஏத்துக்க மாட்டேங்கிறீங்க அப்படின்னு உரிமையோடு வாய் திறந்து ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமில்ல" என்றான் ராமு.

இதைக் கேட்ட சிவகாமி அருண் இரண்டு பேருமே அதிர்ந்து விட்டார்கள். "என்னப்பா சொல்றீங்க" என அருண் மீண்டும் கேட்டான்.

"இங்க பாரு அருண், என்றாவது நான் உன்ன மகன் என்ற நிலையிலிருந்து குறைத்துப் பார்த்திருக்கிறேனா சொல்லு."

"இல்லப்பா. அப்படியெல்லாம் இல்ல" என்றான் அருண்.

"அப்படீன்னா உங்க அம்மா 'அத்தான் நான் இருக்கும்போது ஊரெல்லாம் ஏன் போய் பெண் தேடி அலையறீங்க அப்படின்னு சொல்லியிருக்கலாமில்ல."

"அது வந்துங்க" என்று தடுமாறி ஏதோ சொல்ல வந்த சிவகாமியைத் தடுத்த ராமு "நீ எதையும் சொல்ல வேணாம். பேசாம போய் படுத்துக்க. அருண் உனக்கும்தான். நீயும் போய் படுத்துக்க. இதப்பற்றி இன்னொரு நாள் பேசுவோம்" என்று பெட்சீட்டை எடுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டான்.

சிறிது நேரமாக அசந்து நின்று கொண்டிருந்த அருணும் சிவகாமியும் வேறு வழியில்லாமல் படுக்கைக்குச் சென்று படுத்துக் கொண்டனர்.

மூன்று பேரும் படுத்தார்களே அன்றி நித்திரை அவர்களை ஆட்கொள்ளவில்லை. ராமு பலவாறு சிந்தித்தான். 'நான் சிவகாமியோடு பேசியது முறையா? அவள் என்னப் பற்றி என்ன நினைப்பாள்? அருண் அப்பா இப்படியெல்லாம் பேசி விட்டாரே என்று கவலைப்படுவானோ? எதுவானாலும் என்ன நியாயமான உரிமைஸ்யத்தானே நான் சுட்டிக் காட்டினேன்.' இப்படியாக சிந்தனையில் ராமு மூழ்கியிருந்தான்.

'அத்தான் ஒரு நாளும் இல்லாமல் இப்படி பேசி விட்டாரே. அவர் சொன்ன மாதிரி அவர் மேல நான் காட்டிய அன்பு பொய்யானதா? அல்லது அவர் சொன்னது போல் என்னைத் திருமணம் செய்யுங்க என்று கேட்டிருந்தால் அது நியாயமா இருக்குமா? நான் எப்படி அப்படிக் கேட்கமுடியும்? ஏன் அத்தானுக்கு இதெல்லாம் தெரியாதா? அல்லது தெரிந்தும் என்னைச் சோதனை செய்வது போல் நடந்து கொள்கிறாரா?' அந்தச் சிந்தனையில் சிவகாமி மூழ்கியிருந்தாள்.

'அப்பா சொன்னது சரிதானா? ஒருவேளை அது சரியாக இருந்தாலும் அப்பா ஏன் உரிமையோடு அதைக் கேட்டிருக்கக் கூடாது? அப்படிக் கேட்டிருந்தால் அம்மா அதை ஏற்றுக் கொள்வாளா? ஏன் இன்றைக்கு அப்பா இப்படியெல்லாம் பேசினார்? என்மேல்

அவர் வைத்துள்ள பாசம் உண்மையானதா அல்லது பொய்யானதா?' இப்படியான சிந்தனையில் அருண் திளைத்திருந்தான்.

மறுநாள் காலை மூன்று பேரும் ஒருவரையொருவர் பார்த்து பேசாமல் மௌனமாகத் தங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு புறப்பட்டனர். அருண் "அப்பா போயிட்டு வாரேன்" என்று சொன்ன போது. அவனருகில் வந்த ராமு. அவன் தலையைத் தடவி. "அருண் எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல் போயிட்டு வா" என்று அனுப்பி வைத்தான்.

காலையில் வழமை போல் சிவகாமி ராமு அறைக்கு வந்து "அத்தான் நான் வேலைக்குபோறேன். நீங்க திரும்பி வரும்போது இந்த சாமான்களை வாங்கிட்டு வாங்க" என்று ஒரு பட்டியலையும், பணத்தையும் மேசைமேல் வைத்து விட்டுத் திரும்பினாள். அவளைத் தடுத்து நிறுத்துவது போல், "என்ன என் மீது கோபமா? ஏன் முகமெல்லாம் வீங்கியிருக்கு? இரா முழுக்க நான் சொன்னத மனதில் போட்டுக்கொண்டு அழுதாயா?" என்று கேட்டான் ராமு.

மௌனமாகத் திரும்பிய சிவகாமி, "அப்படியெல்லாம் ஒன்று மில்ல அத்தான்" நான் சந்தோசமாத்தான் இருக்கேன். என்று கஷ்டப் பட்டு ஒரு புன்னகையை உதிர்த்தாள்.

"சிவகாமி நான் உன் மீதும் அருண் மீதும் கொண்டுள்ள உண்மையான அன்பு காரணமாகத்தான் அப்படியெல்லாம் பேசினேன். கவலையை விட்டுட்டு சந்தோசமாப் போயிட்டு வா. மாலையில் சந்திப்போம். அப்போ நான் உனக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லப் போறேன்" என்றான் ராமு.

சிவகாமி எதையுமே பேசவில்லை. ஆனால் ராமுவின் செய்தி அவளின் மனதிற்கு நிறைவைக் கொடுக்கவே, கூடையை எடுத்துத் தலையில் போட்டுக் கொண்டு ம்ட்டக்கம்பைக் கையில் பிடித்தபடி வேலைத் தளத்தை நோக்கி வீறுநடை போட்டாள். அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் ராமு. பாதையின் ஒரு திருப்பத்தில் திரும்பிப் பார்த்த சிவகாமி, ராமு தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு அசந்து போனவள், ஒரு புன்னகை யொன்றை உதிர்த்துவிட்டு திரும்பிச் சென்றாள்.

'உண்மையிலேயே சிவகாமி ஒரு புதுமையான பெண்தான். எனது வாழ்க்கையில் எத்தனை துன்பம் துயரம் ஏற்பட்டது. ஏன் அவள் வாழ்க்கையிலும்தான். அத்தனையையும் எதிர்த்து எதிர் நீச்சல் போட்டு குடும்பத்தையே வழிநடத்தும் பக்குவத்தை அடைந்தவள்தான் அவள். இந்தக் குடும்பத்தை வழிநடத்த அவளே சகல வழிகளிலும் எங்களுக்கு உதவியாக இருக்கிறாள். இனி இந்த ஜீவன்களுக்கு யார் உதவியாக இருப்பது என்பதைக்கூட மறந்து தன்னையே நம்பியிருக்கிறாள்.

இவளைப் பற்றி நான் செய்த முடிவு சரியானதுதான். அதை யாரும் தடுக்க மாட்டார்கள்.. அம்மாகூட அடிக்கடி சொல்வாள், சிவகாமி போல் ஒரு பொறுப்புள்ள மருமகள் எனக்குக் கிடைக்கமாட்டா அப்படின்னு: அப்படின்னா இன்னைக்கு மாலை என் விருப்பத்தச் சொல்லிவிட வேண்டியதுதான்' என்ற உறுதியோடு தாயாரிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

காரியாலயத்தில் காத்திருந்த பிரதிநிதியோடு தோட்டத்திற்குச் சென்றபோது தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாது பெருந் திரளாகக் கூடியிருந்தனர். அவர்கள் சென்ற சிறிது நேரத்தில் மத்திய கமிட்டியிலிருந்து செயலாளர் காரில் வந்திறங்கினார்.

அவரை எதிர்கொண்ட ராமு, அவரை அழைத்துச் சென்று எல்லோருக்கும் அறிமுகப்படுத்திய பின் தொழிலாளர் பிரேதங் களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

அன்று பதினொரு மணிக்கெல்லாம் ப்ரேதங்கள் அடக்கம் செய்யப்பட்டன. அன்று நடந்த அஞ்சலிக் கூட்டத்திற்கு ராமுதான் தலைமை தாங்கினான். தொழிலாளர்களின் அவல வாழ்க்கையைப் பற்றியும். பாதுகாப்பற்ற நிலைகளைப் பற்றியும், தோட்ட நிர்வாகங் களின் கொள்கைகளையும் கண்டித்துப் பேசினான் ராமு.

அங்கு உரையாற்றிய தோட்ட அதிகாரி, "நாங்களும் தொழில் செய்ய வந்தவர்கள்தான். கம்பெனி சொல்வதைத்தான் நாங்கள் செய்கிறோம். தொழிலாளர்களின் குறைபாடுகளை நாங்கள் மினிட்டில் எழுதி அனுப்புகிறோம். கம்பெனி பதில் சொல்லும் வரை காத்திருக்க வேண்டும். சில உதவிகளை நாங்கள் கம்பெனியிடம் கேட்காமலே செய்கிறோம். இது எங்களுக்குள்ள பொறுப்பு. ஆனால் தொழிலாளர் களின் வீடுகளைப் புதிதாகக் கட்ட வேண்டியது மிகவும் அவசியம். அதைப்பற்றித் தொழிற்சங்கங்கள்தான் கம்பெனியோடு பேசி நடவடிக்கை எடுக்க வேணும். இந்த மண் சரிவில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு புதிதாக வீடுகள் கட்டிக் கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்துள்ளோம். இதற்குக் கம்பெனி பூரண ஒத்துழைப்பு நல்கியுள்ளது. உடனடியாகத் தேவைகளையும் கவனித்து வருகிறோம். மேலும் என்னென்ன செய்ய வேண்டுமோ அதை நாம் செய்வோம்" என்றார் தோட்ட அதிகாரி.

சகல ஏற்பாடுகளையும் செய்த பின்பு எல்லோரும் அமைதியாகப் புறப்பட்டனர். காரியாலயம் வந்த மத்திய செயலாளர் அங்கு குழுமியிருந்த தொழிலாளர்களோடு பேசிவிட்டுப் புறப்பட்டுவிட்டார். அவரை வழியனுப்பி வைத்த ராமு, அன்று நேரத்தோடு வீட்டுக்குப் போகத் தயாராகுமுன் காலையில் சிவகாமி கொடுத்த சாமான்

பட்டியலை எடுத்துப் பார்த்து வாங்க வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு பஸ் நிலையத்தை அடைந்தான். அங்கு தயாராக இருந்த பஸ்ஸில் ஏறி அமர்ந்தான். வீட்டிற்குப் போய்ச் சேரும்போது மாலையாகி விட்டது. சாமான்களை எதிர்கொண்டு வாங்கிக்கொண்ட அருண், "அப்பா இன்றைக்கு நம்ம வீட்டிலே என்ன விசேஷம். பாட்டி யார் யாரையோ அழைத்திருக்கு" என்று ராமுவிடம் கேட்டான்.

"எல்லாம் காரணத்தோடுதான் அருண். கொஞ்சம் பொறுத் திருந்து பார்" என்று உள்ளே நுழைந்தவன், உடைகளை மாற்றிக் கொண்டு மற்றவர்களின் வருகையை எதிர்பார்த்திருப்பவன் போல் அங்குமிங்கும் நடந்தான். இதை வேடிக்கை பார்த்த அருண், "அம்மா அப்பா இன்றைக்கு என்ன பெரிய சந்தோசத்தில் இருக்கார். என்ன விசேஷம்?" என்று சிவகாமியைப் பார்த்துக் கேட்டான்.

"எனக்கு தெரியாது அருண். இந்தத் தேநீரைக் கொண்டுபோய் அப்பாவுக்குக் கொடு" என்று தேநீரை அருணிடம் கொடுத்தாள் சிவகாமி.

அதைப் பெற்றுக்கொண்டு நேராக ராமுவிடம் சென்றவன், "இந்தாங்கப்பா தேநீர்" என்று சொல்லி மேசையின் மேல் வைத்துவிட்டு பாட்டி பெருமாயியம்மாவிடம் விஷயத்தைக் கேட்போம் என்ற ஆவலில் பாட்டியைத் தேடிப் போனான்.

எல்லோரும் அமைதியாக இருந்தனர். ஆனால் ஏதோ மகிழ்ச்சி யான விஷயம் நடக்கப் போவதற்கு முன் கட்டியம் கூறுவது போல் பல ஏற்பாடுகள் நடைபெற்றன. விருந்தினர்களை உபசரிப்பது போல் இரவு சாப்பாடு செய்வதில் சிவகாமியும், வேறு சில பெண்களும் ஈடுபட்டிருந்தனர்.

மாலை ஆறு மணியாகி விட்டதென்பதை சுவர்க்கடிகாரம் ஆறு முறை ஒலித்து அறிவித்தது. பெருமாயியம்மா சிவகாமியைப் பார்த்து "சிவகாமி கை கால்களை கழுவிக்கிட்டு வேற நல்ல சேலையா பார்த்து ஒன்ன கட்டிக்க. வாரவங்க என்ன தவறா நெனக்கப் போறாங்க" என்று அதட்டினாள்.

அத்தையின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டவள் போல் மளமள வென ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தவள் சமையல் வேலை களை முடித்துவிட்டுத் தயாராகினாள். தோட்டத்திலுள்ள முக்கிய உறவினர்களும் பெரியவர்களும் வந்தமர்ந்தார்கள். சில பெண்களும் வந்திருந்தனர்.

எல்லோருக்கும் வணக்கம் சொன்ன ராமு சிவகாமி எங்கே இன்னும் காணோம் என்று வீட்டினுள்ளே எட்டிப் பார்த்தான். அங்கே

சிவகாமி வந்து கொண்டிருந்தாள். அவளைப் பார்த்த ராமு அசந்தே போய்விட்டான். ராமு மாத்திரமல்ல அங்கிருந்த எல்லோருமே அப்படித்தான் இருந்தார்கள். எல்லோரையும் கரம் கூப்பி வரவேற்ற சிவகாமியை வந்திருந்தவர்கள் அனைவரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

# 37

ஒரு பெண் தன் வாழ்க்கையில் விருப்பமில்லாத ஒருவனை கட்டாயத்தின் பேரில் திருமணம் செய்யும் போது அவள் மனதில் ஏற்படும் வேதனைதான் எத்தனை எத்தனை. வந்த வாழ்க்கையும் ஒரு சில மாதங்களில் பறிபோய் விட்டால் அதனால் ஏற்படும் துன்பம் அவளை வேதனையின் விளிம்பிற்கே கொண்டு சென்றுவிடும்.

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் கணவன் என்ற நிலைப்பாட்டில் ஏற்பட்ட இழப்பால் ஏற்படும் வெறுப்பு கருவில் உருவான மகன் என்ற புதிய உருவால் வேதனைகளை மறந்து புதிய பாதையில் காலடி எடுத்து வைக்க உறுதி பூண வைக்கிறது.

ஆனால் அவள் மனதில் எங்கோ ஒரு மூலையில் இளமைக் கால எண்ணங்கள் சாகாமல் சதுராடிக் கொண்டிருக்கின்றன. அந்த சதுராட்டத்திற்கு இசை போட்டது போல தன் ஆரம்பகால காதலனிடமே அடைக்கலம் புகுந்து வாழ முற்படுகிறாள். அவள்தான் சிவகாமி என்ற கருணை மிக்க பெண்.

ஆமாம் மகனின் முடிவை தாயார் அன்றே நிறைவேற்றுவது போல் உறுதியோடு உறவினர்களையும் பெரியோர்களையும் வீட்டுக்கழைத் திருந்தாள் பெருமாயியம்மா. புத்தம் புதிய சேலையோடு நெற்றியில் குங்குமத் திலகமிட்டு கூந்தலில் பூச்சூடி செழிப்பாக இருந்த சிவகாமி அன்னம் போல் நடந்து வந்து சபையோரை வணங்கினாள்.

இந்தக் காட்சியைக் கண்டதும் ராமு மெய் மறந்து நின்றிருந்தான். இதையெல்லாம் கவனிக்காது அருண், வருபவர்களை வரவேற்று அமரச் செய்து கொண்டிருந்தான்.

எல்லோருக்கும் வணக்கம் சொன்ன சிவகாமி ஓரக் கண்ணால் மாப்பிள்ளை கோலத்தில் அமர்ந்திருந்த ராமுவைப் பார்த்து தென்றல் தழுவுவது போல் ஒரு புன்னகை உதிர்த்துவிட்டு பெண்களோடு அமர்ந்து விட்டாள்.

அங்கு நிலவியிருந்த அமைதியை நீண்ட நேரம் நீடிக்க விடாமல் சிவகாமியின் தூரத்து உறவினர் பெரியவர் எழுந்து விபரத்தை யெடுத்துச் சொன்னார்.

எல்லோரும் ஒருமுகமாக ஆமோதிப்பதுபோல் "இதை ஏன் இத்தனை நாளா சுணக்கியிருக்க வேண்டும். இவர்கள் சின்னக் காலந்தொட்டு காதலர்களாக இருந்தவர்கள். ஏதோ அவங்க அப்பா செய்த தவறால் நிறைவேறாமல் போயிட்டு. இப்போ அதுக்கு நேரமும் காலமும் வந்திருக்கு. காரியத்த பின் போடாமல் முடிக்க வேண்டியதுதானே."

தாயார் பெருமாயியம்மா எழுந்து "இரண்டு பிள்ளைகளும் அநாதைகள் போல் இருக்குதங்க. அவளும் அத்தான் அத்தான் என்று ராமுவையே சுத்தி வர்றாள். பேரன் அருணும் அப்பா அப்பான்னு அவனையே சுத்திக்கிட்டு இருக்கான். என் மகன் ராமு இவங்க ரெண்டு பேர் வாழ்க்கைக்கும் துணையாக இருக்கான். ஊராரும் இவர்களைக் கணவன - மனைவி என்றும் அருணை ராமுவின் பிள்ளை என்றும் தான் நினைக்கிறாங்க. இது கடவுள் செயல். இந்த அனாதைகள் ஒரு குடும்பமாக இருக்கிறதை நான் கண்மூட முன்னர் பார்க்கணும்" என்று சொல்லும் போதே அவளின் கண்களில் கண்ணீர் திரண்டு வந்தது.

ராமு சொல்வதைக் கேட்பதற்கு எல்லோரும் தயாராக இருந் தார்கள். "நான் என்றைக்குமே இவர்களைப் பிரிந்து வாழ நினைத்த தில்ல. சிவகாமியை நான் மனதார நேசித்தவன். அவள் என் வாழ்க்கை யில் புதிய தீபமாக பிரகாசித்தவள். காலத்தால் ஏற்பட்ட சோதனையால் அவளைப் பிரிய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எங்கள் காதல் தூய்மையானது என்பதாலோ என்னவோ அவள் விரைவில் என்னோடு வந்து சேர்ந்து விட்டாள். அவள் எங்கள் வீட்டில் காலடி எடுத்து வைத்த பின்பும் சரி நான் அவளோடு உண்மையான அன்புடனேயே பழகி வந்தேன். அவள்தான் எனக்கு திருமணம் செய்து வைப்பதில் கூட தீவிரமாக இருந்தவள். எதிர்பாராமல் நான் வசந்தி என்ற பெண்ணை சந்தித்தேன். அவளையும் என்னையும் ஒன்றிணைத்து வைக்க இந்த சிவகாமி எவ்வளவு கஷ்டப்பட்டாள். ஆனால் எங்களை ஒன்றிணைத்து எங்கள் மனதில் பல ஆசைகளை வளர்த்த இறைவன் அந்த ஆசைகளை நிறைவேற்றாமலே எங்களை இவ்வளவு சீக்கிரமாகப் பிரித்துவைத்து விட்டான். இது என்னால் எதிர்பார்க்கவே முடியவில்லை. அவளுக்கு நேர்ந்த அந்த நிலையை நினைத்து நான் நிலை குலைந்து போய்விட்டேன். அந்த நேரத்தில்தான் என் இதயத்தை குத்திக் காட்டினாள் வசந்தி.

'அத்தான் நாம்தான் சேர்ந்து வாழக் கொடுத்து வைக்காத பாவிகளாகி விட்டோம். உங்களுடன் சேர்ந்து வாழ உங்கள் சிவகாமிக்கு எல்லாத் தகுதிகளும் உண்டு. நீங்க அவளையே திருமணம் செய்ய வேண்டும். என்னோட கடைசி ஆசை அதுதான். நீங்கள் அப்படிச் செய்வதன் மூலம்தான் என் ஆத்மா சாந்தியடையும்' என்று என்னிடம் கேட்டுக் கொண்டாள்.

சிவகாமி என் பொறுப்பில் இருப்பவள். அவளுக்கு எதிர் காலத்தில் நல்ல கணவனாக இருந்து அவளைப் பாதுகாக்க நான் தயாராக இருக்கிறேன். இது வசந்தியின் வேண்டுக்கோளுக்காக மாத்திரமல்ல இதயபூர்வமான அன்போடு இதை உங்கள் முன் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். பெரியோர்களாகிய நீங்கள் அடுத்து செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடிக்கணும். அதுதான் என் விருப்பம்" என்று சொல்லி அமர்ந்தான் ராமு.

பெரியவர் சின்னையா மீண்டும் எழுந்து சிரித்துவிட்டு. "ஆக வேண்டியத நாம கவனிப்போம். ஒரு நல்ல நாளில் இவர்கள் திருமணத்த அமைதியாகச் செய்து வைப்போம்" என்று சொன்னதை எல்லோரும் மனதார ஆதரித்தனர். பெண்கள் மத்தியில் அமர்ந்திருந்த சிவகாமி வெட்கம் மேலிட உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து வீட்டிற்குள்ளே சென்று விட்டாள்.

அன்று இரவு எல்லோருக்கும் ராமு வீட்டில்தான் விருந்து. எத்தனைதான் நாகரிகம் தோன்றினாலும் சம்பிரதாயமுன்னு ஒன்று இருக்கிறதை நம்ம ஜனங்க எப்போதுமே மறப்பதில்லை. அதை முறையாகச் செய்யும் போதுதான் பெரியோர்களின் ஆசியும் அன்பும் கிடைக்கிறது. அதுவே இவர்களுக்கு உறுதுணையாகும்.

இருள் அகன்று சூரியன் உதித்தான். பொழுது புலர்ந்தது. தோட்டமெல்லாம் ராமு சிவகாமி பற்றிய பேச்சுத்தான். சிவகாமி வழமை போல் வேலைக்குப் புறப்பட்டவள், வழக்கத்திற்கு மாறாக நெற்றியில் குங்குமப்பொட்டு திகழ கொழுந்தெடுக்க புதிய உற்சாகத் துடன் கிளம்பினாள்.

சிவகாமி புதிய மணப்பெண் கோலத்தில் கொழுந்தெடுக்க வருவதைக் கண்டு பெண்கள் மத்தியில் குதூகலமும், சிரிப்பும் தோன்றின. இதையெல்லாம் கவனிக்காதது போல அவள் சிந்தனை யோடு கடமையில் ஈடுபட்டாள். அவளை அணுகிய தோழிகள் அவள் முகம் வாடியிருப்பதைக் கண்டு "என்ன சிவகாமி என்ன சோகம். ஏன் முகம் வாடியிருக்கு" என்று கேட்டபோது தலை நிமிர்ந்த சிவகாமி "ஒன்றுமில்லடி என்னைத் தொட்டு தாலி கட்டிய புருசனோடு ஒரு சில நாட்களே வாழ்ந்தேன். அதை நினைத்தேன். அதை நினைத்துத்தான் துன்பப்படுகிறேன்" என்றாள்.

"அதவிடு சிவகாமி உனக்கு ராமுவ கட்ட விருப்பமா விருப்ப மில்லை யா? அத சொல்லு முதல்ல."

"ராமு அத்தானைக் கட்ட எனக்கு பூரண சம்மதம் தாண்டி."

"அப்ப கதய விடு. இத்தனை நாளும் நினைக்காதய நினைச்சு இப்ப நல்ல நேரம் அதுவுமா கண் கலங்காத. நடந்தத மறந்திட்டு உன் அத்தானோட புதிய வாழ்க்கையைத் தொடங்கு. எல்லாம் சரியாயிடும்" என்றாள் தோழி கலா.

"கலா நீ சின்னப் பொண்ணு. உனக்கு இதெல்லாம் விளங்காது. எந்தப் பொண்ணுமே எந்தச் சூழ்நிலையில் ஒரு கணவனை அடைந் தாளோ அதை அவள் தன் வாழ்க்கையில் மறக்கவே மாட்டாள். இன்று எனக்குப் புது வாழ்வு ஏற்பட்டுவிட்ட போது தான் அவரைப் பற்றிய நினைவு எனக்கு வந்தது. இதை என்னைப் போன்ற பெண்கள் எப்போதுமே தட்டிக் கழித்துவிடமுடியாது."

"அது உண்மைதான் சிவகாமி. ஒருவனை நாங்க கணவனா ஏற்றுக் கொண்ட பிறகு மற்றவர்களை நினைப்பதே தவறுதான். கல்லானாலும் கணவன் - புல்லானாலும் புருசன் என்று முன்னோர்கள் எவ்வளவு பெருமையாகச் சொல்வார்கள். அதைப் பெண்களாகிய நாம் என்றுமே மறக்க முடியாது. அதுதான் பெண்களாகிய நம்ம வாழ்க் கைக்கு உறுதுணையானது. உன்னைப் பற்றி நான் பெருமைப் படுகிறேனடி. சின்ன வயசிலே ஒருசில நாட்கள் கணவனோடு வாழ்ந்ததை இத்தனை வருடத்திற்குப் பிறகும் மறக்காமல் கண்ணீர் விட்டு அழுவதை நினைக்கும்போது பெண்களில் நீ பெருமைக்குரிவளாகத் திகழ்கின்றாய். நிச்சயமாக உன்னை உன் கணவன் ஆசீர்வதிப்பான். கவலையை விட்டிட்டு கொழுந்து எடுத்துக் கிட்டு வா. அப்புறமா பேசுவோம்" என தன்நிறைக்குச் சென்று கொழுந்தெடுக்கத் தொடங்கினாள் கலா.

மௌனமாக கொழுந்தெடுத்துக் கொண்டுபோன சிவகாமியின் மனதில் பல கேள்விக் கணைகள் எழுந்தன. 'மகன் அருண் தன் கணவனை உரித்து வைத்துபோல் இருக்கிறான். தோளுக்கு மேல் வளர்ந்து விட்டான். இந்த நிலையில் எனக்கொரு திருமணம் அவசியமா. அத்தானை நினைக்கையில் பாவமாக இருக்கிறது. அவரும் என்னைத் தவிர வேற பெண்ணை திருமணம் செய்வதில்லை என்ற நினைப்பில் வாழ்ந்து வந்தவர். அத்தானை ஒதுக்கிவிட்டு இந்த உலகத்தில் என்னால் வாழ முடியுமா. அது சரிதான். அவரோடு உயிருக்குயிராக இருக்கும் அருணை பிரிக்க முடியுமா? அதுவே வாழ்க்கையில் ஓர் துன்பத்தை ஏற்படுத்துமே.' இப்படி பலவாறு சிந்தித்துக் கொண்டே தன் கடமையையும் செய்தாள் சிவகாமி.

அருணுக்கு இப்போது பதினைந்து வயதாகிவிட்டது. பத்தாவது படிக்கிறான். விபரம் தெரிந்து கொள்ளக் கூடிய வயது. அதனால் அவன் எவ்வளவு பாதிக்கப்படுகிறான் என்றெல்லாம் சிந்தித்தாள். முடிவெடுக்கும்போது இப்பிரச்சினைகள் தலை தூக்கவில்லை. ஆனால் முடிவெடுத்த பின் சிவகாமி சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறாள்.

பகல் கொழுந்தை நிறுத்திவிட்டு சாப்பிடப் போன சிவகாமி தலைவலி என்று அரைநாள் வேலையோடு நின்றுவிட்டாள்.

வீட்டுக்கு வந்த அருண் "என்னம்மா வேலைக்குப் போக வில்லையா?" என்று கேட்டு பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

"வேலைக்குப் போய்விட்டுதான் வந்தேன். தலைவலி அதுதான் சாப்பாட்டோடு வேலைக்குப் போகாமல் நின்றுவிட்டேன்" என்றாள் சிவகாமி.

அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்த் அருண், "ஐயோ கொதிக்குது" என்று எழுந்தவன், தைலத்தை கொண்டு வந்து அவளின் நெற்றியில் தேய்த்துவிட்டான். சிவகாமியின் மனதில் ஏற்பட்ட துன்பம் மகன் அருணின் கை பட்டவுடன் சிறிது சிறிதாக குறைவது போலிருந்தது.

"அருண் போய் கைகால் கழுவிக்கிட்டு வா. சாப்பாட்ட எடுத்து வைக்கிறேன்" என்று எழுந்தவள் சாப்பாட்டை எடுத்து வைத்து அருண் பக்கத்தில் அமர்ந்து கொண்டு ஒரு புன்னகையொன்றை உதிர்த்தவள் அவனோடு தானும் சாப்பிட ஆரம்பித்தாள் சிவகாமி.

"அருண் நான் கேட்கிறேன் என்று கோபிக்க வேண்டாம். நான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கேட்கிறேன். நேற்று செய்த முடிவைப்பற்றி நீ என்ன நினைக்கிற" என்று கேட்டுவிட்டு மௌனமாக அவன் முகத்தைப் பார்த்தாள் சிவகாமி.

அதை சற்றும் எதிர்பார்க்காத அருண், "அம்மா எனக்கு அம்மா அப்பா எல்லாமே நீங்க இரண்டு பேரும்தான். உங்கள நான் எப்படி விரும்புகிறேனோ அதேபோலத்தான் அப்பாவையும் விரும்புறன். நீங்க ரெண்டு பேரும் சந்தோசமா இருந்தா அதவிட மகிழ்ச்சி எனக்கு வேரெதும் இல்லம்மா" என்ற அருண் "ஏன் அப்படிக் கேட்கிறீங்க?" என்று சிவகாமியை திருப்பிக் கேட்டான்.

"இல்ல அருண் சும்மா கேட்டேன். நீ அதைப் பற்றி பெரிதாக ஒன்றும் நினைக்காத" என்றாள்.

"இல்லம்மா நீங்க இதுபற்றி எனக்கிட்ட கேட்பீங்கன்று நான் நினைச்சிருந்தேன். அதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு கவலைப்பட்டுக் கொண்டிருக்காதீங்க. அதனால நமக்கு

துன்பம்தான் எற்படுமேயொழிய சந்தோசம் ஏற்படாது. நீங்க ரெண்டு பேரும்தான் எனக்கு தாய் தந்தை என்பதை என் மனநிறைவோடு ஏற்றுக் கொண்ட பிறகு நாம் ஏன் கவலைப்பட வேண்டும்" என்றான் அருண்.

"இல்லப்பா நாளைக்கு நாலு பேர் உன்னப் பார்த்து இகழ்ச்சியா பேசினா அதில் நீ துன்பப்படும்போது நானும் வேதனைப்படணும் தானே. அத்தான் நமக்கு துணையா இருக்கும் வரைக்கும் எந்த துன்பமும் அணுகாது. ஆனால் நாமும் சிந்தித்துதான் ஒரு காரியத்தை செய்ய வேண்டும். இப்போ நீதான் எனக்கு ஆதரவு" என்று அருணின் தலையைத் தடவினாள் சிவகாமி.

தாயை நிமிர்ந்து பார்த்த அருண். "நீங்க ஏன் சும்மா மனதைப் போட்டு அலட்டிக் கொள்றீங்க. அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது. நடந்தாலும், எங்கம்மா தவறு செய்யல்ல என்ற உறுதியோடு நான் இருக்கும்போது ஊரைப்பத்தி நாம கவலைப்பட வேண்டியதில்லை. அம்மா நாம பேசுற விசயம் அப்பாவுக்குத் தெரிந்தால் அவர் பெரிதும் கவலைப்படுவார்" என்று அருண் கூறி முடிக்க அங்கே வந்த பெருமாயியம்மா, "என்ன சிவகாமி வேலைக்குப் போகலையா" என்று கேட்டுக் கொண்டே அமர்ந்தாள்.

"இல்ல அத்தை காலையிலிருந்து ஒரே தலைவலி, அதனால அரைநாள் வேலையோடு நின்று விட்டேன்" என்று சொன்னாள் சிவகாமி.

"இது பனிக்காலம்தானே. அதுக்கேத்த வெயிலும் வேற. நீ பச்சைத் தண்ணீரைக் குடிச்சிருப்ப. அதுதான் தலைவலி வந்திருக்கு" என்றாள் பெருமாயிம்மா. அருணை பார்த்து, "அருண் இனி நீதான் பொறுப்போடு நடக்கணும். நம்ம குடும்பமே புது வாழ்க்கையைத் தொடங்கப் போகுது" என்று 'சொன்னதைக் கேட்ட அருண். "என்ன பாட்டி அப்படி சொல்லிட்டிங்க. நான் என்றுமே அம்மா, அப்பா பேச்சைத் தட்டி நடந்தது இல்ல. இனியும் நடக்க போறதில்ல" என்றான்.

மனதில் ஏற்பட்ட துன்பத்தையெல்லாம் மகனின் ஆறுதல் வார்த்தைகள் மூலம் மறந்துவிட்ட சிவகாமி, வீட்டு வேலையை பரபர வென்று செய்யத் தொடங்கினாள்.

மாலையில் பூஜை அறையில் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு மனநிறைவோடு சுவாமியைக் கும்பிட்டுவிட்டு திருநீறை எடுத்து நெற்றியில் வைத்துக்கொண்டு திரும்பியவள் திடுக்கிட்டு அதிர்ச்சி யோடு நின்றுவிட்டாள். அங்கே உதட்டில் புன்னகையோடு, கை நிறைய பூவோடு ராமு நின்றிருந்தான். தன்னை மறந்த சிவகாமி தடாரென சரிந்து ராமுவின் கால்களில் விழுந்து அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். அவளை அள்ளி எடுத்தவன் கையிலிருந்த

பூவை அவள் தலையில் சூடி அரவணைத்துக் கொள்ள முற்பட்டபோது கைகளை விலக்கிக்கொண்டு திருதிருவென முழித்த ராமு குற்ற உணர்வோடு தலைகுனிந்து நின்றான்.

# 38

பிரிந்தவர்கள் கூடும்போதும், பழைய உறவுகள் புதுப்பிக்கப் படும் போதும் மனிதர்கள் சந்து சூழ்நிலையையும் மறந்து, தாங்கள் என்ன செய்கிறோம் என்பதனையும் மறந்துவிடுகின்றனர். இந்நிலை யில் அளவுக்கு அதிகமான உணர்ச்சி வசத்திற்கு ஆட்பட்டு விடு கின்றனர். காதலர்களாக இருந்தவர்கள் விதிவ்சத்தால் இரு துருவங்க ளாக பிரிந்து மீண்டும் விதிவசத்தால் கூடும்போது காதலர்கள் என்ற நிலையிலிருந்து விடுபட்டு கருணையோடு ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழ முற்படுகின்றனர்.

இந்த வகையில் ராமுவும் சிவகாமியும் பெரும் பாக்கியசாலிகள். ராமுவின் மாமன் மகள்தான் சிவகாமி. அந்த உரிமையோடு அவர்கள் காதலர்களாகி விட்டனர். அதிகாரமும் அந்தஸ்தும் அவர்களின் கர்தலை முறித்தது. மாமன் தன் மகளை வேறொருவனுக்கு முடித்து விடுகிறான். விதி அங்கே விளையாடியது. கணவனை இழந்து கைம் பெண்ணாக திரும்பி வரும்போது உறவு என்ற பந்தத்தால் ராமு அவளை ஆதரிக்கிறான்.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு காதலர்களாக இருந்து பிரிந்தவர்களை அதே பதினைந்து வருடங்களுக்குப் பின்பு கண்வன் மனைவியாக இணைக்க உறவினர்கள் முற்பட்டு விட்டனர். இதனால் உந்தப்பட்ட சிவகாமி தனது கடந்தகால இல்லற வாழ்க்கையில் தான் அனுபவித்த இன்ப துன்பங்களை ஒருமுறை சிந்தித்துப் பார்த்து மகனின் ஆதரவால் தெளிவு பெறுகிறாள்.

பூஜை அறையில் ராமுவும் சிவகாமியும் ஒருமித்த நிலையில் இருந்ததைக் கண்ட அருண் அதிர்ச்சி அடைந்த போதும் அதைப் பெரிதுபடுத்தாமல் "இன்று உங்கள் இரண்டு பேரையும் தாயும் தந்தையுமாகப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நான் உங்கள் மகனாக இருந்து உங்கள் இருவரையும் வாழ்த்துகிறேன்" என்றவன் "பாட்டி பாட்டி இங்க வாயேன்" என்று பெருமாயியம்மாவின் கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு தான் கண்ட காட்சியைக் காண்பிக்க முற்பட்டபோது தங்களைச் சுதாகரித்துக் கொண்ட ராமுவும் சிவகாமியும் ஆளுக்கொரு பக்கம் சென்று விட்டனர்.

மௌனமாகச் சென்ற ராமு தனதறையில் அமர்ந்து உடைகளை மாற்றாமல் ஓர் புத்தகத்தைப் புறட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் புத்தகத்தில் கடவுளே எங்களால் எந்த சுமையைத் தாங்க முடியாதோ அந்த சுமையை எங்களுக்குத் தராதே என்று காதலர்கள் இருவரால் தாஜ்மஹாலில் பொறிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள வரிகளை மீண்டும் மீண்டும் படித்தான்.

"அப்பா தேநீர் குடிங்க" என்று தேநீர் கோப்பையோடு வந்து நின்ற அருணை நிமிர்ந்து பார்த்தான் ராமு. அருண் எவ்வித சலனமும் இல்லாமல் "என்னப்பா அப்படிப் பார்க்கிறீங்க" என்று கேட்டுக் கொண்டே மேசை மேல் தேநீரை வைத்தான்.

"அருண் என்னைப்பற்றி நீ என்ன நினைக்கிற. அப்பா ஏதும் குத்தம் செய்திருந்தால் மன்னிச்சிருப்பா" என்றான் ராமு.

"அப்பா நீங்க ஒரு குத்தமும் செய்யல்ல. ஏனென்றால் நான் உங்கள் பிள்ளை. நீங்களும், அம்மாவும் சந்தோசமாக இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி இல்லையா. ஏன் வீணாக மனதைப் போட்டு குழப்பிக் கொள்கிறீங்க. நீங்க ரெண்டு பேரும் என்னைக்கும் போலவே என்மேல் அன்பு செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்."

"அருண்" என்றழைத்த ராமு எழுந்து அவனை அரவணைத்துக் கொண்டு "அருண் நீ என்றும் என் உயிருக்குயிரான அன்பு பிள்ளையாச்சே. உனக்காகவே நான் வாழும் பாக்கியம் பெற்றிருக்கேன்" என்று அவனின் தலையைக் கோதியபடியே உச்சியில் முத்தமிட்டான்.

"அப்பா தேநீரைக் குடிங்க. ஆறிப் போயிடும்" என்று தன்னை விடுவித்துக் கொண்டு உள்ளே ஓடினான்.

'நான் அருண் முன்னால் அவசரப்பட்டுக் கொண்டது தவறாக இருக்குமோ. நானும் என்னை அறியாமலே ஒருவிதத் தாக்கத்தால் அப்படி நடந்து கொண்டேன். இதை சிவகாமிகூட எதிர்பார்த்திருக்க மாட்டாள். பாவம் அவள் நிலை எப்படி இருந்ததோ. அதனால் என்ன அவளை நான்தானே திருமணம் செய்யப் போகிறேன். போகிறேனா அது என்றோ முடிந்த கதை. சம்பிரதாயத்திற்கு இப்போது நான் அவளை ஏற்றுக் கொள்கிறேன்' என்ற பலவாறு சிந்தனை வயப் பட்டவனாக அமர்ந்திருந்தான்.

சிவகாமி நடந்ததை மறந்து வேலைகளில் தன் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தாள். அவள் உள்ளத்தில் எங்கோ ஓர் மூலையில் தன் கணவனின் குரல் கேட்டுக் கொண்டே இருந்தது. 'அந்தக் குரலை இத்தனை நாளாக நான் கேட்கவில்லை. இப்போது மட்டும் அது என்னை எச்சரிப்பதுபோல் இருக்கிறது. நான் செய்துள்ள முடிவு சரியானதா அல்லது பிழையானதா? ஏன் இந்தத் திடீர்

ஆசைகள். என்றும் போல் நான் இருந்திருக்காலமே' என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டே தன் கடமைகளைச் செய்து கொண்டிருந்தாள் சிவகாமி.

'எத்தனையோ பெண்கள் கணவனை இழந்து வேறு ஆண்களைத் திருமணம் செய்து கொண்டதில்லையா? ராமு அத்தான் யார்? இத்தனை காலமும் என்னை வைத்து பாதுகாத்தவராயிற்றே. ஒரு காலத்தில் நானும் அவரும் மனமொத்தோம். விதி எங்களைப் பிரித்து விட்டது. மீண்டும் நான் விதிவசத்தால் அவரோடு சேர்ந்து வாழ வேண்டியதாயிற்று. அவரோ நானோ என்றுமே ஒருவருக்கொருவர் அன்பு குறைந்தவர்களாக இருக்கவில்லை. அந்த அன்பின் காரணமாகத்தான் அத்தான் எடுத்த முடிவை நான் ஏற்றுக் கொண்டேன். அது மாத்திரமல்ல. வசந்தியும் தன் இறுதி நாளில் இதை ஒரு வேண்டுகோளாகச் சொல்லியிருந்தாள். இதெல்லாம் இணைத்து தான் பழைய வாழ்க்கையை மறந்து புதிய வாழ்க்கையை ஏற்படுத்த முடிவு செய்தோம். இது எங்க ரெண்டு பேருடைய முடிவு மாத்திரமல்ல உறவினர்கள் நண்பர்கள் ஒன்றுபட்டுச் செய்த முடிவு. பின் ஏன் மறைந்த ஒரு வாழ்க்கையின் அத்தியாயத்தைப் புரட்டிப் பார்த்து மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறது. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்ற பந்த பாசமா? அல்லது எதிர்காலத்தில் எடுக்கப் போகும் முடிவுக்கு இது ஓர் எச்சரிக்கையா? ஒன்றுமே விளங்கவில்லையே' என்று யோசித்தவாறு அடுப்படியில் அமர்ந்திருந்தாள் சிவகாமி. அங்கே வந்த அருண் "அம்மா அம்மா" என்று கூப்பிட்டு சுய நினைவை வரவழைத்தான். "என்னம்மா பெரிய யோசனையில் இருக்கிறீங்க. அங்கே அப்பா இங்கே நீங்க இப்படி இருந்தா என்னையும் பாட்டியையும் யார் கவனிப்பது?" என்று கேட்டுக் கொண்டே பக்கத்தில் வந்தமர்ந்தான்.

"ஒன்றுமில்லப்பா நம் குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்களை எல்லாம் ஒருதரம் மனதில் நினைத்துப் பார்க்கிறேன். வேறு ஒன்றுமில்லை" மகனுக்கு ஆறுதலாகச் சொன்னாள். அத்தோடு நின்றுவிடாமல் இரவு சாப்பாட்டையும் இரண்டு பேருக்கு எடுத்து வைத்துவிட்டு "அருண் அப்பாவைச் சாப்பிடச் சொல்லு" என்று நிலைமையை சீரமையச் செய்தாள்.

சாப்பிட அமர்ந்த ராமு அருண் ரெண்டு பேரும் அடித்துக் கொண்டே சாப்பிட்டு எழுந்தனர். சிவகாமியைப் பார்த்து கண் சிமிட்டிவிட்டு உள்ளே சென்றான் ராமு. இந்த இன்ப உணர்வில் சிக்குண்ட சிவகாமியும் மாமியும் சாப்பிட அமர்ந்தனர். சாப்பிடும் போது மாமி "அத்தான் விசயத்தை எப்படி முடிக்கப் போறீங்க?" என்று பேச்சை ஆரம்பித்து வைத்தாள் சிவகாமி.

"என்னம்மா அப்படிச் சொல்ற. நீங்க இரண்டு பேரும் எப்படிச் செய்யணுமுன்னு நினைக்கிறீங்களோ அப்படியே செய்து முடிக்க வேண்டியதுதான். உங்க திருமணம் நம்ம குடும்பத்தில ஒரு நல்ல காரியமாக நடக்கணும். அதுதான் என் ஆசை" என்று சொன்னாள்.

"அத்தை இரண்டு குடும்பங்களாக இருந்த நம்ம குடும்பத்தை வன்செயல் ஒன்னாக்கிடுச்சி. அன்றே நாம ஒரு குடும்பமாகி விட்டோம். புதிதாக எதுவுமே செய்ய வேண்டியதில்லை. அத்தான் எதை விரும்புகிறாரோ அதன்படி செய்யட்டும். நீங்களும் இது விசயமா கப் பேசுங்கள். இனிமேல் நாட்களைத் தள்ளிக் கொண்டு போவ து சரியாகப் படவில்லை" என்று ஏதோ குற்றம் செய்தவள்போல் படபடவென்று சொல்லிவிட்டு சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

அன்று இரவு ராமு ஓர் அறையில், சிவகாமி ஓர் அறையிலுமாக கண் உறங்காமல் விழித்துக் கொண்டிருந்தனர். புதிய எண்ணங்களால். உந்தப்பட்ட இரண்டு பேரும் தனித்தனியே இன்பக் கனவுகளைக் கண்டனர். அதிகாலை சேவல் கூவும் சத்தம் கேட்டு படாரென்று எழுந்த சிவகாமி ராமு படுத்திருந்த அறையை எட்டிப் பார்த்தாள். எதிர்பார்த்திருந்தவன் போல் சடாரென்று எழுந்து விளக்கைத் தூண்டி விட்டான் ராமு.

எதிரே சிவகாமி நிற்பதைக் கண்டு எழுந்து அருகில் வந்தவன் "என்ன அதிகாலையிலேயே எழுந்திருக்கே. என்ன விசேசம்" என்று கேட்டான்.

அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்த சிவகாமி "நான் மட்டுமா நீங்களும்தான்" என்று சொல்லிவிட்டு, "இருங்க அத்தான். அடுப்பை மூட்டிவிட்டு தேநீர் கொண்டுவ்ாரேன்" என்று திரும்பியவளை எட்டிப் பிடித்து நிறுத்தினான். இதை எதிர்பார்த்திருந்த சிவகாமி பலவந்தமாக கையை விடுவித்துக் கொண்டு அடுப்பங்கரைக்கு விரைந்து சென்றாள். அங்கே சென்றவள் எதும் செய்ய தோன்றாமல், தடுமாறினாள். உடலெல்லாம் வியர்வையால் நனைந்தது. நிலைமையை சமாளித்துக் கொண்டு செம்பை எடுத்து குளிர்ந்த நீரை ஊற்றி மடமடவென்று குடித்தாள். அடுத்து காரியங்களை அவசர அவசரமாகச் செய்ய முற்பட்டாள்.

சிவகாமி விடுவித்துக் கொண்டு வந்தபோது அவளைத் தொடர்ந்து அங்கே வந்த ராமு அங்கே நடப்பாதை வாசற்படியில் ஓரமாக நின்று கவனித்துக் கொண்டிருந்தவன், அமைதியானபோது அருகில் சென்ற ராமு "என்ன, என் மேல் கோபமா?" என்று கேட்டான்.

"உங்கள் மேல் கோபாமா? அப்படி இன்னொரு தரம் என்னைப் பார்த்துக் கேட்காதீர்கள் அத்தான்."

"அப்ப ஏன் அப்படி அலறி புடைத்துக்கொண்டு ஓடி வந்த -"

"அத்தான் அது வந்து என்னமோ தெரியல்ல எனக்குப் பயமாக போயிருச்சி. என்ன இருந்தாலும் குடும்ப கௌரவத்தை மறந்திடக் கூடாது. அதைக் காப்பாத்தி பாதுக்காக வேண்டியது என் பொறுப்பு."

"உண்மையிலேயே உன்னை நான் இத்தனை நாள் புரிந்து கொள்ளவில்லை என்பதை தெரிந்து கொண்டேன். உன்னைப் போல் ஒரு பெண்ணை அடைந்த நான் அந்த கடவுளுக்குத்தான் நான் நன்றி சொல்லவேண்டும்."

"அத்தான் அந்த பெரிய வார்த்தையெல்லாம் சொல்ல வேண்டாம். அதற்கு நான் தகுதியில்லாதவள். ஆனால் உங்கள் மீது நான் கொண்டுள்ள அன்பு இதயப்பூர்வமானது. அது மாத்திரம்தான் எனக்குத் தெரியும்."

"அந்த அன்புதான் என் வாழ்க்கைப் படகை செலுத்த துடுப்பாக மாறுகிறது என்பதை உன் மூலமாக உணர்ந்து கொண்டேன்" என்று அருகில் சென்றவன், அவளை அரவணைத்த நிலையில் முகத்தை கையால் நிமிர்த்தினான். ஒரே நேரத்தில் நான்கு கண்களும் சந்தித்துக் கொண்டன.

# 39

நீதி, நேர்மை, தர்மம் என்ற உறுதியோடு செயல்படுபவனுக்கு எப்போதுமே துன்பமும், .க டமும், போட்டியும், பொறாமையும் தொடர்கதை போல தொடர்ந்து வரும். இதைக் கண்டு துவண்டு விடாமல், கடமையே கண்ணாக செயல்படுபவனே இறுதியில் வெற்றி பெறுகிறான்.

அதுவும் அடிமைத்தனம், பயமுறுத்தல், நெருக்கடிகள் நிறைந்த சூழ்நிலையில் வாழும் மக்களில் இந்த போட்டியும், பொறாமையும் ஓர் அன்றாட நடவடிக்கையாக இருந்து வரும் என்பதை மனதில் நினைக்கத் தோன்றினாலும், சில நேரங்களில் அதுவே அதிர்வடையக் கூடிய தாகவும் அமைந்துவிடுகிறது.

ராமு தோட்டத்தில் இத்தனை வருடங்கள் தொழிலாளர்களோடு பழகினாலும் தோட்டத்து மக்களுடன் இரண்டறக் கலந்திருந்தாலும் அடிக்கடி இத்தகைய அறியாமைத்தன நடவடிக்கையால் துவண்டு நிமிர்ந்து சேவை புரிந்து கொண்டிருக்கிறான். இன்று அவனையே அத்திரப்படக் கூடியதான நிகழ்ச்சி ஒன்று உருவாகிவிட்டது.

"என்னப்பா என்னமோ ராமு கண்ணியவான் நேர்மையானவன் என்றெல்லாம் சொன்னீங்க.. இப்போ அவன் செய்துள்ள காரியத்தைக் கேட்டு ஊரே சிரிக்குது தெரியுமா?" சடையன் கிண்டலாக மாடசாமியிடம் கேட்டான்.

கொதித்துப் போன மாடசாமி "என்னப்பா சொல்ற? ஊரே சிரிக்கும் அளவிற்கு நம்ம ராமு அப்படி என்னத்தான் குத்தம் செய்திட்டான்? அவரைப் பத்தி ஏதாவது சொன்னா நாக்கு அழுகிப் போயிடும்" என்றான்.

"சும்மா ஆத்திரப் படாதப்பா. நானும் உன் மாதிரித்தான் ராமுவை மதித்து வந்தேன். ஆனால் இதைக் கேள்விப்பட்டதிலிருந்து எனக்குமே கவலைதான். என்ன செய்ய? மனிதனுக்கு கெட்ட நேரம் வந்தா சொல்லிகிட்டா வரும். எல்லாம் அவனவன் தலைவிதி" என்றான்.

"சடையண்ணே விசயத்தை சொல்லாம நீங்கள் பாட்டுக்கு என்னென்னமோ பேசிகிட்டுப் போறீங்க. எனக்கு ஒன்றுமே விளங்க வில்லே. கொஞ்சம் வெளப்பமாத்தான் சொல்லுங்களேன்" என்றான் மாடசாமி.

"என்னப்பா ஒன்னும் தெரியாத சின்னக்கண்ணு மாதிரி எல்லாத் தையும் மூடிமடக்கி என்கிட்டாயே உன் கைவரிசையைக் காட்டிடப் பார்க்கிறே?"

"உண்மையிலேயே சொல்றன் சடையண்ணே. எனக்கு ஒன்றுமே தெரியாது. அதனாலதான் உன்னையே திருப்பி திருப்பி கேட்டுக் கிட்டு இருக்கேன். நடந்ததை சொன்னத்தானே எனக்கும் புரியும்."

"ஆமா, சொல்லத்தான போறன். கொஞ்சம் முன்னாடி சொன்னியே ராமுவைப் பத்தி அநியாயமா சொன்ன வாய் அழுகிப் போயிடுமுன்னு. இப்ப கேளு. அந்த வீட்டிலேயே சிவகாமி இருக்கிற இல்ல. அவ கல்யாணம் செய்து போய் கணவனை இழந்து கையில் ஒரு பிள்ளையோட வந்து நின்னா, நினைவிருக்கா?"

"அத எப்படியப்பா மறக்கமுடியும்? அந்த தங்கச்சி பாவம். சின்ன வயசிலேயே கணவனை இழந்து கைம்பெண்ணாக வந்து நின்னப்போ ராமுதான் பழசையெல்லாம் மறந்து ஆதரித்தார்."

"அப்படியாண்ணே. சரி விசயத்திற்கு வருவோம். ஏன் ஆதரித்தார் தெரியுமா? செட்டியார் ஆதாயம் இல்லாம ஆத்தக் கட்டி இறைக்க மாட்டாருங்கறது போல, ராமு அப்போதே திட்டம் போட்டுத்தான் அந்த பொண்ணுக்கு ஆதரவு கொடுத்தார்."

"இத்தனை வருசமா அவளும், ராமுவும் நடத்திய நாடகம் இப்போ அம்பலத்துக்கு வந்திருச்சி. அதுதான் ஊரே சிரிக்கு முன்னு சொன்னேன். அவ பையனுக்கு வயதாகிறது. இந்த நேரத்தில்

ஊர், உலகம் கதை கட்டுமோன்னு பயந்து இப்ப கல்யாணம் செய்யப் போறதா. ஒரு கதையைக் கட்டி விட்டிருக்காங்க. இது அடுக்குமா? செத்த புருஷன் ஆத்மாதான் சாந்தியடையுமா? இருந்தாலும் இவ்வளவு கேவலமா ராமு நடந்திருக்கக் கூடாது" என்று பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தான் சடையன்.

இத்தனை நேரமும் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த மாடசாமி "அட சடையண்ணே உன் மாதிரி அயோக்கிய பயல்கள் ஊரில் இருக்கிறதுனாலைதான் நல்ல மனிதர் கெட்ட மனிதன் என்கிற பேதம் தெரியாம போச்சு, சிவகாமி மகன் அருணை எந்த அளவுக்கு ராமு நேசித்தாரோ அந்த அளவுக்கு அவர் தூய்மையானவராக நடந்துக் கொண்டார் தெரியுமா?" என்றான்.

"நீ சொல்றது ஏற்றுக் கொண்டாலும், இந்த ராமுவுக்கு வேறு பெண்ணே கிடைக்கவில்லையே? என்ன இருந்திருந்து • போய் கணவனை இழந்த பெண்ணையா திருமணம் செய்ய வேண்டும். இதில் ஏதோ சூது இருக்கு. இல்லையின்னா இந்த முடிவுக்கு வந்திருக்க மாட்டார்."

"சடையண்ணே விபரம் தெரியாம பேசாத. ராமு சார் சிவகாமியை திருமணம் செய்வதற்கு பெரியோர்களே பேசி முடித்துவிட்டார்கள். அதன் பின்பு அதிலே சூது என்ன இருக்கு? சும்மா வாயை போட்டு அலட்டிக்காம, அவங்க அவங்க வேலையைப் பாருங்க" என்றான்.

"என்னப்பா உள்ளத சொன்னா உனக்கு உடம்பெல்லாம் எரியுது. நீ யார்? என்னப்போல ஒருவன் தானே. உள்ளே நடக்கும் சூத்திரத்தைப் பற்றி உனக்குத் தெரியாது. அதனால் தான் அவங்களுக்காக வக்காளத்து வாங்குற. உண்மை தெரிஞ்சா நீயே காரி துப்புவ" என்று நடையைக் கட்டினான்.

அவன் போவதைத் தடுப்பது போல், சடையண்ணே என்று அழைத்துக்கொண்டே அருகில் சென்ற மாடசாமி, எதிர்பாராத விதமாக திடீரென சடையனின் மேல் சட்டையைக் கழுத்தோடு இறுக்கிப் பிடித்து, "என்னடா சொன்ன, கொஞ்சம் விட்டுக் கொடுத்தா வாய்க்கு வந்ததெல்லாம் பேசிக்கிட்டுப்போற. சொல்றத இப்பவே சொல்லுடா" என்று மென்னியை இறுக்கினான்.

இதை கொஞ்சமும் எதிர்பார்க்காத சடையன், "நான் என்னடா சொல்லுறது. கோடி லயத்துக் கந்தசாமியைப் போய் கேளு. 'சிவகாமி ஏழு மாத கர்ப்பம். அதுக்கு ராமுதான் காரணம்' என்று சொல்லுறாங்களாம். அதனாலதான் உறவினர்கள் எல்லோரும் ராமுவைப் பயமுறுத்தி சிவகாமி கழுத்தில் மூணுமுடிச்சு போடணுமுன்னு சொன்னாங்களாம்."

சடையன் சொல்லி முடிப்பதற்குள், கையிலிருந்த கல்லாத்துக் கத்தியால் ஓங்கி ஒரு வெட்டு வெட்டினான் மாடசாமி. சடையன்

கொஞ்சம் சரிந்து விட்டான். இல்லாவிட்டால் தலைவேறாக முண்டம் வேறாகப் போயிருக்கும். தோள்பட்டையில்பட்ட வெட்டியிலிருந்து வடிந்த இரத்தம் மாடசாமி உடையை நனைத்துக் கொண்டிருந்தது.

அதிர்ச்சியடைந்த மாடசாமி கழுத்தில் பிடித்திருந்த கையை எடுத்துக் கொண்டான். தோளை கையால் பற்றிக் கொண்டே ஓட்ட மெடுத்த சடையன் வழியில் வருவோர் போவோர் எல்லோருக்கும் “மாடசாமி என்னை கத்தியால் வெட்டி விட்டான்” என்று சத்தம் போட்டுக் கொண்டே தோட்டத்து ஆபிசிற்கு ஓடினான்.

ஆபிசிற்கு இரத்தம் கொட்டக் கொட்ட ஓடி வரும் சடையனைக் கண்டு தோட்ட ஆபிசிற்குள்ளிருந்த குமாஸ்தாக்கள் எல்லோரும் பதறியடித்துக்கொண்டு வெளியில் வந்தனர். என்ன நடந்தது என்று கேட்கும் முன்பே “மாடசாமி என்னை வெட்டிவிட்டான்” என்று சொன்னான் சடையன், ஆபிஸ் விராந்தையிலேயே அமர்ந்துகொண்டான்.

உடனடியாக சடையனை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்துவிட்டு பொலிசுக்கு கடிதம் கொடுக்க பெரிய கிளார்க்கர் “இந்த சடையன் ஏதாவது ஒரு வம்பில் மாட்டிக்கொண்டே வருவான். அவனுக்கு எவ்வளவு சொன்னாலும் புத்தி வருவதில்லை” என்று சொல்லிக் கொண்டே ஆசனத்தில் அமர்ந்தார்.

ராமுவைத் தேடிப் போனான் மாடசாமி.

காரியாலயத்திற்கு புறப்படும் நேரத்தில் கையில் கத்தி கண் களில் கண்ணீருடன் வரும் மாடசாமியிடம் “என்ன நடந்தது?” என்று பதற்றத்துடன் கேட்டான் ராமு.

திக்கித் திணறி சடையன் சொன்னதையெல்லாம் சொன்னான். “அதனால் ஆத்திரப்பட்டு கையிலிருந்த கத்தியால் வெட்டி விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்” என்று கதறி அழுதான்.

இதை எதிர்பார்க்காத ராமு, தன்னை சுதாரித்துக் கொண்டு அவனை தோளில் தட்டிக்கொடுத்து வீட்டுக்குள் அழைத்துச் சென்று அமர வைத்தான்.

சிறிது நேரத்திற்குப் பின்பு முழு விபரத்தையும் கேட்டுவிட்டு, “இதற்கு ஏன் நீங்க ஆத்திரப்பட்டிங்க. சடையன் கதை நமக்கு தெரிந்ததுதானே. அந்த ஆளுக்கு இதே பொலப்பாய் போச்சு. சரி இப்ப எங்கே போயிருப்பான்” என்றான் ராமு.

“தெரியல்ல ராமு அண்ணே. நீங்கதான் என்ன காப்பாத்தணும்” என்று பதறிக் கொண்டிருந்தான் மாடசாமி.

“நம்ம ஆளுகளே இப்படிதான். கொஞ்சம் நிதானமாகப் போயிருந்தால் இவ்வளவு பிரச்சினை வந்திருக்காது. சரி நீங்க

வீட்டிற்குப் போங்க. நான் போய் சடையனைப் பார்த்து விட்டு வருகிறேன்" என்றான் ராமு.

ராமு நேரே சடையன் வீட்டுக்குச் சென்றபோது, அவன் மனைவி கன்னத்தில் கை வைத்தவாறு கண்ணீர் பெருக்கெடுக்க அமர்ந்திருந்தாள். அங்கே சில பெண்களும் குழுமியிருந்தார்கள். அருகில் சென்ற ராமுவைக் கண்டு மற்றவர்கள் விலகிக் கொண் டார்கள். "என்னம்மா என்ன நடந்தது? சடையண்ணே எங்கே?" என்று கேட்டான் ராமு.

"ஆமாப்பா செய்யிறதையும் செஞ்சிட்டு ஒன்னும் தெரியாத பாப்பா மாதிரி என்ன நடந்ததுன்னு கேட்க வந்திட்டியா. என் புருஷனை நீதான் ஆள் வச்சு வெட்டி மனுசனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு வந்து நிக்கிறியே. நீ நல்லா இருப்பியா?" என்று நறுக்கென்று சொல்லிவிட்டு மறுபுறம் திரும்பிக் கொண்டாள்.

இதை சற்றும் எதிர்பார்க்காத ராமு, "என்னம்மா சொல்லுறீங்க. நான் ஆள் வச்சு வெட்டினேனா. எனக்கு ஏனம்மா அந்த புத்தி வரப் போகுது. நேற்றுக் கூட என்னோட பேசிக்கிட்டுத்தானே இருந்தான்" என்று சொன்னவன். இனி அங்கே நிற்பதில் புண்ணியமில்லை என்று நினைத்ததோடு, பொறுமையாக தோட்ட ஆபீசை நோக்கி நடந்தான்.

எதிரே வந்த ஸ்டோர் காவல்காரன் "சார் நம்ம சடையனை மா டசாமி வெட்டி போட்டுட்டானாம். இப்போதான் லொறியில் பெரியாஸ்பத் திரிக்கு கொண்டு போனார்கள். பெரிய கிளாக்கர் ஐயா போலிசுக்கு துண்டு கொடுத்து அனுப்பியுள்ளார்."

விசயம் பெரிசாப் போகுது என்று நினைத்தவன் தோட்ட ஆபீசிற்குப் போவதை விட்டுவிட்டு மாடசாமியை கூப்பிட்டு அனுப்பி அவனையும் அழைத்துக் கொண்டு பொலிசிற்குப் புறப்பட்டான்.

நேரே பொலிஸ் நிலையத்திற்குப் போன ராமு அங்கு தனக்குத் தெரிந்த இன்ஸ்பெக்டர் மூலமாக விசயத்தைச் சொன்னான்.

அவர் புகார் புத்தகம் எழுதுபவரை அழைத்து இது தொடர்பாக வந்துள்ள புகாரை வாசித்துப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கினான்.

"மிஸ்டர் ராமு இவன்தான் அந்த ஆளை கொலை செய்யப் போயிருக்கிறான். அதிலிருந்து விடுபட்டு மல்லுக்கட்டும் போதுதான் இவன் அவனைக் கத்தியால் வெட்டிருக்கிறான் என்று புகாரில் எழுதி யிருக்கிறது. ஆகவே நீங்கள் ஆளோடு வந்தது மிச்சம் சந்தோஷம். அவனை இப்போது ரிமாண்ட் செய்ய வேண்டும். அதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்" என்று கேட்டார்.

சற்றும் தாமதியாது ராமு "இதோ இவன்தான் மாடசாமி" என்று பொலிசில் ஒப்படைத்து விட்டு மாடசாமியிடம் "கொஞ்சம்

பதட்டப்படாம இருங்க. நான் உங்களை விடுதலை செய்ய ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் இன்ஸ்பெக்டரிம் பேசினான்.

"முழுக் கதையும் கேட்டவர் கொஞ்சம் இருங்க ஆஸ்பத்திரி ரிப்போர்ட் வரட்டும்" என்றார்.

வெளியில் வந்த ராமு தேனீர்க் கடைக்குச்சென்று ஒரு கோப்பை தேநீரைக் குடித்து விட்டு மாடசாமிக்கும் ஒரு கோப்பை வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டுக் "கொஞ்சம் இங்கே இருங்க. நான் நம்ம ஆபீஸ் வரைக்கும் போய்விட்டு வருகிறேன்" என்று புறப்பட்டான்.

மீண்டும் பொலிசிற்கு வந்த ராமு ஆஸ்பத்திரி ரிப்போர்ட் வந்து விட்டதை அறிந்து மறுபடியும் இன்ஸ்பேக்டரோடு பேசினான்.

ரிப்போட்டைப் படித்த இன்ஸ்பேக்டர் "அவ்வளவு மோசமில்லை. இருந்தாலும் பிணைக் கொடுத்து விட்டு அழைத்துப் போங்க" என்று உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட சார்ஜண்டை அணுகி பிணைப் பத்திரத்தை நிரப்பி அதில் ராமு கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான்.

மாடசாமியை ஏறிட்டுப் பார்த்து சார்ஜெண்ட் "இவர் வந்ததுநாலத் தான் உன்னை உடுது. இல்லாட்டி உள்ளேதான் போட்டிருப்போம். சடையன் வீட்டுக்கு வரும் வரைக்கும் இவர்தான் உனக்கு பொறுப்பு. கவனமாக இரு" என்று சொன்னார்.

அங்கிருந்து விடைபெற்ற ராமு நேரே தோட்டத்துக்கு மாட சாமியை அனுப்பாமல் பக்கத்து தோட்டத்திலிருக்கும் அவர்களின் சகோதரன் வீட்டுக்குப் போய் இரண்டு நாள் சென்று வீட்டுக்கு வா என்று அனுப்பி வைத்துவிட்டு சடையனைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு போனான் ராமு.

நோயாளி பார்க்கும் நேரம் வரும்வரை காத்திருந்து உள்ளே சென்றான். கட்டிலில் கட்டுப் போட்ட நிலையில் படுத்திருந்தான்.

ராமவைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்த சடையன் கட்டிலை விட்டு இறங்கப் பார்த்தான்.

அவனை அமைதியாக இருக்கச் சொல்லிவிட்டு அருகில் சென்று "ஏன் இந்த மாதிரி எல்லாம் நடந்து கொள்கிறீங்க" என்று கேட்டான்.

"என்னை மன்னிச்சிடுங்க தம்பி மத்தவன் பேச்சைக் கேட்டு நான் வீணாப் போயிட்டேன்" என்று குற்ற உணர்வோடு சொன்னரான்.

"நடந்தது நடந்துபோச்சு. இனிக் கவலையை விட்டுட்டு காயத்தை சுகமாக்கிங்க. மற்றதப் பின்னால பேச்வோம்" என்றவன்

செலவுக்கு ஐம்பது ரூபா பணத்தை சடையனுக்கு எடுத்துக் கொடுத்தான். மரியாதையோடு பெற்றுக் கொண்ட சடையன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

அந்த சமயத்தில் சடையனின் மனைவி சாப்பாடு எடுத்துக் கொண்டு பார்க்க வந்து கொண்டிருந்தாள். கணவர் பக்கத்தில் நின்றிருந்த ராமுவைக் கண்டதும் தப்பு செய்தவள் போல் தலையைக் குனிந்து கொண்டாள்.

இரண்டு பேருக்கும் ஆறுதல் சொல்லிவிட்டு ராமு விடை பெற்று வெளியில் வந்து கொண்டிருந்தான்.

எதிரே ஒரு மனிதன் ராமுவை தடுத்து நிறுத்துவது போல் குறுக்கே வந்து 'சார்' என்றான்.

அவனை நிமிர்ந்து பார்த்த ராமு அதிர்ந்தே போய்விட்டான். 'அடப்பாவி நீயா' என்று மனதில் நினைத்துக் கொண்டு கோபத்தோடு அவனை முறைத்துப் பார்த்தான்.

# 40

மனித வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களுக்கு மனிதர்களும் பொறுப்பாக இருக்கின்றனர். மனிதனால் துன்பம் ஏற்படும் போது அதை மனிதரால் தாங்கிக் கொள்ள முடியாத வேதனையும் வெறுப்பும் ஏற்பட்டு விடுகிறது.

மனித உள்ளத்தில் தோன்றும் வேதனையும் வெறுப்புமே, அவனை பழிவாங்கும் படலத்துக்கு அழைத்துச் செல்கிறது. ஆத்திரக் காரனுக்கு புத்தி மட்டு என்பது போல் எந்த நேரத்தில் என்ன செய்யப் போகிறோம். அதன் விளைவுகள் என்ன என்பதைப் பற்றி எல்லாம் சிந்திப்பதே இல்லை.

அத்தகைய வெறுப்புக்கு காரணமாக மனிதன் தனக்கு நேரே சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் எதிர்ப்பட்டு தன்னை அழைத்த போது மனித உள்ளம் எத்தனை அதிர்வுகளைக் கொண்டிருக்கும் என்பதைச் சிந்திப்பது போல் ராமு எதிரே நின்றவனைப் பார்த்தான்.

வசந்தியின் வாழ்க்கையில் குறுக்கிட்டு அவள் வாழ்க்கையை நாசப்படுத்திய காமுகன் அனந்தராமன்தான் அவன் எதிரே நின்று கொண்டிருந்தான். ராமுவை நேருக்கு நேர் கண்ட அதிர்ச்சியில் தன்னை மறந்து 'சார்' என்று அழைத்தானே அன்றி அடுத்து எதுவுமே பேச முடியாமல் தலைகுனிந்து நின்றான்.

தன் மனதில் ஏற்பட்ட அத்தனை கொந்தளிப்புகளையெல்லாம் அடக்கிக் கொண்ட ராமு முகத்தை இருக்கமாக வைத்துக் கொண்டு "என்னப்பா சவுக்கியமா? நீ செய்த காரியம் சரிதானா? அவள் உனக்கு என்ன துரோகம் செய்தாள்? அநியாயமா அவளக் கொன்னுட்டியே பாவி" என்று ஆத்திரம் அழுகை மேலிட அவனைப் பார்த்துக் கேட்டான்.

"ஐயோ என்னை மன்னிச்சிடுங்க. நான் இந்த மாதிரியான கொலை காரனா மாறுவேன் என்று நினைக்கவே இல்லை. என்றோ என்னை அவமானப்படுத்தியதைப் பாரதூரமா எடுத்து விட்டேன். அதனால் எழுந்த விபரீதந்தான் என்னை அப்படி நடக்கத் தூண்டியது. ஆனால் அவள் இப்படித் தற்கொலை செய்து கொள்வாள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. பொலிசார் என்மீது வழக்குத் தொடர்ந் தாலும் உறுதியான சாட்சியங்கள் இல்லாததால் நான் விடுதலை ஆகி விட்டேன். விடுதலை பெற்றேன அன்றி நான் செய்த குற்றத்தை என்னால் மறக்கவே முடியவில்லை.

இந்த நிலையில் என் மனசாட்சி என்னை விரட்டியது. ஓடு அவளிடம் மன்னிப்புக் கேள். அவளை நீயே திருமணம் செய். அதுதான் அவளை வாழவைக்க நீ செய்யும் சரியான பரிகாரம் என்று என் மனசாட்சி என்னை உறுத்திக் கொண்டே இருந்தது. வசந்தி என்று ஓலமிட்டுக் கொண்டே போனேன். ஆனால் அவள் என்னை மன்னிக்காமல் அவள் தன்னையே அழித்துக் கொண்டாள். அவள் உண்மையிலேயே போற்றப் பட வேண்டியவள் தான். சார் என்னை நீங்களாவது மன்னிக்க மாட்டீர் களா?" என்று சற்றும் எதிர்பாராமல் ராமுவின் கால்களைப் பற்றிக் கொண்டான்.

இதை எதிர்பாராத ராமு அவனை தூக்கி ஆறுதல் சொன்னான். "நான் இன்று மன்னிக்கலாம். மறக்கலாம். ஆனால் அவள் மனதில் ஏற்பட்ட வெறுப்புக்கு என்றைக்காவது ஒரு நாள் இதற்கான பலனை அனுவிக்கத்தான் வேண்டும்" என்று தனது மனதிலிருந்து துன்பத்தை வெளிப்படுத்தினான்.

"சார் நான் வசந்திக்கு செய்த துரோகத்தை இப்போது அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறேன்" என்று தன் காலைத் தூக்கி காட்டினான். அப்போதுதான் ராமு கவனித்தான். ஒரு கால் கட்டைப் போட்டு கை இடுக்கில் சுமை தாங்கி கம்பு இருந்ததை அனுதாபத்தோடு பார்த்த ராமு "என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"சார் வசந்தியைத் தேடி வந்து விட்டுத் திரும்பும் போது என் மனதில் நிம்மதியே இல்லை. பல்வேறு யோசனையுடன் சென்று கொண்டிருந்தேன். வெலிக்கடை ரயில் கேட் ரயில் வருவதற்காக மூடி வைத்திருந்தார்கள். நான் அதன் பக்கவாட்டில் கடந்து செல்ல முற்பட்டு இரண்டடி எடுத்து வைத்திருப்பேன். அப்போது சிக்னல்

போட்டிருப்பான் போல் இருக்கும். பிரிந்திருந்த தண்டவாளம் ஒன்றாக இணைந்தது. அப்போது என் கால் கிடங்கில் மாட்டிக் கொண்டது.

பலமுறை முயற்சி செய்தேன். காலை எடுக்கமுடியவில்லை. பலமாக சத்தம் போட்டேன். ரெயில் வரும் சத்தத்தில் கேட் காவல் காரனுக்கு அது விளங்கவில்லை. ரயில் என்னை அண்மித்துவிட்டது. நான் அப்படியே சாய்ந்து கண்ணை இறுக்க மூடிக் கொண்டேன். அதன்பின் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் கண் விழித்த போது கொழும்பு பெரியாஸ்பத்திரி அவசரப்பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தது தெரிந்ததே. கால் அசைக்க முடியாதிருந்தது. இலேசாக நிமிர்ந்து காலைப் பார்த்தேன். அருகில் வந்து நர்ஸ் அசைய வேண்டாம் என்று சொன்னதோடு உங்கள் கால் துண்டிக்கப்பட்டுவிட்டது என்று சொன்ன போது மறுபடியும் நான் அதிர்ச்சியில் மயக்கம் போட்டு கட்டிலில் விழுந்து விட்டேன்.

மறுபடியும் கண் விழித்தபோது டாக்டர் ஊசி போடுவதற்குத் தயாராக இருந்தார். பக்கத்தில் நர்ஸ் நின்றிருந்தாள். ஊசி போட்டு விட்டு என்ன தட்டிக் கொடுத்தவர், ஆபத்தைக் கடந்து விட்டதாகச் சொன்னார். நர்ஸ் இரண்டு குளிகைகளைக் கொடுத்து விட்டு அமைதி யாகத் தூங்கும்படி சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

இரண்டு நாட்களுக்குப் பின் ஒருநாள் மாலை நான் கண் விழித்த போது என் தாயாரும் இரண்டு சகோதரர்களும் வேறு இருவரும் என்னருகில் மௌனமாக அழுது கொண்டிருந்தார்கள். நான் என் தாயாரை திரும்பி பார்த்த போது, அவள் என் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுதாள். அவளை சாந்தப்படுத்த போதும் போதுமென்றாகி விட்டது. அதன் பின்பு அம்மாவிடம் உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்டேன்.

அப்போது அங்கே மீண்டும் தோன்றிய நர்ஸ் குளிகைகளை கொடுத்துவிட்டு சிங்களத்தில் சொன்னாள். ஆச்சரியப்படத் தேவை யில்லை. உங்களை.சேர்க்கும் போது பேக் ஒன்றையும் ஒப்படைத் தார்கள். அதைத் திறந்து பார்த்தபோது உங்கள் வீட்டு விலாசம் இருந்தது. அந்த விலாசத்திற்கு நேற்றுக் காலைதான் தந்தி கொடுத் தோம் என்றாள்.

அதன்பின் ஆறு மாதங்களுக்குப் பின் துண்டிக்கப்பட்ட காலில் லெதர் கால் போட்டு கம்பு ஊன்றிக் கொண்டேதான் வெளியில் வந்தேன்" என்று தன் கதையை சொன்னவன், "எனக்கு வேண்டிய நண்பர் ஒருவர் இந்த வைத்தியசாலையில்தான் இருக்கிறார் என்று தகவல் கிடைத்தது. அவரை பார்ப்பதற்கு வந்தபோதுதான் எதிர்பாராமல் உங்களை சந்திக்க நேர்ந்தது" என்று சொல்லிமுடித்து விட்டு பக்கத்தில் கிடந்த பங்கில் அமர்ந்து விட்டான்.

பக்கத்தில் அமர்ந்திருந்த ராமு பழைய குரோதத்தையெல்லாம் மறந்துவிட்டு, தன் சொந்த சகோதரனைப் போல் அவனை அரவணைத்துக் கொண்டான். இந்த பாச உணர்வில் கட்டுண்ட அனந்தராமன், சிறு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான்.

ராமு அவனை ஆறுதல் படுத்தினான். அப்போது சுய உணர்வு பெற்ற அனந்தராமன் 32ம் நம்பர் வார்ட்டை நோக்கி புறப்பட்டான். உடன் ராமுவும் சென்றான். வார்ட்டுக்குள் நுழைந்ததும் நண்பரிடம் ராமுவைப் அறிமுகப்படுத்தினான். சிறிது நேரம் கதைத்தப் பின்பு நோயாளர் பார்வை நேரம் முடிந்து விட்டதென்பதை மணி சத்தம் அறிவித்தது. இருவரும் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தனர்.

இரண்டுபேரும் பல்வேறுபட்ட விஷயங்களைப் பேசிக்கொண்டே பஸ் நிலையத்தை வந்தடைந்தனர். அனந்தராமன் விடைபெற்றுக் கொள்ள முனைந்தபோது அதைத் தடுத்த ராமு, வீட்டுக்கு வருமாறு அழைத்தான். இல்லை இன்னொரு நாளைக்கு வருகிறேன் என்று விடைபெற்றான்.

அனந்தராமன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ராமு மனித வாழ்க்கையில் எப்படியெப்படியெல்லாமோ மாற்றங்கள் ஏற்படு கின்றன. இதற்குள் எத்தனை ஆட்டங்கள், திடகாத்திரமாக இருந்த இவனே இன்று ஊன்று கோல் துணையுடன் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இதைத்தான் பெரியோர்கள் கர்ம வினை என்று சொல்வார்கள். நாம் விதைத்ததுதான் விளையும். வினை விதைத்தவன் தினையை அறுக்க முடியாது. வினையைத் தான் அறுக்க முடியும். அதே போல அப்பாவி பெண்ணுக்குச் செய்த துரோகத்திற்கு கடவுள் கொடுத்த தண்டனையாக ஒரு காலை இழந்து நொண்டி என்ற பட்டத்தோடு வாழும் நிலைமை, மனிதனின் அகங்காரம் அல்லது ஆணவம் கடைசி யில் இப்படித்தான் முடிகிறது.

மனிதர்கள் இதையெல்லாம் சிந்தித்து நடந்தால் உலகில் வஞ்சனை ஏது. பொறாமை போட்டிதான் ஏது. சகலரும் சமத்துவம் சகோதரத்துவம் என்ற அன்பும் அமைதியும் நிறைந்த வாழ்க்கையை நடத்தலாம். யாருக்குப் புரியப் போகிறது. இதெல்லாம் பட்டால்தான் தெரியும் என்பது போல துன்பம் ஏற்பட்ட பின்புதான் நடந்ததை நினைத்துக் கவலைப்படுவான் மனிதன். இது மனித குலத்தின் இயற்கை நோயாகும்.

ராமு போக வேண்டிய பஸ் வந்ததும் சென்று அமர்ந்து கொண்டான். பஸ்ஸும் புறப்பட்டது. ராமு சிந்தனையில் ஆழ்ந்தான். 'தொழிலாளர்கள் எல்லாம் நல்லவர்கள். அவர்கள் மத்தியிலும்

சடையனைப் போன்ற போக்கிரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். பாவம் இப்போது நடந்ததை எண்ணி வருத்தப்படுகிறான். நாளைக்கு இதெல்லாம் மறந்து போய்விடுவான்.

அன்று சிவகாமி கைம் பெண்ணாக வந்த போது, இந்த சடையன் தம்பி சிவகாமியை கைவிடாதீங்க, என்ன இருந்தாலும் அவ உங்க மாமன் பொண்ணுதானே அவளுக்கு இனி யாருமே இல்ல. எல்லாமே நீங்தான் என்று சொன்னான். அந்த சடையனா இன்று இப்படி பேசினான். இதை நினைக்கும்போது ராமுவுக்கு அவன் மேல் கோபம் தான் வந்தது.

இத்தனை வருடமாக நாம் இருவரும் ஒரே வீட்டில் வாழ்ந்தாலும் கூட பழையதை நினைத்து அசை போட்டதே கிடையாது. அப்படியான துறவி வாழ்க்கையை நடத்தி வருகிறோம். வசந்தியின் மரணத்தின் போது அவள் விடுத்த வேண்டுகோளினால் தான் இந்தக் காரியத்தை செய்ய வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. இது மட்டுமல்ல உறவினர்கள் கூட இதை வரவேற்றார்கள். ஏன் என்னைய நம்பி யிருக்கும் அருண் கூட இந்த யோசனையை கௌரவமாக எடுத்துக் கொண்டான்.

இந்த நிலையில் சடையன் இப்படியொரு பிரச்சினையை எற்படுத்தி விட்டான். சிவகாமி என்ன நினைக்கிறாளோ.' இந்த யோசனையில் ஆழ்ந்திருந்த ராமு பஸ் ஒரு குலுக்களோடு நின்ற போதுதான் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டதை உணர்ந்து சட்டென எழுந்து இறங்கினான்.

நேராக வீட்டுக்குச் சென்றவன் யாரிடமும் பேசாமல் உடைகளை மாற்றிக் கொண்டு தன் அறையில் போய் அமர்ந்து கொண்டு எழுத்துப் புத்தகத்தைப் புரட்டினான். அது பலமுறை படித்த புத்தகம். பிரபல எழுத்தாளர் அகிலன் எழுதிய பாவை விளக்கு என்ற புத்தகம் தான் அது அதில் வந்த உமா போலவே இந்த வசந்தியும் நடந்து கொண்டாளே என்று நினைத்து கண்ணை மூடியவாறு அமர்ந்திருந்தான்.

தேநீர் கோப்பையோடு அவன் அருகில் வந்த சிவகாமி "அத்தான்" என அழைத்தாள். மறுமொழி இல்லாததால் சிந்தனையில் இருந்த ராமுவைத் தட்டினாள். திடுக்கிட்டு எழுந்தவன் கையிலிருந்து புத்தகத்தை கீழே நழுவவிட்டான். தேநீரை மேசை மேல் வைத்த சிவகாமி குனிந்து புத்தகத்தை எடுத்துப் புரட்டினாள். "இப்ப ஏன் இந்த யோசனை" என்று புத்தகத்தை மூடி மேசை மேல் வைத்துவிட்டு ஏறிட்டுப் பார்த்தாள்.

சிவகாமியைப் பார்த்துக் கொண்டிருந்த ராமு ஒரு புன்னகை யொன்றை உதிர்த்துவிட்டு "சிவகாமி இன்று நான் மறக்க முடியாத ஒரு மனிதனைச் சந்தித்தேன்" என்று பீடிகைப் போட்டு பேச்சை ஆரம்பித்தான்.

"யார் அத்தான் அப்படிப்பட்ட மறக்க முடியாத மனிதன்" என்று கேட்டாள் சிவகாமி.

"நம்ம வசந்திக்கு தீங்கு செய்தானே அனந்தராமன். அவனை இன்று நான் சந்தித்தேன். தனி மனிதனான இல்ல. இன்று ஊன்று கோலின் துணையுடன் சந்தித்தேன். எனக்குப் பரிதாபமாக இருந்தது" என்றான்.

"ம்... உங்களுக்கு யாரை கண்டால்ததான் பரிதாபமாக இருக்காது. ஒரு குடும்பத்தையே நாசம் செய்தவனை பாவம், பரிதாபம் என்று சொல்கிறீர்களே."

"அப்படியில்லம்மா. இப்ப அவன் உண்மையை உணர்ந்து விட்டான். இப்போது அதுக்கான தண்டனையை அவன் அனுபவித்துக் கொண்டிருக்கிறான். என்னைக் கண்டதும் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான்."

"உடனே மன்னித்து ஆசீர்வாதம் கூறியிருப்பீர்களே. உங்களைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும் அத்தான். நீங்கள் தான் சொல்லுவிங்க. ஏதோ ஒரு சினிமா படத்துல ராதா சொன்னதா. மாடக் கண்டால் தூக்கிவிடு. மனிசனைக் கண்டால் மிதித்து விடு என்று. அது போல அவனோடு உங்களுக்கு என்ன பேச்சு கிடக்கு."

"கோபப்படாம நடந்தத கேள்" என்று ராமு சொல்ல அதைக் கேட்க விரும்பாமல் சிவகாமி வெளியேற எதிரே வந்த அருண், அம்மாவின் கோபத்திற்கு காரணம் புரியாமல் "ஏன் அம்மா என்ன நடந்தது. ஏன் கோபமாக இருக்கிறீர்கள்?" என்று ஆதரவாகக் கேட்டான்.

அருணை எதிர்பார்க்காத சிவகாமி அதிர்ச்சியடைந்ததோடு "அருண் உங்கப்பா இன்று யாரோடு பேசிக் கொண்டிருந்து விட்டு வந்திருக்கிறார் என்பதை நீயே கேட்டு தெரிந்து கொள். வர வர இவருக்கு யார் எதிரி யார் நண்பன் என்று தெரியாமல் போய் விட்டது."

என்ன நடந்தது என்பதை கேட்க நினைத்த அருண், ராமுவின் கை சாடையைக் கண்டு வாய் திறக்காமல் அமைதியாகிவிட்டான்.

"அப்பா அம்மா என்னென்னமோ சொல்லி கோபமாகப் போகுது. நீங்கள் என்னை அமைதிப்படுத்துகிறீர்கள். யாரப்பா அவன்?" என்று கேட்டான் அருண்.

"அருண் அவன் நமக்கு வேண்டியவனும் இல்ல - வேண்டாத வனும் இல்ல. இடையில் வந்த வில்லன். இப்போ அடிப்பட்டு கிடக்கும்போது நாமும் எட்டி உதைக்கலாமா? அதனால்தான் நான் கொஞ்சம் இரக்கம் காட்டிப் பேசினேன். அதை உங்க அம்மாவிடம் சொன்னேன், அதற்குத்தான் இத்தனை கோபமும், ஆத்திரமும் உங்கம்மாவுக்கு" என்றான் ராமு.

"காரணம் இல்லாம அம்மா கோபிக்க மாட்டாங்க" என்று சொல்லிக்கொண்டே சிவகாமியை, நோக்கி. சென்று நடந்ததை விசாரித்தபோது அருணே அதிர்ந்து விட்டான்.

# 41

மிருகத் தன்மையோடு உறுமிக் கொண்டிருந்த மனிதன் ஒரு நாள் தன் எண்ணத்தை நிறைவேற்றி பழி தீர்த்துக் கொண்டான். அதுவரையில் புரியாத ஒன்று அன்றுதான் அவன் புரிந்து கெண்டான். அகங்காரம் அடங்கியது. மிருகத்தன்மை மிருதுவானது.

தவறு செய்த மனிதன் உண்மையை உணர்ந்து நல்லவனாக மாறும்போது, அடிபட்டவன் துன்பப்பட்டவன், அதை அனுபவித்தவன் என்ற வகையில் யாரும் அவனை நல்லவனாக ஏற்றுக்கொள்வதில்லை. இது ஏற்கனவே பட்ட சூடாகும்.

அத்தகைய பழி தீர்க்கும் குணத்தோடு நடந்து கொண்ட ஒரு மனிதனை ஒருவன் முழு மனதோடு ஏற்றுக் கொள்கிறான் என்றால் அதற்கு அடிமைப்பட்டு விட்டான் என்பதல்ல அர்த்தம், செய்த தவறுக்கு கடவுளால் கிடைத்த தண்டனையோடு அவனை ஏற்றுக் கொண்ட மனித இதயம் நிறைந்த ஒருவனால் மாத்திரம் செய்யக் கூடிய காரியமாகும்.

அனந்தராமன் எத்தகைய கொடூர செயல்களை செய்திருந்தாலும் , உண்மையை உணர்ந்து மனதில் மன்னிப்பு என்ற வார்த்தையோடு இறங்கி வந்தவனுக்கு கடவுளால் தண்டனை கிடைத்துவிட்டது என்பதால் அவனுக்கு வேறு தண்டனையே வேண்டியதில்லை. இதை ராமுவால் மாத்திரமே ஏற்றுக் கொள்ள முடியும்.

"அம்மா சொல்வதெல்லாம் உண்மையா அப்பா" என்று கேட்டுக் கொண்டே அருண் ராமுவை நெருங்கினான்.

அமைதியாக இருந்த ராமு, "அம்மா என்ன சொன்னாங்க அருண்" அவனை திருப்பிக் கேட்டான். அருண் விசயத்தை சொல்ல முழு வதையும் கேட்ட ராமு, "அருண் சில நேரங்களில் சில விசயங்களை மனிதர்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி ஜீரணித்துக் கொள்ள வேண்டுமானால், அவன் பொறுமைசாலியாகவும் நிதானம் தவறாத வனாகவும் இருக்க வேண்டும்.

அனந்தராமன் செய்தது யாருமே மன்னிக்க முடியாத ஒரு காரியம் தான். அதுவும் அந்த விசய்த்தில் நான் நேரடியாகப் பாதிக்கப்பட்டவன்.

அப்படியென்றால் நானே இதை மன்னித்து ஏற்றுக் கொண்டுள்ளேன். இதை விட பெரிதாக என்னால் ஒன்றுமே செய்துவிட முடியாது.

மகாத்மா காந்தி அகிம்சை போராட்டத்தின் மூலமாக, முப்பது கோடி மக்களுக்கு சுதந்திரம் பெற்று கொடுத்தார் என்றால் அவர் எத்தனை பொறுமையோடும், நிதானத்தோடும், மக்களை வழி நடத்தி யிருக்க வேண்டும். அப்படிப்பட்ட அகிம்சாமூர்த்தியான மகாத்மாக காந்தியும் நாதுராம்கோட்சே என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதை நாம் யாருமே மறந்துவிட முடியாது. அப்போதுகூட அவர் சொன்னார் என்னைக் கொன்றவனை யாரும் ஒன்றும் செய்ய வேண்டாமென்று.

ஆகவே இந்த ராமு பெரிதாக ஒன்றுமே செய்யவில்லை. கடவுள் தண்டனையால் ஒரு காலை இழந்து ஊன்று கோலோடு வந்து மன்னிப்பு கேட்கும்போது எப்படிப்பட்ட கல் மனதுக்காரனுக்கும் இரக்கம் ஏற்படத்தான் செய்யும்."

ராமு சொன்னதைக் கவனமாகக் கேட்ட அருண், அப்ப சொன்ன தில் எத்தனை உண்மைகள் பொதிந்திருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்த்தபோது உணர்ந்து கொண்டு மனம் தெளிவடைந்தான்.

"அப்பா நான் ஆத்திரத்தில் ஏதாவது பேசியிருந்தால் என்னை மன்னிச்சிடுக" என்றான் அருண்.

"மன்னிப்பு கேட்கும் போதே அவன் மன்னிக்கப்பட்டவனாகிறான். ஆக இங்கு ஒன்றுமே நடக்கவில்லை. நீயும் மன்னிப்பு கேட்க வேண்டிய தில்லை" என்றான் ராமு.

உண்மையும், சத்தியமும் உலகில் உயிரோடு இருக்கும்வரை மனிதர்கள் எது செய்தாலும் அதற்கு தண்டனையும் பரிகாரமும் உண்டு. அந்தப் பெருந்தன்மையோடுதான் அனந்தராமன் தான் செய்த தவறையெல்லாம் மறந்து அவனது நிலை கண்டு இரக்கம் கொண்டு அரவணைத்துக் கொண்டான்.

இவர்களின் சம்பாஷணையை கதவுக்குப் பின்னாலிருந்து கேட்டுக் கொண்டிருந்த சிவகாமி உண்மையை உணர்ந்து அத்தான் எவ்வளவு உயர்வானவர் என்பதை தெரிந்து கொண்டு ஒன்றுமே நடவாததுபோல் கதவைத்தட்டி உசார்படுத்திவிட்டு "வாங்க இரண்டு பேரும் சாப்பிட" என அழைத்தாள்.

"ஆமா அருண் மணி எட்டாகிவிட்டது. நீ சாப்பிடு. நான் கோவில்வரையும் போயிட்டு வருகிறேன். இன்று தோட்டக் கமிட்டிக் கூடி பிரச்சினைகள் பற்றி பேசப் போறாங்க. என்னையும் அழைத் திருக்காங்க" என்று புறப்பட்டான் ராமு.

ராமு கோவிலுக்குப் போகும்போது அங்கே கமிட்டிகள் நிறைந் திருந்தனர். ராமுவைக் கண்டதும் எழுந்திருந்து வரவேற்றனர் கூட்டத் திற்கு மையமான இடத்தில் அமர்ந்த ராமு எல்லோரையும் ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு "என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"சார் புதிய துரை தோட்டத்திற்கு வந்து பத்து மாதமாகிறது. பல பிரச்சினைகளைத் தூண்டி விட்டிருக்கிறார். தாய்மார்கள் குழந்தை களுக்குப் பால் கொடுக்கப் போகணுமுன்னு கேட்டால், 'அப்படி போக முடியாது, என்ன கேட்டா புள்ளா பெத்த' அப்பிடின்னு கேட்கிறார். சுகமில்லனு லீவு கேட்டா, சம்பளமில்லாத லீவா கழித்து விடுவார். எல்லாத்தையும் விட முக்கியமா மலையில எடுக்கும் கொழுந்தை ஸ்டோருக்கு கொண்டு வந்து நாங்களே நிறுத்து அதை சாக்கில் போட்டு நிரப்பிவிட வேண்டும். தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்கள் என்ற வித்தியாசம் கிடையாது. பல நாள் தோட்டக் கமிட்டி போராடியும் இதை தோட்டத்துரை காதில் போட்டுக் கொள்ளவில்லை. புதிய திட்டத்தின்படி, வழமைபோல தோட்டத்திலுள்ள குமர் பெண்கள் இந்த வேலையை செய்வார்கள். இதற்கு நிர்வாகம் எதிர்ப்பு காட்டினா அதன் பின் போராட்டத்தை தொடங்குவது என்று பேசி தீர்த்துக் கொண்டோம்" என்று முழு விபரத்தையும் ஒரு தொழிலாளி ராமுவிடம் தெரிவித்தான்.

இதையெல்லாம் புரிந்துகொண்ட ராமுவும், ஏனையோரும் கூட்டத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டனர்.

மறுநாள் தோட்டக் கமிட்டிகளால் நடத்தப்பட்ட கூட்டத்தை அறிந்து தோட்ட நிர்வாகம் சும்மா இருக்குமா என்ன? மாற்று நடவடிக்கைகளை மேற் கொண்டது. வரிசைப்படி குமரியோ, வயது போனவர்களோ, கர்ப்பிணிப் பெண்களோ என்று பாராமல் வேலை செய்ய வேண்டுமென வற்புறுத்தியது.

மாதர் கமிட்டிகளும் கொஞ்சமும் விட்டுக் கொடுக்கவில்லை. பகல் மறைந்து மாலை ஆகிவிட்டது. நிர்வாகமும் பிடியைத் தளர விடாமல், இன்று மட்டும் நாங்கள் சொன்னபடி செய்யுங்கள். நாளை முதல் மாற்றிக் கொள்வோம் என்றது. இதை மாதர் கமிட்டிகள் நம்பத் தயாராக இல்லை. போராட்டமும் வலுவடைந்தது.

மாலை ஆறு மணியாகி விட்டது. தொழிற்சங்கப் பிரதி நிதிகளோடு ராமு காரில் வந்து இறங்கினான். நிர்வாகத்துடன் பேச அனுமதி கேட்கப்பட்டபோது, அது புறக்கணிக்கப்பட்டது. போராட்டம் வலுவடைந்தது. தொழிற்சங்கப் பிரதிநிதி போராட்டம் நடத்தும் பெண் களிடம் தமது அடுத்த நடவடிக்கையை விபரித்தார்.

திரண்டிருந்த பெண்கள் மாற்றுத் திட்டப்படி தேயிலை தொழிற் சாலைக்கருகில் கூடையில் இருக்கும் கொழுந்துகளை புல் தரையில் போட்டு விட்டு கூடையுடன் வீட்டுக்குச் சென்று விட்டார்கள்.

மறு நாள் கொழுந்தெடுப்பது அதை ஸ்டோரில் கொண்டு போய் கொட்டுவது அதன் பின் கொழுந்துகளை வாடப்போட்டு தேயிலை தூள் தயாரிக்கப்பட்டது. இந்த புதுமையான போராட்டத்தை உடைக்க முடியாதுபோய் விட்டது. ஒரு வாரத்திற்கு மேலாக தடுமாறிய நிர்வாகம் சமரச பேச்சு வார்த்தைக்கு வந்தது. பெண்களின் கோரிக்கை வெற்றி பெற்றது. அவர்கள் போராட்டம் கைவிடப்பட்டது.

போராட்டத்திற்கு தலைமையேற்றது ராமுதான் என்று தோட்ட நிர்வாகம் உறுதியெடுத்தது. அவனை வெளியேற்ற பல நடவடிக் கைகளைக் கையாள ஆரம்பித்தது. அமைதியாக எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த ராமு தொழிலாளர்களை மேலும் மேலும் உற்சாகப்படுத்தி வந்தான்.

தொழிலாளர்கள் தான் போராட்டத்தை முன்வைத்தார்கள் என்ற உண்மை மூடி மறைக்கப்பட்டு ராமுவைப் பழி தீர்க்க வேண்டுமென்ற குறிக்கோளாடு நிர்வாகம் நடந்து கொண்டது. இதனால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகத் தொடங்கின.

ராமு தொழிலாளர்களை போராட்டத்தில் இறங்காமல் அமைதி யாக நடந்து கொள்ளுமாறு அறிவுரை வழங்கினான்.

ஒரு சமயத்தில் அருண்கூட "அப்பா நீங்கள் தோட்டத்திற்கு வர வேண்டாம். உங்களுக்கு ஒரு ஆபத்தென்றால் எங்களால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது" என்று யேசானை சொன்னதோடு ராமுவைக் காரியாலயத்தில் தங்கியிருக்குமாறு சொன்னதை ஏற்று ராமு காரியாலயத்தில் தங்கினான். எங்கே அத்தானுக்கு ஆபத்து ஏதும் வந்து விடுமோ என்ற பயத்தால் சிவகாமிதான் அருண் மூலமாக இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தாள்.

இரண்டு வாரத்திற்குப் பின்பு ஒருநாள் தோட்டத்திற்கு வந்த ராமுவை கிராமப்புற காடையர்கள் தாக்கி படுகாயத்தை ஏற்படுத்திய தோடு அவனை நடுப்பாதையில் போட்டுவிட்டு சென்று விட்டார்கள்.

மறுநாள் நடு பாதையில் கிடக்கும் ராமுவைக் கண்ட பாடசாலைப் பிள்ளைகள் ராமுவின் வீட்டுக்கு வந்து தாக்கல் சொல்லவே அருணும் சிவகாமியும் பதறியடித்துக் கொண்டு ஓடி தொழிலாளர்களின் உதவி யோடு ராமுவை வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வாகனம் கேட்டபோது தோட்டத்து ஆள் இல்லை யென்று நிர்வாகம் கட்டித் கழித்துவிட்டது.

தோட்டத்துரை மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண் டிருந்தார். நாளுக்கு நாள் தொழிலாளர்கள் மத்தியில் உணர்ச்சிகள் பெருக்கெடுக்கத் தொடங்கின.

இறுதியாக தொழிற்சங்கம் மூலமாக இப்பிரச்சினை தொழில் இலாகாவுக்கு பாரப்படுத்தப்பட்டது. இரு சாராருக்கு மிடையே நடந்த பேச்சு வார்த்தையில் ஒரு சமரசம் ஏற்படுத்த கமிஷனர் முடிவெடுத்தார்.

அந்த முடிவு ராமு தோட்டப் பிரச்சினைகளில் தலையிடக் கூடாது என்ற முடிவாகும். இதைத் தொழிளர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. ஆனால் தோட்ட நிர்வாகம் பிடிவாதமாக இருந்தது. இறுதி யாக தலையிட்ட கமிஷனர் தற்காலிகமாக இதை ஏற்று நடப்பது என்று யோசனை கூறினார்.

இதை சற்று நேரம் யோசித்த ராமு கமிஷனர் தோட்டப் பிரச்சினையில்தான் தலையிட வேண்டாமெனக் கூறினாரே அன்றி தொழிலாளர்களைச் சந்திக்க வேண்டாமென்று கூறவில்லையே அதனால் எதுவும் நட்டமில்லை என்பதை உணர்ந்த ராமு தொழிலாளர் நன்மை கருதியும் குடும்ப நன்மை கருதியும் கமிஷனரின் முடிவை ஏற்பதென முடிவு செய்தான். இதைத் தொழிலாளர்களும் அரை மனதோடு ஏற்றுக் கொண்டார்கள்.

இப் பேச்சுவார்தைக்கு பின்பு தோட்டத்தில் சிறிது அமைதி ஏற்பட்டது. வேலைகள் வழமை போல் நடைபெற்றன. ஆனால் நிர்வாகம் எப்போதும் போல் தொழிலாளர்களுக்கு சிரமத்தையும், கஷ்டத்தையும் கொடுத்து அவர்களை அடிமைப்படுத்தியே வந்தது.

தொழிலாளர்கள் அமைதியாக வாழ வேண்டுமென விருப்பப் பட்டாலும், நிர்வாகம் அவர்களின் அமைதியைக் கெடுப்பதிலேயே அக்கறை கொண்டு செயல்பட்டு வந்தது.

ஒரு நாள் கொழுந்துக் காட்டில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் பதினைந்து நிமிஷம் சுணங்கி வந்தார் என்பதைக் காரணம் காட்டி வேலை கொடுக்க மறுத்தது நிர்வாகம். அந்தப் பெண் எவ்வளவோ கேட்டும் தோட்டத் துரை மறுத்துவிட்டார்.

அந்தப் பெண் வேறு வழியில்லாமல் வீடு நோக்கிக் கண்ணீருடன் சென்றாள். எதிரே மாரியம்மன் கோவில் இருந்தது. போன போக்கில் கூடையை இறக்கி வைத்துவிட்டு 'அம்மா தாயே நீதான் இந்த அநியாயத்தைக் கேட்கணும். நான் ஏழை. என்னால் ஒன்றுமே செய்ய முடியாது. நீதான் புண்ணியாவனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்து என் போன்ற ஏழைகளைக் காப்பாத்தனும் தாயே' என்று வேண்டிக் கொண்டு வீட்டுக்குப் போனாள்.

இப்பிரச்சினை தோட்டக் கமிட்டித் தலைவரிடம் கொண்டு செல்லப்பட்டது. உடனடியாக அன்று மாலை தலைவர் தோட்ட ஆபிசில் துரையைச் சந்தித்து இதற்கு நியாயம் கேட்டார்.

"துரை அவர்களே இந்த பெண்ணுக்கு இது ஏழாவது மாசம். அதனால்தான் அவள் கஷ்டத்தோடு வந்தாள். அதுதான் கொஞ்சம் சுணங்கி விட்டது. இந்த மாதிரி ஞாயமில்லாமல் ஆளுகள வீட்டுக்கு விரட்டினால் அதனால் பிரச்சினை அதிகமாகலாம்" என்றார்.

"அந்தக் கதையெல்லாம் இப்போ பேச வேண்டாம். உனக்குத் தான் பெரிய தலைவர் இருக்கார்தானே. அதுதான் ராமு. அவன் கிட்டச் சொன்னா வேலை தருவான். போய் சொல்லு" என்று கோபமாக பேசி விட்டு ஆபிஸ் ஜன்னலை நாடினான் துரை.

ஆத்திரமடைந்த தலைவர் ஆபிசை விட்டு இறங்கி நேரே வீட்டுக் குப் போய் வெளித் திண்ணையில் அமர்ந்தவர், தன் மகன் கணேசனை விட்டு கமிட்டி உறுப்பினர்களை வீட்டுக்கு அழைத்தார்.

எல்லோரும் அவசர அவசரமாக என்னமோ ஏதோவென்று ஒருவர் பின் ஒருவராக வந்தமர்ந்தார்கள்.

தலைவர் பெரியசாமி தோட்டக் காரியாலயத்தில் நடந்ததை எல்லோருக்கும் விபரித்து விட்டு, "துரை மிகவும் அடாவடித்தனமாக நடந்து கொள்கிறார். இதை சும்மா விடக்கூடாது. உடனடியாக சங்க ஆபிசுக்கு புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யணும்" என்று கூறினார்.

"இதை இப்படி விட்ட சரி வராது. நாளைக்கே வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஆட்களை இறக்க வேண்டும். அப்பதான் துரையின் கொட்டத்தை அடக்கலாம்" என்று உப தலைவன் ஆக்ரோஷமாகச் சத்தமிட்டான்.

எல்லோரையும் அமைதிப்படுத்திய கமிட்டித் தலைவர் கந்தசாமி "உடனடியாக வேலை நிறுத்தம் செய்யக் கூடாது. கொஞ்சம் அவ காசம் கொடுப்போம். ஜனங்களுக்கும் திட்டத்தை தெளிவு படுத்த வேண்டும். அதனால் தலைவர் சொன்னபடி முதலில் சங்கம் மூலமாக நடவடிக்கை எடுப்போம், பின்பு வேலை நிறுத்தம் பற்றி யோசிப்போம்" என்றார்.

இதை எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டார்கள். அதன்படி மறுநாள் சங்கக் காரியாலயத்திற்குச் சென்று புகார் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

தங்கம்மாவுக்கு நடந்தது நாளைக்கு எங்களுக்கும் நடக்கலாம் என்று தோட்டப் பெண்கள் குமுறினார்கள். எல்லோரையும் அமைதி யாக இருக்குமாறு கேட்டுக் கொண்டு காலையில் நேரத்தோடு தொழிற்

சங்கக் காரியாலயம் நோக்கி சிந்தனையோடு வீறு நடைபோட்டான் பெரியசாமி.

பெரியசாமி காரியாலயத்தை அடைந்த போது அங்கே பிரதிநிதியும், ராமுவும் இருந்தார்கள். பெரியசாமியைக் கண்டதும் என்னமோ ஏதோவென்று பதறி 'என்ன விஷயம்?' என்று இரண்டு பேருமே கேட்டுவிட்டனர்.

வாங்கில் அமைதியா அமர்ந்த பெரியசாமி முதல் நாள் நடந்தயெல்லாம் தெளிவாக விளங்கப்படுத்தினான். அதை செவிமடுத்த ராமு, கண்ணும் மூக்கும் சிவக்க அவனை இனி சும்மா விடக் கூடாது என்று குறுக்கும் நெடுக்குமாக கையைப் பின்னால் கட்டிக் கொண்டு நடை போட்டான்.

முழு விபரத்தையும் எடுத்த பிரதிநிதி உடனடியாக தோட்டத் துரைக்கும், அப்பிரதேச துரைமார் சங்கப் பிரதிநிதிகளுக்கும் கடிதம் எழுதினார். பொறுமையில்லாது நடமாடிக் கொண்டிருந்த ராமு தனது நடையை நிறுத்தி விட்டு அவனுடைய இருக்கையில் அமர்ந்தான். பெரியசாமி தலைவரை நிமிர்ந்து பார்த்து வீட்டில் உள்ளவர்களின் சுகத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

இறுதியாக புறப்பட ஆயத்தமான பெரியசாமியிடம் "பெரியசாமி அண்ணே நீங்க தைரியமா இருங்க. நாங்க அவனுக்குப் பாடம் புகட்டாம விடமாட்டோம். ஆளுக்கும் சொல்லுங்க" என்ற ராமு "சரி வாங்க நானும் பஸ் நிலையம் வரைக்கும் வர்றேன்" என்று கூறி காரியலயத்தை விட்டு வெளியில் காலெடுத்து வைத்தபோது, எதிரே வந்தவரைக் கண்டதும் ஆச்சரியப்பட்டு "வாங்க வாங்க" என்று வரவேற்றான்.

# 42

தோட்டங்களில் அநியாயம், அடிமைத்தனம் குடி கொண்டிருந்தது. அங்கு மக்கள் வாழ முடியாது என்று கிட்டத்தட்ட 150 ஆண்டுகளாக மக்கள் சொல்லியும், பேசியும் வந்துள்ளார்கள். ஆனால் அன்றைய தோட்ட நிலையில் இன்றுவரை எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

தோட்டங்கள் தனியாருக்கும் கம்பெனிகளுக்கும் சொந்தமாக இருந்த அக் காலங்களிலும் அரசாங்கத்திற்கு சொந்தமான இக்காலத்திலும் தோட்ட மக்களின் நிலைமை மிகவும் மோசமான

நிலைக்குப் பின் தள்ளப்பட்டு தொழிலாளர்கள் துன்பமும், துயரமும், கொண்ட மனித உயிர்களாக நடமாடுகின்றனர்.

இன்னும் ஒரு நூற்றாண்டு காலம் சென்றாலும் இம் மக்களின் அடிமை நிலை போக்கப்படுவதற்கான அறிகுறிகள் இல்லை. ஆனால் எங்கோ ஓர் மூலையில் விடுதலை கீதம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த கீதம் மலையகத்தில் ஓங்கி ஒலிக்கும் போதுதான் இந்த மக்களின் நிலையில் மாற்றம் தென்படும்.

ஆமாம் இந்த உறுதியோடுதான் தொழிற்சங்க வேலைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு துறவியாக செயல்பட்டு வருகிறான், ராமு. அவன் வாழ்க்கையில் சந்தித்ததெல்லாம் துன்பம், போராட்டம், வறுமை நிறைந்த வழ்க்கையைத்தான். இதை அகற்றப் புறப்பட்ட பல பேரில் ராமு தியாக உருவாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறான்.

அவன் சந்தித்த போராட்டங்கள்தான் எத்தனை, வன் செயல்கள் எத்தனை, உரிமைகேட்டு நடத்திய வேலை நிறுத்தப் போராட்டங்கள் தான் எத்தனை எத்தனை. அத்தனைக்கும் வெந்தணலில் புடம் போட்ட தங்கமென மக்களால் புகழப்பட்டான் ராமு.

ராமுவைக் கண்ட முனுசாமி ஓடி வந்து அவனைக் கட்டி பிடித்துக் கொண்டு ஆசை தீர அவன் கரங்களைப் பற்றி முத்த மிட்டான். எத்தனை வருடங்கள் நாம் பழகினோம். எப்படியோ பல வருடம் நாம் சந்திக்காமல் போய் விட்டோமே என்ற ஆதங்கத்தில் ஆனந்த கண்ணீர் விட்டான் ராமு.

முனுசாமியை அரவணைத்த ராமு காரியாலயத்திற்குள் அழைத்துச் சென்று அமர வைத்து சுகஜேமம் விசாரித்தான். தன் வாழ் நாட்களில் தனக்கேற்பட்ட் துன்பங்களையெல்லாம் ஒருமுறை சுருக்கமாக சொல்லி கொண்டுபோன ராமுவின் கண்களில் கண்ணீர் உடைப்பெடுத்தது.

இந்த இரு நண்பர்களின் பிரவாற்றாமையை உணர்ந்த பிரதிநிதி, இரண்டு கப் தேநீருக்கு ஓடர் கொடுத்து விட்டு அவர்களின் அருகில் வந்து ஆறுதலாக "என்ன இரண்டு பேரும் பெண்களைப் போல இப்படி கண்ணீர் வடிக்கிறீர்கள்" என்றார்.

அப்போதுதான் சுய நினைவுக்கு வந்த ராமு முனுசாமி இரு வரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தேநீரை அருந்தினர்.

"முனுசாமி சார் உங்களைக் கண்டவுடன் இன்று என் வாழ்க் கையில் வந்து போன தியாக மலர் வசந்தியின் ஞாபகம் என்னை எட்டிப் பார்த்தது. இதுதான் என்னையும் மீறி கண்களில் கண்ணீர் உடைப் பெடுத்து விட்டது."

"என்ன சார் இப்போது எங்களையெல்லாம் மறந்து விட்டீர்களா, அல்லது இந்த முனுசாமி பென்சன்காரன் என்று ஒதுக்கி விட்டீர்களா?" என்று முனுசாமி ராமுவைப் பார்த்துக் கேட்டான்.

"இல்லை இல்லை சார். என் நிலைமையில் நான் என் சுய தேவை களை நினைத்துப் பார்க்கவே முடிவதில்லை. பல்வேறுபட்ட சூழ்நிலைகள் இப்போது உருவாகிவிட்டது. அத்தோடு இப்பகுதியில் தொழிலாளர்கள் மத்தியில் போராட்டம், கடமை நிமித்தம் செயல் படுகிறேனே தவிர எவரையும் நான் மறக்கவே இல்லை" என்ற ராமு, "மனைவி பிள்ளைகள் எல்லோரும் சுகமாக இருக்கிறார்களா பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?" என்று கேட்டுவிட்டு முனுசாமியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

"சார் உங்கள் புண்ணியத்துல ஒரு குறையும் இல்ல. பெரியவன் படித்த கையோடு சுப்பவைசர் வேலையில் சேர்ந்து விட்டான். இளை யவன் படித்துவிட்டு ஆசிரியர் தொழிலுக்கு மனுப் போட்டிருக்கிறான். மனைவி அஞ்சலை இன்னும் கொழுந் தெடுக்கிறாள்" என்ற முனு சாமி "அது சரி சார். எப்படி உங்க குடும்பம். தங்கச்சி சிவகாமி பையன் அருண் எல்லாம் சுகமா இருக்காங்களா? வசந்தியின் ஆசையை நிறைவேற்றினீர்களா?" என்று அடுக்கடுக்காக கேள்வி களைக் கேட்டு கொண்டே போனார்.

ராமு எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான். "என்ன சார் பேசாம இருக்கீங்க. ஏன் சார் வசந்தியின் ஆசையை நிறைவேற்ற முடியாம யாரும் குறுக்கே இருக்காங்களா. இல்ல தங்கச்சி சிவகாமி உங்கள ஏற்க மறுக்கிறாளா? என்ன விஷயம். ஏன் சார் காலத்தை கடத்திக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் முனுசாமி.

"சார் பொது வேலையில் தன்னை முழுமையா ஈடுபடுத்திக் கொண்ட ஒருவன் தன்னை பற்றியோ தன் குடும்ப வாழ்க்கையைப் பற்றியோ சிந்திப்பதே இல்லை. அதற்கு அவனுக்கு நேரமே கிடைப்ப தில்லை" என்றவன், "அதெல்லாம் இருக்கட்டும். நீங்க எங்கே இப்படி திடீரென்று புறப்பட்டு வந்தீங்க?" என்று கதையை திசை திருப்பினான் ராமு.

"நான் ஒரு உறவினர் வீட்டு சடங்கிற்கு வரவேண்டி இருந்தது. அதோடதா உங்களையும் எப்படியும் சந்திக்க வேண்டுமென நினைத்து காலையிலேயே புறப்பட்டு வந்தேன். என் அதிஷ்டம் நீங்க இருந்தீங்க" என்றான் முனுசாமி.

"முனுசாமி சார் உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? நான் இருக்கும் தோட்டத்தில் ஒரு அடங்காப் பிடாரி துரை வந்திருக்கான். அவன் தொழிலாளர்களை அடக்கி ஆளுகிறான். அவர்கள் எதிர்த்துப் போராட்டம் செய்தால் அதற்கு நான்தான் காரணம் என்று இப்போது

தோட்டத்திற்குள்ளேயே என்னை வரவேண்டாமென்று சொல்லிவிட்டான். நான் கொஞ்ச நாளா. காரியாலயத்தில் தான் தங்குறன். அருண் ஒவ்வொரு நாளும் என்ன சந்திச்சிட்டுதான் போகிறான். இந்த ஆண்டோடு அவனுக்கும் படிப்பு முடிந்து விடும். அவனையும் ஒரு நல்ல வழியில் சேர்த்து விட்டால் எனக்கு நிம்மதி" என்றான் ராமு.

"என்ன சார் உங்களுக்கே இந்த நிலைமையா, பாவிபயல் துரை யார்? அவன் பெயர் என்ன?" என்று கேட்டார் முனுசாமி.

"அவன் பெயர் எப்பாவெல. முன்பு மணிக்கட்டி தோட்டத்தில் இருந்திருக்கான்" என்றான் ராமு.

"அடேடே அவனா. அவன் தான் படு மோசமான ஆளாச்சே. அங்கே தொழிலாளிங்கக்கிட்ட அடி வாங்கிட்டு தானே இங்கே வந்திருக்கான். அவன் போர இடமெல்லாம் கரைச்சல் தான் சார், கம்பெனி அவனுக்கு சலுகை காட்டுது" என்றார் முனுசாமி.

"அவன் வந்த நாள்முதல் பெரும் போராட்டமாகத்தான் இருக்கு. இதற்கு ஓர் முடிவு கட்டத்தான் தொழிலாளர்களும் காலத்தை எதிர் பார்த்து இருக்காங்க" என்றான் ராமு.

"சரி சார் எல்லாம் நல்லபடியா நடக்கட்டும். நான் வரட்டுமா" என்று விடைபெற்று எழுந்துநின்ற முனுசாமியின் கரங்களை பிடித்துக் கொண்டு பாச உணர்வால் உந்தப்பட்ட நிலையில் விடை கொடுத்த ராமு அடிக்கடி தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டான். விடைபெற்ற முனுசாமி பஸ் நிலையம் நோக்கி நடை போட்டார். அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ராமு திரும்பி பிரதிநிதி யைப் பார்த்து "சார் முனுசாமி எப்படிப்பட்ட தலைவர் தெரியுமா. சங்கத்திற்கு தூர்ண் போன்றவர்". என்று முனுசாமி யின் பெருமைகளை எடுத்துச் சொன்னான் ராமு.

தொழிற்சங்கம் வளர்வதற்கு தோட்டத் தலைவர்கள் செய்யும் தியாகங்கள் போற்றப்பட வேண்டியவை. பணத்தை குறிக்கோளாகக் கொண்டு பணிபுரியும் இக்காலகட்டத்தில் தன் தேவைகளை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடு கிறார்கள். அவர்களின் தியாகத்தையும் அங்கத்தவர்களின் பலத் தையும் மதிக்காத தொழிற்சங்கங்கள் பல இருந்த இடம் தெரியாமல் மலையகத்தை விட்டு ஒதுக்கப்பட்டு விட்டதையும் காணலாம். தோட்ட மக்களின் அரசியல் சமூக பொருளாதாரம் உரிமைகளை வென் றெடுக்கும் சக்தியாக திகழ்வது தொழிற்சங்கமே.

காலையில் வந்து போன பெரியசாமி தலைவர் சில ஆட்களுடன் அவசர அவசரமாக மீண்டும் காரியாலயத்திற்குள் நுழைந்ததும் தான் ராமு சிந்தனையிலிருந்து விடுபட்டான். மௌனமாக அவர்களை

நிமிர்ந்து பார்த்த ராமு என்ன என்று கேட்டு வந்தவர்களின் அவசரத்தை நோட்டம் விட்டான்.

"சார் விஷயம் முற்றி விட்டது. இன்று கவ்வாத்துக் காட்டில் காளிமுத்துவை துரை தன் கையிலிருந்து கம்பால அடித்து விட்டான். ஆத்திரப்பட்ட காளிமுத்து கவ்வாத்து கத்தியை துரையை நோக்கி வீசியிருக்கான். துரை பொலிசுக்கு டெலிபோன் செய்து விட்டார். இதைத் தொடர்ந்து எல்லா தொழிலாளர்களும் வேலையை இடை நிறுத்தி விட்டு இறங்கி விட்டனர். தோட்டம் பெரும் அமளி துமளி யாயிருக்கு. நான் திரும்பவும் தோட்டத்திற்குப் போகணும். நீங்கள் தான் இதற்கு உடனடியா நடவடிக்கை எடுக்கணும்" என்று சொன்ன பெரியசாமி அழைத்து வந்தவர்களில் இருவரை காரியாலயத்தில் இருக்கச் சொல்லிவிட்டு தோட்டம் நோக்கி புறப்பட்டார்.

ராமு பிரதிநிதியைப் பார்த்து "சார் எது நடக்குமுன்னு நாம எதிர் பார்த்தமோ அது நடக்க ஆரம்பித்து விட்டது. இனி நானும் பயந்து கொண்டு இங்க இருக்க முடியாது. தோட்டத்திற்கு உடினடியாக போக வேண்டும். இல்லாட்டி தொழிலாளர்கள் பாரதூரமான காரியத்தில் ஈடுபட்டு விடுவார்கள். நான் அங்கிருந்தால் நிலைமைகளை அவ தானித்து உங்களுக்கும் அறிவிக்க முடியும்" என்று சொன்ன ராமு. உடனடியாக தனது பேக்கை எடுத்துக் கொண்டு பெரியசாமி தலைவர் அழைத்து வந்த இருவரையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டான்.

தோட்டத்திற்குள் நுழைந்த பொலிஸ் கோஷ்டி காளிமுத்து உட்பட மூன்று பேரை கைது செய்து கொண்டு போய் விட்டது. இச்செய்தி கிடைத்ததும் பிரதிநிதி நேரே பொலிஸ் நிலையம் வரை சென்றார். அங்கு மூன்று தொழிலாளர்களையும் பொலிசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள்.

உள்ளே சென்ற பிரதிநிதி நேரே உதவி பொலிஸ் அதிகாரி இருக்கும் பகுதிக்குச் சென்று நிலைமைகளை தெளிவுபடுத்தினார். அதை அவர் முழுமையாக செவி மடுத்ததாகத் தெரியவில்லை. துரையின் பக்கமே நியாயம் இருப்பதாக வாதிட்டார். அத்தோடு எக் காரணத்தைக் கொண்டும் எவரையும் பிணையில் செல்ல அனு மதிக்க மாட்டோம் என்றும் உறுதியாகச் சொல்லி விட்டார்.

வெளியில் வந்த பிரதிநிதி நேரே மத்திய கமிட்டிக்கு தகவல் கொடுத்து

விட்டு புறொக்டர் ஒருவரைக் காணச் சென்றார். புறொக்டரிடம் விளக்கங்களை தெளிவு படுத்தி அவர் மூலமாக பொலிஸ் அதிகாரி யோடு தொடர்பு கொண்டார். முழு விபரங்களையும் கேட்ட பொலிஸ் அதிகாரி இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசிவிட்டு பதில் கூறுவதாக தொலைபேசி இலக்கத்தை எடுத்துக் கொண்டார்.

அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தோட்டத்தின் உண்மை யான நிலைமையைப் பற்றி தெளிவு படுத்திக் கொண்டார். பிரதிநிதி. அவர் தொழிலாளர் சார்பானவர் என்பதால் மிகவும் அவதானத்தோடு கேட்டுக் கொண்டிருந்தபோது தொலைபேசி மணி கிணுகிணுத்தது.

அதை எடுத்தவர் நீண்ட நேரமாக விவாதம் செய்து கொண்டிருப் பதை அவதானிக்கும்போது எதிர்புறத்தில் பேசுவதும் பொலிஸ் அதிகாரியாகத்தான் இருக்க வேண்டுமெனப் பிரதிநிதி ஊகித்துக் கொண்டார். இறுதியாக எதுவுமே நடக்காது என்பது போல் டக் கென்று தொலைபேசியை வைத்தவர் உதட்டைக் கடித்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார்.

"என்ன சார் சொல்கிறார்கள். பிணை எடுக்க முடியுமா முடியாதா? அல்லது வேறு எதும் சொன்னாரா?" என்று பிரதிநிதி ஆவலோடு கேட்டார்.

அவரை ஒருமுறை அளவிடுவது போல் பார்த்தவர் தோட்ட துரை இந்த விச்யத்தைப் பாரதூரமாகப் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறார். கொலை செய்ய எத்தணித்ததாக புகார் செய்துவிட்டு இப்போது பாதுகாப்புப் பெற்று மருத்துவமனையில் சுகம் பார்த்து வருகிறாராம். அதனால் சம்பந்தப்பட்டவரை பிணையில் விட முடியாது நீதிபதி இவர் களை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டிருப்பதாகக் கூறினார். நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தும்போது பிணை எடுக்க முயற்சி செய்யு மாறு கூறிவிட்டார் என்று புரொக்டர் சொன்னார்.

அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டவர்கள் நேரே காரியாலயம் நோக்கிச் சென்று விசயத்தை தோட்டத்திலிருந்து வந்தவர்கள் மூலமாக அனுப்பிவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார் பிரதிநிதி.

தோட்டத்திற்குச் சென்ற ராமு முக்கிய தொழிலாளர்களைச் சந்தித்து தோட்ட நிலைமைகள் பற்றிப் பேசினான். தொழிலாளர்கள் இந்த துரை இங்கிருந்து போகும் வரை வேலைக்குச் செல்வதில்லை என்ற தீர்மானமும் எடுத்து வேலை நிறுத்தத்தை தொடரப் போவதாகச் சொன்னார்கள்.

"தற்காலிகமாக வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புங்கள். பின்பு இந்தப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவோம்" என்று ராமு தொழிலாளர்களிடம் கேட்டுக் கொண்டாலும் அதைத் தொழி லாளர்கள் ஏற்க மறுத்தனர். எனவே தொழிலாளர்களின் விருப்பத்தை ராமு ஏற்றுக் கொண்டதோடு தோட்டத்தில் "இப்பிரச்சினை தீரும் வரை அமைதியாக இருக்க வேண்டும். தானும் இனித் தோட்டத்தில் தான் இருக்கப் போகிறேன்" என்று சொன்னதை தொழிலாளர்கள் வரவேற்றனர்.

மறுநாள் மாலை கோவிலில் கூட்டத்திற்குத் தலைவர் ஏற்பாடு செய்திருந்தார். இதில் ராமுவும் கலந்து கொண்டு பேச வேண்டு மென்று கேட்டுக் கொண்டதை ராமுவும் ஏற்றுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

ராமு வீட்டை நோக்கிச் செல்லும் போது எதிரே அருண் தலை தெறிக்க ஓடி வந்தான். அருகில் வந்தவன் "அப்பா பொலிஸ் உங்களைத் தேடி வந்திருக்கு" என்று மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க சொல்லி முடித்தான்.

இதை எதிர்பார்த்த ராமு அமைதியாக வீட்டை நோக்கி நடந்தான். வீட்டினுள் நுழையும் போது வெளியில் ஒருவர் உள்ளே ஒருவருமாக இரண்டு போலிசார் நின்றிருந்தனர்.

# 43

தொழிலாளர்கள் மத்தியில் குடி கொண்டிருக்கும் அமைதி எப்போதுமே வெடித்துச் சிதறுவதற்குத் தயாராகவே இருக்கும். இதைத் தொழிலாளர்கள் உணர்ச்சி என்று கூடச் சொல்லலாம். அது உணர்வுபூர்வமாக எழும் கொந்தளிப்பு.

பல மாதங்களாக நடத்தும் போராட்டத்திற்கு விடிவு போல சில நடவடிக்கைகள் அமைவதுண்டு. அத்தோடு பிரச்சினைகள் தீர்ந்து விட்டதாக தொழிலாளர் சரித்திரம் இல்லை. ஒன்று மறைய ஒன்று தோன்றும். ஆகவேதான் சில சமயங்களில் தொழிலாளர் வாழ்க்கை போராட்டமாக மாறி விடுகிறது.

இப்போது எழுந்துள்ள போராட்டம் அமைதிக்கும் தொழி லாளர்களின் பொறுமைக்கும் ஏற்பட்ட சவாலாகும். இது தொழிலாளர் களின் அமைதிக்கும் பொறுமைக்கும் பங்கம் விளைவிக்கும் போராட்டமாக உருவெடுத்துவிட்டது.

ஆம் ராமு என்ற தியாகியால் கட்டிக் காக்கப்பட்ட பொறுமைக்குச் சவாலாகப் பொலிஸ் ராமுவைக் கைது செய்தது. இச்செய்தி காட்டுத் தீ போல முழுத் தோட்டத்திற்குமே பரவியது. தொழிலாளர்கள் ஆத்திர முற்றனர். அவர்களின் உணர்ச்சி எரிமலையாக வெடித்துச் சிதறின.

புற்றிலிருந்து ஈக்கள் கிளம்புவது போல் ஆண்கள் - பெண்கள் என்று தொழிலாளர்கள் ராமுவின் வீட்டை நோக்கி திரண்டு வந்தனர். 'ராமு வாழ்க' என்ற கோசம் வானை முட்டியது. பொலிசார் அதிர்ச்சி யடைந்தனர்.

ராமுவைப் பொலிசார் வேனுக்கு அழைத்துச் செல்ல முற்பட்ட போது சிவகாமி குறுக்கிட்டு . "இங்கிருந்து ஒரு அடிகூட நகர விடமாட்டேன். எங்கள் அத்தானை குலக்கொழுந்தை விடுங்கள்" என்று ராமுவுக்கு எதிராக நின்று மறித்தாள்.

இவைகளைத் தூரத்தில் வேனிலிருந்து பார்த்துக் கொண் டிருந்த சார்ஜன்ட் நிலைமை மோசமடைவதை உணர்ந்து துப்பாக்கி யோடு அங்கு வந்து சேர்ந்தான்.

கூட்டத்தைப் பார்த்து "மரியாதையாக விலகிப் போங்கள். இல்லாவிட்டால் எல்லோரையும் சுட்டுத் தள்ளி விடுவேன்" என்று அதட்டினான்.

ராமு கூட்டத்தினரைக் கையெடுத்துக் கும்பிட்டும் அவர்கள் கேட்க மறுத்தனர். 'பொலிசார் அராஜகம் ஒழிக, தோட்டத்துரை ஒழிக' என்ற சத்தமே பெரிதாக ஒலித்தது.

மறுபடியும் பொலிஸ் சார்ஜண்ட் எச்சரிக்கை செய்தார். அதே சமயம் "சிவகாமி என்னைச் சுட்டாலும் பரவாயில்லை. எங்க அத்தானை இங்கிருந்து அழைத்துச் செல்ல விடமாட்டேன்" என்று உத்ர தாண்டவ மாடிக் கொண்டிருந்தான்.

தொழிலாளர்கள் இப்போது தாக்குதலுக்குத் தயாராகி விட்டனர். அருண் ராமுவை இறுக பற்றிக் கொண்டான். ஜார்ஜண்ட் மது போதை தலைக்கேற ராமுவைக் கைது செய்த பொலிசை விலகுமாறு கேட்டுக் கொண்டார். அவன் விலகி நின்றதும் ராமுவை மரியதையாக அனுப்பு, இல்லாவிட்டால் குண்டுதான் பதில் சொல்லும் என்று கர்ச்சனை செய்தார். அதைப் பொருட்படுத்தாத கூட்டம் முடியு மானால் சுடு என்றது.

இச்சொல் சார்ஜண்டுக்கு ஆணையிட்டது போலிருக்கவே மறுகணம் அவரின் கையில் இருந்த துப்பாக்கி குண்டுகள் வெடிக்க ஆரம்பித்தன. அந்தோ ராமுவுக்கு எதிரே இருந்த சிவகாமி இரத்தம் தோய்ந்த நிலையில் குண்டடிபட்டுக் கீழே விழுந்தாள்.

அருண் "அம்மா" என்று கதற ராமு "ஐயோ சிவகாமி" என்று அவளை தாங்கிப் பிடிக்க அப்படியே ராமுவின் மடியில் சரிந்து விட்டாள் சிவகாமி. தொழிலாளர்கள் அமைதியாகிவிட்டனர்.

பசுவை இழந்த கன்றைப் போல் தொழிலாளர்கள் கூட்டம் ஒருவர் முகத்தை ஒருவர் ஏறிட்டுப் பார்த்தனர். பெண்கள் ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டனர். அங்கு குழுமியிருந்த கூட்டம் ஆக்ரோசத் தோடு கற்களை எடுத்து வீச ஆரம்பித்தது. அப்போதுதான் சார்ஜண்ட் மூளையில் பொறி தட்டியது. "நாம் பாரதூரமாக நடந்து விட்டோமே. இப்போது தொழிலாளர்கள் மத்தியில் சிக்கிக் கொண்டுள்ளோமே"

என்பதை உணர்ந்து கொண்ட சார்ஜண்ட் ஓட்டமாக ஓடி ஜீப்பில் ஏறிக் கொண்டார். ஜீப் அசுர வேகத்தில் பறந்து சென்றது.

சிவகாமியைத் தாங்கிக் கொண்ட ராமு செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில் சிவகாமி வாய் திறந்து பேச ஆரம்பித்தாள்.

"அத்தான் நான் வெறியர்களிடமிருந்து உங்களை காப்பாற்றி விட்டேன். இனி உங்களுக்கு என்றுமே சாவில்லை" என்றவள் மறுபக்கம் குமுறிக் குமுறி அழும் அருணைப் பார்த்து "அருண்" என அழைத்தவள் அவனுக்கு ஆறுதல் சொல்வது போன்று அவனை கட்டிக் கொண்டு அவனின் உச்சியில் முத்தமிட்டு "அத்தான் இனி அருண் உங்கள் மகன், அவனை இனி பாதுகாக்க வேண்டியது உங்களின் பொறுப்பு" என்று அருணின் கைகளைப் பிடித்து ராமுவின் கைகளோடு இணைத்தவள் கூடியிருந்த தொழிலாளர்களைப் ஏறிட்டுப் பார்த்து "யாரும் அழ வேண்டாம். இனி உங்களுக்கு விடிவு காலம் பிறக்கப்போகிறது. இந்த சிவகாமி உங்களை விட்டு எங்குமே போக மாட்டாள். உங்கள் எல்லோருடனும் தான் அவள் வாழ்வாள். அத்தான் நான் உங்களோடு வாழக் கொடுத்து வைக்காத பாவியாகி விட்டேன் அத்தான்" என்றாள்.

"அப்படியெல்லாம் சொல்லாதம்மா. நீ காலம்பூரா என்னோடு தான் வாழ வேண்டும்?" என்று சொன்ன ராமுவின் கழுத்தைக் கட்டிப் பிடித்தவள், அவளின் முழு பலத்தையும்கொண்டு அவனை இழுத்து அவன் முகத்தில் முத்தமிட்டாள். இது அவள் உள்ளத்தில் காலம் காலமாக தேங்கிக் கிடந்த அன்பின் அடையாளமாக தொனித் தது. அந்த வேகத்தோடு அருணையும் முத்தமிட்டு ராமுவின் கைகளில் ஒப்படைத்தவள், எல்லோரையும் பார்த்து கையை குவித்து கும்பிட்டு விட்டு விடைபெற்றாள்.

தோட்டமே இருள் சூழ்ந்துவிட்டது சிவகாமி இறந்த செய்தி தொழிற்சங்கத்திற்கு எட்டிவிட்டது. மறுநாள் காலை முக்கியஸ்தர்கள் பொலிஸ் அதிகாரிகளோடு தோட்டம் வந்தனர்.

யாருக்கு யார் ஆறுதல் சொல்வதென்ற நிலையில் ராமுவும், அருணும் பெருமாயியம்மாவும் இருந்தனர். அவர்கள் மூவருக்குமாக தொழிலாளர்கள் ஆறுதல் கூறிக் கொண்டிருந்தனர். ஆம்... ஒரு தொழிலாளி துயரத்தில் மூழ்கி விட்டால் அந்த தொழிலாளிக்கு ஆறுதல் சொல்லவும் அவரின் துயரத்தில் பங்கு கொள்ளவும் இன்னொரு தொழிலாளிக்குத்தான் உரிமை உண்டு. இதை சிவகாமி யின் இறப்பு உறுதிப்படுத்தியது.

தோட்டத்திற்கு வந்த பொலிஸ் அதிகாரிகள் தனது தொப்பி யைக் கழற்றி வீரமகள் சிவகாமிக்கு இறுதி அஞ்சலி செலுத்திக்

கொண்டிருந்தனர். மரண விசாரணை அதிகாரி, மாவட்ட நீதிபதி ஆகியோர் நேரடியாக தோட்டத்திற்கு வந்து பார்வையிட்டனர்.

தோட்டப் பெண்கள் சிவகாமியின் உடலை அலங்கரித்து மக்கள் பார்வைக்காக வைத்திருந்தனர். செய்தி கேட்டு பல தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் கும்பல் கும்பலாக வந்து தங்களின் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

தோட்டம் முழுவதுமே சோகம் சூழ்ந்திருந்தது. துயரத்தில் மூழ்கியிருந்த ராமுவுக்கும், அருணுக்கும் தொழிலாளர்கள் ஆறுதலும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டிருந்தனர். கண்மூடி திறப் பதற்குள் நடந்து முடிந்துவிட்ட இந்த நிகழ்ச்சி ராமுவுக்கு பேரதிர்ச்சி யாக இருந்தது.

ராமு எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்தவன். போராட்டங்களுக்கு தலைமையேற்று நடத்திய பெருமைக்குரியவன். ஆனால் இந்தப் போராட்டம் ஒரு வித்தியாசமான போராட்டமாக அமைந்து விட்டது. ஏனென்றால், இது அடக்குமுறைக்கு எதிராக மாத்திர மல்ல, தனிப்பட்ட குரோதம் கொண்டு எடுத்த நடவடிக்கையால் எழுந்த போராட்டமாகும்.

மறுநாள் காலை பத்து மணிக்கு ஆயிரக் கணக்காக தொழிலாளர்கள் புடைசூழ வீரமகள் சிவகாமியின் உயிரற்ற உடலை தாங்கிய பேழையை சுமந்து சென்றனர். இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவிப்பதாக அன்றைய தினம் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தலைவர்கள் அனைவரும் வேலைக்குச் செல்லவில்லை.

மரணச் சடங்கில் பல தொழிற் சங்கப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். தோட்டத்தின் மத்தியில் ஓர் இடத்தை அடக்கம் செய் வதற்காக தொழிலாளர்கள் தெரிவு செய்திருந்தார்கள்.

அங்கு குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் 'அடக்கு முறைகள் ஒழிக' என தொழிலாளர்கள் வீர முழுக்கமிட்டனர். இறுதியாக ராமு எல்லோருக்கும் நன்றி கூறுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

ஒலிபெருக்கி முன்னால் ராமு வந்து நின்றபோது அருகில் அருணும் வந்து நின்று கொண்டான். ஒரு சில நிமிட நேரம் எதுவுமே பேசாமல் கண்ணீர் விட்டவன், மனதைத் தேற்றிக் கொண்டு பேசினான்.

பெரியோர்களே, பாட்டாளி தோழர்களே, அடக்குமுறைக்கு எதிராக எத்தனை எத்தனையோ போராட்டங்கள் நடந்திருக்கின்றன. அதை நாம் அனைவரும் சந்தித்திருக்கிறோம். அதே போலவே நம் தோட்டத்திலும் அடக்குமுறைக்கு எதிராக எத்தனையோ தொழிலாளர்கள் பல மாதங்களாக போராடி வந்துள்ளனர். அதன் உச்சக்

கட்டத்தில்தான் சிவகாமி தன்னுயிரை பலி கொடுத்துவிட்டாள். இந்தப் போராட்டத்தில் என் தனிப்பட்ட வாழ்க்கையும் சம்பந்தப்பட்டிருக்கிறது. அதனால்தான் இந்த துயரத்தை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

நானும், சிவகாமியும் இதே தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் தான். அவள் என் மாமன் மகள். நானும், அவளும் ஒருவரையொருவர் உயிருக்குயிராக காதலித்தோம். திருமணம் என்ற முடிவு ஏற்பட்ட போதுதான் என் மாமனார் என்னை கேவலமாகப் பேசி ஒதுக்கி விட்டார். அத்தோடு, நின்றுவிடாமல் உடனடியாக தூரத்து உறவினர் ஒருவரின் மகனுக்கு சிவகாமியைத் திருமணம் செய்து வைத்தார். முடிவில் பதினான்கு மாத இல்லற வாழ்க்கையை முடித்துக் கொண்டு கணவனை இழந்து சோகத்தில் கைம் பெண்ணாக கையில் இரண்டு மாதக் குழந்தையுடன் தாய் வீடு வந்து சேர்ந்தாள் சிவகாமி. இந்த அதிர்ச்சி ஒரு சில மாதங்களில் என் மாமனரரின் வாழ்க்கையைக் குடித்துவிட்டது. நடந்ததை மறந்து நான் அவளுக்கு பாதுகாப்பு கொடுத்தேன். இதோ இருக்கிறானே அருண், சிவகாமியின் மகன். அவனை நான் என் மகன் போலவே வளர்த்து விட்டேன். அவன் இனி என் சொந்த மகன்தான். என் இல்லற வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி காரணமாக நான் நீண்ட நாள் துறவு கோலம் பூட்டிருந்தேன்.

எனது தொழிற்சங்கப் பணியின் போது எதிர்பட்டவள்தான் வசந்தி. என் துறவி கோலத்தை நீக்கி அவளை நான் திருமணம் செய்ய முடிவு செய்தபோதுதான் அவளின் உறவினர் என்ற உருவில் ஒரு காமுகன் தோன்றி அவளை நாசப்படுத்தி, அவள் தற்கொலை செய்து கொள்வதற்கு காரணமாக அமைந்துவிட்டான். அவள் இறக்கும் தருவாயில் எனக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தாள். அந்த வேண்டு கோள்தான் இன்று எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து மண்ணில் தஞ்சமடைந்துவிட்ட வீரமகள் சிவகாமியை நான் மறுமணம் செய்து அவளை மனைவியாக ஏற்று அவள் வாழ்வுக்கும் ஒரு புதிய ஒளியை ஏற்ற வேண்டும் என்பதே. அது மட்டுமல்ல அதை நிறை வேற்றினால்தான் அவளின் ஆத்மாசாந்தியடையும் எனவும் கேட்டுக் கொண்டாள். அந்த வேண்டுகோளை நிறைவேற்ற காத்திருக்கும் போதுதான் என்னுயிரை பறிக்க வந்த துப்பாக்கி வேட்டுக்கள் என் சிவகாமியைப் பலியெடுத்து விட்டது. இதிலிருந்து அவள் என் மேல் என் குடும்பத்தின் மேல் கொண்டுள்ள பாசம் எத்தகையது என்பதை நான் மாத்திரமல்ல நீங்களும் உணர்ந்திருப்பீர்கள். எங்கள் பாசத்தின் சின்னமாக இந்த அருணை என்னிடம் ஒப்படைத்துவிட்டு குடும்பப் பொறுப்பையும் சமுதாயப் பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்து விட்டு அவள் உதிர்ந்துவிட்டாள்.

என் வாழ்க்கையில் இரண்டு மலர்கள் மலர்ந்தன. அந்த இரண்டு மலர்களும் இன்று உதிர்ந்துவிட்டன. இந்த இரு மலர்களின்

உதிர்வுகள் என்றுமே என்னை சுகபோக வாழ்க்கை அனுபவிக்க தகுதியில்லாதவனாக, சமூக சேவையாளனாக திகழ்வதற்கு வழி காட்டியாக அமைந்து விட்டன. ஆம் என் வாழ்க்கையில் உதிர்ந்த இரண்டு மலர்கள் என் வாழ்க்கையின் முன்னேற்றத்தில் அதிக அன்பும், பாசமும் அளவு கடந்த அக்கறையும் கொண்டிருந்தன. அவர்களின் அன்புச் சின்னம்தான் இந்த அருண்" என்று அருணை கட்டிப் பிடித்துக் கொண்ட ராமு, கண்ணீருக்கிடையே தனது பேச்சை முடித்துக் கொண்டான்.

இறுதியாக தொழிற் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு வந்த மாவட்டப் பிரதிநிதி சிங்காரம், "இங்கு ராமு இரண்டு மலர்கள் உதிர்ந்து விட்டது என்று சொன்னார். நான் சொல்கிறேன். அந்த இரு மலர்கள் உதிர்ந்து விடமில்லை. அந்த இரு மலர்களையும் ராமு தன் இதயத்தில் பதித்துக் கொண் டுள்ளார். இனிதான் அவரின் பொறுப்பும், கடமையும் அதிகரிக்கிறது. ராமு போன்ற சேவையாளனை நாம் பெற்றது நமக்கு பெருமைக்கு உரியதொன்றாகும். அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகளும், வேதனைகளும் என்னிலடங்காதவை. ஆனால் அவைகளையெல்லாம் கண்டு துவண்டு விடாமல், புதிய மெருகோடு மக்களுக்குத் தொண்டு செய்யப் புறப்பட வேண்டும். எதிர்காலத்தில் ராமு தொழிலாளர் களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் நிறைய உண்டு. அவை களை அவர் மன உறுதியோடு தொடர வேண்டும்" என்று பேச்சை முடித்துக் கொண்டபோது குழுமியிருந்த கூட்டம், 'ராமு வாழ்க. ராமு வாழ்க' என்று வானதிர கோசமிட்டது.

தொழிலாளர்கள் சரித்திரம் எழுதும்போது சிவகாமியின் பெயர் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டும். உண்மை சேவையாளனின் உயிரைக் காத்த உத்தமி என்று கூட்டத்தினர் பேசிக் கொண்டனர். இந்த புகழ் ராமுவின் சேவைக்கு மெருகூட்டும் என்பதில் ஐயமே இல்லை.

தோட்டத் தொழிலாளர்கள் வரலாற்றில் நடந்த போராட்டங்கள் தான் எத்தனை. அந்த வரிசையில் இந்தப் போராட்டமும் இடம் பெற்று மலையக வரலாற்றின் தொழிலாளர் போராட்டத்தைப் பற்றி நடுநிலை நின்று எழுதும்போது, இத்தகைய தியாகச் செம்மல்களின் பெயர்களும் நிச்சயம் இடம்பெறும்.

## ஆசிரியரைப் பற்றி...

கம்பொல புசந்தன்னை தோட்டத் தொழிலாளியான இவர் 1966ம் ஆண்டு தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து தோட்டக் கமிட்டி, மாவட்டக் கமிட்டி என்று செயல்பட்டவர். 1968ம் ஆண்டு மத்தியக் கமிட்டி உதவிப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1970ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற மாநாட்டில் இவர் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று வரை ஸ்தாபனத்தின் தலைவராக செயல்பட்டு வருகிறார்.

ஆரம்ப காலம் முதல் எழுத்தாற்றல், பேச்சாற்றல் கொண்ட இவர், சிறுகதை, கட்டுரை, விமர்சனம் தொடர்கதை போன்றவற்றை ரோகிணி, மலைநாட்டான், மாத்தளை ரோகிணி போன்ற புனைபெயர்களில் எழுதி வந்துள்ளார்.

இவரின் இயற்கைப் பெயர் தவசிதேவர் அய்யாத்துரை என்பதாகும். ஆரம்பம் முதலே பொதுநல சிந்தனையுள்ள இவர், பல்வேறு இலக்கிய நண்பர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு பல கவிஞர்களின் கவிதைகள் புத்தகமாக வெளிவர தனது பங்களிப்பைச் செய்து வந்துள்ளார்.

தொழிற்சங்கவாதியான இவர், எழுத்துத்துறையில் ஈடுபடுவதற்கும் ஆர்வம் கொள்வதற்கும் காரண மாயிருந்தவர் மலையக மூத்த கவிஞரும், எழுத்தாள ருமான ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்களே என்றால், அது மிகையாகாது. இதன் காரணமாகத்தான் இவர் தனது இலக்கியத்துறைக்கு அவரையே வழிகாட்டி யாகக் கொண்டு எழுதி வருகிறார்.

மலையகத்தில் நாவல்கள் எழுதுபவர்கள் இன்று இல்லை என்ற குறைபாட்டை நீக்க இவர் தினகரனில் இதுவரை நான்கு தொடர்கதைகளை எழுதியுள்ளார். அவை;

'வந்த துன்பம் போதும், பூங்கோதை புயலானாள், அவளுக்கு அவன் துணை, இதயத்தில் இணைந்த இரு மலர்கள்'' என்பனவாகும்.

— *மாத்தளை கார்த்திகேசு*

